padippakam

# விழுதாகி வேருமாகி



2ம் லெப். மாலதி படையணி

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# விழுதாகி வேருமாகி

2ம்லெப். மாலதி படையணி
தமிழீழ விடுதலைப் புலிகள்

படிப்பகம்

padippakam


| | | |
|---|---|---|
| நூல் | : | வீழுதாகி வேருமாகி |
| நூலாசிரியர்கள் | : | அ.காந்தா,செ.புரட்சிகா,<br>மலைமகள் |
| முதற்பதிப்பு | : | 2003 ஒக்ரோபர்<br>1000 சுவடிகள் |
| இரண்டாம் பதிப்பு | : | 2003 நவம்பர்<br>3500 சுவடிகள் |
| பதிப்புரிமை | : | உம் லெப். மாலதி படையணி |
| கணினி அச்சுப் பதிவு | : | மிதுளா, உம் லெப். மாலதி படையணி<br>சங்கரி, ஈழச்செல்வி<br>படைய அறிவியற் கல்லூரி |
| பக்க வடிவமைப்பு | : | சங்கரி, ஈழச்செல்வி |
| முன் அட்டை படப்பிடிப்பு | : | பாவரசி (சிவா)<br>புகைப்பட மகளிர் பிரிவு,<br>தமிழீழ விடுதலைப் புலிகள் |
| நிழற்படங்கள் (உள்) | : | புகைப்பட மகளிர் பிரிவு |
| வரைபடங்கள் | : | லெப். கேணல் குட்டிசிறீ<br>மோட்டார் மகளிர் படையணி |
| நூல் வடிவமைப்பு | : | மலைமகள் |
| அச்சுப் பதிப்பு | : | மல்ரிவிஷன் அச்சுக்கலையகம்.<br>024 – 2223143 |
| உருவாக்கம் | : | கப்டன் வானதி வெளியீட்டகம்<br>இல.61, கனகபுரம், கிளிநொச்சி<br>(கப்டன் வானதி வெளியீட்டக உருவாக்கம் – 04) |
| வெளியீடு | : | உம் லெப் மாலதி படையணி<br>தமிழீழ விடுதலைப் புலிகள் |
| விலை(முதற் பதிப்பு) | : | 550/= |
| (இரண்டாம் பதிப்பு) | : | |


படிப்பகம்



எமது பெண் போராளிகளது அபாரமான போராற்றலையும் அவர்களது வீரத்தையும் எமது எதிரியே நன்கறிவான். அவன் அறிந்ததை உலகமும் எமது மக்களும் அறியும்படியான வரலாற்றுப் பதிவாக ஒரு நூல் எழுதப்படவேண்டும். இதற்கு எமது போராட்டம்பற்றிய தெளிவான பார்வையும் போருக்குள் நின்ற வாழ்வனுபவமும் போர்க்கலைபற்றிய அறிவும் எமது போராளிகளது நுண்மையான மனவுணர்வுகளைப் புரிந்துகொள்கின்ற தன்மையும் அவசியம். மாலதி படையணியின் வெளியீடாக, நெஞ்சை உறையவைக்கும் பல்வேறு சமர்களின் தொகுப்பாக, பெண் போராளிகளது வீரத்தையும் விவேகத்தையும் பறைசாற்றும் வரலாற்றுப் பதிவேடாக இந்நூல் வெளிவருவது பெருமகிழ்வைத் தருகிறது.

– தமிழீழத் தேசியத் தலைவர்

padippakam

படிப்பகம்

padippakam

# எதிரிமட்டும் அறிந்ததை எல்லோரும் அறியட்டும்

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
2003.10.02

எமது பெண் போராளிகளது அபாரமான போராற்றலையும் அவர்களது வீரத்தையும் எமது எதிரியே நன்கறிவான். அவன் அறிந்ததை உலகமும் எமது மக்களும் அறியும்படியான வரலாற்றுப் பதிவாக ஒரு நூல் எழுதப்படவேண்டும். இதற்கு எமது போராட்டம்பற்றிய தெளிவான பார்வையும் போருக்குள் நின்ற வாழ்வனுபவமும் போர்க்கலைபற்றிய அறிவும் எமது போராளிகளது நுண்மையான மனவுணர்வுகளைப் புரிந்துகொள்கின்ற தன்மையும் அவசியம். இல்லாதுபோனால், எமது போராட்டத்தின் வரலாற்றை அதன் ஆழத்திலும் அகலத்திலும் அதன் யதார்த்தக் கோலத்திலும் தரிசித்துக்கொள்வது கடினம். போர்பற்றிய அறிவுஞானம் இல்லாத, பழமையிற் புதைந்துபோன வரலாற்றாசிரியர்களால் எமது பெண் போராளிகளது வரலாற்றைத் துல்லியமாகக் கிரகித்தறிவது சிரமம்.

எனவே, போர்க்களத்தில் அளப்பெரும் தியாகங்களையும் சாதனைகளையும் படைத்த பெண் போராளிகளே இப்பணி



படிப்பகம்

padippakam



யையும் மேற்கொள்ளவேண்டுமென்பது நீண்டநாளாக என்னிடம் இருந்த பேரவா. எனது பேரவாவுக்கு விருந்தளித்து மாலதி படையணியின் வெளியீடாக, நெஞ்சை உறைய வைக்கும் பல்வேறு சமர்களின் தொகுப்பாக, பெண் போராளிகளது வீரத்தையும் விவேகத்தையும் பறைசாற்றும் வரலாற்றுப் பதிவேடாக இந்நூல் வெளிவருவது பெரு மகிழ்வைத் தருகிறது.

உலகிலே சரிபாதியினர் பெண்கள். எமது சமூகத்திலே சரிபாதியினர் பெண்கள். இந்தச் சரிபாதித் தொகையினரான பெண்கள் போராட்டத்திற் பங்குபெறாது, எமது தேசத்தின் விடுதலை சாத்தியப்படாது. சரிபாதியினரான பெண்களுக்கு விடுதலையின்றி எமது தேச விடுதலையும் முழுமைபெறாது.

ஆனால், அன்று எமது சமூகத்திற் பெண்களுக்கெதிரான சமூக அநீதிகள் அதிகரித்திருந்தன. பெண் அடக்குமுறைக் கருத்துக்கள் பலமாக நிலவின. எமது சமூகமே சாதி, சமய வேறுபாடுகளால் ஆழமாகப் பிளவுபட்டு நின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக, நிலச்சுவாந்தர் முறைமையையும் சாதியக் கட்டமைப்புக்களையும் இறுக்கமாகப் பின்னிப்பிணைத்து அமைந்த பொருளாதார உற்பத்தி முறையில், எமது சமூகக் கட்டமைப்பு எழுப்பப்பட்டிருந்தது. அது சுயசிந்தனைக்கு வரம்புகளை விதித்தது. பெண்களை, தாம் அடக்குமுறைக்குள் வாழ்கிறோம் என்பதை உணரவிடாது தடுத்தது. அத்தோடு, எதிரியின் இன அழிப்புப் போர் எம்மண்ணில் என்றுமில்லாதவாறு தீவிரமடைந்திருந்தது. அந்நிலையில் அடிப்படையான சமூக மாற்றத்தை ஏற்படுத்திப் பெண்விடுதலைக்கு வழிசமைப்பதுபற்றி நாம் சிந்திக்க முடியாதிருந்தது.

எனவே, எமது விடுதலைப் போராட்டத்திற் பெண்களையும் அணிசேர்ப்பதனூடாகப் படிப்படியாக சமூக மாற்றத்தை ஏற்படுத்தி, பெண் விடுதலையையும் தேச விடுதலையையும் சாத்தியமாக்கலாம் என நான் உறுதியாக நம்பினேன். இவ்வாறுதான் எமது போராட்டத்திற் பெண்புலிகள் தோற்றம் பெற்று, இன்று எதிரியின் படை பலத்தைச் சிதைத்து, யுத்தத்தின்



படிப்பகம்

padippakam



போக்கையே நிர்ணயிக்கின்ற பெரும் படையணிகளாக எழுந்துநிற்கிறார்கள்.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மேற்குலகப் பெண்கள் பெரும் போராட்டங்களை நிகழ்த்தி, புரட்சிகளை நடாத்தி, விவாதங்கள் புரிந்து, கருத்தமர்வுகளை மேற்கொண்டு பெற்றெடுத்தவற்றைவிட எமது பெண்புலிகள் மிகவும் குறுகிய காலத்துக்குள் எமது பெண்களுக்குப் பெற்றுக்கொடுத்த உரிமைகளும் சுதந்திரங்களும் அளப்பரியவை. அத்தோடு, சமூகத்திலே பெரும் புரட்சியை நிகழ்த்தியிருக்கிறார்கள். சமூகக் கருத்துலகிற் புதிய பார்வையை வளர்த்துவருகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, ஆணும் பெண்ணும் சமனான ஆற்றல்களுடனேயே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உடற்கூற்றியல் நிபுணர்களது கூற்றுக்கு உலகில் பெண் புலிகளே உதாரணமாக வாழ்கிறார்கள்.

புரட்சிப் புலிகளாகக் களமிறங்கியுள்ள எமது பெண் புலிகள் எத்தகைய துன்பங்களையுஞ் சுமந்து, எத்தகைய நெருக்கடிகளையுஞ் சமாளித்து, எத்தகைய ஆபத்துக்களையும் எதிர்கொண்டு போராடுகிறார்கள். அசைக்கமுடியாத மனவுறுதியும் அதனாற் பிறக்கும் துணிவும் அவர்களிடம் உள்ளன. அபாரமான சகிப்புத்தன்மையையும் தளராத உறுதியையும் கடும் உழைப்பையும் கொண்டவர்கள் அவர்கள். தரையில்மட்டுமல்லாது கடலிலும் சண்டை செய்கிறார்கள். கடற் போர்க்கலை மிகவும் நுட்பமானது. அதற்கு நிறையப் பயிற்சியும் அனுபவமும் தேவை. கடல் சதா அசைந்துகொண்டிருக்கும். அதன் முதுகிற் சவாரிசெய்துகொண்டு சண்டையிடுவது மிகவும் கடினமானது. எமது பெண் புலிகள் மீன்குஞ்சுகள் போலக் கடலோடு வாழப் பழகிக் கொண்டுவிட்டார்கள்.

இந்தப் பெண் போராளிகளை, அவர்களது போராட்ட வாழ்க்கையை, அவர்களிடையே நிலவும் ஆழமான புரிந்துணர்வை, அளவிடமுடியாத அன்புறவை இந்நூல் அழகு தமிழில் எளிய நடையில் மிகநுட்பமாக வெளிப்படுத்துகிறது. பல்வேறு



படிப்பகம்

padippakam



இடங்களில் நடந்த பல்வேறு சம்பவங்களுக்கூடாக மாலதி படையணியின் வரலாறு சொல்லப்படும் பாங்கு சிறப்பாக அமைகிறது. மேலும், பெண்புலிகளது போரனுபவத்தை மாலதி படையணியின் சண்டையனுபவத்துடன் பின்னிப் பிணைத்து, பெண்புலிகளது வரலாறு இந்நூலில் அழகாகப் படைக்கப்பட்டிருக்கிறது.

இந்நூலின் ஆக்கத்துக்கு அயராது உழைத்த மாலதி படையணிப் போராளிகளுக்கும் தளபதிகளுக்கும் எனது பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு, இந்நூல் சிறப்புடன் வெளிவர எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே. பிரபாகரன்
.......................................
(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.



படிப்பகம்

padippakam

# கால விரிப்பில் கட்டவிழும் நினைவுகள்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழீழப் பெண்களின் தீர்க்கமான பங்களிப்பும் அர்ப்பணிப்பும் எமது விடுதலைப் போரை முன்னோக்கி நகர்த்தி, பெரும் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்திவருகின்றது. தமது சொந்த விடுதலைக்காகவும் தேச விடுதலைக்காகவும் பெண்கள் போராட முன்வரும்போதே ஒரு தேசிய விடுதலைப் போராக எமது போராட்டம் முழுமையான மாற்றத்தைக் காணும் என்ற எமது தலைவரின் சிந்தனை ஒரு பெரும் வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தியது.

தமிழீழத் தேசியத் தலைவரின் உறுதியான வழிகாட்டலில் தோற்றங்கொண்ட விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகள் இன்று பெரும் போராற்றல்கொண்ட மரபுவழிப் படையணிகளாகப் பரிணாமம் பெற்றுள்ளன. இவ்வாறான மகளிர் மரபுவழிப் படையணிகளுள் ஒன்றான மாலதி படையணியின் வீரம் செறிந்த போர்க்களங்களையும் அப்போராளிகளின் அர்ப்பணிப்பையும் கடினமான இராணுவ வாழ்வினையும் உணர்வுபூர்வமாக, உயிர்த்துடிப்புடன் வெளியுலகுக்குக் கொண்டுவரும் ஓர் அற்புதமான



படிப்பகம்

padippakam

2ம்லெப். மாலதி படையணி

இராணுவ வரலாறாக மாலதி படையணியின் வரலாற்றைக் கூறும் இந்நூல் வெளிவருவது பாராட்டுதற்குரியது. காலவிரிப்பில் கட்டவிழ்ந்துகொண்டிருக்கும் ஓர் படையணியின் இராணுவ சாதனைகள் உயிர்த்துடிப்புடன் பசுமையான நினைவுகளுடன் இங்கு பதிவாக்கப்பட்டுள்ளன.

எமது சமூக அமைப்பில் புரையோடிப்போயிருக்கும் குறுகிய, பிற்போக்குத்தனமான, பழமைவாத சிந்தனைகளை உடைத்துக் கொண்டு போராடப் புறப்பட்ட பெண்களின் ஆயுதப் போராட்டம் எமது விடுதலைப் போரை வேகமானதோர் வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது. இன்று அவர்கள் உலக இராணுவ வரலாறு இதுவரை கண்டிராதவகையில் போர்க்கலையில் ஆழக் கால் பதித்துவிட்டமைக்கான சான்றுகள் இந்நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன. மேலை நாடுகளில் பெண்கள் களமருத்துவப் பணிகளிலும் பின்கள வேலைகளிலுமே பெரும்பாலும் ஈடுபடுத் தப்படுகின்றனர். ஆனால் எமது பெண்கள் கட்டளை அதிகாரி களாக சமர்க்களங்களை வழிநடத்திச் செல்பவர்களாகவும், முன்னணிப் போரரங்கில் கனரக ஆயுதங்களுடன் போரிடும் அனுபவமும் கடும் பயிற்சியும் பெற்றவர்களாக இருப்பதனையும் இதனை வாசிப்பவர்கள் உணர்ந்துகொள்ளமுடியும். இவர்களின் போர் அனுபவங்களையும், கடந்துவந்த கடினமான பாதையையும் பார்க்கும்போது அவர்களின் இலட்சியப் பற்றுறுதியையும் அர்ப் பணிப்பின் ஆழத்தையும் புரிந்துகொள்ளமுடியும்.

எமது போராட்டத்தில் பெண்கள் அரசியல், இராணுவம், மருத்துவம், ஊடகவியல் என சகல துறைகளிலும் ஆண் களுக்கு நிகராகப் பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளனர். இவ் வளர்ச்சி எமது சமூகத்திலும் பெரும் தாக்கத்தைச் செலுத்தியுள் ளது. காட்டுப் போர்முறைகளிலிருந்து நவீன மரபுவழிப் போர் வரை அவர்களின் வளர்ச்சிநிலையையும் முன்னேற்றத்தையும் காட்டும் சமர்கள் அற்புதமாக இந்நூலில் விவரிக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகளின் பெரும் இராணுவ நடவடிக்கைகளில் பெண் போராளிகளின் தீரமும் அர்ப்பணிப்பும் நிறைந்த பங்களிப்பு இன்று உலக இராணுவ, அரசியல், பெண்ணிய ஆய்வாளர்களின்



படிப்பகம்

padippakam



கவனத்தை அவர்களின் பக்கம் ஈர்த்துள்ளது. இப்போர்க்களங்களில் மூத்த, இளநிலை பெண் அதிகாரிகளின் வழிநடத்தல், தலைமைத்துவம் அற்புதமானது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண்களின் இராணுவ வாழ்க்கை முறையினை, அவர்கள் அன்றாடம் எதிர்கொண்ட சவால்களை, அவர்களின் போராற்றலை வெளிப்படுத்தும் ஓர் முதல் நூலாக இதனைக் கொள்வதில் தவறேதுமில்லை. கடுமையான இராணுவப் பயிற்சிகளை இலாவகமாகக் குதூகலத்துடன் எதிர்கொள்ளும் பாங்கு, சமர்களில் ஆபத்தான நெருக்கடியான சூழலில் துணிச்சலுடன் முடிவுகளை மேற்கொண்டு வியூகங்களை அமைத்து எதிரியைத் திகைக்கவைக்கும் விதம் பிரமிக்கத்தக்கது. மேற்குலக பெண்ணிய ஆய்வாளர்களும் இதனை இன்று ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் எமது தேசத்தில் பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுத்துள்ள அதேவேளை, தமது தீவிரமான செயற்பாடுகள்மூலம் முற்போக்கான மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளனர். இவ்வகையில் இந்நூல் பெண்களின் இராணுவரீதியிலான வளர்ச்சியை, முன்னேற்றத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

மனித ஆளுமை பால் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது என்பது அவர்களின் இராணுவ சாதனைகளூடாகவும் அளப்பரிய அர்ப்பணிப்புகளூடாகவும் ஆணித்தரமாக இந்நூலில் நிறுவப்பட்டுள்ளது. “விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவின் தோற்றமும் வளர்ச்சியும் எழுச்சியும் எமது இயக்கம் கடந்துவந்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதனை நான் பெருமிதத்துடன் கூறமுடியும்” என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் பெருமிதத்துக்கு இவர்கள் இலக்கணமாக விளங்குகின்றனர்.

உலகில் இதுவரை வெளிவந்த நேரடிக் கள அனுபவங்களை விவரிக்கும் நூல்களுடன் ஒப்புநோக்குமளவுக்கு இந்நூல் கருத்துச்செறிவும் ஆழமுமிக்கதாக உள்ளது. முதன்முதலில் பெண் போராளிகளின் போராட்ட வாழ்வினை உலகுக்கு வெளிக்கொண்டுவரும் ஓர் இராணுவ வரலாற்று ஆவணமாக இந்நூல் வெளிவருவதையிட்டு நான் மகிழ்ச்சியும் பெருமிதமும்



படிப்பகம்

அடைகிறேன். இவ்வாறான தனித்துவமான இராணுவ வரலாற்று ஆக்கத்தை வெளிக்கொண்டுவந்திருக்கும் மாலதி படையணிக்கு எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

சு.ப. தமிழ்ச்செல்வன்
பொறுப்பாளர்
அரசியற்றுறை
தமிழீழ விடுதலைப் புலிகள்

padippakam

# வரலாற்றை ஆக்கியோரின் வரலாறு

அது எழுதுமட்டுவாளிலிருந்த எமது முன்னரங்கக் காவலரண் பகுதி. நேரம் 4.30 ஆகிக்கொண்டிருந்தது. முன்னரங்கின் அருகிருந்த மைதானத்துக்கு எமது ஒவ்வொரு அணிகளும் வந்து சேர்ந்துகொண்டிருந்தன. எல்லோரும் கலகலப்பாகக் கதைத்துச் சிரித்தபடி... சிலர் விளையாட, சிலர் கூட்டுப் பயிற்சிக்கென ஆயத்தமானார்கள். போர்க்காலத்தில் சிறு ஒலியைக்கூட எழுப்பமுடியாத, தலை நிமிர்த்தி நடக்கமுடியாத பகுதி அது. இது போர் இடைநிறுத்தக் காலம் என்பதால் பதுங்கிச்சூடு, எறிகணை வீச்சு என்ற எந்தவித நெருக்கடியுமின்றி முன்னரங்கப் பகுதியே கலகலப்பாக இருக்கின்றது.

ஒரு பனங்குற்றியில் அமர்ந்தவாறு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த என் மனம் திடீரென எங்கோ போனது. இந்த மைதானத்தில் நின்றிருக்கவேண்டிய பலரைக் காணவில்லை. அவர்கள் துயில் நிலங்களில் அமைதியாக இருக்கின்றார்கள். இவர்கள் புதிய தலைமுறையினர். இவர்களை உருவாக்கிவிட்ட வர்களும், உருவாக்கிவிட்டவர்களை உருவாக்கியவர்களும், அவர்களை உருவாக்கியவர்களும் எனப் பலர், காலம் தமக்கிட்ட



படிப்பகம்

padippakam



பணியை முடித்துத் தம்முடைய கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் எம்மிடம் தந்த நிறைவோடு உறங்குகின்றார்கள். மைதானத்தில் படையணிப் போராளிகளின் சத்தங்களும் அவர்களது சுடுகலன்கள் எழுப்பிய ஒலிகளும், நெடுஞ்சாலையில் விரைந்து கொண்டிருந்த ஊர்திகளின் இரைச்சல்களும் என்னை இந்த உலகுக்கு இழுத்துவரமுடியாமல் தோற்றுப்போயின.

எங்கே அவர்கள்? தமிழீழம்பற்றிய கனவுகளையும், தலைவர் எதிர்பார்ப்பதைச் செய்யவேண்டும் என்ற ஆர்வத்தையும், நாளை எங்கள் படையணி எதை எதையெல்லாம் செய்யவேண்டுமென்ற கற்பனைகளையும், இவற்றையும்விட தனிப்பட்ட மனித உணர்வுகளையும் போருக்குப் போகின்ற கடைசிக் கணங்களில் என்னிடம் கதைத்து, என்னுடைய கடமைகளை அதிகப்படுத்திவிட்டு அவர்கள் போய்விட்டார்கள். அவர்களின் வரலாறுகளே எமது படையணியின் வரலாறு ஆகியது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் விழுதுகளுள் ஒன்றாக உருவாகி, இன்று அதைத் தாங்கும் வேராகவும் பரிணாமம் பெற்றுவிட்ட எமது படையணியின் வரலாற்றை நீங்கள் வாசிக்கும்போது ஒரு கற்பனைக் கதைபோன்று, திகிலூட்டும் திரைப்படம்போன்று சிலவேளை தோன்றக்கூடும். ஆனால் இது இரத்தத் துளிகளால் எழுதப்பட்ட உண்மை மனிதர்களின் கதை. எங்களுக்குள் இருந்தது ஒரு குடும்ப உறவு. எங்களது இந்த வாழ்விலும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். போர் அரங்குகளில் அணிகளைக் களமிறக்குகின்ற ஒவ்வொருமுறையும் என் மனம் இறுகும். இவர்களில் எத்தனைபேரை மறுபடியும் சந்திப்போம் என்று ஆதங்கப்படும் மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு, கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்த வேளைகளே அதிகம் என்பேன். “உயிர் உன்னதமானது என்பதை நானறிவேன். உயிரைவிட உன்னதமானது எமது மக்களின் உரிமை, சுதந்திரம், கௌரவம்” என்கின்ற எமது தலைவரின் வார்த்தைகளே என்னை அவ்வேளைகளில் இயக்கிக்கொண்டிருக்கும்.



படிப்பகம்

padippakam



அனல் வீசிக்கொண்டிருந்த மூன்றாம் ஈழப்போரின் ஆரம்பநாட்களில் தோற்றம்கொண்ட 2 ஆம் லெப். மாலதி படையணியைப் பொறுப்பேற்கும்படி தலைவர் அவர்கள் என்னிடம் பணித்தபோது நான் விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவின் நிர்வாகம், அரசியல்சார்ந்த பணிகளுக்குப் பொறுப்பாக இருந்தேன். இரண்டு வருடங்களாகக் களநடவடிக்கைகளிலிருந்து விலகியிருந்த நிலையில், இராணுவ நெருக்கடிமிகுந்த காலத்தில் திடீரென ஒரு படையணியை முழுமையாகப் பொறுப்பெடுத்து தலைவர் அவர்களின் எதிர்பார்ப்பை எவ்வாறு நிறைவேற்றப்போகின்றேன் என்றெண்ணிய எனது பணிகளை, இப்படையணியின் அணித் தலைவர்கள், போராளிகள் அனைவருமே தமக்குரிய கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுத்த தன்மூலம் இலகுவாக்கினார்கள்.

இப்படையணி தனது ஆரம்பநாட்களில் சூரியக்கதிர் – 02, உண்மை வெற்றி – 01, 02, 03, வெற்றி நிச்சயம் எனப் பல எதிர் நடவடிக்கைக் களங்களையே சந்தித்தது. இக்காலப்பகுதியில் படையணியின் முதுகெலும்பாக நின்ற பல தளபதிகளை, அற்புதமான போராளிகள் பலரைத் தொடர்ந்தும் களமுனைகளில் இழக்கின்றபோதெல்லாம் என்னுள் வெறுமைகலந்த கோபவுணர்வே எழும். அத்தகைய நேரங்களில் இந்தப் படையணிப் போராளிகளின் குடும்ப உணர்வுடன் கூடிய நம்பிக்கை கலந்த வார்த்தைகளும் தலைவர் அவர்களின் அறிவுரைகளுமே மீளவும் எனக்குள் புத்துணர்வை ஊட்டும்.

ஒவ்வொரு நெருக்கடியையும் அவரவர் நிலையிலிருந்து பார்த்து அணுகுகின்ற தலைவர் அவர்களின் பண்பினால், நெருக்கடி ஏற்பட்டவேளைகளிலெல்லாம் என்னால் அவற்றை இலகுவாகத் தீர்க்கமுடிந்தது. அத்துடன் சவாலான சிக்கல்களை எதிர்கொள்ளக்கூடிய துணிவையும் எனக்குள் ஏற்படுத்தியது. உண்மையில் தலைவர், தான் தலைவர் என்ற நிலையில்மட்டுமல்லாது, எல்லாமுமாக எமது போராளிகளுள் நிறைந்து நின்றார். எங்களுடைய ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் அவரின் நிழல் எமக்கிருந்தது. நெருக்கடியான காலங்களில்கூட போராளிகளின்



படிப்பகம்

padippakam



வேண்டுகோள்களுக்குச் செவிசாய்த்திருக்கின்றார். களம் சார்ந்தோ, சாராமலோ தமக்கேற்படும் சிக்கல்களை அவருக்குத் தெரியப்படுத்தியாவது தீர்க்கவேண்டும் என்ற பழக்கம் எமது போராளிகளிடம் இருக்கின்றது. உலகமே வியந்து பார்க்கும் உன்னதமான தலைவருக்கும் எமது போராளிகளுக்குமான உள்ளார்ந்த உறவை என்னால் வார்த்தைகளில் எழுதமுடியவில்லை.

இப்படையணியின் சிறப்புத் தளபதியாக இருப்பதையிட்டு நான் பெருமைப்பட்ட வேளைகள் அதிகம். எனது போராளிகளின் மனவுறுதி, முடியும் என்ற தன்னம்பிக்கை என்பவற்றால் பெறுமதி மிக்க செயல் விளைவுகளை அவர்கள் உண்டாக்கியபோதெல்லாம் நான் பெருமைப்பட்டிருக்கின்றேன். தலைவர் அவர்கள் கட்டளைகளை இட்டவேளைகளிலெல்லாம் அவற்றை நான் எந்தளவுக்குச் சிறப்பாகச் செய்யவேண்டுமென நினைத்தேனோ, அந்தளவுக்கு அதை முடிக்கவேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடமும் இருந்தது.

களமுனைகளில், நாம் பெண்கள் என்ற நிலையில் எதிரியிடமிருந்தும் இயற்கையாகவும் பல சிக்கல்களைச் சந்திக்கவேண்டியிருந்தது. ஆனால் எவ்வேளைகளிலும் அவற்றுக்கு முகம் கொடுத்து முறியடித்து இந்த விடுதலைப் பயணத்தில் எமது படையணிக்கெனவும் ஒரு தனியிடத்தை இவர்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள். தொடர்ச்சியாக விரிந்து பரந்த களமுனைகளில் நிற்கும் இவர்களுக்குச் சிறிய ஓய்வையேனும் கொடுக்கவேண்டுமென எமது தலைவர் முடிவெடுத்து, இராணுவ அச்சுறுத்தல் குறைந்த முன்னரங்கப் பகுதிகளில் விட்டவேளைகளிலும் அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலை இவர்களுக்கு இல்லை. அவ்வேளைகளில் தலைவருடன் தொடர்புகொண்டு, தமக்கென சவால் மிகுந்த பல களங்களை இவர்களே உருவாக்கினார்கள்.

ஆரம்ப காலங்களில் போர்சார்ந்த விடயங்களில் எனது கட்டளை கிடைத்தபின்பே முடிவுகள் எடுத்துச் செயற்பட்டுக் கொண்டிருந்த படையணியில், காலப்போக்கில் பல தளபதிகளின் போராளிகளின் உருவாக்கத்தினால், அவர்களது ஆர்வம்மிக்க



படிப்பகம்

padippakam



திறமையான செயற்பாடுகளினால், போர்சார்ந்த பட்டறிவால் ஒரு பகுதியில் தாமே தனித்துநின்று முடிவெடுத்துச் சண்டையை நடாத்தக்கூடிய பல அணித்தலைவர்கள் உருவாகினார்கள்.

எமது படையணி கடந்துவந்த கடினமான பாதையை நூலின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் நீங்கள் பார்க்கலாம். நீண்டு தொடரும் சமர்க்களங்களில் ஒரு காலப்பகுதியில் இருந்தவர் அடுத்த காலப்பகுதியில் இருக்கமாட்டார். ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒவ்வொருவர் கதாநாயகியர் ஆகவும், சிலவேளை ஒரு அத்தியாயத்தினுள்ளே பலர் கதாநாயகியராகத் தோன்றி மறைவோராகவும் இருப்பர். கடந்த ஏழாண்டுகளிலே அவர்கள் சாதித்தவை, அவர்களின் வாழ்வனுபவங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் எல்லாம் காலவெள்ளத்தில் அள்ளுண்டுபோய் அழிந்துவிடாமல், அடுத்தடுத்த தலைமுறைக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதற்காகவே இவ்வரலாற்று நூலை உருவாக்க எண்ணினோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

கேணல் விதுஷா / யாழினி
சிறப்புத் தளபதி
2 ஆம் லெப். மாலதி படையணி
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.



படிப்பகம்

padippakam

# முதல் வித்து

**1987**.10.10 தமிழீழ வரலாற்றில் புதிய சரிதம் ஒன்றைப் படைக்கப்போகும் அந்த இரவு அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது. ஆணிவேர் ஆழப்பதிந்து கொண்டிருந்த எமது போராட்டத்தை அழித்துவிடும் நோக்குடன் தமிழீழத்துக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் போராளி களைத் தேடி, இருள் கிழித்து உலாவத்தொடங்கியது. எல்லா இடங்களிலும் எம்மவரின் விழிகள் பகை வரவை எதிர்பார்த்தபடி காத்திருந்தன.

அப்போது நேரம் 1.15. கோப்பாய் கிறேசரடியில் நின்ற மகளிர் அணி வீதியில் போய்வரும் ஊர்திகள் யாருடையவை என அவதானித்தவாறு தாக்குதலுக்குத் தயாராக நிற்க, அதில் ஒருவராக தனது M16 ஐ அணைத்துப் பிடித்தபடி மாலதியும் நிற்கின்றார். வானம் கரிய இருளைச் சொரிந்துகொண்டிருக்க, குவியல் குவியலாகச் சிந்திக்கிடந்தன நட்சத்திரப் பூக்கள். இடையிடையே வீதியால் போய்வரும் ஊர்திகளின் ஒளிகள் வானத்தைநோக்கி நீண்ட ஒளிக்கோடுகளை வரைய, ஒவ்வொன் றையும் அவதானித்தபடி இருக்கின்றார் மாலதி. அப்பால் கைதடி நோக்கி விரிந்திருந்த வெளிகளினூடாக ஊடுருவிய கண்கள், இப்பால் கோப்பாய்ச் சந்தி கடந்து மிக வேகமாக வந்து கொண்டிருந்த ஊர்தியைநோக்கித் திரும்பின. மிக அண்மையில் வந்துவிட்ட ஊர்தியிலிருந்து குதித்த இராணுவம் இவர்களிருந்த



படிப்பகம்

பகுதியைநோக்கிச் சுடத்தொடங்கியது. அந்த இடத்தில் இந்திய இராணுவத்தைநோக்கிக் கனன்ற முதலாவது சுடுகலனும் மாலதியினுடையதுதான். கோப்பாய் – கைதடி வெளியில் எழுந்த சூட்டுச் சத்தங்கள் எங்கள் சரித்திரத்தில் புதிய அத்தியாயத்தை எழுதத்தொடங்கின.

சண்டை கடுமையாகத்தான் நடந்தது. சீறும் ரவைகளின் ஒலியும், அவற்றின் ஒளிர்வும் தாக்குதலின் கடுமையைப் பறைசாற்றின. மாலதி இராணுவத்தினருக்கு மிக அண்மையில் நின்று தாக்குதலைச் செய்துகொண்டிருந்தார். திடீரெனக் காலில் காயமுற்ற மாலதியின் குரல் வேட்டொலிகளையும் மீறி ஒலித்தது.

**“நான் காயப்பட்டிட்டன். என்ர ஆயுதத்தைப் பிடியுங்கோ. என்ர ஆயுதத்தைக் கொண்டுபோய் அண்ணையிட்டைக் குடுங்கோ”**

காயமுற்றபின்னும் சுட்டுக்கொண்டிருந்தவர் இராணுவம் மிக அதிகமாக நிற்பதைப் புரிந்துகொண்டார். தான் வீரச்சாவடைந்தாலுங்கூட, தான் நேசித்த ஆயுதம் எதிரியிடம் விடுபட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில், தன்னைப் பார்க்காமல் ஆயுதத்தைக் கொண்டுபோகும்படி கூறிக்கொண்டிருந்தார். அவரை எப்படியும் காப்பாற்றவேண்டும் என்ற வேகத்துடன் ஊர்ந்து சென்ற விஜியிடம்,

**“என்ர ஆயுதம் பத்திரம். என்னை விட்டிட்டு ஆயுதத்தைக் கொண்டுபோ”**

எனச் சொல்லி ஆயுதத்தைக் கொடுத்தவர், கழுத்திலிருந்த நஞ்சையருந்தி மண்ணை முத்தமிட்டார். அவர் சொன்னபடியே ஆயுதம் பத்திரமாகக் கொண்டுவரப்பட்டு இன்னொரு போராளியின் கரங்களில் தயாரானது.

இயல்பிலேயே புத்துணர்வும் துடிப்பும்நிறைந்த மாலதி சிறு வயதிலேயே விடுதலைப் போராட்டத்தோடு ஒன்றிப்போனவர்.

padippakam



அதனால் ஒவ்வொரு ஆயுதங்களின் பெறுமதியையும், வெற்றி நோக்கிய நகர்விலே அவற்றின் முக்கியத்துவத்தையும் உணர்ந்திருந்தார். அதேபோல தாய் மண்ணிலே ஆழ்ந்த பற்றுக் கொண்டு உழைத்த மாலதியின் நினைவோடு இலட்சியத்தைச் சுமந்து நடக்கின்றன போரணிகள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முதல் பெண் மாவீரரான 2 ஆம் லெப். மாலதி வழிகாட்டிச்சென்ற பாதையில் அதே நேசிப்போடு எமது பயணம் தொடர்கின்றது. அவர் தன் உயிரிலும் மேலாக நேசித்த ஆயுதமும், இந்தத் தேசமும் அவரின் வரலாற்றைச் சுமந்திருக்க, மன்னார் மகளின் நாமத்தைத் தாங்கிய படையணியாய் நாம் நிமிர்ந்து நிற்கின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

2 ஆம் லெப். மாலதி படையணி
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.



படிப்பகம்

padippakam

# விழுதாகி வேருமாகி

2ம் லெப் மாலதி படையணி
தமிழீழ விடுதலைப் புலிகள்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# 01

வீதிக்கு இரு மருங்கும் சீருடையில் நாம் அணி வகுத்து நின்றோம். எமக்குப் பின்னால் எமது மக்கள் நின்றார்கள் பலத்த எதிர்பார்ப்போடு. எல்லோரையும் இடறியபடி குறுக்கும் மறுக்கும் பாய்ந்து தம் நிழற்படக் கருவிகளாலும், ஒளிப்படக் கருவிகளாலும் எம்மைச் சுட்டுத் தள்ளிக்கொண்டும், கேள்விகளால் துளைத்துக் கொண்டுமிருந்தனர் உலக, இலங்கை ஊடகவியலாளர்கள்.

யாழ். நெடுஞ்சாலையைக் கண்காணித்தவாறு வீதியின் இடது புறமாக நாம் அமைத்திருந்த காப்பரணில், தீச்சுவாலை எதிர் நடவடிக்கையின்போது கப்டன் தண்ணிலா நின்று சண்டையிட்ட அதே காப்பரணில் இப்போது அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் நிற்கின்றனர். காப்பரண்களுக்குப் பின்னாலான எமது நகர்வகழி நெடுஞ்சாலையைக் குறுக்கறுத்தவாறும் போயிருந்தது. ஆனால், அது இரண்டு நாட்களின் முன் புல்டோசர் கொண்டு குறிப்பிட்ட சில மணிநேரத்தில் தூர்க்கப்பட்டு, வீதி சமப்படுத்தப்பட்டிருந்தது. சண்டையின்போது படையினரின் பலத்த எறிகணைவீச்சின் மத்தியில், கிபிர் விமானக் குண்டுவீச்சின் மத்தியில் இதைக் கைகளால் வெட்ட ஒரு வாரத்துக்கும் மேலாக நாம் உழைத்திருந்தோம்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

வீதியிலும், வீதியின் அயற்புறங்களிலும் ஒரு வாரமாகக் கண்ணிவெடி அகற்றும் பாரிய பணியைச் செய்த கண்ணி வெடிப் பிரிவினரும் எம்மோடு வரிசையாக நின்றனர். அவர வர் வைத்த கண்ணிவெடிகளை அவரவரே அகற்றுவதாகத் தான் ஏற்பாடு. எமது தரப்பில் பெண் போராளிகள் கண்ணி வெடி அகற்றிக்கொண்டிருந்ததைப் படையினர் ஒரு வாரமும் ஆச்சரியமாகப் பார்த்தவாறிருந்தனர். கடைசி நாளன்று எம்மவர்கள், படையினரின் காவலரண்களுக்கு மிக அரு கில் எம்மால் புதைக்கப்பட்டிருந்த ஊர்திக்குரிய கண்ணி வெடியொன்றை அகற்றியபோது அதிர்ச்சியடைந்தது படையினர் மட்டுமல்ல, வேலைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த அனைத்துலகக் கண்காணிப்பாளர்களும் தான். அதை அங்கே வைப்பதற்குப் பாதுகாப்பு வழங்கிய வர்களும், வைத்தவர்களும் நின்றுகொண்டிருந்தோம். புலி களின் கரங்கள் எதுவரை நீளும் என்பதை யாராலும் ஒருபோதும் அறுதியிட்டுச் சொல்லமுடியாது.

நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஆறு வருடங்களாக எம்மைப் பிரிந்திருந்த யாழ்ப்பாண மக்கள் எம்மைக் காண்பதற்காகப் படையினரின் எல்லையருகே முண்டிய டித்துக்கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்துள்ளே அரசியற் பணி செய்வதற்காகப் போகவுள்ள அரசியற்றுறைப் போராளிகள், எங்களுடைய முன்னரங்க நிலையருகே நின்றனர். கூடவே மக்கள். எங்கள் மக்கள். எல்லா இடங் களிலும் எமைவிட்டுப் பிரியாமல் தோள் தந்த மக்கள் தம் உறவுகளை, வீடு வாசலை, நிலத்தைக் காணும் ஆவலுடன், பரபரப்புடன்.

இவை யாவற்றுக்கும் காரணமானவர்கள் சீருடையோடு வீதியின் இருமருங்கும் அணிவகுத்தபடி மிக அமைதியாக... காரணகர்த்தாக்களில் பலர் துயில் நிலங்களில் தலை சாய்ந்தபடி மிக மிக அமைதியாக... அனைத்துக்கும் பின் னால் இருந்த அவர், தமிழீழத்தை மீட்பதற்கான தனது

padippakam



இடையறாத பணிகளுள் எப்போதும்போல் இப்போதும் மூழ்கியபடி அமைதியாக...

நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. விளக்குவைத்தகுளத்திலும் முகமாலையிலும் அன்று ஒரே நேரத்தில் யாழ் நெடுஞ்சாலை திறந்துவைக்கப்படவிருந்தது. பாதை திறப்பேன் எனச் சூளுரைத்துப் படைகளை நகர்த்தி, படுதோல்வியைச் சந்தித்த சிறீலங்காவின் பாதுகாப்பு இணையமைச்சர் போன இடம் தெரியவில்லை. சொல்லைவிடச் செயலுக்கே முன்னுரிமை தருகின்ற எங்கள் தலைவரின் நுட்பமான காய் நகர்த்தலால், எந்தப் பலனையும் எதிர்பாராமல் தாய் நிலத்துக்கான தம் கடமையைச் செய்து விதையாகிப் போனவர்கள் வெளிப்படுத்திய பலத்தின் விளைவால், பாதை இன்று திறக்கப்படப்போகின்றது.

*2002.04.08.* நேரம் மதியமாகிக்கொண்டிருந்தது. மழை பெய்யத் தொடங்கிவிட்டிருந்தது. கண்காணிப்பாளர் ஒருவர் நாடாவை வெட்ட, அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்க ஊர்தியொன்று முதலில் இங்கிருந்து அங்கே செல்ல, அதைத் தொடர்ந்து போராளிகள் செல்ல, அவர்களோடு மக்களும் செல்ல, முன் சென்ற போராளிகளைப் படையினரின் எல்லையைக் கடந்து யாழ்ப்பாணத்துள்ளிருந்து ஓடிவந்த மக்கள் கட்டித் தழுவி, முத்தமிட்டு, தம் தோள்களிலே காவிச் சுமந்து ஆடிப் பாடியவாறு யாழ்ப்பாணத்தினுள்ளே, படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள்ளே போனார்கள். வீதி நிறைய மக்கள், உள்ளே போவோரும் வருவோருமாய். எங்களை மறுபடி ஊடகவியலாளர்கள் சூழ்ந்துகொண்டார்கள்.

“நீங்கள் எந்தப் பிரிவு?”

“மாலதி படையணி”

“மாலதி படையணி...! ஆ, நல்லது. இந்தப் பாதை திறக்கிறதைப்பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?”



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

எதைச் சொல்வது நண்பர்களே?

பாதை திறக்கப்போகின்றோம் என்று 'கதை' விட்டவாறு வவுனியாவிலிருந்து மாங்குளம்வரையும், கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம்வரையும் பாதையை மூடி வைத்திருந்த படையினரை முறியடித்து, பாதையை நாம் இன்று திறப்பதைப்பற்றிச் சொல்வதா?

சமாதானத்துக்கான போர் என்று பெயர் சூட்டி, தமிழர்களை அழித்தொழிக்கும் போரைச் செய்தவர்களின் முகமூடியைக் கிழித்து, உண்மையான சமாதானத்துக்கான கதவுகளை இப்போது நாமே திறந்துவிட்டிருப்பதைச் சொல்வதா?

எதைச் சொல்வது?

இந்தப் பாதை திறப்புக்காக எமது படையணி கொடுத்த விலை... ஒட்டுமொத்தமாக எமது விடுதலை அமைப்பு கொடுத்த விலை...

அங்குலம் அங்குலமாக இந்த வீதியெங்கும் இரத்தம் சிந்தி நாம் நடந்து வந்த கதை................

மிகப் பெரிது.

அன்று புலோப்பளையிலிருந்த 1.3 தளம் களைகட்டியது. மாலதி படையணிப் போராளிகள் 1996 ஆம் ஆண்டின் முதலாவது நாளை வரவேற்பதற்கான ஏற்பாடுகளில் தடல்புடலாக ஈடுபட்டிருந்தனர். மேடையைத் தயார்ப்படுத்தும் வேலையில் சிலர் ஈடுபட்டிருக்க, கலை நிகழ்வுகளைக் கடைசி முறையாகச் சரிபார்த்தபடி பலர், உணவு ஒழுங்குகளோடு சிலர் என்று ஒருவருமே ஓய்வாக இல்லை.

padippakam



ஆயிரத்துநூறுக்கும் மேலான போராளிகள் கேணல் விதுஷா அவர்களின் நிர்வாகத்தின் கீழ் மாலதி படையணியாக இயங்கினர். லெப்.கேணல் சூரியகலா, மேஜர் பமிலா, அசோகா ஆகியோரினது மூன்று கொம்பனிகள், மேலதிகமாக இரண்டு பிளாட்டூன்கள் என்பவற்றுடன், அடிப்படைப் பயிற்சியை முடித்த புதியவர்களுமாக 1.3 இல் கூடியிருந்தனர்.

எங்களுக்கான பின்னணி நிர்வாகக் கட்டமைப்புகள் யாவும் ஏற்கனவே தென்மராட்சியிலிருந்தன. 1.3 தளத்தைவிட சோதியா, விடியல் என இருபெரும் தளங்கள், ஆயுத, எரிபொருட் களஞ்சிய விநியோகத் தளங்கள் அனைத்தும் அங்கேதான். தள, வெளி நிர்வாகங்களைத் துணைத் தளபதி அஜந்தியும், பயிற்சித் திட்டங்களை ஆஷாவும், நிதி வழங்கற் செயற்பாடுகளை லெப்.கேணல் மதியும், தொலைத்தொடர்புக் கட்டமைப்பை மேஜர் லக்சனாவும், கள மருத்துவ நிர்வாகத்தை வானதியும், தையல் வேலைகளை டொறினும் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

இவை அனைத்தையும் மேற்பார்வை செய்வதோடு, களம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் நேரடியாக நெறிப்படுத்துவது சிறப்புத் தளபதி கேணல் விதுஷாவின் பணியாக இருந்தது. எமது வேவு அணியினர் லெப். கேணல் மைதிலியினதும், கண்ணிவெடி அணியினர் அஸ்வினியினதும் வழிநடத்தலில் இயங்கிக்கொண்டிருந்தனர்.

இவர்களைவிட, அருந்ததி பாசறையில் கனரக ஆயுதப் பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருந்த, பெற்றுக்கொண்டிருந்த எமது பயிற்சியாசிரியர்களும், பயிற்சியாளர்களும் வருகை தந்து எம்முடன் கை கோர்த்துக்கொள்ள, 1.3 தளம் திருவிழாக்கோலம் பூண்டது.

மாலையில் ஆரம்பித்த கலை நிகழ்வுகள் மழை பெய்த போது சிறிது இடைவெளிவிட்டு, அதிகாலைவரை நீடித்தன. படையணியில் எல்லோரையும் கவர்ந்த LMG



படிப்பகம்

பயிற்சியாசிரியர் மேஜர் மாதுரியின் நடனம் அன்றைய நிகழ்வுக்குச் சிகரம் அமைத்தது.

அன்றைய நாளையே தனது வரலாற்றின் முதலாவது நாளாக மாலதி படையணி கொள்கின்றது.

தமிழர்களுக்கு விடுதலை கோரிப் போராடிவரும் எமது இயக்கம், தமிழ்ப் பெண்கள் அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலையை மாற்றாமல், முழுமையான விடுதலையைப் பெறமுடியாது என்பதை உணர்ந்தது. அதனால் தமிழ்ப் பெண்களை ஆரம்ப காலங்களில் அரசியல் மயப்படுத்தி, ஒரு அணியாகத் திரட்டி, பெரும் புரட்சியையே நடாத்தியது. விடுதலைப் புலிகள் மகளிர் படையணியானது 1985 ஆம் ஆண்டில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் தோற்றம் கொண்டது. ஆரம்பத்தில் நூறுக்கும் குறைவான பெண்களைமட்டுமே கொண்டதாக, மகளிர் படையணி இருந்தது.

சிறீலங்கா இராணுவம், பின்னர் இந்திய இராணுவம், அதன் பின்னர் சிறீலங்கா இராணுவத்துடனான சமர்க் களங்கள் என்று தொடர்ந்து நீள்கின்ற போராட்ட அரங்கில், எண்ணற்ற களங்களைக் கண்டுவரும் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியிலிருந்து காலத்துக்குக் காலம் தேவைகள் எழும்போதெல்லாம் தலைவரின் சிந்தனைக்கமைய புதிய பல பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்ட அதேவேளை, படையணியும் தன் பலத்தை அதிகரித்தே வந்தது.

இந்திய இராணுவம் சூழ்ந்து நிற்க மணலாறு, வவுனியாக் காடுகளுள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தளங்கள் மையங்கொண்டிருந்த நாட்களில்கூட, கொள்கைபரப்பு ஏடுகளை வெளியிடும் அரசியற்

padippakam



பிரிவாகவும், மருத்துவப் பிரிவாகவும், கேணல் கிட்டு அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட (1988) கனரக ஆயுதந் தாங்கிய அணியாகவும், கரும்புலிகள் அணியாகவும், இராணுவத்தினரின் அலைவரிசைகளை இடைமறித்துத் தகவல் சேகரிப்போராகவும் விரிவுபெற்றிருந்த மகளிர் படையணி, திட்டமிட்ட தாக்குதல், முறியடிப்புத் தாக்குதல் கள், பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்றவற்றிலும் தன் பங்கை ஆற்றத் தவறவில்லை.

1986.10.12 இல் மன்னார்–தள்ளாடியிலிருந்து முன்னே றிய இராணுவத்தை அடம்பனில் இடைமறித்துத் தாக்கிய சண்டையோடு தன் கள வரலாற்றைத் தொடங்கிய மகளிர் படையணி, 1995 ஒக்ரோபரில் யாழ் நகரப் பகுதியை வலிந்து கட்டுப்படுத்தும்நோக்கில் முன்னேறிய சூரியக் கதிர்-01 நடவடிக்கைப் படைகள்மீதான வழிமறிப்புத் தாக்கு தலின் முடிவில், தான் தோற்றுவிக்கப்பட்ட (1985.08.18) பத்து ஆண்டுகளின் முடிவில் தன் வரலாற்றில் புதிய பக்கம் ஒன்றைத் திறந்துவிட்டது. அதுவே மாலதி படை யணியின் வரலாற்றின் முதற் பக்கமாக அமைந்தது.

உலகத் தமிழர் வரலாற்றிலேயே முதல் தடவையாகத் தமிழீழத்தில் உருவாக்கப்பட்டு, பத்து வருட காலமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டவாறிருந்த இராணுவமயப்படுத் தப்பட்டிருந்த பெண்களின் போர் அணி ஒன்று, மாலதி படையணி என்ற பெயரைத் தாங்கி, பெயர் சூட்டப்பட்ட ஒரு தனித்த படையணியாக உலகுக்குத் தன்னை வெளிப் படுத்தியபோது, 3 ஆம் கட்ட ஈழப்போர் நடந்துகொண்டி ருந்தது.

"தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மக ளிர் படையணிகளின் தோற்றமானது சமர்க்களங் களில் புதியதோர் உத்வேகத்தையும் மிகக் காத்திர மான பயன் விளைவுகளையும் ஏற்படுத்தி வந்துள் ளமை நாமறிந்ததே.



படிப்பகம்

padippakam

2ம்லெப். மாலதி படையணி

*தேசியத் தலைவர் அவர்களின் தொலைநோக்கான பார்வையின் வெளிப்பாடாக அன்று தோற்றம் பெற்ற மகளிர் படைப்பிரிவு இன்று பல்வேறு படையணி களாக, துறைகள், பிரிவுகளாகப் பரிணமித்து நிற் கின்றது"*

*என்கிறார் கேணல் வி. கருணா.*

1996 இன் ஆரம்ப நாட்கள் அவை. வலிகாமப் பகுதி எம்மிடமில்லை. வலிகாமத்தை வலிந்து பிடித்த சிறீ லங்காப் படையினரை அடுத்த நகர்வுபற்றிச் சிந்திக்க விடாது தடுக்கவேண்டியது எமது தேவையாக இருந்தது. ஆனையிறவின் பக்கவாட்டாக அமைந்துள்ள வடமராட்சி கிழக்குப் பகுதி, விடுதலைப் புலிகளால் வேவு பார்க்கப்பட் டது. மைதிலியுடனான சிறப்பு வேவு அணி வெற்றிலைக் கேணி, மண்டலாய்ப் பகுதிகளில் தகவல்களைத் திரட்டிக் கொண்டிருந்தது. அவர்களது இன்னொரு அணி லெப். கேணல் முகுந்தாவுடன் ஊரியான் பகுதியை வேவு பார்த் துக்கொண்டிருந்தது.

நாகர்கோயில் பகுதியில் அமைந்திருந்த 3.7 தளத்தில் அசோகாவின் கொம்பனி வலிந்த தாக்குதலுக்கான பயிற்சி ஒன்றில் ஈடுபட்டவாறிருந்தது. இவர்களோடு மேலதிகமாக லெப்.கேணல் ரத்தி நின்றார். கூடவே சிறுத்தைப் படையணி யின் கொம்பனிகளும் நின்றன. ஆனையிறவின்மீது தாக்கு தல் ஒன்றை நாம் நடத்தும்போது, வடமராட்சி கிழக்குக் கடற்கரைவழியே ஆனையிறவுக்குக் கிடைக்கக்கூடிய விநியோகத்தைத் தடுப்பதே இவர்களின் பணி. மைதிலி கொடுத்துக்கொண்டிருந்த வேவுத் தரவுகளுக்கேற்ப திருத் தங்கள், மாற்றங்களுடன் திட்டப் பயிற்சி நடைபெற்றது. பயிற்சியின் ஒரு பகுதியான கடற்கரை மணலில் ஓடுவது, ஆரம்பத்தில் அசோகாவின் கொம்பனிக்குச் சிரமமாக



படிப்பகம்

padippakam



இருந்தபோதும், நாளடைவில் மணலோட்டத்தில் ஈடிணை யில்லாத தேர்ச்சி பெற்றுவிட்டது.

இதில் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவென்றால், அசோகாவின் கொம்பனி தவிர்ந்த மற்றைய இரண்டு கொம்பனிகளும் சிறப்புப் படையணிகள். அந்தச் சிறப்புப் படையணிகளுக்குச் சமமாக இருமடங்கு அதிகரிக்கப்பட்ட மூன்று நேர உணவு, இரு நேரச் சிற்றுண்டிகள், பால், முட்டைகள், சிறப்புப் படையணியின் அதே ஓய்வற்ற, கடினமான தொடர் பயிற்சி மாலதி படையணிக்கும் வழங்கப்பட்டது. அதிகரிக்கப்பட்ட உணவைச் சாப்பிட முடியாமல் திணறிய அசோகாவின் கொம்பனி, உணவு மிச்சம் விட்டால் கிடைக்கும் ஒறுப்புக்குப் பயத்தில் கடற்கரை மணலுக்குள் உணவைப் புதைத்து வைத்துவிட்டு, தனது வழமையான அளவு உணவோடு சிறப்புப் படையணிகள் செய்த அனைத்துப் பயிற்சி களையும் சளைக்காமல் செய்து முடித்தவிடயம், எல்லாம் முடிந்து வெளியே வந்து இவர்கள் சொல்லும்வரை யாருக்கும் தெரியாது. சொன்னபின் வழங்கப்பட்ட ஒறுப்புப்பற்றி யாருக்கும் இவர்கள் சொன்னதில்லை.

பயிற்சிகள் முடிந்த பின்னர், சிறப்புப் படையணிகள் இரண்டும் மக்களற்ற வலிகாமத்தினுள் சிறீலங்காப் படைகளுக்கு எதிரான நடவடிக்கைகளைச் செய்வதற்காகப் போய்விட்டன.

அதே நேரம், பூநகரிப் பகுதியில் சூரியகலாவின் கொம் பனியுடன் லெப்.கேணல் நிஸ்மியா நின்றார். வேறு படை யணிகளின் கொம்பனிகளும் அங்கே வலிந்த தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன. இவர்களின் திட்டம் ஊரியான் பகுதியால் உள்நுழைந்து ஆனையிறவைத் தாக்கி யழிப்பதாகும். இவர்களுக்குரிய தரவுகளை முகுந்தாவின் அணி திரட்டிக் கொடுத்துக்கொண்டிருந்தது.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

*1996 இன் முற்பகுதியில் பெண் போராளிகளின் 33 ஆவது பயிற்சிப் பாசறை, வடமராட்சி-பொலிகண்டியில் அமைந்திருந்த சுகி தளத்திலும் நவிண்டிலில் அமைந் திருந்த 2.2 தளத்திலும் கேணல் துர்க்கா தலைமையில் நடைபெற்று முடிந்திருந்தது. அப்பாசறையிலிருந்து வெளி யேறியவர்கள் மாலதி படையணியோடு உள்வாங்கப்பட்டி ருந்தனர். அவர்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர் அருந்ததி பாசறையில் கனரக ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். இப்படி எல்லோருமே ஒவ்வொரு முனை யில் வெவ்வேறு தயார்ப்படுத்தல்களோடு சண்டை ஒன்றுக் கான வாய்ப்புக்காகக் காத்திருக்க, தலைவரிடமிருந்து ஒரு தகவல் வந்தது. படைத்தரப்பு மேலும் ஒரு நகர்வைச் செய்யவுள்ளதால், அதற்கான எதிர் நடவடிக்கைக்குத் தயாராகும்படி சொல்லப்பட்டது.*

*சூரியக்கதிர்-01 மூலம் வலிகாமத்தை வலிந்து பிடித்த புகழ் மயக்கத்திலிருந்து ரத்வத்தை விடுபடாத காலம் அது. சிங்களவருக்கெனப் புத்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு என்ற முழு இலங்கைபற்றிய பேரரசுக் கனவு அவரை உந்தியது. தன் மங்காத புகழை வலிகாம எல்லையோடு முடக்கிவிடுவதில் அவருக்குச் சற்றும் உடன்பாடில்லை. சூரியக்கதிர்-02 இனைச் செய்வதற்கான நன்னாளைத் தேடத் தொடங்கினார்.*

*நாங்களும் சுறுசுறுப்பாகினோம். படையினரின் நட வடிக்கைகள் எம்மால் அவதானிக்கப்பட்டன. திட்டப் பயிற்சியில் ஈடுபட்டவாறு வன்னியிலும் நாகர்கோயிலி லும் புலோப்பளையிலும் நின்ற கொம்பனிகள் அவசரமாக வரவழைக்கப்பட்டன. அவை வலிகாமத்தை நோக்கிய வாறு தென்மராட்சி, வடமராட்சிப் பகுதியில் காவல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டன.*

*பொலிகண்டியில் வந்து நின்ற மைதிலி தலைமையி லான வேவு அணி யாக்கரை, மண்டான், வாதரவத்தைப்*

padippakam



பகுதிகளில் வேவு பார்க்குமாறு கேணல் விதுஷாவால் பணிக்கப்பட்டது. வேவு அணியை மூன்று அணியாகப் பிரித்து அவர் வழியனுப்பினார்.

அவர்களது கடினமான உழைப்பின் பயனாகப் படையினரின் காப்பரண்கள், தொடர்நிலைகள்பற்றிய தகவல்களும் வரைபடங்களும் வரத்தொடங்கின. அதற்கேற்ப எமது இரண்டு கொம்பனிகள் முறியடிப்புத் தாக்குதல் செய்யும் தயார்நிலையோடு நிலப்பரப்பைக் காத்துநின்றன.

பமிலாவின் கொம்பனி வடமராட்சியில் உள்ள வாதரவத்தை, கப்புதூ, மண்டான் பகுதிகளில் தொடர் காப்பரண்களை அமைத்து நிலைகொண்டது. அசோகாவின் கொம்பனி மண்டான்தொடங்கி வல்லைவெளி வீதியில் தொண்டைமானாறு, உடுப்பிட்டி வீதிகள் சந்திக்கும் முச்சந்திவரையும், அதற்கப்பால் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில்வரை தாத்தா தலைமையிலான ஜெயந்தன் படையணியும் நின்றது. வாதரவத்தைக்கும் யாக்கரைக்கும் இடைப்பட்ட மண்டான், வல்லைவெளி முழுவதும் உப்புவெளிகள். தொண்டைமானாற்று உப்பேரி மழைகாலங்களில் பெருகும். அப்படிப் பெருகியோடுகின்ற மழைநீர் கடல்நீரையும் சேர்த்து வல்லைவெளியூடே வடமராட்சி கிழக்கைநோக்கிப் பாயும். நீரோட்டம் முடிந்தபின்னர் குறிப்பிட்ட சில இடங்களில் தேங்கி நிற்கும் நீர் கோடைக்கு உப்பாகும். மண்டான், யாக்கரையின் முழுநிலமுமே உப்பு விளையும் நிலங்கள் இல்லையாயினும், உப்பின் இயல்பை அந்நிலங்கள் வெளிக்காட்டும். பரந்த உப்புவெளிகள், சதுப்பு நிலம், உவர்நிலம், பாளம் பாளமாய் வெடித்த நிலம், இவற்றினிடையே சிறுசிறு பற்றைகள், பூவரசு மரங்கள், இடையிட்டு சில பனைமரங்கள். புவியியல் ரீதியில் அது போர் ஒன்றுக்கு ஏற்ற பகுதியல்ல. மனிதர் வாழ்வதற்கு அது பொருத்தமான இடமுமல்ல. எனினும் நாம் அங்கு நிலைகொண்டோம்.



படிப்பகம்

2ndலெப். மாலதி படையணி

1987 இல் சிறீலங்காப் படைகள் 'விடுதலை நடவடிக்கை' (Operation Liberation) மூலம் வடமராட்சிப் பகுதியை வலிந்து பிடித்தபோது தென்மராட்சிநோக்கிய திசையில் அமைந் திருந்த வடமராட்சியின் கடைசி நகரான கப்புதூவுக்குப் படையினர் வரவில்லை. பரந்திருந்த உப்புவெளிக்கும் அப்பால் நீண்ட தூரத்தில் தனித்த ஊராகக் கப்புதூ இருந்ததாலும், அவ்வெளிகள் போருக்கு உகந்த பகுதியாக இல்லை என்பதாலுமே இராணுவம் இங்கு வரவில்லை என்று வடமராட்சி மக்கள் அந்த நேரம் சொல்வார்கள். இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி ஊர் பிரிந்த வடம ராட்சி மக்கள் யாக்கரை வெளியூடே தென்மராட்சி நோக் கிய தமது நடைப்பயணத்தைத் தொடர்ந்தபோது கப்புதூ கிராமத்தின் அநேகமான கிணறுகள் வற்றிப் போயிருந் தன. முன்னேறி வந்த சிறீலங்காப் படைகள் உப்புவெளி தொடங்கும் இடத்தில், கரவெட்டியின் பின்புறம் அமைந் திருந்த யாக்கரையில், உப்புவெளியைப் பார்த்தவாறிருந்த பிள்ளையாரின் யானைத் தலையை உடைத்து, இரத்தம் ஒழுகியவாறிருந்த ஒரு ஆட்டுத் தலையைப் பொருத்தி யதோடு நின்றுகொண்டன.

இத்தகைய நிலப்பகுதியில் பமிலாவின் கொம்பனி மிகக் கடுமையான நாட்களைச் சந்தித்தது. சாதகமற்ற நிலத்திலே சாதகமான பகுதிகளைத் தேடிக் காப்பரண்கள், பதுங்குகுழிகளை அமைத்தனர். 'கடுமையான நாட்கள்' என்று இரு சொற்களில் சொல்லிவிடமுடியாத கடுமை. உண்மையில் கொடுமை அது. வானத்தையே கூரையாகப் பயன்படுத்திய இவர்களை நடுப்பகலில் மார்ச் மாத வெயில் வறுத்தெடுத்தது. அதற்கு நேர்மாறாக இரவில் குளிர் நடுக்கியது. வீசுகின்ற காற்று உப்பைச் சுமந்துவந்து உடலை எப்போதும் பிசுபிசுப்பாகவே வைத்திருந்தது. ஓய்வில்லாத வேலையால் பெருகிய வியர்வை உடலை எரித்தது. உடைகள் மிக வேகமாகப் பழுதடைந்து இற்றுப் போகத் தொடங்கின. குடிநீர் எடுப்பதற்கு நீண்ட நடைப்

padippakam



பயணங்களை மேற்கொண்டனர். குளிப்பதற்கும் அப்படியே.

இதேநேரம் அசோகாவின் கொம்பனி வடமராட்சியின் கரையோரங்களில் காவல் உலாக்களில் ஈடுபட்டதோடு நிலப்பரப்பைத் தமக்குப் பழக்கப்படுத்திக்கொண்டுமிருந்தது. 1987 இல் செய்யப்பட்ட 'விடுதலை நடவடிக்கை' போன்று தொண்டைமானாறுப் பகுதியிலிருந்து இராணுவம் முன்னேற முயன்றால், எதிர்க்கும் பணி இவர்களுடையது.

ஆட்பற்றாக்குறை இருந்ததால் எமது அணிகள் இடைவெளிகளை விட்டவாறே நிலைகொண்டன.எனவே வேவு, கண்ணிவெடி அணிகள் காவலுலாக்களும் கண்காணிப்புமாகக் கடுமையாக வேலை செய்யவேண்டியிருந்தது. நிமிடங்களைக்கூட வீணாக்காது உழைத்தனர். வேவு அணிகள் திரட்டிய தகவல்களின்படி அச்சுவேலி, புத்தூர், ஆவரங்கால் வீதிகளில் இராணுவ ஊர்திகளின் நடமாட்டங்கள் அதிகரித்திருந்தன. படையினரின் நடவடிக்கைகளில் வித்தியாசம் தெரியவே, எல்லோரும் எச்சரிக்கையடைந்தோம்.

படையினரின் வரவு வாதரவத்தைப் பகுதியில் நடக்கலாம் என்ற ஊகத்தை வேவு அணியினரிடம் வெளிப்படுத்திய கேணல் விதுஷா இராணுவம் வரவுள்ள பாதையை, படை நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளை அறியும்படி அவர்களைப் பணித்தார். இதன்படி வேவு நடவடிக்கைகள் மேலும் வேகம் பிடித்தன.

படையினர் முற்றுமுழுதான தயார்நிலையில் இருந்தனர். மின்விளக்குகள் இரவைப் பகலாக்கின. எமது வேவுக்காரர்களும் படைத் தளத்தின் தடைக் கம்பியைக் கடந்து உள்நுழைவதற்குக் கடும் முயற்சிகள் செய்துகொண்டிருந்தனர். வாதரவத்தைப் பகுதிவழியே படையினரின்



படிப்பகம்

கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைய மேஜர் வாணியும் கப்டன் கோபியும் மறுபடி மறுபடி முயன்றார்கள்.

தொடர் வேவு முயற்சியில் ஒரு விடயம் அவதானிக்கப் பட்டது. இரவைப் பகலாக்கும் மின் பிறப்பாக்கிகள் இரவு 10.00-10.15, 12.00-12.15 வரையான இரண்டு பதினைந்து நிமிடங்களுக்கு ஓய்வெடுக்கின்றன என்பதுதான் அது. இந்தப் பதினைந்து நிமிடங்களைப் பயன்படுத்திப் படையி னரின் மண் அணையில் ஏறும் முடிவை அவர்கள் எடுத்த னர். கணப்பொழுதுகளில் நகரும் வேகம் பெற்ற எமது வேவு அணியினருக்கு, பதினைந்து நிமிடங்கள் மிகப் பெரிய கால அளவாகவே தோன்றியது.

இப்போது வாதரவத்தைப் பகுதி முன்னணிக் காப்பரண் களில் படை நடமாட்டம் வழமைபோலிருந்தது. ஆனாலும் மூன்று நாட்களாக முயன்றும் உள்நுழையும் முயற்சி கைகூடவில்லை. படையினர் நடவடிக்கையை இதோ தொடங்கப்போகின்றனர் என்று உள்ளுணர்வு சொன்னது. அதற்குள் எவ்வாறேனும் நாங்கள் நுழைந்தேயாகவேண் டும்.

1996 ஏப்ரல் 02

"எப்படியாவது இண்டைக்கு உள்ளே போய்விடவேணும்"

என்றார் மைதிலி. அணிகள் புறப்பட்டுவிட்டன. அன்று முன் நிலவு. பின் இருட்டு.

வாதரவத்தைக் கிராமம் இடையிடையில் வீடுகளையும், வீட்டோடு சிறு தென்னந் தோப்புகளையும், பயிர் நிலங் களையும், சிறு பற்றைகளையும் கொண்டது. வெளியும் மறைப்பும் மாறி மாறி வரும். இவற்றைக் கடந்தே படையினரை நெருங்கவேண்டும்.

padippakam



முன்னணி அவதானிப்பு நிலையில் மேஜர் நிரஞ்சினி யோடு போன ஐவரும் நின்று அவதானித்தனர். இருவர் வெளிப்பாதுகாப்பில் ஈடுபட கோபி, வாணி, ஜெனோ மூவரும் வெளிகொண்ட பகுதியொன்றைக் கவனமாகக் கடந்தனர். மிகவும் விழிப்புடன் நகர்ந்த இவர்கள், கட்டிடப் பகுதியினுள் இராணுவ நடமாட்டத்தைக் கவனித்து விட்டனர். உள்நுழையும் முயற்சி ஏற்கனவே மூன்று நாட்களாக வெற்றி தரவில்லை. இன்று நான்காவது நாள். தடையை நெருங்குமுன்பே இராணுவம். மாற்று முடிவை எடுக்கத்தான்வேண்டும்.

அவ்விடத்திலிருந்து மெல்லப் பக்கவாட்டாக விலகி, மீண்டும் முன்னேறினர். மறுபடியும் முன்னே இராணுவம். மீண்டும் பக்கவாட்டாக விலகி, முன்னோக்கி நகர்ந்தனர். அந்தநேரம் மின் பிறப்பாக்கிகள் ஓய்ந்தன. எங்கும் இருள் தான். மிகவேகமாக முதலாவது கம்பிவேலித் தடையை அடைந்தனர். கோபி பார்வையைக் கூர்மையாக்கிச் சூழலை அவதானிப்பதில் ஈடுபட, வாணி உள்நுழைவதற் கென ஜெனோ தடைக்கம்பியைத் தூக்கி உயர்த்தினார். அதற்குள் கோபி ஒரு உருவத்தைக் கண்டுவிட்டார். தடைக்கம்பியிலிருந்து 5மீ. தள்ளி அருகருகே நின்ற பூவரசுக்கும் பனைக்கும் கீழே அந்த உருவம் நின்றது.

சிறு மண் கட்டியைத் தூக்கி ஜெனோமீது கோபி எறிய, கம்பியை விட்டுவிட்டு ஜெனோ வந்தார். வாணியும் திரும்பி வந்தார். மூவரும் ஒன்றுசேர்ந்தவுடன் இராணு வத்தைச் சைகையால் காட்டினார் கோபி. இப்போது இராணுவத்தினர் கதைக்கும் குரலும் கேட்டது. சட்டென மின் விளக்குகள் எல்லாம் உயிர்பெற்றன. அதற்குள் பதினைந்து நிமிடங்கள் கடந்துவிட்டனவா? ஒருவர் எழுந்துநின்று இவர்கள் மூவரும் நின்ற திசையைப் பார்த்தார்.



படிப்பகம்

30மீ. வெளியான பகுதியில் மின்விளக்குகளின் பேரொளியால், மூவரும் துல்லியமான இலக்குகளாகத் தடைக் கம்பியருகே நின்றனர். அவர்கள் அதிலே நிற்பது, ஓடுவது தற்கொலைக்கு ஒப்பான விடயங்கள். திடீரென மின்விளக்குகள் அணைக்கப்பட்டன. நெருக்கடி எழுந்தால் கையெறி குண்டுகளை வீசி, எழும் புழுதியைப் பயன் படுத்தி ஓடுவதென்ற முடிவு ஏற்கனவே அவர்களிடமிருந்த தால், அது தன்னிச்சையாகவே நடந்தது.

தடைக்கம்பியடியிலிருந்து இவர்கள் விலகத் தொடங்க வும், பூவரசு மரத்தடியிலிருந்து சரமாரியாகச் சூடுகள் வந்தன. அதற்கிடையிலேயே அருகில் கிடந்த பனங்குற்றி ஒன்றில் காப்பெடுத்தவாறு வாணி படையினரைநோக்கிச் சுட, ஜெனோ கையெறி குண்டைப் பக்கவாட்டாக வீச, புழுதி கிளம்பியது. அது மிகப் பெரிய மறைப்பைத் தராவிடினும் 'ஓடு' என்ற கட்டளை எதுவுமின்றியே மூவ ரும் ஓடத்தொடங்கினர். எல்லாமே ஒருசில கணங்களுக் குள் நடந்து முடிந்தன.

இப்போது மின் விளக்குகள் ஒளிரத் தொடங்கின. ஓடிக் கொண்டிருந்தவர்களின் காதில், மீண்டும் இரண்டு கையெறி குண்டுகள் வெடித்த ஒலியும் பரவலான சூட்டுச் சத்தங்களும் கேட்டுக்கொண்டேயிருந்தன. முன்னே ஓடிக் கொண்டிருந்த ஜெனோ தள்ளாட, அவருக்குக் காயம் ஏற்பட்டதைப் புரிந்துகொண்ட வாணி, அவரைத் தூக்கிக் கொண்டு ஓடினார். வரும் வழியில் இடையிடையே படை யினரைச் சந்தித்த இடங்களையெல்லாம் மிக வேகமாகக் கடக்கவேண்டும்.

இவர்கள் போன நேரத்திலிருந்தே விழிப்புடனிருந்த மைதிலியின் செவிகள் குண்டு வெடிக்கும் ஒலிகளைக் கிரகித்துக்கொண்டன. நடந்திருக்கக்கூடிய விடயங்களை அவர் ஊகித்துக்கொண்டார்.

padippakam



இறுதியாகச் சந்திக்கவேண்டிய இடத்துக்குத் தலை தெறித்த ஓட்டத்தில் வாணியும் ஜெனோவும் மட்டுமே வந்து சேர்ந்தனர். கோபி வரவில்லை. நிலைமையை மைதிலிக்கு அறிவித்தனர். ஜெனோ காயப்பட்டிருந்ததால், சிகிச்சைக்கா கப் பின்னணிக்கு அனுப்பப்பட்டார்.

வாணியைக் கூட்டிக்கொண்டு மாதுரியின் LMG உட னான ஒரு செக்சனை அழைத்துக்கொண்டு கோபியைத் தேட மைதிலி போனார். இவர்களின் வரவை எதிர்பார்த்த வாறு கவிழ்ந்த 'ப' வடிவில் இராணுவம் காத்திருந்தது. மாதுரியின் LMG அடி அன்று படையினரைப் பின்வாங்கச் செய்ததில் பெரும் பங்காற்றியது. தேடுதலின்போது, கோபி வீரச்சாவு அடைந்ததை உறுதிசெய்துகொண்டனர். மிகுந்த கோபத்தோடு அதிகாலையில் தளம் திரும்பினர்.

கப்டன் கோபியே மாலதி படையணியின் முதல் மாவீர ராக அன்றைய நடவடிக்கையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். கோபியின் இழப்பு எல்லோருக்கும் ஆவே சத்தை ஏற்படுத்திவிட்டிருந்தது.

இக்காலப்பகுதியில் வலிகாமத்துக்குள் இராணுவத் துக்குத் தலையிடியைக் கொடுத்தவாறு மகளிர் படையணி ஒன்று நின்றது. நாகர்கோயில் 3.7 தளத் தில் அசோகாவின் கொம்பனியோடு பயிற்சிகளிலீடுபட்ட லெப்.கேணல் றிசானாவின் தலைமையிலான சிறப்பு அணியே அது. அந்தக் கொம்பனியின் கள மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, மாலதி படையணி தனது கள மருத்துவர்களில் ஒருவரான கப்டன் பரா சக்தியை அனுப்பியிருந்தது.

1996.04.05 அன்று ஆனைக்கோட்டைப் பகுதியில் ஏற்பட்ட நேரடி மோதலில் அவர் வீரச்சாவைத் தழுவிக்



படிப்பகம்

padippakam



கொண்டார். மூன்று நாட்கள் இடைவெளியில் இது இரண்டாவது இழப்பு. இவர் எமது படையணியின் இரண்டாவது மாவீரர் ஆவார்.

படையினருக்கு இழப்பை ஏற்படுத்தும் தாக்குதல் ஒன்றைச் செய்யவேண்டும் என்ற உணர்வுடன் நின்ற மைதிலிக்கு, முன்பு எடுத்த வேவுத் தகவல்களை வைத்துக்கொண்டு கண்ணிவெடிப் பிரிவோடு இணைந்து தாக்குதலைச் செய்யும்படி விதுஷா கட்டளையிட்டார்.

வேவு அணியினரோடு செயற்பட்ட கண்ணிவெடிப் போராளியான சாந்தகௌரி, வாதரவத்தைப் பகுதியில் காவலுலா வருகின்ற இராணுவத்தினருக்குக் கிளைமோர் வைக்கும் திட்டம் ஒன்றை முன்வைக்க, அஸ்வினியும் மைதிலியும் அதனை ஏற்றுக்கொண்டார்கள்.

கோபியின் இழப்புக்குப் பதிலடியாக இரண்டு கிளைமோர்கள் நிலைப்படுத்தப்பட்டன. ஆனால், மறுநாள் அவை இரண்டும் காணாமற்போயின.

அதுபற்றி, தற்போது லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி மகளிர் படையணியின் சிறப்புத் தளபதியான லெப்.கேணல் அஸ்வினி இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"நான் மாலதி படையணியில் இருந்தபோது எங்களுடைய செயற்பாடுகள் மைதிலியுடனான வேவு அணியுடன் இணைந்ததாகவே இருந்தன. சூரிய கதிர்-02 க்கு முன்னரான காலப்பகுதியில் வாதரவத்தைப் பகுதியை வேவு எடுக்கப்போகின்றவர்களுடன் சேர்ந்து போவோம். நாம் அவர்களுக்கு உதவியாகப் போவதுடன், படையினரின் கண்ணிவெடிகளை அகற்றி, அவர்களின் வேவு நகர்வைப் பார்த்து,



படிப்பகம்

padippakam



அதற்கேற்றவகையில் கண்ணிவெடிகளை வைப்போம்.

சில நேரங்களில் நாங்கள் தவறுவிட்டிருக்கின்றோம். படையினர் எங்களின் கிளைமோரை எடுத்துச் சென்றது எமக்கு ஒரு சவாலாகவே இருந்தது."

அஸ்வினி கடுங்கோபத்துடன் சாந்தகௌரியைக் கூப்பிட்டுக் கண்டித்தார். வெடிமருந்துகளை எதிரியிடம் இழப்பது இதுவே கடைசியாக இருக்கட்டும் என்று எச்சரித்தார்.

எம்மவர்கள் மீண்டும் ஒரு கிளைமோர் தாக்குதலுக்கு முயன்றனர். எங்கு பிழை நடந்ததோ தெரியவில்லை. இம்முறையும் இரண்டு கிளைமோர்களும் தலைமறைவாகின. வெடிபொருட்கள் தட்டுப்பாடான காலத்தில் இப்படியான இழப்புகளைப்போல் மோசமான விடயம் வேறு இல்லை. இம்முறை அஸ்வினி தானே நேரடியாக நடவடிக்கையில் இறங்கினார். வேவு அணியுடன் முன்னணிப் பகுதிக்குள் நுழைந்தார்.

அன்று பகல் முழுவதும் கண்காணிப்பு நிலையில் நின்று அவதானித்தார். கிளைமோர்கள் எப்படிக் காணாமற்போயின என்பதை ஊகித்துக்கொண்டார். காலையில் தேடுதல் ஒன்றைச் செய்துவிட்டு, அவதானிப்பு நிலையில் நின்றவாறு எம்மவர்களின் நடவடிக்கைகளை அவதானித்த படையினர், கிளைமோர்களை எடுத்துச் சென்றிருக்கவேண்டும். சூழலை, நிலைமையை அவதானித்த அஸ்வினியின் மனதில் புதிய திட்டமொன்று தோன்றியது.

அன்றிரவு மைதிலியும் அஸ்வினியும் முன்னணி அவதானிப்பு நிலைகளுக்குப் போனார்கள். 900மீ. தூரத்திலிருந்து படைநிலைகளை நோக்கினார்கள். 150மீ. முன்னே தென்னைகள், உயர்ந்த புற்கள், வெட்டையை அண்மித்து நீரேரி பிரிந்து செல்லும் இடம், அங்கிருந்து வெட்டைக்கு



படிப்பகம்

வரும் ஒரு ஒற்றையடிப்பாதை, அதை இராணுவம் பயன் படுத்துவது நன்கு அவதானிக்கப்பட்டது. ஒன்பது இராணு வத்தினர் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடு வதை இரண்டு நாட்களும் தொடர்ச்சியாக அவதானித்தனர்.

நிலவு அதிகாலை 3.30 மணிக்கு அடிவானில் புதைந்துபோனது. இரண்டு நாட்களாக அவதானிக்கப்பட்ட பகுதிக்குள் அஸ்வினியின் அணி கிளைமோருடன் இறங்கி யது. பகலில் பார்த்துக் கற்பனை செய்ததுபோலவே தரை யமைப்பு இருந்தது. ஓங்கி வளர்ந்திருந்த புற்களிடையே கிளைமோர் நிலைப்படுத்தப்பட்டது. படையினரின் வருகை யால் நூல் இழுபட, அடியாணி விடுபட்டு, வெடிப்பி வெடிக் கும் விதத்தில் பொறிமுறை ஒழுங்குசெய்யப்பட்டது.

இராணுவத்தினரின் அவதானிப்பு நிலையருகே ஒரு படுக்கைவிரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. இதுபோல ஒரு அருமையான வாய்ப்பு இனிக்கிடைக்குமா? வேகவேகமாக விரிப்பின் கீழ் இரண்டு மிதிவெடிகளைப் புதைத்தார்கள். படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மனதில் பதிந்து கொண்டு இருளிலேயே வேகமாக வெளியேறினார்கள்.

அப்போதிலிருந்து எமது பகுதிக்குள்ளிருந்த அவ தானிப்பு நிலையிலிருந்த மேஜர் செந்தூரா வைத்த கண் வாங்காமல் புற்களையும் வெட்டையையும் பார்த்ததுதான் மிச்சம். அவ்வழியே எவரும் வரவேயில்லை. என்ன நடந்தது? இதையும் வேறெங்கோ மறைந்திருந்து படை யினர் கண்டுவிட்டார்களோ? எல்லோரும் குழம்பிப் போனோம்.

1996.04.09 இரண்டாம் நாள் பொழுது புலர்ந்து கொண் டிருந்தது. எல்லோரது எதிர்பார்ப்பும் உச்சத்துக்குப் போய் விட்டிருந்தது. 6.15 மணியளவில் திடீரெனப் புழுதி மண்ட லம் ஒன்று மேலெழுவது குறித்த பகுதியில் தெரிய, அவதானிப்பு நிலையிலிருந்தவர் முழுப் புலன்களையும்

padippakam



அதை நோக்கிச் செலுத்தினார். புகை கிளம்பி சில கணங்களின் பின், பாரிய வெடித்தல் ஒலி காதுகளில் வந்து மோதியது. இவர்களின் கிளைமோர் வெடித்தது இப்போது உறுதியாகிவிட்டது.

என்ன நடந்ததென்பதைப் படையினரின் அலைவரிசைகளை இடைமறித்து ஒற்றுக்கேட்டு அறிந்துகொண்டோம். அன்று வழமைபோல் ஒன்பதுபேர் வரவில்லை. ஏதோ காரணங்களுக்காகப் பன்னிரெண்டுபேர் வந்திருக்கின்றனர். மூன்று இராணுவத்தினர் சாவடைய, ஒன்பது பேர் படுகாயமடைந்துவிட்டனர். பிறிதோர் இராணுவ அணி வந்துதான் இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் அகற்றியது. படையினருக்கு ஏற்பட்ட திகைப்பினாலோ என்னவோ, எதிர்த்தாக்குதல் எதுவும் தொடுக்கப்படவில்லை. எறிகணைகள்கூட எம்மைநோக்கி வீசப்படவில்லை.

ஒரு பெரும் போருக்குப் படைத்தரப்பு முழு அளவில் தயார்ப்படுத்திக்கொண்டிருந்தது. வலிகாமத்தைப் பிடித்தது பெருவெற்றி என்று உரக்கக் கூறிக் கொண்டிருந்தாலும், அங்கு வாழ்ந்த மக்கள் ஏற்கனவே வெளியேறிவிட்டிருந்தது தமக்குப் படுதோல்வி என்பதைச் சிறீலங்கா அரசு உணராமலில்லை. இப்போது தன் கொள்ளளவுக்கும் மேலாக, வலிகாம மக்களையும் சுமந்து திணறிக்கொண்டிருக்கும் தென்மராட்சியைப் படைத்தரப்பு பிடித்தால், வன்னிக்கு மக்கள் வெளியேறிப் போகக்கூடிய ஒரே பாதையான கிளாலி தடைப்பட்டுவிடும். அதன்பின் மக்களும் வெளியேறமுடியாது. நாங்களும் வெளியேறமுடியாது. எனவே எதிர்த் தரப்பு மும்முரமாகப் போர்முனைப்பில் இறங்கியது.

இயன்றவரையில் மக்களைத் தென்மராட்சியில் தேங்கவிடாது வன்னிக்கு அனுப்பிக்கொண்டிருந்தாலும், குறித்த



படிப்பகம்

அந்த ஒரேயொரு பாதையால் குறிப்பிட்ட காலத்துக்குள் எல்லோரும் வெளியேறிவிடமுடியாது என்பதை நாமும் அறிவோம். இயன்றவரை படையினரின் நகர்வைத் தாமதப்படுத்தவேண்டும். என்வே, நாமும் மும்முரமாகப் போர் முனைப்பில் இறங்கினோம். இரு தரப்பினது வேவு அணிகளும் முழுவேகத்துடன் வேலை செய்துகொண்டிருந்தன.

எமது மூன்று கொம்பனிகளும் தாம் நிற்கின்ற இடங்களில் தொடர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன. சூரியகலாவின் கொம்பனி இரண்டாவது தொடர் காவல் நிலைகளை அமைப்பதோடு பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. பமிலாவின் அணி தற்போது நிலைகொண்டிருக்கும் முன்னரங்கில் சண்டையின்போது நெருக்கடி ஏற்பட்டால், அவர்கள் பின்னகர்ந்து சண்டையைத் தொடருவதற்காகவே இரண்டாம் நிலை அமைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. பமிலாவின் கொம்பனிக்கு லெப்.கேணல் செல்வியும் கருணாவும் அசோகாவின் கொம்பனிக்குக் கப்டன் சந்திரமதியும் ரத்தியும் பயிற்சியளித்துக்கொண்டிருந்தனர்.

அதேநேரம் எழுதுமட்டுவாளில் உள்ள கஜன் பாசறையில் தர்ஷா தலைமையிலான மங்கையினதும் மேஜர் சுலக்சியினதும் பிளாட்டூன்களும் இரண்டு செக்சன்களுமாக இணைந்து, தடையை உடைத்துப் பாதை எடுத்தல், வெளிகொண்ட பகுதியில் எதிரியோடு மோதுதல், வலிந்த தாக்குதல் ஒன்றை ஊடறுத்துத் தாக்குதல், சகிப்புத்தன்மையை உருவாக்குதல் போன்றவற்றுக்கான பயிற்சிகளை ஓய்வேயின்றிச் செய்துகொண்டிருந்தன.

எமது வேவு, கண்ணிவெடி அணிகளின் வேலைகளும் துரிதமாக நடந்தன. வேவுக்கு வரும் படையினரையும் வேவு பார்த்தனர். பதுங்கித் தாக்குவதற்கான வாய்ப்புகளைத் தேடிக்கொண்டேயிருந்தனர். எதிர்த்தரப்பும் அப்படித்தான்.

மாதரவத்தையில் கிளைமோர் வெடித்த மறுநாள் காலை ஒரு சம்பவம் நடந்தது. ஆட்டுப்பட்டிப் பகுதியில்

padippakam



(கப்புதூவிலிருந்து ஆவரங்கால் போகும் வழியில் உள்ள சிறு கிராமம்) வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டவாறிருந்த (கரும்புலி) மேஜர் ஜெயராணியின் அணியினர் முதல் நாள் இரவு 11.00 மணிவரை அவதானிப்புநிலையில் நின்று அவதானித்துவிட்டுப் பின்னணிக்கு வந்திருந்தனர். மறுநாள் அதிகாலை 4.00 மணிக்கு ஆறுபேர் கொண்ட அதே வேவு அணி, தாம் வந்த பாதையால் அவதானிப்புநிலைநோக்கிப் போனது. காத்திருந்த படையினர் இவர்களை வழியிலேயே தாக்கத்தொடங்கினர். ஜெயராணியின் அணி எதிர்த்துத் தாக்கியது. எம்மவர்களில் இருவருக்குக் காயம். எதிர்த் தரப்பிலும் காயம். இரு தரப்புமே வேகமாக அவ்விடத்தை விட்டு வெளியேறினோம்.

வாதரவத்தைத் தாக்குதலைத் தொடர்ந்து, பிற இடங்களில் நின்ற கண்ணிவெடி அணியினரும் தமக்குரிய இலக்குகளைத் தீவிரமாகத் தேடினர். இவர்களோடு அஸ்வினியும் முன்பகுதிகளுக்குப் போய் இடங்களைப் பார்த்தார். முடிவில் தாக்குதலுக்கென அஸ்வினியால் தெரிவுசெய்யப்பட்ட இடம் வல்வைப் பாலம்.

பகலில் அந்த வீதியால் வரும் இராணுவம், பாலத்தைக் கடந்து உடுப்பிட்டியை நோக்கிய திசையில் நின்றுவிட்டு, இரவில் பின்வாங்கிச் செல்வது அவதானிக்கப்பட்டது. எங்களின் வேவு அணி பாலத்துக்கு ஒருதடவை போய் நேரடியாகவும் பார்த்துவந்தது. ஏப்ரல் 13 ஆம் திகதி இரவு வேவு அணியின் உதவியுடன் பாலத்தை நெருங்கிய கண்ணிவெடி அணியினர் அஸ்வினியின் திட்டப்படி எறிகணை ஒன்றுடன் இரு மிதிவெடிகளையும் இணைத்து, வெடித்தல் அமைப்பைத் தயார்ப்படுத்தி, மிகத் திறமையாக உருமறைப்புச்செய்து வைத்துவிட்டு, தடயங்கள் ஏதுமின்றிப் பின்னுக்கு வந்தனர்.

மறுநாள் 14 ஆம் திகதி தமிழ் சிங்களப் புத்தாண்டு. வேவு, கண்ணிவெடி அணியினர் நித்திரை கொள்ளாது



படிப்பகம்

padippakam



புத்தாண்டை வரவேற்றனர். இவர்களின் எதிர்பார்ப்பை வீணாக்காது நான்குபேர் வந்தார்கள். அந்த நால்வரையும் மிக்க ஆர்வத்துடன் அவதானித்தபடி இங்கே ஒரு பெரிய குழுவே நின்றது. ஒருவர் மிதிவெடியில் கால்வைக்க, அது தான் வெடித்து, எறிகணையையும் வெடிக்கவைக்க, மூவர் கீழே விழுந்தனர். ஒருவர் திரும்பி ஓடுவது தெரிந்தது.

உடனேயே வேகமாகப் பாலத்துக்கு வந்த பிறிதொரு இராணுவ அணி தேடுதல் ஒன்றைச் செய்து, வீழ்ந்திருப் பவர்களை எடுப்பதும் தெரிந்தது. அவர்களின் தொலைத் தொடர்பு அலைவரிசைகள் ஒரு இராணுவம் இறந்ததாக வும் இருவர் படுகாயப்பட்டதாகவும் உறுதிப்படுத்தியதோடு, வெடித்தது என்ன என்பதை அறிவதற்காக இறந்தவரையும் காயமடைந்தவர்களையும் கொழும்புக்கு அனுப்பியிருப்ப தாகவும் தெரிவித்தன.

எங்களின் வேவு, கண்ணிவெடி அணியினர் கடுமையாக உழைத்தனர். படையினர் வரக்கூடும் என்று கொம்பனி களால் ஊகிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் உடலை வருத் திச் சலிப்பில்லாது வேலை செய்தனர்.

அதைப்பற்றி அஸ்வினி இவ்வாறு சொல்கிறார்.

**“வெட்டையான பகுதியாகவே எமது முன்னணிப் பகுதி இருந்ததால், தாக்குதலின்போது கிளைமோர் களுடன் மிக நீளமான இழைகளை இணைக்கவேண்டி யிருந்தது. அவ்வளவு தூரத்துக்கு எமது சாதாரண மின்கலங்கள் மின்னைக் கடத்திக்கொடுப்பதில் நடை முறைச் சிக்கல்கள் இருந்ததால், Exploder இனைப் பயன்படுத்த முடிவெடுத்தேன். எங்களிடம் அது இருக்கவில்லை”.**

எனவே அஸ்வினி இதுபற்றி விதுஷாவிடம் கதைத்தார். Exploder ஒன்றின் தேவையை நன்கு புரிந்துகொண்ட



படிப்பகம்

padippakam



விதுஷா, விடயத்தைத் தலைவருக்குத் தெரியப்படுத்தினார். அப்போது வன்னியில்நின்ற கேணல் பால்ராஜ் அவர் களிடம்,கேட்கும்படி தலைவர் அவர்கள் பணித்தார்.

“வன்னிக்கு வந்து **Exploder** இனை வாங்கிக்கொண்டு நான் யாழ்ப்பாணம் திரும்பிய அன்று காலையில், சூரியகதிர்-02 படைநகர்வு ஆரம்பமாகிவிட்டிருந்தது.

எதிர் நடவடிக்கையில் ஈடுபட்டவாறு நாங்கள் தந்திரோபாயப் பின்னகர்வைச் செய்துகொண்டிருந்த போது, வேவு அணியின் உதவியுடன் கிளைமோர் களை வைத்துச் சண்டை பிடித்தோம். அது மக்கள் வாழும் பகுதி என்பதால், கட்டுப்பாடற்ற கண்ணி களை விதைக்கவேண்டாம் என்று தலைவர் அவர்கள் கூறியதாக விதுஷா அவர்கள் என்னிடம் சொல்லி யிருந்தார்.

எனவே நாம் சண்டையின்போது கட்டுப்பாடான கண்ணிகளையே பயன்படுத்தினோம். ஒவ்வொரு இடங்களைவிட்டு நகரும்போதும் அவற்றை எடுத் துக்கொண்டு நகர்ந்தோம்”

என்கிறார் அஸ்வினி.

காப்பரண்கள் மிகப் பலமாக இருந்தன. காப்பரண் களோடு மோதும் எவரையும் திணறடிக்கச் செய்யக்கூடிய வியூகங்கள் தயாராக இருந்தன. படைத்தரப்பும் வேவு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தது. நகர்வு ஒன்றுக் கான முழுமையான தயார்நிலையில் படையினர் இருந் தனர். எதிர்ப் பகுதியில் தடைகள் அகற்றப்பட்டன. பவள், ராங்கிகள் தயாராக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. வாதர வத்தைப் பகுதியால் படையினரின் நகர்வு இருக்கும் என்று வேவுத் தகவல்களும் ஊகங்களும் தொலைத் தொடர்பு அலைவரிசைகளும் சொல்லிக்கொண்டிருந்தன.



படிப்பகம்

*அவர்களின் நகர்வு இன்று நடைபெறும் என்று 19 ஆம் திகதி அதிகாலை 2.00 மணிக்கு, படையினருக்கு மிக அருகே நின்ற மைதிலி அறிவித்தார்.*

*அந்த வாரம் முழுதும் மழை கொட்டியது. எல்லோரும் காப்பரணுள்ளிருந்தவாறே அவதானித்துக் கொண்டிருந்தனர். வேவு, கண்ணிவெடி அணிகள் மழையில் நனைந்தவாறே விழிப்புடனிருந்தன.*

*அசோகாவின் கொம்பனியின் ஒரு பிளாட்டூன், மகாவுடன் பொலிகண்டிக் கடற்கரையில் அரணமைத்தவாறே நின்றது.*

*19 ஆம் திகதி அதிகாலை. கடற்கரையிலே மெல்லிய மழை தூறிக்கொண்டிருந்தது. 3.30 அளவில் ங்..ங்.. ங்...ங் என்று தொடர் இரைச்சல் கடலில் கேட்கத்தொடங்கியது. மழை இருட்டில் ஒன்றுமே தெரியவில்லை. ஓரளவு நிலம் தெளிந்தபோது கடலில் ஏதோ வரிசையாய் புள்ளிகளாக, ஒவ்வொரு புள்ளிகளும் சீரான இடைவெளியில் தெரிந்தன. இப்போது புள்ளிகள் கரையைநோக்கி நகரத்தொடங்கின.*

*வந்தவை இரண்டு பாரிய தரையிறங்கு கலங்கள் உட்படப் பத்தொன்பது கடற்கலங்கள். கரையை நெருங்கி வருவதும் பின்னர் பின்னுக்குப் போவதும் மறுபடி வருவதுமாகப் போக்குக் காட்டிக்கொண்டிருந்த பகைக்கலங்கள், 6.00 மணியளவில் வல்வெட்டித்துறை, பொலிகண்டி, பருத்தித்துறைக் கரைகளைநோக்கிப் பீரங்கி வேட்டுக்களைத் தீர்க்கத்தொடங்கின.*

*மக்கள் வீடுகளைவிட்டு ஓடத்தொடங்கினார்கள். மகா, தன்னுடைய எல்லா ஆட்களும் அவரவர் காப்பரண்களுக்கு வந்துவிட்டார்களா என்று ஓடிஓடிப் பார்த்தார்.*

padippakam



அருளினி தன் RPG இனைத் தோளுக்கு உயர்த்தினார். கடலில் தூரத்தைக் கணிப்பிட எம்மால் முடியவில்லை. விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் தளபதிகளுள் ஒருவரான அரி அவர்கள், கடல் தூரத்தைக் கணித்து, மீற்றர்களில் அருளினிக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். தனக்குரிய தூரவீச்சுக்குள் இலக்கு வருவதற்காக அருளினி காத்திருந்தார்.

தரையிறங்கு கலத்தின் மேற்றளத்தில் நிற்கும் கடற் படையினர் தெளிவாகத் தெரிந்தனர். இப்போது அருளினி தயார்.

"கொஞ்சம் பொறுங்கோ. அவன் பின்னுக்குப் போறான்"

என்றார் அரி.

ஒரு மணித்தியாலம்வரை எமது ஆயுதங்களின் சூட்டு வீச்செல்லைக்கு அப்பால் நின்று தொடர் தாக்குதலை நடத்தி ஓய்ந்த கடற்படைக்கலங்கள் 7.00 மணியளவில் பின்னகரத்தொடங்கி, சிறு புள்ளிகளாகி, வான விளிம்பின் கீழ் மறைந்தன.

நடவடிக்கைகள் அனைத்தையும் கேணல் விதுஷாவுக்கு உடனுக்குடன் அறிவித்துக்கொண்டே இருந்தனர். கடற்கலங்கள் போய்விட்டதையும் அறிவித்தனர். எனினும் எதற்காக வந்தார்கள், ஏன் போனார்கள் என்பது புரியவில்லை.

மாலையில் விதுஷாவிடமிருந்து இவர்களுக்கு ஒரு தகவல் வந்தது. தென்மராட்சியில் இராணுவம் முன்னேறி விட்டது என்பதே அந்தச் செய்தி.

ஓ! அப்படியெனில் கடலில் நடந்தது திசைதிருப்புத் தாக்குதல்தான். மகாவின் பிளாட்டூன் படகுகளில் ஊரை



படிப்பகம்

விட்டு வெளியேற முயன்ற மக்களுக்கு உதவிசெய்து கொண்டிருந்தது. ஆபத்துமிக்க வடமராட்சி கிழக்குக் கரையோரக் கடற்படைத் தளங்களைக் கடந்து வன்னிக்குப் படகில் போகத் துணிந்துவிட்டிருந்தனர் அந்த மக்கள்.

அன்றைய நாள் விடிவதற்கு முன்னர், வாதரவத்தை கோயில் பகுதியில் வீதியிலிருந்து இடது பக்கம் 200மீ. இல் மிக அவசரமாக நிலக் கண்ணிவெடி களைப் புதைக்குமாறு கட்டளை கிடைத்தது.

உடனேயே ஐந்துபேர் கொண்ட கண்ணிவெடி அணி வாணியின் வேவு அணியுடனும் கப்டன் பார்வதியின் ஒரு செக்சனுடனும் புறப்பட்டது. வேவு அணியினர் முன் னணியை அவதானிக்க, பார்வதியின் செக்சன் வெளிப் பாதுகாப்பு வழங்க, நிலக் கண்ணிகள் மிக வேகமாகப் புதைக்கப்பட்டன.

விடிகாலை 5.00 மணியளவில் பனங்கூடலுக்குள் இராணுவ நடமாட்டம் அவதானிக்கப்பட்டபோது, வேவு அணியினருக்கும் அவர்களுக்குமான இடைத்தூரம் 20மீ. களாகவே இருந்தது. வாணி காப்புச் சூடு வழங்க, நிரஞ் சினியும் ஏனையவர்களும் படையினரைத் தாக்கியவாறே எமது முன்னரங்க நிலைகளுக்கு வந்து சேர்ந்தனர்.

முதலாவது வேட்டொலியுடன் முன்னரங்கிலிருந்த எல் லோரும் தயார்நிலைக்கு வந்துவிட்டோம். உடனடியாகக் கட்டளை நிலையத்துக்கு விதுஷா வந்துவிட்டார். முன்ன ரங்கில் நின்ற பமிலாவுக்கு விதுஷாவின் கட்டளைகள் சீராகக் கிடைத்துக்கொண்டிருந்தன. படையினர் 60மி.மீ. எறிகணை செலுத்திகளை நகர்த்தி நகர்த்தித் தாக்கியவாறு எமக்கு இடதுபுறமாக நகர்ந்துகொண்டிருந்தனர். உலங்கு வானூர்திகளும் எம்மைநோக்கித் தாக்குதலை ஆரம்பித் தன.

padippakam



கப்புதூ-வாதரவத்தை-ஆவரங்கால் வீதியின் இடதுபுறம் குறிப்பிட்ட தூரம்வரைதான் எமது நிலைகள் இருந்தன. அதற்கப்பால் வயல்வெளி என்பதால் நாங்கள் அரண்கள் அமைக்கவில்லை. எம்மிலிருந்து இடதுபுறமாக விலகி விலகிப் போன படையினர், கனகம்புளியடிச் சந்தி- வண் ணாத்திப் பாலம் ஊடாக ஆவரங்கால் போகக்கூடிய வீதிவழியே தென்மராட்சிநோக்கிப் போய்க்கொண்டிருந் ததைக் கண்டுவிட்டோம்.

எமக்கு இடப்புறமிருந்த வயல்வெளியூடே போன அந்த வீதியால் படையினர் நகர்வது கண்ணுக்குத் தெரிந்தது. ஆனால், அந்த வீதி எங்களுடைய சூட்டு வீச்செல்லைக்கு அப்பாலிருந்தது. அந்த நேரம் எம்மிடருந்த மிகப் பலம் வாய்ந்த ஆயுதம் 60மி.மீ. எறிகணை செலுத்திகள்மட்டுமே. அவை பமிலாவின் கட்டளைப்படி அந்த வீதியைநோக்கி எறிகணைகளை வீசிக்கொண்டிருந்தன. ஆனால், அவை யானையை எறும்பு கடித்ததுபோன்றுதான் படையினருக்கு இருந்திருக்கும்.

கனகம்புளியடி-வண்ணாத்திப் பால வீதியில் பன்றித் தலைச்சியம்மன் கோயிலுக்குச் சற்று முன்பாக யாழ் மாவட்டத் தாக்குதலணியைச் சேர்ந்த ஆண் போராளி களின் அணி கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவ துண்டு. ஏதோ காரணங்களுக்காக அன்று அவர்கள் அவ்விடத்துக்கு வந்திருக்கவில்லை. தடுப்பதற்கு எவரு மின்றி இராணுவம் தென்மராட்சிக்குள் நுழையப்போவ தைப் புரிந்துகொண்ட விதுஷா, பமிலாவின் கொம் பனியை அந்த வீதிக்கு நகர்த்த முடிவெடுத்தார். ஆனால் வயல்வெளியூடாகக் குறுக்கே ஓடி அந்த வீதியில் ஏறுவது, நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத விடயம்.

எனவே விதுஷாவின் கட்டளைப்படி பமிலாவின் கொம் பனி வேவு அணியொன்றை நிறுத்திவிட்டு, சுடுகலன்களை யும் வெடிபொருட்களையும் மண்வெட்டிகளையும்மட்டுமே



படிப்பகம்

padippakam



சுமந்தவாறு வாதரவத்தையிலிருந்து பின்புறமாகக் கப்புதா கடந்து, அந்தணர்திடல் சந்திக்கு வந்து, வலதுபுற வீதியில் ஏறிக் கனகம்புளியடிச் சந்தியை நோக்கி ஓடியவாறு போனது. (அந்தணர்திடல் சந்தியின் இடதுபுற வீதி துன்னாலையூடாகப் பருத்தித்துறை போகும்).

தலைக்கு மேலே சூரியன் எரிக்க, படைநகர்வைத் தடுக்கவேண்டும் என மனம் பதைக்க, விதுஷா, பமிலா, மைதிலி உட்பட எல்லோருமே ஓடித்தான் போனோம். அந்த வீதி நீளமும் காதறுந்ததாலும், ஓட்ட வேகத்தைத் தடைப்படுத்தியதாலும் எம்மால் கழற்றி எறியப்பட்ட செருப்புகள் கிடந்தன. கால்கள் கொப்புளிக்க, உடை முழுதும் வியர்வையால் நனைய கனகம்புளியடிச் சந்திக் குப்போன எங்களை, பன்றித்தலைச்சி அம்மன் கோயில் கடந்து, அடுத்து இருந்த குடியிருப்பு ஒன்றினூடே, ஆவரங் காலைப் பார்த்த திசையில் மிக வேகமாக நிலைப்படுத்தி னார் விதுஷா. வந்த வேகத்திலே மண்வெட்டியால் நிலத் தில் ஒருமுறைதானும் கொத்தமுன்னரே, இராணுவத்தி னரை நாம் எதிர்கொண்டோம்.

பன்றித் தலைச்சியம்மன் கோயிலடியில் காப்பு நிலைகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. பனை மரங்கள், மரங்கள், பற்றைகள், வீடுகள், இன்னும் என்னென்ன எமக்குக் காப்புக் கொடுத்ததோ, அவற்றைப் பயன்படுத்திக் காப்பெடுத்து எதிர்த்தோம். மாதுரியின் LMG அனல் கக்கியது. பிரியாவின் RPG எறிகணைகளை வீசியது. அவ்வாறே ஒவ்வொரு போராளிகளின் சுடுகலன்களும் சீறின. நாங்கள் அவ்விடத்தில் நின்று தொடர்ந்து தாக்குதல்செய்ய காப்பரண்கள் இல்லை என்பதைவிட, தொடர்ந்தும் அப்பகுதியிலிருந்த மக்கள் நடமாட்டம் பெரிய தடையாகவே இருந்தது. இராணுவத்தை உட னேயே தாக்குவதா, மக்கள் வெளியேறும்வரை காத்திருப் பதா என்ற நெருக்கடி பாரியதாக எழுந்தபோதும், எங் களின் ஒரு அணி பொருட்களோடு வெளியேறிக்கொண்டி



படிப்பகம்

padippakam



ருந்த மக்களுக்கு உதவிசெய்து அவர்களை வேகமாகப் பின்னகர்த்திக்கொண்டிருக்க, ஏனையவர்கள் தொடர்ந்தும் தாக்கிக்கொண்டேயிருந்தோம். அவ்விடத்தில் கப்டன் பிரியாவும் மேஜர் மாதுரியும் வீரச்சாவடைந்தனர்.

ஒரு மாபெரும் சுற்றுச் சுற்றி நாம் கனகம்புளியடிக்கு வரமுதலே பக்கவாட்டாக வண்ணாத்திப் பாலத்தினூடாக மட்டுவில் பகுதியில் படையினர் உட்புகுந்தனர். மறுபுறம் முதல்நாள் இரவே அமைதி நகர்வை மேற்கொண்டு ஊர் மனையூடாக, சிறிய வீதிகள், ஒழுங்கைகளூடாக நுணா விலுக்குள் நகர்ந்து வந்த இராணுவம் மக்களைத் தூக்கத் திலிருந்து தட்டி எழுப்பியது. கதவைத் திறந்த மக்களின் வீட்டு வாசலில் இராணுவம் நின்றது. உளவியல் கலந்த ஒரு தந்திரோபாய யுத்தமாகவே இது நடந்தது.

குடியிருப்புக்குள் புகுந்த இராணுவம் அன்று மக்களை எதுவும் செய்யவில்லை. ஆதரவு கூறியது.

சண்டைக்குத் தயாராக நின்ற அணிகளைச் சந்திக்கா மல் விலகி ஊருக்குள் புகுந்த இராணுவம் எங்கே நிற்கின் றது என்பதை ஒருவராலும் சரியாக அறியமுடியவில்லை. எங்கோ இராணுவம் நிற்பதாக நினைத்து வீதியிலிறங்கிய மக்கள் திடீரெனத் தம்முன் இராணுவத்தைக் கண்டு ஒழுங்கைகளுக்குள்ளால் ஓடிக்கொண்டிருந்தனர். இராணு வம், இராணுவம் என்று எல்லா வாய்களும் சொல்லின. எங்கே என்பது தெரியவில்லை.

எங்கள் படையணியின் விநியோக மையங்கள், களஞ் சியங்கள், தங்ககங்கள் எல்லாம் தென்மராட்சியிலேயே இருந்தன. மட்டுவில் பகுதியூடாக வந்த இராணுவம் எமது தளங்கள் அமைந்திருந்த பகுதியை நெருங்க, அங்கிருந்த போராளிகள் தளங்களைக் கைவிட்டுச் செல்லவேண்டிய நிலையேற்பட்டது.



படிப்பகம்

*மிக அவசர அவசரமாகக் கனகம்புளியடிச் சந்தியிலிருந்து நுணாவில் சந்திக்கு வரும் வீதியையும் சாவகச்சேரிச் சந்திக்கு வரும் வீதியையும் இடையில் குறுக்கறுத்து நிலைகள் அமைக்கப்பட்டன.*

*கனகம்புளியடி-சாவகச்சேரி வீதியை ஊடறுத்த எங்கள் கொம்பனி வீதியின் வலதுபுறமாகக் குறிப்பிட்ட தூரம்வரை நிலைகொண்டது. கடைசியாக நின்றது மைதிலியின் வேவு அணி. அவர்களின் கண்ணில் தமக்கு வலப்புறமாகப் படைய ஊர்திகள் போய்க்கொண்டிருப்பதுபட்டது. கால் நடையாகவும் படையினர் போய்க்கொண்டிருந்தனர். எனவே அது ஒரு வீதியாக இருக்கவேண்டும் என்பதை ஊகித்த மைதிலி, பக்கவாட்டாகப் படையினர் தம்மைக் கடந்து கொண்டிருக்கும் விடயத்தை விதுஷாவுக்கு அறிவித்தார். ஆனால், அதற்கிடையிலேயே படையினர் கனகம்புளியடியிலிருந்து புத்தூர் போகும் வீதியால் போய் சந்தியேறிவிட்டிருந்தனர்.*

*புத்தூர்ச் சந்திக்கப்பால் படையினர் பதுங்கியிருந்தது ஆரம்பத்தில் எவருக்குமே தெரியாது. யாழ் நெடுஞ்சாலையால் பிக்-அப் ஊர்தியை ஓடி வந்த சாதனா புத்தூர்ச் சந்தியில் திரும்பி உள்ளே போகவும் இராணுவம் சுடத்தொடங்கியது. உள்ளே இருந்த முல்லை உடனேயே வீரச்சாவடைந்தார். சாதனாவும் மற்றவரும் கதவு திறபடாததால் கண்ணாடியை உடைத்துப் பாய்ந்து ஆயுதங்களோடு தப்பி வந்துசேர்ந்துவிட்டனர்.*

*இப்போது யாழ் நெடுஞ்சாலையை மீசாலைச் சந்தியருகே ஊடறுத்த நாங்கள், காப்பரண்களை கச்சாய் கடற்கரைவரை அமைத்தோம். கடற்கரையை அண்டிய வெளிப்பகுதியால், ஊர்மனைக்குள்ளால் வலிந்த தாக்குதல் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்பட்டது. படையினரின்*

padippakam



தாக்குதல் தொடங்கியதும் ஊடுருவி முன்னேறித் தாக்கு வதற்காக இதுவரை எழுதுமட்டுவாளில் பயிற்சிக்காக, நின்ற தர்ஷாவின் அணி மீசாலைக்கு வந்தது.

வடமராட்சியில் நின்ற மகாவின் பிளாட்டூனும் அசோ காவுடன் நின்ற ஏனையவர்களும் கால் நடையாகவே வந்துசேர்ந்துவிட்டனர். மூன்றாம்நாளும் சண்டை தொடர்ந் தது. மக்களை அவரவர் வீடு திரும்பும்படி இராணுவம் அழைத்தது. வேறுவழியின்றி மக்கள் வீடுதிரும்பினர்.

மீசாலைப் பகுதியிலே யாழ் நெடுஞ்சாலையை ஊடறுத் துக் காவல்நிலைகளை அமைத்த உடனேயே வேவு நட வடிக்கைகளை முடுக்கிவிட்டோம். முகுந்தா, மேஜர் அரசி, லெப்.கௌதமி மூவரும் சாதாரண மக்களாக உருமாறினர். மக்களோடு மக்களாகச் சாவகச்சேரிநோக்கி நகர ஆரம் பித்தனர். இராணுவத்தினரிடம் தண்ணீர் வாங்கிக் குடித்த வாறே ராங்கிகளை, ராங்கிகளின் சுடுகுழல்கள் நின்ற திசையை, ஆயுதபலத்தைக் கண்களால் அளந்துகொண்ட னர். இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பகுதிக்குள்ளி ருந்த எமது தளமொன்றுக்குச் சென்று, அங்கு நின்ற மிதிவண்டியை எடுத்துக்கொண்டு மீசாலைக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களின் தரவுகளின்படி உள்நுழைந்து தாக்கும் திட்டம் ஒன்று தயார்செய்யப்பட்டு, அணிகள் நகர்த்தப் பட்டன. ஆனால், அதற்கிடையிலேயே படையினர் நகரத் தொடங்கிவிட்டதால், அது தடைப்பட்டுப்போனது.

முகுந்தா சேகரித்த வேவுத் தகவல்களின்படியே, மறு நாள் காலை சாவகச்சேரி-கச்சாய் வீதியால் கடற்கரைப் பகுதியை அண்டியதாய் படைநகர்வு இருந்தது.

சாவகச்சேரி-மீசாலைப் பழைய புகையிரத நிலையம் தொடங்கி லெப். சீலன் பூங்காவரை பமிலாவின்



படிப்பகம்

padippakam



கொம்பனி நிலைகொண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து அசோகாவின் கொம்பனி கடற்கரைவரை நிலைகொண்டது.

கச்சாய்ப் பகுதியில் நிலைகொண்டிருந்த கொம்பனியுடன் 23 ஆம் திகதி இராணுவம் வந்து மோதியது. சண்டை மூண்டுவிட்டது.

பறக்கும் ராங்கி எனப்படும் MI 24 ரக உலங்கு வானூர்திகள் பதிந்து சுட்டன. எறிகணைகள் எங்கும் வீழ்ந்து வெடித்தன. அன்றைய சண்டையில் ஏற்பட்ட இழப்புகளால் தமது முன்னேற்ற நடவடிக்கையைக் கைவிட்டு இராணுவம் பின்வாங்கியது.

கடற்பரப்பினூடாக வந்து, கச்சாய்க் கடற்கரைப் பகுதியில் படையினர் இறங்கலாம் என்று கணிப் பிட்டுக் கொண்ட நாம், குழலியின் .50 கலிபரைக் கடற்கரையையும் வெளியையும் அண்மித்து நிலைப்படுத்தினோம்.

அடுத்தநாளும் படையினரின் வெறித்தனமான தாக்குதல் கடற்கரைப் பகுதியில் ஆரம்பித்தது. சுலக்ஷியின் பிளாட்டூனுக்கு நேரே சண்டை நடந்துகொண்டிருந்தது. சாவகச்சேரி-கச்சாய் வீதி கடந்து கடற்கரைநோக்கி விரைந்துகொண்டிருந்தார் விதுஷா.

அவசரமாக அமைக்கப்பட்ட நிலைகள், வெளியும் தென்னந்தோப்புகளும் பற்றைகளுமாக அந்தப் பகுதியிருந்ததால் தொடராக இருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக அணிகள் பிரிந்தே நின்றன. படையினரின் பகுதிக்குள் நின்ற ராங்கிகள், காப்பற்ற வெளியில் நகர்ந்துகொண்டிருந்த இவர்களைநோக்கி எறிகணைகளைத் தூவின. சிறப்புத் தளபதி விதுஷா காயமடைந்தார்.



படிப்பகம்

padippakam



கூடவே வந்தவர்களில் மேஜர் பூமகள், கப்டன் தட்சாயினி, கப்டன் பவா வீரச்சாவடைந்தனர்.

சண்டை தொடர்ந்து நடந்தது. தமது பக்கம் முன்னகர முயன்ற ராங்கிகளை சுலக்ஷியின் பிளாட்டூன் தடுத்து நிறுத்திக்கொண்டிருந்தது.

படையினரின் தாக்குதல் நடவடிக்கையில் உலங்கு வானூர்திகளும் பங்கேற்றன. அவை எம்மை நகரவிடாது பரவலாகத் தாக்கின. குழலியின் .50 கலிபர் மேல்நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தது. உலங்குவானூர்தி பதிவதைக் கண்ட எமது அனைத்து ஆயுதங்களும் அதை நோக்கிச் சூடுகளை வலுப்படுத்த வானூர்தி அவ்விடத்தைவிட்டு மறைந்தது.

வாதரவத்தையில் சண்டை தொடங்கிய நாளிலிருந்து, காயப்படும்வரை படையினரின் அசைவுகளை அவ தானித்து, திட்டத்தையும் ஊகித்து அறிந்து அதற்கேற்ப தானே முன்னின்று புதிய நிலைகளை அமைப்பதற்கு வழிகாட்டினார் விதுஷா. முன்னணிப் பகுதியில் நின்று நிலைமைகளை அவதானித்துக் கட்டளைகளைப் பிறப்பித் துக் கொண்டும் இருந்தார்.

அன்றைய நாளின் முடிவில் நாம் மீசாலையிலிருந்து பின்னகர்ந்து கொடிகாமத்திலிருந்து கச்சாய் வரும் பாதையையும் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தையும் அண்டி எமது அடுத்த முன்னரங்கை அமைத்தோம்.

மறுநாள், 1996 ஏப்ரல் 26 ஆம் திகதி ஏழாவது நாளாக யுத்தம் தொடர்ந்தது. படையினரின் முன்னரங்கை அறி வதற்காக, நான்கு பேருடன் மைதிலி முன்னகர்ந்தார். கச்சாய் வீதிக்கு அருகாகப் போய்க்கொண்டிருந்த மைதிலி யின் கண்களில், இடதுபக்கமிருந்த வெட்டையை மேவிப்



படிப்பகம்

padippakam



படையினர் எமது முன்னரங்கைநோக்கிப் போய்க்கொண் ருந்தது தெரிந்தது.

தகவல் கிடைத்தவுடனேயே மைதிலி குறிப்பிடும் இடங் களுக்கு எறிகணைகளை ஏவிக்கொண்டிருந்தார் பமிலா. எறிகணை வீச்சுக்கு நிலைமை சொல்லியவாறு முன்ன கர்ந்த மைதிலியின் வேவு அணி சண்டையைத் தொடக்கி யது. கச்சாய் வீதியால் நகர்ந்த படையினருக்கும் இவர் களுக்குமிடையே கடும் சண்டை மூண்டது. இவர்களைச் சந்திக்காமல் இடதுபுறமாகவும் படையினர் தொடர்ந்தும் நகர்ந்துகொண்டிருந்தார்கள்.

எல்லோரிடமும் ரவை முடிந்து குண்டுகள்மட்டுமே எஞ்சியிருந்தன. எல்லோரும் சற்றுப் பின்னே நகர்ந்தனர். தம்மை மேவி வரும் இராணுவத்தை எதிர்கொள்வதற்காக பமிலாவின் கொம்பனியைத் தயாராகும்படி சொல்வதற் காக மைதிலி நடைபேசியை வாயருகே கொண்டுவரவும், ஒரு ரவை கன்னம்வழியே புகுந்து மறுபக்கக் கீழ்த் தாடையை உடைத்தவாறே வெளியேறியது. பாதுகாப்பு ஊசி கழற்றப்பட்டு, எப்போதும்போல் இப்போதும் தயார் நிலையிலிருந்த குண்டை மைதிலியின் கை தன்னிச்சை யாகவே படையினரைநோக்கி வீசியது.

படையினர் மிக அதிகமான எண்ணிக்கையில் நின்றது அவர்களின் செறிவான சூடுகளால் புலனானது. குண்டடி யில் ஒரு படைவீரர் விழ, சூடுபட்டதில் மைதிலி சரிந்து விழ, பின்னால் நின்றவர்கள் வீதியைநோக்கிச் செறிவாகச் சுட, படையினரும் சுட்டவாறே அவ்விடத்திலிருந்து சற்று விலகி நிலையெடுத்துக் கொண்டார்கள். காப்பில் நின்று சுட்டுக்கொண்டிருந்த எம்மவர்கள் மைதிலி பூவரசு வேலிக் குக் குறுக்கே விழுந்தபடி அசையாமல் கிடப்பதை பமிலா விடம் தெரியப்படுத்தினர்.

மைதிலியின் வித்துடலை எப்படியாவது எடுத்தேயாக வேண்டும். பமிலா தன் கொம்பனியிலிருந்த இனியாளை



படிப்பகம்

padippakam



LMG உடன் உடனே அங்கு போகும்படி பணித்தார். வித்து டலை மீட்பதற்காக யாழ் தாக்குதலணியில் நின்ற இரு ஆண் போராளிகளும் வந்தார்கள். இனியாள் கனதியான சூடுகளை வழங்க, தான் மைதிலியைத் தூக்கி வருகிறேன் என்று ஓடிப்போன ஒரு ஆண் போராளி மைதிலியருகே குனியவும் படையினரின் அடியில் அப்படியே விழுந் தார். இப்போது இரண்டு வித்துடல்கள் இருக்கின்றன. ஓடி வந்த இன்னொரு ஆண் போராளி இவர்களை நெருங்க, அவரும் படையினரின் அடியில் காயப்பட்டு விழுந்தார்.

நிலைமை மிகவும் சிக்கலானது. தொடராக நின்ற பமிலாவின் கொம்பனி தாம் நின்ற இடத்தைவிட்டு வெளி யேறி விட்டிருந்தது. அவர்களைவிட்டு விலகி வந்த வேவு அணியும் LMG உம் ஓரிரண்டு ஆண் போராளிகளும் தனித்து நின்று அவ்விடத்தில் நீண்டநேரம் சண்டையிட்ட னர். மிக வேகமாக இவர்கள் சுற்றிவளைக்கப்படும் ஆபத்து நிறையவேயிருந்தது. ஆனால், குறிப்பிட்ட நேரத் தின்பின், சூடுகளைச் செறிவுபடுத்தியபடி வேகமாக இருவர் வேலியடிக்கு ஓடினார்கள். காயக்காரரைத் தூக்கியாயிற்று. மைதிலியின் அருகே கிடந்த வித்துடலையும் தூக்கியா யிற்று. மைதிலியைத் தொட்டவர்கள் திகைத்துப்போனார் கள். தாடை உடைந்த நிலையில், நாடி எது, முகம் எது என்று பிரித்தறிய முடியாமல் குருதி தோய்ந்திருந்த மைதிலியின் முகத்தில் சிதைந்திருந்த கீழ் வரிசைப் பற்களிடையே சயனைட் குப்பி இருந்தது. அதன் நூல் எப்போதும்போல் கழுத்திலிருந்தது. விழிகள் திறந்திருக்க, எதையோ சொல்வதற்காய் மைதிலியின் வாய் மெல்ல அசைந்துகொண்டிருந்தது. சொற்கள் வெளிவரவில்லை. மைதிலிக்கு உயிர் இருக்கின்றது என்ற புத்துணர்வுடன் சட்டென அவரைத் தூக்க முனைந்தவர்களுக்குச் சொல் தெளிவற்ற மைதிலியின் முனகலும் விழியசைவும் ஏதோ செய்தியைச் சொல்வது போலிருக்க, அவதானமாக அவ ரைத் தொட்டவர்கள் பாதுகாப்பு ஊசி கழற்றப்பட்டு, உடல் சற்று அசைந்தாலும் வெடிக்கக்கூடிய வகையில்



படிப்பகம்

padippakam



தனக்குக் கீழே மைதிலி வைத்திருந்த கையெறி குண்டைக் கண்டு, அதைக் கவனமாக அகற்றிவிட்டு மைதிலியைத் தூக்கினார்கள்.

மைதிலியின் முகம் இருந்த கோலமும் உடலில் உண் டான வேறு காயங்களும் அவர் தப்புவார் என்ற எண் ணத்தை யாருக்குமே ஏற்படுத்தவில்லை. ஆனாலும் முடிந்தவரை வேகமாக அவரை மருத்துவநிலைக்கு அனுப்புவதற்கு எல்லோருமே முயன்றோம்.

சூரியகதிர்-02 யுத்தகளம் பெரிய சிக்கலாகவே இருந்தது. மக்கள் ஒருபுறம், எங்களின் காப்பரண் கள் ஒருபுறம். ஏற்கனவே பல தடவைகள் இடப் பெயர்வுகளைச் சந்தித்திருந்த எம்மக்களுக்கு எமது நட வடிக்கைகளால் இழப்பு ஏற்படுவதைத் தலைவர் ஒரு போதும் விரும்பமாட்டார் என்பதும் எங்களுக்குத் தெரியும். எல்லாவற்றையும் சமாளித்து, படைத்தரப்புக்கு அடி கொடுத்து, அடிக்கடி நகர்ந்து நகர்ந்து புதிய நிலைகளை அமைத்துச் சண்டையிடுவது சற்றும் இலகுவானதாக இருக்கவில்லை. எனினும் எங்களைத் தளரவிடாது, அணி களைச் சிதறவிடாது சண்டையை நடத்திக்கொண்டிருந்த எங்களின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா காய மடைந்து, களத்தைவிட்டு வெளியேறினார். அடுத்தகட்ட நடவடிக்கைபற்றிக் கலந்துபேசுவதற்காக ஆறாம் நாளின் முடிவில் ஒன்றுகூடல் ஒன்று நடைபெற்றது. அந்த ஒன்று கூடல் அஜந்தியின் தலைமையில் 'உசன்' பாடசாலையில் நடைபெற்றது.

படையணி ஒன்றுகூடியது. சுகந்தாவின் பிளாட்டுன் மட்டும் கொடிகாமத்தில் காவல் நின்றது.

யுத்தம் இனி எடுக்கவுள்ள மாறுபட்ட வடிவத்தைப்பற்றி அஜந்தி விளக்கினார். தனித்தனியாகவும் சிறு சிறு குழுக்



படிப்பகம்

padippakam



களாகவும் மட்டுப்படுத்தப்பட்ட உணவு, ஆயுத, வெடி பொருட்களுடனும் சண்டை தொடரப்போவதால், விரும் பியவர்கள்மட்டும் சண்டையில் தொடர்ந்து பங்கு கொள்ளலாம் என்றார்.

இந்த முடிவு சூரியகதிர்-01 நடவடிக்கையின்போதும் எடுக்கப்பட்டது. வேவு அணிபோன்று தற்துணிவுடன் செயற்படக்கூடியவர்கள் சண்டையில் பங்கெடுக்கலாம். ஏனையவர்கள் நடவடிக்கையிலிருந்து விலகிக்கொள்ள லாம் என்று உரும்பிராய்ப் பகுதியில் சண்டை நடந்து கொண்டிருந்தபோது தாக்குதல் அணிகளிடம் கேட்கப் பட்டது. குறித்த ஒரு சிலரைத்தவிர, ஏனையவர்கள் இதற் குச் சம்மதம் தெரிவித்தே வலிகாமச் சண்டை முடி யும்வரை தொடர்ந்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந் தோம்.

இப்போது இது இரண்டாவது முறை. தாக்குதலணிகள் தொடர்ந்து போரிடும் முடிவை எடுத்தன. கொம்பனிப் பொறுப்பாளர்கள் தத்தம் கொம்பனிகளில் போராளிச் சகோதரர்களாக இருப்பவர்களில் ஒவ்வொருவரையும் மருத்துவப் பொறுப்பாளர்களால் குறிப்பிடப்பட்ட உடல் நிலை இயலாதவர்களையும் வன்னிக்கு அனுப்பும் முடிவை எடுத்தார்கள்.

நடவடிக்கைக்குரிய அணிகள் மீளமைக்கப்பட்டன. இரவு 12.00 மணியளவில் மிருசுவில் பகுதிக்கு வந்து 2கி.மீ. நீளத்துக்கு L வடிவ அகழிகளை வெட்டினோம். வீடுகளில் மக்கள் கைவிட்டுச்சென்ற மண்வெட்டிகளை நாம் பயன்படுத்தினோம். சீரற்ற உணவு விநியோகம், வேலையால் ஏற்பட்ட அலுப்பு, தூக்கமற்ற இரவுகள் எல்லாமாகச் சேர்ந்து எல்லோரையும் களைப்பில் ஆழ்த்த முயன்றாலும், எங்கே இராணுவம் நிற்கின்றது என்ற விடயம் தெரியாததால் கடும் விழிப்புடன் இருந்தோம்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

தென்மராட்சியில் இருந்த எமது தளங்கள் படகேறி வன்னிக்குப் பயணித்தன.

தென்மராட்சியில் நின்ற தாக்குதல் அணிகள் படையின ரோடு கிளித்தட்டு மறித்துக்கொண்டிருந்தன. நிலையாக ஓரிடத்தில் நின்று சண்டை பிடிப்பது சாத்தியமற்றுப் போனது. படைவரவைக் கண்டு எம்மவர்கள் சுடத் தொடங்க, அவர்களோ எமது நிலைகளைத் தவிர்த்துக் கொண்டு விலகி எம்மைக் கடந்து ஓடுவார்கள். உடனேயே எமது அணியினர் அவர்களைப் பக்கவாட்டாக மேவிக் கொண்டு ஓடி நிலைப்படுத்திச் சுட முயல்வதற்கிடையில், அவர்கள் இன்னும் ஓடிப்போவார்கள். தென்மராட்சியின் கடலோரம் இருந்த தென்னந்தோப்புக்களிடையே இந்த ஓட்டமும் மறித்துச் சுடுதலும் மறுபடி மறுபடி நடை பெற்றது. ஒரு நாளிலேயே பல தடவைகள் கலைத்து மறித்துச் சுட்ட நிகழ்வுகளும் நடந்தன.

இரவு 12.00 மணிக்கு உசன் பகுதியில் நிலையமைக்கத் தொடங்கிய அசோகாவின் கொம்பனி, விடிகாலையிலேயே ராங்கிகளுடன் நகர்ந்த இராணுவத்தினரைநோக்கி அருளினி யின் RPG அடியுடன் சண்டையை ஆரம்பித்தது. மட்டுப் படுத்தப்பட்ட பகுதியில் நின்றவாறு ஒரு மணித்தியாலம் வரை சண்டையிட்டவர்களுக்குக் கையிருப்பு முடிந்தபின், வெடிபொருள் விநியோகம் கிடைக்காததால், அவ் விடத்தைவிட்டு விலகவேண்டி நேரிட்டது.

இடையில் திரு. தக்காளி அவர்களின் தொடர்பு கிடைத்ததால் அவரிடமிருந்து வெடிபொருட்களைப் பெற்றுக்கொண்டவர்கள், பண்டிதர் குடியிருப்பில் நிலை யெடுத்தனர். இதற்கும் அடுத்த கிராமம் கிளாலி. வன்னிக் கும் யாழுக்குமான தொப்புள்கொடி அதுவே.

சண்டை பின்னகர நகர, கிளாலியில் மக்கள் வெள்ளம் அலைமோதியது. வீடு முழுவதும் வேண்டிய பொருட்களால்

padippakam



நிறைந்திருக்க, ஒரு உரப்பைப் பொருட்களைச் சுமந்தவாறு மக்கள் வன்னிசெல்லத் துடித்தனர். மாவீரராகிய தங்கள் பிள்ளைகளின் படங்களோடுமட்டும் மக்கள் படகேறக் காத்திருந்தார்கள். கிளாலியில் அவசரமாக ஒன்றுக்கு மேற்பட்ட தற்காலிகப் படகுத் துறைகளை அமைத்து, ஒரு இயந்திரப் படகோடு 10 மேலதிக படகுகளைக் கயிறுகளால் தொடுத்துக்கட்டியும்கூட, எம்மக்களை அக் கரைக்கு அனுப்பும் பணியைச் செய்துமுடிக்க முடியாமல் போனது.

கடற்புலிகளின் ஆயுதப் படகுகள் மக்களின் போக்கு வரத்துக்குக் காப்பளித்தவாறு ஓடிக்கொண்டிருந்தன.

இப்போது பண்டிதர் குடியிருப்பை சிறீலங்காப் படை களின் ராங்கிகள் நெருங்கின. எம்மவர்கள் ராங்கிகளைக் கண்டு விட்டார்கள். மேஜர் லெற்றீசியா ராங்கி ஒன்றைக் குறிபார்த்தார். காத்திருந்து சுட்டார். ராங்கி எரியத் தொடங்கியது. ராங்கி எரிவதைப் பலர் கண்டு துள்ளிக் குதித்தனர். ஆனால் ஏனைய ராங்கிகள் ஏவிய எறிகணை களால் எமது காப்பரண்கள் உதிரத்தொடங்கின. கடற் கரை மணல் பொலு பொலுத்தது. அந்த நிலைகளை நாங்கள் கைவிடவேண்டிநேரிட்டது.

இப்போது எறிகணைகள் எம்மைக் கடந்து கிளாலிக் கரையில் நின்ற மக்களைத் தேடிச்சென்றன. உலங்கு வானூர்திகள் தாழப்பறந்து படகுகளைச் சுடத்தொடங்கின. கடற்புலிகளின் படகுகள் புயல் வேகமெடுத்து, மேலும் கீழுமாகச் சீறிப்பாய்ந்து உலங்குவானூர்திகளைத் தாக் கின. இனிமேல் வன்னிக்குப் போகமுடியாது என்ற உண்மை கரையில் நின்ற மக்களுக்கு உறைத்தது. உரப்பை களையெல்லாம் கைவிட்டவர்கள் உயிரைக் கையில் பிடித்தவாறு வடமராட்சிநோக்கியும் சாவகச்சேரிநோக்கி யும் பிரிந்து கலைந்து ஓடிப்போகத்தொடங்கினர்.



படிப்பகம்

படகின் கொள்ளளவுக்குமேல் மக்கள் ஏறியதால் படகு கள் அமிழத்தொடங்கின. படகைவிட்டு யாரும் இறங்க மறுத்ததோடு, மேலும் மேலும் மக்கள் ஏறியதைப் பார்த்துப் பொறுக்காத அரசியற்றுறைப் போராளிகள் தம் மனங் களைக் கல்லாக்கியவாறு ஆண்களைப் படகிலிருந்து தூக்கி வெளியில் போட்டனர்.

பெருமளவு பெண்களையும் குழந்தைகளையும் சுமந்த வாறு கடைசித் தொகுதிப் படகுகள் புறப்பட்டன. இனி மேல் எத்தனை வருடங்களின்பின் அந்தக் குழந்தைகள் தம் தந்தையரையும், பெண்கள் தம் துணைவர்களையும் சந்திக்கப் போகின்றார்கள்? தெரியவில்லை. கண்முன்னே எங்களின் குடும்பங்கள் இருதிசைகளில் பிரிவதைப் பார்த்த உயிருள்ள சாட்சிகளாகக் கரையில் நாம் நின்றிருந்தோம்.

உடலில் பலம் மிகுந்தவர்கள் மாவீரராகிய தம் பிள்ளை களின் படங்களைத் தலைக்குமேலே உயர்த்திப் பிடித்த வாறு, இடுப்பளவு தண்ணீரில் படகுகளின்பின்னே ஓடிப் போய், படங்களைப் படகுகளுக்குள் எறிந்துவிட்டார்கள்.

இப்போது ஓடினாலும் பிடிக்கமுடியாத தூரத்துக்குப் படகுகள் போய்விட்டிருந்தன. தண்ணீருக்குள் படங்களைத் தவற விட்டவர்களும் படங்களைக் கையில் வைத்தவாறு திகைப்போடு நின்றவர்களும் தொடர்ந்து விழுந்த எறி கணைகளால் சுயநிலைக்கு வந்தனர்.

"தயவு செய்து எல்லாரும் திரும்பிப் போங்கோ"

கரையில் நின்ற மக்களிடம் போராளிகள் கெஞ்சினார் கள்.

ஒரு முதாட்டி தன் கையிலுள்ள படத்தின் கண்ணாடி யைச் சிறு கல்லொன்றால் உடைத்து, தன் வீரப் பிள்ளை யின் படத்தை உரித்து எடுத்து, சேலைக்குள் மறைத்தவாறு தேம்பித் தேம்பி அழுதுகொண்டே போனார். எந்தத் தாயும்

padippakam



*தம் வீரக் குழந்தைகளின் நிழற் படங்களை இனிமேல் சுவரில் தொங்கவிடமுடியாது என்ற உண்மை நெஞ்சில் ஓங்கி அறைந்தது. கரைமுழுவதும் கண்ணாடிகள், சட்டங் கள், படகேறியவர்களின் உடமைகள் சிதறிக் கிடந்தன. வளர்த்தவர்கள் படகேறிப்போக, ஊரிலிருந்து அவர்கள் பின்னே ஓடிவந்த நாய்கள் கரையில்நின்று ஊளையிட்டன. யாவற்றுக்கும் சாட்சியாகக் கரையில் நாங்கள் கனத்த மனங்களுடன் நின்றிருந்தோம்.*

*இதன்பின் நாங்கள் கிளாலியில் நிலையமைத்தோம். ஏப்ரல் 26 மாலை 5.00 மணிவரை சண்டை தொடர்ந்தது. அதன்பின் வேவு அணிகள் முன்னணிக் காவலில் ஈடுபட, எமது தாக்குதல் அணிகள் கட்டளைப்பீடத்தின் பணிப்பில் வன்னிக்குப் புறப்பட்டன. படகுகள் அன்றிரவே வன்னிக்கு வந்து சேர்ந்தன. பலரின் காற்சட்டைப் பைகளிலும் ரவைக் கூட்டு அங்கியுள்ளும் ஒவ்வொரு பிடி யாழ்ப்பாண மண் இருந்தது. தென்மராட்சிச் சண்டைகளில் பதினாறு பேரை இழந்திருந்தோம். பலர் காயமடைந்திருந்தனர்.*

*1996.04.27 அதுவே கடைசி நாள்.*

*வேவு அணியினர், வெவ்வேறு வேலைகளோடு நின்ற படையணியின் ஏனையோர், நிர்வாகப் பொறுப்பாளர்கள், சண்டைப் பொறுப்பாளர்கள் எல்லோரையும் படகுகள் ஏற்றிக்கொண்டன.*

*பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் படகுகள் இருளில் புள்ளிகளாகத் தெரிந்தன.*

*படகு சீறிப் பாயும் வேகத்தில் முதுகிலே உப்பு நீர் தெறித்தது. ஓட்டிமட்டுமே முன்புறமாக வன்னியைப் பார்த் துப் படகைச் செலுத்த, நாங்கள் யாவருமே பின்புறம் திரும்பி, விட்டுவிட்டு வரும் நிலத்தை வெறித்துப் பார்த்த வாறிருந்தோம்.*



படிப்பகம்

padippakam



*பனைமர வரிசை பார்வையிலிருந்து மறையத்தொடங்கிற்று.*

*யாழ்மண்ணே, போய் வருகின்றோம்.*

ஒலிவாங்கிகளை நீட்டியவாறும் குறிப்பேடுகளை விரித்தபடியும் எங்களின் முகங்களை, நாம் சொல்லப்போகும் பதில்களை ஆவலோடு எதிர்பார்த்து நின்ற இந்த ஊடகவியலாளர்களுக்கு நாம் என்ன பதிலைச் சொல்ல?

*"பாதை திறப்பதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?"*

கேள்வி நல்ல கேள்விதான். ஆனால் பதிலைத்தான் ஓரிரண்டு வரிகளில் சொல்லிவிட முடியாதபடி மனம் முழுவதும் வலி நிரம்பிக்கிடந்தது.

ஒருநாள்தானும் ஓய்வெடுக்க நேரமின்றி உழைத்து, உறங்கிப்போனவர்கள் இப்போது இங்கே நின்றிருந்தால், அவர்கள் நிறையப் பதில்களை உங்களுக்குச் சொல்லியிருப்பார்கள்.

கடந்தகால நினைவலைகள் தானாக மேலெழுவதை, திறக்கப்பட்ட நெடுஞ்சாலையில் விரையும் ஊர்திகளின் பேரிரைச்சல்களாலும் தடுக்கமுடியவில்லை.

***



படிப்பகம்

# 02

பூநகரி 4 ஆம் கட்டை பாலைமரச் சோலை. ஈழத்தில் பண்டைத் தமிழரசு இருந்ததற்கான வரலாற்றாதாரங் களை இன்றளவும் சுமந்திருக்கும் பூநகரி ஒரு தொல் பொருள் மையம்.

அங்கே முல்லைத்தீவுப் பகைத் தளத்தின் மாதிரி உரு ஒன்றைப் பத்துநாள் உழைப்பின் விளைவாக எமது பயிற்சி ஆசிரியர்கள் உருவாக்கியிருந்தனர். தளபதி பால் ராஜ் அவர்களின் கவனிப்பின்கீழ் வேலைகள் நடைபெற்றி ருந்தன. அங்கே அசோகா, சூரியகலா ஆகியோரின் கொம்பனிகள் பயிற்சிகளில் ஈடுபட்டவாறிருந்தன. யாழ்ப் பாணத்திலிருந்து வன்னிக்கு எமது படையணி வந்து ஒரு மாதம் முடிவதற்குள் இவை தொடங்கிவிட்டன.

வன்னிக்கு வந்த மாலதி படையணியை கிளிநொச்சி -உருத்திரபுரத்திலிருந்த எமது தளத்தால் சுமக்கமுடியாமல் போய்விட்டது. அந்நேரம் எமது படையணியின் வன்னிப் பகுதிக்கான நிர்வாகப் பொறுப்பாளரான அனுசியா எங் களை வன்னேரிக்குளப் பாடசாலையிலும் கிளிநொச்சி 8 ஆம் வாய்க்கால் பகுதியிலுமாகத் தங்கவைத்தார். இன்னொரு அணி மணலாறு-நாயாற்றுப் பகுதியில் தங் கிக்கொண்டது. தன்னிடமிருந்த வளங்களையும் வலுவை யும் பயன்படுத்தி, படையணியின் பதில்

நிதிப்பொறுப்பாளராக இருந்த மதி எல்லோருக்கும் உணவு களை வழங்கிக்கொண்டிருந்தார்.

காயம் காரணமாக விதுஷாவால் முழுமையாகச் செயற்படமுடியாமல் இருந்தாலும், படையணி வன்னி வந்த ஒரு வாரத்துக்குள்ளேயே எல்லோரையும் ஒன்றுகூட்டி அணிகளை மீளமைத்தார். அசோகாவினதும் செல்வியின தும் கொம்பனிகள் ஆனையிறவு-தட்டுவன்கொட்டிப் பகுதிக் குப் போயின. சூரியகலாவின் கொம்பனி மணலாற்றுப் பகுதிக்குப் போய் சிறப்பு அணி ஒன்றுக்குரிய பயிற்சி களில் ஈடுபடத்தொடங்கியது.

அப்போதுதான் அந்தச் செய்தி காதுகளை வந்தடைந் தது. துடித்துப்போனோம்.

"மாவீரர் துயிலுமில்லங்கள் மூன்றும் (கோப்பாய், கொடிகாமம், எள்ளங்குளம்) சிறீலங்கா இராணுவத்தின ரால் புல்டோசர்கள்கொண்டு தகர்க்கப்பட்டன."

இறந்தவர்களின் அமைதியைக் குழப்புகின்ற இவர்கள், அங்கே இருக்கின்ற எம் மக்களுக்கு எதைத் தரப்போகின் றார்கள்? சாவையா?

கோபத்தில் கொதித்துப்போனோம்.

மே 21 இல் அசோகாவின் கொம்பனி பூநகரி 4 ஆம் கட்டைக்கு நகர்ந்தது. சூரியகலாவின் கொம்பனியும் அங்கே வந்துசேர்ந்தது.

தட்டுவன்கொட்டியில் தொடர்ந்து நின்ற செல்வியின் கொம்பனி 1½கி.மீ. நீளமான பகுதியைக் காவல்செய்தது. ஜுன் மாதத்தில் இந்தக் கொம்பனியை டெய்சி பொறுப் பேற்றார். இங்கு நின்ற எமது கொம்பனியோடு புலனாய்வுத்துறை, அரசியற்றுறை, கடற்புலிகளின் மகளிர்

padippakam



தாக்குதலணி ஆகிய மூன்று அணிகள் இணைந்து ஆனையிறவு இராணுவ நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முனைந்தன. எமது அணியோடு கப்டன் ஆதித்தாவின் வேவு அணி இயங்கியது.

மேஜர் ஜெகதாவுடனான சிறப்பு வேவு அணி இராணுவத்தினரின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளைக் கடந்து போய்த் தகவல்களைத் திரட்டி வந்துகொண்டிருந்தது. டெய்சியின் அணியினர் இரவில் காவற்பணியிலும் பகலில் அவதானிப்பு அணிகளை விட்டுவிட்டுப் பின்னணியில் பயிற்சி செய்வதிலும் ஈடுபட்டனர்.

முல்லைத் தள மீட்பில் எங்கள் படையணி ஆற்றிய பங்கு என்ன? சொல்கின்றார், நடவடிக்கைக்குப் பொறுப்பாக நின்ற கேணல் பால்ராஜ்.

"கேணல் தீபனின் மேற்பார்வையில் முல்லைத்தள வேவுப் பணிகள் நடந்தன. அது மிகக் கடினமான வேவு நடவடிக்கை. நீரேரிகள், குளங்கள், வெட்டைவெளிகளைக் கொண்ட முல்லைத் தளத்தின் வெளிப்புறத்தில் ஒரு பகுதியை லெப்.கேணல் முகுந்தாவுடனான மாலதி படையணியின் வேவு அணி வேவு பார்த்தது. ஒவ்வொரு 20 மீற்றர்களுக்கிடையில் ஒன்று என்ற வகையில் நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்த காப்பரண்கள், கண்ணிவெடிகளுக்கிடையில் சரியான முறையில் வேவுப் பணியை முடித்து, பாதைகளை ஏற்படுத்தியதால் மதிநுட்பமான முறையில் நடவடிக்கையைத் திட்டமிடக்கூடியதாக இருந்தது. முகுந்தாவின் அணி மிகச் சிறப்பாகச் செயலாற்றியதாகத் தீபன் என்னிடம் குறிப்பிட்டார்.

மணலாற்றுப் படையணியுடன் இணைந்து மாலதி படையணி சண்டையிடுவதாகத்தான் ஆரம்பத்தில்



படிப்பகம்

padippakam



திட்டமிட்டிருந்தோம். ஆண் போராளிகளுக்குச் சமமாகப் பயிற்சிகளைச் செய்துகொண்டிருந்த மாலதி படையணியின் அணிப் பொறுப்பாளர்கள் தமக்குத் தனியான உள்நுழைவுப் பாதைகளைத் தரும்படி என்னிடம் கேட்டார்கள். அவர்களின் கடந்தகாலச் செயற்பாடுகளை அறிந்திருந்த நான், அவர்கள்மீதான நம்பிக்கையோடு, தலைவரிடம் கதைத்துவிட்டு, பாதையைத் தனியாகக் கொடுத்தேன். திட்டத்துக்கான பயிற்சியை அவர்கள் செய்த முறை எனது நம்பிக்கையை அதிகப்படுத்தியது. எனவே நெருக்கடி மிகுந்த, சவாலான பெருங்கடலையண்டிய கடற்கரைப் பாதையை அவர்களிடம் கொடுப்பதென தலைவர் முடிவெடுத்தார்."

முல்லைத் தள மீட்புக்கான திட்டத்தின்படி இரு உள் நுழைவுப் பாதைகள், பெருந்தளத்தின் மையம் என்பன எமக்குரிய இலக்குகளாகத் தரப்பட்டிருந்தன.

"ஆரம்பத்தில் எமக்கு இரு பாதைகள்மட்டுமே தரப்பட்டன. பெருந்தளம்மீதான தாக்குதலில் நாம் ஒரு உதவியணியாகவே விடப்பட்டிருந்தோம். நீண்டகாலமாக நாம் நிலைகொண்டிருந்த இடமான யாழ்ப்பாணத்தை விட்டுப் பிரிந்துவந்த ஆதங்கம் எனது படையணிக்கு இருந்தது. எனவே இந்தச் சண்டையில் ஒரு முக்கிய பங்கு கொடுக்கப்பட்டால், அவர்கள் பழையபடி புத்துணர்வை அடைவார்கள் என்று எனக்குத் தெரியும். ஆகவே நான் தலைவ்ரிடம் இதுபற்றிக் கதைத்தேன். பெருந்தளத்தின் ஒரு பகுதியைத் தாக்கியழிக்கும் பணியைத் தலைவர் எங்களுக்குத் தந்திருந்தார்"

என்றார் மையத் தளத்தைக் கைப்பற்றும் அணிகளை வழிநடத்திய கேணல் விதுஷா.



படிப்பகம்

padippakam



மையத் தளத்தின் ஒரு பகுதி தாக்குதல் இலக்காகக் கொடுக்கப்பட்டதும், எங்களின் மகிழ்வு கரை புரண் டோடியது. எங்களது எண்ணமெல்லாம் யாழ்ப்பாணமே இலக்காக இருந்ததால், கட்டிடங்கள் நிறைந்திருந்த முல் லைத்தீவின் மாதிரி அமைப்பைப் பார்த்து, அது யாழ்ப் பாணம் என்றே நம்பியிருந்தோம். மாதிரி அமைப்பின் ஒருபுறம் உருவாக்கப்பட்டிருந்த நந்திக்கடல் எங்களைச் சற்றுக் குழப்பியது. சிலவேளை அது கிளாலிக் கடலாக இருக்கலாம் என்று மனம் எண்ணிக்கொண்டது. கனவு, நினைவெல்லாம் எங்களுக்கு யாழ்ப்பாணமாகவே இருந் தது.

சண்டை தொடங்கமுன்னர், அவரவர் நகரவேண்டிய பாதைகளைக் காட்டுவதற்காக அணிகளின் கட்டளையதி காரிகளை ஏற்றிச் செல்ல ஊர்திகள் வந்து நின்றன. ஏறிக் கொண்டோம்.

“எவரும் வெளியே தலைகாட்டக்கூடாது”

என்ற கட்டளை சற்றுக் கடுமையாக இருந்ததால், யாரும் தலையை உயர்த்தவில்லை. எங்கே போகின்றோம், ஏன் இவ்வளவு நேரமாகப் பயணம் செய்கின்றோம், யாழ்ப் பாணத்தை எப்படித் தரைவழியால் போய்ப் பார்ப்பது என்று பல கேள்விகள் மனதில் எழுந்தன. பதிலை யாரிடம் கேட் பது?

கும்மிருட்டிலே ஊர்திகளிலிருந்து இறக்கப்பட்ட எங் களுக்கு இடம், வலம் விளங்கவில்லை. அவரவருடைய இறுதித் தரிப்பிடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்ட நாம், அங்கிருந்து நாம் நகரவேண்டிய பாதைகளை, தாக்க வேண்டிய இடங்களைத் துல்லியமாக அவதானித்துக் கொண்டு ஊர்திகளில் ஏறினோம்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

கரையிலே மோதுகின்ற பேரலைகளின் ஒலி இடையறாது காதுகளிலே விழுந்ததை மனம் கிரகித்துக்கொண்டது. பெருங் கடற்பரப்பு ஒன்றுக்கு அருகே நிற்கின்றோம். எந்தக் கடல் இது? வடமராட்சி கிழக்காக இருக்குமோ?

சண்டைக்குப் புறப்படுகின்ற கடைசி நேரத்தில், திரு. தமிழேந்தி அவர்கள் எம்மத்தியில் உரையாற்றினார். யாழ்ப்பாணத்தை விட்டுவந்ததால் எமக்கு உண்டான இழப்பையும், முல்லைத்தீவை நாம் மீட்பதால் ஏற்படவுள்ள நன்மைகளையும் எமக்கு அவர் எடுத்து விளக்கிக் கொண்டிருந்தார்.

அதிர்ச்சியோடு நாம் ஆளை ஆள் பார்த்தவாறு அமர்ந்திருந்தோம்.

கடலைப் பார்த்தவாறு அமைந்திருக்கும் அழகிய பட்டினம் அது. அலைகளை அள்ளி வீசுகின்ற கடல் தன் வளங்களையும் குறைவின்றி வாரிக் கொடுத்ததால் முல்லைத்தீவு செழிப்போடு நிமிர்ந்தது. யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்குமிடையே ஒளி வீசத் தொடங்கிய முல்லைத்தீவுப் பட்டினம், தன் வளத்தாலும் அமைவிட முக்கியத்துவத்தாலும் ஆளும் சிங்கள அரசின் கவனத்தை ஈர்த்தது.

1968 இல் அங்கே முதலாவது படைத்தளம் அமைக்கப்பட்டு, உலங்குவானூர்தி இறங்கு தளமும் நிர்மாணிக்கப்பட்டது. இந்திய இராணுவம் ஈழத்தின் அமைதியைக் குலைத்த மூன்று வருட காலப்பகுதியில் இது இந்தியத் தளமாக இயங்கியது. 2 ஆம் ஈழப்போர் தொடங்கிய 1990 இல், இங்கு வாழ்ந்த மக்கள் தம் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டு,

padippakam



பெரும் எடுப்புடன் ஒரு பாரிய தளமாக சிறீலங்காப் படைகளால் விரிவாக்கப்பட்டது.

காலப்போக்கில் கடற்படையினர், விமானப் படையினர், தரைப்படையினர் தங்கி நிற்கின்ற, தங்கிச் செல்கின்ற விநியோகத் தளமாக விரிவடைந்தது. 1992 இலேயே யாழ் மாவட்டத்தை முற்றாக வலிந்து கட்டுப்படுத்தும் திட்டம் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவவிடம் இருந்ததால், யாழ்மாவட்ட இராணுவ நடவடிக்கைக்குத் தேவையான மேலதிக ஆயுத, தளபாடங்களையும் படைபலத்தையும் கொண்ட பாரிய தளமாகவே இது இருந்தது. இவற்றைவிட வட, கிழக்குக் கடற்பரப்பில் எமது கடற்புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் காவற் கோபுரமாகவும் செயற்பட்டது.

தளத்தின் தென்பகுதி சதுப்பு நிலத்தாலும் பெரு வெளியாலும், கிழக்குப் பகுதி பெருங்கடலாலும், மேற்கு நந்திக் கடலாலும் இயற்கை அரண் செய்யப்பட்டிருந்தது. வடமேற்கில் இருந்த வெட்டுவாய்க்கால் பாலத்திலிருந்து தென் கிழக்கிலிருக்கும் சிலாவத்தைவரையான 4.5கி.மீ. நீளத்தையும் பெருங்கடலிலிருந்து நந்திக் கடல்வரையான கிட்டத்தட்ட 2கி.மீ. அகலத்தையும் கொண்டதே முல்லைப் பெருந் தளம்.

தளத்தைப் பாதுகாக்கும் வகையிலான மண் அணை, அதன்மேல் முட்கம்பி வேலி, அது வெளியே தெரியாதவாறு பனையோலை, தகரங்களாலான மறைப்பு, அதன் முன்னரான 40மீ. தூரமும் கட்டிடங்கள் இடிக்கப்பட்டு மரங்கள், புற்கள் வெட்டப்பட்டதால் உண்டான செயற்கை வெளி, இதனைச் சூழ கண்ணிவெடி வயல், முட்கம்பிச் சுருள்கள், இவையெல்லாவற்றையும்விடத் தடுப்பு வேலியோடு இணைக்கப்பட்டிருந்த மின்குமிழ்கள் இருளை விரட்டிக் கொண்டிருக்கும். குறித்த இடைவெளிகளில்



படிப்பகம்

padippakam



பொருத்தப்பட்டிருந்த தேடொளிகள் திடீரென்று உயிர் பெற்று நாலா திசையும் சுழன்றடிக்கும்.

தளத்தின் உட்பகுதியிலும் நான்கு தடுப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தளத்தின் கட்டளைப் பீடமும் ஆட்லறி ஏவுதளங்களும் வேலிகளின் மேல் வேலிகளால் காப்பிடப்பட்டு, வழியெங்கும் ஊர்திக் கண்ணிகள் விதைக் கப்பட்டிருந்தன. இவை போதாதென்று காவல் உலா அணி களும் அவதானிப்பு அணிகளும் எந்நேரமும் விழிப்புடன் இருந்தன. இவர்கள் எல்லோரினதும் கண்களில் மண்ணைத் தூவியவாறு எமது வேவு அணிகள் தேவையான தகவல் கள் யாவற்றையும் திரட்டியிருந்தன.

தளத்தகர்ப்பின் இறுதி ஒத்திகைப் பயற்சி ஜுலை 12 இல் செய்து பார்க்கப்பட்டது. மறுநாள் ஓய்வு நாள் சிறப் பான உணவுகளுடனும் அப்போதைய நிதித்துறை வழங் கல் பொறுப்பாளர் லெப்.கேணல் அன்பு / அம்மா அவர் கள் நேரடியாக நின்று வழங்கிய குளிர்களியுடனும் குதூ கலமாய்க் கழிந்தது. ஜுலை 15 பூநகரியிலிருந்து எமது அணிகள் புறப்பட்டன. ஜுலை 17 மாலை 6.00 மணிக்குத் தாக்குதலுக்குரிய முழுமையான தயார்நிலையோடு தமக் குரிய இலக்குகளைநோக்கி நகர்ந்தன. எல்லா அணி களுமே தத்தமது இடங்களுக்குப் போய்ச்சேரும்வரை எல் லோருமே காத்திருந்தோம்.

யாழ்ப்பாணத்தை விட்டுவந்ததால் எமக்கு உண்டான இழப்பையும், முல்லைத்தீவை மீட்பதால் ஏற்படவுள்ள நன்மைகளையும்பற்றித் தமிழீழ நிதித்துறைப் பொறுப் பாளர் தமிழேந்தி அவர்கள் கடைசியாகக் கதைத்தது எல்லோர் மனங்களிலும் நிழலாடியது.

இப்போது எமது தலைவர் அவர்கள், எங்கள்மீது முழு நம்பிக்கையோடு, தொலைத்தொடர்புக் கருவியருகே காத்திருப்பார். முல்லைத்தீவை மீட்டோம் என்ற



படிப்பகம்

padippakam



செய்தியை மிக விரைவாக அவருக்கு நாம் அனுப்ப வேண்டும்.

இரவின் அமைதியில் கடலின் பேரலைகள் கரையோடு மோதும் ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. மின் பிறப்பாக்கி களின் இரைச்சலால் கடலின் பேரிரைச்சலை வெல்ல முடியாமல் போய்விட்டது.

17 ஆம் திகதி நள்ளிரவு கடந்துவிட்டது. இப்பொழுது ஜுலை 18 அதிகாலை 12.10. முல்லைத் தளத்தினுள் விழத்தொடங்கிய எம்மவர்களின் எறிகணைகள் தளத்தை அதிரவைத்தன. அணிப் பொறுப்பாளர்கள் அனைவரது தொலைத்தொடர்புக் கருவிகளும் தமக்குள் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தன.

நந்திக் கடலோரமாக கப்டன் செல்வரஞ்சினியின் அணி, படையினரின் முன்னரங்கை நெருங்கி நின்று, திசைதிருப்புத் தாக்குதலைச் செய்துகொண்டிருந்தது. அவர்களுக்கு வலது புறம் மேஜர் சுமங்களாவுடனான மங்கையின் பிளாட்டூன், போகும் வழியிலேயே தம்மை இராணுவம் கண்டுவிட்டதை அவதானித்து, நகர்வை நிறுத்திக்கொண்டது.

இவர்களுக்குரிய பாதை உள்நுழைவதற்குக் கடினமா னது என்று திட்டப் பயிற்சியின்போதே சொல்லப்பட்டிருந் தது. முன்னரங்க நிலைகளோடு உடைந்த ஒரு கட்டிடமும், முழு ஆளை மறைக்கக்கூடிய பற்றைகளும் இருந்ததால், அப்பாதை தொடர்பான தமது திருப்தியின்மையை வேவு வீரர்கள் கேணல் பால்ராஜூக்கு ஏற்கனவே தெரியப்படுத்தி யிருந்தார்கள். எனவே பால்ராஜ் அவர்களும் இந்தப் பாதையால் நுழையும் அணியின் நடவடிக்கைகளால் ஒட்டு மொத்தச் சண்டை குழம்பக்கூடாது என்பதில் கவனமுடன் இருந்தார்.



படிப்பகம்

நிலைமையைத் தெரியப்படுத்திவிட்டுக் காத்திருந்த இவர்களை, இவர்களுக்கு வலப்புறமாக மணலாற்றுப் படையணி உடைத்து உள்நுழைந்த பாதையால் உள்ளே வரும்படி கேணல் பால்ராஜ் கட்டளையிட்டதைத் தொடர்ந்து, அணி தனது திசையை மாற்றி, இடையிலிருந்த தாமரைக் குளங்கள், வடலிகளைப் பாய்ந்து கடந்து ஓடிவந்து, முன்னே போன அணிகள் வெட்டிவிட்டிருந்த முட்கம்பிகளிடையே தெரிந்த இடைவெளியால் புகுந்தது.

முன்னே போன மணலாற்று அணி தனக்குரிய பாதையை ஏற்படுத்தியவாறு மிக வேகமாக உள்நுழைந்து தன்னுடைய இலக்குநோக்கிப் போய்விட்டிருந்ததால் வலது, இடதுபுறமாக நீண்டு செல்லும் காவலரண்களில் தேடுதலும் அழித்தலும் செய்யப்பட்டிருக்கவில்லை. அந்தப் பணி இவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த வழியால்தான் மையத் தளத்தை நோக்கி சூரியகலாவின் கொம்பனியை வழிநடத்தியவாறு விதுஷா உள்நுழைந்திருந்தார்.

“கடற்கரைக்கு அனுப்பப்பட்ட அசோகாவின் கொம்பனி தனக்குரிய பாதையை உடைத்து, கடற்கரையைப் பிடித்து மறிப்பு ஒன்றை விட்டுவிட்டு நின்றது.

மையத் தளத்துக்கு அனுப்பப்பட்ட சூரியகலாவின் கொம்பனி இழப்புகளுக்கு மத்தியிலும் போய்க்கொண்டிருந்தது. பாதையை உடைத்த அசோகாவின் அணியும் இவர்களுடன் சேர்ந்துகொள்ள, இரண்டாவது தடையில் ஒரு இறுக்கமான சண்டை நடந்தது. தளத்தின் எல்லா முனைகளிலும் நின்ற இராணுவம் மாலதி படையணிக்கென ஒதுக்கப்பட்ட பகுதியிலே வந்து குவிந்துகொள்ள, கடும் நெருக்கமான சண்டை மாலதி படையணிக்குக் கிடைத்தது,”

என்று, மேலும் கூறினார் பால்ராஜ்.

padippakam



"அசோகாவுடன் போன மேஜர் ஜெயா, மேஜர் ரதி ஆகியோர் கடற்கரையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்னர், கடற்கரையையும், நாங்கள் நுழைந்த பகுதியையும் கண்காணிக்கக்கூடியவாறு மிக உயர மான இடத்தில் இராணுவம் அமைத்திருந்த அவ தானிப்பு நிலையொன்றை இனங்கண்டு அழித்திருந் தார்கள். வேவுத் தகவல்களில் இந்த அவதானிப்பு நிலைபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

அவர்கள் அதை உடனடியாக அழித்திருக்காவிட் டால், விடிந்த பின்னர் கடற்கரையில் நின்ற அசோ காவின் அணி எங்களைச் சந்திக்க வந்தபோது இழப்புகளைச் சந்தித்திருக்கும். நாங்களும் இழப்பு களைச் சந்தித்திருப்போம்."

என்றார் விதுஷா.

சூரியகலாவின் கொம்பனியில் எல்லோருக்கும் முன்னே போய்க்கொண்டிருந்தது சுலக்சியின் பிளாட்டூன். அவர் களின் பாதை கடினமானது. கும்மிருட்டில் படையினரிடமி ருந்து சீறி வந்துகொண்டிருந்த 40மி.மீ. எறிகணைகள், .50 கலிபர் ரவைகள், கனரக ஆயுதங்களிலிருந்து வந்த ரவைகளின் நெருப்பு ஒளிகளைத்தவிர, இருள் சூழ்ந்த பாதை அது. பாதை விலகிப் பாதம் பதித்தால், கால் களைச் சிதைக்கக் கண்ணிகள் காத்திருந்தன.

சுலக்சியின் அணி எதிர்பாராத தடை ஒன்றை எதிர் கொண்டது. வேவுத் தரவுகளுக்கு மாறாக ஓரிரு நாட்களின் முன்னர் அமைக்கப்பட்ட மண் அணை ஒன்று முன்னே தெரிந்தது. மண் அள்ளப்பட்ட பள்ளத்துள் வந்துவிட்ட இவர்களை மண் அணையின் உச்சியில் நின்ற இராணு வம் கடுமையாக எதிர்த்தது. காப்பற்ற வெளியில் நின்ற எமது அணி கடும் இழப்புகளைச் சந்தித்தது. சுலக்சி காயமடைந்துவிட்டார். உடனடியாக அவர்களைச் சற்றுப்



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

பின்னகர்த்திய விதுஷா, அணியை மீளமைத்து மறுபடி அனுப்பினார். இனியாளின் LMG காப்புச் சூடு வழங்க, செந்தாவின் RPG அடி காப்பரண் ஒன்றை வலுவிழக்கச் செய்ய, சூட்டுவலுவை அதிகப்படுத்தியவாறு அந்தத் தடையை அணிகள் கடந்தன. மேஜர் சுலக்சி அதிலேயே வீரச்சாவடைய, அடுத்ததாக நுழைந்த பிளாட்டூன் பொறுப்பாளர் மேஜர் ரமணி காயமடைய, அதுவரை நேரமும் கொம்பனி நிலைமை அறிவிப்பாளராக இருந்த கனரக ஆயுதப் பயிற்சியாசிரியர் தமிழ்செல்வி, உள் நுழைந்த அணிகளை வழிநடத்தும் பொறுப்பை ஏற்றார்.

சுலக்ஷிக்கு அடுத்ததாக உள்நுழைந்த மேஜர் கஜாளி னியின் பிளாட்டூன் இ துபுறப் ஒரு குளம்வரை நீண்டிருந்த காவலரண்களைக் கைப்பற்றியவாறு போக, குளத்தின் ஒருபுறத்தே பற்றைகளிடையே அமைக்கப்பட்டிருந்த கண்காணிப்புக் காப்பரண் ஒன்று மிகப் பலமாக எதிர்ப்புக் காட்டிக்கொண்டிருந்தது. குளத்தடி வெட்டையால் நகர்ந்துபோவது இழப்பை ஏற்படுத்தும் என்பதால், நிலை மையை விதுஷாவுக்கு அறிவித்தார் கஜாளினி.

தன்னுடைய உதவியாளர்களுள் ஒருவராக நின்றிருந்த லெப்.கேணல் தணிகைச்செல்வியோடு ஒரு கனரக ஆயு தத்தையும் இணைத்து, கஜாளினிக்கு உதவியணியாக அனுப்பினார் விதுஷா. குளத்தடி வெட்டையைச் சற்று மேவிக் கடந்து மறுபுறமாக வந்த தணிகைச்செல்வி பற்றைகளிடையே மறைந்திருந்த கண்காணிப்புக் காப்ப ரணைத் தாக்க, கஜாளினியும் தாக்க, படையினரின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டு, காப்பரண் எமது கட்டுப்பாட்டுக் குள் வந்தது.

யாழ். மகளிர் தாக்குதலணியின் பொறுப்பாளரான தணிகைச்செல்வி கள அனுபவத்தைப் பெற்றுக்கொள் வதற்காக கேணல் விதுஷாவின் ஒரு உதவியாளராக ஓயாத அலைகள்-01 நடவடிக்கையில் பங்கேற்றிருந்தார்.

padippakam



இதற்கிடையில் தட்டுவன்கொட்டிப் பகுதியில் நிலை கொண்டிருந்த டெய்சியின் கொம்பனி, அஜந்தியுடன் புறப் பட்டு மாலையில் முல்லைத்தீவுக்கு வந்துசேர்ந்தது. அது உடனேயே வெட்டுவாய்க்கால் பாலத்துக்கும் கடற்கரைக் கும் இடைப்பட்ட பாதையால் உள்நுழைந்து, தளத்தின் மையப்பகுதியைப் பாதுகாத்து நின்ற காப்பரண் வரி சையை முற்றுகையிட்டது. கொங்கீறீற் கற்களால் அடுக்கி அமைக்கப்பட்டிருந்த அந்த அரண் '30 ஓட்டைப் பொயின்ற்' என்று பயிற்சிக் காலத்திலிருந்தே எம்மவர்களால் அழைக் கப்பட்டது.

இந்த '30 ஓட்டைப் பொயின்றை' மறுநாள் 19 ஆம் திகதி ஒருபுறம் தமிழ்செல்வியோடு நின்றவர்கள் தாக்க, மறுபுறம் டெய்சியின் கொம்பனி தாக்க, இரண்டாம் நாள் பெருஞ் சண்டை தொடர்ந்தது. முல்லைத்தீவுப் படைத்தளத்தின் வெளியரண்களிலும் உட்பகுதியிலும் கடுமையான பல சண்டைகளில் ஈடுபட்டோம். பலர் காயமடைந்திருந்தனர்.

பலமான எதிர்த் தாக்குதல்களின் மத்தியில் '30 ஓட்டைப் பொயின்றைக்' கைப்பற்றி அதில் நிலை கொண்டவாறு, அன்று ஒருநாளில்மட்டும் மூன்று தடவை கள் தளத்தின் மையத்தினுள் புகுந்து அடித்தன எமதணி கள்.

**"வெட்டுவாய்க்காலால் வந்த அணியும், உள்ளே நின்ற அணியும் சேர்ந்து ஒன்றாகி, இரண்டாம் நாள் மாலையில் தளத்தின் உட்புறக் காப்பரண்களையும், வெளிப்புறக் காப்பரண்களையும் பாதுகாத்ததுடன், இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் தேடி அழித் தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. குறிப்பிட்டளவு இராணுவத்தைச் சுட்டதும், ஆயுதங்களை எடுத்ததும் மட்டுமல்லாது, தளத்தின் வெளிப்புறமும் தேடுதல் நடவடிக்கையைச் செய்தது. நிறையப் பேர்**



படிப்பகம்

padippakam



வீரச்சாவும், காயமும் அடைந்தபோதும், எஞ்சிய மிகுதிப் பேரை வைத்து, தமக்குத் தலைவரால் தரப் பட்ட பணியைச் சிறப்பான முறையில் மாலதி படை யணி செய்துமுடித்தது"

என்றார் மீட்பு நடவடிக்கையை வழிநடத்திய கேணல் பால்ராஜ்.

மூன்றாம் நாளின் முடிவில், சிதறி நின்ற இராணுவத் தினரின் சிறு சிறு எதிர்ப்புகள்கூட அடக்கப்பட்டிருந்தன. மேஜர் தணிகா சண்டை தொடங்கிய முதல் நாளிலேயே தனது பதுங்கிச் சூடுகளை ஆரம்பித்துவிட்டிருந்தார். இரண்டாம் நாள் தனக்குப் பொருத்தமான இடமாக ஒரு காப்பரணைத் தெரிவுசெய்து, அதன்மேல் தனது பதுங்கிச் சுடும் துப்பாக்கியை நிலைப்படுத்தியவர், தப்பியோடுகின்ற, நிலை குலைந்து சிதறுகின்ற இராணுவத்தினரை எண்ணி எண்ணிச் சுட்டுக்கொண்டிருந்தார்.

லெப்.கேணல் ஞானியின் .50 கலிபர் துப்பாக்கிக்கு ஓய்வே இருக்கவில்லை. கப்டன் குறிஞ்சியினதும் அருள் மொழியினதும் 60மி.மீ. எறிகணை செலுத்தும் தொகுதி களின் சுடுகுழல்கள் சிவந்துகிடந்தன. யோகமலரது 81மி.மீ. எறிகணை செலுத்தி, எமது அணிகள் ஆதரவுச் சூடு கேட்ட இடமெங்கும் எறிகணைகளை வீசிக் கொடுத்தது. சுடரவள், ராஜேஸ்/சுதா, சயந்தினி, அம்பிகா ஆகியோ ரால் வழிநடத்தப்பட்ட காவும் குழுக்கள் தம் பணியைச் சரியாகச் செய்திருந்தன. கப்டன் மகாதேவியின் FNMAG தனது உச்சப் பயன்பாட்டை வெளிப்படுத்தியிருந்தது. செல்வரஞ்சினி திசைதிருப்புத் தாக்குதல் ஒன்றை நந்திக் கடலோரம் மிகச் சிறப்பாகச் செய்து முடித்தபின், தன் அணியுடன் உள்ளகத் தாக்குதலிலும் இணைந்திருந்தார். கரும்புலி மேஜர் ஜெயராணி, கரும்புலி மேஜர் சிறீவாணி, 2 ஆம் லெப். கீர்த்தனா, வாணி உட்பட ஒரு குழு சண்டையின்போதான உள்ளக வேவுப் பணியை,



படிப்பகம்

padippakam



தாக்குதல் அணிகளுக்குத் தேவையானபோதெல்லாம் ஓய்வொழிச்சலில்லாமல் செய்திருந்தது.

சிறப்புத் தளபதி கேணல் விதுஷாவுடன் மேஜர் பூமளா, கப்டன் ஜீவினி, கப்டன் நகுலேஸ், நிசாந்தி, கப்டன் கஜாளினி, தூயவள், ரத்தி, அருளினி, மகா, மேஜர் பவளம், கப்டன் சந்திரமதி போன்ற பல பொறுப்பாளர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையில் முல்லைப் போரில் பங்கெடுத்த மாலதி படையணி, தலைவரின் கனவை நனவாக்கிவிட்டிருந்தது.

சண்டை முடிந்தபின்னர், எமது படையணியின் கண்ணிவெடி அணியினர் முல்லைத் தளத்தில் படையினரால் விதைக்கப்பட்ட நிலக்கண்ணிகளை அகற்றும் பணியில் மூன்று மாதங்களுக்கும் கூடுதலாக ஈடுபட்டனர். மீட்பு நடவடிக்கைக்கு முன்பே அவர்களது பணி ஆரம்பமாகி விட்டிருந்தது.

**"முல்லைச்சமரின்போது எமது படையணி உள்நுழையவிருந்த பாதைகளில் கண்ணிவெடிகளை அகற்றினோம். அந்த நடவடிக்கையின்போது கண்ணிவெடி வேலைகளுக்கு லெப்.கேணல் நிர்மா பொறுப்பாக நின்றார். முல்லைத்தீவு மீட்கப்பட்டபின், அந்தக் கண்ணிவயலைத் துப்புரவாக்கும் பணியில் நாம் முழுமையாக ஈடுபட்டோம். வெவ்வேறு பிரிவுகளிலிருந்தும், குறிப்பாக லெப்.கேணல் தணிகைச்செல்வி அவர்களின் யாழ் தாக்குதல் மகளிர் அணியிலிருந்து அனுபவத்தைப் பெறுவதற்காக எங்களுடன் வந்து நின்றவர்களெல்லோருக்கும் பயிற்சியளித்து, கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபடுத்தினோம்"**

என்று தமது பணிபற்றிக் குறிப்பிட்டார் அஸ்வினி அவர்கள்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

தட்டுவன்கொட்டியில் நின்ற டெய்சியின் கொம்பனி அவசர அழைப்பின்பேரில் முல்லைச் சமருக்குப் புறப்பட்டபோது, லெப்.கேணல் தட்சாயினியையும், பமிலாவையும் தட்டுவன்கொட்டியில் விட்டுவிட்டே வந்தது. அவர்களிருவரும் அங்கு நின்ற ஏனைய பிரிவுகளின் மகளிர் தாக்குதலணிகளின் பணிகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்தார்கள். பொன்னியின் செல்வனில் வரும் பெரிய பழுவேட்டையரைப் போலல்லாது, அவரை விட வும் அதிக வடுக்களைச் சுமந்தும் தாக்குதலணியை விட்டு வெளியேற மறுத்த தட்சாயினிக்கும், சண்டைகளைத் தவிர வேறொன்றையும் கனவில்கூடக் கதைக்கத் தெரியாத பமிலாவுக்கும் தாம் இல்லாமல் ஒரு சண்டை நடப்பது உலக மகா கொடுமையாக இருந்தது.

முல்லைத்தீவில் புலிகள் நிகழ்த்திய சாதனைகளையும், தலைவரது திட்டமிடலின் வீரியத்தையும் முழு உலகமும் வானலைகளுடே கேட்டறிந்ததுபோலத்தான் தாமும் அப் போர்பற்றி அறியவேண்டியிருந்தது அவர்களுக்குச் சினத்தை மூட்டியிருந்தது. பூநகரி 4 ஆம் கட்டையில் பறந்த கொகுக் களுக்குக்கூடத் தமது பகுதியில் நின்று புலிகள் செய்த ஆயத்தம் எதற்கானது என்று புரிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தளவு உச்ச இரகசியம்பேணலின் விளைவாக நடந்து முடிந்த வெற்றிச் சண்டையில் எல்லா அணிகளுக்கும் பின்னாலே போயிருந்தாலும், மிகச் சிறப்பாகப் பாரிய பங்களிப்பை ஆற்றிய டெய்சியின் கொம்பனி மறுபடியும் தட்டுவன்கொட்டிக்குப் புறப்பட ஆயத்தமானது.

டெய்சியின் கொம்பனி முல்லைப் போருக்காகச் சென்றிருந்தபோது, தட்டுவன்கொட்டியில் நின்றது குறைந்த எண்ணிக்கையிலான போராளிகளே. அவர்கள்கூட ஏற் கனவே பலமுறை காயமடைந்தவர்களும், காயத்தின் பின்ன ரான ஓய்வு காலத்தை முடிக்காதவர்களுமே. சூரியகதிர்-01 எதிர் நடவடிக்கையில் வயிறு, நெஞ்சுப் பகுதியில் மிகப் பலமான காயமேற்பட்டிருந்ததாலேயே தட்சாயினி

padippakam



சண்டைக்குப் போகாமல் நிற்கநேரிட்டது. திடீரென இப் பகுதியில் படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் எதிர்கொள்ளவேண்டியது எமது பொறுப்பே. எனவேதான் போன பணி முடிந்தவுடன் டெய்சியின் கொம்பனி அவசர மாகத் திரும்ப விரும்பியது. அதுகூட சண்டையில் வீரச் சாவடைந்தவர்கள், காயமடைந்தவர்கள் போக, எவ்வித நிரப்பீடுமின்றி மிகமிகக் குறைந்த எண்ணிக்கையினரா கவே திரும்பி வந்தது. வந்தவர்களின் மனநிலையை வார்த்தைகளில் விளக்குவது சற்றுக் கடினம்தான்.

பூநகரி 4 ஆம் கட்டையில் பாலை மரங்கள் நிழல் தந்திருந்தாலுங்கூட மே, ஜூன் வெயிலில் அந்த மணல் பாலைவனம்போல்தான் இருக்கும். மனித உடலின் ஈரலிப்பை வரட்டி எடுக்கும் முயற்சியில் வெப்பத்தைச் சுமந்த காற்று வீசும். அந்த வெயிலில் கடும் பயிற்சி எடுத்தவர்கள் செய்த அதே சண்டையை, காவலரண் களில் நின்ற தாம் ஏற்கனவே தேர்ந்து பயிற்றுவிக்கப் பட்ட ஒரு சிறப்பு அணிபோலத் திடீரென்று போய்ச் செய்துவிட்டு நிற்கும் புளுகம் இவர்களுக்கு. தமக்கிருந்த புளுகத்தில் முல்லைத்தீவில் தாம் செய்தவற்றையும் செய்யாதவற்றையும் கண்டவற்றையும் காணாதவற்றையும் கூட்டிக் குறைத்துக் 'கதை' விட்டு, தட்சாயினியினதும் பமிலாவினதும் வயிற்றெரிச்சலைக் கிளப்பிக்கொண்டிருந் தார்கள்.

தட்டுவன்கொட்டியில் எமது தாக்குதலணிகள் நின்ற போது தமிழீழ நிதித்துறையினர் தமது மகளிர் பிரிவில் ஒரு பகுதியினரைக் கள நடவடிக்கைக்காகத் தந்திருந்த னர். அவர்களும் எமது படையணியோடு கலந்து முல் லைப் போரில் பங்குபற்றியிருந்தார்கள்.

இப்போது எமது படையணியின் துணைத் தளபதியாக லெப்.கேணல் ரத்தி நியமிக்கப்பட்டார்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

தட்டுவன்கொட்டியில் எல்லாமே வழமைபோல் நடைபெற்றன. ஆனையிறவுத் தளத்தைச் சூழ அரைவட்ட வடிவில் காவல் வரிசை நீண்டது. எமது கொம்பனி யாழ் நெடுஞ்சாலையின் வலது பக்கம் நின்றது. உண்டியல் சந்தியிலிருந்து தட்டுவன்கொட்டிக்குப் போகும் மணற் பாதை எமக்குரிய காவலரண் பகுதியூடே போனது. அந்த மணல் வீதிக்கு வலப்பக்கமாக எமது கடைசிப் பிளாட்டூன் கப்டன் சோபனாவுடன் நின்றது. அவருக்கு வலப்புறம் அணிகள் எதுவுமில்லை.

வேவுப்பணி செய்பவர்களும் வழமைபோலவே தமது முன்னணி அவதானிப்புநிலைகளுக்குப் போய்விட்டிருந் தனர். ஆனால், ஆனையிறவுத் தளம் வழமைக்கு மாறாக இருந்தது. ராங்கிகள் அங்கும் இங்கும் ஓடுவதும் நிற்பது மாக ஏதோ ஆயத்தம் நடந்துகொண்டிருப்பது புரிந்தது.

1996.07.26 காலை ராங்கிகள் இரைந்தன. எல்லோரும் விழிப்புடன் இருந்தோம். இப்போது ராங்கிகள் நகரத் தொடங்கின. நாங்களும் தயாராகினோம். உண்டியல் சந்தி மணல் வீதிக்கும் யாழ் நெடுஞ்சாலைக்குமிடையே தேடுதல் நடவடிக்கை செய்துகொண்டிருந்த கடற்புலிகளின் வேவு அணியினரைநோக்கி, முன்னேறிவந்து பதுங்கியிருந்த இராணுவத்தினர் அடியைத் தொடங்கினர். எல்லோரும் காப்பரணுள், தாக்குவதற்கான தயார்நிலையில். உண்மை வெற்றி (சத்ஜெய)-01 என்று பெயரிடப்பட்ட படையினரின் நடவடிக்கையின்போது அவர்களால் எறிகணை செலுத்திகளும் கனரக ஆயுதங்களும் பாரியளவில் எமக்கெதிராகப் பயன்படுத்தப்பட்டன.

படையினர் இன்னமும் நகரவில்லை. ஆனால் காது செவிடுபடும்படி எறிகணைகள் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. எல்லாத் திசைகளிலுமே ராங்கிகள் இரைவதுபோல் கேட்டது. உண்மையில் படையினர் எமக்குப்

padippakam



போக்குக் காட்டிக்கொண்டிருந்தனர். எப்பக்கம் நகர்வு என்று ஊகிக்க முடியவில்லை.

உண்டியல் சந்தி மணல்வீதிக்கு வலதுபுறம் சற்றுத் தூரத்தே தனித்து கப்டன் சோபனாவின் பிளாட்டூன் நின்ற பகுதியை நோக்கி ராங்கிகளின் இரைச்சல் அதிகமாகியது. வேறிடங்களிலும் அவ்வாறே கேட்டது. நகர்வு பல முனைகளில் நடக்கப்போவதுபோல் தோன்றியது.

ராங்கிகள் பேரிரைச்சலுடன் யாழ்.நெடுஞ்சாலை வழியே நகரமுற்பட்டதை எமது கண்ணிவெடி அணியினர் அவதானித்து விட்டனர்.

**"அவ்வழியால் படையினரின் நகர்வை எதிர்பார்த்து உமையாள்புரப்பாலத்தில் ஏற்கனவே வெடிபொருட்களை இணைத்து வைத்திருந்தோம். ராங்கிகளைக் கண்டதும் அவ்விடத்தில் நின்ற கப்டன் பாஞ்சாலி பாலத்தைத் தகர்த்து விட, படைநகர்வு தடைப்பட்டுப்போனது"**

என்றார் அஸ்வினி.

**"நெடுஞ்சாலையில் நடந்தது ஒரு திசைதிருப்பு நடவடிக்கையே. அதில் நாம் பலமாக இருப்போம் என்று படையினருக்குத் தெரியும். நெடுஞ்சாலையில் நகர்வை மேற்கொண்ட அதேநேரம், நெடுஞ்சாலைக்கு வலதுபுறமாக ஒரு பாரிய நகர்வை மேற்கொண்டு பரந்தன்-விசுவமடு வீதியில் மு.ப. 11.00 மணியளவில் ராங்கிகள் ஏறின"**

என்று நடந்ததை விளக்கினார் கேணல் பானு அவர்கள்.

சோபனாவின் பிளாட்டூன் நின்ற பகுதியை ஊடறுத்தவாறு ராங்கிகள் பரந்தன்-விசுவமடு வீதியை நோக்கி நகரத்



படிப்பகம்

தொடங்கிவிட்டிருந்தன. தம்மை நோக்கி வந்த ராங்கிகளின் மீது தாக்குதலைத் தொடுப்பதற்கான கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்த கப்டன் சோபனாவின் காப்பரணை ஏறி மிதித்தவாறு ராங்கிகள் கடந்தன.

மிருகக் காட்சிச்சாலையில் தும்பிக்கைகளை உயர்த்திய வாறு யானைகள் போவதுபோன்ற தோற்றத்துடன் சுடு குழலை நீட்டியவாறு பக்கவாட்டாக மேவி, பின்புறமாகப் பல ராங்கிகள் தம்மைக் கடந்ததை எண்ணிச் சொன்னார் ஒரு போராளி. உண்மையில் அத்தனை ராங்கிகளையும் அடிப்பதற்குப் போதுமான RPG கள் எங்களிடம் இருக்க வில்லை. ராங்கிகள் எரிகுண்டுகளையும் புகைக்குண்டு களையும் தாராளமாக வீசியதில், சேனைப் பயிர்ச்செய் கைக்காக வெட்டி எரிக்கப்படும் புதுக்காடுபோன்ற தோற்றத் தில் அந்தச் சூழல் தென்பட்டது.

கப்டன் சோபனாவின் அணி நின்ற இடத்துக்கு அப் பால் போராளிகள் எவரும் இல்லாததால், இத்தனை பின்னால் ராங்கிகள் கடந்த பின்னரும் தட்டுவன்கொட்டி யில் அணிகள் நிற்பது புத்திசாலித்தனமானதல்ல. எம்ம வர்கள் பின்னகர்ந்தனர். அன்று நடந்த எதிர் நடவடிக்கை யில் ஆறு பேரை நாங்கள் இழந்திருந்தோம். யாழ் நெடுஞ்சாலையை கரடிப்போக்குச் சந்தியிலிருந்து சிறிது முன்பாக ஊடறுத்தபடி புதிய நிலைகள் அன்றே அமைக் கப்படத்தொடங்கின.

மறுநாளே சுமங்களாவின் கொம்பனியும் சூரியாவின் கொம்பனியும் வந்துசேர, நிலைகள் அமைக்கப்பட்டு எல் லோராலும் பலப்படுத்தப்பட்டது. ராங்கி என்ன, அதற்கு மேலாக எதைப் பகைவர் கொண்டுவந்தாலும் விடுவ தில்லை என்ற மன உறுதியுடன் எமது படையணி அங்கே நிலைகொண்டது. நினைத்ததைச் செய்தும்முடித்தது.

padippakam



ஆதித்தாவுடனான எமது வேவு அணி சுறுசுறுப்பாக இயங்கியது. காப்பரண் வேலைகள் ஒரு பக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்க, தமது பணியையும் அவர்கள் ஆரம்பித்துவிட்டிருந்தார்கள். படையினரின் காப் பரண் வரிசையை அறிவதற்காக முன்னே போய், படை யினரில் முட்டி முட்டி வரைபடத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார்கள்.

அன்று ஆதித்தா போய் இடங்களைப் பார்வையால் அளந்துவிட்டு, எமது காப்பரண் பகுதிக்கு வந்தார். களைப் பாறி, சாப்பிட்டுவிட்டு அவரது அணி மறுபடியும் முன் பகுதியைநோக்கிப் போனது. ஒரு நாளிலேயே இரு தடவை கள் போவதும், நாள் முழுவதும் படையினரின் காலடித் தூரத்திலேயே இருப்பதும் அவர்களுக்குப் புதிதான விடயங் களல்ல. மிகவும் விழிப்பாகவே அவர்கள் போனார்கள்.

ஆனால், அன்று எமது காப்பரண்களை இனங்காண் பதற்காகப் படையினரின் வேவு அணியினரும் எம்மை நோக்கி வந்திருக்கவேண்டும். முன்னே போன ஆதித்தா வின் அணியினருக்குப் பின் பக்கத்திலிருந்து அடி கிடைத் தது. எதற்கும் தயார்நிலையிலே போயிருந்த எமது அணி யினரும் உடனடியாகவே திருப்பித்தாக்கினார்கள். ஆனால், அன்றைய மோதலில் கப்டன் ஆதித்தாவை நாங்கள் இழந்தோம். எனினும், வேவுப் பணி தொடர்ந்தும் நடந்தது.

இன்றைய அடியோடு கிளிநொச்சி விழுந்துவிடும் என்பது போன்ற தோரணையில் இரைந்தவாறு 1996.08.04 அன்று ராங்கிகள் எம்மைநோக்கிப் புறப்பட்டன. யாழ் நெடுஞ்சாலையில் முன்னுக்கு வருவதும், பின்னுக்கு நகரு வதுமாகப் பாரிய இரைச்சலை ஏற்படுத்தி, எம்மை உளவி யல்ரீதியாக மிரட்ட முயன்றுகொண்டிருந்தனர் படையினர். இந்த ராங்கி விளையாட்டுக்களைச் சூரியகதிர்-02 இலேயே பார்த்துப் புளித்துப்போன நாங்கள், மிகவும் விழிப்போடு அவதானித்துக்கொண்டிருந்தோம்.



படிப்பகம்

padippakam



அன்று நடவடிக்கை தொடங்க முன்னர், பிளாட்டூன் ஒன்றின் பொறுப்பாளரான கப்டன் நாயகி படையினரை அவதானிப்பதற்காக வேவு அணியினருடன் முன்னுக்குப் போயிருந்தார். அவர் சுமங்களாவின் கொம்பனிக்குரியவர். சுமங்களாவின் கொம்பனி, கரடிப்போக்கருகே யாழ் நெடுஞ்சாலையை ஊடறுத்தவாறு முரசுமோட்டைப் பகுதியில் பரந்தன்-விசுவமடு வீதிவரை தன்நிலைகளை அமைத்து நின்றது. பரந்தன்-விசுவமடு வீதியிலிருந்து ஊரியான் நோக்கிய திசையில் லெப். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நிலைகொண்டிருந்தது.

முன்னேபோன நாயகி, முன்னேறிவந்து நிலையெடுத்திருந்த இராணுவத்தினரைக் கண்டுவிட்டுச் சுடத்தொடங்கினார். சண்டை ஆரம்பித்துவிட்டது. சுட்டவாறு தமது காப்பரண்களைநோக்கி எல்லோரும் ஓடிவரத்தொடங்கினார்கள். ஒரு ஒழுங்கையைக் கடந்து இவர்கள் ஓடிவர, அந்த ஒழுங்கையில் ஏற்கனவே நின்றுகொண்டிருந்த ராங்கியின் சுடுகுழல் இவர்களைக் குறிபார்த்தது. நாயகி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். ஏனையவர்கள் காயங்களுடனும் காயமின்றியும் காப்பரண்களுக்கு வந்துசேர்ந்தனர். ராங்கிகள் தாக்கியவாறு முன்னேறத்தொடங்கின. எங்களுடைய காப்பரண்கள் யாவும் விதுஷாவின் ஆலோசனைப்படி, தலைவர் முன்பொருமுறை சொன்னது போல் 'சமுராய்' அரண்களின் அமைப்பில் ஒளிவு-மறைவு அரண்களாகவே இருந்தன. நாம் வேலிமறைவில் காப்பரண்களை அமைத்திருக்கக்கூடும் என்ற எண்ணத்தில் படையினரின் ராங்கிகள் அடித்த அடியில் எமக்குப் பின்னாலிருந்த வேலியோரப் பூவரசு மரங்கள் தூக்கியெறியப்பட்டன. நாம் அரண்களுள் பாதுகாப்பாக இருந்து சண்டையிட்டோம்.

லெப். ஆரணி யாழ் நெடுஞ்சாலையில் தான் நிலைப்படுத்தியிருந்த கிளைமோரை ராங்கி ஒன்றை நெருங்கவிட்டு வெடிக்கவைத்தார். அடி நூலிழையில் சறுக்கியது.



படிப்பகம்

padippakam



ஆனால், எதிர்பாராத அடியில் பதட்டமடைந்த ராங்கி, பூவரசு வேலிகளை முறித்துக்கொண்டு வயற்காணிகளுக் கிடையே இறங்கியது.

வேவுக்காரர்களுடன் இடையிடையே முன்பகுதிக்குப் போய்வருகின்ற சீத்தா, எமது நிலைகளுக்குச் சற்று முன்னேயிருந்த உலர்ந்த அருவி ஒன்றைக் கவனித்திருந் தார். சண்டை தொடங்கினால் படையினரின் நகர்வு நிச்சய மாக அதன்வழியே நடக்கும் என்பது அவரின் கணிப்பு. எனவே அருவிக் கரையோடு ஒரு கிளைமோரை முன்ன ரேயே நிலைப்படுத்தி வைத்திருந்தார்.

சண்டை ஆரம்பமாகி இப்போது நீண்ட நேரமாகிவிட் டது. படையினரால் ஏவப்பட்ட எரிகுண்டுகளால் எமது காப்பரண்களுக்கு முன்னிருந்த மரம், செடி, கொடி, புற்கள் எல்லாமே எரியத்தொடங்க, எமக்கு வேலை வைக்காமல் தானாகவே கிளைமோர் வெடிக்க, காயத்துடனும் காயத் துக்குக் கட்டுப்போட்டபடியும் இருந்த படையினர் கொல் லப்பட்டனர். சண்டை முடிந்தபின்னர் வேவு அணிகளுடன் அவ்விடத்துக்குப் போய்ப்பார்த்த சீத்தா நடந்தவற்றை உறுதிப்படுத்திக்கொண்டார்.

நெடுஞ்சாலையால் முன்னேறிவந்த T85 ராங்கி ஒன்று கப்டன் தயாவதியின் RPG தாக்குதலில் இணைப்புச் சங்கிலி அறுந்து கைவிடப்பட்டது. இப்போது சண்டை பரவலாகத் தொடங்கிவிட்டிருந்தது. முன்னேற முயல்வதும் அடி விழுந் ததும் விலகி, மறுபடி முன்னேற முயல்வதுமாக ராங்கிகள் இரைந்துகொண்டேயிருந்தன.

தொடர்ந்து நடந்த சண்டையில் நெடுஞ்சாலைக்கு வலதுபுறம் காணிகளுக்கிடையே இறங்கிய ராங்கிகளில் ஒரு APC (துருப்புக்காவி) எமது காப்பரண்களைக் கடந்து பின்னுக்கு வந்துவிட்டது. ராங்கியை அடிப்பதற்காக லெப். கேணல் சேகர் (பின்னாட்களில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்



படிப்பகம்

படையணியின் சிறப்புத் தளபதி) சற்றுத்தள்ளி நின்ற கப்டன் கலையரசியின் RPG இனைக் கூட்டிக்கொண்டு ஓடிவந்தார். APC இப்போது பின்னகரத்தொடங்கியது. வந்த பாதையிலேயே திரும்பிய APC மிக வேகமாக எமது காவலரண்களைக் கடந்து முன்புறமாக 50மீ. போவ தற்குள்ளேயே கலையரசியின் குறிதவறாத RPG அடியால் எரியத் தொடங்கியது. உள்ளிருந்த படையினர் தீப்பிழம்பு களாக வெளியே குதித்தனர். அந்த APC அடிபட்டிருக்கா விட்டால், பின்னால் இன்னும் நாலைந்து APC கள் அந்த வழியாலேயே உட்புகுந்து துருப்புகளை எமக்குப் பின்புற மாக இறக்கி, சண்டையின் போக்கையே மாற்றியிருக் கலாம். சண்டை முடிந்தபின் முன்னேபோன எமது வேவு அணியினர் ராங்கியிலிருந்த படையினரின் ஆயுதங்கள் பயன்பாட்டுக்குதவாத வகையில் உருக்குலைந்திருந்ததால் கைவிட்டு வந்தனர்.

இரண்டாவது நாளும் தொடர்ந்த ராங்கித் தாக்குதலில் கப்டன் கலையரசி கிளிநொச்சி மண்ணில் வித்தானர். யாழ் நெடுஞ்சாலைக்கு வலது புறமும் இடது புறமுமாக மாறி மாறி மூன்று நாட்களாக மோதியும் முன்னேற முடியாதளவுக்குப் படையினரைத் தடுத்துநிறுத்துவதில் நாங்கள் முழுமூச்சோடு செயற்பட்டிருந்தோம்.

வாய் வீரமடித்துக்கொண்டிருந்த சிங்களப் படைத் தலைமைக்கும் அரச ஊதுகுழல்களுக்கும் கிளிநொச்சிக் களமுனையில் விடுதலைப் புலிகள் காட்டிய இராணுவ பலம், பெரும் அடியாகவே இருந்தது. இதன்பின்னர் இன் னொரு நடவடிக்கைக்குப் படையினரைத் தயார்ப்படுத்த சிறீலங்கா அரசுக்கு ஒன்றரை மாதகாலம் எடுத்தது. யாழ்ப்பாணம்-தென்மராட்சியில் சூரியகதிர்-02 நடவடிக்கை யின்போது எம்மை முற்றாகத் தவிர்த்தே முன்னேறியது போன்ற திட்டத்தை, இப்போது படைத்தலைமை சற்று மெருகூட்டித் தயாரித்திருந்தது.

padippakam



நெடுஞ்சாலையின் வலதுபுறம் முரசுமோட்டைப் பகுதிநோக்கி மிகத் தாராளமாக வெடிமருந்து களை அள்ளி விசிறியபடி முன்னேறிய படையினர் புலியணிகளின் கடுமையான எதிர் நடவடிக்கையால் நகரமுடியாமல் நின்றுகொண்டனர்.

இப்போது நெடுஞ்சாலையின் இடதுபுறம் குஞ்சுப்பரந் தனையெல்லாம் சுற்றியடித்து, நெடுஞ்சாலையும் நாங்களும் எங்கோ நிற்க, படையினர் எங்கோ நகர்ந்துகொண்டிருந்த னர். பெரிய சுற்றுப்பாதை ஒன்றை எடுத்து உருத்திரபுரத்தில் ஏறிய படையினர் 10 ஆம் வாய்க்காலைக் கடந்து வந்து, உருத்திரபுரம் புனித பற்றிமா கல்லூரியில் நிலைகொண்ட னர்.

இப்போதும் எமது காப்பரண் தொகுதியிலிருந்து நீண்ட தொலைவிலேயே இராணுவம் நிலைகொண்டிருந்தது. அவர்கள் நிலைகொண்ட பாடசாலை அமைந்திருந்த இடம் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து உருத்திரபுரம் போகும் பாதையிலாகும்.

புதிய சமர்முனை கிளிநொச்சியில் திறக்கப்பட்டபோது சூரியாவின் கொம்பனி கிளிநொச்சியின் வேறொரு இடத்தில் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. சண்டை தொடங்கியவுடன் அது சமர்முனைக்கு விரைந்தது.

தாக்குதலுக்கென வந்திருந்த ஏனைய அணிகளுடன் எமது அணிகள் பற்றிமா கல்லூரி இராணுவத்தினர்மீது பாயத்தொடங்க, பெருஞ்சண்டை மூண்டது. படைத் தரப்போ குண்டுவீச்சு விமானங்கள், உலங்குவானூர்திகள் உட்பட தமது முழுப் பலத்தையும் எமக்கு எதிராகத் திருப்பிவிட்டிருக்க, ஊடறுத்து உட்புகுந்த எமது அணிகள் துணிகரத் தாக்குதலை நடத்தின. இரண்டு, மூன்று தடவைகளுக்கு மேல் ஊடுருவி, ஊடுருவி எமதணிகள் ஏனையஅணிகளுடன் இணைந்து நடத்திய தாக்குதலில்



படிப்பகம்

மேஜர் சுமங்களா, மேஜர் வித்தியா, மேஜர் கஜாளினி போன்ற செயற்றிறன்மிக்க போராளிகள் சிலரை இழந் தோம். எனினும் படைத்தரப்புக்குப் பலத்த இழப்பை ஏற்படுத்திவிட்டிருந்தோம்.

குள்ளமான தோற்றமும் சிரித்த முகமும்கொண்ட மேஜர் கஜாளினி முல்லைத்தீவுச் சண்டையிலே கடற் கரைப் பாதையால் அசோகாவுடன் உள்நுழைந்திருந்தார். ஓத்திகையில் செய்ததுபோன்றே சண்டையிலும் உள் நுழைந்தவுடனேயே உள்ளே ஒரு பற்றை மறைப்பிலிருந்த படையினரின் அவதானிப்புநிலையொன்றைக் கைப்பற்றி, அதிலே நின்று தன்னைத் தொடர்பெடுத்ததாக விதுஷா அவர்கள் கஜாளினியை நினைவுகூர்ந்தார்.

1996.09.22 இல் தொடங்கிய உண்மைவெற்றி-03 எதிர்ச் சண்டையின்முடிவில் எமது படையணி கிளிநொச்சியில் வேவு அணிகளைமட்டும் நிறுத்திவிட்டு, நகரைவிட்டு வெளியேறியது. சண்டையின்முடிவில் கரடிப்போக்குப் பாலம் படையினரின் விமானக் குண்டுவீச்சால் தகர்க்கப் பட்டது. மாலதி படையணியின் வேவு அணியினர் பொருத்தமான இடங்களில் அவதானிப்புநிலைகளை ஏற் படுத்தி, படையினரின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் கண்காணித்தவாறு இருந்தனர். படைத்தரப்போ நெடுஞ் சாலையிலிருந்த கிளி/மத்திய கல்லூரியைத் தளமாக்கிய வாறு, மேலும் நிலம்விழுங்க வேளைபார்த்திருந்தது.

எனினும், இடையிடையே எமக்கு அவசர அழைப்பு வரும். படையினர் முன்னகரலாம் என்று எதிர்பார்க்கப் பட்ட வேளைகளிலெல்லாம் அந்த அழைப்பு விடுக்கப்பட் டது.

கிளிநொச்சியைவிட்டு நாங்கள் வெளியேறிய பின்பு, குறிப்பிட்டகாலம் சிறுத்தை மகளிர் படையணியுடன் எங்கள் படையணியைச் சேர்ந்த ஜக்குலின், செல்வி ஆகியோர் நின்றிருந்தனர்.

padippakam



*பின்னர், அழைக்கப்பட்ட வேளைகளிலெல்லாம், ஒரு முறை சூரியாவின் கொம்பனியும் பிறிதொருமுறை அஜந்தியின் கொம்பனியும் நெடுஞ்சாலையைக் குறுக்கறுத்து நிலை களமைத்து, படைவரவைக் கண்காணித்துக்கொண்டிருந்தன.*

*பாதை திறக்கப்படுவதுபற்றிய கருத்தை சூரியகதிர் - 01, 02, உண்மைவெற்றி-01, 02, 03 என்று தொடர் நடவடிக்கைகளைச் செய்து, பாதையை மூடி வைத்தவர்களிடம் முதலில் கேளுங்கள். அல்லது மூடும்படி கட்டளையிட்ட படைத்தலைமைகளிடம் கேளுங்கள்.*

*எங்களிடம் வேண்டாம். எப்போதுமே நாங்கள், மூடப்பட்ட பாதைகளைத் திறப்பதற்கே முயன்றுகொண்டிருந்தோம்.*

*"உண்மை வெற்றி-03 இன் முடிவில் பூநகரிப் படைத்தளத்தைப் படையினர் கைவிட்டுச் சென்றனர். போகும்போது ஏராளம் சூழ்ச்சிப்பொறிகளை அமைத்துவிட்டே போயிருந்தனர். அவை யாவற்றையும் நிர்மாவின் பொறுப்பில் எமது அணிகளே அகற்றி முடித்தன. வேலையை விரைவுபடுத்துவதற்காகக் கடற்புலிகள் மகளிர் படையணியிலிருந்தும் எம்மோடு வேலை செய்யப் போராளிகள் தரப்பட்டிருந்தனர்"*

*என்று, சண்டை ஓய்ந்த களங்களிலும் ஓயாமல் தொடர்ந்த எமது படையணியின் வேலைகளில் ஒன்றை அஸ்வினி குறிப்பிட்டார்.*



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

*60மி.மீ. எறிகணை செலுத்திகள் நான்குடன் ஆரம்ப மான எமது படையணியின் எறிகணை செலுத்தும் அணி களின் வளர்ச்சிப்போக்குபற்றி, தற்போது லெப்.கேணல் குட்டிசிறீ மோட்டார் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் பவநிதி கூறுகின்றார்.*

*"சூரியகதிர்-02 எதிர்நடவடிக்கை, ஓயாத அலைகள்-01 முல்லை மீட்புச் சமர் என்பவற்றில் எமது 60மி.மீ. எறிகணை செலுத்திகள் நகர்ந்து நகர்ந்தே சண்டை யிடவேண்டியிருந்தன. அன்று எங்களிடமிருந்த பல மான ஆயுதமாக இவையே இருந்தமையால், இவற்றை வைத்துக்கொண்டே அகன்ற நிலப்பரப்புகளைப் பாது காக்கவேண்டியிருந்தது.*

*சண்டைக் களங்கள் வன்னிக்கு நகர்ந்ததன்பின், 82மி.மீ. 120மி.மீ. எறிகணை செலுத்திகளின் பயன் பாட்டுடன் எமது வளர்ச்சி உயர்ந்தது. நான் மாலதி படையணியில் இருந்தபோது 82மி.மீ. எறிகணை செலுத்திகள் பல எம்மிடமிருந்தன. எமது படையணி யின் எறிகணை செலுத்திகள் எல்லாச் சண்டைகளி லும் எல்லாப் படையணிகளுடனும் பணியாற்றியிருக் கின்றன. பெயர்தான் மாலதி படையணி என்றிருக் குமேதவிர, நாம் எமது தாக்குதலணிகள் இல்லாத வேறு களமுனைகளில்கூட நின்றிருக்கின்றோம்.*

*எறிகணை செலுத்தும் அணியினரே முன்னைய சண்டைக் களங்களில் எறிகணை வீச்சுக்கு வழுத்திருத்தம் சொல்வோராகவும் செயற்பட்டதால், முன்னணி அவதானிப்புப் பணியை இலகுவாக்கினர். வழுத்திருத் துனர்களாகப் பணியாற்றிய மேஜர் தமிழ்நிலா, மேஜர் இளம்பிறை ஆகியோர் மிகச் சிறப்பாகச் செயற்பட்ட னர். எறிகணை செலுத்தி ஒன்றின் பொறுப்பாளராக இருந்த தமிழ்நிலா, தாக்குதலணிகளை ஒருங் கிணைத்து மிக வேகமாகத் தாக்குதல் செய்யக் கூடியவர்"*

padippakam



என்று, மாலதி படையணியில் தான் இருந்த ஆரம்ப நாட்களை நினைவுகூர்ந்தார் பவநிதி.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணி கள நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதெல்லாம், விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு தனது உறுப்பினர்களைத் தேவையான அளவு இணைத்தே அனுப்பும். மகளிர் அமைப்பு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும், எப்போதும் மகளிர் படையணியின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழேயே செயற்பட்டுவந்தது. விடுதலைப் புலிகள் மகளிர் படையணி தன்னை மாலதி படையணியாக வடிவமைத்துக் கொண்ட பின்னரும் இது தொடர்ந்தது.

சூரியகதிர்-01 எதிர் நடவடிக்கைக்காகவும் அதற்கும் முன்னால் இடிமுழக்கம் எதிர் நடவடிக்கைக்காகவும் குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் தமது அரசியற் பணிகளைத் தமக்கு அடுத்தவர்களிடம் ஒப்படைத்துவிட்டுக் களத்துக்கு வந்திருந்தனர். தென்மராட்சிக்கோட்ட அரசியற் பொறுப்பாளர் மேஜர் கஜாளினி, முல்லை மாவட்டப் பொறுப்பாளர் மேஜர் ரமணி, கல்விக்குழுவைச் சேர்ந்த லெப். கேணல் நிஸ்மியா என்று பலர் இப்படி வந்திருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் உண்மை வெற்றி-01, 02, 03 எதிர் நடவடிக்கைகள் முடிவடையும்வரை மாலதி படையணியோடே நின்றார்கள்.

மாலதி படையணியின் நிர்வாகக் கட்டமைப்பின்கீழ் அரசியற் பணி புரிந்துகொண்டிருந்த பலநூறு பெண் போராளிகள் கிளிநொச்சிச் சண்டையின் பின்னர் நிரந்தரமாக அரசியற்றுறைக்கெனப் பிரிவுமாற்றம் செய்துவிடப்பட்டனர். நிஸ்மியா அரசியற்றுறை மகளிர் பிரிவைப் பொறுப்பேற்றார்.

அதுவரை அரசியற்றுறை மகளிர் பிரிவின் பொறுப்பாளராக இருந்த லெப்.கேணல் தணிகைச்செல்வி, யாழ்



படிப்பகம்

padippakam



மாவட்டத்திலே பணியாற்றிய அனுபவம்மிக்க போராளி கள் சிலரைத் தேர்ந்தெடுத்து, யாழ் தாக்குதலணியை உரு வாக்கினார். யாழ் தாக்குதலணியின் மகளிர் பிரிவினருக்கு, மீட்கப்பட்ட முல்லைத்தீவின் நெருக்கமான கட்டிடப் பகுதி களிடையே எமது படையணியின் பயிற்சியாசிரியர்களான மேஜர் சிவானந்தியும் மேஜர் வானதியும் மிகக் கடினமான பயிற்சிகளை வழங்கி, திடீர்த் தாக்குதல்களுக்கும் முறி யடிப்புகளுக்கும் அவர்களைத் தயார்ப்படுத்திக் கொண்டி ருந்தனர்.

சிறீலங்கா அரசு புரளி கிளப்பிக்கொண்டிருந்தது போன்று 'மிச்சமிருந்த புலிகளின் கடைசி மூச்சாக' கிளி நொச்சியில் எதிர் நடவடிக்கையைச் செய்தபின்னர், இனி என்ன செய்வது என்று தலையில் கைவைத்தவாறு நாம் உட்கார்ந்திருக்கவில்லை. அப்படி உட்கார்ந்திருப்பது எமது தலைவரின் இயல்பிலேயே இல்லாத விடயம்.

"முயன்றால், பாதைகள் எப்போதும். திறக்கும் இல்லையேல் அவைகள் மூடியே கிடக்கும்"

என்று அடிக்கடி எங்களுக்குச் சொல்கின்ற தலைவர் அவர்களின் தூரநோக்குப் பார்வையில் அமைந்த திட்டங் களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பெரும் எண்ணிக் கையான போராளிகளைப் படைத்துறை அதிகாரிகள், தொழினுட்பப் பிரிவு, ஆரம்ப இராணுவப் பயிற்சிக் கல் லூரி, தலைமைச் செயலகம், நிதித்துறை ஆகிய பிரிவு கள் தம்மை மீளமைக்கவும் புதிய வேலைகளை ஆரம்பிக் கவுமென மாலதி படையணி வழங்கியிருந்தது. அந்தப் பிரிவுகளின் வேலைகளின் முக்கியத்துவம்கருதி, எமது பொறுப்பாளர்களும் அனுப்பப்பட்டனர்.

1996 ஆம் ஆண்டில் இன்னொரு முக்கியத்துவம் என்ன வென்றால், மகளிர் படையணியின் கரும்புலிகள் அணியின் தோற்றம்.



படிப்பகம்

padippakam



நீண்ட காலமாகக் கள நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பெண் போராளிகளில் பலர் தரைக் கரும்புலி அணி ஒன்றின் தேவையை நன்குணர்ந்திருந்தனர். நெருக்கடிமிகுந்த சண்டைக் களங்களில் பலர் நின்று செய்யும் அழிவை, இரு கரும்புலிகள் இலகுவாகச் செய்து முடிப்பார்கள் என்று, அவர்களின் பட்டறிவு அவர்களுக்கு உணர்த்தியிருந்தது. கரும்புலி கப்டன் மில்லர் 1987 இல் நெல்லியடியில் நிலைகொண்டிருந்த சிறீலங்காப் படைத் தளத்தின்மேல் பேரிடியாக முழங்கியபின், 1990 இல் மாங்குளம் சிறீலங்காப் படைத்தளத் தகர்ப்பில் கரும்புலி லெப்.கேணல் போர்க் பெரும் தடைநீக்கியாகப் போய் காற்றோடு கலந்திருந்தார். அடுத்தவருடமே மன்னார்-சிலாவத்துறை படைத்தளம்மீதான தாக்குதலில் கரும்புலி மேஜர் டாம்போ காவியம் படைத்திருந்தார். இரண்டு வருட இடைவெளியின் பின்னர் பலாலிப் பெருந்தளத் துள்ளே புகுந்த தரைக் கரும்புலிகள் மிகப்பெரிய அழிவு நடவடிக்கையைச் செய்திருந்தனர்.

கடலிலே கடற்கரும்புலிகளின் பணி விரிவடைந்து கொண்டேபோனது. மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் இல் தொடங்கி கப்டன் அங்கயற் கண்ணி, லெப்.கேணல் நளாயினி, மேஜர் மங்கை என்று அவர்களின் வரலாறு நீண்டு சென்றது. யாழ்ப்பாணத்துக் கும் வன்னிப் பெருநிலப்பரப்புக்குமான போக்குவரவுப் பாதையாகக் கிளாலிக் கடல்நீரேரி பயன்படுத்தப்பட்ட போது, கடற்கரும்புலிகளின் தேவை மிக அதிகரித்திருந் தது. கிளாலிப் படகுச்சேவை கடற்கரும்புலிகளின் பலத்தி லேயே நடத்தப்பட்டது என்று கூறுவதில் மிகை ஏதும் இல்லை.

கடற்கரும்புலிகளான லெப்.கேணல் நளாயினி, மேஜர் மங்கை, மேஜர் மதுஷா, மேஜர் றோசா, போன்றவர்கள் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியிலிருந்து கடற்புலி கள் மகளிர் படையணிக்குப் போனவர்கள். தொடர்ந்தும்



படிப்பகம்

*தரை நடவடிக்கைகளில் ஈடுபட்ட மகளிர் படையணியினர் கரும்புலி நடவடிக்கையில் தமக்கிருந்த பெருவிருப்பை, தலைவர் அவர்களுக்குக் கடிதம்மூலம் தெரியப்படுத்திக் கொண்டேயிருந்தனர். இவர்களுடைய வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தேவை ஏற்படும்போது பணிக்கு அழைப்பதாகவும் தலைவரிடமிருந்து இவர்களுக்குப் பதில் கிடைத்திருந்தது. காலத்துக்குக் காலம் கரும்புலிக்கான தமது விருப்பைச் சுமந்த கடிதங்கள் படையணியிலிருந்து தலைவருக்குப் போய்க்கொண்டேயிருந்தன. சமர்க்களங்கள் தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்ததால், பலர் தமது கரும்புலிக் கனவு நிறைவேறாமலேயே துயில் நிலங்களில் உறங்கினார்கள்.*

*1996 இன் முற்பகுதி. இன்னும் சூரியகதிர்-02 நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. தலைவரிடமிருந்து ஒரு செய்தியைச் சுமந்து வந்தார் படையணியின் சிறப்புத் தளபதி விதுஷா. கரும்புலி ஆவதற்கான வேண்டுகோள் கடிதத்தை எழுதிவிட்டுக் காத்திருந்தவர்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி, அவர்களுக்குரிய தலைவரின் செய்தியைச் சொன்னார். கரும்புலிகளாகப் போகின்றவர்கள் வேவு நடவடிக்கைகளில் தேர்ச்சி பெறவேண்டிய தேவை இருப்பதால், அனைவரும் வேவுப் பணியில் ஈடுபடவேண்டும் என்பதே அது.*

*மைதிலியின் தலைமையிலான வேவு அணியினரோடு ஜெயராணி, கப்டன் இந்து, மேஜர் சிறீவாணி முதலான கரும்புலிகள் இணைந்து பணியில் ஈடுபட்டது இதன் பின்னர்தான். இவர்கள் சூரியகதிர்-02 க்கு முன்னரான போரற்ற நாட்களில் தொடங்கிய பணியை ஆனையிறவு-தட்டுவன்கொட்டிப் பகுதி, முல்லைப் போர் நடவடிக்கையின்போதான உள்ளக வேவு, உண்மை வெற்றி-01, 02, 03 இன் போதான வேவு நடவடிக்கை என்று கடினமான, திடீர் திடீரெனத் திருப்பங்கள் நிகழுகின்ற, அபாயகரமான முனைகளிலெல்லாம் திறம்படச் செயலாற்றியிருந்தனர்.*

padippakam



இப்போது மாலதி படையணியின் கொம்பனிகளெல்லாம் அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கான பயிற்சியைத் தொடருவதற்காக முல்லை மாவட்டத்துக்குப் போய்விட்டிருந்தன. வேவு அணியினரோடு நின்ற கரும்புலிகள், தமக்குரிய பயிற்சிகளைப் பெற்று நடவடிக்கைகளைச் செய்யும் விருப்பத்தைத் தலைவருக்கு மறுபடி தெரியப்படுத்தினர்.

'காத்திருங்கள்' என்று பதில் வந்தது. எனவே கரும்புலிகளாகப் போகவிருந்தவர்களைக் கள நடவடிக்கைகளிலிருந்து வெளியே எடுத்த விதுஷா, அந்நேரம் கற்சிலைமடுவில் எமக்கிருந்த நிர்வாகத் தளமொன்றில் அவர்களை விட்டிருந்தார்.

மணித்துளிகள் நாட்களாயின. தமக்கான அழைப்பு இன்று வரும், நாளை வரும் என்று காத்திருக்கத்தொடங்கினார்கள். அழைப்பைக் காணோம். நாட்கள் வாரங்களாயின. அழைப்போ வரவில்லை.

எமது அமைப்பில் இதற்கு முன்னரும் இரு தடவைகள் பெண் கரும்புலிகளின் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டபோதும், ஆளணி குறைவாக இருந்த காரணத்தால், வேறு வேறு வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனவே இம்முறை இவர்களின் ஆளணி குறையக்கூடாது என்பதற்காகவே சூரியக்கதிர்-2 ஆரம்பித்த நாட்களிலிருந்தே இவர்களை எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுத்தாமல்விட்டிருந்தார் விதுஷா. வேவு அனுபவம் குறைந்த ஓரிருவர்தான் முல்லைத்தீவுக்கான வேவு நடவடிக்கைகளில் பங்கேற்றிருந்தனர். ஏனையவர்கள் நீண்டகாலமாகவே காத்திருந்தார்கள்.

என்ன இது, எங்களை அவர் மறந்துவிட்டாரோ என்றெண்ணியவர்களுக்குச் சலிப்பு ஏற்பட்டது. கள நடவடிக்கைகளுமில்லாமல், கரும்புலிகளுக்கான பயிற்சிகளும்



படிப்பகம்

padippakam



இல்லாமல் நிர்வாகத் தளத்திலே வேலைகள் எதுவுமின்றி எத்தனை நாட்களுக்கிருப்பது? விதுஷாவோ தனது கொம் பணிகள் முல்லைத்தீவில் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்ததால், அவர்களுடனேயே தன் பெரும் பொழுதைக் கழித்தார். அவரைச் சந்திப்பதும் அரிதாகவே இருந்தது. அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

"போராட்டத்தில் இணைந்த நாட்களிலிருந்து எங் களோடு ஒன்றாக இருந்தவர்கள் பிரியப்போவது ஒரு உன்னதமான இலட்சியத்துக்காகவே எனினும், பிரி வுக் கவலை எங்களுக்கிருந்தது. அவர்கள் எங்கள் படையணியில் இருக்கக்கூடிய கடைசிநாட்கள் அவை என்பதை உணர்ந்ததால், எங்களால் இயலக்கூடியளவு உயர்வாக விருந்தோம்பிக் கொண்டிருந்தோம். அன்று காலை தேநீரோடு அவர்களிடம் போனவர் திரும்பி வந்தார். வேண்டாமென அவர்கள் திருப்பியனுப்பிய தாக அவர் என்னிடம் கூறினார்"

என்று, தற்போது எமது பயிற்சியாசிரியர்கள் அணியின் பொறுப்பாளரான சுகி அன்றையநாளை நினைவுபடுத்தினார்.

தேநீர் குடிக்கும்படி இவர்கள் கேட்டுப்பார்த்தார்கள். அந்தத் தளத்தில் நின்றவர்களெல்லோருமே எமது படை யணியின் நிர்வாகப் பொறுப்பாளர்கள். அவர்களுக்காகத் தலைவரிடம் மறுபடியும் கதைக்கும்படி விதுஷாவிடம் தாம் கேட்பதாக வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். ஒன் றுக்குமே அவர்கள் அசைந்தபாடில்லை.

காலை உணவையும் எடுத்துக்கொள்ளவில்லை. அவர் கள் சாப்பிடவில்லையென்று அங்கேநின்ற எவரும் சாப் பிடவில்லை. ஒன்றாகப் பயிற்சியெடுத்தவர்கள், சண்டை களில் நின்றவர்கள், காயப்பட்டவர்கள், எல்லாவற்றையும் விட, கரும்புலிகளாகப் போகப்போகின்றவர்கள் இவர்கள் சாப்பிடாதிருக்க எவர்தான் சாப்பிடுவார்?



படிப்பகம்

padippakam



இரவுவரை இவர்கள் உண்ணாவிரதமிருந்த தகவலை அறிந்த விதுஷா, கொம்பனிகளின் பயிற்சிகளைப் பார்த்து விட்டு, இரவோடிரவாகக் கற்சிலைமடுவுக்கு வந்துசேர்ந்தார். தலைவரிடம் கேட்டு இவர்களை விரைவாக அனுப்புவதா கக் கூறிச் சமாதானப்படுத்தி, ஒருவாறு சாப்பிடவைத்தார். பின்னர் மீண்டும் இவர்களது உறுதித்தன்மையைத் தலை வருக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

புயல்களின் மையம், புயல்களைச் சந்திப்பதற்காக வருகைதந்தது. அன்று அவரோடு கூடவே வந்திருந்த கேணல் கடாபி,

**“கரும்புலி அணியில் இணைவதற்கு முப்பதுபேர் நிற்கின்றார்கள் என்று தலைவரிடம் விதுஷா மூன்று மாதங்களுக்கு முன்னரே சொல்லியிருந்தார். அவர் களைச் சந்திப்பதாகத் தலைவர் உடனேயே சொல்லி யிருந்த போதும், வேலைகளால் சந்திப்புத் தாமத மாகி விட்டிருந்தது.**

**அன்று அவர்களைச் சந்திப்பதற்காக அவரோடு நானும் போயிருந்தேன். உடனேயே அவர்களைப் பயிற்சிக்கு எடுப்பதாக அவர்களிடம் அவர் உறுதி கூறினார். சந்தித்த சில நாட்களுக்குள்ளேயே அவர் களை நாம் எடுத்து விட்டோம்”**

என்று கூறினார்.

அங்கு கூடியிருந்த தேசப் புயல்களோடு கலந்துரையா டிய தலைவர், அந்தக் கரும்புலிகளின் பொறுப்பாளராக, சூரியக்கதிர்-02 எதிர் நடவடிக்கையில் பலத்த காய மடைந்து மீண்டுவந்த மைதிலியை நியமித்தார். பெண் கரும்புலிகளுக்கான நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்து வதற்குரிய போராளிகளைப் படையணியிலிருந்து தெரிவு செய்து மைதிலியோடு விட்ட கேணல் விதுஷா, எல் லோரையும் வழியனுப்பிவைத்தார்.



படிப்பகம்

கரும்புலிகள் ஆவதற்காக உண்ணாவிரதமிருந்த கரும்புலிகள், கரும்புலிகளான களிப்போடு போனார்கள்.

"தொடர்ந்து நடந்த சண்டைகளிலே காயமடைந்தவர்களும் இருக்கின்றார்கள் என்று எனக்குத் தெரியும். எனவே முதற்தடவையிலேயே தேர்வுப் பயிற்சியிலே தேறாதவர்களுக்கு, அவர்களின் உடற் காயங்களைக் கருத்தில் கொண்டு இரண்டாம் முறையும் வாய்ப்பளித்தோம். ஓரிருவரைத்தவிர, ஏனையவர்கள் தெரிவானார்கள்.

தரைக் கரும்புலிகளின் முதலாவது மகளிர் அணியிலே பெரும்பாலானோர் மாலதி படையணியிலிருந்து வந்தவர்களே"

என்று குறிப்பிட்டார் கேணல் கடாபி.

தரைப் பெண் கரும்புலிகளின் தனி நிர்வாகக் கட்டமைப்பு மைதிலியோடு தனித்துவமாக இயங்கத் தொடங்கியது. பின்னரும் படையணியிலிருந்து தம் விருப்பத்தைத் தலைவருக்குத் தெரியப்படுத்தும் கடிதங்கள் போய்க் கொண்டேயிருந்தன. தெரிவுசெய்யப்படுபவர்கள் மைதிலியிடம் அனுப்பப்பட்டுக்கொண்டிருந்தார்கள். தேர்விலே வென்றவர்கள் கரும்புலிப் பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

புயலுக்கு முந்திய அமைதியோடு 1996 இன் இறுதி மூன்று மாதங்களும் கழிந்திருந்தன. புலிகள் ஓய்ந்துவிட்டார்களா, பாயத் தயாராகின்றார்களா என்று சரியான முடிவை எடுக்க இயலாத நிலையிலிருந்த சிறீலங்காப் படைத் தலைமை, தமது விருப்பம்போல அறிக்கைகளை அடிக்கடி விட்டுக்கொண்டிருந்தது.

padippakam



*இந்தப் புயலுக்கு முந்திய அமைதிக் காலத்திலும் எமது வேவு அணிகளுக்கு ஓய்வேயிருக்கவில்லை. ஆனையிறவுப் பெருந்தளத்தைச் சூழ உலாவிக்கொண்டேயிருந்தார்கள். படையினர் தொடர்ந்து செய்த 'தேடுதல்'களுக்கு மத்தியிலும் நடமாடிக்கொண்டிருந்தவர்கள் தளத்தின் ஒவ்வொரு அசைவையும் உன்னிப்பாக அவதானித்தார்கள்.*

*முரசுமோட்டைப் பகுதியில் வேவு நடவடிக்கையின் போது படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் 1996.11.11 அன்று கப்டன் அசோதாவும் லெப். கனகாவும் ஓய்ந்துபோனார்கள். ஆனால், வேவு நடவடிக்கைகள் ஓயவில்லை.*

* * *



படிப்பகம்

# 03

விசுவமடுவைக் கடந்துவந்த அந்தப் பேருந்து, புளியம்பொக்கணைச் சந்தியில் இருவரை இறக்கிவிட்டு வட்டக்கச்சி வீதியால் திரும்பியது. பரந்தனும் கிளிநொச்சியும் படையினரின் கையில் இருந்ததால், அந்நேரம் போக்குவரத்துச் சேவைகள் வட்டக்கச்சி போய் இரணைமடுக் குளக்கட்டு வழியாகக் கனகாம்பிகைக் கோயில் சந்தியிலேறி, சீரற்ற நிலையிலிருந்த ஒரு உட்பாதையூடே திரும்பி, திருமுறிகண்டியில் யாழ் நெடுஞ்சாலையைச் சந்திக்கும். கிளிநொச்சி நகரம் முழுமையாக இடம்பெயர்ந்து, அக்கராயனிலும் வட்டக்கச்சியிலுமாகத் தங்கியிருந்தது.

கிளிநொச்சியெங்கும் படையினர் தங்கிநின்றனர். தமது முன்னரங்க நிலைகளைவிட்டு அடிக்கடி வெளியேறுகின்ற படையினர் 'தேடுதலில்' ஈடுபடுவார்கள். உண்மை வெற்றி படை நடவடிக்கை நடந்த வேகத்தில், உயிர் காப்பதற்காக அவசரத்தில் வீடுகளைவிட்டு வெளியேறிய மக்கள் தம் சொந்த வீடுகளில், நிலங்களில் எஞ்சியிருப்பவற்றை எடுத்துச்சென்று, தமது இடம்பெயர் வாழ்வை ஓரளவேனும் சீரமைப்பதற்காக மெல்ல மெல்லப் பதுங்கிக் கிளிநொச்சியினுள் நுழைவர். சிலர் திரும்பிப்போவர். பலர் காணாமல் போவர்.

padippakam



புளியம்பொக்கணைச் சந்திக்கும் முரசுமோட்டைக்கும் இடைப்பட்ட வயல் நிலங்களிலே விதைப்புச் செய்திருந் தவர்கள் அறுவடைக்காகக் காத்திருந்தார்கள். வயற் காவலுக்காகச் சில குடும்பங்கள் முரசுமோட்டையை அண்டிய பகுதியிலே தங்கியிருந்தன. இரவு வேளைகளில் வயற் காவலுக்காக நின்றவர்கள் திடீர் திடீரெனத் தம் முன்னே காட்சிதரும் சிறீலங்காப் படையினரின் காவலுலா அணிகளைக் கண்டு, வரப்புகளோடு பதுங்கும் சம்பவங்கள் இடையிடையே நடந்தன. சிலர் அவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு, காணாமற்போயினர்.

நிலைமை இப்படியிருக்க, பேருந்தில் வந்து புளியம் பொக்கணைச் சந்தியில் இறங்கிய அரசியற்றுறை மகளிர் பிரிவுப் போராளிகள் இருவரும் முரசுமோட்டையைநோக்கி நடக்கத்தொடங்கினர். ஒருவர் விடுமுறையில் வீட்டுக்கு வந்தவர். மற்றவர் இவரை விட்டுவிட்டுப் போக வந்தவர். விடுமுறையில் வந்தவரின் குடும்பம் முரசுமோட்டையில் தான் இருக்கின்றதா, வேறெங்காவது போய்விட்டதா என்று தேடுவதற்காகவே இருவராக வந்திருந்தனர்.

புளியம்பொக்கணைச் சந்தியில் வீதித்தடை இருந்தது. அதில் நின்ற காவற்றுறையினர், எல்லோரையும் எங்கே போகின்றார்கள் என்று விசாரித்துவிட்டு அனுமதிப்பது வழமை. அந்தப் பகுதியில் வசிப்பவர்கள்தவிர, புதிதாக வருபவர்கள் விசாரிக்கப்பட்டு, ஆனையிறவுப் படைத்தளம் பற்றிய அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்ட பின்பே, உள்ளே அனுமதிக்கப்படுவது நடைமுறையில் இருந்தது. இவர் களையும் விசாரித்துவிட்டு அனுமதித்தார்கள்.

ஆள் நடமாட்டம் மிகக் குறைவான வீதியால் நடந்து கொண்டிருந்தவர்களின் கண்களுக்குக் கண்டாவளைச் சந்திக்கருகே இன்னுமொரு வீதித்தடை தெரிந்தது. அதில் நின்றவர்களும் இவர்களை நிறுத்தி விசாரித்தனர். இவர்கள் விடயத்தைச் சொன்னார்கள். விடுமுறையில் போனவரை



படிப்பகம்

விட்டுவரப் போனவர் அவரிடமிருந்த T56-2 இனைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டார். தான் அங்கு நிற்கப்போவதில்லை என்றும் மற்றவரை விட்டுவிட்டு உடனேயே திரும்பி விடுவேன் என்றும் இவர் கூறினார். விபரங்களைப் பதிவு செய்வது தமது கடமை என்று அவர்கள் விளக்கிய பின் இவர் விபரத்தைப் பதிவுசெய்தார். ஆயுத எண், பதிவெண், ரவைகள், குண்டுகள் என்று எல்லாவற்றையும் கேட்டுப் பதிந்தவர்களிடம்,

"சண்டைக்குப் போற ரீமிட்டை விபரம் கேக்கிறமாதிரி இருக்கு"

என்றார் இவர்.

அவர்கள் புன்னகைத்தார்கள். இவர்கள் புறப்பட்டார்கள்.

நல்ல வேளையாக அந்தப் போராளியின் குடும்பம் சொந்த முகவரியிலேயே இருந்ததால், மற்றவரின் வேலை இலகுவாயிற்று. உடனடியாகவே அவர் பரந்தன்-விசுவமடு வீதியிலேறி புளியம்பொக்கணையைநோக்கி வேகவேகமாக நடக்கலானார்.

கண்டாவளையிலிருந்த வீதித் தடையை நெருங்கினார். அதிலிருந்தவர்கள் இவரைப் பார்த்துப் புன்னகைத்தார்கள். இவரும் ஒரு அறிமுகப் புன்னகையைச் சிந்தியவாறே தடையைக் கடக்கமுயன்றார்.

"ஒரு நிமிடம்"

என்றவாறு பொறுப்பாளர் போன்ற தோற்றத்தில் நின்றவர் இவரிடம் வந்தார்.

"மன்னிக்கவேண்டும். உள்ளே வந்தவர்களை வெளியே போக விடுவதற்கு எங்களுக்கு அனுமதியில்லை."

என்றார் அவர்.

padippakam



வெளிப்பார்வைக்குத் தெரியாதவகையில் ஏராளம் போராளிகள் அங்குவந்து சேர்ந்திருந்தனர். எல்லோரும் மக்களின் வீடுகளுள் மறைந்திருந்தனர். கடைசிநேரக் கலகலப்பும் பரபரப்பும் புத்துணர்வும் எல்லோரிடமும் பரவியிருந்தன.

சூரியகலாவுடனும், சூரியாவுடனும் மாலதி படையணியின் இரு கொம்பனிகள் நடவடிக்கைக்குத் தயாராக நின்றன. இதைவிட, பல்வேறு பாதைகளால் மாலதி படையணியின் பொறுப்பாளர்கள் வெவ்வேறு படையணிகள், பிரிவுகளை வழிநடத்தியவாறு உள்நுழைந்து தமக்குரிய இலக்குகளை அழிப்பதற்குத் தயாராகியிருந்தார்கள். மாலதி படையணியின் மூத்த அதிகாரிகளான பூங்கா, அஜந்தி, பமிலா ஆகியோருக்குரிய இலக்குகள் தளத்தின் மையப்பகுதியில் இருந்தன. பார்க்கும் இடமெங்கும் பெண் போராளிகளின் தலைகளே தெரிந்தன. முன் அத்தியாயத்தில் நாம் குறிப்பிட்ட இருவர்போல, விடயம் தெரியாமல் உள்நுழைந்து, திரும்பிச் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டவர்களுக்கு இப்போது விடயம் மெதுவாக விளங்கத்தொடங்கியதும், இருப்புக்கொள்ளவில்லை. அவர்கள் தாங்களாகவே கேட்டு, ஏதோ ஒரு பணியைப் பொறுப்பெடுத்துக்கொண்டார்கள்.

ஆனையிறவுப் படைத்தளம் விழிப்பாக இருந்தது. தம் மீது நடத்தப்படும் தாக்குதலொன்றை முறியடிப்பதற்கு மட்டுமல்லாது, நகர்வொன்றைச் செய்வதற்கும் அது தயாராக இருந்தது.

இயக்கச்சியிலிருந்து கிளிநொச்சிவரை நீண்டிருந்தது அந்தப் படைத்தளம். அது தை மாதம். இன்னும் சில நாட்களில் பொங்கல் பானைகள் முற்றத்துக் கோலத்திடையே பூத்திருந்து, கதிரவனை வரவேற்கும் தமிழர் பெருநாள் வரவிருந்தது. இந்த நாட்களில் ஆனையிறவுப் பெருந்தளம் நீரால் சூழப்பட்டுக் கிடக்கும். உப்புப் பாத்திகள்



படிப்பகம்

யாவற்றையும் வெள்ளம் மூடிநிற்கும். சில இடங்களில் யாழ் நெடுஞ்சாலையின் மேலாக நீர் ஓடிக்கொண்டிருக்கும்.

தளத்தைச் சூழத் தொடர் காவலரண்கள். காவலரண் களுக்குப் பாதுகாப்பாகப் பாரிய மண் அணை. மண் அணைக்கு வெளிப்புறமாக முட்கம்பி வேலிகள். ஒவ்வொரு வேலிகளுக்குமிடையே 10-15மீ. இடைவெளி கொண்டதாக நான்கைந்து வேலிகள். அவற்றிடையே மிக நெருக்கமாக விதைக்கப்பட்ட கண்ணிவெடிகள். நீர்ப்பரப்பினுள்ளும் முள் வேலிகள், கம்பிச்சுருள்கள், கண்ணிவெடிகள் இடம் பெறத் தவறவில்லை. சிறுவர் கதைகளில் வரும் கொடு மைக்கார மந்திரவாதிகளின் உயிர் ஏழு கடல்கள், ஏழு மலைகளுக்கப்பால் உள்ள தனித் தீவிலே, பூதங்களின் காவல் நடுவே இருக்கும் ஒரு மரப்பொந்தினுள்ளே இருக் கின்ற பெட்டிக்குள்ளே வைக்கப்பட்டிருக்கும் முட்டைக் குள்ளே பத்திரமாக இருப்பதுபோன்ற தோரணையில் பகைத் தளங்கள் அமைக்கப்பட்டிருக்கும். கதைகளில் வரும் இளவரசர்கள் பறக்கும் குதிரைகளிலேறிப்போய், பூதங்கள் உறங்கும் நேரமாகப் பார்த்து, முட்டையை அழித்துவிடுவார்கள். ஆனால் நாங்கள் உயிரைக் கொடுத்து, ஒவ்வொரு தடைகளையும் கடந்து, விழிப்புட னும் தயார்நிலையிலும் இருக்கும் பகைவரோடும் அவர் களின் படைக்கலன்களோடும் மோதியே ஒவ்வொரு இலக்குகளையும் அடையவேண்டியிருக்கும்.

ஆனையிறவுப் படைத்தளம் விழிப்பாக மட்டுமல்ல, தயாராகவும் இருந்தது. ராங்கிகள், ஆட்லறிகள், ஆள்பலம் குவிக்கப்பட்டு அடுத்தகட்ட நகர்வொன்றுக்கு முழுமையா கத் தயாராகவிருந்தது.

ஒவ்வொரு அணியும் தனது பணிக்கும் தான் பய ணிக்கவேண்டிய பாதையின் தன்மைக்குமேற்ப இருநாள் முன்போ, ஒருநாள் முன்போ நகர்ந்துவிட்டிருந்தன.

padippakam



*1997.01.09 அன்று அதிகாலை நகர்வுகள் யாவும் நிறைவுற்றநிலையில் எல்லோரும் எமது ஆட்லறிகளின் கம்பீரமான கர்ச்சனைக்காகக் காத்திருந்தனர். முழங்கியது ஆட்லறி. பல முனைகளில் ஆனையிறவுத் தளம் ஊடுருவப்பட்டது. இராணுவத்தினரால் தொடர்ந்து ஏவப்பட்டுக் கொண்டிருந்த தேடொளி வெளிச்சம் இரவைப் பகலாக்க முயன்றது. பரந்தனுக்கு அப்பாலிருந்த கிளிநொச்சித் தளம் துண்டாடப்பட்டது. புலியணிகள் இப்போது ஆனையிறவினுள் நின்றன. வெளிப்புறக் காப்பரண்கள் கைப்பற்றப்பட்டுக்கொண்டிருந்த அதேநேரத்திலேயே தளத்தின் மையப்பகுதியும் கட்டுப்படுத்தப்பட்டது.*

“ஆனையிறவு-பரந்தன் ஊடுருவித் தாக்குதலுக்கான வெளி வேவு நடவடிக்கைகளில் மாலதி படையணியும் ஈடுபட்டிருந்து.

திட்டத்தின்படி சூரியாவின் கொம்பனிக்குத் தட்டுவன் கொட்டிப் படைத்தளமும், அஜந்தியின் கொம்பனிக்கு யாழ் நெடுஞ்சாலையில் இருந்த வெடிபொருட் களஞ்சியமும் அருகில் இருந்த அரண்களும் இலக்குகளாகக் கொடுக்கப்பட்டிருந்தன. நீரேரிப் பக்கமாக நகர்ந்த சூரியாவின் கொம்பனிக்கு இழப்பு ஏற்பட்டு, தாமதமாகிக் கொண்டிருந்தது. எனினும் அது தாக்கியபடி முன்னேறியது.

அஜந்தியின் அணி இலக்கை அடைந்து தாக்கத் தொடங்க, வெடிபொருட் களஞ்சியம் எரிந்து சாம்பலானதுடன், அங்கேயிருந்த ஊர்திகளும் எரிந்தன. அந்தப் பகுதியைக் கடைசிவரை மாலதி படையணி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது.

ஆனால், சில பாதைகள் பிடிக்கப்படாததாலேயும் வெடிபொருட்களஞ்சியத்துக்கு அடுத்துள்ள படைத்தளத்தில் நின்ற படையினரும் அந்தப் பக்கமிருந்து நெடுஞ்சாலையால் வந்த ராங்கிகளும் அஜந்தியின்



படிப்பகம்

padippakam



கொம்பனிமீது கூடுதலான தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருந்தன. பின்னகருமாறு நாம் கட்டளையிடும் வரை அவர்கள் அங்கேயே நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

நெடுஞ்சாலையை வழிமறிப்பதற்கு உள்நுழைந்த பூங்காவின் அணியினர் தமக்கு வழங்கப்பட்ட வேலையைச் செய்திருந்தனர்"

என்றார் கேணல் பால்ராஜ்.

பூங்காவுடன் போன புலனாய்வுத்துறை மகளிரணி யாழ் நெடுஞ்சாலையைக் குறுக்கறுத்ததோடு, படைத்தளம் ஒன்றையும் தன் கட்டுப்பாட்டுள் வைத்திருந்தது. சுட்டதீவுப் பகுதியால் உட்புகுந்த சிறுத்தை மகளிர் அணியுடன் ஜக்குலின் போயிருந்தார்.

மூன்று பாதைகளுக்குரிய கட்டளை அதிகாரியாக விதுஷா பணியாற்றினார். சூரியா, லெப்.கேணல் தட்சாயினியுடன் உட்புகுந்த கொம்பனி தட்டுவன்கொட்டிப் படைத்தளத்தையும் உட்புறக் காவலமைப்புக்களையும் தகர்த்தழித்தது.

"சூரியா, மேஜர் எழிலரசி ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டிருந்தனர். தர்ஷாவின் பிளாட்டூன் போக வேண்டிய பாதையில் ஒரு குளமிருந்தது. குளத்தினூடே இவர்கள் நகரும் ஒலி படையினரை விழிப்படையச் செய்துவிடும் என்பதால், எல்லோரும் அவரவருக்குரிய இடங்களுக்குப் போய்ச் சேர்ந்தபின்னரே நகரத் தொடங்கினர். ஏற்கனவே உள்நுழைந்த வேவு அணியொன்று உட்புறம் நின்று பாதையை உடைத்துத் தரும் என்று சொல்லப்பட்டிருந்தபோதும், ஏதோ காரணங்களால் உட்புறமாகத் தடை உடைக்கப்படாத நிலையில், தர்ஷாவின் பிளாட்டூன் வெளிப்புறமாகவே



படிப்பகம்

padippakam



தடையை உடைத்துப் பாதையை ஏற்படுத்தி உள் நுழைந்தது.

சூரியாவுடன் வலப்புறக் காப்பரண்களைக் கைப் பற்றியவாறு போன மதி தனக்குரிய வேலை முடிந்த தும், அடுத்து தான் எங்கே போவது என்று என்னிடம் கேட்க, இடதுபுற எதிர்ப்புகளை முறியடித்தவாறு போய், சூரியாவுக்கு அடுத்த பாதையால் உள்நுழைந்த துர்க்காவைச் சந்திக்கும்படி அனுப்பினேன்"

என்றார் விதுஷா.

எனினும் பரந்தன்-விசுவமடு வீதியை முழுமையாகக் கட்டுப்படுத்தவேண்டிய பணியைப் பொறுப்பேற்றிருந்த படையணி ஒன்று தன்பணியில் மிகுந்த இடர்களைச் சந்தித்துக்கொண்டிருந்தது. தனது உச்சப் பலத்தைப் பயன் படுத்தித் தனக்குரிய பணியை முடிக்க அது மறுபடி மறுபடி முயன்றுகொண்டிருந்தது. யாழ் நெடுஞ்சாலையில் உப்பளப் பகுதியில் அமைந்திருந்த சிறு தளம் ஒன்று இன்னும் தன் பலத்தை இழக்காமல் போரிட்டபடி இருந்தது.

களத்தில் எமது அணிகளுக்கு ஏற்பட்ட இந்த நெருக்கடி நிலை இராணுவத்துக்கு வாய்ப்பாக மாறக்கூடிய சூழ்லை ஏற்படுத்தத்தொடங்கியது. நடவடிக்கையைத் தொடர்வதற் குத் தடைகள் ஏற்பட்டால், 'அழித்தொழிப்பு' ஒன்றைச் செய்துவிட்டு வெளியேறுவதென ஏற்கனவே தலைவர் அவர்களால் சொல்லப்பட்டிருந்தது. எனவே திட்டமிட்டபடி ஆயுத, வெடிபொருட் களஞ்சியமும் வரிசையாக ஓரிடத் தில் ஒன்பதும் வேறிடத்தில் இரண்டுமாக நிலைப்படுத்தப் பட்டிருந்த ஆட்லறிகளும் தகர்க்கப்பட்டன.

தீ நாக்குகள் வானைத் தொட்டன. ஆனையிறவுத் தளம் தொடர்ந்து வெடிப்பு ஒலிகளாலும் கரும்புகையாலும்



படிப்பகம்

மூடப்பட்டிருந்தது. விரைந்துவந்த குண்டுவீச்சு விமானங் களாலும் உலங்குவானூர்திகளாலும் எமது அழிவு நட வடிக்கையைத் தடுக்கமுடியாது போய்விட்டது.

சண்டை ஆரம்பிக்கப்பட்ட பொழுதே ஆட்லறிகள் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதால் எறிகணை வீச் சால் ஏற்படும் உயிரிழப்பு இம்முறை பெருமளவு தவிர்க்கப் பட்டிருந்தது. போரிட்டபடி உட்புகுந்த போரணிகள் போரிட்டபடியே வெளியேறின. பூங்காவுடனான மகளிர் படையணி தன் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளிருந்து 120மி.மீ. எறிகணை செலுத்திகள் ஐந்தைப் பாதுகாப்பாக வெளி யேற்றிவிட்டிருந்தது.

"இந்தத் தாக்குதலுக்குப் போனபோது, எங்களில் குறிப்பிட்ட சிலரைத்தவிர, ஏனையவர்கள் போரனுப வமற்ற புதியவர்கள். எமது கொம்பனிக்குரிய பொறுப் பாளர்களை மாலதி படையணியே தந்திருந்தது. கொம்பனி மூன்றாவது பொறுப்பாளர், பிளாட்டூன் களின் பதில் பொறுப்பாளர்கள், செக்சன்களின் பொறுப்பாளர்கள், செக்சன்களுக்குரிய கனரக ஆயுத இயக்குநர்கள், உதவியாளர்கள் என்று பலர் வந்திருந் தார்கள். எங்களில் எழுபத்தைந்து பேர் என்றால், அவர்களுடைய ஐம்பதுபேர் சேர்ந்துதான் அந்தச் சண்டைக்குப் போயிருந்தோம். தாக்குதல் திட்டத்துக் கான பயிற்சியின் போதிருந்தே அவர்கள் எங்களுடன் தான் நின்றார்கள்.

அந்த நேரம் சண்டையில் பங்குகொண்ட அனைத்து மகளிர் படையணிகளுக்குமான போர்ப்பயிற்சியை மாலதி படையணியின் பயிற்சி ஆசிரியர்கள் வழங்கிக்கொண் டிருந்தார்கள். சண்டையின்போது எங்களோடும் வந்திருந் தார்கள்"

padippakam



இதுவே சோதியா படையணியின் முதற்களம். அதை எங்களோடு பகிர்ந்ததுபற்றி அதன் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது முப்பத்தாறு தூண்களை அப்போரிலே இழந்திருந்தோம்.

ஆட்லறிக் கனவோடு உள்நுழைந்த பமிலா ஒன்றைக்கூட எடுத்துவர முடியாமல்போன துயரைத் தாங்கமாட்டாமல் தாங்கியவாறு நடந்தார். ஆனையிறவு நீரேரியின் உட்கரையோரம் உலங்குவானூர்தி ஒன்றுடன் ஏற்பட்ட சண்டையில் உப்புக்காற்றோடு கலந்துபோனார்.

எல்லோரும் வெளியேறியபின்னும், வெடிப்பு ஒலிகள் கேட்டுக்கொண்டிருந்தன. கரும்புகை வானத்து நட்சத்திரங்களையும் மூடிவிட்டிருந்தது. வெடித்து எரிந்தது வெறும் வெடிபொருட்கள் மட்டுமல்ல. அடுத்த நகர்வுக்கான படைத்தரப்பின் ஏற்பாடுகளும்தான். எமது அழித்தொழிப்பு நடவடிக்கையின் பின், படையினர் ஆனையிறவிலிருந்து முன்னேற்ற நடவடிக்கை ஒன்றைச் செய்திருக்கமுடியவில்லை.

**ஏராளம் ஏராளம்**
**எண்ணங்களை எழுத**
**எழுந்துவர முடியவில்லை**
**எல்லையில் என் துப்பாக்கி**
**எழுந்து நிற்பதால்**
**எழுந்துவர என்னால் முடியவில்லை**
**எனவே,**
**எழுதாத என் கவிதையை**
**எழுதுங்களேன்.**



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

நீண்டுகிடந்த ஆனையிறவுப் பெருவெளியிலே கவிஞர் கப்டன் வானதியின் குரல் எதிரொலித்துக்கொண்டிருந்தது. ஆனையிறவிலே நாம் பிரிந்த அன்புக்குரியவர்களது நினைவும் அவர்களின் கனவுகளும் எல்லோர் மனதையும் உலைத்துக்கொண்டிருந்தன. மூன்றுநாள் சண்டையில் கிட்டத்தட்ட எல்லா வேலைகளுமே முடிந்திருந்த நிலையில், வெற்றிலைக்கேணியில் திடீரெனத் தரையிறக்கப்பட்ட மேலதிக படையினரின் வருகையால் 1991 இல் இலக்கு கைநழுவிப்போனது. இப்போது அத்தனை ஆட்லறிகளும் வெடிபொருட்களும் எம் கைகளுக்கு வரவிருந்த அற்புத மான வாய்ப்பு நூலிழையில் தவறிப்போனதைத் தாங்கிக் கொள்வது சற்றுச் சிரமமாகவே இருந்தது.

கோபத் தீயை ஆழ்மனதுள் புதைத்துக்கொண்டோம். தொடர்ந்து பயிற்சியில் எம்மை ஈடுபடுத்தினோம்.

இப்போது எம்மிலிருந்து இன்னுமொரு புதிய படைப் பிரிவைத் தோற்றுவிக்க நாம் தயாராகினோம். சிறப்பான, கடினமான, திடீர் நிலைமைகளை, நெருக்கடிகளை எதிர் கொள்ளக்கூடிய, தனித்துவமான நடவடிக்கைகளைச் செய் யத்தக்க ஒரு அணியை எம்மிலிருந்து உருவாக்கினோம். அது மாலதி சிறப்பு அணி.

சிறப்பு அணியில் இணையவிரும்பியவர்கள் அதற்குரிய தேர்வுகள்பற்றி அறிவுறுத்தப்பட்டார்கள். கடுமையான தேர்வுக்குட்படுத்தப்பட்டுத் தெரிவுசெய்யப்பட்டார்கள். அமெரிக்கர்களின் புகழ்பூத்த 'மரைன்'களைப் போலே, பிரித்தானியரின் பெருமைக்குரிய 'SAS' இனைப் போலே எங்களுடைய மாலதி சிறப்பு அணி கம்பீரமாக அணி வகுத்து நின்றது. தேர்ந்த வேவுப் புலியான லெப்.கேணல் முகுந்தா சிறப்பு அணியைப் பொறுப்பேற்றார். எங்கள் எல்லோருடைய கனவுகளின் வெளிப்பாடாக மாலதி சிறப்பு அணி எங்கள் முன் நிமிர்ந்து நின்றது.

padippakam



யாருமே நினைத்திராத மிகக் கடுமையான பயிற்சிகளில் ஈடுபடுவதற்காகப் புறப்பட்ட மாலதி சிறப்பு அணியைப் பெருமையோடும், எதிர்பார்ப்புகளோடும் நாம் வழியனுப்பினோம்.

எமது படையணியின் கொம்பனிகள் மாங்குளப் பகுதியில் பயிற்சிகளைச் செய்தவாறே காவல் உலாக்களில் ஈடுபட்டன. தேவையான இடங்களில் காப்பரணங்கள், பதுங்குகுழிகளை அமைத்தன. இடங்களைத் தமக்குப் பழக்கப்படுத்திக்கொண்டன. சிலகாலம் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட நாம் நெடுங்கேணிக் காட்டுப் பகுதிக்கு நகர்ந்தோம். அங்கே காவல் உலாக்களைச் செய்த அதேநேரம் விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகளிலும் கலை நிகழ்ச்சிகள் பழகுவதிலும் ஈடுபட்டோம்.

1997.04.06 இல், எம்மால் மீட்கப்பட்ட முல்லைத்தீவுப் பட்டினத்தில் நாங்கள் படையணி விளையாட்டுப் போட்டிகளை நடாத்தினோம். இராணுவச் செயற்பாடுகளோடு இணைந்த மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டிகள், தடகள விளையாட்டுக்கள் என்பனவும் தனித்த இராணுவப் போட்டிகளுமாக விளையாட்டுத் திடல் விறுவிறுப்பானது. விளையாட்டுப் போட்டியில் பங்குகொள்ள மாலதி சிறப்பு அணி வருகை தந்திருந்தது. சிறப்பு அணியின் இல்லத்தின் நிறம் பச்சை. அது வெற்றியின் நிறம்.

மாலதி படையணியின் மூன்று கொம்பனிகளும் சிறப்பு அணியுமாக நான்கு இல்லங்கள் களத்தில் மோதின. எங்களுடைய கொம்பனிகள் ஆட்பலம் கூடியவை. சிறப்பு அணி மட்டுப்படுத்தப்பட்டளவிலான தன் குறைந்த தொகை ஆட்களையே களத்தில் இறக்கியிருந்தது. ஆரம்பத்திலேயே போட்டிகள் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டன. வெற்றி பெறப் போகும் இல்லம் எது என்று தெரிந்துகொள்வதற்குள், எல்லோருக்கும் மூச்சு நின்றுவிடும்போல் இருந்தது.



படிப்பகம்

padippakam



தேசியத் தலைவர் அவர்களுக்கும் ஆவல் அதிகரித் திருந்தது. எந்த இல்லம் வெல்லவேண்டும் என்று இறுதி முடிவு அவரது மனதுள் தீர்மானமாக இருந்தாலும் விளை யாட்டு நிகழ்வின் முடிவில் கேணல் விதுஷா தனக்கு அறிவிக்கப்போகும் முடிவுபற்றிய எதிர்பார்ப்பு அவரிடமும் அதிகரித்தே இருந்தது.

முகுந்தா தனது வீராங்கனைகளின் வெற்றிக்காக வெறித்தனமாக உழைத்தார். சிறப்பு அணியினரின் பெயர் களை உரத்துக் கத்திக் கத்தி ஒரு கட்டத்தில் முகுந்தாவுக் குத் தொண்டை அடைத்தே போனது. 1000மீ. ஓடிக்கொண் டிருந்த தனது இல்ல வீராங்கனை சற்றுச் சோர்ந்ததை அவதானித்த முகுந்தா அவரின் பெயரைக் கூப்பிட்டு 'ஓடு ஓடு' என்று கத்தியவாறே ஓடு பாதையின் வெளிப்புற மாக அவருக்குச் சமமாக ஓடி புத்துணர்வூட்டினார்.

எங்களுடைய மற்றைய மூன்று கொம்பனியினர் மட்டு மென்ன விட்டுக்கொடுப்பவர்களா? சிறப்பு அணியினர் கடும் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தபோது, நாங்கள் என்ன முல்லைக் கடற்கரையில் நண்டு பிடித்துக்கொண்டா இருந்தோம்? மாங்குளத்திலும் நெடுங்கேணியிலும் நீண்ட தூரக் காவல் உலாக்களினால் உரமேறிய கால்களையும் பதுங்குகுழி வெட்டி வெட்டியே இறுகிப்போன கைகளையும் வைத்துக்கொண்டு கொம்பனிகள் சும்மாயிருக்கவில்லை. எல்லோருமே எமது பலத்தை முழுவீச்சுடன் வெளிப் படுத்தியிருந்தோம்.

இறுதியில் எல்லோரும் எதிர்பார்த்த அந்தநேரம் வந் தது. எங்கும் ஒரே அமைதி. நந்திக்கடலில் மிதந்துகொண் டிருந்த கொக்குகள்கூட மீன்பிடிப்பதை நிறுத்திவிட்டிருந் தன. எல்லோருடைய மனங்கள்மட்டும் ஆவலில் அலை மோதிக்கொண்டிருந்தன முல்லைக் கடலின் பேரலைகள் கரையில் மோதுவதைப்போல.



படிப்பகம்

padippakam



எங்கள் படையணியின் சிறப்பு அணியினது பச்சை இல்லம் வெற்றியைப் பெற்றிருந்தது.

எல்லோரும் கூக்குரலிட்டோம். ஓடி வந்து முகுந்தாவை யும் மற்றவர்களையும் கட்டியணைத்தோம். அதற்கு முன்பே சிறப்பு அணியினர் தமக்குள் அணைத்துக்கொள்ளவும் ஆனந்தக் கூத்தாடவும் தொடங்கியிருந்தனர்.

விளையாட்டு நிகழ்வுகளில் கடைசி இடத்தைப் பெற் றுக்கொண்ட தட்சாயினியின் கொம்பனி, ஒழுக்கத்தில் முதலிடத்தைத் தட்டிக்கொண்டது.

எமது சிறப்பு அணியின் வெற்றியையிட்டு நாங்கள் பெருமைகொண்டோம்.

கேணல் விதுஷாவிடமிருந்து தகவலை அறிந்துகொண்ட தலைவர்,

"தெரிவுகள் சரியாகத்தான் இருந்திருக்கின்றன"

எனச் சிரித்துக்கொண்டார்.

விளையாட்டுப் போட்டிக்குச் சிகரம்வைத்த நிகழ்வாகப் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் நடந்தேறின. பரிசு களைத் தன்கையாலேயே போராளிகளுக்கு வழங்கினார் தலைவர் அவர்கள். உண்மை வெற்றி-02 எதிர் நடவடிக்கை யில் சிறீலங்காப் படையினரின் T85 ராங்கி ஒன்றைத் தனது RPG அடியால் தாக்கியழித்த கப்டன் தயாவதி தலைவரிட மிருந்து புதிய RPG செலுத்தி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக் கொண்டார்.

பரிசளிப்பும் கலை நிகழ்வும் நடந்த மறுநாள் தலைவர் எங்களிடம் தன் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டார்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

"நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் ஆயிரம் பேரையும் ஒன்றாகச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின் றேன்"

என்று தனது உரையை ஆரம்பித்த தலைவர், இனி ஓய்வேயில்லாத, இடையறாத பெருஞ் சமரொன்றை நாம் சந்திக்கவேண்டிவரும் என்றும், அதற்கு எம்மைத் தயார்ப் படுத்தவேண்டும் என்றும், ( ) த்தரப்பால் (வெற்றி நிச்ச யம் ஜெயசிக்குறுய் என்ற பெயரில்) மேற்கொள்ளப்பட விருந்த பாதை திறப்புச் (?) சமர்பற்றிய தனது தூரநோக் கான கருத்துகளை எங்களிடம் வலியுறுத்தினார்.

அவர் சொன்னதுபோலவே ஒன்றரை வருடம் நாம் ஓய்வேயில்லாத இடையறாத சமரில் ஈடுபட்டோம்.

* * *

# 04

"பாதை திறப்பதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?"

என்று இன்று எங்களைக் கேட்கின்ற இவர்களில் யாராவது, யாழ் நெடுஞ்சாலையை முற்றாக மூடுவதற்காக 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கைப் படைகள் நகர்ந்தபோது அவர்களிடமும் இதே கேள்வியைக் கேட்டிருப்பார்களோ?

சொல்வதற்கு சிறீலங்காப் படைகளிடம் எதுவும் இருந்திராது. ஆனால், பாதை மூடப்பட்ட அந்த மாபெரும் சண்டைபற்றிச் சொல்வதற்கு எங்களிடம் ஏராளம் செய்திகள் இருக்கின்றன.

தலைவரைச் சந்தித்த மறுநாள்...

படையணியின் கொம்பனிகள் அனைத்தும் நெடுங்கேணிக் காட்டுப் பகுதிக்குள் நகர்ந்தன. தட்சாயினி, அஜந்தி, தூயவள் மூவரும் தம் ஒவ்வொரு கொம்பனிகளிலிருந்தும் பொறுப்பாளர்கள் உட்பட நாற்பத்தைந்து போராளிகள் வேவுப் பயிற்சிகளுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டனர்.

padippakam



உடனடியாகவே வேவு தொடர்பான வகுப்புகளும் பயிற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. கொம்பனிகளின் பதுங்கிச் சூட்டாளர்களும் இன்னொருபுறம் தமது பயிற்சிகளைச் செய்யத்தொடங்கினார்கள்.

தட்சாயினியின் கொம்பனி மணலாற்றுக்குப் புறப்பட்டது. துணைத் தளபதி லெப்.கேணல் ரத்தி ஏனைய இரு கொம்பனிகளையும் நெடுங்கேணியில் நிலைப்படுத்தினார்.

இள வயதிலேயே போராட்டத்தில் இணைந்த ரத்தி, முதன்முதலில் பெயர் சூட்டி நடாத்தப்பட்ட ஆனையிறவு மீதான ஆகாய, கடல், வெளிச் சமரிலே தலை, முகம், காலிலே காயமுற்றார். எனினும் அவரது களங்கள் அத்தோடு முற்றுப் பெறவில்லை. சில காலங்களின் பின் புதிய போராளிகளுக்கான படைய தொடக்கப் பயிற்சியாசிரியர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டார். சிறந்த சூட்டாளராகவும், வேக ஓட்டக்காரியுமாக இருந்த ரத்திக்கு ஆசிரியப் பணி கடினமானதாக இருக்கவில்லை.

1996 இன் முற்பகுதியிலே போர்ப் பயிற்சியாசிரியர்கள் அணியில் இணைக்கப்பட்டார். ஓயாத அலைகள்-01 நடவடிக்கைக்குப் பயிற்சிகளை வழங்கியதுமட்டுமன்றி, நடவடிக்கையிலும் பங்கேற்றிருந்தார். கொம்பனியொன்றின் நிலைமை அறிவிப்பாளராகப் போயிருந்த ரத்தி, மாறிக் கொண்டிருந்த கள நிலைமைகளுக்கேற்ப கட்டளையதிகாரியாகவும் பணியாற்றியிருந்தார்.

இருபத்தொரு வயது நிறைந்த துணிச்சல்மிக்க அந்தச் சண்டைக்காரி இப்போது நெடுங்கேணியில் 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கைப் படையினரை எதிர்நோக்கியபடி.



படிப்பகம்

padippakam



ஸ்ரீலங்காவின் படைத்தலைமை சோர்ந்துபோய் அமர்ந்துகொண்டது. என்ன நடந்திருக்கும் என்று ஒரு முடிவை ஊகிக்கமுடியாமல் அது திணறியது. அதுபற்றிய விசாரணையை நடத்தும்படி அனைத்துலகக் காவற்றுறையான 'இன்ரபோல்' இடம் சிறீலங்கா அரசு கேட்டிருந்தது. நிலைமையை ஆராயவென சிம்பாப்வே அதிகாரிகளும் வந்து கொழும்பில் தங்கிநிற்கின்றார்கள். வெளியே போனால் பத்திரிகையாளர்களுக்கு முகம் கொடுத்து மூக்குடைபடவேண்டிவரும் என்பதால், அதிகாரிகள் அலுவலகங்களுள் முடங்கிக்கொண்டனர்.

விடயம் மிகவும் பாரதூரமானதுதான்.

வவுனியாவிலிருந்து புறப்பட்ட வெற்றி நிச்சயம் நடவடிக்கைப் படையினர், யாழ் நெடுஞ்சாலையில் 60 நாட்கள் முயன்றும் 20கி.மீ. தூரத்தைக் கடக்கமுடியாமல் தேங்கிக் கிடந்து, துட்டகெமுனுவின் பரம்பரைக்கே தலைகுனிவைத் தேடித் தந்துகொண்டிருக்கின்றார்கள். போதாக்குறைக்கு பனிக்கநீராவியடிவரை படையினர் முன்னேறி நிற்க, அதன் பின்னாலிருக்கும் (1997.06.10 இல்) தாண்டிக்குளத்திலும், (1997.06.24 இல்) பெரியமடுவிலும் ஊருவித் தாக்கிய விடுதலைப்புலிகள் அங்கு பெரும் நாசத்தை விளைவித்துவிட்டிருந்தனர்.

நிலைமையைச் சீர்ப்படுத்தப் படைத் தலைமை கடும் முயற்சிகளில் இறங்கியிருந்த நாட்களில்தான், இடி விழுந்ததுபோல் அந்தச் செய்தி கிடைத்தது.

சிம்பாப்வே அரசிடமிருந்து சிறீலங்கா அரசு கொள்வனவு செய்த முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட 81மி.மீ. எறிகணைகளை ஏற்றி வந்த கப்பலைக் காணவில்லை என்பதுதான் அந்தச் செய்தி. ஒன்றரை வருட காலமாகியும் இலக்கை அடையாமலேயே வெற்றி நிச்சயம் நடவடிக்கை தோல்வியடைந்த பின்னரும்கூட, ஆயுதக் கப்பலுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.



படிப்பகம்

தாண்டிக்குளத்திலும், பெரியமடுவிலும் இருந்தவற்றை அள்ளிச் சென்ற விடுதலைப் புலிகளிடம் இவை கிடைத்திருந்தால்... என்ற நினைப்பே அதிகாரிகளின் இரத்த அழுத்தத்தை அதிகரித்துக்கொண்டிருந்தது.

"என்ன நேர்ந்தாலும் படை நடவடிக்கை தொடரும்"

என்றார் பதில் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த வழமை போலவே.

"படைகளுக்கு ஓய்வு தேவை. மீள் சீரமைப்பு அவசியம்"

என்ற படையதிகாரிகளின் வேண்டுகோள்கள் காற்றில் அள்ளுண்டுபோயின. என்ன முயன்றும் வவுனியாவில் இருந்து 22.5கி.மீ. தூரத்திலுள்ள புளியங்குளத்தைப் பிடிக்க முடியாமலும், எங்களுடைய ஊடுருவல்களைத் தடுக்க முடியாமலும் படையினர் இருந்தனர். குண்டுவீச்சு விமானங்கள், பறக்கும் ராங்கிகளாகச் செயற்பட்ட உலங்கு வானூர்திகள், ராங்கிகள், கவச ஊர்திகள், ஆட்லறிகளின் எறிகணைவீச்சுடன் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறீலங்காப் படையினரை அவர்களின் இலக்கை அடையமுடியாமல் தடுத்துநிறுத்தியதில், படைபலத்தைச் சிதறடித்ததில், சிறீலங்காவின் கௌரவத்தை மீளமுடியாத படுகுழியில் தள்ளிவிழுத்தியதில், விடுதலைப் புலிகள் இயக்கம் உலக இராணுவ வரலாற்றில் ஈடிணையற்ற சாதனையை நிலைநாட்டியது.

உலக வரலாற்றில் மிக நீண்ட இரண்டாவது நடவடிக்கையாகவும் ஆசியாவின் வரலாற்றில் முதலாவது நீண்ட இராணுவ நடவடிக்கையாகவும் (1997.05.13-1998.12.04) பேசப்பட்ட வெற்றி நிச்சயம் படை நடவடிக்கை எமது தலைவரை ஒப்பற்ற படைத் தளபதியாகவும் மிகச் சிறந்த யுத்த தந்திரியாகவும் மறுபடியும் ஒருமுறை உலகுக்கு உணர்த்திவிட்டிருந்தது.

padippakam



ஒரு நாடு தன் பகை நாட்டின்மீது படையெடுப்பது போன்ற பலத்துடன் நகர்த்தப்பட்ட படைநடவடிக்கை மீதான எதிர்நடவடிக்கையில் மாலதி படையணி தன் உச்சப் பங்களிப்பை ஆற்றியிருந்தது.

பெறுமதி மிக்க வீராங்கனைகளின் உயிர்கள், ஐநூற்று அறுபத்தாறு தூக்கமற்ற இரவுகள், மழைக் காலங்களில் நனைந்தவாறும் நீர் நிறைந்த பதுங்குகுழிகளோடும் கழிந்த நாட்கள், வெயில் காலங்களில் நாவரண்டு மர இலை களில் வழியும் பனி நீரையும் விடாது பொலித்தீன் பைக ளில் சேகரித்துக் குடித்த நாட்கள், இராணுவம் நகரும் திசைகளிலெல்லாம் பதுங்குகுழிகளை அமைத்தவாறே நகர்ந்த நாட்கள், நீண்ட தொலைதூரச் சுமை தாங்கிய நடைப் பயணங்கள், ஓயாத சண்டைகளால் உண்டான உடல்களைப்பு எல்லாவற்றையும் கடந்து ஓயாத விழிப்பு டன் மாலதி படையணி போரிட்டது. படையினர் நட வடிக்கையை ஆரம்பித்த 1997.05.13 அன்று அவர்களுக்கு எதிராக முதலில் சீறியது கப்டன் உசானாவுடனான எமது வேவு அணியின் ஆயுதங்களே.

நெடுங்கேணிச் சந்தியிலிருந்து அளம்பில் போகும் வீதியின் வலதுபுறக் காட்டினுள்ளே அஜந்தியின் கொம்பனி தயார்நிலையில் நின்றது. எங்களோடு படையணியின் துணைத் தளபதி ரத்தி நின்றார். கொம்பனியின் வேவு அணிக்கு மேஜர் அரசி பொறுப்பாக நின்றார். நாங்கள் உடங்கா வெட்டைப் பகுதியில் நடமாடிக்கொண்டிருந்தோம். படையினரின் நகர் வுப் பாதையை அறிந்துகொள்வதே எங்களின் நோக்கமாக இருந்தது.

“வெற்றி நிச்சயம் படைநகர்வின் ஆரம்ப நாட்கள் அவை. பரந்துபட்ட நிலப்பரப்பைக் கண்காணிப்பில்



படிப்பகம்

padippakam



வைத்திருப்பதற்கு எங்களிடம் போதிய ஆளணி யில்லை. எனவே சம்பளங்குளம், ஒதியமலை, உடங்கா, தண்ணீர்முறிப்புப் பகுதிகளில் மாலதி படை யணி சிறுசிறு குழுக்களாகப் பிரிந்துநின்று கண் காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

உடங்காப் பகுதியிலே இரண்டு தடவைகள் படை யினரின் வேவு அணிகளைக் கண்டு மாலதி படை யணி தாக்கியிருந்தது. எனவே, படையினர் முன் னேறப்போகின்றார்கள் என்பது நிச்சயமாகத் தெரிந் தது. அன்று உடங்கா, ஒதியமலை, தண்ணீர் முறிப்புப் பகுதிகளால் முன்னேறமுயன்ற படையினருக்கும் மாலதி படையணிக்குமிடையே சண்டை ஆரம்ப மாகியது”

என்று, 1997.05.13 அன்று ஆரம்பமான வெற்றி நிச்சயம் படைநகர்வுபற்றி, அப்போது நெடுங்கேணிப் பகுதிச் சண்டைக்குப் பொறுப்பாக இருந்த கேணல் பால்ராஜ் கூறுகின்றார்.

படையினருக்கும் எங்களுக்குமிடையே சண்டை தொடங்கியதுமே லெப். தமிழ்ப்பிரியா வீரச்சாவடைந்து விட்டார். இவரே வெற்றி நிச்சயம் எதிர்நடவடிக்கைக் களத்தின் முதல் மாவீரர் ஆவார்.

அன்று முழுவதும் எமது அணிகள் சிறீலங்காப் படைக ளோடு சண்டைபிடித்துக்கொண்டிருந்தன. மறுநாளும் சண்டை தொடர்ந்தது. படையினர் தம் திசையை மாற்ற, அவர்களின் போக்குக்கு ஏற்ப நாமும் நகர்ந்து நகர்ந்து சண்டையிட்டுக்கொண்டிருந்தோம். படையினரின் நகர்வு ரேணைப்புலவு நோக்கியதாக இருப்பதை அஜந்திக்கு அறி வித்தோம்.



படிப்பகம்

padippakam



"சிறிய சிறிய வேவு அணிகளாகப் பிரிந்து, படைத் தரப்பினர் முன்னேறும் இடங்களிலெல்லாம் அடியைக் கொடுத்ததுடன், அவர்களின் அடுத்த நகர்வை அறிந்து விலகி விலகி, அந்தக் காட்டுப் பகுதியிலே பெரியதொரு அணி நின்றதுபோன்ற தோற்றத்துடன் சண்டையிட்டது ஒரு திறமையான செயற்பாடே. மாலதி படையணியின் பதுங்கித் தாக்கும் வேகம், மிகுந்த அவதானிப்பு என்பனவே படைத்தரப்பைக் காயப்படுத்தி, கொல்ல உதவியது"

என்றார் பால்ராஜ்.

மூன்றாம் நாள் அதிகாலை அஜந்தியின் கொம்பனி சேனைப்புலவுக்கு வந்து நிலையெடுத்தது. படையினரின் வருகையை எதிர்கொள்வதற்கேற்ற வியூகத்தில் தற்காலிக நிலைகளை அமைத்துக்கொண்டோம். நகர்ந்து வந்து கொண்டிருந்த படையினர் தடுப்பரண்களின் ஒரு விளிம் போடு முட்ட, சண்டை தொடங்கியது. சிறிது நேரத்துக் குள்ளாகவே கொம்பனி முழுமைக்கும் சண்டை பரவியது. நெடுங்கேணிக் காட்டுக்குள் மிகக் கடுமையாக நடந்த அந்தச் சண்டையில் நாங்கள் எங்கள் துணைத் தளபதியை இழந்திருந்தோம். படையினர் எம்மோடு சண்டைபிடித்த வாறு விலகி விலகிப் போய்க்கொண்டிருந்தனர்.

அன்றிரவே படையணியின் சிறப்புத் தளபதி விதுஷா வைச் சந்தித்து, கொம்பனியை மீளமைத்துக்கொண்டோம். கொம்பனியின் பொறுப்பாளராக சூரியாவும் மேலாளராக அஜந்தியும் பொறுப்பேற்றார்கள். படைகளின் நகர்வு நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் நோக்கியதாக இருந்த தால் நெடுங்கேணி-புளியங்குளம் வீதிக்குக் குறுக்கே குறி சுட்டகுளத்தருகே புதிய நிலைகள் எடுக்கப்பட்டன. வீதி யைப் பாதுகாத்தவாறு சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து பதுங்கித்தாக்கும் நிலைகளை எடுத்துக் காத்திருந்தோம்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

நெடுங்கேணிப் பகுதியால் முன்னேற்ற நடவடிக்கை யைச் செய்தததுபோலவே, வவுனியாவிலிருந்தும் படையி னர் நகரத்தொடங்கினர். இவர்களை விளக்குவைத்தகுளப் பகுதியில் புலியணிகள் எதிர்கொண்டு போரிட்டன.

இங்கே வெற்றி நிச்சயம் நடவடிக்கை தொடர்ந்து நடக்க, மணலாற்றில் நின்ற தட்சாயினி தனக்குரிய அழைப்பு வரும் நாளுக்காகக் காத்திருந்தார். அந்த அழைப்பும் வந்தது. வெற்றிநிச்சயம் படையினரை எதிர்கொள்ள அல்ல, ஊடுருவித் தாக்க.

மணலாற்றிலிருந்து வெற்றிநிச்சயம் நடவடிக்கைக் களத்தருகே வந்த தட்சாயினியின் கொம்பனி, நடவடிக் கைக்குரிய சிறப்புப் பயிற்சிகளில் ஈடுபட்டது. படையணி யின் கனரகப் பயிற்சி ஆசிரியர்களுள் ஒருவரான தமிழ் செல்வி தட்சாயினிக்குரிய நிலைமை அறிவிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தாக்குதலணிகள் தமது நடைபவனியைத் தொடங்கின. தமக்குத் தேவைப்பட்ட அனைத்தையும் சுமந்தவாறு அணிகள் நகர்ந்தன. நீண்ட நடைப் பயணம். குளங்களைக் கண்டபோது குளிப்பதும், இரவில் இரண்டொரு மணி நேரம் உறங்குவதுமாக நடை தொடர்ந்தது. போகும் வழியிலிருந்த மாமரங்கள் எல்லாம் பழங்களை நீட்டி இவர்களை விருந்தோம்பி, வழிப் பயணத்துக்கென மேல திகமாகவும் கொடுத்துவிட்டது ஒரு சுவையான அனுபவம்.

“தாண்டிக்குளத் தாக்குதலுக்குத் திட்டமிட்ட கேணல் கருணா அவர்கள் வரைபடத்தைக் காட்டி, ‘இவ்வளவு பகுதியும் உங்களுக்குரியது’ என்றார். எங்களைக் கூட்டிப்போவதற்கு வேவுப் போராளிகளை விட்டிருந் தார். இரண்டு நாட்கள் முன்னதாகப் போய், எமக் கெனத் தரப்பட்ட பகுதியை வேவு பார்த்துப் பாதை யைத் தேர்ந்தெடுத்தோம். என்னோடு நின்ற லெப்.

padippakam



தாராவுக்குச் சிங்களம் நன்றாகத் தெரியும். இராணுவம் என்ன கதைத்துக்கொண்டிருக்கின்றது என்று எங்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார்.

தடைக்கம்பி தகர்க்கப்பட்டவுடன், அதை விலக்கிக் கொண்டு முன்னே போகமுயன்ற தாரா, கம்பியிலிருந்த மின்சாரம் பாய்ந்து எங்கள் கண்முன்னேயே வீரச்சாவடைந்தார். இது எனக்கு முதல் அனுபவம். இதன் பின்னர் காய்ந்த தடியொன்றால் கம்பிகளை விலக்கிவிட்டே அணிகள் உள்நுழைந்தன"

என்றார் எமது கொம்பனியின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக வந்திருந்த கேணல் விதுஷா.

1997.06.10 இரவு சண்டை ஆரம்பமானது. உள்நுழைவதற்கான பாதையை ஏற்படுத்திக்கொடுப்பது தட்சாயினியின் கொம்பனியைச் சேர்ந்த மேஜர் பூமளாவின் பிளாட்டூனின் வேலை. அணிகள் பூமளாவின் பிளாட்டூனைச் சேர்ந்த மேஜர் துளசியின் செக்சன் அந்தப் பணியைத் துரித வேகத்தில் முடித்தது. தாம் எடுத்த பாதைவழியாக ஜெயந்தன் படையணியின் ஒரு கொம்பனியை உள்ளே அனுப்பிவிட்டு, தட்சாயினியின் கொம்பனி உள்நுழைந்தது. வெளிப்புற எதிர்ப்பைக் கட்டுப்படுத்துவதும், உட்புறம் தேடுதலும் அழித்தலும் இராணுவப் பொருட்கள் சேகரிப்புமாகக் கொம்பனி துரிதமாகச் செயற்பட்டது. படையினரை விரட்டியடித்துவிட்டுப் படையினரின் நிலைகளில் எமது கொம்பனி நிலைகொண்டது. படையினரால் அமைக்கப்பட்டிருந்த மண் அணைகளின்மீதான காப்பரண்களில் நிலைகொண்டிருந்த எமது போராளிகளை நோக்கி சிறீலங்காப் படையினரின் சுப்பர்சொனிக் விமானம் குத்திப் பதிந்தது. அது எம்மைநோக்கிப் பதியத் தொடங்க, அதைநோக்கி நிமிர்ந்த எங்களுடைய .50 கலிபர் துப்பாக்கி, FN MAG உட்பட எல்லாக் கனரக ஆயுதங்களும் செறிவான சூடுகளை வழங்கின.



படிப்பகம்

ஒருமுறை பதிந்ததோடு சுப்பர்சொனிக் விடைபெற்றுச் சென்றுவிட்டது.

"தாண்டிக்குளத்துக்கு வவுனியாப் பக்கமிருந்து உதவிகள் வராமல் தடுப்பதும் எங்களுக்குரிய பணியே. உழவு இயந்திரத்தில் வந்துகொண்டிருந்த இராணுவ உதவியணி ஒன்றை எமது **RPG** போராளிகள் தாக்கினார்கள்.

எங்களைநோக்கி வந்த மக்களை உள்ளிருந்த படையினர் சுட்டனர். வவுனியாநோக்கிப் போய்க்கொண்டிருந்த மக்களை தட்சாயினி வெளியே போக அனுமதித்துக்கொண்டிருந்தார். மக்கேளாடு சேர்ந்து தேச விரோத சக்திகளும் சாதாரண உடையில் வெளியேறிக்கொண்டிருந்தார்கள். மக்களின் பாதுகாப்புக் கருதி அவர்களையும் சுடாமல்விட்டிருந்தார் தட்சாயினி"

என்று குறிப்பிட்டார் விதுஷா.

சண்டையின் உச்ச நடவடிக்கையாகக் கரும்புலித் தாக்குதல் நடந்தேறியது. நடவடிக்கையின்போது எமது படையணியிலிருந்து கரும்புலிகள் அணிக்குப் போயிருந்த மேஜர் யாழினி காவியமாகியிருந்தார்.

ஆரம்பத்தில் மணலாற்றுப் படையணியிலிருந்து கஜபார எதிர்நடவடிக்கையோடு தன் கள வாழ்வை ஆரம்பித்த மேஜர் யாழினி, பின்னர் ஒரு புகைப்படப் பிடிப்பாளராகக் கடமை செய்தார். அங்கிருந்து கரும்புலிக் கனவைச் சுமந்தவாறு வேவு அணிக்கு வந்திருந்தார். விடுதலைப் புலிகள் மகளிர் படையணி, தன்னை மாலதி படையணியாகப் பரிணமித்துக்கொண்டபோது யாழினி எங்களோடிருந்தார். யாழினியின் அக்கா 2 ஆம் லெப். தர்சினி, ஈழத்தில் இந்தியப் படைகளுடனான மோதல் ஒன்றில் மண்ணுக்கு உரமாகியிருந்தார்.

padippakam



யாழினியின் வீடு சேமமடுவில் இருந்தது. நடவடிக்கைக் காகக் கரும்புலி அணி நகர்ந்துகொண்டிருந்தபோது யாழினியின் வீடு அண்மித்துவிட,

"ஒரு நிமிடம்"

என்றவாறு ஓட்டமாக ஓடிய யாழினியை அவரது வீட்டில் வலை பின்னியிருந்த சிலந்திகள் வரவேற்றன. படையினரின் நகர்வுக்கு அஞ்சி அந்தக் கிராமமே இடம்பெயர்ந்திருந்தது. சில நாட்கள் கிழிக்கப்படாதிருந்த மெய்கண்டான் நாட்காட்டியினுள், தனது குடும்பத்தினருக்காக எழுதிய கடைசிக் கடிதத்தைச் செருகிவிட்டுத் தனது அணியினரோடு இணைந்துகொண்டார்.

கரைந்துபோகின்ற கடைசி நிமிடங்களில் மிக அவசரமாகக் கிறுக்கப்பட்ட வார்த்தைகளால் கோர்க்கப்பட்ட அந்தக் கடிதத்தை, அடுத்தநாள் வீடு பார்க்கச் சென்ற உறவினர்கள் எடுத்துச்சென்று யாழினியின் தாயிடம் கொடுத்துவிட்டிருந்தார்கள்.

அது தாண்டிக்குளம் தாக்குதற் பயிற்சிக்கான இறுதி நாட்கள். கடின பயிற்சியை முடித்து, புயலின் மையத்தைக் காணப்போயிருந்தன புயல்கள். அங்கே ஒரு புயலாய் யாழினியும்.

**"யாழினியின் மொறால் கமராவுக்குள்ள போகப் போகுது"**

கூடநின்று படம் எடுக்கும்போது புன்னகையுடன் தலைவர் சொல்ல, 'பக்'கெனச் சிரித்தவர் படம் எடுப்பதற்கிடையில் பழையநிலைக்கு வந்துவிட்டார். அந்தளவுக்கு மொறால்காரி. பொதுவாக எல்லோரும் யாழினியை 'வலு சீரியசான ஆள்' என்றுதான் சொல்வார்கள்.



படிப்பகம்

கரும்புலி அணிக்குப் பெயர் கொடுத்தவர்கள் எல்லோரும் வேவு அணிக்கு விடப்பட்டிருந்தபோது பூநகரி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி என ஒவ்வொரு பகுதியிலும் தன் பாதங்களைப் பதித்தார். ஒரு முழுநிலவு நேரத்திலேயே இராணுவத் தளத்தின் முட்கம்பித் தடைகளைத் தாண்டி மண் அரண்வரை சென்று, அவதானித்து விட்டுத் திரும்பிய பெருமை யாழினிக்குரியது. வாய்ப்பற்ற இடங்களையும், நிலைமைகளையும் வாய்ப்பாக்கும் வேவு அணியில் தன் முத்திரையை ஆழமாய்ப் பதித்திருந்தார். இறுதியாகத் தன் முதல் தாக்குதல் களத்திலேயே வீர காவியமாகி, தமிழீழப் பெண்களின் கள வரலாற்றில் முதலாவது தரைப் பெண் கரும்புலி என்ற பெருமையைத் தனதாக்கினார் மேஜர் யாழினி.

நடவடிக்கை தொடங்கிய மறுநாள் தாண்டிக்குளம் பகுதியைத் துடைத்தள்ளிவிட்டு, புலியணிகள் வெளியேறின. தட்சாயினியோடு உட்புகுந்த ஆனந்தியுடனான வேவு அணியினர், வெளியிலிருந்து படையினருக்குக் கிடைக்கக்கூடிய உதவிகளைத் தடுக்கும் பணியில் இணைந்திருந்தனர்.

ரத்தி வீரச்சாவு அடைந்ததைத் தொடர்ந்து, துணைத் தளபதியாகப் பணிசெய்துகொண்டிருந்த லெப். கேணல் சூரியகலா, இப்போது மாலதி படையணியின் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

நெடுங்கேணியில் நின்ற எமது கொம்பனி, யாழ் நெடுஞ்சாலையில் படையினரின் நகர்வைக் கட்டுப்படுத்தும் பணிக்காக நகர்ந்துவிட்டிருந்தது. கொம்பனியின் பொறுப்பாளராகச் செல்வி போனார்.

padippakam



நெடுஞ்சாலையின் இடைவழியில் படையினருக்கு எதிர்ப்பைக்காட்டிய புலியணிகளுக்கு ஒரு புதிய வியூகத்தை வகுத்துக்கொடுத்தார் தலைவர். இப்போது புளியங்குளம், புலிகளின் புரட்சிக்குளமானது. விடுதலைப் புலிகள் இயக்கம் தன் இராணுவ வரலாற்றில் முன்னொரு போதும் செய்திராத, எந்த இராணுவ வல்லுனருமே எதிர் பார்த்திராத தந்திரோபாயமாக அது அமைந்தது.

நெடுங்கேணியிலிருந்த எமது கொம்பனி புளியங் குளத்துக்கு நகரமுன்னர், தன்னைச் சந்தித்த விதுஷாவிடம் தலைவர் சில விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

“புளியங்குளச் சந்திப் பகுதியை லெப்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி பாதுகாக்கும். சந்திக் கருகே இராணுவம் வந்து நிலைகொண்டு சண்டை பிடிக்குமானால், சந்திப் பகுதியில் நடமாடுவது கடினம். நீண்டகாலம் நாம் புளியங்குளச் சந்தியை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டுமானால், நீங்கள் அவர்களுக்கு வெளிப்புறமாகத் தடுப்பரண்களை அமைத்துநின்று, சண்டையிட்டு இராணுவத்தினருக்குச் சேதத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். நீங்கள் போய் அதைச் செய்யுங்கள்”

என்றார். நாங்கள் புறப்பட்டோம்.

புளியங்குளம் விடுதலைப் புலிகளின் தளமானது. தளத்திலேயே தளத்துக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாகச் செய்யப்பட்டன. புளியங்குளத் தளத்தை நெருங்க முனையும் படையினரைத் தடுப்பதற்காக மேலதிக பாதுகாப்பு வளையங்கள் பலமாக அமைக்கப்பட்டன. அந்த நிலைகளில் மேலாளர் தட்சாயினியுடன் ஆனந்தியின் கொம்பனி நிலைகொண்டது. படையினரால் புளியங்குளத்தில் நிற்கும் புலியணிகளோடு முதலில் மோத முடியாது. வெளியில் நிற்கும் கொம்பனிகளோடுதான்



படிப்பகம்

padippakam



சண்டையிடவேண்டும். வெளிப் பாதுகாப்பு வளையத்தில் நின்ற எமது கொம்பனி, தனது நிலைகளுக்கான மேலதிகத் தடுப்பு அணையாகத் தனக்கு வெளிப்புறமாகக் கொம்பனியின் வேவு அணியினரை நிலைப்படுத்திவிட்டிருந்தது.

இப்போது புலிகளின் சக்கர வியூகம் தயார். மகாபாரதத்துச் சக்கர வியூகத்துள் நுழைவது கடினம். நுழைந்தவர் வெளித் திரும்புவது அதைவிடக் கடினம். வெளித்திரும்பும் முறையை அறியாது உள்நுழைந்த அபிமன்யு, சக்கர வியூகமிட்டிருந்த கௌரவர் சேனைகளால் கொல்லப் பட்டார் என்று மகாபாரதம் கூறுகிறது.

புலிகளின் சக்கர வியூகத்தை மாதக் கணக்காக முயன்றும் சிறீலங்காப் படைகளால் உடைக்கமுடிய வில்லை. தலைவர் அவர்களின் பணிப்பின்பேரில் எமது அணிகள் சக்கர வியூகத்தை விலக்கிக்கொண்டு, வேறொரு முனையில் வேறொரு வியூகத்தை வகுத்த பின்னர்தான், புளியங்குளத்தில் கால்வைக்க சிறீலங்காப் படைகளால் முடிந்தது.

அன்றைய சண்டையை நாம் எதிர்கொண்டதைப் பற்றி, சிறப்புத் தளபதி விதுஷா சொல்கின்றார்.

"அப்போதுதான் நாங்கள் அங்கே போயிருந்தோம். மேஜர் அரசி படையினரின் நிலைகளை இனங் காணும் வேலையில் வேவுப் போராளிகளுடன் ஈடு பட்டுக்கொண்டிருந்தார். யாழ் நெடுஞ்சாலைக்கு இரு புறமுமே எமது காப்பரண் வேலைகள் முடிவடைந் திருக்கவில்லை. எனது கட்டளைப் பணியகம்கூடத் தயார்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.



படிப்பகம்

padippakam



அன்று நான் வேறொரு இடத்தில் நின்றபோது காலை 4.30 அளவில், 'இராணுவம் நகரப்போகின்றது போல் உள்ளது' என்று அரசி எனக்கு அறிவித்தார்.

நான் அவசரமாகப் புளியங்குளத்துக்குப் போய், தொலைத்தொடர்புக் கட்டமைப்பை ஏற்படுத்திவிட்டு, சிகிச்சைகளுக்காகப் பின்னணிக் கள மருத்துவ நிலையில் நின்ற போராளிகளை மருத்துவப் பொறுப்பாளர் கஜேந்தியுடன் கதைத்து ஒழுங்குபடுத்தி முன்னரங்க நிலையில் விடும்வரை, முன்னேறி வந்த இராணுவத்தினருடன் அரசியின் வேவு அணியினரே சண்டையிட்டுக்கொண்டிருந்தனர்.

ஒன்பது மணியளவில் அரசியின் அணியைப் பக்கவாட்டாக நகர்ந்து முன்னரங்குக்கு வரும்படி பணித்தேன். அவர்களில் ஓரிருவர்தான் எஞ்சியிருந்தனர். அதுவரை எல்லா வேலைகளையுமே எறிகணை மழையின்நடுவேதான் செய்துகொண்டிருந்தோம். ஒன்பது மணியளவில் சண்டை எமது முன்னரங்கில் ஆரம்பமாகியது.

அன்றைய நகர்வில் ராங்கிகளும் பங்கேற்றன. ஒரு ராங்கி எமது கண்ணிவெடியில் சிக்கிக்கொண்டது."

ஒரு குறிப்பிட்ட பகுதியை 1997.06.23 அதிகாலையில் செறிவான சூடுகளால் இராணுவம் தாக்கிக்கொண்டிருக்க, செல்வியின் கொம்பனி பலமாகத் திருப்பித் தாக்கிக் கொண்டிருந்தது. ராங்கிகளின் பலத்த அடியால் எமது காப்பரண்கள் தூக்கி விசிறப்பட்டு மண் குவியல்களாகின. மீளவும் காப்பரண்களை வெட்டிக்கொண்டிருக்க நேரமும் இல்லை. நிமிர்ந்து நின்று வெட்டவும் முடியாத சூழலில், எமது அணியினர் தூர்ந்த காப்பரண்களை அவசர அவசரமாகக் கைகளால் கிளறிப் பள்ளம் அமைத்து, அதில்



படிப்பகம்

padippakam



பதுங்கியிருந்து சுட்டனர். ராங்கிகள் மழை பொழிவது போல் எறிகணைகளை ஏவிக்கொண்டிருக்க, கற்பனைக் கும் எட்டாதவகையில் எமது படையணியின் போராளிகள் அன்று சண்டை பிடித்தனர். மரங்களெல்லாம் முறிந்து விழுந்தன. எறிகணைகளின் வெடிப்போடு மேலெழுந்து பறக்கும் மண் எங்களையும் ஆயுதங்களையும் குளிப்பாட்டி யது. ஆயுதங்களுக்கு இயங்குநிலைத் தடை ஏற்பட்டது. எவற்றாலும் எங்களின் மன உறுதியையோ, சண்டை யிடும் ஆற்றலையோ சிதைத்துவிடமுடியவில்லை. இயங்குநிலைத்தடை ஏற்பட்ட தனது PK LMG இனை மிக வேகமாகச் சீர்செய்துகொண்டு மேஜர் திரேசா சுட்டுக் கொண்டிருந்தார். முன்னேற முயன்ற படையினரின் ராங்கிகளை நாங்கள் எல்லோருமே கைகளில் வைத்தி ருந்த அனைத்து ஆயுதங்களாலும் தாக்கினோம்.

யாழ் நெடுஞ்சாலைக்கும் புகையிரத வீதிக்குமிடையே எஞ்சியிருந்த ஒரு காப்பரணில் நின்ற திரேசா, தான்மட் டுமே நிற்பதாகவும் தனக்கு வலப்புறமுள்ள காப்பரண் களில் நின்றவர்கள் காயமும் வீரச்சாவுமடைந்துவிட்டதை யும் விதுஷாவுக்குத் தெரியப்படுத்தினார். விதுஷாவின் கட்டளைப்படி வலதுபக்கக் கடைசிப் பிளாட்டுனிலிருந்து ஒரு செக்சனுடன் புறப்பட்டு வந்த மேஜர் துஷா படை யினரின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில், எரிகுண்டு களால் எரிக்கப்பட்டும், எறிகணைகளால் தூக்கி விசிறப் பட்டும் வெட்டையாக்கப்பட்டுக் காப்புகளற்றிருந்த பகுதி யில் ஆட்களற்ற காப்பரண்களுக்கு இரண்டிரண்டு பேராக விட்டு திரேசாவின் காப்பரணோடு இணைப்பை ஏற்படுத்தி னார்.

அப்போது மதியமாகிவிட்டது. படையினருக்கும் பலத்த இழப்பு ஏற்பட்டிருந்ததால், தமது முன்னேற்றத்தை நிறுத்தி னர். ஆனால், எறிகணைகள் எம்மைத் தேடிவந்துகொண் டேயிருந்தன. எனினும் சண்டை முடிவுக்குவரவில்லை என்பதை உணர்ந்த விதுஷா, அன்றே மறுபடியும் ஒரு



படிப்பகம்

padippakam



நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் எதிர்கொள்வதற்கேற்ப அணிகளைத் தயார்ப்படுத்தினார்.

எமது முன்னரங்கில் நின்றவர்கள் தயாரானார்கள். ராங்கிகள் வந்தால் அடிப்பதற்கு RPG காரர்கள் தயாரானார்கள். ராங்கிகள் வரும் வழியைத் துடைத்தழிக்க எறிகணை செலுத்திகள் தயாராயின.

எதிர்பார்த்ததுபோலவே பி.ப. 3.00 மணியளவில் ராங்கிகள் இரைந்தவாறும் எறிகணைகளை வீசியவாறும் யாழ் நெடுஞ்சாலைக்கும் புகையிரதப் பாதைக்குமிடையே செறிவாக வரத்தொடங்கின.

திட்டமிட்டபடியே வலதுபுறம் புகையிரதப்பாதை அருகே ராங்கிகள் உள்நுழையமுற்பட்டன. அவை காப்பரண்களை மிக நெருங்கிவிட்டதால், அம்மணி தனது RPG உடன் எமது முன்னரங்கின் முன்புறம் 75மீ. பக்கவாட்டாக ஓடிப்போய் அங்கிருந்து ராங்கியை அடித்தார். சிறு கோயிலின் மறைவில் நிற்பதும், வெளிவந்து அடிப்பதும் மறுபடி மறைவதுமாகப் போக்குக் காட்டிக்கொண்டிருந்த இன்னொரு ராங்கி, கப்டன் செண்பகத்தினதும் விடுதலையினதும் RPG அடியால் செயலிழந்தது. எமது பகுதிக்கென ஒதுக்கப்பட்டிருந்த 120மி.மீ. எறிகணை செலுத்தி அப்பகுதியைநோக்கி மிகக் கடுமையான எறிகணைத் தாக்குதலைச் செய்தது. சேதமடைந்த ராங்கிகளை ஏனைய ராங்கிகள் இழுத்தவாறே பின்னகர்ந்தன.

**“மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எமது பகுதிக்கென எறிகணைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. அவற்றை நான் கேட்டபடி நெடுஞ்சாலைக்கும் புகையிரத வீதிக்குமிடையே ராங்கிகள் நகர்ந்துவந்த பகுதிக்கு ஏவிக்கொண்டிருந்தார் 120மி.மீ. எறிகணை செலுத்தி அணி ஒன்றுக்குப் பொறுப்பாக இருந்த ஜெனிபா அவர்கள்”**



படிப்பகம்

padippakam



என்று கூறினார் விதுஷா.

இந்த முறியடிப்புச் சண்டையோடு 'புளியங்குளம்' புகழ் பெற்ற 'புலிகளின்தளம்' ஆனது. செய்தி ஊடகங்கள் யாவும் புளியங்குளத்தில் புலிகள் தளம் அமைத்துள்ளார் கள் என்றும், முன்னேறி வந்த படையினரோடு மகளிர் படையணிகள் தீரமுடன் போரிட்டன என்றும் செய்தி களை வெளியிட்டன.

வெரித்தாஸ் வானொலியில், அந்நாளைய தமிழ் பணிப்பொறுப்பாளர் ஜெகத் கஸ்பார் அவர்கள் புளியங் குளத்தில் போரிட்ட பெண் போராளிகளின் ஆற்றலை வியந்து பேசியதை, முன்னரங்கில் நின்ற நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம்.

இதற்கு அடுத்தநாள் இரவு 1997.06.24 இல் ஓமந்தை-பெரியமடுத் தளம் எம்மால் ஊடுருவித் தாக்கப்பட்டது.

பெரியமடுவை ஊடுருவித்தாக்கும் திட்டம் ஏற்கனவே வெற்றிநிச்சம் எதிர்நடவடிக்கைக் கட்டளைப் பணியகத் திடமிருந்தது. வேவுத் தகவல்கள் திரட்டப்பட்டுக்கொண்டி ருந்தன. பின்னணிப் பகுதியொன்றிலே தட்சாயினியின தும் லெப்.கேணல் சந்திரகாந்தனதும் இரு கொம்பனிகள் பயிற்சியெடுத்துக்கொண்டிருந்தன. அவையிரண்டும் உடனடியாகவே பெரியமடுவைநோக்கி நகர்த்தப்பட்டன.

பெரியமடுவில் யாழ் நெடுஞ்சாலையைக் குறுக்கறுக் கும் எமதணிகள் வவுனியாநோக்கிய திசையில் மறிப்பு ஒன்றை ஏற்படுத்திவிட்டு, புளியங்குளம்நோக்கித் திரும்பி, அங்கிருந்து புளியங்குளம் பகுதிவரை நெடுஞ்சாலையின் இருமருங்கும் படையினர் அமைத்திருந்த பாதுகாப்பரண் களையும் தளங்களையும் அழித்தவாறு வருவார்கள். நட வடிக்கையை இவர்கள் நிறைவுசெய்யுமிடத்துக்கு வேறொரு வழியால் கட்டளைத் தளபதி ரமேஷுடன்



படிப்பகம்

padippakam



அன்பரசி படையணி வந்து நிற்கும். அவர்களை இவர்கள் சந்திப்பார்கள்.

தட்சாயினியும் சந்திரகாந்தனும் தமது கொம்பனிகளுடன் காடுகளுக்குள்ளால், மக்களற்ற குடியிருப்புகளுக்குள்ளால் நடந்தார்கள். அவர்கள் வவுனியாநோக்கிய திசையில் நெடுஞ்சாலையின் இடதுபுறமாக நகர்ந்து கொண்டிருந்தார்கள். முதலில் தடையுடைக்கும் பிளாட்டூன் ஒன்றுடன் சந்திரகாந்தன், அடுத்ததாக பூமளாவின் பிளாட்டூனுடன் கொம்பனியின் மூன்றாவது கட்டளையதிகாரி ஆனந்தி, பின்னர் இரு கொம்பனிகளதும் ஏனைய பிளாட்டூன்கள் என்றவாறாக நகர்ந்து, தடையை நெருங்கி நிலையெடுத்தார்கள். தடையுடைக்கும் அணி தடைகளைத் தகர்த்துவிட்டது. ஆனால் மேலும் 100மீ. உட்புறமிருந்து படையினரின் அடி கடுமையாக வரத்தொடங்கியபோதே, நாம் தகர்த்தது ஒரு போலித் தடை என்பது புரிந்தது. சந்திரகாந்தனுடன் முதலில் போன அணி பலத்த இழப்புகளைச் சந்திக்க, அவர்களது அடுத்த அணியும், பூமளாவின் பிளாட்டூனிலிருந்து ஒரு செக்சனுமாக இணைந்து முன்னரங்கக் காப்பரண்களுக்கான தடையைத் தகர்க்க, இரு பிளாட்டூன்களுமே வேகமாக உள்நுழைந்தன. ஏனையவை, தேவையேற்பட்டால் உள்ளே வருவதற்கேற்ப வெளியரண்களிலும் போலித் தடையடியிலும் நிலை கொண்டன. வேறு காப்புகள் அந்தப் பகுதியில் இருக்கவில்லை.

வெளியரண்களில் அணிகளோடு நின்ற தட்சாயினி, மேஜர் ரதி, மேஜர் இந்திரா முதலானோர் தாண்டிக்குளத் திசையிலிருந்து வந்த இராணுவ உதவியணிகளைத் தடுத்தவாறும், எதிர்ப்புகளை முறியடித்தவாறும் நிற்க, உள்ளே ஆனந்தியோடு போன பூமளாவின் பிளாட்டூனும் சந்திரகாந்தனோடு போன ஜெயந்தன் படையணியின் பிளாட்டூன் ஒன்றுமாக இணைந்து, உள்நுழைந்த பாதையின் வலப்புறமிருந்த சிறுதளம் ஒன்றின் எதிர்ப்பை மிகக்



படிப்பகம்

padippakam



கடுமையான சண்டையின்பின் கட்டுப்படுத்தினார்கள். அது ஒரு மருத்துவத் தளம். அருகே நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஊர்திகளையும் தாக்கிச் சேதப்படுத்தியபின், நெடுஞ் சாலைக்கும் முன்னரங்குக்குமிடையிலான பகுதியைத் தேடி அழித்தல் செய்தவாறு சந்திரகாந்தன் புளியங்குளம் நோக்கி நகரத்தொடங்க, நெடுஞ்சாலையைக் கடந்து மறு புறம்போக முயன்ற ஆனந்தியின் அணியை உள்நுழைவுப் பாதையின் இடதுபுறமிருந்த தளமொன்றிலிருந்து வந்த படையினரின் செறிவான தாக்குதல் தடைப்படுத்தியது.

நெடுஞ்சாலையைக் கடக்கமுதல் எமது அணிக்கு இது இரண்டாவது சண்டை. சூடுகளை வழங்கியவாறு மிக நெருங்கிக் குண்டுகளை வீசியெறிந்தார்கள். படையினரின் எதிர்ப்பை முழுமையாக முறியடித்து, கட்டிடத்தின் உட் புறமாகக் குண்டுகளை வீசிவிட்டு வேகமாக நெடுஞ்சாலை யைக் கடந்து, வீதியின் பாதுகாப்புக்காக மறுபுறம் அமைக் கப்பட்டிருந்த படையினரின் முன்னரங்க நிலைகளை உட்புறமாகத் தாக்கியது ஆனந்தியின் அணி.

திடீரெனப் பாரிய வெடிப்பொலிகள் கேட்கத்தொடங் கின. இவர்கள் குண்டுகளை வீசியெறிந்துவிட்டு வந்த வெடிபொருட்களஞ்சியம் வெடித்துச் சிதறத் தொடங்கி விட்டிருந்தது. நெடுஞ்சாலையின் இரு மருங்கும் ஒவ்வொரு கி.மீ. தூரத்திலேயே படையினரின் முன்னரங்கக் காப் பரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. உடைத்து உள்நுழைந்த பக்கக் காப்பரண்களில் நின்ற எம்மவர்களுக்குத் தாண்டிக் குளத் திசையிலிருந்து வந்த சூடுகள்மட்டுமன்றி, வெடி பொருட்களஞ்சியத்திலிருந்து பறந்த சிதறுதுண்டுகளும் காயங்களை ஏற்படுத்தின. வீதிக்கு மறுபுறம் கைப்பற்றப் பட்ட காப்பரண்களில் ஆட்களை விட்டவாறு போய்க் கொண்டிருந்த பூமளாவின் பிளாட்டூனையும் சிதறு துண்டுகள் சும்மாவிடவில்லை.



படிப்பகம்

padippakam



இந்த மாபெரும் வெடித்தலினால் வெளியில் நின்ற ஏனையவர்கள் உள்நுழைவது தாமதமாகிக்கொண்டிருந்தது. ஆனந்தியின் அணி வீதிக்கு மறுபுறமிருந்த பாதையொன் றைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால், அவ்வழியே எமது ஊர்திகள் உள்ளே வந்து வீரச்சாவடைந்தோரையும் காயக்காரர்களையும் கைப்பற்றப்பட்ட ஆயுத வெடிபொருட் களையும் வெளியேற்றிக்கொண்டிருந்தன. தேடி அழித்தல் செய்தவாறே புளியங்குளம்நோக்கி நகர்ந்த எமதணி புளியங்குளத்திலிருந்த எமது முன்னரங்குக்கும் இப்பால் சூனியப் பகுதியினுள் ரமேஷுடன் வந்துநின்ற அன்பரசி படையணியின் அணியொன்றைச் சந்தித்தது.

நெடுஞ்சாலைக்கும் உள்நுழைந்த பாதைக்கும் இடைப் பட்ட பகுதியைத் தேடி அழித்தல் செய்தவாறு போய்க் கொண்டிருந்த சந்திரகாந்தனின் அணியின் முன்னேற் றத்தை இடையிலிருந்த படையினரின் தளமொன்று தடைப்படுத்தியது. படையினரோடு மூண்ட சண்டையில் அவ்வணிக்குப் பலத்த இழப்பு உண்டானது. வெளிப்புறக் காப்பரண்களில் நின்றவர்கள் இராணுவ உதவியணிக ளோடு சண்டையிட்டதாலும், வெடிபொருட்களஞ்சியத் தின் சிதறலினாலும் இழப்புகளைச் சந்தித்திருந்ததால், உதவியணியொன்றை அனுப்பமுடியாத நிலையிலிருந் தார்கள். எனவே நிலைமையை ஆனந்திக்குத் தெரியப் படுத்தினார் சந்திரகாந்தன். மட்டுப்படுத்தப்பட்டளவு போராளிகளைக் காப்பரண்களில் நிறுத்திய ஆனந்தி, சந்திரமதியின் செக்சனோடு நெடுஞ்சாலையைக் கடந்து இந்தப் பக்கம் வந்து, தாக்கிக்கொண்டிருந்த படையினரைத் தளத்தைவிட்டு முன்னேறவிடாது தடுத்தவாறு, சந்திர காந்தனோடு இருந்த காயக்காரர்களையும் வீரச்சாவடைந் தோரையும் தூக்கிவர, வீதியில் காத்துநின்ற ஊர்திகள் அவர்களை வெளியேற்றிக்கொண்டிருந்தன.

இப்போது தாண்டிக்குளம் பகுதியிலிருந்து முன்னேறி வந்த படையினர் ஊர்திகள் உள்வந்து, வெளிச்சென்று



படிப்பகம்

padippakam



கொண்டிருக்கும் பாதையைத் தடைப்படுத்தினர். எனவே காயக்காரர்களையும் வித்துடல்களையும் நெடுஞ்சாலைக்கு அப்பால் பூமளாவின் கட்டுப்பாட்டிலிருந்த காப்பரண்களின் வழியாக வெளியேற்றிக்கொண்டிருந்தனர்.

விடியத் தொடங்கிவிட்டது. இராணுவ உதவியணிகள் எங்களை மிக நெருங்கிவிட்டிருந்தன. உள்ளே சந்திரகாந்த னும் ஆனந்தியும் விரல்விட்டு எண்ணக்கூடியளவு தொகை யிலான போராளிகளுமே நின்று, காயமடைந்த ஜெயந்தன் படையணிப் போராளிகள், அவர்களது சுடுபொறிகள் யாவற்றையுமே தூக்கி வெளியேற்றிக்கொண்டிருந்தனர். புளியங்குளத்திலிருந்து வவுனியாநோக்கிய திசையில் நெடுஞ்சாலையின் இடதுபுறமாக முதல்நாளிரவு ஊடுருவி உள்நுழைந்த எமதணிகள் மாபெரும் அழிவு நடவடிக்கை யைச் செய்துவிட்டு, நெடுஞ்சாலையின் வலதுபுறமாக மறுநாள் பகலில் வெளியேறியிருந்தன.

இப்போது புளியங்குளத்தின் வெளியரண்களில் நிலை கொண்டிருந்த ஆனந்தியின் கொம்பனியினதும் மேஜர் சந்திரிகாவின் கொம்பனியினதும் மேலாளர் ஆனார் தட்சாயினி. இரு கொம்பனிகளைவைத்து எதிர் நடவடிக் கைகளைச் செய்வதற்கு மிகப் பொருத்தமான கட்டளை அதிகாரி. கண்டிப்பும் கம்பீரமும் கலந்த வழிநடத்தல் அவருக்கே உரியது. கரகரத்த குரல் அவரது ஆளு மையை இன்னமும் அதிகப்படுத்திக்காட்டும். தட் சாயினிமீது தலைவர் அவர்களுக்குத் தனியான ஈடுபாடு உண்டு.

ஒன்றாவது ஊடுருவித் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாரானது. இந்தத் தாக்குதலில் புளியங்குளத் தளத்தில் நின்ற ஏனைய படையணி க்ளின் கொம்பனிகள் பங்குபற்றின. அவை திரும்பி வரும் வரை தளம் முழுவதையும் தட்சாயினியுடைய கொம்பனி



படிப்பகம்

padippakam



கள் பாதுகாத்தன. இரு கொம்பனிகளும் நின்ற வெளிப் புறக் காப்பரண்களில் எமது வேவு அணிகளை நிறுத்தி, லெப்.கேணல் காவியா காவல் நடவடிக்கைகளை மேற் பார்வை செய்தார்.

1997.08.01 இல் ஓமந்தை-இறம்பைக்குளம் பகுதியை ஊடுருவித் தாக்கி, அழிப்பு நடவடிக்கையைச் செய்துவிட்ட அணிகள் மறுபடியும் புளியங்குளத் தளத்துக்கு வந்ததும், தட்சாயினி தன் கொம்பனிகளுடன் வெளிப்புறக் காப்பரண்களுக்குப் போய்விட்டார்.

இப்போது தட்சாயினியின் கம்பீரமான குரல் முன்ன ணிப் பகுதியில் ஒலிக்கத்தொடங்கியது. வயதுக்கேயுரிய முதிர்ச்சியும் நிதானமும் எப்போதும் அவரிடம் உண்டு. களங்களில் அவர் காட்டும் வெஞ்சினம், உடனிருக்கும் போராளிகளில் வைத்திருக்கும் அன்பு, பராமரிப்பு, வழி காட்டல், தவறு சிறிதென்றாலும் தயவு தாட்சணியமில்லா மல் அவர் வழங்கும் ஒறுப்பு, அதன் பின்னரான விளக்கம் எல்லாமாகச் சேர்ந்து எங்களிடையே அவரை ஒரு மதிப் புக்குரியவராக உயர்த்தியிருந்தது.

எமது படையணி பங்குகொண்ட அநேக களங்களில் தட்சாயினியின் கால்கள் நடந்திருக்கின்றன. உடல் முழுவதும் காயப்பட்டபின்பும் களத்தைவிட்டு அகல மறுத்து, விடாப்பிடியாகக் கள நடவடிக்கைகளோடே தம்மை இணைத்துக்கொண்டார். அனல் வீசும் வெற்றி நிச்சயம் நடவடிக்கைக் களத்தில் படைத்தரப்புக்கு மிகப் பெரும் சவாலாக விளங்கியிருக்கக்கூடிய அந்தக் கட் டளை அதிகாரி 1997.08.03 அன்று சிறீலங்கா வான்படை விமானங்கள் மேற்கொண்ட குண்டுவீச்சிலே எம்மைப் பிரிந்தார்.

ஈடுசெய்யமுடியாத இழப்பு அது. பொறுப்புகளை ஈடுசெய்யலாம். மனிதர்களை ஈடுசெய்வது இயலாத



படிப்பகம்

padippakam



விடயம். தட்சாயினிக்குப் பின், மேலாளர் எவரும் நியமிக்கப்படவில்லை. இரண்டு கொம்பனிகளது பொறுப்பாளர்களுமே தத்தமது கொம்பனி வேலைகளைக் கவனித்துக் கொண்டனர்.

ஊடகவியலாளர் மாநாடுகள் அடிக்கடி நடந்தன. பெருங்கடற்பரப்பில் எழும்பும் சூறாவளி ஒன்றின் நகர்வுபற்றி வானிலை அவதானிப்பு நிலையம் மணித்தியாலத்துக்கு ஒரு தடவை புதிய தகவல்களை அறிவிப்பதுபோன்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க வெற்றி நிச்சயம் படை நடவடிக்கை பற்றி நாள்தோறும் விதம்விதமான செய்திகளை வெளியிடுவார். அவை முன்னுக்குப் பின் முரணாக அமைவதைப்பற்றி அவர் சிறிதளவும் கவலைகொள்வதில்லை.

“தலைவீங்கிய அரச பேச்சாளர்களின் பகட்டுப் பேச்சுக்களைக் கேள்விப்பட்டால், புதைகுழியினுள் இருக்கும் கிட்லரின் பரப்புரைப் பீரங்கி கோயபல்ஸ்கூடக் குழம்பிப் போவார்”

என்று, முன்னாள் எயார் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக வெளிப்படையாகவே சரத்தைக் கேலி செய்தும், சரத்தின் போக்கில் மாற்றம் இருக்கவில்லை.

அன்றைய சந்திப்பு இப்படிப் போனது.

“வெற்றி நிச்சயம் சண்டை நடைபெறும் பகுதியில் ஆறாயிரம் புலிகள்தான் உள்ளனர். அவர்களில் இரண்டாயிரம் புலிகள் இறந்துவிட்டனர். மூவாயிரத்து ஐநூறு புலிகள் காயப்பட்டுள்ளனர்”

என்றார் சரத் முனசிங்க.



படிப்பகம்

padippakam



"அப்படியானல் மீதியாகவுள்ள ஐநூறு புலிகளுடன்தான் இவ்வளவு காலமாக இராணுவம் சண்டையிடுகின்றதா?"

என்றனர் ஊடகவியலாளர்கள்.

"இருக்கலாம். மிகுதியாக உள்ளவர்களையும் அழித்து விடுவோம்"

என்றார் சரத்.

ஏற்கனவே 'புளியங்குளத்தைப் பிடித்துவிட்டோம், புளியங்குளத்தைப் பிடித்துவிட்டோம்' என்று, புளியங்குளத்தைப் படையினர் நெருங்காதநிலையிலேயே பல தடவைகள் சொல்லிவிட்ட சரத்தின் இந்தக் கதையைக் கேட்டு அழுவதா, சிரிப்பதா என்று ஊடகவியலாளர்களுக்குப் புரியவில்லை.

உண்மையான கள நிலவரமோ எந்த எழுத்தாளரின் கற்பனைக்கும் எட்டாத விதத்தில் இருந்தது.

**"மலையாக எதிரியும் மடுவாக நாமும் சமச்சீரற்ற இராணுவநிலையில் நின்றபோதும், இந்த நீண்ட சமரில் எமது போராளிகள் வெளிக்காட்டிய நெஞ்சுறுதியானது எமக்கு மலையான பலத்தைக் கொடுத்தது. இந்த மலையான பலமே வன்னியில் சிங்கள இராணுவத்தை நிலைகுலையவைத்தது"**

என்ற தலைவரின் கூற்றுமட்டுமே உண்மையான கள நிலைமையை வெளிப்படுத்தியது.

பாதை திறப்பதைப்பற்றி இப்போது வந்து கருத்துக் கேட்கும் இந்த ஊடகவியலாளர்களில் எவராவது, அப்போதே எங்களிடம் வந்திருந்தால், உண்மையில் நடந்துகொண்டிருப்பது என்ன என்பதை அவர்கள் நேரடியாகவே உணர்ந்திருப்பார்கள்.



படிப்பகம்

அந்த நடவடிக்கையைப் படையினர் 1997.08.20 காலையில் ஆரம்பித்தனர். புளியங்குளத்தில் யாழ் நெடுஞ்சாலைக்கு இடதுபுறம் நின்ற ஆனந்தியின் கொம்பனியின் கடைசி இரண்டு காப்பரண்களும் நெடுஞ்சாலையின் வலப்புறத்தில் அமைந்திருந்தன. இந்த இரண்டைத்தவிர வலதுபுறமிருந்த ஏனைய காப்பரண்கள் அனைத்தும் மேஜர் சந்திரிகாவின் கொம்பனியுடையவை. குஞ்சைப் பாதுகாக்கும் கோழிகளின் சிறகுகள்போல் புளி யங்குளத்தைப் பாதுகாப்பதற்காக எமது கொம்பனிகள் இருபுறமும் விரிந்திருந்தன.

பண்டை நாளில் படைகள் முரசறைந்து, கொம்பு ஊதிப் போருக்குப் புறப்படுவதுபோன்று ராங்கிகளின் இரைச்சலுடன், எறிகணைகளின் கூவலுடன் சிறீலங்காப் படையினர் முன்னகரத்தொடங்கினர். ஆர்ப்பாட்டமாய் வந்த கோலியாத்தைத் தாவீது எதிர்கொண்டான்.

சுடுகுழல்களை நீட்டியவாறு அசல் வன்னிக் காட்டு யானைகள்போன்று நகர்ந்த ராங்கிகளோடு மனிதர்கள் மோதிய சண்டை அது. சண்டை வீதியின் இடப்புறம் நின்ற ஆனந்தியின் கொம்பனியோடு மூண்டது. ஆனந்தி யின் கொம்பனி நிலைகொண்டிருந்த முடிவிடத்துக்கு முன்னே ஒரு குளத்தினுடைய மண்ணாலான கட்டு இருந் தது. அந்தக் கட்டோடு மருத மரங்கள் சோலையாக நின்றன. குளத்துக்குரிய நீர் வழிந்துவரும் பாதையை ஊடறுத்து அமைக்கப்பட்ட காப்பரண்களின் முன்புறமும் பின்புறமும் வெட்டை. காப்பரண்களோடிருந்த மண் அணையையும் நகர்வகழியையும் பயன்படுத்தித்தான் எமது அணிகள் அவ்விடத்தில் நடமாடுவது வழமை.

சந்திரிகாவின் கொம்பனிநோக்கியும் படையினரின் செறிவான தாக்குதல் கிடைத்துக்கொண்டிருந்தது. ஆனந் தியின் கொம்பனிக்கு முன்னாலான மறைப்பு வேலிகள் எரியத்தொடங்கின. மரங்கள் அடியோடு சரிந்தன.

padippakam



கிளைகள் பறந்து எங்கோ போய்விழுந்தன. ராங்க் அடியால் மண் அணை அதிரத்தொடங்கியது. நிலத்துக்குமேல் வெளித்தெரிந்த காப்பரண் குற்றிகள், மண்மூடைகள் எல்லாம் எறிகணைகளோடு அள்ளுண்டுபோயின. செவிப்பறையைக் கிழித்தவாறு சண்டை தொடர்ந்தது. நிர்வாகப் பகுதியிலிருந்து செக்சன் ஒன்றின் கட்டளையதிகாரியாகப் போய்நின்ற நளாயினிக்கும் கனரக ஆயுதப் பயிற்சியாசிரியர் சுதாவுக்கும் காதுகள் கேட்காமலே போய்விட்டன.

ஆனந்தியின் கொம்பனியின் நிலவரத்தைத் தெளிவாக அறிந்துகொண்ட விதுஷா, உடனே ஒரு உதவியணியை ஆனந்தியின் பக்கம் அனுப்பும்படி சந்திரிகாவிடம் பணித்தார். சந்திரிகாவின் கொம்பனியின் பதில் பொறுப்பாளராக இருந்த தமிழ்செல்வி, கப்டன் நிரோசாவின் பிளாட்டூனைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டார்.

மறைப்பு வேலி எரிந்துவிட்டதால், நிமிர்ந்து ஓடிப்போக முடியவில்லை. வவுனியா ஆட்லறி ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் வகை தொகையில்லாமல் பரவலாக வந்து விழுந்துகொண்டிருந்தன. சண்டை நடக்குமிடத்துக்கு உதவியணிகள் எதுவும் வந்துசேராதபடி MI 24 உலங்குவானூர்தி தாழப்பறந்து சுடத்தொடங்கியது. சுப்பர்சொனிக்கும் மிக்கும் குனிவதும் நிமிர்வதுமாக விளையாட்டுக் காட்டத்தொடங்கிவிட்டிருந்தன. ராங்க் எறிகணைகள் கண்மண்தெரியாமல் வந்து விழுந்துகொண்டிருந்தன. யாழ் நெடுஞ்சாலையைக் கடப்பது தற்கொலைக்குச் சமமான விடயமாக இருந்தது. படையினரின் பதுங்கிச் சூட்டாளர்கள் பார்த்துப் பார்த்துச் சுடத்தொடங்கிவிட்டிருந்தார்கள். நெடுஞ்சாலையைக் கடந்து மறுபுறம் வந்து ஆனந்தியைச் சந்தித்தபோது, தமிழ்செல்வி, நிரோஷாவுடன் இரண்டு செக்ஷன்களுக்கு அளவானவர்களே எஞ்சியிருந்தனர். உடனேயே இரண்டு செக்ஷன்களையும் சீரமைத்தார் தமிழ்செல்வி.



படிப்பகம்

வீதியின் இடதுபுற நிலைமை சிக்கலானதாகவே இருந்தது. காப்பரண்கள் ஒன்றையும் காணவில்லை. மேற்பகுதி பறந்தும், கீழ்ப்பகுதி தூர்ந்தும்போயிருந்தன. உள்ளே மூடுண்டவர்களில் தூர்ந்த காப்பரண்களிலிருந்து மரக் குற்றிகளையும் மண்ணையும் விலக்கிக்கொண்டு வெளியே வரமுடிந்தவர்கள் வந்து நகர்வகழிக்குள் குதித்து நின்று சண்டையிட்டனர்.

நெடுஞ்சாலைக்கு இடதுபுறம் ஆனந்தியின் கொம்பனி துண்டாடப்பட்ட நிலையில் நின்றது. நெடுஞ்சாலையோடு இருந்த காப்பரண்களில் ஆட்கள், நீரோடு பகுதியிலுள்ள காப்பரண்களில் ஆட்களில்லை, அதன் பின்னரான காட்டுப் பகுதிக்குள் ஆட்கள் என்றவாறு நிலைமை இருந்தது. இடையிலிருந்த நீரோடு பகுதி எம்மைச் சண்டைக்கு வாய்ப்பற்ற நிலைமைக்குத் தள்ளிவிட்டிருந்தது.

நெடுஞ்சாலையின் வலதுபக்கத்தால் உள்நுழைய முடியாமற்போக, ராங்கிகள் மறுபடியும் ஆனந்தியின் பக்கம் செறிவாகத் தாக்கியவாறு நகரத்தொடங்கின.

ஒரு பெரும் இரைச்சலுடன் முதல் ராங்கி மிக வேகமாக மருதங்காட்டை நோக்கிப் போனது. பின்னாலே ஏனைய ராங்கிகளும் கவச ஊர்திகளும் முன்னைய ராங்கியைப் பின்தொடர்ந்தன. மருதமரச் சோலை அத்தனை இரும்புப் பிசாசுகளையும் உருமறைத்துக்கொண்டது.

இப்போது மிச்சம் மீதியாக இருந்த காப்பரண்களும் ராங்கி அடியால் பிய்ந்து தொங்கிப்போயின. ராங்கியின் சுடுகுழல்கள்கூட வெளித்தெரியவில்லை. தலைக்கு மேலே எரித்த வெயில் கண்களைக் கூசவைத்தது. உற்று உற்றுப் பார்த்தும் ராங்கிகளின் மறைவிடத்தை மிகச் சரியாக இனங்காணமுடியவில்லை. இப்போது இராணுவப் பதுங்கிச் சூட்டாளர்கள் மருதங்கிளைகளுள் ஏறி நின்று

padippakam



எம்மைச் சுடத்தொடங்கினர். நகர்வழிக்கு மேலே எவரா லுமே தலையை உயர்த்தமுடியவில்லை.

ராங்கிகள் இதற்குள் தொடர்ந்து நிற்பதுபோல் எங் களுக்கு ஆபத்தான விடயம் வேறொன்றுமில்லை. தமிழ் செல்வியோடு வந்துநின்ற கப்டன் தயாவதி மருதமரச் சோலைக்கு RPG களை ஏவிக்கொண்டிருந்தார். அதற்குள் அவ்விடத்துக்கு RPG உடன் ஆண் போராளி ஒருவர் ஓடிவந்தார். நடந்த சண்டையில் தன் உதவியாளரை இழந்த அவர், மருதமரச் சோலைக்கு RPG அடிக்கத் தனக்கு உதவுமாறு தயாவதியிடம் கேட்டார். அவருக்கு உதவச் சம்மதித்த தயாவதி வேகவேகமாக எறிகணை களை அவரது RPG செலுத்தியில் பொருத்திவிட, அந்த வீரர் மிக வேகமாக மூன்று எறிகணைகளை ஏவினார். நான்காவது எறிகணையைத் தனது RPG செலுத்தியில் பொருத்திய தயாவதி மறுபடி மருதமரச் சோலையின் அசைவுகளைக் குறிகாட்டியினூடாகப் பார்த்துத் தனக் குரிய இலக்கைத் தேடினார். மருதமரக் கிளைகளிடையேயி ருந்து சீறிவந்த ஒரு ரவை தயாவதியின் நெஞ்சிலே தைத்தது. தோளிலிருந்த RPG உடன் சரிந்து விழுந்தார் தயாவதி.

சண்டையின் உச்சம் சிறிதும் தணியவில்லை. வெட் டைக்கு அப்புறம் ஒரு அணியை அனுப்பி, ஏற்கனவே அங்கே தனித்திருப்பவர்களையும் ஒன்று சேர்த்து, மருதமரச் சோலையைப் பக்கவாட்டாக வளைத்துத் தாக் கும்படி விதுஷா பணித்தார். கப்டன் சுருளினியின் செக் சனுடன் வெட்டையைக் கடக்கத்தொடங்கினார் நிரோஷா.

அது மிகவும் துணிச்சலான முடிவு. பட்டப் பகலில் வெட்டையில் நடந்தது அந்த ஓட்டம். தனக்குப் பின்னே அணிகளை ஓடிவருமாறு பணித்துவிட்டு முன்னே ஓடத் தொடங்கினார் நிரோஷா. ராங்கி எறிகணைகளும் ரவை களும் நிரோஷாவைத் துரத்தின. ஆனால், சிறு



படிப்பகம்

padippakam



கீறலைக்கூட ஏற்படுத்தமுடியாமல் தோற்றுப்போயின. வெட்டையை நிரோஷா கடந்த அதேவேகத்தில் தொடர்ந்து கடக்கமுடியாமல் அவரது அணி பின்தங்கியது. அதைவிட வெட்டையின் நீள அகலத்தை ராங்கி எறிகணைகள் அதற்குள் அளக்கத்தொடங்கிவிட்டிருந்தன. அந்தப் பக்கம் தனித்துநின்ற அணியிடம் நிரோஷாமட்டும் போய்ச் சேர்ந்துவிட்டிருந்தார். தனக்குத் தரப்பட்ட அணியினரைக் கூட்டிச்செல்லாமல், தான்மட்டும் தனித்து வெட்டையைக் கடந்த தவறுக்காக, சண்டை முடிந்தபின் நிரோஷா ஒறுப்பில்நிற்க நேரிட்டது.

இந்தச் சிக்கலான நிலைமையை கேணல் விதுஷாவிடம் தமிழ்செல்வியும் ஆனந்தியும் மிகத் தெளிவாக விளக்கினர். நிலைமையைப் புரிந்துகொண்ட விதுஷா, வீதிக்கு இடதுபுறம் நின்ற அணிகளைப் பின்னுக்கு எடுத்து, சற்று வளைத்து நிலைகளை அமைக்கும்படி பணித்தார். தமிழ்செல்வி தன்னோடு எஞ்சியிருந்த இரண்டு செக்சன்களையும் கூட்டிச்சென்று விதுஷா குறிப்பிட்டுச் சொன்ன இடத்தில், அங்கிருந்த காப்புகளைப் பயன்படுத்தி புதிய நிலைகளில் விட்டார்.

அதற்கு முன்னரே தமது செக்சன்களுடன் அவதானத்தோடு முன்னகர்ந்த கப்டன் சுருளினியும் தாமராவும் நகர்வ கழியினுள்ளே இயலாத நிலையிலிருந்த காயக்காரர்களை அகற்றினார்கள். வீரச்சாவடைந்தோரின் ஆயுதங்களையும் வித்துடல்களையும் முடிந்தவரை அகற்றினார்கள்.

இரு கொம்பனிகளுக்குமான பின்னணி ஒழுங்கமைப்பு மேஜர் கஜேந்தியின் பொறுப்பில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவர்கள் காப்பரண் வேலை செய்தபோது உரப்பைகள், மண்வெட்டிகள், சவள்கள், அது இதுவென்று ஓடி ஓடி ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்ததிலிருந்து எல்லாப் பின்னணி வேலைகளுமே மேஜர் கஜேந்திதான். சண்டை நடந்துகொண்டிருக்கும்போதே தனது



படிப்பகம்

padippakam



காவும் குழுவை அனுப்பி, வேகமாகக் காயக்காரர்களைத் தனது பின்னணிப் பதுங்குகுழிக்கு எடுத்து, அவசர முதலுதவிகளைச் செய்து ஊர்திகளிலேற்றி மருத்துவ நிலைகளுக்கு அனுப்பிக்கொண்டேயிருந்தார். ராங்கிகள் உள் நுழைந்து உலாவியதைப்பற்றியோ, அடர்த்தியான எறிகணை மழையைப்பற்றியோ கஜேந்தி சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை.

கஜேந்தியின் காவும் குழுவைச் சேர்ந்த சிவாஜினி ஒரு காயப்பட்ட போராளியைத் தூக்கிக்கொண்டு கஜேந்தியின் இடத்துக்கு ஓடி வந்தார். சிகிச்சைக்காக அவரைப் படுக்கவைத்தபோதுதான் வழியிலேயே அவரின் உயிர் பிரிந்துவிட்டிருந்தது தெரிந்தது. வித்துடலின் முகத்தை உற்றுப்பார்த்த சிவாஜினிக்குக் கண்கள் கலங்கின.

கஜேந்திக்கும் மனதைப் பிசைந்தது. இன்னமும் அகற்றப்படாமல் களமுனையில் கிடக்கும் காயக்காரர்களின் எண்ணிக்கை நினைவுக்கு வர, மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, சிவாஜினி தானாகவே ஆறுதலடையட்டும் என்று பேசாமலிருந்தார். இதெல்லாம் ஆகக்கூடியது ஒரு இரண்டு நிமிட நிகழ்வுதான். தன்னைத் திடப்படுத்திக் கொண்ட சிவாஜினி, கஜேந்தியைக் கூப்பிட்டார்.

“அக்கா, இது என்ர தங்கச்சி. இதிலேயே இருக்கட்டும். நான் பிறகு வந்து பார்க்கிறன்”

என்று சொல்லிவிட்டு ஓடிப்போனார். கஜேந்தி திகைத்துப்போனார்.

சண்டை தொடங்கிய நேரம் குழுக்களாகப் போன காவும் குழுவினர், இப்போது சிவாஜினியைப்போலவே தனித்தனியே போய் வந்துகொண்டிருந்தனர். காயக்காரரையோ, வித்துடலையோ முதலில் காணுபவர் தூக்கித் தோளில் சுமந்தவாறு ஓட்டத்தில் பின்னுக்குக்



படிப்பகம்

padippakam



கொண்டுவந்து கொடுத்துவிட்டு மறுபடியும் ஓட்டத்தில் முன்னுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். ஆளை ஆள் பார்த்துக்கொண்டிருக்க யாருக்கும் நேரம் இருக்கவில்லை. எறிகணை மழை இவர்களையும் விட்டு வைக்கவில்லை. காயக்காரர்களைத் தூக்கி வந்தவர்களும் காயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். வித்துடல்களைச் சுமந்து வந்தவர் களும் வித்துடல் ஆனார்கள்.

தூக்குவதற்கெனப் போனவர்களைக் காணவில்லை என்று கஜேந்தி ஓடிப்போய் நிலைமையைப் பார்த்து, தன்னி டம் எஞ்சியிருந்தவர்களை மீளவும் மீளவும் ஒழுங்கமைத்து அனுப்பிக்கொண்டிருந்தார்.

இருளும்வரை காத்திருந்து, வெட்டைப் பகுதிக்குள் புகைக்குண்டுகளை அடித்து, அந்தப் பக்கம் தனித்து நின்ற அணிகளை இந்தப் பக்கம் நின்றவர்கள் தம்மோடு எடுத்தார்கள். இரவிரவாக எல்லோருமாகப் புதிய நிலை களை வெட்டத் தொடங்கினார்கள். இவர்கள் நிலைகளை வெட்டிக் கொண்டிருக்கையிலேயே நிர்மாவுடன் வந்த எங்களுடைய கண்ணிவெடி அணியினர் முடிந்தவரை வேகமாகக் கண்ணிவெடிகளை விதைத்தனர்.

அந்நேரம், வெற்றி நிச்சயம் எதிர் நடவடிக்கைக் கட்ட ளைப் பணியகத்தின் பொறுப்பாளராக இருந்த கேணல் கருணா,

**"இன்று வடமுனை சமர்க்களத்தில் பெரும் சக்தி யாக மிளிரும் மாலதி படையணி, தான் கடந்து வந்த சமர்க்களப் பாதையெங்கும் தனது திறனாற்றலை வெளிப்படுத்திவந்துள்ளது. இவ்வகையில் விடுதலைப் புலிகளின் போரிடும் ஆற்றலை, போர்க் கள நுட்பங் களை உலகுக்கு உணர்த்திநின்ற பெருஞ்சமரான 'ஜெயசிக்குறு எதிர்ச்சமர்' இந்தப் படையணியின் வரலாற்றில் அதி உன்னதமானதொன்றாகும்.**



படிப்பகம்

padippakam



ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நீடித்த இச்சமரில் இந்தப் படையணி காட்டிய ஈகமும் வீரமும் இணை யற்றவை”

என்கின்றார்.

இந்த அடி அடித்தும் புளியங்குளத்தை நெருங்கப் படையினரால் முடியவில்லை. கிட்லரின் ஜேர்மனிய இராணுவம் ரஷ்யாவின் தரைத் தோற்றம், காலநிலை மாற்றம் என்பவற்றை உணர்ந்துகொள்ளாமல், பெரும் படையாக ரஷ்யாவினுள் புகுந்து, குளிருக்கும் பனிக்கும் ஈடுகொடுக்கமாட்டாமல் மடிந்து, சிறு படையாக வெறுங்கையோடு திரும்பிவந்த முட்டாள்தனம், அத்தோடு உலகில் முடிவுக்குவரவில்லை. புளியங்குளத்துக்குப் போகின்றோம் என்று பறையறைந்தவாறு நெடுஞ்சாலைக் குப் பக்கவாட்டாகத் தேவையற்று நகர்ந்து, வன்னிக்காட் டின் இயல்பைப் புரிந்துகொள்ளாமல் அதன் மர்மத்துக்குள் புதைந்து, என்ன செய்வதென்று தெரியாமல் நின்ற முட் டாள்தனம் சிறீலங்காவின் இராணுவ வரலாற்றில் வெற்றி நிச்சயம் நடவடிக்கைக் காலத்தில் பலதடவைகள் நடந்தன.

மருதமரச் சோலைக்குள் எத்தனை நாட்களுக்கென்று அத்தனை ராங்கிகளையும் வைத்துக்கொண்டு நிற்கமுடி யும்? ராங்கிகள் தங்கள் பழைய நிலைகளுக்குத் திரும்பின. ஆனால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தியறிக்கையில், படையினர் பாரிய முன்னேற்ற நகர் வொன்றைச் செய்ததாக மறுபடியும் மறுபடியும் அறிவித் தது. அந்த வானொலி அந்நேரத்தில் ஒலிபரப்பும் தகவல் களில் சாவு அறிவித்தல்களைத்தவிர, ஏனையவை நம்ப முடியாத பொய்களாகவே இருந்தன.

புதிதாக அமைக்கப்பட்ட காப்பரண்களில், மீளமைக்கப் பட்ட எங்களின் கொம்பனி நின்றது. எங்களுடைய எல்லாப் பொறுப்பாளர்களுமே தமது பொறுப்பிலிருந்து ஒருபடி



படிப்பகம்

padippakam



கீழே இறக்கப்பட்டிருந்தோம். ஆனந்தி கொம்பனிப் பொறுப்பாளராகவும் முல்லை பதில் பொறுப்பாளராகவும் விடப்பட்டிருந்தனர். புளியங்குளத்தைப் பிடிக்கும் எதிர்த் தரப்பின் நோக்கத்தை முறியடிப்பதில் நாங்கள் வெற்றி கண்டிருந்தோம். ஆனால் இன்னும் வேகமாகச் செயற்பட்டு, உயிரிழப்புகளைக் குறைக்கும் முயற்சியில் நாங்கள் ஈடு பட்டிருக்கலாம் என்பதற்காக அந்தப் ஒறுப்பு தலைவரால் வழங்கப்பட்டிருந்தது. பொறுப்புக் குறைக்கப்படுவதை 'காற்று இறங்குதல்' என்று அந்நேரம் நகைச்சுவையாகக் குறிப்பிடுவோம். வெற்றி நிச்சயம் களமுனையில் காற்று இறங்குவதைப்பற்றி ஒருவரும் கவலைப்படுவதுமில்லை. காற்று ஏறுவதையிட்டுப் பெருமைப்படுவதுமில்லை. எல் லோருடைய மனமும் படைத்தரப்பின் நோக்கத்தைச் சிதறடிக்கும் தலைவரின் எண்ணத்தை ஈடேற்றவேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தது.

சிறீலங்காவின் வில்பத்து, யா எல காட்டுப் பகுதிக் குள் அமெரிக்கப் பயிற்சி ஆசிரியர்கள் வந்து தங்கிநின்று, சிறீலங்காவின் தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ அணிகளுக்குப் பயிற்சி அளிக்கும் இரகசியம் இப்போது எல்லோருமே அறிந்த விடயமாகிவிட்டிருந்தது. ஆனால், எமது தலைவரோ தன் நண்பனான இயற்கை யையும் தத்துவாசிரியரான வாழ்க்கையையும் வழிகாட்டி யான வரலாறையும்வைத்தே எங்களை வழிநடத்திக் கொண்டிருந்தார்.

நேரடியாகப் புளியங்குளம் வரமுடியாமல் இராணுவம் பக்கவாட்டாக மேவ மேவ, புளியங்குளத்தைப் பாதுகாத் துக்கொண்டிருந்த எமது கொம்பனிகளும் இராணுவத்தின் போக்குக்கேற்ப மேவிமேவி அரண்களை அமைத்தன. ஒருநாள் இரவு உடனடியாகப் புதூருக்கு வருமாறு கேணல் கருணா அவர்களிடமிருந்து அறிவித்தல் கிடைத்தது.



படிப்பகம்

padippakam



நாங்கள் உடனேயே ஓட்டமும் நடையுமாகப் புதூருக்குப் போனோம்.

புளியங்குளத்துக்கான எமது விநியோகப் பாதையைத் தடுக்கும் நோக்கத்துடன் நகரவிருந்த படையினரைத் தடுத்துநிறுத்தும் நடவடிக்கைக்காகவே ஆனந்தியின் கொம் பனி புதூருக்கு வந்தது. யாழ் நெடுஞ்சாலைக்கு வலது புறம் மூன்று நிலைகளும் இடதுபக்கம் ஏனைய நிலைகளு மாக அரைவட்ட வடிவில் திரும்பி, புளியங்குளத் தளத் தைப் பாதுகாத்தவாறு இடது வெளிப்புறப் பாதுகாப்பரண் களில் ஏற்கனவே நிற்கும் செல்வியின் கொம்பனியைச் சந்திக்கக்கூடியவகையில் ஒரு கற்பனைக் கோட்டைக் கீறி, அதற்கேற்ற வியூகத்தில் நிலைகளை அமைக்கவேண் டும். புதூர்ச்சந்தி படையினரின் கைகளில் விழுந்து, புளியங்குளத்துக்கான எமது விநியோகப் பாதை தடைப் படாமல் தடுப்பது மாலதி படையணியிடம் கொடுக்கப்பட்ட பணி.

காட்டு மரங்களிடையே இருளில் பக்கத்தில் நிற்ப வரையே கண் தெரியவில்லை. அடிப்படைப் பயிற்சியை மணலாற்றுக் காட்டுக்குள் எடுத்து, காட்டுச் சண்டைகளி லேயே சில வருடங்களைக் கழித்திருந்த தமிழ்செல்வியை ஆனந்திக்கு உதவியாக கேணல் விதுஷா அனுப்பி விட்டிருந்தார். அருகிருப்பவரையே தடவித்தான் அறிய வேண்டிய அடர் காட்டுக்குள்ளே 'கூ' ஒலிகளை எழுப்பி எழுப்பி அணிகளை நிலைப்படுத்தினர். தமிழ்செல்வியின் 'கூ' ஒலிகேட்ட திசைநோக்கிப் பதில் 'கூ' கொடுத்தவாறு மேஜர் சந்திராவும் ஆனந்தியும் அணிகளுக்குரிய காப் பரண்களை அமைக்கும் இடங்களைக் குறித்துக் கொடுத்த வாறு நகர்ந்துகொண்டிருந்தனர். கடைசி நிலையில் ஆட் களை விடும்போது நிலம் தெளியத் தொடங்கியது. எல் லோரையும் நிலைப்படுத்திவிட்டு வெட்டப்பட்டுக்கொண்டி ருந்த காப்பகழிகளை வெளிச்சத்தில் பார்த்தபோதுதான் சிக்கல் விளங்கியது. கும்மிருட்டில் இவர்களால்



படிப்பகம்

padippakam



காட்டப்பட்ட இடங்களில் போராளிகளால் வெட்டப் பட்டுக்கொண்டிருந்த காப்பகழிகள் ஒவ்வொன்றும் கோவில் நவக்கிரகங்களைப்போல ஒவ்வொரு திசை யைப் பார்த்தவாறிருந்தன. இனிப் புதிதாகத் திருப்பி வெட்டிக்கொண்டிருக்க நேரமில்லை. அவசர அவசரமாகச் சில திருத்தங்கள்மட்டும் செய்யப்பட்டன.

நன்றாக விடிந்துவிட்டது. எந்த நேரமும் சண்டை வர லாம். பொறுப்பாளர்கள் எல்லோருமே ஒவ்வொரு வேலை களுடன் நின்றார்கள். காப்பரண்கள் அமைக்கப்பட்டு முடியவில்லை. பின்னணி விநியோகங்கள் ஒழுங்கமைக் கப்படவில்லை. மருத்துவநிலைகள் தயார்செய்யப்பட்டி ருக்கவில்லை. எல்லா இடங்களிலுமுள்ள அது அதற்குரிய பொறுப்பாளர்கள் தமது வேலைகளில் முழு வேகத்தோடு ஈடுபட்டிருந்தார்கள்.

மிக அவசரமாக விதுஷாவிடமிருந்து அந்தச் செய்தி யைச் சுமந்தவாறு ஒரு போராளி ஓட்டத்தில் முன்னரங்கப் பகுதிக்கு வந்தார்.

“உங்களைநோக்கிப் படையினர் வந்துகொண்டிருக்கின் றார்கள். தயாராகுங்கள்.”

நிலைமையை எல்லோருக்கும் அறிவித்தார் ஆனந்தி.

“சண்டைக்கு ஆயத்தமாகுங்கள். ஆனால், உங்களுக்கு நேரே இராணுவம் வரும்வரை காப்பகழி வெட்டும் வேலை யைச் செய்துகொண்டிருங்கள்”

என்று ஒவ்வொரு நிலையில் நின்றவர்களிடமும் ஓடிப் போய்ப் பொறுப்பாளர்கள் நேரடியாகச் சொல்லிமுடிப்ப தற்கிடையில் சண்டை தொடங்கிவிட்டது.

**“நெடுஞ்சாலைக்கு இடதுபுறமாக மேவி நகர்ந்து வந்த படையினர், புதூர்ச் சந்திக்குப் பின்னால் மாங்குளப் பக்கமிருந்த ஒரு பாலத்தடிக்கு வந்து**



படிப்பகம்

padippakam



நிலையமைத்தனர். அந்தப் பாலத்தில் படையினர், அடுத்தது சந்தி, அதற்கடுத்த பாலத்தில் விதுஷா நின்றார். இவர்களோடு மாலதி படையணி சண்டை பிடித்துக்கொண்டிருந்தது.

அதேநேரம் வலதுபுறமும் ஒரு படைநகர்வு புகையிரதப் பாதைவரை வந்த தகவல் எங்களுக்குக் கிடைத்தது. அவர்களை எறிகணைகளால் தாக்கி, இடதுபுற அணிகளுடன் இணைப்பை ஏற்படுத்த விடாது தடுத்துக்கொண்டிருந்தோம். புளியங்குளத்தில் நின்ற எங்களுக்கான வழங்கல் பாதையைத் தடை செய்து, புளியங்குளத்தில் நிற்பவர்களை அழிப்பதற்கான மிகப் பெரிய நடவடிக்கையாகவே படைத்தரப்பு அந்த நகர்வைச் செய்திருந்தது"

என்று அந்தச் சண்டையின் பரிமாணம்பற்றி கேணல் பானு குறிப்பிட்டார்.

காய்ந்து கரடு முரடாயிருந்த நிலத்தில் வெட்டப்பட்டிருந்த அகழிகள் முழங்கால் அளவு ஆழத்திலிருந்தன. சண்டைக்குரிய பொறுப்பாளர்களின் தொலைத்தொடர்புக் கருவிகள் இயங்கத்தொடங்கின. எறிகணை ஏவுதளங்களுடன் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டது. இத்தனையும் செய்வதற்கிடையில் இராணுவத்தினரின் தாக்குதலின் வேகம் அதிகரித்துவிட்டிருந்தது. ஆனாலும் இந்தத் திடீர் நிலைமையை எமது படையணி எந்தவித ஒழுங்குபடுத்தலும் இல்லாமல் நெருக்கடியுடன் எதிர்கொண்டது. புதூர் பறிபோனால், புளியங்குளத்தின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகும் என்பதை நாங்கள் ஒவ்வொருவருமே விளங்கியிருந்ததால், எமது கொம்பனியின் பதிலடியும் பலமாகவே இருந்தது.

தனது FN MAG இனை யாழ். நெடுஞ்சாலையில் நிலைப்படுத்திய மேஜர் நீலாம்பரி வீதியைக் கடக்க



படிப்பகம்

padippakam



முனையும் இராணுவத்தினரைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தார். நீலாம்பரிக்கு ரவை தேவைப்பட்டது. பின்னணி விநியோகம் சீரமைக்கப்பட்டிராததால், அணி யொன்றின் பொறுப்பாளரான மேஜர் மனோகரி அவற்றை எடுத்துவரப் புறப்பட்டார். மேலதிக ரவைக்கூடுகளுடன் ஓடிவரும் வழியில் அவருக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது. ஒரு கணம் நிதானித்த மனோகரி வயிற்றை ஒரு கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டே நடந்துபோய், நெடுஞ் சாலையில் நின்ற நீலாம்பரியிடம் ரவைக்கூடுகளைக் கொடுத்துவிட்டு, மருத்துவ நிலைக்குப் போனார். சண்டை யில் காயமடைந்தவர்கள் தமக்கு யாரும் வந்து கட்டுப் போடவேண்டும் என்று பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பெரிய காயக்காரர்கள் தாமே கட்டிக்கொண்டு பின்னணிக் குப் போயினர். சிலர் இரத்தம் வழிவதைப்பற்றிப் பொருட் படுத்தாமல் சுட்டுக்கொண்டிருந்தனர்.

இரண்டாம் நாள் ஆனந்தியின் கொம்பனி ஜெயந்தன் படையணியோடு முன்னகர்ந்து, படையினர்மீது கடும் தாக்குதல் ஒன்றைச் செய்திருந்தது. அந்த அடியோடு சண்டை முடிவுக்கு வந்தது. இத்தாக்குதலில் காலில் ஏற்பட்ட சிக்கலான முறிவுகாரணமாக ஆனந்தி வெற்றி நிச்சயம் களத்திலிருந்தே வெளியேற நேரிட்டது.

அந்த இருவரது காப்பகழிகூட முழங்கால் அளவு ஆழத்தில் இருந்தாலும் முன்னாலிருந்த புற்று அவர் களுக்குக் காப்பளித்தது. இருவரில் ஒருவர் புதியவர். இவருக்கு இதுவே முதற்களம். அவர் எறிகுண்டுகளுடன் நின்றார். சண்டை தொடங்கிய உடனேயே மற்றவர் வீரச் சாவடைந்துவிட, அவரின் T56-2 இனை எடுத்து இவர் தனியாகநின்று சண்டையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். அகழிக்குள் தேங்கிய இரத்தம் தன் பாதங்களை நனைத்ததையெல்லாம் அவர் பொருட்படுத்த வேயில்லை. சண்டை முடிந்தவுடனேயே கேணல் விதுஷா சண்டை நடந்த இடத்தைப் பார்வையிட வந்தபோதும்



படிப்பகம்

padippakam



அதேநிலையில், அதே நிலைமையிலேயே அந்தப் புதிய போராளி தனியாகக் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தார்.

**“களத்தின் உடனடித் தேவை கருதி மிகக் குறைந்த காலப் பயிற்சியுடன் மாலதி படையணியில் இணைந்து கொண்ட புதிய போராளிகள்கூட, களத்தின் கடுமைகளுக்கு ஈடுகொடுத்து தம் மன உறுதியை வெளிக்காட்டிய விதம் காத்திரமானது. இத்தகையதொரு மேலான நிலைக்கு அதன் தளபதிகள், அணித் தலைவர்கள் ஆகியோரின் முன்னுதாரணங்களும் வழிகாட்டல்களும் பெரும் பங்காற்றியிருக்கும் என்பதில் ஐயமில்லை.**

**பெருகிவந்த வீரச்சாவு, விழுப்புண்களுக்கு அப்பாலும், அருகி வந்த அடிப்படைத் தேவைகளுக்கு அப்பாலும், அல்லல் தந்த அன்றைய காலநிலைக்கு அப்பாலும் இந்தப் படையணி தன் உறுதியை, திறனை சமர்க்களங்களில் நிரூபித்துக்காட்டியது”**

என்று அன்றைய நாட்களை நினைவுகூர்ந்தார் கேணல் கருணா.

அந்தச் சண்டையில் முக்கிய பங்கெடுத்த எயார் மொபைல் பிரிகேட்டினராலும் நெடுஞ்சாலையைக் கட்டுப்படுத்தவோ, புளியங்குளத்தை நெருங்கவோ முடியாமல் போய்விட்டது. பெரும் எடுப்புடன் தொடங்கப்பட்ட நகர்வு பலத்த இழப்புக்களுடன் பின்னகர்த்தப்பட்டிருந்தது.

புலிகளின் சக்கர வியூகத்தை இப்போது கனகராயன்குளத்துக்கு நகர்த்தினார் தலைவர். நான்கு மாதங்களாக அரச படைகளுக்குப் பெருஞ்சவாலாக விளங்கிய, திடீரெனப் புகழடைந்து உலகமெல்லாம் பரபரப்போடு பேசப்பட்ட புளியங்குளம், புலிகளின் புரட்சிக் குளம் ஒரு நாளில் தன் பொலிவை இழந்தது.



படிப்பகம்

padippakam



சத்தமேயில்லாமல் புலியணிகள் இடம் மாறிவிட, மூன்று நாட்களின்பின் நகர்ந்துவந்த இராணுவம் தமக்கு ஒரு எதிர்ப்பும் கிடைக்கவில்லை என்று இன்னும் கொஞ்சம் நகர்ந்து வந்து, யாருமேயற்ற புளியங்குளத்தைப் பார்த்து ஏமாந்துபோனது: எனினும் தன் ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல், புளியங்குளம் தன்னால் 'மீட்கப்பட்டுவிட்ட தாகக்' கூவி தன் பாரம்பரிய வாத்தியமான 'றபான்' பறையை உரத்து முழக்கியது.

கனகராயன்குளம் ஒரு தளமாகியது. அதேநேரம் மாங் குளமும் ஒரு தளமாக்கப்பட்டது. மாங்குளத்தில் நிலை கொண்டிருந்த மாலதி படையணியினதும் ஜெயந்தன் படையணியினதும் கட்டளையதிகாரியாக விதுஷா நின் றார். இவருக்கு உதவியாக நின்றது சூரியகலா. அதன் பாதுகாப்பு ஏற்பாடுகள் எமது அணிகளால் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. புதூர் நோக்கிய படைநகர்வு முறியடிக் கப்பட்டு ஒன்றரை மாதங்களாகி விட்டிருந்தன. அதன்பின் எமது கொம்பனிகள், ஏனைய படையணிகள் இணைந்து விஞ்ஞானகுளத்தில் நிலைகொண்டிருந்த படைத்தளத்திலி ருந்து பல கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங் கள் அள்ளி எடுக்கப்பட்ட துணிகரமான ஊடுருவல் சண்டையிலும், பின் கரப்புக் குத்திப் பகுதியால் நகர முற்பட்ட படையினருக்கெதிரான முறியடிப்புச் சண்டையி லும் பங்கேற்றிருந்தன.

கனகராயன்குளத்தளத்தின் விநியோகத்தைத் தடுப்ப தற்கு மன்னகுளப் பகுதியால் படையினர் முன்னேறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. கனகராயன்குளத்தளத்துக்குப் பக்கவாட்டாகப் பாதுகாப்பு வழங்கிய அணிகளில் ஒன் றான செல்வியின் கொம்பனி மன்னகுளம்வரை நகர்ந்து பாதுகாப்பு வலயத்தை அகட்டியது. மார்கழி மாதம் நல்ல மழைகாலம். நிலம் வெள்ளமாக அல்லது சகதியாக இருந்தது. நடந்தால் கால் பொதுக்கென்று உள்ளே புதை யும். அல்லது ஆளை இழுத்து விழுத்தும். செருப்புகள்



படிப்பகம்

padippakam



எல்லாம் சகதியினுள் விடுபட்டன. அல்லது செருப்புக ளோடு படைபடையாக மண் ஒட்டியது. புதிதாக நிலை களை அமைப்பதற்குத் தேவையான பொருட்கள், ஆயுத தளபாடங்கள் என்று ஏகப்பட்ட சுமைகளோடு, புவியீர்ப்பு விசை குறைந்த பகுதியில் நடப்பவர்கள் போன்ற ஒரு நடைநடந்து மன்னகுளம் வந்தது செல்வியின் கொம்பனி.

மழை பெய்வதும் விடுவதுமாயிருந்தது. மண்வெட்டி யால் ஓங்கி நிலத்தைக் கொத்த, முகத்தில் ஈரமண் தெறித்தது. வெட்டப்பட்ட மண் மண்வெட்டியைவிட்டு விழாமல் அப்பிக்கொண்டு நின்றது. வேலைசெய்யும் போது வியர்க்கவில்லை. ஆனால் களைத்துப்போனார்கள். எனினும் இயல்பான அவர்களின் கலகலப்பும் சிரிப்பொலி யும் எப்போதும்போல் இப்போதும் காட்டை நிறைத்துக் கொண்டிருந்தது.

இராணுவம் நகர்ந்து வரப்போவதாக எதிர்பார்க்கப்பட்ட திசைக்கேற்ப இவர்களின் நிலை வளைந்து சென்றது. வளைவு மூலையில் மேஜர் நீலாம்பரி தனது FN MAG இனை நிலைப்படுத்தினார். நீலாம்பரிக்கு அடுத்த இரண்டு வலப்புற நிலைகளும் ஆட்களுக்காகக் காத்திருந்தன. அதற்கும் அடுத்த நிலையில் லெப். யாழ்மொழியும் இன்னொருவரும். நீலாம்பரியின் நிலைக்குப் பின்னே ஒரு கல்வீடு தன் சொந்தக்காரர்களை இழந்த வெறுமை யோடு தனித்துநின்றது. வீட்டின் முன்புறம் பூவரசு மரங்கள் அரணமைத்து நின்றன. வீட்டின் முன்பாகப்போன சிறு வீதி யாழ்மொழியின் நிலைக்கு வலப்புறமாக எமது காவல் வரிசையைக் கடந்து முன்னேபோனது.

யாழ்மொழியின் நிலைக்கு வலது புறம் மேஜர் சிவமல ரின் பிளாட்டூன் நின்றது. சிவமலரின் பிளாட்டூனுக்கு முன்னே ஒரு குளம் இருந்தது. நீலாம்பரிக்கு இடதுபுறம் சிறு வெட்டை ஒன்று இருந்தது. நீலாம்பரி நிற்குமிடத்தில் 'ட' போல வளைந்து இடதுபுறம் திரும்பிய ஏனைய



படிப்பகம்

தொடர் காப்பரண்களுக்கு இனித்தான் ஆட்கள் வரவேண்டும். ஒற்றை ஒற்றையாக அங்கொன்றும் இங் கொன்றுமாக ஆட்களற்ற வீடுகளுடன் வெறித்துப்போயி ருந்த மன்னகுளக் கிராமம் நீலாம்பரியைச் சங்கடப்படுத் தியது. அரசியல் துறையில் இருந்த நாட்களில், அவர் பணியாற்றிய பகுதி இது.

"இந்த அருவிக் கரையால் போனால் அந்தக் குளக்கட் டுக்குப் போகலாம். இந்தப் பாதையாலே போய் அந்தக் கிராமத்தில் ஏறலாம்"

என்று அந்த மண்ணுடனான தன் உறவை அசை போட்டுக்கொண்டிருப்பார்.

ஈரத்திலேயே நிற்பதால் கால், கை விரல் நுனிகள் சுருங்கிப்போனதையும், ஈரநிலம் மண்வெட்டியோடு ஒத் துழைக்காததையும் பொருட்படுத்தாமல், வேலைகள் துரி தப்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன. ஒவ்வொருவருடைய நிலைகளுக்கும் பின்னால் அவர்களுக்கு வேண்டிய மரக் குற்றிகள், உரப்பைகள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. கனரக ஆயுதம் நிலைப்படுத்தப்படும் இடங்களில் ஆட்கள் ஏனைய நிலைகளைவிட அதிகம் என்பதால், அவர்களது வேலைகள் ஓரளவு முடியும்தறுவாய்க்கு வந்துவிட்டன.

அன்று மாலை நீலாம்பரியின் காப்பரணின் மேற்புறம் மூடும் வேலைகள் ஆரம்பமாகிவிட்டிருந்தன. இருளும் நேரத்தில் தனது 'ட' வடிவ காப்பகழியை வெட்டிமுடித்த யாழ்மொழி, மறுநாள் காலையில் மேற்புறத்தை மூடுவோம் என்று முடிவெடுத்துவிட்டு, மரக்குற்றிகளைத் தூக்கிவந்து தன் நிலையருகே போட்டார். இரண்டு குற்றிகளைத் தூக்கிவர இருண்டுவிட்டது. வேலையை நிறுத்திவிட்டு, அவ்வளவு நேரமும் காவற்கடமையில் நின்றவரை மாற்றி விட்டு, தான் போய்க் காவலில் நின்றார்.

padippakam



*மழை இருட்டு. அடர் வனத்திடையே சில இடங்களில் வானம் தெரிந்தாலும், நட்சத்திரங்கள் தெரியவில்லை. அதனாலென்ன? வெற்றி நிச்சயம் நடவடிக்கையில் ஈடு படுத்தப்பட்ட படையினரைவிடவும் அதிகமான எண் ணிக்கையில் பறந்துகொண்டிருந்த மின்மினிகள் அந்தக் குறையை மாற்றீடு செய்துகொண்டிருந்தன. சில்வண்டு களின் பின்னணி இசைக்கேற்ப நடைபெற்றுக்கொண்டி ருந்த மின்மினிகளின் குழு நடனம், காவற்கடமையில் நின்றவர்களின் தனிமையைப் போக்கிக்கொண்டிருந்தது. பகல், இரவென்ற வேறுபாடுகளின்றி காடுகள் எப் போதுமே அழகுதான். கம்பீரமான அழகு.*

*பெயர் தெரியாத பறவைகளின் பல்லியத்துடன் பொழுது புலர்ந்தது. நேரம் ஆறு முப்பது. ஆனால் நிலம் முழுமையாகத் தெளியவில்லை. கண்ணிவெடி ஒன்று அதிர்ந்தது. சருகுகளோடு மண்கட்டிகள் மேலெ ழுந்து காட்டு மரங்களில் மோதின.*

*படையினரின் நகர்வுக்கான எச்சரிக்கை மணியோ? மூவர் நிலத்தோடு ஊர்ந்துபோய்ப் பார்த்தார்கள். நிலத்தில் இரத்தம் தேங்கியிருந்தது. சில நேரம் எம்மை வேவு பார்க்க வந்தவர்களாகக்கூட இருக்கக்கூடும் அல்லது நகர் வாகவும் இருக்கலாம். உற்றுப் பார்த்தார்கள். மரங் களிடையே ஒரு தலைக்கவசத்தின் அசைவைக் கண்டு விட்டுச் சுட்டார்கள். சண்டை தொடங்கிவிட்டது.*

அமெரிக்காவிலிருந்து இரகசியமாக சிறீலங்காவுக்கு வந்திருந்த கிறீன்பரே சிறப்பு அணியினர் சிறீ லங்காவின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைவீரர்களுக்கு சிறீலங்காக் காட்டுக்குள்வைத்துக் கடும் பயிற்சிகளைக் கொடுத்தனர். காட்டுக்குள்ளே வரும் நெருக்கடிகளையும் இடர்களையும் சமாளித்தவாறு சண்டைபிடிக்கும்



படிப்பகம்

padippakam



வலுவைத் தமக்குத் தெரிந்தமாதிரியெல்லாம் புகுத்திக் கொண்டிருந்தார்கள்.

புளியங்குளத்தை நெருங்கும் தமது முயற்சியில் படையினர் தோல்விக்குமேல் தோல்விகண்டுகொண்டிருந்த நேரம், ஓமந்தைவரை வந்து பார்வையிட்ட அந்த அதிகாரிகள், சிறீலங்காவின் படைத்தலைமை எல்லோருமாகச் சேர்ந்து அந்த முடிவை எடுத்தார்கள். எப்படியாவது, எங்கு நுழைந்தாவது யாழ் நெடுஞ்சாலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தே ஆகவேண்டும். புறப்பட்டது சிறீலங்கா சிறப்புப் படையணி. அது எங்களைச் சந்தித்த இடம் மன்னகுளம்.

சிவமலரின் பிளாட்டுனுக்கு முன்புறம் 'சரசர' ஒலி கேட்க, இருவர் நிலைமை பார்க்க முன்னகர, படையினர் சுட்டனர். பதிலுக்கு நாங்களும் சுட, சண்டை ஆரம்பமாகியது. ஆனால் படையினர் முன்னேறவில்லை. சிவமலரின் பக்கச் சண்டை எம்மைத் திசை திருப்புவதற்காகவே செய்யப்பட்டது. எல்லோரது கவனமும் அங்கே குவிந்திருக்க நீலாம்பரியின் பக்கம் சண்டை தொடங்கிவிட்டது. பெரும்பாலான காப்பரண்கள் இன்னமும் மேற்புறம் மூடப்படவில்லை. வேலைகள் குறையாக இருந்தன. அவசர அவசரமாக யாழ்மொழி இரண்டு மரக்குற்றிகளை இழுத்துவந்து, தனது 'ட' வடிவ காப்பகழியின் மேலே போட்டார். நீலாம்பரியின் காப்பரண் வேலை முடியும் தறுவாயிலிருந்தது. சண்டை தொடர்ந்தது.

இன்னமும் குண்டுவீச்சு விமானங்கள் வரவில்லை. RPG களும் RPG 22 களும் கணக்கு வழக்கில்லாமல் சீறி வந்தன. கல்வீட்டுக்கு முன்னாலிருந்து தாக்கிய நீலாம்பரியின் நிலைக்கும் யாழ்மொழியின் நிலைக்கும் செறிவான



படிப்பகம்

padippakam



தாக்குதலை மேற்கொண்டனர் படையினர். நீலாம்பரியின் இடதுபுற நிலையில் அன்று காலை அவசரமாக விடப் பட்ட இருவர் படையினரின் RPG தாக்குதலில் உடனேயே வீரச்சாவடைந்தனர். சண்டையின்போது யாழ்மொழியுடன் நின்ற பிளாட்டூன் பொறுப்பாளர் கப்டன் கேதுஷா வீரச் சாவடைய, யாழ்மொழி தனித்து நின்று சுட்டுக் கொண்டிருந்தார். நீலாம்பரிக்கும் யாழ்மொழிக்குமிடையே இருந்த இரண்டு காப்பரண்களிலும் ஆட்கள் இல்லை.

சிவமலரின் பிளாட்டூனின் முன்புறமும் சண்டை நடந்து கொண்டிருந்தது. அங்கு படையினர் முன்னேறமுயல வில்லை. அது ஒரு திசைதிருப்புத் தாக்குதலே.

யாழ் நெடுஞ்சாலை குண்டுவீச்சு விமானங்களால் புண்ணாகிக்கொண்டிருந்தது. பின்னணியில் நின்ற யாருமே வெளியே தலைகாட்ட முடியாதளவுக்கு எறிகணை வீச்சு இருந்தது.

நீலாம்பரியின் FN MAG இயக்குநர் கப்டன் தமிழ்முரசு, நீலாம்பரியின் கட்டளைக்கு ஏற்ப மிக நிதானமாகச் சுட்டுக் கொண்டிருந்தார். பின்னணி விநியோகம் முழுமையான தயார்ப்படுத்தலுடன் இருக்கவில்லை. அதைவிட படையி னர் ரவைகளாலும் எறிகணைகளாலும் ஏற்படுத்திவைத்தி ருந்த சூறாவளி மையத்தினுள் மனிதர்கள் நுழைவது கனவிலும் நடக்க வாய்ப்பற்ற விடயமாக இருந்தது. வெளி யிலிருந்து எந்த விநியோகமுமே வரப்போவதில்லை என்று புரிந்துகொண்டு, இவர்கள் நிதானமாகச் செயற்பட் டார்கள். எதிர்த் தரப்பிலிருந்து வந்த தொடர் சூட்டுச் சத்தம், எம்மவர்களின் ஒற்றைச் சூட்டுச் சத்தங்களை அமுக்கிவிட்டது.

படையினர் இவர்களைநோக்கி நகரத்தொடங்கினர். அவர்களின் இலக்கு நீலாம்பரியின் காப்பரணுக்குப் பின்னாலிருந்த கல்வீடு. அப்பகுதியிலேயே பெரிய வீடாக



படிப்பகம்

padippakam



அது இருந்ததால், நிச்சயமாக அது எம்முடைய கட்டளைப் பணியகமாகவோ, ஆயுதக் களஞ்சியமாகவோ இருக்கவேண்டும் என்று அவர்கள் கருதிவிட்டார்களோ தெரியவில்லை. அதனைச் சுற்றிவர அவ்வளவு அடி விழுந்தது. உண்மையில் அந்த வீட்டை நாங்கள் எதற்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

நீலாம்பரிக்கும் யாழ்மொழிக்குமிடையே இருந்த பாரிய இடைவெளியாலும் நீலாம்பரியின் இடதுபுறமிருந்த காப்பரண் ஒன்றில் செல்வியால் காலையில் விடப்பட்ட இருவரும் வீரச்சாவடைந்துவிட்டதால் அவ்வழியாலும் நகர்ந்த படையினர் வெறும் வீட்டை முற்றுகையிட்டு உட்புகுந்தனர். இப்போது நீலாம்பரி, யாழ்மொழியின் நிலைகள் படையினரின் முற்றுகைக்குள். தனித்து நின்ற யாழ்மொழிக்கு நீலாம்பரியின் FN MAG அடி கேட்டுக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக அவர் இழுத்துவந்து மூடிவிட்டிருந்த இரு மரக்குற்றிகளும் தமது பணியைத் திறம்பட ஆற்றிக்கொண்டிருந்ததால், தனியாக நின்றாலும் தன்னை இராணுவம் நெருங்கவிடாமல் யாழ்மொழி சுடுவது தடைப்படவில்லை. ரவைகள் இருக்குமட்டும் தனித்து நின்று சண்டை பிடிக்கலாம் என்று துணிச்சலான முடிவை எடுத்திருந்ததால், யாழ்மொழி பார்த்துப் பார்த்துச் சுடுவதை நிறுத்தவில்லை.

தமிழ்முரசு காயப்பட, லெப். மங்கையற்கரசி FN MAG இனை இயக்கினார். கீர்த்திக்கும் காயம். லெப். இசைநெறிக்கும் காயம். எல்லோரும் இரத்தப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் கட்டு ஒன்றைப் போட்டுவிட்டுக் காப்பரணுள் இருந்தனர். நீலாம்பரி தனது T56-2 ஆல் சுட்டுக் கொண்டிருந்தார். முற்றுகைக்குள்ளாகியும் எதிர்ப்பைக் காட்டிக்கொண்டிருந்த யாழ்மொழியின் நிலையைவிட்டு, கனரக ஆயுதம் ஒன்று கனன்றுகொண்டிருந்த நீலாம்பரியின் காப்பரணில் படையினரின் கவனம் குவிந்தது.



படிப்பகம்

padippakam



துண்டாடப்பட்ட பகுதியில் நின்றவர்களின் கதை சரி என்றே மற்றெல்லோரும் நினைத்தனர். துண்டாடப்பட்ட பகுதியையும் வீட்டையும் முன்னேவிட்டு, ஒரு பிளாட்டுனைப் பின்னால் இழுத்து வளைத்துத் தற்காப்பு நிலைகளை அமைத்த செல்வி, அதற்குமேல் படையினரை முன்னேறவிடாது தடைப்படுத்திக்கொண்டிருந்தார். லெப்.கேணல் சுதாகருடன் புறப்பட்ட தலைநகரப் படையணியினர் ஒருபக்கம் மறிப்பு அணியாகச் செயற்பட்டனர். பக்கவாட்டாக இறங்கி எமது காப்பரண்களைக் கைப்பற்றும் முயற்சியில் லெப்.கேணல் அறிவுடன் ஒரு அணி ஈடுபட்டிருந்தது. அவர்களோடு எமது கொம்பனியைச் சேர்ந்த சிலரும் நகர்ந்தனர். நீலாம்பரிக்கு இடப்புறமாக இருந்த வெட்டை அவர்களுக்கு வாய்ப்பற்ற நிலையை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. வீட்டில் நின்ற படையினர் தமது தொடர் சூடுகளால் வெட்டையில் கண்ணுக்குத் தெரியாத சூட்டுவேலி ஒன்றை அமைத்திருந்தனர். வெட்டையைக் கடக்க முனைபவர்கள் விழுந்துகொண்டேயிருந்ததாலும், விடாது மீளவும் முன்னேறும் முயற்சிகளை எடுத்தனர். உள்ளேபுகுந்த படையினரை எப்படியேனும் முற்றுகையிட்டாகவேண்டும். திடீரென வானலையில் ஒலித்த நீலாம்பரியின் குரல் நிலைமையை எமக்கு வாய்ப்புள்ளதாக்கியது.

**"மன்னகுளம்நோக்கிய படைநகர்வை இவ்வளவு முன்னதாக நாம் எதிர்பார்த்திருக்கவில்லை. திடீரென்றுதான் அச்சண்டை ஆரம்பமானது. முன்னரங்கில் நின்றவர்கள் ஆரம்பத்திலேயே மிகச் சரியான முறையில் செயற்பட்டதாலேயே அருகில் நின்ற எமது மோட்டார் அணி செயற்படக்கூடியதாக இருந்தது.**

**முன்னரங்கில் முழுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் அதில் நின்ற நீலாம்பரி போன்றவர்களின் தகவல்**



படிப்பகம்

padippakam



சரியானதாக இருந்ததாலேயே எம்மால் ஆதரவுச்சூடு களை வழங்கமுடிந்தது. அங்குநின்ற சில போராளி களின் துணிகரமான செயற்பாடே வெற்றியை எமதாக்கியது"

என்றார் கேணல் பானு அவர்கள்.

கல்வீட்டை எமது தளம் என்று நினைத்த படையினர் விவரிப்புகளுக்கு எட்டாதளவில் ரவைகளாலும் எறிகணை களாலும் செறிவாகத் தாக்கியவாறு வந்தார்கள். கல்வீட் டுக்கு வந்தவுடன் அதைப் பாதுகாப்பதற்கான நிலைகளை அமைப்பதிலும், காயப்பட்ட படையினரை வீட்டினுள் கொண்டுவந்து சிகிச்சை செய்வதிலும் FN MAG நிலையை மடக்குவதற்கான தமது இறுதி முயற்சியாகத் தனித்தனி யாகவும் குழுவாகவும் குண்டுகளுடன் நெருங்கிவந்து தாக்குவதற்கான ஊர்வுகளிலும் படையினர் இறங்கிய போது, நீலாம்பரியின் குரல் வானலையில் ஒலித்தது.

தமது காப்பரணிலேயே தாம் நின்று சண்டையிட்டுக் கொண்டிருக்கும் நிலையை மிகத் தெளிவாகக் கட்டளைப் பணியகத்துக்கு விளக்கிய நீலாம்பரி, எறிகணைகளை ஏவுவதற்கான ஆள்கூறுகளைத் துல்லியமாகக் கொடுத் தார். எறிகணைகள் நீலாம்பரியின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்தன. வீடு, வீட்டின் பின்புறம், பக்கவாடு, நீலாம்பரியின் நிலைக்கு முன், பின், வலம், இடம் என்று எறிகணைகள் விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன. தமது இலக்குகள் சரியா, சரியா என்று நீலாம்பரியிடம் கேட்டு வழுத் திருத்தங்களைச் செய்தவாறு எமது எறிகணை செலுத்தி கள் குறிபிசகாது இயங்கின. படையினரின் தலை தெரியும் இடங்களைப் பார்த்துச் சுடுவதை இவர்கள் நிறுத்த வில்லை. இவர்களைநோக்கி ஊர்ந்துவருவதை அவர்கள் நிறுத்தவில்லை. தமக்குக் குண்டெறிய வருபவர்களை மிக அருகே கண்டு சுடுவதையும் இவர்கள் நிறுத்த வில்லை. சண்டை இப்போது உச்சத்துக்குப் போனது.



படிப்பகம்

padippakam



சூரியன் மேற்கு வானில் பயணித்துக்கொண்டிருந்தான். எம்மை முற்றுகையிட்டு அழிக்கவந்தவர்கள் எமது முற்று கைக்குள் இருந்தார்கள்.

இடதுபுறத்தால் காப்பரண்களைநோக்கி வர முயன்று கொண்டிருந்த உதவி அணிகளின் நிலைமையைத் தெரிந்து கொண்ட நீலாம்பரி, அவர்களின் பாதையிலுள்ள வாய்ப் பற்ற தன்மையைக் கட்டளைப் பணியகத்துக்குக் குறிப் பிட்டு, அவர்களைத் தனக்கு வலப்புறமாக அனுப்புமாறு கேட்டார்.

அவர்கள் பின்னகர்ந்து ஒரு சுற்றுச் சுற்றி, மறுபுற மிருந்த காப்புகளையெல்லாம் பயன்படுத்தி எமது முன்ன ரங்குக்கு வந்து, கைமாறியிருந்த காப்பரண்களைக் கைப் பற்றியவாறு இடது பக்கமாக முன்னேறிக்கொண்டிருந்த னர். எந்த வெளித் தொடர்புமற்ற நிலையில் அவ்வளவு நேரமும் தனியாக நின்று சமராடிக்கொண்டிருந்த லெப். யாழ்மொழியை அவர்கள் முதலில் சந்தித்தனர்.

செல்வி, ஒரு பிளாட்டூனுடன் பின்புறமாக அடித்துத் தள்ளியவாறு முற்றுகை வளையத்தை இறுக்கிக்கொண்டு வந்தார். களத்தின் நாயகியாக நடவடிக்கைகளை வழி நடத்துவதில் கட்டளைப் பணியகத்தின் நன்னம்பிக்கை முனையாக இயங்கிய, படையினரால் வெல்லவேமுடியாத கோட்டையாக நிமிர்ந்துநின்ற நீலாம்பரியின் FN MAG நிலையை இவர்கள் அடைந்தபோது, சூரியன் காட்டின் அடி மரங்களுள் புகுந்துவிட்டிருந்தான்.

லெப்.கேணல் நிஷாந்த லக்மல் சிறீமான உட்பட ஏறத்தாழ முந்நூறு படையினர் கொல்லப்பட்டனர். மிக அதிகமானோர் காயமடைந்தனர். நூற்று முப்பத்துமூன்று சடலங்கள் எம்மால் எடுக்கப்பட்டு, நல்ல நிலையிலிருந்த நூற்றுப் பதின்மூன்று சடலங்கள் அனைத்துலகச் செஞ் சிலுவைச் சங்கத்தினர்மூலம் சிறீலங்கா அரசிடம்



படிப்பகம்

ஒப்படைக்கப்பட்டன. ஆனால் மன்னகுளத்தின் நீண்ட அடர்ந்த காட்டு மரங்களிடையே இழக்கப்பட்ட சிறப்பு அணியினரின் மானம், மரியாதை, கௌரவத்தை எடுத்து ஒப்படைக்க எந்தச் சங்கமும் முன்வரவில்லை.

முறிந்து கிடந்த மரங்களுக்கிடையே, பத்து நாட்களின் பின்னர்கூட இராணுவச் சடலங்களை மணத்தை வைத்து இனங்கண்டு எடுத்து அகற்றிக்கொண்டிருந்தோம். முறியடிப்பு நடவடிக்கையின் வெற்றிக்கு வேர்களாய் இருந்த மேஜர் நீலாம்பரி, கீர்த்தி, லெப். யாழ்மொழி, அன்பழகி, லெப். மங்கையற்கரசி, கப்டன் தமிழ்முரசு, லெப். இசைநெறி ஆகியோர் எமது தேசியத் தலைவர் அவர்களினால் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

"ஜெயசிக்குறு எதிர்ச்சமர், ஓயாத அலைகள்-02, ஓயாத அலைகள்-03 போன்ற சமர்க்களங்களில் இப்படையணியுடன் நெருங்கிச் செயற்பட்டு, களத்தில் அதனை வழிநடத்தக் கிடைத்த சந்தர்ப்பங்களை பெருமை மிக்கதொன்றாகவே கருதுகிறேன். அன்றைய இறுக்கமான சமர்க்கள நாட்களில் இப்படையணியின் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் ஆகியோரின் உறுதியையும் ஒத்துழைப்பையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். இச்சமர்க்களத்தில் மாவீரர்களான மாலதி படையணியின் அனைத்துப் போராளிகளையும் நினைவுகூர்வதுடன், எனது வீரவணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாதுகாப்புச் சமர்களில்மட்டுமன்றி, இக்காலப் பகுதியில் இடம்பெற்ற வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளிலும் இந்தப் படையணியின் செயற்பாடுகள் தாக்கமானவையே"

padippakam



என்கிறார் இந்த நீண்ட சமர்க்களத்தில் நடவடிக்கைகளை நெறிப்படுத்திய கேணல் வி.கருணா.

செல்வியின் கொம்பனி தன்னை மீளமைத்துக் கொண்டு மாங்குளத்தின் வலப்புறமாக இருந்த வன்னிவிளாங்குளக் காட்டினுள் பாதுகாப்பு நிலைகளை அமைத்தது. செல்விக்கு அடுத்தடுத்த பொறுப்பாளர்களாக மேஜர் கனீபாவும் முல்லையும் நின்றார்கள். மேஜர் பாலாவையும் கப்டன் கேதுஷாவையும் மன்னகுள முறியடிப்புச் சமரில் இழந்த துயர் கொம்பனியை மூடியிருந்தது.

அவர்கள் மிக நல்ல போராளிகள். மேஜர் பாலா தீவிர வாசிப்பாளர். உணவு பொதி செய்துவரும் பத்திரிகை, காற்றிலே பறந்து எங்கேனும் ஒதுங்கும் தாள் என்று எதுவும் இவரிடமிருந்து தப்பாது. காற்சட்டைப்பை பொத்தகத்தைச் சுமந்து பொம்மியிருக்கும். மிக மிக எளிமையானவர். எந்தளவுக்கு எளிமையானவர் என்றால், தன்னிடமிருந்த ஒரே ஒரு உடையையே தோய்த்துத் தோய்த்துத் தைத்துப் போடும் அளவுக்கு எளிமை. தன்னுடைய தனிப்பட்ட தேவைக்காக எதையுமே எப்போதுமே அவர் கேட்டதாக நினைவில்லை.

கப்டன் கேதுஷா மட்டக்களப்புக்கே உரிய விருந்தோம்பும் குணமும் எல்லோரையுமே தன் உறவுகளாகத் தாங்கும் இயல்பும் உடையவர்.

இருவருமே திறமையான பொறுப்பாளர்களாக இருந்தவர்கள்.

துயர் மனதில் இருந்தாலும் வேலையில் விறுவிறுப்பாக ஈடுபட்டது கொம்பனி. நிலம் ஈரம். நடந்தால் சறுக்கும்.



படிப்பகம்

மரங்களெல்லாம் அப்போதுதான் முகம் கழுவிட்டுத் துடைக்காமல் நிற்பவர்கள்போன்ற தோற்றத்தில் எப்போதும் நின்றன. சின்னதாக மரக்கிளைகள் அசைந்தாலும் தலையெல்லாம் நனையும். தடிமன் வரும். சில நேரம் முழுதாக நனைந்து காய்ச்சலும் வரும். அதனாலென்ன? இந்தக் காடு எங்களின் காடு. அதை நாங்கள் வீடாக்கினோம்.

பனங்காமத்து வன்னிமையின் காவற் கோட்டைகள் போன்று பலமும் அழகும் பொருந்தியதாகக் காப்பரண்கள் அமைக்கப்பட்டன. சிலநேரங்களில் அவை நீச்சல் தடாகங்களாகத் தாமே உருமாறிக்கொள்ளும். மழை ஓய்ந்து வெளி வெள்ளம் வடிந்தவுடன் கையில்கப்பட்ட பொருட்களாலெல்லாம் நீரை அள்ளி வெளியே ஊற்றி விட்டு, மறுபடியும் காப்பரணைப் பயன்படுத்துவோம். வெள்ள நீரை அள்ளி ஊற்றுவதற்காகவே தலைக் கவசம், தகரப் பேணிகள், எறிகணை மூடிகள் என்று எல்லாமே தயாராக இருக்கும். இயற்கையை இரசித்தவாறு இயற்கையோடு ஒத்து வாழ எல்லோருமே பழகிக்கொண்டோம்.

சயந்தினியின் கொம்பனி தன்னைப் பயிற்சியில் ஈடுபடுத்திக்கொண்டது. மேஜர் கயல்விழி, மேஜர் தணிகா கப்டன் செண்பகம், மேஜர் லெற்றீசியா என்று மிகத் திறமையான பலர் இந்தக் கொம்பனியில் இருந்தனர். சண்டையின்போது கட்டளைகளை வழங்கும் அதிகாரியாக படையணியின் தளபதி சூரியகலாவும் அவரின் உதவியாளராக மதியும் கொம்பனியோடு நின்றுகொண்டனர். ஒரு ஊடறுப்புச் சமருக்குப் புலிகள் இயக்கம் தயாராகியது.

வவுனியாவிலிருந்து புறப்பட்ட வெற்றி நிச்சயம் படையினர் அடிக்கு மேல் அடி வாங்கி இறுகிப்போய்க் கிடந்தனர். அவர்கள் வந்து நம்மோடு கை குலுக்குவார்கள் என்று கிளிநொச்சியில் காத்திருந்த ‘உண்மை வெற்றி’

padippakam



நடவடிக்கைப் படையினருக்கு, அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையே அற்றுப்போனது. சிங்களத்தின் பதில் பாதுகாப்பமைச்சர், சிறீலங்காவின் ஐம்பதாவது சுதந்திர நாள் கொண்டாட்டத்துக்கு யாழ்ப்பாண மக்களை ஏற்றிய பேருந்து யாழ் நெடுஞ்சாலை வழியே கண்டி தலதா மாளிகைக்கு வரும் என்று அறிக்கைவிட்டும் நாளாகி விட்டது. வெற்றிநிச்சயம் என்று புறப்பட்டவர்கள் வந்த பாடில்லை. எனவே உண்மை வெற்றி என்று நகர்ந்து வந்தவர்கள் புறப்பட ஆயத்தமானார்கள். இவர்கள் புறப் படமுன், இவர்களைச் சந்திக்க விடுதலைப் புலிகள் புறப்பட்டார்கள்.

1998.02.01 அதிகாலை கிளிநொச்சிப் படைத்தளம் அதிர்ந்தது. சயந்தினியின் கொம்பனி சூரியகலாவின் வழிநடத்தலில் முரசுமோட்டைப் பகுதியால் பலமான தாக்குதலைத் தொடுத்தது. மேஜர் கயல்விழியுடன் முரசு மோட்டைப் பகுதியால் உள்நுழைந்த ஒரு அணி தான் போகும் வழியில் இடையிலிருந்த மூன்று பகைத் தளங் களுடனான மோதல்களை முடிந்தவரை தவிர்த்துக் கொண்டு, கரடிப்போக்குக்கும் பரந்தனுக்குமிடையே யாழ் நெடுஞ்சாலையை ஊடறுத்தது. டிப்போச்சந்திப் பகுதியி லிருந்து கிளிநொச்சிப் படைத்தளத்தின் முன்னரங்க நிலை மீது ஏனைய அணிகள் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தன. அவர்களின் பணியை இலகுவாக்கு வதற்காக நெடுஞ்சாலையைக் குறுக்கறுத்து நிலை யமைத்த கயல்விழியின் அணி ஊர்தி எதிர்ப்புக் கண்ணி களை விதைத்தது. கிளைமோர்களை நிலைப்படுத்தி ஆனையிறவுத் தளத்திலிருந்து கிளிநொச்சித் தளத்துக்குக் கிடைக்கக்கூடிய உதவியணிகளின் வருகையைத் தடுத்துக் கொண்டிருந்தது. அதேநேரம் ஆனையிறவுத் தளத்தினுள் புகுந்த கரும்புலிகள் அணி அழிவு வேலைகளைச் செய் தது. அன்றைய மிகக் கடுமையான சண்டையின் முடிவில் டிப்போச்சந்திவரை நீண்டிருந்த படைநிலைகள் 3கி.மீ. தூரத்துக்குப் பின்னகர்த்தப்பட்டிருந்தன. அரச படைகளின்



படிப்பகம்

பாதை திறப்புக்கான இராணுவ நடவடிக்கையின் மூலோ பாயத்தையே சிதைத்த இந்தச் சண்டையின் விலையாக நாம் பலரைக் கொடுத்திருந்தோம். படையணியின் தளபதி லெப்.கேணல் சூரியகலா, மன்னகுள நாயகி மேஜர் நீலாம் பரி, மேஜர் கயல்விழி, மேஜர் லெற்றீசியா, கப்டன் செண்பகம், மேஜர் சந்திரிகா, மேஜர் அகல்யா...

எல்லோருடைய நேசிப்புக்குமுரிய தளபதியாக இருந்த சூரியகலா அதிகளவு அறியப்படாதவராகவுமிருந்தார். குறுகிய காலமே தளபதியாக இருந்து விதையாகிப்போன இந்தக் கட்டளையதிகாரி, அமைப்பில் இணைந்த குறுகிய காலத்திலே மிகவும் சுறுசுறுப்பும் பொறுப்பும் வாய்ந்தவரா கத் தன்னை இனங்காட்டினார். மேஜர் பசிலன் அதிகாரி கள் கல்லூரியில் பயின்ற இவரின் கள வரலாறு பலாலி, ஆனையிறவு, பலவேகய-02, தொண்டைமானாற்றிலிருந்து ஒட்டகப்புலம்வரையான நூற்றைம்பது காவலரண்கள் அழிப்பு நடவடிக்கை, பூநகரி மீதான தவளை நடவடிக்கை, சூரியக்கதிர்-01,02, ஓயாத அலைகள்-01, பரந்தன்-ஆனை யிறவு ஊடுருவித் தாக்குதல் என்றவாறு மிக நீண்டது.

வயதுக்குமீறிய வலுவும், ஆளுமையும், வளர்ச்சிப் போக்கும் இயல்பாகவே அவரிடமிருந்தன. முதன்முதலாக Win 100 ரக உந்துருளி தலைவரால் எமது படையணிக் கெனத் தரப்பட்டிருந்தபோது, அதை இவரிடமே விதுஷா கையளித்திருந்தார். விதுஷா எதிர்பார்த்ததுபோலவே அதிக கவனமெடுத்து அந்த உந்துருளியை இவர் பரா மரித்து வந்தார்.

மிகச் சிறந்த சூட்டாளராக விளங்கிய சூரியகலா கிளி நொச்சி-பரந்தன் ஊடுருவித் தாக்குதலில் எமதணிகளின் கட்டளையதிகாரியாகச் செயற்பட்டார். நெருக்கடி மிகுந்த இந்தக் களத்தில் தலையில் காயமடைந்தபின்னும் களத்தி லேயே நின்று வித்துடல்களையும், காயமடைந்த ஏனைய வர்களையும் பின்னணிக்கு அனுப்புவதில் முனைப்புடன்

padippakam



இயங்கிக்கொண்டிருந்தார். களத்தில் நிற்கும் அணிகளை வெளியேறும்படி கட்டளை கிடைத்தபின்னும், எவரையும் விட்டுவிட்டு வரக்கூடாது என்பதில் கவனமெடுத்து, எல்லோரையும் அனுப்பிவிட்டு வந்துகொண்டிருந்தபோது, படையினரின் சூடுகள் இவரைத் தாக்கின.

கம்பீரமான, நெடிதுயர்ந்த தோற்றங்கொண்ட அந்தத் தளபதியை வித்துடலாகச் சுமந்து நாம் களத்திலிருந்து வெளியேறினோம்.

இன்னும் எங்கள் படையணியோடே களங்களில் நடந்து, இலட்சியம் இன்னும் உன்னதமாகியதால் எல்லோரையும் விட உயர்ந்த இடத்துக்குப் போய்விட்ட கரும்புலிகள் மேஜர் ஆஷா, மேஜர் ஜெயராணி, கப்டன் இந்து...

பலவீனமான எமது மக்களின் பலம்வாய்ந்த சக்தியாக அவர்கள் உருவாகிக்கொண்டிருந்தார்கள். இதயத்தின் ஒரு மூலையில் எப்போதோ கனன்றுவிட்ட தீயின் வடிவமாக அவர்கள் இப்போது உருமாறத் தொடங்கிவிட்டார்கள். நெருப்பின் தகிப்பும், நிலவின் குளிர்ச்சியும், பனியின் ஈரமும், அலையின் முயற்சியும் அவர்கள் உள்ளத்தில் இருக்க, விரல் மடித்து நாட்களை எண்ணத்தொடங்கினார்கள். சாவுக்குள் வாழ்வையெழுதத் துடித்துக்கொண்டிருந்தது அந்தக் கரும்புலிக் கூட்டம்.

காத்திருப்பு என்பது எல்லோராலும் இலகுவானதாகச் செய்யக்கூடியதல்ல. நீண்ட காலமாகவே கரும்புலிக் கனவோடு காத்திருந்து, காடு, மேடெங்கும் திரிந்து பகைக் காவலரண்களை அளக்கும்போதும் அதே கனவுடன் காத்திருந்து, இறுதியில் தனக்கென இலக்கு வரும்வரை பொறுமையுடன் காத்திருந்து புயலாகிப் போனவர்தான் மேஜர் ஜெயராணி. மன்னார் மண்ணுக்குரிய இயல்பான வீரம் அவரிலும் நிரம்பியிருந்தது. மகளிர் படையணியின் வேவுப் பிரிவின் வீச்சான வளர்ச்சிக்கு ஜெயராணியின்



படிப்பகம்

padippakam



பங்கும் முக்கியமானது. ஆரம்பத்திலிருந்து இறுதிவரை தன் வேகம் மாறாமலேயே விடுதலைக்கான பயணத்தில் ஜெயராணி நடந்தார்.

இவர்களுக்குரிய ஆரம்பக் கடற்பயிற்சியின்போது முதன்முதலில் இவர்தான் மூச்சை அடக்கிக் கடலினுள் சென்று, அடி மண்ணைக் கிள்ளிக்கொண்டு மேலே வந் தார். இவ்வாறு எதையும் வேகமாகச் செய்யும் இயல்பு இந்த மன்னார் மகளுக்குக் கைவரப்பெற்றதொன்று. 1998.02.01 இல் ஆனையிறவுத் தளத்தில் இவருக்கான இலக்குக் காத்திருந்தது. தான் நேசிக்கும் மக்களுக்காக உயர்ந்த ஈகத்தைச் செய்யத் துடித்தவர், பகையின்மீது பேரிடியாய் வெடித்தார்.

"ஆனையிறவுக்குள் போனவர் மீண்டும் காணத்திரும்ப வில்லை" என்ற சேதி கேட்டுத் துடித்தபோது, மேஜர் ஆஷாவும் அங்கு தன் துடிப்பை அடக்கியிருந்தார். ஒரு வேவுப் புலியாய், பயிற்சி ஆசானாய், தாக்குதற் போராளி யாய் பல்வேறு பாத்திரங்களாய் நடந்தவர் ஆஷா. எதை யும் முன்னின்று செய்யவேண்டும் என்ற ஆர்வத்துடன், எல்லாவற்றையும் செய்துபார்க்கவேண்டுமென்ற துடிப்பும் அவரிடமிருந்தது. ஒவ்வொரு தாக்குதல் களத்திலும் கால் பதித்தவர், பயிற்சி ஆசிரியரானபோதும் தனது பணியை மிகுந்த பொறுப்புணர்வோடு செய்தார்.

அவருடைய உடல் பல தடவைகள் காயமுற்றுச் சிறிய உருக்குத் துண்டுகளை உள்வாங்கி வைத்திருக்கிறது. ஆனாலும் காயத்தின் வலியால் ஏற்படும் வேதனையைச் சிறிதளவுகூட அவரது முகம் வெளிக்காட்டுவதில்லை. தனக்குத் தரப்பட்ட பணியை முழுமையாக முடிக்க வேண்டுமென்ற ஆர்வம், துடிப்பு நிறைந்த மேஜர் ஆஷாவை விரைவில் இழந்துபோனது துயரமானதே.



படிப்பகம்

padippakam



*இந்து. அவர் சிந்தும் புன்னகை ஒரு குழந்தைக்குரியது. விக்கி விக்கிச் சிரித்தபடி தன் வேவுக்கதைகளைச் சொல்கிறபோது, கதை கேட்போர் அவரது கதையையன்றி, அவரைப் பார்த்துச் சிரிப்பதுதான் அதிகம். ஆயிரம் பீடிகை போட்டு, வாயை வளைத்துக் கோணலாக்கிக் கதைசொல்லி முடிப்பதற்கிடையில் நீண்ட நேரம் கடந்துவிடும். எப்போதும் சிரித்தபடி திரியும் அவருக்குள் ஒரு பெருந்தீ மூண்டிருந்தது வியப்பானதுதான்.*

*அம்பாறையில் பிறந்த அவரின் இரு அண்ணன்களுக்கும் நிகழ்ந்த துயரம் அவரைப் புலியாக்கியது. அதைப் போலவே ஏனைய மக்கள்படும் துன்பம் அவரை நெருப்பாக்கியது. வட தமிழீழம் வந்தவர் வேவு அணியில் இணைந்தார். விழிமூட நேரமின்றி வேவுப்பணிகள் தொடர்ந்தன. எதிரியின் பாசறைகளைத் தேடித்தேடி அளந்தெடுத்தார். இரவு பகலாக இராணுவத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே விளங்கியது இந்த வேவு அணி. கரும்புலி அணியில் இணைந்தபின் ஆனையிறவு அவரது இறுதிக் களமாக அமைந்தது. அதுவே அவரது முதற் களமும்கூட.*

*இதயத்தில் பெரிய கனவுகளைச் சுமந்தபடி சிறு வயதிலேயே விடுதலைப் பாதையில் காலடி வைத்தவர் நளாயினி. தம்மை விரைவில் கரும்புலி அணியில் இணைக்கும்படி உண்ணாவிரதமிருந்தவர்களில் தானுமொருவரானார். இறுதியில் தான் தேர்ந்தெடுத்த இலட்சியப் பாதையிலேயே தன் உயிரைக் கொடுத்திருந்தார். ஆரம்ப காலத்தில் மகளிரின் நிர்வாகப் பிரிவில் பணியாற்றியவர் அங்கே தனக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்தார். அவர் மனதில் கனன்றுகொண்டிருந்தது ஒரு நெருப்பு. அது அவலங்களைச் சந்தித்த மக்களின் துயரங்களைத் துடைக்கவேண்டுமென்ற விருப்பு. அதற்காகத் தன்னை வருத்திப் பயிற்சிகளைத் தொடர்ந்தவர் இறுதியாக ஆனையிறவு மண்ணிலே அனலாகிப்போனார்.*



படிப்பகம்

padippakam

## 2ம்லெப். மாலதி படையணி

இரண்டு வருடங்களுக்கும் மேலாக வன்னிச் சமர்க் களத்தில் எம்மோடு இணைந்து நின்ற கேணல் கருணா அவர்கள்,

"பாதுகாப்புச் சமர்களில்மட்டுமன்றி, இக்காலப் பகுதியில் இடம்பெற்ற வலிந்த தாக்குதல் நட வடிக்கைகளிலும் இப்படையணியின் செயற்பாடுகள் தாக்கமானவையே. கொடுக்கப்படும் இலக்குகளை எவ்விலை கொடுத்தாவது கைப்பற்றவேண்டுமென்ற ஓர்மம் இப்படையணியிடம் வலுப்பெற்றிருந்தது.

களப் பயிற்சிகள், கற்கை நெறிகள் என்பவற்றில் மாலதி படையணி காட்டிய ஆர்வமும் ஆற்றலும் குறிப்பிடத்தக்கனவாகும். அத்துடன் ஆற்றலுள்ள அணித் தலைவர்களையும், பயிற்றுனர்களையும் வளர்த்தெடுப்பதில் உள்ளார்ந்த உணர்வுடன் இப் படையணி செயற்பட்டுவந்ததையும் நாம் அறிவோம்.

இப்படையணி துப்பாக்கி முனையில் எந்தளவுக்கு வலுவுள்ளதாய் அமைந்திருந்ததோ, அந்தளவுக்கு அவர்களின் எழுதுகோல் முனைகளும் தாக்கமுள் ளவையாய் விளங்கின. குறிப்பாக அன்றைய கள முனை ஏடான 'சுதந்திரக் காற்று' தாங்கி வந்த தரமான ஆக்கங்கள் அநேகமானவற்றுக்கு அவர்களே சொந்தக்காரர்களாயிருந்தனர்."

என்று கூறினார்.

வன்னிவிளாங்குளத்தில் நின்ற கொம்பனியை மேஜர் கனீபா பார்த்துக்கொள்ள, கிளி-பரந்தன் ஊடுருவித் தாக்குதலுக்குப் போய்வந்து கிளிநொச்சியிலேயே நிலை கொண்ட கொம்பனியோடு செல்வி நின்றார். நெருக்கடி மிகுந்த களமுனைகள் எப்போதுமே எமது படையணிக் காகவே காத்திருந்தன.



படிப்பகம்

padippakam



கிளி–பரந்தன் ஊடுருவித் தாக்குதல் நடந்து பதின் மூன்று நாட்களாகிவிட்டன. முன்னாள் பதுங்கிச் சூட்டாள ரான மேஜர் சிவமலர் கனீபாவின் கொம்பனியில் ஒரு பிளாட்டூனின் கட்டளையதிகாரியாக நின்றார். வன்னி விளாங்குளப் பகுதியில் அன்று கொம்பனி சற்று இடம் மாறிக்கொண்டிருந்தது. நகர்ந்து அவரவருக்குரிய நிலை களுக்கு வந்துசேர காலை 4.30 ஆகிவிட்டது.

1998.02.14 காலை விடிந்து, சூரியன் மேலெழ, வெளிச் சத்தில் எமது நிலைகளைப் பார்த்து, அதில் எமக்கேற்ற மாற்றங்களைச் செய்தபடி, சூழலை அவதானித்து மனதில் பதியவைத்தோம். காலை உணவை முடித்துக்கொண்டு அவரவர் வேலைகளில்...

திடீரென எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கத்தொடங்கின. முன்புறமிருந்து எம்மைநோக்கிச் சூடுகளும் வந்தன. எல் லோரும் காப்பரண்களுள் குதித்து இறங்கிக்கொண்டு, முன்னணியை அவதானித்தோம். எம்மிலிருந்து ஏறத்தாழ 30மீ. முன்னே படையினர் பதுங்கியிருந்து எம்மைத் தாக் கிக்கொண்டிருந்தனர். சிவமலரின் நான்கு காப்பரண்கள் மீது ஒரேநேரம் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

சண்டையென்றால் கடும் சண்டை. கிளி-பரந்தன் ஊடுருவித் தாக்குதலில் நாம் இழந்த எல்லோருக்குமாக, அந்த எதிர்ச் சண்டையைச் செய்தோம். எங்களெல்லோரு டைய கட்டளையதிகாரிகளின் குரல்களும் வானலையில் ஒலித்து ஒருங்கிணைப்புகளைச் செய்தன.

அந்த முறியடிப்புச் சண்டையில் நாம் படையினரின் மூன்று சடலங்களை எடுத்து அனைத்துலகச் செஞ்சிலு வைச் சங்கத்தினரிடம் கொடுத்தோம். ஒரு PK LMG, இரண்டு LMGகள், எழுநூற்றைம்பது PK LMG ரவைக் கோர்வை, மூன்று T56-2, இரண்டு .203 ரக சுடுகலன்கள் என்பவற்றை நாம் கைப்பற்றினோம்.



படிப்பகம்

இதுபோன்ற திடீர்த் தாக்குதல்களை அடிக்கடி நாம் சந்தித்தோம். காலையில் சூரியன் உதிப்பது வழமையான ஒரு விடயம்போலவே, இவையும் வழமையான விடயங்களாக நாளடைவில் எமக்குப் பழக்கப்பட்டுப்போயின.

தேவைகள் ஏற்பட்டபோதெல்லாம் எங்கள் கொம்பனிகள் அம்பகாமம், மாங்குளம், வன்னிவிளாங்குளம், கிளிநொச்சி என்று நகர்ந்துகொண்டேயிருந்தன. படையினரின் முன்னேற்ற முயற்சிகளைப் பல முனைகளில் தடுத்து நிறுத்துவதில் எங்கள் படையணி பெரும் பங்காற்றியது.

முன்னேறிவந்த வெற்றிநிச்சயம் நடவடிக்கை மேலும் முன்னகரமுடியாமல் நின்றது அம்பகாமப் பகுதியில் நாம் அடியெடுத்து வைத்த பின்னர்தான். மாங்குளம் சந்தியிலிருந்து 700மீ. பின்னால் நின்ற சிறீலங்காவின் சிறப்புப் படைகளால் சந்தியை நெருங்குவது முடியாத விடயமாகத் தோன்றவே, கடும் முயற்சிகள் பலவற்றைச் செய்தும் சரிவராமல்போகவே, படைத்தரப்பு தம் வலது காலை அம்பகாமம்நோக்கியும், இடது காலை வன்னிவிளாங் குளம்நோக்கியும் அகட்டத்தொடங்க, நாமும் பரந்து விரியத்தொடங்கினோம். வன்னிவிளாங்குளப் பகுதியில் கனீபாவின் கொம்பனியும் அம்பகாமத்தில் மேஜர் தணிகாவின் கொம்பனியும் நிலைகொண்டன.

படையணியின் நிர்வாகப் பகுதியிலிருந்த மதி, தர்சினி, ரசிகப்பிரியா, பிரணவா, மேஜர் சந்திரா என்று பலர் எமது படையணியின் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியான 'சூரியகலா-01' இல் படையியல் தேர்ச்சியைப் பெற்றுத் தம்மைப் புடம்போட்டு, கொம்பனியைப் பொறுப்பேற்றிருந்தனர்.

மிகவும் கலகலப்பாகவே காட்டைப் பழக்கப்படுத்திக் கொண்டிருந்த எங்களுக்கு அது ஒரு துயரமான நாள்தான்.

padippakam



*திடீரென எமது வான் பரப்பினுள் நுழைந்த அந்தக் குண்டுவீச்சு விமானம் மேஜர் தணிகாவை, மேஜர் மனோ கரியை, லெப். எழிலினியை, லெப். இளங்குமாரியை, 2 ஆம் லெப். அனுசியாவை, வீரவேங்கைகளான நிலா, தூயவள்/வேலரசி, பொற்செல்வி, சுடர் ஆகியோரை எங் களிடமிருந்து (1998.06.03) பறித்தெடுத்தது.*

*எமது சிறப்புத் தளபதி விதுஷா கொம்பனியை நிலை குலையவிடாமல், தன்னோடு நின்ற போர்ப் பயிற்சியாசிரி யர்களின் பொறுப்பாளரான காவியாவைக் கட்டளையதி காரியாக நியமித்து, கொம்பனியைச் சீரமைத்தார்.*

*1998.06.05 இலும் 1998.06.07 இலும் பெருமெடுப்பில் முன்னேறித் தாக்கிய படைத்தரப்புக்குக் கடும் இழப்பை ஏற்படுத்தி மாலதி சிறப்பு அணி அவர்களைத் திருப்பி யனுப்பியது தனியான கதைகள்.*

*மறுபடி படையினரின் பதுங்கித் தாக்கும் அணி 1998.06.17 அன்று எம்மைநோக்கி நகர்ந்துவருவதை, எமது காப்பரண்களிலிருந்து குறிப்பிட்டளவு தூரம் முன்னே அவதானிப்புநிலையில் நின்ற 2 ஆம் லெப். இன்குறிஞ்சி கண்டு, அடியைத் தொடக்கிவிட்டார். இவரின் அடியைத் தொடர்ந்து, பின்னே காப்பரணில் நின்ற மேஜர் வாணி முதலானோரும் அடிக்கத்தொடங்கினர்.*

*இன்குறிஞ்சி அவதானிப்பு நிலையைவிட்டு வெளி யேறாமலேயே தனியாக நின்று, "ஓடிவா ஓடிவா" என்று நாங்கள் கத்தியதையும் பொருட்படுத்தாது தனது ரவைகள் முடியும்வரை சுட்டுவிட்டு, நெஞ்சில் பட்ட காயத்துடன் எழும்பி எம்மைநோக்கி ஓடிவந்து விழுந்தவர் எழும்ப வில்லை. அப்போதுதான் பயிற்சி முடித்து வந்த புதிய போராளி அவர். சிறிதும் அச்சமின்றிய அவரது துணிச்ச லான செயல் எல்லோரிடையேயும் அவரின் பெறு மதியை உயர்த்திவிட்டிருந்தது.*



படிப்பகம்

இதற்கிடையில் தனது நிலையின்முன் குவிந்திருந்த படையினர்மீது எறிகணைகளை வீசுவதற்காக நோக்குக் கணிப்பாளரை அழைத்துவரவென வெளியே வந்த இன்பச்சுடர் ஒருமுறை திரும்பிப் பார்க்கவும், படையினரின் RPG அவரைத் தாக்கவும் சரியாக இருந்தது. இருவரின் இழப்போடு அன்றைய படை நடவடிக்கையை முறியடித்து விட்டிருந்தோம்.

ஓயாத அலைகள்-02 கிளிமீட்பு நடவடிக்கைக்காக அவ்விடத்தைவிட்டுப் போகும்வரை, படையினரும் நாமும் பல தடவைகள் மோதிக்கொண்டோம்.

மாலதி சிறப்பு அணி மிக மிகக் கடினமான பயிற்சிகளில் ஈடுபட்டுத் தன்னை மெருகூட்டிக் கொண்டிருந்தது. எந்தச் சூழ்நிலையிலும் வாழ்வதற்கேற்ப, சண்டை செய்வதற்கேற்ப தன்னைத் தயார்ப் படுத்திக்கொண்டிருந்தது. தேர்வுப் பயிற்சியிலே எல்லோருமே மிகத் திறமையாகச் செய்திருந்தனர்.

லெப். ஆரதி வயதில் பெரியவர். தான் சிறப்பு அணிக்குப் போகவேண்டும் என்று துணைத் தளபதி ரத்தியிடம் பிடிவாதமாக நின்றார். அவர்களின் கடுமையான பயிற்சிகளைச் செய்வதற்கு இவரின் வயது இடம் தராது என்று ரத்தி சொன்ன விளக்கங்களை ஆரதி ஏற்றுக்கொள்ள இல்லை. சிறப்புப் பயிற்சியில் ஈடுபட்டவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தமது ஓட்டத் தூரத்தையும் தூக்கும் பாரத்தையும் அதிகரித்துக்கொண்டிருந்தார்கள். இறுதியாக அவர்கள் ஓடப்போகின்ற தூரத்தை அவர்கள் சுமக்கப் போகும் பாரத்தோடு ஓடிக் காட்டமுடியுமா என்று ரத்தி விளையாட்டாகக் கேட்டார். ஆரதி இதை விளையாட்டாக எடுக்கவில்லை.

padippakam



*பயிற்சி மைதானத்திலே ரத்தி பார்த்துக்கொண்டிருக்க, ஆரதி ஓடி முடித்தார். மறு பேச்சில்லாமல் ஆரதியைச் சிறப்பு அணியோடு இணைவதற்கு ரத்தி அனுமதித்தார். ஓயாத அலைகள்-03 நடவடிக்கையில் ஒட்டுசுட்டான் பகுதியில் காவியமான கரும்புலி மேஜர் சசி, குடாரப்புவில் தரையிறங்கி இத்தாவிலில் தளம் அமைத்த நடவடிக்கைக்கு அரண் செய்யும்வகையில் பளையில் இருந்த ஆட்லறித் தளத் தகர்ப்பு நடவடிக்கையில் இறங்கிய கரும்புலி மேஜர் சுதாஜினி, திசைகாட்டியில் நகர்ந்தபோதெல்லாம் ஒரு பாகைகூட விலகாமல் மிகச் சரியாக குறிக்கப்பட்ட இலக்குக்கு எல்லோரையும் அழைத்துப் போகும் கப்டன் இலக்கியா, தன் போராட்ட வாழ்வின் ஆரம்ப நாட்களிலிருந்தே வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த மேஜர் சுபத்திரா, மிகச் சிறந்த பதுங்கிச் சூட்டாளர்களான கப்டன் இளவரசி, லெப். பிரபா என்று மிகச் சிறந்த போராளிகள் பலர் முகுந்தாவுடன் சிறப்பு அணியிலிருந்தனர்.*

*1990, 1991 இல் பலாலிப் பகுதி முன்னரங்க நிலைகளில் பணியாற்றிய முகுந்தா, ஆகாய, கடல், வெளிச் சமரில் பங்குகொண்டபோது ஏழுபேரைக் கொண்ட அணியொன்றின் பொறுப்பாளராக உயர்ந்திருந்தார். அச் சமரிலே காயமடைந்தபின்னும் தொடர்ந்த அவரது கள வரலாறு மணலாற்று 'மின்னல்' நடவடிக்கையின்பின் ஒரு திருப்பத்தைச் சந்தித்தது.*

*வேவுப் பணியில் இணைத்துக்கொள்ளப்பட்ட முகுந்தா பலவேகய-01, 02 நடவடிக்கைகளின்போதெல்லாம் படையினருக்கு மிக அருகே இருந்தார். 1992 இல் கட்டைக்காடு மீதான அதிரடித் தாக்குதலுக்காக வேவு எடுத்து, நடவடிக்கையின்போது வழிகாட்டியாகச் செயற்பட்டு, வெற்றிக்குக்காரணமானவர்களுள் ஒருவராகத் தலைவரிடமிருந்து பரிசொன்றையும் பெற்றுக்கொண்டார்.*



படிப்பகம்

தவளை நடவடிக்கைக்கான பூநகரிமீதான வேவுப் பணியில், கடல்வழியாக வேவு எடுத்து, பாதையைத் தேர்ந்தெடுக்கும் பணி முகுந்தாவின் தலைமையிலேயே நடைபெற்று முடிந்தது. தாக்குதலின்போது சண்டையணிகளைக் கடல்வழியாக எந்தத் தடையுமின்றி நகர்த்தியிருந்தார்.

இதன் பின்னரும் பூநகரி, பொன்னாலை, மண்டைதீவு, ஆனையிறவு, முல்லைத்தீவு... என்று களமெங்கும் காரிருளில் உலவித் திரிந்தார். பெண்கள் எல்லாப் பணிகளையும் தனித்துவமாகச் செய்யவேண்டும் என்ற ஆர்வம் நிறையவேயிருந்தது. செய்யக்கூடிய வல்லமையும் இயல்பாகவே இருந்தது. எனவே பரந்தன்-ஆனையிறவு ஊடுருவித் தாக்குதலில் உண்டான பலத்த காயம் ஆற முன்னரே மிகுந்த தன்னம்பிக்கையோடு மாலதி சிறப்பு அணியைப் பொறுப்பேற்றிருந்தார்.

**அணித்தலைவர்கள் தன்கீழ் உள்ளவர்களுக்கு எப்போதும் எடுகோள்களாக இருக்கவேண்டும்** என்று தலைவர் சொல்வதை உள்வாங்கி வைத்திருந்தார். எந்தப் பயிற்சியையோ பணியையோ தான் செய்தபின்னரே தனது அணியினரைச் செய்விப்பது அவரது வழமை.

முன்பு வேவு அணியிலும், பின்னர் சிறப்பு அணியிலும் இருந்தவர்கள் கலையுணர்வு மிகுந்தவர்களாகவும், உடலில் வலுக் குறைந்திருந்தாலும் பயிற்சியைத் திறமையாகச் செய்பவர்களாகவும் இருந்ததற்கு முகுந்தாவின் விடா முயற்சியும் தன்னம்பிக்கையுமே காரணம் என்று சொல்வதில் தவறேதுமில்லை.

மணலாற்றிலே காட்டுப் பயிற்சிகளைச் செய்தவாறிருந்த இவர்கள் இடம் பார்ப்பதற்காக வெற்றி நிச்சயம் களமுனைக்கு வந்தார்கள். நெடுங்கேணிக்கு இவர்கள் வந்துசேர இருள் சூழ்ந்துவிட்டது. குறிசுட்டகுளப் பகுதியிலே அமைக்கப்பட்டிருந்த காப்பரண்களில்

padippakam



*நிலைகொண்டார்கள். அது மிகவும் சவாலான இடம். தாம் நினைத்த நேரங்களிலெல்லாம் படையினர் அந்தப் பகுதிக்கு எறிகணைகளை ஏவிக்கொண்டிருப்பார்கள். ஆபத்துக்களை விளையாட்டாக ஏற்றுக்கொள்ளும் தனது அணியினரை ஒவ்வொரு காப்பரண்களிலும் விட்டவாறு போன முகுந்தா, திரும்பி எல்லாக் காப்பரண்களையும் சரிபார்த்தவாறு வந்துகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.*

*எறிகணை வீச்சிலே முகுந்தாவை இழந்ததை எவரா லுமே ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. 1997.06.19 அன்று முகுந்தா வீரச்சாவடைந்தார். முகுந்தாவுக்கு அடுத்த பொறுப்பாளர் காயமடைந்தார். சிறப்பு அணி இறுகிப் போன முகங்களோடும் வைராக்கியத்தோடும் காப்பரண் களில் நின்றது. சிறப்புத் தளபதி கேணல் விதுஷாவின் அடுத்த கட்டளைக்காகச் சிறப்பு அணி காத்திருந்தது. மாலதி சிறப்பு அணிக்குப் பொறுப்பாளராக விதுஷா வால் நியமிக்கப்பட்டவர் அஸ்வினி. புலிகளின் புரட்சிக் குளத்தில் நின்ற அஸ்வினி, நெடுங்கேணிக்கு வந்து சிறப்பு அணியைச் சந்தித்தார். இவர்கள் எல்லோரையும் தலைவர் சந்தித்தார்.*

*அது ஒரு உணர்வுபூர்வமான சந்திப்பு. முகுந்தாவின் இழப்பால் உண்டான கோபத் தீ தலைவரின் விழிகளைச் சிவப்பாக்கியிருந்தது. பதில் நடவடிக்கை ஒன்றை உடனேயே செய்யவேண்டும் என்ற வேகம் இவர்களைத் தீயாக்கிவிட்டிருந்தது. எதைத் தலைவரிடம் கேட்கவேண் டும் என்று இவர்கள் நினைத்திருந்தார்களோ, அதையே தலைவரும் இவர்களோடு கதைக்கவேண்டும் என நினைத்து வந்திருந்தார்.பதிலடி கொடுப்பதற்குச் சிறப்பு அணி தயாராகியது. நீண்ட தூர நகர்வுக்குத் தக்கவகை யில் பயிற்சியும் உணவுப் பழக்கவழக்கமும் மாற்றியமைக் கப்பட்டன. சிறப்பு அணி புறப்பட்டது.*



படிப்பகம்

வெற்றி நிச்சயம் நடவடிக்கைப் படைகள் யாழ் நெடுஞ் சாலையில் நிலைகொண்டிருந்தன. படையினரின் வருகையாலும், படையினருக்கு முன்பே வருகை தரத்தொடங்கிய எறிகணைகளாலும் மக்கள் இடம்பெயர்ந்து போய் விட்டிருந்ததால் வெறுமையாகிப்போன கிராமங்களுடே, எதற்கும், எவருக்கும் பணியாத வன்னிக் காட்டின் மரங் களுடே, நீரோடி உலர்ந்த ஆறுகளைக் கடந்து, புல் வெளிகளைக் கடந்து, குன்றுகளைக் கடந்து என்று தொடர்ந்து நீண்டது அந்தப் பயணம். இலக்கை நெருங்கிப் போகப் போக முதுகுச் சுமை குறைந்துகொண்டேபோனது.

பார்வதிபுரம் என்ற ஆதிப் பெயரைக்கொண்ட பதவியா சிங்களக் குடியேற்றக் கிராமத்தின் அந்த வீதியில் காவல் உலாப்போன இராணுவ அணியினரை முதல் நாள் வேவு பார்த்துவிட்டுப் பின்னகர்ந்தனர். மறுநாள் பொருத்தமான இடங்களில் பதுங்கித் தாக்குதவதற்கான நிலைகளை அமைத்துவிட்டுக் காத்திருந்தனர்.

வீதிக்கும் காட்டுக்குமிடையே மரங்கள் வெட்டப்பட்டு வெளியாக்கப்பட்டிருந்தது. வெளி முழுவதும் புல் முளைத் திருந்தது. காட்டுக் கரையோடு நகர்ந்து வந்த இராணுவ அணி எம்மவர்களின் தாக்குதல் இலக்காகியது. 1997.07.09 அன்று மூன்று நிமிடங்களில் அந்தத் தாக்குதலைச் செய்து முடித்துவிட்டுச் சிறப்பு அணி வெளியேறியது.

ஓய்வில்லாத கடின பயிற்சிகளில் சிறப்பு அணி தொடர்ந்தும் ஈடுபட்டது.

வெற்றி நிச்சயம் நடவடிக்கை ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, எமது தாயகத்தின் இதய பூமியான மணலாற்றுக் காட்டினுள் ஊடுருவிப் பதுங்கித் தாக்கும் முயற்சியில் படையினர் சிறு சிறு குழுக்களாக ஈடுபட்டுக்கொண்டிருந் தனர். இந்திய வல்லாதிக்க இராணுவம் ஈழத்தை முற் றுகையிட்டிருந்த காலத்தில், போராட்டத்தின் வேரை

padippakam



தன்னுள் மறைத்து, அது விழுதுகள் விடும்வரை பாது காத்து, விடுதலைக்குப் பெரும் பணியாற்றிய மணலாற்றுக் காடு தலைவரின் காடு.

எங்களை வளர்த்த காட்டினுள் இராணுவத்தினரின் ஊடுருவலைக் கட்டுப்படுத்தும் பணியை மாலதி சிறப்பு அணியிடம் கொடுத்தார் தலைவர்.

காட்டைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்காக சிறப்பு அணி தொடர்ச்சியான காவல் உலாக்களைச் செய்தது. காட்டுக்குள் ஊடுருவும் இராணுவப் பதுங்கித் தாக்கும் அணிகளை நேரே சந்திக்கும் வாய்ப்பு ஒவ்வொரு தடவையும் நூலிழையில் தவறிப்போனது. இவர்கள் போவதற்கு முன்னர் ஏற்கனவே வந்துபோன இராணுவ அணியின் தடயங்களையும், படையினர் தங்கி நின்றுவிட்டுச் செல்லும்போது கைவிட்ட பொருட்களையுமே இவர்கள் சந்தித்தனர். எனவே இராணுவத்தினரை அவர்களின் வாசலுக்குப் போய்ச் சந்திக்கும் முடிவை எடுத்தனர்.

கல்யாணபுரம் என்ற ஆதிப் பெயர் கொண்ட கல்யாண புர சிங்களக் குடியேற்றக் கிராமத்தைப் பாதுகாக்கவென அமைக்கப்பட்டிருந்த படைத்தளம் சிறப்பு அணியின் இலக்காகத் தீர்மானிக்கப்பட்டது. தளம் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டது. இரண்டு பிரிவுகள் சிறப்பு அணிக்குரியவை. ஒன்று தளம். மற்றது கல்யாணபுர படையினருக்கு விநியோகம் வருகின்ற பெருந்தெரு. தாம் தாக்கவேண்டிய தளப்பகுதியை மேஜர் இளங்கிளியும் இன்னும் சில சிறப்பு அணியினருமே வேவு பார்த்தனர்.

காட்டுக்குள்ளேயே சிறப்பு அணி சண்டைக்குரிய பயிற்சிகளில் ஈடுபட்டது. அதேநேரம் காட்டைக் கண்காணிக்கும் காவலுலாக்கள் நிறுத்தப்படவில்லை.



படிப்பகம்

padippakam



அன்றும் பயிற்சி நடைபெற்றது. காவலுலா அணியும் போய்க்கொண்டிருந்தது. எங்கு இராணுவத்தைக் கண்டாலும் தாக்குவதற்குரிய தயார்நிலையோடு போய்க்கொண்டிருந்த எமது காவலுலா அணி இராணுவப் பதுங்கித் தாக்கும் அணியொன்றைத் கண்டுவிட்டது.

முன்னே போய்க்கொண்டிருந்த சீத்தாதான் முதலில் கண்டார். கண்ட அந்தக் கணமே அடியைத் தொடக்கினார் சிறிது நேரம் காட்டில் நெருப்புப் பறந்தது. எம்மவர்களைப் பதுங்கித் தாக்க வந்த இராணுவ அணி, தான் கொண்டுவந்த கிளைமோர், RPG கள், குண்டு துளைக்காத மேலாடைகள், மருத்துவப் பை என்பவற்றைக் கைவிட்டுக் காயத்துடன் பின்வாங்கியது.

பயிற்சிகளை நிறைவுசெய்துகொண்ட எம்மவர்கள் மறுபடி ஒரு நீண்ட நடைப் பயணத்தைச் செய்தார்கள். ஆயுதங்கள், வெடிபொருட்கள், உணவுகள், குடிநீர் என்று எக்கச்சக்கமான சுமையுடன் இரவு பகலாக நகர்ந்தார்கள்.

1997.09.08 அன்று கல்யாணபுர தாக்கப்பட்டது. தடையை (கரும்புலி) மேஜர் சசி அகற்றினார். சிறப்பு அணி தனக்குத் தரப்பட்ட தளத்தைக் குறுகிய நேரத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. பெருந் தெருவால் வரப்போகும் விநியோகத்தைத் தடைப்படுத்தும் பணியில் ஏற்கனவே சிறப்பு அணி இறங்கிவிட்டிருந்தது. எதிர்பார்த்ததுபோலவே இங்கே சண்டை நடக்க இராணுவ உதவியணி ஒன்று ஊர்திகளுடன் விரைந்துவந்தது. முன்னே வந்த 'பவள்' (கரும்புலி) மேஜர் சுதாஜினியின் கிளைமோர் அடியால் அதிர்ச்சியடைந்து தன் நகர்வு வேகத்தைக் குறைக்க, அன்புமதியின் RPG 22 அடி பவளை எரித்தது. பவளில் இருந்த LMG ஐ இவர்கள் கழற்றி எடுத்து வந்தார்கள்.



படிப்பகம்

padippakam



காடு இவர்களுக்குக் கட்டுப்பட்டது. தொடர் காவலுலாக்களைச் செய்த இவர்களுக்குக் காடு வழிவிட்டது. எந்தச் சூழ்நிலையிலும் போரிடும் ஆற்றலை இதயபூமி இவர்களுக்குக் கொடுத்தது. இவர்களின் பணி கடினமான போர் முனைகளிலெல்லாம் தேவைப்பட்டது.

வெற்றி நிச்சயம் படையினருக்கு எதிர்பாராத முனையில் கிடைத்த அடியாக நடந்த, கிளிநொச்சி-பரந்தன் ஊடுருவித் தாக்குதல் நடவடிக்கையில் இவர்களுக்கும் ஒரு பணி காத்திருந்தது.

அந்த நடவடிக்கையில் எதிர்பாராத திருப்பங்களை உண்டுபண்ணுவதற்காக உட்புகுந்தார்கள் கரும்புலிகள். அவர்களின் நடவடிக்கைக்கு உறுதுணையாக வழி நடந்தார்கள் மாலதி சிறப்பு அணியினர்.

மனிதர்கள் போக நினைக்காத பாதைகளால் இவர்கள் போனார்கள். யாருமே செய்ய நினைக்காதவற்றைச் செய்தார்கள். உள்ளிருந்த படையினரை ஒரு உலுப்பு உலுப்பி விட்டு, எவரும் எதிர்பாராத பாதைகளால் திரும்பி வந்தார்கள்.

மறுபடியும் தங்களுக்குரிய காட்டுக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

காடு இவர்களை வரவேற்றது. வழிவிட்டது. காவல் உலாக்கள் போயினர். படையினர் ஏற்படுத்திவைத்திருந்த எந்தத் தடைகளும் இவர்களைத் தடுக்கவில்லை. தாக்குதல் ஒன்றைச் செய்வதற்கான வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அந்தநேரம் தலைவரிடமிருந்து வந்தது அந்தச் செய்தி.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

தலைவரின் பணிப்பை ஏற்று, வெற்றி நிச்சயம் படையினரை எதிர்கொள்ள சிறப்பு அணி அம்பகாமம் வந்தது.

வலது பின்பக்கம் மம்மில் பிள்ளையார் கோயில். இடதுபக்கம் ஒரு குளம். இரண்டுக்குமிடையே இருந்த காப்பரண்களைச் சிறப்பு அணி பொறுப்பேற்றது.

யாழ் நெடுஞ்சாலையால் நகர்ந்து கிளிநொச்சியை அடையமுடியாத வெற்றி நிச்சயம் படையினர், தமது தேக்கநிலையை மூடி மறைப்பதற்காகப் பக்கவாட்டாகப் பரவிக்கொண்டிருந்தனர். தமது இடதுபுறம் வன்னிவிளாங் குளம்வரையும் வலதுபுறம் அம்பகாமம்வரையும் பரவிக் கிடந்தன படைகள். விலகி வந்த பக்கங்களால் முன்னரக முயன்றன.

அன்று நிச்சயமாகப் படையினர் நகர்வார்கள், சண்டை பெருஞ் சண்டையாக இருக்கப்போகின்றது என்ற எதிர் பார்ப்பு இருந்ததால், அந்த இடத்தில் படையினரைத் திருப்பியனுப்பக் கேணல் கருணாவால் சிறப்பு அணி அழைக்கப்பட்டது. இரண்டு நாட்களின் முன் அவ்விடத் துக்கு வந்த மாலதி சிறப்பு அணி 1998.06.05 அதிகாலையி லேயே எதிர்நடவடிக்கைக்குத் தயாரானது.

தமது நகர்வுப் பாதைக்குக் குறுக்கே நிலைகொண்டி ருந்த சிறப்பு அணியின் மிகக் கடுமையான எதிர்த் தாக்கு தலை இராணுவம் அன்று எதிர்கொண்டது. இராணுவத் தினர் சாதாரணமாக வரவில்லை. இவர்களை அப்படியே ஒரு தள்ளுத் தள்ளி வட்டக்கச்சிவரை போய்விடுவது போன்றதொரு தோற்றப்பாட்டோடுதான் சண்டையிட்டனர். இவர்கள் நிலைகொண்டிருந்த குறுகிய பகுதி பகைச் சுடுகலன்களால் சல்லடை போடப்பட்டது. குறுகிய இடை வெளிகளில் நிலைப்படுத்தப்பட்ட இராணுவத்தின் இரண்டு .50 கலிபர்கள் இடம் வலமாகச் சுழன்று சுழன்று சீறிக் கொண்டேயிருந்தன. ஒரேநேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட

padippakam



எறிகணைகள் விழுந்து வெடித்தன. ஒரு தொகுதி எறி கணைகள் வெடித்து முடியமுன் அடுத்த தொகுதி எறி கணைகள் கூவிவரும். அன்று அந்தச் சமர்க்களம் பாரிய வெடிப்போசைகளாலும் புழுதி மண்டலத்தாலும் நிறைந்தி ருந்தது.

சிறப்பு அணியைச் சேர்ந்த எவருமே தமது காப்பரண் களைவிட்டு வெளியேறவில்லை. படையினரைப்போல ஆரவாரப்படவில்லை. மிக நிதானமாகத் தமது கண்களில் படும் இராணுவத்தினரைச் சுட்டுக்கொண்டிருந்தார்கள். எமது எந்தக் காப்பரணுமே தனது பலம் குன்றாது போரிட் டது.

காலையில் நடவடிக்கையைத் தொடங்கிய படையினர், மாலைவரை தமது படைக்கல சக்தியை வீணே அழித்து விட்டு, வந்த வழியே திரும்பிப்போயினர்.

அன்றிரவும் மறு நாளிரவும் எமது காப்பரண்களை நெருங்கமுயன்ற இராணுவ வேவு அணிகள், எம்மவர் களின் தாக்குதலுக்குள்ளாகின. எந்த நேரமும் படையின ரின் அடுத்த நகர்வு இருக்கலாம் என்று எமது சிறப்பு அணி விழிப்போடும் எதிர்பார்ப்போடும் இருந்தது. இவர் கள் எதிர்பார்த்தபடியே படையினர் 07 ஆம் திகதி முன் னேற முற்பட்டனர்.

இடி, மின்னல், புயலோடு கூடிய பெருமழைபோன்று எறிகணைகளும் கனரக ஆயுதங்கள் ஏவிய ரவைகளும் சடசடசடவெனப் பொழிய, எம்மை யார் என எதிர்த்தரப் புக்கு மறுபடியும் ஒருமுறை உணர்த்திய பெருஞ் சண்டை நடந்தது. இம்முறை இராணுவம் நேரடியாக எம்மை நோக்கி வராமல், காப்பரண்களுக்கு இடையே இருந்த இடைவெளிகளூடே எமது அணிகளைக் கடந்து பின்னே வந்தது. காப்பரண்களுள் நின்ற போராளிகள் இப்போது எல்லாப் பக்கமும் பார்த்துச் சுட்டுக்கொண்டிருந்தார்கள். தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கும் விநியோக



படிப்பகம்

வலுவுடனும் பாரிய படைக்கல சக்தியோடும் வந்திருந்த பகைவரோடு, தம் ஒவ்வொருவரிடம்மட்டும் இருந்த வெடி பொருட்களைவைத்துச் சண்டை பிடித்தது சிறப்பு அணி.

மிக அருகருகாக நடந்த சண்டையில் வீரச்சா வடைந்தோரினதும் காயப்பட்டோரினதும் வெடிபொருட் கள் தீரும்வரை ஒவ்வொரு காப்பரணும் எதிர்ச் சமர் செய்தது. வெடிபொருள் இருப்பு முடிவடையத் தம்முட னுள்ள காயப்பட்டவர்களைத் தூக்கிக்கொண்டு எஞ்சி யிருந்தோர் வெளியேறினர். எதிர்ப்புகளற்ற காப்பரண் களுள் படையினர் புகுந்துகொண்டனர். ஒரு காப்பரண் மட்டும் தன் பலத்தை இழக்காமல் தொடர்ந்து போரிட்டபடி இருந்தது. அந்தக் காப்பரணை நெருங்கமுனையும் படை யினர் கொல்லப்பட்டுக்கொண்டிருந்தனர். படையினருக்குச் சவாலாகக் களத்திலே தனித்து நின்ற அந்தக் காப்பரணுள் நின்றது சிறப்பு அணியின் பொறுப்பாளர் லெப்.கேணல் அஸ்வினி,மேஜர் சுமைதா, கப்டன் இலக்கியா, மலர்க் கொடி, றோசா ஆகியோர்.

“நாங்கள் எமது காப்பரணிலேயே நிற்கிறோம். எங் களுக்கு ரவைகளை அனுப்புங்கள்”

என்று அஸ்வினி கட்டளைப்பீடத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவர்களுக்கு ரவைகளைக் கொடுத்து இருவரை அஸ்வினியின் இடத்துக்கு அனுப்பினார் விதுஷா. தாம் அஸ்வினியை நெருங்கமுடியாமல் அந்தப் பகுதியெங்கும் இராணுவம் பரவி நிற்பதை ரவையோடு போனவர்கள் விதுஷாவுக்குத் தெரியப்படுத்தினர்.

இராணுவம் அஸ்வினிக்கு மிக நெருக்கமாக நிற்பதால் எம்மால் எறிகணைச் சூட்டாதரவை வழங்கமுடியவில்லை. எனவே எமது முன்னரங்கின் முன்புறமாக, படையினருக்கு

padippakam



விநியோகம் வரக்கூடிய பகுதிகளை இலக்குவைத்துத் தாக்குமாறு எறிகணை செலுத்தும் அணிகளைப் பணித்த விதுஷா, அஸ்வினிக்கு ரவை அனுப்பமுடியாதிருக்கும் நிலையைக் குறிப்பிட்டு, அவருக்கு உதவியணியொன்றை அனுப்பும்படி கட்டளைத் தளபதி ரமேஷிடம் கேட்டார்.

ரமேஷின் பணிப்பில் மாங்குளத்தில் நின்ற ஜெயந்தன் படையணி ஒரு உதவியணியை அனுப்பியது. படையினரின் முற்றுகைக்குள்ளிருந்த அஸ்வினியை நெருங்க முயன்ற உதவியணி இரண்டு முறை வெவ்வேறு முனைகளால் படையினருடன் மோதியது. அஸ்வினியிடம் போகமுடியவில்லை.

வெளிப்புறத்திலிருந்து உதவியணிகள் வரப்போவதை விளங்கிக்கொண்ட படையினர், தமக்கு நடுவே சூட்டு வலுவோடு நிற்கும் ஒரேயொரு காப்பரணை வீழ்த்த அரும்பாடுபட்டனர்.

படையினரின் ஒரு RPG எங்களின் காப்பரணில் வந்து மோதியது. உள்ளே நின்றவர்களின் காது அடைத்தது. எனினும் எவரும் நிலைகுலையவில்லை. அஸ்வினி கட்டளைப் பீடத்துடனான தொடர்பைத் துண்டிக்கவுமில்லை. மற்றவர்கள் தாறுமாறாகச் சுட்டு வெடிபொருட்களை வீணாக்கவுமில்லை. அடுத்த முறையும் RPG யோடு தம்மைக் குறிபார்த்த இராணுவத்தை இனங்கண்டு சுட்டார்கள்.

இப்போது படையினரின் PK LMG ஒன்று இவர்களின் பின்புறமாக வந்து வாசலுக்கு நேரே இயங்கியது. தடையின்றி உட்புகுந்த ரவைகள் மண்ணைத் துளைத்து உடைத்துப் புழுதி கிளப்ப, காப்பரணுள் நின்ற ஒருவராலும் ஒன்றையுமே பார்க்கமுடியாமல், சுவாசிக்கமுடியாமல் போனது. ஆனால் அவர்களின் ஏனைய புலன்கள் விழிப்பாக இருந்தன. பின்புற அடி விழும் வாய்ப்பைப் பயன்படுத்தி, முன்புறமாகத் தம்மை நெருங்கிவந்து



படிப்பகம்

குண்டொன்றை வீசக்கூடும் என்று இவர்கள் ஊகித்தது போலவே ஒரு இராணுவம் முன்புறமாக ஊர்ந்து வந்ததைக் கண்டு, குண்டை எறிந்தார்கள். இவர்களின் குண்டும் அவர் கொண்டுவந்த குண்டும் வெடிக்க, அவர் அவ்விடத்தி லேயே கொல்லப்பட்டார்.

மலர்க்கொடியின் தலையில் ஒரு PK LMG ரவை பலத்த காயத்தை ஏற்படுத்திவிட்டது. ஓடு பிளந்து, தலையின் உட்புறம் இருப்பன வெளித் தள்ளிக் கொண்டிருக்க, மேஜர் சுமைதா சிகிச்சையை ஆரம்பித்தார். மலர்க்கொடியின் நிலை, அவர் பிழைப்பார் என்ற எண்ணத்தை யாருக்கும் ஏற்படுத்தவில்லை. எனினும் சுமைதா எல்லாவற்றையும் உள்ளே தள்ளி, குருதித்தடுப்புப் பஞ்சணைகளால் பலமான கட்டுக்களைப் போட்டுவிட்டு, நினைவிழந்து கிடந்த மலர்க் கொடிக்கு திரவ ஊடகத்தை ஏற்றத்தொடங்கினார்.

படையினரின் இடைவிடாத தாக்குதலினால் அதிர்ந்து கொண்டிருந்த காப்பரணின்மேலே போடப்பட்ட குற்றி யொன்றின் உட்புறமாகக் கட்டித் தொங்கவிடப்பட்ட போத் தலில் இருந்த திரவ ஊடகம் துளித் துளியாக மலர்க் கொடிக்கு ஏறிக்கொண்டிருந்தது.

எவருக்கும் அசையாமல் மலையென அந்தக் காப்பரண் நிமிர்ந்து நின்று நெருப்பள்ளி வீசியது. நெருங்கமுனை யும் ஒவ்வொரு படையினரும் வீழ்த்தப்பட்டனர். இவர் களைத்தவிர, ஏனைய காப்பபரண்களில் படையினர் நின்றதால், அவற்றை எம்மவர்களின் எறிகணைகள் தேடிப் போயின.

உதவியணி ஒன்று இடதுபுறமிருந்து படையினரோடு மோதியவாறு நெருங்கி வரும் ஒலிகள் இவர்களுக்குக் கேட்கத்தொடங்கின. அவர்கள் வந்துசேரும்வரை தமது காப்பரணைப் பாதுகாப்பதில் உறுதியாகவும் நிதானமாக வும் இவர்கள் செயற்பட்டார்கள். எண்ணி எண்ணிச்

padippakam



சுட்டார்கள். மாலையாகிவிட்டது. கடைசியாக எஞ்சியிருந்த ஒரே ஒரு ரவைக்கூட்டை ஆயுதத்தில் பொருத்திய போது சுதாகருடன் வந்த தலைநகரப் படையணியின் உதவியணி இவர்களை நெருங்கிவிட்டிருந்தது. மறுபுறம் ஜெயந்தன் படையணியும் வந்துசேர்ந்தது.

காலையிலிருந்து மாலைவரை நீடித்த அந்தப் பெருஞ் சமரில், மிக அதிகமான தன் படைக்கல சக்தியை இழந்து, பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கினர் படையினர்.

சுமைதாவின் துணிச்சலான முயற்சியால், மலர்க் கொடியின் உயிர் காப்பாற்றப்பட்டது. எந்தச் சூழ்நிலையிலும் இறுதிவரை நின்று போரிடும் தன் ஆற்றலை மாலதி சிறப்பு அணி அம்பகாமத்தில் அற்புதமாக வெளிப்படுத்திவிட்டிருந்தது. முற்றுகைக்குள்ளாகியிருந்த அவர்களின் அதியுச்ச செயற்றிறன் எமது அமைப்பின் அனைத்துத் தளபதிகளாலும் பாராட்டப்பட்டும் பெருமையோடு பேசப்பட்டும் வந்தது.

மன்னகுளம் முறியடிப்புத் தாக்குதல் நடந்த, ஓராண்டின் முடிவில், 1998.12.04 அன்று தமது 'வெற்றி நிச்சயம் படை நடவடிக்கை நிறுத்தப்பட்டுவிட்டதாக சிறீலங்கா அரசின் பரப்புரை ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. 'பாதை திறக்கும்' (?) பணியைப் படையினர் பாதியிலேயே நிறுத்திவிட்டிருந்தனர்.

இந்தச் செய்தி வெளிவந்தபோது, ஓயாத அலைகள் –02 வெற்றி நடவடிக்கைமூலம் மீட்கப்பட்ட கிளிநொச்சி நகரின் முடிவிலே, பரந்தன் சந்தியை அண்மித்து அமைக்கப்பட்ட பாதுகாப்பரண்களிலே கண்ணுக்கெட்டிய தொலைவுவரையும் நீண்டு நிலைகொண்டிருந்தது எங்கள் படையணி. அங்கே எமது கொம்பனிகளின் மேலாளராக



படிப்பகம்

2ஆம்லெப். மாலதி படையணி

நின்றவர் ஈடிணையற்ற வேவுப் புலியும், கரும்புலிகள் மகளிர் அணியின் முன்னாள் பொறுப்பாளரும், பின்னாட் களில் மாலதி படையணியின் துணைத் தளபதியுமான லெப்.கேணல் மைதிலி.

* * *

# 05

வன்னிவிளாங்குளப் பகுதியில் நின்ற கொம்பனியோடு மேஜர் கனீபா நின்றுகொள்ள, கிளி-பரந்தன் ஊடுருவித் தாக்குதலை முடித்துக் கொண்டு முரசுமோட்டைப் பகுதியில் நின்ற கொம் பனியோடு முல்லை, செல்வி, தமிழ்செல்வி ஆகியோர் நின்றனர். ஆனையிறவுப் படைத்தளத்திலிருந்து முன் னெடுப்புகளை நடக்கவிடாது தடுக்கும்பணி இப்போது எங்களுடையது.

முன்னேற்ற நடவடிக்கையொன்றைக் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து செய்யமுயன்ற படையினரின் முனைப்பை கிளி-பரந்தன் ஊடுருவித் தாக்குதல் மந்தப்படுத்திவிட்டி ருந்தது. மறுபடி படையினர் 1998.06.04 அன்று யாழ் நெடுஞ்சாலையால் பாரிய முன்னேற்றம் ஒன்றைச் செய் வதற்காக நகர்ந்தனர். அன்று அவர்களை எதிர்கொண்டது யாழ் நெடுஞ்சாலையைக் குறுக்கறுத்து நிலைகளை அமைத்திருந்த சோதியா படையணியினர். முரசுமோட்டை யில் நின்ற நாம் அவர்கள் சண்டையிடுவதற்கு வசதியாக விடுபட்ட காப்பரண்களுக்கு மீளவும் ஆட்களைவிட்டு இணைப்பை ஏற்படுத்தி, கிளிநொச்சிக் குளம்வரை நகர்ந்து நெருங்கிநின்றோம். அதனால் அன்று ஜமுனாவின் பிளாட் டூனைச் சேர்ந்த தர்சினியின் செக்சன் சண்டையிட்டது.

மாலைவரை தமது முயற்சியைத் தொடர்ந்த படைத்தரப்பு இழப்புகளோடு தளம் திரும்பியது.

எல்லோரும் காப்பரண்களைப் பலப்படுத்தியவாறு விழிப்போடு இருந்தோம். 07 ஆம் திகதி இரவு எங்களின் கொம்பனியை ஏற்றுவதற்காக எமது பின்பகுதிக்கு ஊர்திகள் வந்தன. மறுநாள் காலையில் படையினர் யாழ் நெடுஞ்சாலைக்கு இடதுபுறம் பெரும் நடவடிக்கை ஒன்றைச் செய்யப்போவதாகவும், அந்த இடத்தில் நின்ற லெப்.கேணல் சந்தோசம் படையணியை மாற்றிவிடும்படியும் எம்மிடம் கேட்கப்பட்டது. உடனேயே புறப்பட்டோம். சவாலான களங்கள் எங்களுக்காகக் காத்திருந்தன.

இப்போது யாழ் நெடுஞ்சாலைக்கு இடதுபுறம் நாம், நெடுஞ்சாலையைக் குறுக்கறுத்தபடி சோதியா படையணி, அவர்களுக்கு வலதுபுறம் சாள்ஸ் அன்ரனி, அதற்கும் அப்பால் முரசுமோட்டையில் சந்தோசம் படையணி.

காலையிலேயே சண்டை தொடங்கிவிட்டது. எறிகணைகளை மழையாகப் பொழிந்தபடி யாழ் நெடுஞ்சாலைக்கு நெருக்கமாக மூன்று வழிகளூடே உடைத்தவாறு படையினர் கிளி-டிப்போச் சந்திவரை போய்விட்டனர்.

உடனடியாகவே ஜமுனா தனது பிளாட்டூனுடன் காப்பரண் வரிசையால் அடித்தபடியே நெடுஞ்சாலையை நோக்கி நகரத்தொடங்கினார். படையினர் நின்ற காப்பரண்களின் மிகக் கடுமையான எதிர்ப்பை முறியடித்தவாறு ஜமுனா போக, அதே காப்பரண்களுக்குள் மறுபடி படையினர் வந்து புகுந்துகொள்ளவே, ஒவ்வொரு காப்பரண்களிலும் மறுபடி மறுபடி சண்டை தொடர்ந்தது. மிகவும் நெருக்கமாக நடந்துகொண்டிருந்த சண்டையில் நாங்கள் அதிகளவு குண்டுகளைப் பயன்படுத்தினோம். மீளவும் ஜமுனாவின் பிளாட்டூன் கடும் சண்டைகளின்

padippakam



பின் காப்பரண்களைக் கைப்பற்றியவாறு நெடுஞ்சாலையை நோக்கி முன்னேற, முன்னரங்கில் நின்று எங்கள் பக்கச் சண்டையை வழிநடத்திக்கொண்டிருந்த தமிழ்செல்வி, கொம்பனியின் ஏனைய பிளாட்டூன்களை இவர்களின் பின்னே நகர்த்திவிட்டுக்கொண்டு வந்தார்.

டிப்போச் சந்திவரை முன்னேறிய படையினரின் ஒரு பகுதி கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லம் போகும் வீதி யால் நகர்ந்துகொண்டிருப்பதாகவும், அவர்களை வழி மறிக்கும்படியும் தமிழ்செல்வியிடம் அப்பகுதியின் கட் டளை அதிகாரி பணித்தார். உடனடியாகவே துளசியுடன் புறப்பட்ட ஒரு செக்சன், படையினரை மேவிப் போய் வழிமறித்து, எறிகணைகளை வீழ்த்தியபடி டிப்போச்சந்தி நோக்கித் துரத்தியடித்தது.

எங்களின் பகுதியில் படையினர் நின்ற ஒரு காப்பரண் மிகப் பலமாக இருந்தது. எம்மவர்கள் அந்த ஒரு காப் பரணுக்காக நீண்ட நேரம் சண்டையிட்டனர். படையின ரும் விடுவதாயில்லை. அந்த ஒரு காப்பரண் எங்களிடம் விழக்கூடாது என்பதில் படையினர் மிகத் தீவிரமாகவே இருந்தனர். ஏனெனில் அவர்களுடைய அதிகாரியொரு வர் காயமடைந்தநிலையில் யாழ் நெடுஞ்சாலைக்கு இடதுபக்கம் எங்களிலிருந்து 150மீ. பின்னால் ஒரு ஆல மரத்தின்கீழ் இருந்தார். அங்கும் இங்கும் சிதறிநின்ற படையினரை அவர் தன்னருகே சேர்த்துக்கொண்டிருந் தார். ஐம்பதுக்கும் மேற்பட்ட படையினர் இப்போது மரத் தடியில் குவிந்துவிட்டனர். இனி இவர்கள் அவரைத் தூக்கிக்கொண்டு எம்மைத் தாக்கியபடி, தாம் உள்ளே போவதற்காகத் தக்கவைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பாதைவழியே தப்பிப் போகப்போவதை உணர்ந்துகொண்ட நாங்கள், RPG களைப் பயன்படுத்தி அவ்விடத்தை நோக் கிக் கடும் தாக்குதலைத் தொடர்ந்தோம். எதிர்த்திசையால் லெப்.சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவும் தாக்கியவாறு முன்னேறிக்கொண்டிருந்தது.



படிப்பகம்

padippakam



அதற்கிடையில் எங்களின் LMG ஒன்று, படையினர் நின்ற காப்பரணைநோக்கி நெருப்பைச் சீற, எங்களில் இருவர் நெருங்கிப்போய் அதற்குள்ளே குண்டுகளை வீச, முன்னரங்கப் பகுதியும் முழுமையாக எமது கட்டுப்பாட்டுக்குள் வந்தது. காலை 5.00 மணிக்குத் தொடங்கிய சண்டை ஓய்ந்தபோது இரவு 8.30 ஆகிவிட்டிருந்தது. சண்டை முடிந்தாலும், படையினரின் எறிகணைவீச்சு ஓயாது. அன்றும் அப்படித்தான். ஆனால், காப்பெடுப்பதற்காகக் காப்பரணின் உள்ளே இறங்கமுடியாது. அவை முழுதும் படையினரின் சடலங்களால் நிறைந்திருந்தன.

காப்பரண்களைத் துப்புரவு செய்யும் பணி இரவிரவாக தமிழ்செல்வி தலைமையில் நடைபெற்றது.

“பல சுடுகலன்களை அந்த முறியடிப்பு நடவடிக்கையில் நாங்கள் எடுத்தோம். எம்மால் மீட்கப்பட்ட காப்பரண்களுள் நாங்கள் போராளிகளை விட்டபோது, அவர்கள் அதற்குள் குவிந்திருந்த படையினரின் உடல்களுடன் சேர்ந்தே நிற்கநேரிட்டது. சண்டை முடிந்தபின்னர், ஒவ்வொரு காப்பரண்களுள்ளிருந்தும் பத்துக்கும்மேற்பட்ட இராணுவ உடல்களை அகற்றினோம். அவற்றோடு, அந்தந்தக் காப்பரண்களில் நின்று தீரமுடன் போரிட்டு உயிர்நீத்த சோதியா படையணியினரின் வித்துடல்கள் இருந்தன. ஒரு காப்பரணுள் படையினரின் உடல்களோடு காயத்துடன் ஒரு சோதியா படையணிப் போராளி இருந்ததைக் கண்டு, அவரையும் மீட்டோம்.

என்னுடைய அனுபவத்தில், ஒரு முறியடிப்புச் சமரில் இத்தனை சுடுகலன்களையும், படையினரின் உடல்களையும் இதற்குமுன் நான் பார்த்திருக்கவில்லை”



படிப்பகம்

padippakam



என்கிறார், அப்போது கொம்பனியொன்றின் கட்டளை அதிகாரியும், தற்போது மாலதி படையணியின் தளபதியு மான லெப்.கேணல் தமிழ்செல்வி.

இப்போது, அடிப்படைப் பயிற்சியை முடித்துக் கொண்டு ஒரு தொகுதி புதியவர்கள் எம்மிடம் வந்தார்கள். அவர்களைப் பொறுப்பேற்பதற்காகத் தமிழ்செல்வி போய்விட்டார். கிளிநொச்சியில் நின்ற முல்லையின் கொம்பனியின் பதில் பொறுப்பாளராக ஜமுனா நின்றார்.

யாழ் நெடுஞ்சாலையோடு நாங்கள். எங்களுக்கு இடது புறம் சிறுத்தை மகளிர் படையணி. அவர்களுக்கப்பால், கரடிப்போக்கு-உருத்திரபுரம் வீதிக்கு அப்பால் எவரு மில்லை. படையினர் அந்தப் பகுதியால் தமது முன்னரங் கைக் கடந்து வெளியே எந்தக் கட்டுப்பாடுமின்றி எங்கும் போகலாம். வரலாம்.

அன்று 1998.08.12

“முதல் நாளிரவே படையினர் உருத்திரபுரத்துக்குப் போய்விட்டனர். அதிகாலையில் கிளி/இந்துக் கல்லூ ரியருகே அவர்களைக் கண்டதாக ஒரு தகவல் எனக் குக் கிடைத்தது. தொடர்ந்து, லெப்.கேணல் ராக வனின் கட்டளைப் பீடத்துக்கு ஒரு ஐயா வந்து, தான் அவர்களை நேரே கண்டதாகச் சொன்னார்.

உடனடியாக ஒரு சிறு அணியை அவ்விடத்துக்கு அனுப்பித் தேடிப் பார்த்தோம். அவர்களைக் காண வில்லை. ஆனால், தடயங்கள் கிடந்தன. தடயத்தைத் தொடர்ந்துபோய்ப் பார்த்ததில், படையினர் தளத்தி லிருந்து வெளிவந்த திசை புலனானது. அதை



படிப்பகம்

padippakam



வைத்து, எவ்வழியால் அவர்கள் திரும்புவார்கள் என ஊகித்து, அவ்வழியே வேகமாக ஒரு மறிப்பு அணியை நிலைப்படுத்தினோம்"

என்றார், அப்போது கிளிநொச்சிப் பகுதிக் கள நட வடிக்கைக்குப் பொறுப்பாக இருந்த கேணல் தீபன் அவர் கள்.

ஏற்கனவே, தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற இரு நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கிளிநொச் சிப் பகுதியிலே காணாமற்போக வைத்தவர்கள், இப் போது எதற்காக வந்திருக்கின்றார்கள்?

ஜமுனா தலைமையில் பதின்மூன்று பேர் மறிப்பு அணியாகப் புறப்பட்டோம். இடம் காட்டுவதற்காக அந்த ஐயாவும் கூடவந்தார். கரடிப்போக்கு-உருத்திரபுரவீதிக்கும், பரந்தன்-பூநகரி வீதிக்கும் இடையிலுள்ள வயல்வெளி யில், படையினரின் முன்னரங்கப் பகுதிக்கு முதுகு காட் டியவாறு, உட்புறமாகத் திரும்பி நிலையெடுத்தோம்.

காலை 10.00 மணியளவில் படையினர் திரும்பி வந்து கொண்டிருப்பதைக் கவனித்தோம். அவர்கள் ஏறத்தாழ அறுபது பேரளவில் இருப்பார்கள். வயல்களூடு பரவலாக வந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் நகர்வுக்கு ஏற்ப நாங்கள் சட்டென எழும்பி, எமது சுடுகலன் வலுவுக்குப் பொருத்தமாக இடம்மாறி நிலையெடுத்தோம். அவர்கள் எங்களைக் கண்டுவிட்டார்கள். எல்லோரும் குனிந்தவாறு ஓடத்தொடங்கினர்.

அந்த வயல்வெளியில், சூரியன் எரிக்கின்ற பட்டப்பக லில், வயல்களிடையே இருந்த வரப்புகளைக் காப்பாகப் பாவித்துச் சண்டை ஆரம்பமானது. மேஜர் சிவகுமாரியின் PK LMG ஒன்றுதான் எம்மிடம் இருந்த ஒரே ஒரு கனரகச் சுடுகலன். படையினரைக் கண்டுவந்து தகவல் சொன்ன



படிப்பகம்

padippakam



ஐயாவுக்கு அவர்கள் எத்தனை பேர் என்று தெரிய வில்லை. ஒரு வேவு அணியை எதிர்பார்த்து வந்த நாம், இந்தளவு பெருந்தொகைப் படையினரை எதிர்கொள்வதற் கான தயார்நிலையில் வரவுமில்லை. எங்களுடன் காவும் குழுவோ, ரவை விநியோக அணியோ, அல்லது ஒரு உதவியணிதானும் வந்திருக்கவில்லை.

எம்மிடமிருந்த இருப்பைப் பயன்படுத்திச் சண்டை பிடித்தவாறே, கட்டளைத் தளபதி தீபன் அவர்களுடன் தொடர்புகொண்ட ஜமுனா, எங்களுக்கு உதவியணி வேண்டும் என்று அறிவித்தார்.

வயல்வெளியிலே பூவரசு வேலியால் சூழப்பட்ட ஒரு கல்வீட்டினுள் தமது காயக்காரர்களைப் படையினர் இழுத்துப்போயினர். இதைக் கவனித்த ஜமுனா, அந்த வீட்டுக்கு எறிகணை வீசும்படி கேணல் தீபனிடம் கேட்ட தற்கேற்ப, எறிகணைவீச்சு ஆரம்பமானது. பகல் நேரச் சண்டை என்பதால், நாம் பார்த்துப் பார்த்துச் சுட்டுக் கொண்டிருந்தோம்.

படையினரில் ஒரு பகுதி தமது தளத்தைநோக்கி ஓடிக்கொண்டிருந்தது. அதைத் தடுத்து நிறுத்த இந்தப் பதினான்கு பேரால் என்ன செய்யமுடியும்? நெருக்கத்தி லுள்ளவர்களைச் சுட்டவாறும், எமது சூட்டு வீச்செல் லையைக் கடந்துபோய்க்கொண்டிருந்தவர்களுக்கு எறி கணைகளை வீழ்த்தியவாறும் நகர்ந்து நகர்ந்து தாக்கு தல் செய்துகொண்டிருந்தோம். உதவியணி இன்னமும் வரவில்லை. எமது கையிலுள்ள வெடிபொருட்களின் எண்ணிக்கையோ மிகவும் குறைந்துபோய்க்கொண்டிருந் தது.

இப்போது, தளத்துக்குள்ளிருந்த படையினர் பரந்தன் பகுதியால் தமது முன்னரங்கைக் கடந்து வயல்வெளிக்கப் பாலுள்ள வீதியில் ஊர்திகளில் வந்து இறங்கிக்கொண்டு இருந்தார்கள். கட்டளைப் பீடத்துக்கு இந்தச் சிக்கலான



படிப்பகம்

padippakam



நிலையைச் சொன்னவாறு சண்டைபிடித்துக் கொண்டிருந்தோம். புதிதாக வருபவர்களை மேலதிகமாக வரவுள்ள உதவியணி தடுத்துநிறுத்துமென்றும், உள்வந்த படையினரைக் கொல்லும்படியும் எமக்குச் சொல்லப்பட்டபோதும், உதவியணி எங்களிடம் வராததால், முன்னரங்கிலிருந்து வருபவர்களையும் நாமே எதிர்கொள்ளவேண்டியவர்களானோம்.

எங்களுக்குப் பின்னால் (படையினரின் முன்னரங்கின் முன்னால்) ஒரு மரக்கூடல் இருந்தது. பின்வாங்கிக் கொண்டிருந்த படையினர் அதனை நெருங்கிவிட்டனர். இப்போது பி.ப 3.00 மணி. அவர்கள் எங்களை நெருங்கிக் குண்டடிக்க முயன்றனர். அவர்கள் எங்களை நெருங்க முன், அவர்களை நோக்கித் தவழ்ந்துபோன சிவகுமாரி, மிக நெருக்கமாகப் போய்க் குண்டுகளை எறிந்தார். மரக்கூடல் நெருக்கடி தீர்ந்தது. ஆனால் அவர்களுக்கு உதவியாக முன்னரங்கிலிருந்து வெளியேவந்த படையினரோ எம்மை நெருங்கிக்கொண்டிருந்தார்கள்.

எங்களின் PKLMG உதவியாளர் 2 ஆம் லெப். சீரரசி வீரச்சாவடைந்துவிட்டார். ஏழுபேர் காயமடைந்திருந்தனர். ஆறுபேர்தான் சிக்கலின்றி நின்றோம். நேரம் 4.00 மணியாகிவிட்டிருந்தது. இதற்கிடையில் எங்களை நோக்கி எமது உதவியணி வந்துகொண்டிருப்பதைக் கண்டு, அவர்களுக்குச் சைகை காட்டினோம். ஆனால் எம்மை நெருங்கமுயன்ற உதவியணி, படையினரின் பலமான தாக்குதலில் சிலர் வீரச்சாவடைய், எங்களிடம் வரமுடியாமல் வயல்வெளிக்கு அப்பாலே நின்றுகொண்டது.

இப்போது படையினர் எம்மை நெருங்கித் தாக்கத் தொடங்கினார்கள். மிக அருகே நின்ற இரு தரப்பும் தெளிவாக ஒருவரை ஒருவர் இனங்கண்டு குண்டுகளாலும் ஆயுதங்களாலும் மாறிமாறித் தாக்கிக்கொண்டிருந்தோம்.



படிப்பகம்

padippakam



வீதியோரமாக இருந்த ஒரு வாய்க்கால் மதகருகே PK LMG இனை நிலைப்படுத்திய சிவகுமாரி எங்களுக்கான காப்புச்சூட்டை வழங்கத்தொடங்கினார். நாங்கள் எங் களுடைய சுடுகலன்கள், காயமடைந்தோரின் சுடுகலன் கள், காயமடைந்தவர்கள், வித்துடல் எல்லாவற்றையும் சுமந்துகொண்டு தவழ்ந்தவாறு குறிப்பிட்ட தூரத்தைக் கடப்பதும், படையினரைத் தாக்குவதும், நகர்வதும், தாக்குவதுமாக வயல்வெளியை விட்டு எல்லோரும் வெளியேறியபோது இருட்டிவிட்டது.

காயமடைந்த படைவீரர்களையும், இறந்த உடல்களை யும் எடுத்துக்கொண்டு, இராணுவ உதவியணிகள் மறு படியும் கிளிநொச்சிப் படைத் தளத்துள் போய்விட்டன.

எல்லோரும் மிகவும் களைத்துவிட்டோம். சுடுகலன் களைக் கொண்டுபோய் ஒரு மரத்தடியில் வைப்பதும், பின் திரும்பிவந்து காயக்காரர்களைத் தூக்கிக்கொண்டு போவதுமாக, எமது முன்னரங்கில்லாத பாதுகாப்பற்ற பகுதியைக் கடந்தபோது நேரம் நள்ளிரவைத் தாண்டிவிட் டது. சீரரசியின் உடலை ஒரு பற்றைக்குள் மறைவாக மூடிவைத்துவிட்டுப்போய், மறுநாள் வந்து எடுத்தோம்.

**“அன்று உள்ளே வந்திருந்தது சிறீலங்காவின் முதல் தர சிறப்புப் படையணியைச் (No 1 SF) சேர்ந்த அறுபது பேர். அந்தச் சண்டையில் நாற்பதுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டிருந்தனர். மறு நாள் பகலில் தேடுதல்செய்து படையினரின் ஆறு உடல்களை எடுத்தோம்.”**

என்றார் கேணல் தீபன்.

இப்போது செப்ரெம்பர் மாதம். எமது வேவு அணி கள் கிளிநொச்சிப் படைத்தளத்தைச் சூழவும், உள் ளேயும் உலாவிக்கொண்டிருந்தன. ஆனால்,



படிப்பகம்

உருத்திரபுரப் பகுதியால் படையினர் கட்டுப்பாடின்றி வெளிவந்து உலாவுவது எமது வேவு நடவடிக்கைகளுக்குப் பெரும் தடையாக இருந்தது. அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நெருக்கடி மிகுந்த சவாலான களமொன்றுக்கான அழைப்பு, மறுபடி எமக்கு வந்தது. நெடுஞ்சாலையை அண்மித்து ஏற்கனவே முல்லையின் கொம்பனி நிற்கின்றது. அவர்களுக்கு இடப்புறம் குறிப்பிட்ட தூரம்வரை நின்ற சிறுத்தைப் படையணி, வேறு தேவைக்காகப் போய்விட்டிருந்ததால், முல்லையின் கொம்பனிக்கு அடுத்ததாக எவ்வளவு தூரம் இயலுமோ, அவ்வளவு தூரமும் நிலைகொண்டு கண்காணிப்பைச் செய்ய வேண்டும்.

புதிய போராளிகளை உள்ளடக்கிய கொம்பனியோடு தமிழ்செல்வி வந்தார். தர்ஷா இரண்டாவது பொறுப்பாளராக நின்றார். அந்தப் பகுதிக்குக் பொறுப்பாக நின்ற ராகவன், நாங்கள் சண்டை பிடித்துத்தான் நிலைகளை அமைக்கவேண்டியிருக்கும் என்றார். எமக்கும் அது தெரியும். படையினர் உலாவுகின்ற பகுதிக்குள் அல்லவா போகப்போகின்றோம்.

முதலாவது அணியாகக் கப்டன் மாங்குயிலின் செக்சன் நகர்ந்தது. அவர்களோடே தமிழ்செல்வியும் போய்க் கொண்டிருந்தார். சிறிது தூரம் ஒரு சிக்கலுமில்லை. நாங்கள் போய்க்கொண்டிருந்தது பரந்தன்-பூநகரி வீதியிலேறப்போகும் ஒரு உட்பாதையால். பாதையின் இருபுறமும் பூவரசு வேலி. அதற்கப்பால் இருபுறமுமே வயல் வெளி அது மூன்று வருடங்களாகப் பயிர்செய்யப்படாமல் புல் மண்டிக்கிடந்தது.

தேடுதல் செய்து, நிலை அமைப்பதற்கான இடங்களைத் தெரிவுசெய்து ஆட்களை விட்டவாறே போய்க்

padippakam



கொண்டிருந்த மாங்குயிலின் அணி ஒரு வீட்டைக் கண்டது. வீட்டைச் சூழவும் பூவரசுவேலி. நின்று நிதானமாகப் பார்த்தவர்கள் அதற்குள் படையினரைக் கண்டு விட்டுத் தாக்கத்தொடங்கினார்கள். கண்காணிப்பதற்குப் போதுமானளவு சிறு தொகைப் படையினரே அதில் நின்றதால், பதினைந்து நிமிடக் கடும் சண்டையோடு வீட்டைக் கைப்பற்றினோம். படையினர் பின்வாங்கி விட்டனர். எங்களில் ஒருவர் வீரச்சாவடைந்தார். இருவர் காயமடைந்தனர். அவ்வீட்டின் அருகில் எமது நிலை ஒன்றை அமைப்பதற்கு ஆட்களை நிறுத்திவிட்டுத் தொடர்ந்தும் மாங்குயிலின் அணி முன்னேறியது. நாங்கள் போன பாதை உலர்ந்த அருவியொன்றின் மேலால் அமைந்திருந்த பாலத்தைக் கடந்தபின், சற்றுப் பின்புறமாக வளைந்துதான், பரந்தன் - பூநகரி வீதியிலேறும். பாலத்தைக் கடந்து நிலையமைப்பதற்கு எங்களிடம் ஆட்கள் இல்லை. இப்போது மாலையாகிவிட்டது. கடைசி நிலையில் ஆட்களை நிறுத்தமுன், இன்னும் சிறிது தூரம் முன்னேறித் தேடுதல் செய்வதற்காக மாங்குயிலின் அணியுடன் தமிழ்செல்வி நகர்ந்தார்.

வளைவைக் கடந்ததும் இருந்த ஒரு வீட்டின் பூவரசு வேலிக்குப் பின்னாலிருந்து விழுந்தது அடி. எமக்கும் வேலிக்குமான இடைவெளி 30மீ. மட்டுமே. குறுகிய நேரத்தில் நடந்துமுடிந்த மிகக் கடுமையான சண்டையுடன், படையினர் பின்னகர்ந்தனர்.

இந்த இரண்டாவது கொம்பனியின் ஆரம்ப இடத்தில் தர்ஷா நின்றார். முடிவிடத்துக்கு அருகே தமிழ்செல்வி நின்றார். எங்களுடைய கடைசிக் காப்பரண் மதகருகே, வீதியின் உட்புற மரங்களிடையே இருந்தது.

காப்பரணமைக்கும் வேலைகளும், கண்ணிவெடி விதைப்பதும் வேகவேகமாகச் செய்து முடிக்கப்பட்டிருந்தன. நாங்கள் வந்து நாலைந்து நாட்களின் பின், ஒரு



படிப்பகம்

padippakam



காலை தமிழ்செல்வியும் நித்தனாவும் முன்புறத்தை அவதானித்துக்கொண்டிருந்தபோது, பெருந்தொகையான படையினர் கண்களில் பட்டனர். அவர்கள் தமது முன்னரங்கப் பகுதியிலிருந்து எம்மைநோக்கி வந்துகொண்டிருந்தனர்.

காப்பரணருகே போய்க்கொண்டிருந்த உலர்ந்த அருவி வளைந்து நெளிந்து படைத்தளம்நோக்கிப் போனது. அந்தப் பக்கத்தால் வந்துகொண்டிருந்த படையினர், இப்போது அருவியை மேவி எமது பக்கம் வரத்தொடங்க, அவர்களுக்கு நேரேயிருந்த பிளாட்டுனின் கட்டளையதிகாரியான லவகிருஷ்ணாவுக்கு விடயத்தைத் தெரியப்படுத்திய தமிழ்செல்வி, அவர்களைச் சண்டைக்குத் தயாராகும்படி சொன்னார்.

நிலைமையைக் கட்டளைப் பணியகத்துக்குச் சொன்ன தமிழ்செல்வி, படையினர் எம்மிலிருந்து 200மீ. தொலைவில் வந்தபோது எறிகணைகளை வீழ்த்தத்தொடங்கினார். எறிகணைகள் வெடிக்கத்தொடங்கியதும், அதுவரை இரட்டை வரிசையாக வந்துகொண்டிருந்தவர்கள் பரவல் வரிசையாகி மேலும் ஓடியவாறு எமது காப்பரண் பக்கமாகவும், காப்பரண்கள் அற்ற பகுதிநோக்கியும் பிரியத் தொடங்கினார்கள்.

படையினர் இதைத் தற்செயலான எறிகணை வீச்சென்றே நினைத்திருக்கவேண்டும். இவ்வளவு நாளும் அவர்கள் உலவிய பகுதியிலே இப்போது நாம் முன்னரங்க நிலைகளை அமைத்துநிற்பது அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. இந்தப் பகுதியிலே நாம் வந்த அன்று நடந்த இரு சண்டைகளைக்கூட, தமது அவதானிப்பு அணிகளுக்கும் எமது வேவு அணிகளுக்குமிடையே நடந்த சண்டைகளாகத்தான் படைத்தரப்புக் கருதியிருக்கும். ஏனெனில் நாம் எமது நடமாட்டங்களை வெளியில் காட்டியிருக்கவில்லை. நாம் வந்தபின்னர் இன்றுதான் படையினர்



படிப்பகம்

padippakam



உலாவருகின்றனர். மறைந்து நிற்கும் எமது வேவு அணிகள்தான் எறிகணைத் தாக்குதலை வழிநடத்துவதாகப் படையினர் நினைத்திருக்கக்கூடும்.

திறந்தவெளியில் இலக்குகளாக நிற்பதைத் தவிர்ப்பதற்காகப் படையினர் அருவிக்குள் இறங்கினர். அப்பால் கடந்து (முன்னர் நாம் சண்டையிட்ட) வீட்டைநோக்கியும் ஓடினர். எமது பக்கமிருந்த பூவரசு வேலிக் காப்பை நோக்கி ஓடிவந்தனர். எங்களை அவர்கள் மிக நெருங்கியதும், நாங்கள் தாக்குதலைத் தொடங்கினோம். மிக நெருக்கமாக அந்தச் சண்டை நடந்தது. லவகிருஷ்ணாவின் பிளாட்டுன் முழுமையும், மேஜர் நிரஞ்சினியின் பிளாட்டுனில் ஒரு செக்சனும் சண்டையிட்டது.

வயல்வெளிக்குள் அகப்பட்ட படையினரைச் சுடுவது, வேலி மறைவில் நின்ற எங்களுக்குக் கடினமான விடயமல்ல. காலை 6.30 இற்கு ஆரம்பமாகிய சண்டை, ஓரளவு ஓய்வுக்கு வந்தபோது 9.30 ஆகிவிட்டிருந்தது. இப்போது வயல்வெளியிலே எங்கள் கண்ணுக்கெட்டிய தூரம்வரையில் படையினர் இல்லை.

திடீரெனப் பார்த்தால், அருவிவழியே படையினர் வந்துகொண்டிருந்தனர். எல்லோரையும் ஒன்றிணைத்து அருவியருகே நிலைப்படுத்தியவாறு கடுமையாகத் தாக்கினோம். காயமடைந்த படையினரை இழுத்தவாறும் ஏனையவர்கள் எங்களோடு சண்டையிட்டபடியும் அப்பால் பூவரசு வேலியால் சூழப்பட்டிருந்த வீட்டுக்குள் போய்விட்டார்கள்.

எமது கடைசிக் காப்பரணை அவர்கள் நெருங்கி அடிப்பதும், நாம் அடிப்பதுமாக மாறி மாறிச் சண்டை நடந்துகொண்டேயிருந்தது. கிளிநொச்சிப் படைத்தளத்திலிருந்து எம்மைநோக்கி எறிகணைகள் கூவிக்கொண்டு வந்தன.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

பாலத்துக்குக் கீழே ஆட்களைவிட்டு அருவியால் படை நகர்வு நடக்காமல் கட்டுப்படுத்தினோம். பாலத்துக்கு அப் பாலிருந்த கடைசிக் காப்பரணை ஆட்களைவிட்டுப் பலப்படுத்தினோம். பூவரசு வேலிகளின் பின்னே மாமரங் களிடையே மறைந்திருந்த வீட்டுக்குள்ளிருந்து எம்மை நோக்கித் தாக்குதல் நடந்துகொண்டிருந்தது. உடனேயே வீட்டை நெருங்கித் தாக்குதல் செய்வதற்கு ஆட்கள் போதாது. இனி, இருண்டால்தான் நாம் ஏதாவது செய்ய லாம். வளைந்து நெளிந்து போகும் அருவிக்குள் நின்ற படையினர் என்ன செய்கின்றார்கள் என்று தெரிய வில்லை.

இருள் சூழ்ந்த பின்னர் தேடுதலை ஆரம்பித்தோம். அருவிக்குள், வயல்வெளியில், வீட்டுக்குள் இரத்தமும் இரத்தத்தில் தோய்ந்த குருதித் தடுப்புப் பஞ்சணைகளும் கிடந்தன. எங்கும் இரத்த வாடை. படையினர் எவரும் இல்லை. அவர்கள் போய்விட்டிருந்தனர். வீட்டுக்கு அருகே காவல்விட்டு, அந்தப் பகுதியை எமது கண்காணிப்புக்கு உட்படுத்தினோம்.

மறுநாளே முல்லையின் கொம்பனியிலிருந்து லெப். கேணல் சாந்தகுமாரியும், கப்டன் நிரோஷாவும் தமது பிளாட்டூன்களுடன் வந்து எமக்கு இடதுபுறம் நிலைகளை அமைத்தார்கள்.

இதன் பின்னர் படைநகர்வு எதுவும் கிளிநொச்சிப் படைத்தளத்திலிருந்து நடைபெறவில்லை. மாறாக, நாம் தான் அவர்களைநோக்கி நகர்ந்தோம். அந்த நகர்வு 1998.09.26 இரவு நடைபெற்றது. அதுவரையில், படையின ரின் அசைவுகளைத் தொடர்ச்சியாக அவதானித்து, எமது பகுதியில் நின்ற பதுங்கிச் சூட்டாளர்களுக்கு நாம் வேலை களைக் கொடுத்துக்கொண்டே இருந்தோம்.

padippakam



தூங்கிக் கிடந்த சிங்கத்தின்மீதான சிறு விளையாட்டல்ல அது. பிடரிமயிரைச் சிலிர்த்தவாறு எந்நேரமும் முன்னோக்கிப் பாயத் தயாராகக் கர்ச்சித்தபடி கிடந்த சிங்கத்தின்மீதுதான் அந்தப் பாய்ச்சல் நடந்தது.

யாழ் நெடுஞ்சாலைக்கு இடதுபுறம் எமது கொம்பனிகள் இரண்டும் நிலையமைத்திருந்த பகுதியிலேயே எமக்கு இரண்டு பாதைகள் தரப்பட்டன. ஒன்று கரடிப்போக்கு-உருத்திரபுரம் வீதிக்குக் குறுக்கேயிருந்த காப்பரண்களை உடைத்து அந்த வீதியைச் சண்டையின்போதான எமது போக்குவரவுக்காகத் திறந்துவிடவேண்டும். இந்தப் பணி மேஜர் கனீபாவுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இதிலிருந்து மேலும் இடப்புறமாக 2கி.மீ. தொலைவில் பரந்தன்-பூநகரி வீதிக்கு அருகாக பிறிதொரு உடைப்பை ஏற்படுத்தி இருபுறமும் காப்பரண்களைக் கைப்பற்றியவாறு, வலதுபுறம் போய் கனீபாவைச் சந்திக்கவேண்டும். இது ரோசாவுக்குக் கொடுக்கப்பட்ட பணி.

இந்த இரு பாதைகளில் முன்னேறப்போகும் அணிகளின் பணிக்குப் பொறுப்பாக எங்கள் படையணியின் சிறப்புத் தளபதி விதுஷா நின்றார். அவருக்கு உதவியாளராக தமிழ்செல்வியும், தொலைத்தொடர்பாளராக மேஜர் லக்சனாவும் வந்திருந்தனர்.

ரோசாவுக்கு இடதுபுறம் மணலாற்றுப் படையணி உடைத்துத் திறந்துவிடப்போகும் பாதையூடே நுழைந்து, நெடுஞ்சாலையின் குறுக்கே தடுப்பரண்களை அமைப்பதற்காகச் செல்வியின் கொம்பனி காத்திருந்தது.

இவர்கள் எல்லோருக்கும் வெகுதொலைவில் தனிப்பாதை ஒன்றின் பொறுப்பாளராக ஜமுனா போகவிருந்தார். அவர் உடைக்கவேண்டிய பாதை யாழ் நெடுஞ்சாலையருகே இடதுபுறம் இருந்தது.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

வயல்வெளியூடே, படையினரின் வழமையான எறிகணைவீச்சுக்கும், இடையிடையே சீறிவரும் ரவைகளுக்கும் முகம்கொடுத்தவாறு நாங்கள் நகர்ந்துகொண்டிருந்தோம். வானில் வீசியெறியப்பட்ட தேடொளிகள் இரவைப் பகலாக்க முயன்றுகொண்டிருந்தன. இது போதாது என்று, காப்பரண்களில் நின்ற படையினர் மின்சூழ் விளக்குகளைச் சுழற்றிச் சுழற்றி அடித்துக்கொண்டிருந்தனர். இறுதித் தாக்குதல்நிலையை அடைவதற்கு 2கி.மீ. முன்னேயே நாம் தவழ்ந்துபோகவேண்டியிருந்தது. சுடுகலன்கள் எங்களுக்கிடையே உரசும் ஓசை கேட்டுவிடுமோ என்ற யோசனை எங்களுக்கு. காப்புச்சூட்டுக்காகத் தயார்ப்படுத்தப்பட்ட நிலையில் .50 கலிபரைத் தவழ்ந்தவாறே நகர்த்துவதில் சிரமம் ஏற்பட, அதன் பொறுப்பாளரான மாதினியிடம் அதைப் பாகம் பாகமாகக் கழற்றி நகர்த்தும்படி விதுஷா பணித்தார். எங்களுடைய சிறுதவறால் படையினர் விழிப்படைந்தால், ஒட்டுமொத்தச் சண்டையுமே குழம்பக்கூடும். மிகவும் விழிப்பாக இருந்த கிளிநொச்சிப் படைத்தளத்தின் முன்னரங்கக் காப்பரண்களை, நேரம் வந்ததும் ரோசாவின் அணி தாக்கத் தொடங்கியது. எல்லாப் பகுதிகளிலுமே சண்டை தொடங்கியதால், படைத்தளத்தின் வெளிப்பகுதியெங்கும் நெருப்புப் பொறிகளாக ரவைகள் பறந்துகொண்டிருந்தன.

ரோசாவுடன் முதலில் போய்த் தடைகளை அகற்றும் அணியில், தடையகற்றி முடியமுன்னரே பெரும்பாலானோர் காயமடைந்துவிட்டபோதும், எஞ்சியவர்கள் தடைக்கம்பிகளைக் குறடால் வெட்டிக்கொண்டிருக்க, எங்களில் ஒருவர் கம்பிகளுக்கிடையே புகுந்து மண் அணைமீது தவழ்ந்து மறைப்பு வேலியைக் கடந்து உள்நுழைந்து, எமக்குக் கடும் எதிர்ப்பைக் காட்டிக்கொண்டிருந்த இடது பக்கக் காப்பரணுக்குக் குண்டுகளை வீச, .50 கலிபர் செறிவான சூடுகளை வழங்க எதிர்ப்பு அடங்கியது.

padippakam



மிக வேகமாக உள்நுழைந்த எமது அணிகள் வல மும் இடமுமாகக் காவலரண்களை அடித்துப் பிடிக்கத் தொடங்கின. அது மிகவும் கடினமான பணியாகவே இருந்தது. ஒவ்வொரு காப்பரணில் நின்ற படையினருமே தம்மாலான கடும் எதிர்ப்பைக் காட்டினர். ஆனால், நாம் வலதுபுற நகர்வைத் துரிதமாகச் செய்து கனீபாவுடன் கைகோர்க்கவேண்டும். ரோசா காயப்பட்டுவிட்டதால், இந்த அணியை வழிநடத்துவதற்காகத் தன்னோடு நின்ற தமிழ்செல்வியை விதுஷா அனுப்பினார்.

தமிழ்செல்வி வந்தபோது, இனிமேல் கைப்பற்றவேண் டிய காப்பரண்கள், பாதைக்கு நேரே உள்ளிருந்த மாடி வீடு என்று எல்லாப் பக்கங்களிலிருந்தும் செறிவான தாக்குதல் படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்டவாறிருந் தது.

படையினரின் ரவைகள் பட்டு மண் அணைமீது உயர மாக அமைக்கப்பட்டிருந்த வேலி எரியத்தொடங்க, அவர் கள் ஏவிய தேடொளி எறிகணைகள் வானில் மிதந்த வாறு ஒளியை வழங்க, எல்லாமாகச் சேர்ந்து இரவைப் பகல்போல் ஆக்க, எம்மவர்களின் ஒவ்வொரு அசை வையும் தூர இருந்தே அவர்களால் கவனிக்கமுடிந்தது. எனவே முன்புறமாகமட்டுமன்றி, முன்னேறிச் சென்று கொண்டிருக்கையில் பின்புறமாகவும் பக்கவாட்டாகவும் கூடத் தாக்குதலை நாம் எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

படைத்தளம் எப்போதும் விழிப்பாக இருந்ததால், போதுமான தகவல்கள் வேவு அணிகளால் திரட்டப்பட்டி ருக்கவில்லை. ரோசாவின் அணி தாக்குவதாகத் தீர் மானிக்கப்பட்டிருந்த பகுதியில், எதிர்பாராத விதமாக இரண்டு நாட்களின்முன் படையினருக்கும், இடம் பார்க் கப்போன எமது பொறுப்பாளர்களுக்குமிடையே சிறு சண்டையொன்று நடந்ததால், கடைசி நேரத்தில் அந்தப் பாதையைக் கைவிடவேண்டியிருந்தது. அதன் பின்



படிப்பகம்

padippakam



முழுமையாக வேவு வேலைகள் முடிவடைந்திராத பாதை யொன்றால், இடையில் ஏற்பட்ட சிக்கல்களையெல்லாம் உடனுக்குடனேயே தீர்த்துக்கொண்டு, ரோசாவின் அணி தாக்கி உள்நுழைந்தது. அவ்வணியுடனேயே சிறப்புத் தள பதி விதுஷாவும் உள்நுழைந்துவிட்டிருந்தார்.

படையினரின் காப்பரண்களின் உட்புறமாக நின்ற எங் களுக்கு விழுந்த அடியோ விவரணத்துக்கு அப்பாற்பட் டது. எங்களுடைய சுடுகலன் ஒன்று 30 ரவைகளை அடித்து முடிக்கமுன்பே எங்களை நோக்கி ஒரு RPG தேடிவரும். சுடுகுழலிலிருந்து ரவை புறப்படும் வேகத்தில் வெளிப்படுகின்ற தீப்பொறியே நாம் நிற்குமிடத்தைப் படை யினருக்குத் துல்லியமாக இனங்காட்டிக்கொண்டிருக்கின் றது என்பதை நாம் கண்டுபிடிப்பதற்குள்ளாகவே எங்களில் பல பேர் காயமடைந்துவிட்டார்கள்.

இதன் பின்னர் ஓரிடத்தில் நின்று சுடுவதற்கு யாரை யுமே விதுஷா அனுமதிக்கவில்லை. நின்று சுடுவதும், இடம் மாறுவதும் சுடுவதுமாக நாங்கள் மாறிக்கொண் டோம். எங்களின் கையில் விழுகின்ற கடைசி நிமிடம் வரை காப்பரண் ஒவ்வொன்றிலும் நின்ற படையினர் மிகக் கடுமையாகத் தாக்கினார்கள். கைப்பற்றியபின் அதற்குள் நின்று மற்றைய காப்பரணைத் தாக்கத் தொடங்கியதும், நாம் நிற்குமிடத்தைநோக்கி உட்புறமி ருந்து RPGகள் சீறிவரும். யாருமே எந்த மறைப்புக்களை யும் பயன்படுத்தமுடியாமல் வெளிகளில் நின்று சண் டையைத் தொடர்ந்தோம். காப்பரண்களைநோக்கிச் சுட்டு நாம் நிற்குமிடத்தைக் காட்டிக்கொள்ளாமல், நெருங்கிப் போய்க் குண்டடித்தோம். இதில் தற்துணிவுடன் தனியொரு வராகக் குண்டடித்துக் குண்டடித்துத் தாக்கி, எம்மவர்கள் பலரை இழந்தபின்னரே எம்மால் சில காப்பரண்களைக் கைப்பற்றக்கூடியதாக இருந்தது.



படிப்பகம்

padippakam



மாடிவீட்டிலிருந்து வந்த கடுமையான எதிர்ப்பால், தொடர்ந்து இருபுறமும் காப்பரண்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த அணிகள் இழப்பைச் சந்தித்துக்கொண்டிருந்தன. இதனால் காப்புச் சூடு வழங்கிக்கொண்டிருந்த மாதினியின் .50 கலிபர் வரவழைக்கப்பட்டு, எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது.

இடதுபுறக் காப்பரண்களைத் தாக்கியவாறு போய்க் கொண்டிருந்த காவேரி ஒரு கட்டத்துக்குமேல் நகரமுடியாமல் விதுஷாவோடு தொடர்புகொள்ள, அதுவரை பாதையருகே நின்ற .50 கலிபர் அணியை உடனேயே காவேரியின் பக்கம் அனுப்பினார் விதுஷா.

முன்னரங்கின் உட்புறம் நின்று அணிகளை வழிநடத்திக்கொண்டிருந்த விதுஷா, படையினரின் RPG அடியில் காயமடைய, அவரின் வேலைகளைத் தமிழ்செல்வி பொறுப்பெடுத்தார்.

எதிர்ப்பு நிறுத்தப்பட்ட கணத்திலேயே தமிழ்செல்வி வலதுபுறக் காப்பரண்களைக் கைப்பற்றும் வேலையில் அணிகளை ஈடுபடுத்தினார். முன்னரங்கோடு அமைந்திருந்த படைத்தரப்புப் பிளாட்டூன் கட்டளை அதிகாரியின் தளமொன்றை நீண்ட நேரச் சண்டையின்பின் கைப்பற்றினோம். இந்தச் சண்டையில் தமிழ்செல்வியும் காயப்பட, அணியை சயந்தினி பொறுப்பேற்றார்.

காலை 5.30 அளவில், கைப்பற்றி நாம் நிலைகொண்டிருந்த காப்பரண்களைநோக்கியும், உட்புறமாக மேவியவாறும் படையினர் எம்மைநோக்கி முன்னேறத்தொடங்க, சண்டை தொடர்ந்தது. நாம் நின்றிருந்த காப்பரண்களில் சில, படையினரிடம் கைமாறின. அடுத்தடுத்த நிலைகளில் இருதரப்பும் நின்று நெருக்கமாகச் சண்டை நடந்துகொண்டிருந்தது. தன்னுடன் எஞ்சி நின்றவர்களையும், மேஜர் விசுவால் கூட்டிவந்து விடப்பட்ட நான்கைந்து ஆண்



படிப்பகம்

padippakam



போராளிகளையும் குறுக்காக நிலைப்படுத்தினார் சயந்தினி. பிளாட்டூன் கட்டளையதிகாரியின் தளத்தின் பாதுகாப்புக்காக அவர்கள் அமைத்திருந்த குறுக்குக் காப்பரண் வரிசையே இப்போது அவர்களுக்குத் தலைவலியாக மாறியது. இதற்குமேல் எம்மாலும் நகரமுடியவில்லை.

மேவி வந்துகொண்டிருந்த படையினர்மீது நாம் கேட்டபடி எறிகணை செலுத்தியுடன் நின்ற பவநிதி துல்லியமாக எறிகணைகளை வீசிக்கொண்டிருந்தது நிலைமையை ஓரளவு கட்டுப்படுத்த உதவியது. ஆனால், பகல் நேரப் பதுங்கிச்சுடுதலில் நாம் சிலரை இழக்கநேரிட்டது.

நாம் உடைத்த பாதையைப் படைத்தரப்பினர் மூடிவிடாமல் சுதனியின் செக்சன் பாதுகாத்துக்கொண்டிருந்தது. வலதுபுறம் குறிப்பிட்ட தூரம் முன்னேறிய நிலையில், 1998.09.27 அன்றிரவு நின்ற இடங்களில் காவற்கடமையைச் செய்தவாறு, நகர்வகழியில் எமது பாதுகாப்புக்காகக் கண்ணிகளை விதைத்துவிட்டு, எல்லோரும் விழித்திருந்தோம்.

ரோசா சண்டையைத் தொடக்க ஒருசில நிமிடங்களின் முன்னரே, மேஜர் கனீபாவின் தடையுடைக்கும் அணி டோபிடோவை வெடிக்கவைத்துச் சண்டையைத் தொடக்கிவிட்டிருந்தது. தடைகளை அகற்றுவதில் அவர்களுக்குக் கடுஞ்சிரமங்கள் ஏற்பட்டன. அது ஒரு முக்கிய வீதி என்பதால் எதிர்பார்க்கப்பட்ட அளவைவிட, மிகமிகக் கடுமையான பதில் தாக்குதலை கனீபாவின் அணி சந்தித்தது. ஆனால், சண்டை தொடங்கிய 30 நிமிடங்களுக்குள்ளேயே தான் இடதுபக்கம் மூன்று காப்பரண்களைப் பிடித்துவிட்டதாக கனீபாவும், வலதுபுறம் ஒரு காப்பரணைப் பிடித்திருப்பதாக அணியின் பதில் பொறுப்பாளர்



படிப்பகம்

padippakam



மேஜர் இசையமுதும் விதுஷாவுக்குத் தெரியப்படுத்தியிருந் தனர்.

அவசர அவசரமாகத் திரட்டப்பட்ட வேவுத் தகவல் களில் குறிப்பிடப்படாத விடயங்கள் கனீபாவின் பகுதியி னுள் இருந்தன. காப்பரண் வரிசையோடே அண்மையில் ஒரு கல்வீடு இருந்தது. அந்த வீதியில் அதற்கடுத்த கல் வீடு ஆலம் விழுதுகளால் உருமறைக்கப்பட்டிருந்தது. அது அப்பகுதிக்குரிய கட்டளையதிகாரியின் பணிமனை யாக மிகப் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இருந் தது. கனீபாவின் அணியினர் முன்னரங்கப் படையினர தும், உட்பாதுகாப்புப் படையினரதும் தாக்குதலுக்கு ஒரே நேரத்தில் பதில் தாக்குதல் செய்யவேண்டியவர்களாக இருந்தனர்.

குறிப்பிட்ட நேரத்தின் பின் நான்காவது காப்பரணைப் பிடித்துவிட்டதால் ஐந்தாவதை நோக்கி நகரப்போவதா கக் கனீபாவும், மூன்றாவதைப் பிடிக்கப்போவதாக இசைய முதுவும் விதுஷாவுக்கு அறிவித்தார்கள். ஆனால், தம் முடன் வந்தவர்களில் மிகச் சிலரே எஞ்சியிருப்பதால், உதவியணி வேண்டுமென கனீபா கேட்டார். வெளிப்புறக் காவலில் நின்ற முல்லைக்கு அறிவித்து, அந்தக் கொம் பனியிலிருந்து ஒரு உதவியணியை கனீபாவிடம் அனுப் பினார் சயந்தினி. ஆனால் அவர்கள் உரிய இடத்துக்குப் போகமுதலே சேதமடைந்ததால், இன்னுமொரு அணி முல்லையின் இடத்திலிருந்து புறப்பட்டது. இத்தனையும் விடிவதற்குள்ளேயே நடந்திருந்தன. இதன் பின்னரும் கனீபா கேட்டபடி இரு உதவியணிகள் அனுப்பப்பட்ட போதிலும், நிலைமை அவர்களின் கையை மீறியதாகவே அமைந்திருந்தது.

ரோசாவின் பாதையால் வலது புறமும், கனீபாவின் பாதையால் இடதுபுறமும் நகர்ந்து எமது அணிகள் கை கோர்த்திராத நிலையில், கனீபாவுடன் எஞ்சிநின்றவர்களை



படிப்பகம்

*இராணுவம் மூன்று பக்கங்களாலும் நெருங்கத்தொடங்கியது. இவர்கள் உள்நுழைந்த பாதையையும் படையினர் மூடிவிடவே, வீதிக்கருகேயிருந்த அருவியைக் காப்பாக வைத்து, தம்மால் முடிந்தவரை சண்டையிட்டவர்கள், முடிவில் தம்மை அழித்துக்கொண்டனர்.*

*மறுநாள், 28 ஆம் திகதி அதிகாலையில் பவநிதியின் 82மி.மீ. எறிகணைச் சூட்டாதரவுடன் வலதுபுறக் காப்பரண்களைக் கைப்பற்றத்தொடங்கிய சயந்தினியின் அணி ஆண் போராளிகளுடன் இணைந்து, கனீபா உள்நுழைந்த பாதைவரை 'தேடி அழித்தல்' நடவடிக்கையைச் செய்தவாறு முன்னேறி, கனீபா உட்பட எல்லோரது வித்துடல்களையும் எடுத்துப் பின்னணிக்கு அனுப்பியது. அன்றிரவே படையினர் எம்மைத் தாக்கிவிட்டு ஆனையிறவைநோக்கி நகரலாம் என்று ஊகிக்கப்பட்டதால், அருகே படையினர் நின்றிருந்த தளம் ஒன்றைப் பார்த்தவாறு காவல் நடவடிக்கையைப் பலப்படுத்திவிட்டு அவ்விடத்திலே தங்கிநின்றனர்.*

*யாழ் நெடுஞ்சாலையருகே இடதுபக்கம் உடைத்துப் புகுந்த ஜமுனாவின் அணியை கேணல் தீபன் வழிநடத்தினார். உள்நுழைந்த பாதையிலிருந்து இடதுபக்கம் 300மீ. உம், வலதுபக்கம் 500மீ. உம் பிடித்து, தக்கவைத்திருப்பதே இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணி. அப்படியே செய்துவிட்டு நின்றார்கள்.*

*இவர்களுக்கு வலதுபுறம் யாழ்வீதிக்கு அப்பால் தடையுடைத்து உள்நுழையவேண்டிய சிறுத்தைப் படையணியின் அணியொன்று படையினரின் கடும் எதிர்ப்பைச் சந்திக்கவேண்டியேற்பட்டதால், பாதை உடைபடத் தாமதமாகிக்கொண்டிருந்தது. நிலைமையைத் தளபதி தீபனிடம் சொன்ன ஜமுனா, மேலும் வலதுபக்கம் 1000மீ. வரையான*

padippakam



பகுதியைப் பிடித்து எமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந் தார். பிடிபட்ட இடங்களில் விடுவதற்கு இப்போது போது மான ஆட்கள் இல்லாததால், கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக் காப்பரண்கள் வெற்றிடமாகவே இருந்தன.

இவ்வளவு நேரமும் வெளியில் நின்று சண்டைபிடித் துக்கொண்டிருந்த சிறுத்தை அணி தமக்குரிய பாதையை உடைத்து உள்நுழைந்து இடமும் வலமும் குறிப்பிட்ட தூரத்தைப் பிடித்து நிலைப்படுத்த, பொழுது புலரத் தொடங்கிவிட்டது. அவர்களின் பணியில் பாதியை ஜமுனா ஏற்கனவே செய்துவிட்டிருந்தார்.

அதிகாலை 5.30 அளவில் ஜமுனாவின் கட்டுப்பாட்டி லிருந்த வெற்றுக் காப்பரண்கள் சிலவற்றுள் படையினர் வந்து புகுந்துகொண்டனர். இப்போது அணி இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.

உடைக்கப்பட்ட பாதையில் சிலருடன் ஜமுனா, அவ ருக்கு வலதுபுறம் படையினர், அதற்குமப்பால் நாங்கள் பிடித்த கடைசிக் காப்பரணில் ஜமுனாவுக்கு அடுத்த பொறுப்பாளர் மேஜர் மாலதி நின்றார். அதற்கு அப்பால் சிறுத்தையணியின் பாதை படையினரால் மூடப்பட்டுவிட, மாலதியை இருபுறமும் நின்ற படையினர் நெருக்கிக் கொண்டுவர, சண்டை பிடிப்பதற்கு வாய்ப்பில்லாத, ஆளணி குறைந்தநிலையில் நின்ற மாலதி தன்னோடி ருந்தவர்களைக் கூட்டிக்கொண்டு மண் அரணைப் பாய்ந்து கடந்து, வெளிப்புறமாக ஓடிவந்து, தாம் முதலில் உடைத்து உட்புகுந்த பாதையில் நின்றவர்களுடன் சேர்ந்துகொண் டார்.

இப்போது இவர்களைநோக்கிக் குண்டுகளைக் கழற்றி எறிந்தவாறே இரு பக்கங்களாலும் படையினர் நெருங்கத் தொடங்கினர். நிலைமையை கேணல் தீபனுக்குத் தெரியப் படுத்திய ஜமுனா, உதவியணி வேண்டுமென்று கேட்டார்.



படிப்பகம்

padippakam



உதவியணி வந்துசேர முன்னர் பாதைக்கு இரு பக்கங்களிலுமிருந்த ஒவ்வொரு காப்பரண்களைத்தவிர, ஏனையவற்றில் படையினர் பலமாக நின்றுகொள்ள, வேறொரு இராணுவ அணி உட்புறமிருந்து பாதையை நோக்கி அரைவட்ட வடிவில் முன்னேறத்தொடங்கியது. இந்த நெருக்கடி நிலையை, எறிகணை ஆதரவுச் சூடுகளைப் பெற்றுக்கொண்டதன்மூலம் சமாளித்துக் கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்துக்குள்ளாகவே RPG உடன் உதவியணியாக வந்த சந்தோசம் படையணிப் போராளிகளுடன் இணைந்து வலதுபக்கக் காப்பரண்களைக் கைப்பற்றியவாறுபோய், எதிர்த் திசையிலிருந்து வந்துகொண்டிருந்த புலனாய்வுத்துறைப் போராளிகளைச் சந்தித்ததோடு, அன்றைய நகர்வை ஜமுனாவின் அணி நிறுத்தியது.

மறுநாள் காலையில் தமது இடதுபக்கமாக மேஜர் கனீபா உள்நுழைந்த பாதைவரை புலனாய்வுத்துறைப் போராளிகளுடன் இணைந்து தேடி அழிக்கும் பணியில் ஈடுபட்டது.

"ஜமுனாவுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாதை யாழ் நெடுஞ்சாலைக்கு மிக அருகே என்பதால், அவர்களோடு ஆண் போராளிகளையும் சேர்த்து விடவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டபோதும், அவர்கள் தனியாகவே எல்லாவற்றையும் செய்யட்டும் என்று விட்டிருந்தேன். சண்டையின்போது எல்லோரையும் விட மிக வேகமாகவும் முதலிலும் உடைக்கப்பட்ட பாதை இதுதான். அருகிலிருந்த ஏனைய பாதைகள் மூடப்பட்டபின்பும், மூடப்படாதிருந்த பாதையும் இதுவே. ஜமுனா தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணியை மிகநன்றாகச் செய்திருந்தார். பின்னரும், ஏனையவர்களுடன் சேர்ந்து சண்டையைத் தொடர்ந்து செய்திருந்தார்.



படிப்பகம்

padippakam



இந்தப் பாதைதான் சண்டையின் முழு நகர்வுக்கும் உதவியது. காயக்காரர்களை வெளியேற்றியது, இடது புறம் மூடப்பட்டிருந்த கனீபாவின் பாதைக்கு உதவி யணியை அனுப்பியது, வலதுபுறம் மூடப்பட்டிருந்த லெப்.சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் பாதைகளில் ஒன்றுக்கு உதவியணியை அனுப்பி இணைப்பை ஏற் படுத்தியது எல்லாமே இந்தப் பாதையால்தான்.

கடைசியில் இந்தப் பாதையால் உள்நுழைந்து நெடுஞ்சாலையால் ஏறிய அணியொன்று தாக்கியபடி கரடிப்போக்குவரை முன்னேற, படையினர் கிளி நொச்சியைவிட்டு ஓடத்தொடங்கினர்"

என்றார், ஐமுனாவின் அணியை வழிநடத்திய கேணல் தீபன் அவர்கள்.

ரோசாவுக்கு இடதுபுறம் மணலாற்றுப் படை யணி உடைத்துவிட்ட பாதை வழியே எங்கள் படையணியின் இன்னுமொரு அணி வழிமறிப்பு அணியாக மேஜர் பராவுடன் உள் நுழைந்தது. இவர்களின் இரண்டு பிளாட்டூன்கள் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் ஒரு பிளாட்டூனுடன் இணைந்து யாழ் நெடுஞ்சாலையின் மேற்கே கிளிநொச்சியைப் பார்த்தவாறு நிலைகொண்டது. இவர்களின் இன்னுமொரு பிளாட்டூன் சாள்ஸ் அன்ரனியின் இரு பிளாட்டூன்களுடன் இணைந்து பரந்தனைப் பார்த்தவாறு நெடுஞ்சாலையின் மேற்கே நிலைகொண்டது. இரண்டாகப் பிரிந்து நிற்கும் அணிகளை ஒருங்கிணைத்துக்கொண்டிருந்தவர் செல்வி.

கிளிநொச்சியைப் பார்த்தவாறு நிலையமைக்கவேண் டிய எமதணி வீதிக்கு மேற்காகக் கரடிப்போக்கிலிருந்த ஏறிகணை ஏவுதளத்துக்கு நேரே ஏறிவிட்டனர். இருளில்



படிப்பகம்

காவலுக்கு நின்ற படைவீரர் ஒருவரைக் கண்டு, சைகை யால் மற்றவர்களுக்குக் காட்டி, ஓசையெழுப்பாமல் இடது புறமாக விலகி, ஒவ்வொருவரையும் பொருத்தமான இடங் களில் விட்டவாறு காவியா நெடுஞ்சாலையைத் தொட்ட போது இருள் பிரியத்தொடங்கியிருந்தது.

"வேவுத் தரவுகளின்படி அதில் ஒரு தளம் இருக்க வில்லை. ஆனால், இப்போது இருக்கின்றது. செல்வி யின் அணி அதற்குள் போய்விட்டது. வெளிப்புறம் முழுதும் சண்டை நடந்துகொண்டிருக்கின்றது. எறி கணைகள் வீசப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தேடொளி கள் ஒளிர்ந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலைமை யில் தளமொன்றினுள் இவர்கள் போய், மறுபடி வெளியேறி, அங்கு நின்ற படையினருக்குத் தமது வருகையை உணர்த்தாது விலகி நகர்ந்து வீதியில் ஏறியது சாதாரண விடயமல்ல. இதுபோன்ற திடீர் நிலைமையை ஏனைய அணிகள் சந்தித்திருக்க வில்லை"

என்கிறார் ஊடறுப்பு அணிகளை வழிநடத்திய கேணல் பால்ராஜ்.

காலை 6.00 மணியளவில் மேற்குப் பக்க முன்னரங்கக் காவல் நிலைகளிலிருந்து கரடிப்போக்குத் தளம்நோக்கி ஓடிவந்துகொண்டிருந்த படையினரைக் கண்டுவிட்டுச் சுட்டனர். இவர்கள் சுடத்தொடங்க, அவர்கள் வேகமாக ஓடித் தளத்துக்குள்ளே போய்விட்டனர். இவர்களிலிருந்து 300மீ. களிலிருந்த எறிகணை ஏவுதளத்திலிருந்தவர்கள், இவர்கள் நிற்பதை இனங்கண்டு 60மி.மீ. எறிகணைகளை ஏவியதில், காலை 7.00 மணிக்குள்ளேயே எங்களில் சிலர் காயப்பட்டுவிட்டனர்.

நெடுஞ்சாலையருகே, தளத்துக்கு முன்னே நின்றவர் களால் அன்று பகல் ஒரு வேலையுமே செய்யமுடிய

padippakam



வில்லை. நிலத்தை அவசர அவசரமாக விறாண்டிவிட்டுக் குப்புறக் கிடந்தவர்கள், அன்றிரவுதான் தமக்கான அகழி களை வெட்டினார்கள்.

"யாழ் நெடுஞ்சாலைக்கும் புகையிரதப்பாதைக்கு மிடையே ஒரு உலர்ந்த ஆறு பரந்தன்வரை போகின் றது. இந்த ஆற்றால் பெரியசிக்கல் வரும் என எதிர்பார்த்தேன். படையினர் பின்வாங்குவதற்கு ஆற்றை ஒரு நகர்வகழியாகப் பயன்படுத்துவார்கள் என்றும், ஆற்றருகே நிற்கும் மாலதி படையணி மிகப் பெரிய சண்டையை எதிர்கொள்ளும் என்றும் எனக்குத் தெரியும். எனவே செல்வியை ஆற்றருகே நிற்கச் சொன்னேன்.

முதல்நாளே படையினர் மூன்று முறைக்கும் அதிக மாக முன்னகர்ந்து தாக்கியிருந்தார்கள். அவர்களோடு சண்டைபிடித்துப் பிடித்தே இவர்கள் பதுங்குகுழி வெட் டும் வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். மிகக் கடுமையான எறிகணை வீச்சை எதிர்கொண்டனர். காயங்கள், வீரச்சாவுகள் நிகழ்ந்து கொண்டிருந்தன.

குடிநீரும் உணவும் இவர்கள் நிற்குமிடத்துக்குப் போகமுடியவில்லை. போயிருந்தாலும் சாப்பிடுவதற் கான ஓய்வைப் படையினர் கொடுத்திருக்கமாட்டார் கள்"

என்று இவர்களின் நெருக்கடியான நிலையை பால்ராஜ் அவர்கள் விளக்குகின்றார்.

மறுநாள் 28 ஆம் திகதி மாலை படையினரின் தப்பி ஓடும் கட்டம் ஆரம்பமானது. மாலை 3.30 அளவிலேயே தகவல் எங்களை வந்தடைந்தது. 4.30 அளவில் முன்னே யிருந்த எறிகணை ஏவுதளத்திலிருந்தோர் வெளியே வரு வதைக் கண்டுவிட்டு நாங்கள் சுடத்தொடங்கினோம்.



படிப்பகம்

padippakam



படையினர் பரவலாக ஓடத்தொடங்கினர். பரவி விலகி ஓடலாம் என எதிர்பார்த்து நாம் அகலமாக நின்றதற்கு மாறாக அவர்கள் நெடுஞ்சாலையாலும் நெடுஞ்சாலைக்கு மேற்கேயுள்ள வாய்க்கால் வழியேயும் இரண்டுக்குமிடையே யுள்ள வயல்வெளி, பூவரசு வேலியோடும் ஓடத்தொடங்கி னர்.

ஊர்திகளில் வந்தோரை வழிமறித்துச் சுட, ஊர்திகளை விட்டுவிட்டு, எறிகணை செலுத்திகளை விட்டுவிட்டு, உடமைகளை விட்டுவிட்டு, உயிரைமட்டும் கொண்டோடி னர். குறிப்பிட்ட அகலம்கொண்ட பகுதியால் படையினர் செறிவாக வந்துகொண்டிருக்க, சுட்டுச் சுட்டு ரவைகள் முடிந்தபின் வெற்றுச் சுடுகலன்களுடன் கையறு நிலை யில் திறந்த அகழிகளுள் நின்ற எம்மவர்களைப் படை யினர் சுட்டுவிட்டு ஓடத்தொடங்க, விலங்குக் கூட்டம் ஓடுவதுபோல் போன படையினரைச் சுட்டுக்கொல்ல முடியாதநிலை தோன்றவே, செல்வி எறிகணைகளை ஏவுமாறு அறிவிக்க, புகையிரதச் சாலைக்கும் யாழ் சாலைக்கும் இடைப்பட்ட பகுதியில், எறிகணைகள் வெடிக்கும் பேரொலிகளையும் மண்ணிலிருந்து பீரிட்டுக் கிளம்பிய புழுதி மணத்தையும் வெடிமருந்து வாசனையை யும்தவிர, வேறெதையும் உணர்ந்துகொள்ளமுடியவில்லை.

அங்கு நடந்ததைக் கேணல் பால்ராஜ் அவர்களே சொல்கின்றார்.

“இரண்டாம் நாள், படையினர் எல்லோரும் புறப் படுவதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருப்பதாக செல்வி எனக்கு அறிவித்தார். இதற்கு முன்பே, வெளியில் நின்ற எல்லா எறிகணை செலுத்திகளை யும் இவர்களுக்கு அருகே இருந்த தளத்தை நோக்கி கேணல் பானு திருப்பிவிட்டிருந்தார். படையினர் நகர்வதாக செல்வி அறிவித்ததும் எறிகணை வீச்சை



படிப்பகம்

padippakam



ஆரம்பித்தோம். அதேநேரம் அவரது அணி படையினரைநோக்கித் தமது சூடுகளை ஆரம்பித்துவிட்டிருந்தது.

தமக்கும் படையினருக்குமான இடைவெளித் தூரம் குறுகிவருவதைச் செல்வி எனக்குத் துல்லியமாகச் சொல்லிக்கொண்டிருந்தார். நிறையப் பேரைச் சுட்டுவிட்டதாகவும் நிறையப்பேர் தம்மைக் கடந்து ஓடிக் கொண்டிருப்பதாகவும் சொல்லிக்கொண்டிருந்த செல்வி, 'இனி எங்களைப் பார்க்கவேண்டாம். எங்களுக்கும் சேர்த்து ஷெல்லைப் போடுங்கோ' என்ற கட்டளையை எனக்குத் தந்தார். எங்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஏனெனில், படையினரும், மாலதி படையணியும் கலந்துவிட்டிருந்தனர். செல்வி மறுபடி மறுபடி தங்களைப் பாராமல் எறிகணைகளை வீசும்படி பணித்தார். எனவே நிலைமையை பானுவுக்குத் தெரியப்படுத்திய நான் அந்தப் பகுதி முழுமைக்குமே எறிகணைகளை ஏவும்படி கூறினேன்.

சண்டை முடிந்தபின்னர் நான் அவ்விடத்துக்குப் போனபோது, செல்வி நின்ற பகுதியிலே ஏராளம் இராணுவச் சடலங்கள் கிடந்ததைக் கண்டேன்."

கேணல் பானு என்ன சொல்கின்றார்?

"தங்களைப் பாராமல் எறிகணைகளை வீசும்படி பால்ராஜுக்குச் செல்வி சொன்னதை நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். செல்வி கேட்டபின்னரே, அவ்விடத்துக்கு எறிகணைகளை ஏவும்படி பால்ராஜ் என்னிடம் சொன்னார். தவிர்க்கமுடியாத நிலைமையில், நாங்கள் எறிகணைகளை வீசினோம்"

என்கிறார் அவர்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

வீதியெங்கும், எங்கும் படையினரின் ஏராளம் உடல்கள். நினைத்ததைச் சாதித்த நிம்மதியுடன் லெப்.கேணல் செல்வி விழிமூடியிருந்தார்.

"ஊடறுப்பு அணியாக மாலதி படையணி உருத் திரபுரப் பகுதியால் உள்நுழைந்தது. நாங்கள் முரசு மோட்டைப் பகுதியால் உள்நுழைந்து உட்பகுதியில் சந்தித்து நிலைகளை அமைத்திருந்தோம்.

படையினர் தப்பியோடும் முயற்சியில் இறங்கிய போது, மிக நெருக்கமாக நின்று சண்டைபிடித்துக் கொண்டிருந்தோம். அவ்வேளை எனது தொடர்பு சிறிது நேரம் அப்பகுதியில் ஒருவருக்கும் கிடைக் காமல் போய்விட்டது. என்னுடைய தொடர்பைக் காணவில்லை என்பதால் எங்களுக்கு ஏதும் சிக்கல் எனில், போய் எமது அணியையும் கவனிக்குமாறு தனது அணியின் பொறுப்பாளர்களிடம் விதுஷா அவர்கள் கூறியிருந்தார். ஆனால், பின்னர் எனது தொடர்பு கிடைத்துவிட்டது. இதைப் பின்னர் மாலதி படையணியின் பொறுப்பாளர்கள் என்னைச் சந்தித்த போது சொன்னார்கள்"

என்றார், நடவடிக்கையில் தனது படையணியோடு பங்கேற்றிருந்த கேணல் துர்க்கா.

மூன்று நாள் சண்டையோடு மீட்கப்பட்ட கிளிநொச்சி நகரிலே எங்களின் தேசியக்கொடியை, கேணல் விதுஷா ஏற்றிவைத்தார்.

"எறிகணை செலுத்தும் அணிகளின் வளர்ச்சிக்கு மேஜர் சௌதினியின் பங்கு மிகப் பெரியது. ஆரம்பத்திலேயே பயிற்சியாசிரியராக இருந்து, அணியை வளர்த்தெடுத்த இவர், ஒவ்வொரு

padippakam



போராளிகளிலும் தனிப்பட்ட அக்கறை எடுத்து, அவர்களுக்கென்றே தனது நேரத்தை ஒதுக்கிக் கற்பிப்பார். இந்த அணி பாரிய வளர்ச்சி அடையவேண்டும் என்ற கற்பனை அவரிடம் நிறையவே இருந்தது. 60மி.மீ. எறிகணை செலுத்திகளிலிருந்து, 82மி.மீ. எறிகணை செலுத்திவரை அவர் கண் முன்னே கையாண்டு வளர்ச்சியடைந்த நாம், இன்று 120மி.மீ. எறிகணை செலுத்திகளை இயக்குகின்ற பெரும் படையணியாக வளர்ந்து நிற்கின்றபோது எம்மைப் பார்த்துப் பெருமைப்பட, சௌதினி எங்களோடு இல்லை. ஆனாலும் அவரின் கற்பனையை நிறைவேற்றிவிட்ட மனநிறைவு எங்களுக்கு உண்டு.

120மி.மீ. எறிகணை செலுத்திகளின் பொறுப்பாளர்களாக, ஆரம்பத்தில் மாலதி படையணியிலிருந்து வந்தவர்களே நின்றனர். இன்று திறமையான பல போராளிகளை உள்வாங்கியபடி எழுந்து எங்கள் படையணி நிற்பதற்கு அத்திவாரமிட்டவர்கள் அவர்களே”

என்கின்றார் லெப்.கேணல் குட்டிசிறீ மோட்டார் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதியான லெப்.கேணல் பவநிதி.

ஓயாத அலைகள்-02 நடவடிக்கையின்முடிவில் எமது படையணியுடன் நின்ற அனைத்து 120மி.மீ. எறிகணை செலுத்தும் அணிகளும் வெளியேறி, புதிதான ஒரு படைப் பிரிவைத் தோற்றுவித்தன. அதுவே லெப்.கேணல் குட்டிசிறீ மோட்டார் மகளிர் படையணியாகத் தோற்றம் கொண்டது.

இதுபோலவே, எமது படையணியிலிருந்த கண்ணிவெடி அணியினர் லெப்.கேணல் அஸ்வினியுடன் வெளியேறி, லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி மகளிர்



படிப்பகம்

padippakam



படையணியைத் தோற்றுவித்தனர். இந்தப் புதிய படையணியைப் பலப்படுத்துவதற்காக ஏனைய மகளிர் படையணிகளும் தமது கண்ணிவெடி அணிகளை இவர்களோடு இணைத்திருந்தன.

புதிய படைப்பிரிவுகளைத் தோற்றுவிப்பதற்குவேண்டிய பொறுப்பாளர்கள், போராளிகளையெல்லாம் வழியனுப்பி விட்டு, மாலதி படையணி தனது அணிகளை மீளமைத்துக்கொண்டு, வரலாற்றுக் கடமையில் மூழ்கிப்போனது.

* * *



படிப்பகம்

padippakam

# 06

கிளிநொச்சியில் நின்ற தர்ஷாவினதும் முல்லையினதும் கொம்பனிகளுக்கு அன்றைய காலை, அரையிருளிலேயே ஆரம்பமாகிவிட்டது.

3.00 மணிக்கே எழும்பித் தலைமுழுகியவர்களும், மேய்ப்பர்களற்று கிளிநொச்சியெங்கும் பரவலாக உலவும் மாடுகளின் பின்னும் முன்னும் முதல்நாளே ஓடித் திரிந்து பொறுக்கி வைத்திருந்த சாணத்தால் தரையை மெழுகியவர்களும், அதன்மேல் வெள்ளை மணலாலும் நாயுண்ணிப் பூக்களாலும் கோலத்தை வரைபவர்களும் கழுவி வைத்திருந்த கற்களை எடுத்து அடுப்பாக அடுக்கியவர்களும்,

"பானை எங்கை? தண்ணியை எடுத்துக்கொண்டு ஓடிவா"

"பாளை பொறுக்கி வச்சிட்டாய்தானே"

"அரிசி புடைச்சிட்டியோ?"

"தேங்காய் திருவினா, நிண்டு யோசிக்காம மளமள வெண்டு பாலைப் புழி"

"சரி சரி பொங்குது அரிசியைப் போடு"



படிப்பகம்

"கிண்டு கிண்டு"

"துணி எங்கை? இறக்குவம்"

என்ற கதம்பக் குரல்களுமாக பொங்கல் பானை அடுப்பிலேறி, இறங்கிய பின்னும் சூரியனைக் காண வில்லை.

"அவர் ஆறுதலா வரட்டும். நீ கிழக்குத் திசையைப் பார்த்தபடி, வாழையிலையில பொங்கல வை. அஞ்சு நிமிசம் பாத்திட்டு நாங்கள் சாப்பிடுவம்"

என்று பரபரத்த ஒவ்வொருவரும், அடுத்தடுத்த பிளாட் டூன்களின் பொங்கலைச் சுவை பார்ப்பதற்காகப் புறப்பட்டு விட, ஏனைய பிளாட்டூன்களைச் சேர்ந்தவர்களும் இது போல் உலாவர, காப்பரண் வரிசை களைகட்டியது. சுட்ட தீவிலிருந்து யாழ் நெடுஞ்சாலைக்குச் சமாந்தரமாக வந்து, பின் பரந்தனுக்கும் கரடிப்போக்குக்குமிடையே நெடுஞ் சாலையை ஊடறுத்து, வலது பக்கம் மூன்றாம் வாய்க் கால்வரை நிலையமைத்து நின்ற எமது அணிகள் 1999 ஆம் ஆண்டின் தைப்பொங்கலை மிகவும் குதூகலமா கவே வரவேற்றன. வீடுகளில்செய்வது போன்று காப் பரண்கள் துப்புரவாக்கப்பட்டு, புற்கள் வெட்டி எரிக்கப் பட்டு, ஆயுதங்கள் சுத்தம் செய்யப்பட்டு, உடைகள் தோய்க்கப்பட்டு, மேலும் என்ன செய்யவேண்டும் என்று தமக்குத் தோன்றியதோ, எல்லாவற்றையும் செய்து தை நாளை வரவேற்றனர்.

ஆனால், அம்பகாமத்தில் நின்ற மைதிலியின் கொம் பனியின் நிலையோ வேறுவிதமானதாக இருந்தது.

**1998** மார்கழியில் சூரியகலா-02 கல்லூரியில் அதி காரிகள் பயிற்சி எடுத்துக்கொண்ட ஜமுனா

padippakam



முதலானோர், அடிப்படைப் பயிற்சி முடித்துவந்த லீமா10 பாசறைப் போராளிகளைப் பொறுப்பெடுத்தனர். அம்ப காமம் புறப்பட்ட இந்தப் புதிய கொம்பனியின் மேலாள ராக நியமிக்கப்பட்டவர் கிளிநொச்சி மீட்கப்பட்டபின் அங்கு நிலைகொண்டிருந்த இரு கொம்பனிகளதும் மேலாளராக நின்றிருந்த மைதிலி.

அப்போதுதான் அம்பகாமம் போயிருந்த அந்தக் கொம்பனி தனக்குரிய காப்பரண்களை அமைக்கும் பணி யில் மூழ்கிப்போயிருந்தது. ஓயாத அலைகள்-02 க்காக, முன்பு அங்கு நின்ற அணிகளெல்லாம் புறப்பட்டு வந்த பின்னர், மறுபடி இப்போதுதான் அணிகள் போயிருந்தன. பழைய நிலைகளெல்லாம் மழையால் இடிந்தும், பழு தடைந்தும், காப்பகழிகள் முழுதும் வெள்ளம் நிறைந்தும் நின்றதால், எல்லா வேலைகளுமே புதிதாக நடைபெற்றன. மைதிலியின் கட்டளைப் பீடத்துக்கான வேலையும் அப் போதுதான் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இத்தனை வேலைகளோடுமிருந்த புதிய போராளிகளை மேஜர் பரா சும்மா விட்டாரில்லை. அவர்கள் வரும்போதே தானும் வந்துவிட்ட பரா, ஒவ்வொரு பிளாட்டூனாகச் சற்றுப் பின்னே எடுத்து, அவர்களின் படையியல் ஆற் றலைப் பெருக்குவதற்கான மேலதிக பயிற்சிகளை வழங் கிக்கொண்டிருந்தார். தைப்பொங்கலன்று விடுமுறை என்று முடிவெடுத்தார்கள்.

அன்று எல்லோருமே வழமையான அவசரங்கள் ஏது மற்று ஓய்வாக இருந்தார்கள். ஆனால் காலையிலேயே மழை பிடித்துவிட்டது. சிலர் தேநீர் குடித்திருந்தார்கள். பலர் குடிக்கவில்லை. நெருப்பை அணைத்தவாறு வெள் ளம் ஓடியது. சிறிது நேரத்தில் அடுப்புக் கற்களைக் காணவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் அடுப்பிலுள்ள சட்டி, பானைகளுக்கெல்லாம் கால் முளைக்கப்போகும்



படிப்பகம்

ஆபத்தை உணர்ந்தவர்கள் அவசரமாக அவற்றைத் தூக்கிக் கொப்புகளுள் கொழுவிவிட்டார்கள்.

மைதிலிக்குரிய கொட்டில் நான்கு கப்புகளின் மேல் ஒரு கிடுகுக்கூரை என்ற வடிவத்தோடுதான் இருந்தது. உள்ளே ஆயுதங்களையும் உடைகளையும் வைப்பதற் கெனச் சிறு தடிகளால் அவசரமாக அமைக்கப்பட்ட தட்டி ஒன்றும் இருந்தது. பாதங்களை மூடி வெள்ளம் ஓடத்தொடங்க, நிலத்தில் கிடந்த எல்லாவற்றையும் தூக்கி அந்தத் தட்டியின்மேல் வைத்தனர். பின்னர் குளிர் தாங்க மாட்டாமல் மைதிலியும் பராவும் கூடநின்றவர்களுமாகத் தட்டியின்மேல் ஏறி அமர்ந்துகொண்டனர். பயிற்சி கொடுக்கப்பட்ட விபரங்களை பரா பதிவு செய்ய, மைதிலி அவருக்கு உதவிசெய்துகொண்டிருந்தார்.

திடீரென அந்தரத்தில் மிதப்பதுபோன்ற உணர்வு எல் லோருக்கும் ஏற்பட, திடுக்கிட்டுப் பார்த்தனர். தட்டி பாறிச் சரிந்துகொண்டிருந்தது. இவர்கள் தம்மை நிலைப்படுத்து வதற்கிடையில், ஒரு கணத்துக்கும் குறைவான நேரத்தி னுள் எல்லோரும் மார்பளவு வெள்ளத்துள் அமர்ந்திருந் தார்கள்.

விழுந்தடித்து எழும்பி, ஆயுதங்களைத் தூக்கி, ஏனைய வற்றையும் தூக்கி முடிப்பதற்கிடையில் கிறீச் கிறீச் என்ற ஒலி எழும்ப, மறுபடி திடுக்கிட்டனர். இப்போது கப்புகள் ஊறிப் பாறிக் கொட்டில் ஒரு பக்கமாகச் சரியத்தொடங்க, ஆயுதங்கள் தோளில் தொங்க, தோளிலே மேலும் வைக் கக்கூடியவற்றை வைத்துக்கொண்டு எல்லோரும் கொட்டி லைப் பிடித்துக்கொண்டனர்.

காட்டு வெள்ளம் சக்தி வாய்ந்தது. ஈடுகொடுக்கமுடி யாத வேகம் கொண்டது. கப்பை மீளவும் ஊன்றுவதற்கு அது யாருக்கும் ஒப்புதலளிக்கவில்லை. பாதங்களின் கீழிருந்த மண்ணையும் அரித்தவாறு ஓடிய வெள்ளம்

padippakam



வடியும்வரை கப்புகளின் பணியை அவர்களே செய்ய வேண்டியிருந்தது.

இப்படியாகப் போனது இவர்களின் தைப்பொங்கல்.

படைத்துறைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த இளைய போராளிகளில் 'சிறுவர்கள்' நிலையைக் கடந்து இளைஞர்களாகியவர்கள் லெப்.கேணல் சந்தோசம் படையணியாகத் தோற்றம்கொண்டு, கிளிநொச்சி நகரில் எமக்கு வலப்புறம் நின்ற லெப். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கும் அப்பால் நிலையமைத்திருந்தார்கள்.

1999 தை மாத முடிவில் சந்தோசம் படையணி கலைக்கப்பட்டு, பெண் போராளிகள் எங்களின் படையணியுடன் இணைக்கப்பட்டனர். இள வயதிலேயே போர் நுணுக்கங்களைப் பாடமாகக் கற்றவர்கள் இப்போது கள அனுபவம்மிகுந்த எமது படையணியிடம் நேரடி அனுபவங்களைக் கேட்டறிந்து, தமக்கிருந்த ஐயங்கள் பலவற்றைத் தெளிவாக்கிக்கொண்டனர்.

எங்களுடைய பிளாட்டூன் கட்டளை அதிகாரிகளுள் ஒருவரான மேஜர் மிதுலா, குறும்புத்தனமும் இளவயதுக் கேயுரிய பிடிவாதமும் நிறைந்த முன்னாள் படைத்துறைப் பள்ளி மாணவர்களின் பிளாட்டூன் பொறுப்பாளராக கேணல் விதுஷாவினால் விடப்பட்டார். மிதுலாவும் ஆரம்ப நாட்களில் படைத்துறைப் பள்ளி மாணவியாக இருந்து ஏற்கனவே இவர்களால் அறியப்பட்டவரும், இவர்களின் இயல்பை அறிந்தவரும் என்பதால், அந்தக் குறும்புக்காரர்களைக் கையாளக்கூடிய மிகச் சரியான பொறுப்பாளராக அவர் இருந்தார்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

இதே காலகட்டத்தில் எமது விடுதலை அமைப்பு வித்தியாசமான ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டது. எமது அமைப்பிடம் படையியல் பயிற்சிகளைப் பெற்று, பின்னர் வெவ்வேறு காரணங்களுக்காக வீடுகளில் நின்ற எல்லோருக்கும் ஒரு அழைப்பை விடுத்தது.

அழைப்பை ஏற்று எல்லோரும் ஒன்றுகூடினர். எமைச் சூழ்ந்திருக்கும் இராணுவ நெருக்கடி அவர்களுக்கு விளக்கப்பட்டது. அதை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக வேண்டிய தேவை விளக்கப்பட்டது. எமது படைபலத்தை அதிகரிப்பதற்கு அவர்களின் ஒத்துழைப்புக் கோரப்பட்டது.

பலர் இணைந்துகொண்டனர். பெண்கள் 5.0 படையணியானார்கள். மைதிலியின் கொம்பனியின் பொறுப்பாளராக இருந்த ஜமுனா, மணலாற்றில் தங்கி நின்ற இவர்களைப் பொறுப்பேற்றார். கப்டன் அங்கயற்கண்ணி, லெப். அகலரசி என ஆற்றல் மிக்க போராளிகள் பலர் 5.0 அணியிலிருந்தார்கள். கொம்பனியின் இரண்டாவது பொறுப்பாளராக மேஜர் மாலதி செயற்பட்டார்.

ஜமுனா, மாலதி ஆகியோருடன் அம்பகாமம் வந்த 5.0 அணியினர் மைதிலியின் கொம்பனியின் இடதுபுறமாகத் தமது தொடர்நிலைகளை அமைக்கும் பணியில் ஈடுபடத்தொடங்கினர்.

இதற்கிடையில் கிளிநொச்சியில் நின்ற தர்ஷாவின் கொம்பனி தமிழ்செல்வி தலைமையில் மன்னார் மாவட்டத்துக்கும் முல்லையின் கொம்பனி ஆஷாவின் தலைமையில் மணலாற்றுக்கும் சென்றுவிட்டிருந்தது.

படைத்தரப்பினர் சூரியபலம் (ரிவிபல) நடவடிக்கை மூலம் எம்மை எதிர்கொள்ளாமல் விலகி, நெடுங்கேணியிலிருந்து முன்னேறி ஒட்டுசுட்டான் நகரை வலிந்துபிடித்து, ஒட்டுசுட்டான்-மாங்குள வீதியைத் தமது கட்டுப்பாட்டிலே

padippakam



வைத்திருந்தனர். அவர்களின் அடுத்த நகர்வைக் கட்டுப் படுத்தும் பணியில் மைதிலியுடையதும் ஐமுனாவினுடை யதும் கொம்பனிகள் ஈடுபட்டிருந்தன.

போர் முழக்கம் (ரணகோஷ)-01, 02 நடவடிக்கைமூலம் எம்மை எதிர்கொள்ளாமல் யாழ் நெடுஞ்சாலைக்கு வலது புறம் பக்கவாட்டாக விலகி பனங்காமம், மாதர் பணிக்கர் மகிழங்குளம், பாலமோட்டை, குஞ்சுக்குளம், நவ்வி, நட்டாங்கண்டல், மன்னார் மாவட்டத்தில் மடு, ஆட்காட்டி வெளி என்று பல ஊர்களைப் படையினர் வலிந்து பிடித்திருந்தனர். இவர்களின் அடுத்த நகர்வைக் கட்டுப்படுத்தும் பணி தமிழ்செல்வியின் கொம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

மணலாற்றுக் காட்டினுள்ளே படையினரின் தன்னிச்சை யான நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஆஷா, முல்லை ஆகியோரின் கொம்பனிகள் காவல் நிலைகளை அமைக்கத்தொடங்கின.

களமுனைகள் நாலா திசைகளிலும் பரந்து விரிந்ததால், மாலதி படையணியின் கொம்பனிகள் திசைக்கொன்றாகச் செயற்படவேண்டியிருந்தது. நெருக்கடி மிகுந்த களங்களி லெல்லாம் எங்கள் படையணி படைத்தரப்புக்கு ஒரு சவாலாகவே இருந்துவந்தது.

மிக நீண்ட பயணம் அது. குண்டுங் குழியுமாக இருக்கின்ற எங்கள் அழகிய மண் வீதிகளில் கிளிநொச்சியிலிருந்து மன்னார் போவதென்றால், அது சாதாரண விடயமில்லை. ஆடி ஆடிப் பயணம் செய்த ஊர்திகள் பள்ளமடுச் சந்தியில் திரும்பும்போது விடியத்தொடங்கிவிட்டது.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

பரந்த வெளி, பிறகு ஒரு சிறு குடிமனை. பின்னர் வெளி அல்லது காடு. பிறகு ஒரு குடிமனை என்றவாறி ருந்த மன்னாரின் தோற்றம் எங்களைச் சற்று மிரட்டித் தான்விட்டது. மன்னார் ஒரு வறள் வலயம் என்றும், உணவுத் தொகுப்பின்போது அதிக நீரிழப்பைத் தவிர்ப் பதற்காகச் சிறு இலைகளைக்கொண்ட தாவரங்களே வளரும் என்றும் பாடசாலை நாட்களில் படித்திருந்தாலும் நேரில் பார்க்கும்போது பயம் ஏற்படாமலில்லை. கண்ணுக் கெட்டிய தொலைவுவரை விடத்தல் மரங்கள் தெரிந்தன. இப்போது மாசி மாதம். இலைகளோடு மரங்கள் நிற்பது பார்வைக்கு இதமாக இருந்தாலும், அடுத்த மாதம் கொழுத்தி எரித்து இலைகளை உதிர்த்து, வறுத்துப் பொரிக்கப்போகும் வெயிலை நினைத்துப் பயப்படாமல் இருக்கமுடியவில்லை.

படையினரின் போர் முழக்கம்-3 நடவடிக்கை எந்தத் திசைவழி நகரும் என்று தெரியவில்லை. எனினும் நகர லாம் என எதிர்பார்க்கக்கூடிய மூன்று முக்கிய முனை களிலும் எங்களுடைய மூன்று பிளாட்டூன்களும் பிரிந்து நிலைகொண்டன.

மடு-முருங்கன் வீதியில் தனுஷாவின் பிளாட்டூனுடன் கொம்பனிப் பொறுப்பாளர் தர்ஷாவும், பரப்புக்கடந்தானில் மிதுலாவின் பிளாட்டூனுடன் கொம்பனி பதில் பொறுப்பா ளர் சாந்தகுமாரியும் தட்சணாமருதமடு-பெரியமடு வீதி யருகே இளம்பிறையின் பிளாட்டூனுடன் கொம்பனி மேலா ளர் தமிழ்செல்வியும் காப்பு நிலைகளை அமைத்தனர். இப்போது மூன்று பிளாட்டூன்களுமே ஒன்றுடன் மற்றது தொடர்பற்ற தொலைவுகளில் நின்றன. யாருக்கு நேரே படை நகர்வு வருகிறதோ, அவர்கள் தம்மிடமுள்ள வளத் துக்கும் தமது பலத்துக்குமேற்ப சண்டையிடுவதற்குத் தயா ராகினர்.

padippakam



எங்களுக்கு மன்னாரைத் தெரியாது. எமக்கு உதவுவதற் காக மன்னாரிலேயே நிற்கும் கேணல் ஜெயம் அவர்களின் அணியிலிருந்து சில வழிகாட்டிகள் வந்து ஒவ்வொரு பிளாட்டூன்களுடனும் நின்றுகொண்டார்கள். ஒவ்வொரு பிளாட்டூனும் ஒவ்வொரு நாளும் கணிசமானளவு தூரம் நடந்து இடம் பார்க்கும். எங்கே சண்டை நடக்கும் என்று ஒருவருக்கும் தெரியவில்லை. எனினும் காப்பரண்கள் அமைக்கும் வேலையும் நடந்துகொண்டுதானிருந்தது.

இடம்பார்க்கப் போகின்றவர்களெல்லோருக்கும் உடை களுக்கு வெளியே தெரிகின்ற கை காலெல்லாம் ஒரே கடி. ஒருவருக்கும் காரணம் புரியவில்லை. இரண்டு, மூன்று நாட்களின்பின் பொறுக்கமுடியாமல் வழிகாட்டிகளி டம் விடயத்தைச் சொன்னார்கள்.

"காஞ்சோண்டியில முட்டீட்டிங்கள்போல இருக்குது"

என்றார்கள் அவர்கள்.

"எது காஞ்சோண்டி?"

காட்டினார்கள். அட, அநியாயமே! இதுவா காஞ் சோண்டி? முன்னே போய்க்கொண்டிருக்கும் வழிகாட்டிகள் அவற்றிலே முட்டாமல் மோதாமல் இலாவகமாக வளைந்து நெளிந்து போக, நாங்களோ அதைப் புரிந்து கொள்ளாமல் ஒரு காஞ்சோண்டியையும் மிச்சம் விடாமல் உரசி உரசிக் கைளால் தொட்டு விலக்கி இயற்கைமீது எங்களுக்கிருக்கும் பேரன்பை வெளிப்படுத்தியவாறு சென்றால், கடிக்காமல் வேறென்ன செய்யும்? பட்டால் கடிக்கும் என்று கேள்விப்பட்டிருக்கின்றோம். இதுதான் அது என்று தெரிந்தாலல்லவா விலகிப் போவதற்கு?

நாங்கள் போய் ஒரு வாரமிருக்கும் பரப்புக்கடந்தானில் நின்ற மிதுலாவின் பிளாட்டூன் சாந்தகுமாரியுடன் தள்ளாடி நோக்கி நகர்ந்தது. படைத்தளத்தை எவ்வளவுக்கு



படிப்பகம்

நெருங்கிப் போகமுடியுமோ, அவ்வளவு அருகில் போனது எமதணி. படையினரின் நடமாட்டங்களைப் பார்க்கக்கூடிய தூரங்களில் மறைவாக நின்றுகொண்டு, அவர்களைக் கண்காணித்துக்கொண்டிருந்தது.

ஏறிகணைகளை ஏற்றிவந்த ஊர்திகள் பெரிய பெரிய கட்டிடங்களுள் அவற்றை இறக்கிவைத்துக்கொண்டிருக் கின்றன. படையினர் தொடர்ச்சியாக நடமாடிக்கொண்டே இருக்கின்றனர். ராங்கிகள் தயார்நிலையில் நிறுத்தப்பட்டி ருக்கின்றன. அவை இடையிடையில் படையினரால் சரி பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஏராளம் படையினர் நடமாடிக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் தயார்ப்படுத் தல்களைப் பார்த்தால், போர் முழக்கம்-03 தள்ளாடியிலி ருந்துதான் புறப்படப்போகின்றதோ என்கின்ற கேள்வி எங்களிடம் எழுந்தது.

தாம் பார்த்த, அவதானித்த, ஊகித்த யாவற்றையுமே சாந்தகுமாரியின் ஆட்கள் தமக்குப் பின்னிருந்த நட வடிக்கைப் பணியகத்துக்கு உடனுக்குடன் சொல்லிக் கொண்டேயிருந்தனர்.

நம்மவர்கள் போய் மூன்று, நான்கு நாட்களின் பின் ஒரு காலையில், எமக்குப் பின்னால் பாதுகாப்பான தூரத் தில் நிலையெடுத்திருந்த எமது ஆட்லறிகள் முழங்கத் தொடங்கின. எறிகணைகள் எங்களின் தலைக்கு மேலால் கூவியவாறு போய், தள்ளாடி படைத்தளத்தினுள் வீழ்ந்து வெடித்து, அங்கிருந்த யாவற்றையும் வெடிக்கச் செய்தன. எம்மவர்கள் அனைத்தையும் நேரே பார்த்து ஆட்லறி களுக்கு வழுத்திருத்தம் சொல்லிக்கொண்டிருந்தனர்.

எறிகணைகள் குவிக்கப்பட்ட கட்டிடங்கள், ராங்கிகள், கவச ஊர்திகள், ட்ரக்குகள் உட்பட படைய ஊர்திகள் வரிசை வரிசையாக நிறுத்திவைக்கப்பட்ட தொகுதிகள் எல்லாமும் வெடித்துக்கொண்டிருந்தன.

padippakam



தீ நாக்குகள் காற்றில் உயர எழுந்தன. தள்ளாடி எரிந்து கொண்டிருந்தது. மறுநாளும் வெடித்து வெடித்து எரிந்து கொண்டிருந்தது.

இதற்கிடையில் போர்முழக்கம் நடவடிக்கைப் படையினர் வேறொரு முனையில் எறிகணைகளைப் பொழிந்தபடி நகரத்தொடங்கினர். போர் முழக்கம்-03 ஆரம்பமாகிவிட்டது. பெரியமடு-தட்சணாமருதமடு வீதியில் நின்றவர்களிடமா, மடு-முருங்கன் வீதியில் நின்றவர்களிடமா, அல்லது யாருமற்ற பரப்புக்கடந்தானுக்கா படை நகரப்போகின்றது என்பது தெரியவில்லை. எறிகணைகள் எங்கோ விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன. மன்னாரின் வேவு அணிகள் தாம் திரட்டிய தகவல்களோடு மாலையில் எமது அணிகளைச் சந்தித்தன.

பாலம்பிட்டிவரை படையினர் வந்துவிட்டதால், எல்லோரும் காப்பரண்களை அதற்கும் பின்னால் அமைக்க வேண்டும் என்பதே அந்தத் தகவல். மடுவுக்கும் அப்பால் தர்சாவுடன் நிலைகொண்டிருந்த தனுசாவின் பிளாட்டூன் இரவிரவாகக் காடுகளால் நகர்ந்தது. அவர்கள் பெரிய மடுவை வந்தடையவே மறுநாள் பகலாகிவிட்டது. தமிழ் செல்வியுடன் நின்ற இளம்பிறையின் பிளாட்டூன் ஏற்கனவே அங்கு வந்துசேர்ந்துவிட்டிருந்தது.

ஆட்லறிகளைப் பாதுகாப்பாகப் பின்னகர்த்தவேண்டிய பொறுப்பு சாந்தகுமாரியின் அணிக்கு. படையினரின் கண்களில் படாமல், தற்செயலாகவேனும் அவர்களை எதிர்கொள்ளும் வாய்ப்புகளைத் தவிர்த்து, காடுகளுக்குள்ளால் ஆட்லறிகளை நகர்த்திப் பாதுகாப்பான இடம்வரை கொண்டுபோய் விட்டுவிட்டு, பெரியமடுவுக்கு வந்துசேர்ந்தது இந்த அணி.

திசைக்கொன்றாக நின்ற பிளாட்டூன்கள் மூன்றும் இப்போது பெரியமடுவில் சந்தித்தன. பள்ளமடுவிலிருந்து



படிப்பகம்

பெரியமடுநோக்கிய திசையில் வீதியின் வலதுபுறம், கிட்டத்தட்ட வீதிக்குச் சமாந்தரமாக அடம்பனைப் பார்த்த வாறு நிலைகொண்டன.

நாம் நின்ற இடம் பள்ளமடுவுக்கும் பெரியமடுவுக்குமிடையேயான பரட்டைக்காடு. எமக்கு இடப்புறமாக பெரியமடுக் குடியிருப்பை அண்மித்து ஜெயந்தன் படையணி நிலை கொண்டது. அப்போதுதான் இயற்கைக்கும் எங்களுக்கு மான போராட்டம் தொடங்கியது.

நிலமோ காய்ந்து வரண்டு இறுகிப்போய்க் கிடந்தது. நிலத்தைக் கொத்த மண்வெட்டியைப் போட்டால், ஒரு உதைப்புடன் மண்வெட்டி திருப்பி மேலுயருமேயன்றி, சிறு கிடங்குதானும் வெட்டமுடியாது.

விடத்தல் மரங்களும், வேறு பெயர் தெரியாத மரங் களும் தமது பெரிய முட்களை நீட்டியவாறு எம்மை மிரட்டிக்கொண்டிருந்தன. உடம்பிலுள்ள நீர் அனைத்துமே வெகு வேகமாக ஆவியாகிக்கொண்டிருந்தது. மரங்கள் நின்றனவேயன்றி, நிழல் இல்லை. இருந்த சிறு இலை களையும் கொட்டிவிட்டுத் தடிகளாக நின்ற மரங்களின் கீழ் வலைப்பின்னல்போன்று கோடுகளாக, சதுரங்களாக நிழல் விழும். அந்த நிழலும் சுடும்.

முதலில் பாதுகாப்புக்காக ஒரு 'I' வடிவக் காப்பகழியை வெட்டுமாறு பணிக்கப்பட்டிருந்தபோதும், அதை வெட்டு வதற்குள்ளேயே உடலிலிருந்த ஈரம் அனைத்தையும் இழந்துபோனோம். உடலில் நீர் உலர்ந்தால், வெப்பம் மிகுந்தால் வரக்கூடிய அனைத்து நோய்களும் எங்களுக்கு வந்தன. எல்லோருடைய பாதங்களும் பாளம், பாளமாக வெடித்திருந்தன. கை, கால், முகத்திலிருந்த தோல்கள் பொருக்கடித்து உதிரத்தொடங்கின.

நாங்கள் குடிநீர் எடுப்பது, குளிப்பது பெரிய கதை. ஆறு ஒன்று நாம் நிற்குமிடத்திலிருந்து நீண்ட

padippakam



தொலைவுக்கு அப்பால் ஓடிக்கொண்டிருந்தது. குடிநீர் எடுப்பதற்கு இருந்த ஒரு கிணறுகூட எம்மிலிருந்து வெகு தொலைவில், ஆற்றருகேதான் இருந்தது. எமது காவல் நிலைகளோ நீண்ட இடைவெளிகளைக் கொண்டதாக, ஒரு காப்பரணிலிருந்து கத்தினாலும் கேட்காத தொலைவில் அடுத்த காப்பரண் இருந்தது. இரண்டுக்குமிடையேயுள்ள இடைவெளிகளை இனங்கண்டால், அல்லது காணாவிட்டாலும் தற்செயலாகவேனும் படையினர் உள்நுழைந்து பள்ளமடு-பெரியமடு வீதியில் ஏறக்கூடிய ஆபத்து நிறையவேயிருந்தது.

எனவே குடிநீர் எடுப்பதாயினும் குளிப்பதாயினும் தேடுதல் நடவடிக்கையைச் செய்தே போகவேண்டும். கிணற்றைச் சுற்றிக் காவல் விட்டு, பெரிய கொள்கலன்களிலே நீரை நிரப்பித் தடிகளிலே கொழுவித் தோளிலே சுமந்து கொள்ள, முன்னும் பின்னும் பக்கவாடுகளிலும் தேடுதல் அணி நகர, தேர் போனதுபோல குடிநீர் எங்களின் இருப்பிடங்களுக்குப் போகும்.

குளிப்பதும் அப்படியே. அங்குலம், அங்குலமாக ஆராய்ந்தவாறே குளிக்கின்ற அணி நகரும். போகும் பாதையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியவாறே போய், பாதிப் பேர் ஆற்றுக்கு அப்புறமும் இப்புறமும் காவலில் ஈடுபட, மீதிப் பேர் குளிப்பார்கள். பிறகு இவர்கள் காவலில் ஈடுபட, ஏனையவர்கள் குளிப்பார்கள். மறுபடி தேடலைச் செய்தவாறே திரும்புவர். குளிப்பதற்கென எமது காப்பரண்களிலிருந்து காலை 10.00 மணியளவில் புறப்பட்டால் (10.00 மணியின் பின்னர்தான் புறப்படலாம்) திரும்பிவர 3.00 மணியாகும். குளியல் ஒரு மாபெரும் வேலைத்திட்டம். ஆனால் நேரத்தை விழுங்குகின்ற வேலைத்திட்டம் என்பதால், ஒருவர் வாரத்தில் ஒருமுறைதான் குளிப்பதாக முறை வைத்துக்கொள்வதைத்தவிர, மாற்று வழியேதும் எமக்கு இருக்கவில்லை.



படிப்பகம்

வேலைகளென்றால் தலைக்கு மேலே. முதலில் 'I' வடிவக் காப்பகழி. அது முடிய காப்பரண் வெட்டும் வேலை. அதேநேரத்திலே எமது நிலைகளுக்குப் பின் பாதை எடுப்பதற்காகக் காடு வெட்டும் வேலை. காலையில் யார்யாருக்கு என்ன வேலைகள் என்று ஒவ்வொரு பிளாட்டூன் கட்டளை அதிகாரியும் பிரிப்பர். பிளாட்டூன்களின் பின்பகுதி, முன்பகுதிகளில் தேடல் நடவடிக்கை, காப்பரண் வெட்டுதல், பாதை அமைத்தல், குடிநீர் எடுத்தல், குளிக்கப் போதல் என்று வேலை பிரிபடும். ஒரு கட்டத்தில் காப்பரண்களை அமைக்கும் வேலைக்கு மக்கள் வரத்தொடங்கினார்கள்.

இப்போது குடிநீர் எடுக்கப்போகும் வேலை கிடைக்கும் அணியின் பணியோ விவரிக்கமுடியாதளவு துயரம் நிறைந்ததாயிற்று. கடும் வெப்பம் காரணமாக, வேலை செய்யும் மக்கள் தண்ணீரைக் குடித்துக்கொண்டேயிருப்பார்கள். கொள்கலன்கள் மிக வேகமாக வெறுமையாகிவிடும். எமது அணி ஒருமுறை புறப்பட்டு, தேடுதல் செய்து, கிணற்றுக்குப் போய், தேடுதல் செய்தவாறு குடிநீரைக் கொண்டுவர, இங்கே வெற்றுக் கொள்கலன்கள் காத்திருக்கும். கொண்டுவந்த நீரை வைத்துவிட்டு, மறுமுறை போய்த் திரும்பிவரும்போது, முன்னர் கொண்டுவந்த நீர்க் கொள்கலன்கள் வெறுமையாக இருக்கும். எனவே குடிநீர் எடுக்கும் அணி சிறிது நேர ஓய்வுமின்றி அங்கும் இங்குமாகப் போய்வந்துகொண்டே இருக்கும்.

ஒவ்வொருமுறை போய்வரும்போதும் தேடுதல் செய்தேயாகவேண்டும். எங்களுடைய கவனக்குறைவினால், படையினரின் பதுங்கித் தாக்கும் அணிகளிடம் அடி வாங்கினால், அதற்கு அந்த அணியை வழிநடத்திய பொறுப்பாளரே பொறுப்பேற்கவேண்டுமென்பதாலும் வீணான உயிரிழப்புகளுக்குத் தலைவர் அவர்களின் முன்னின்று காரணம் சொல்வது கடினம் என்பதாலும் எல்லோருமே அந்த விடயத்தில் மிகக் கவனமாகவே நடந்துகொண்டோம்.

padippakam



படைத்தரப்பும் சும்மாயிருக்கவில்லை. நாங்கள் எங்கே நிலைகொண்டிருக்கின்றோம் என்று அறிய அவர்களின் வேவு அணிகள் ஓய்வில்லாமல் உலவிக்கொண்டேயிருந்தன. எம்மைச் சந்திக்காது படைத்தரப்பினர் சிலநேரம் விலகிச் செல்வர். சிலநேரங்களில் எமது நிலைகளுக்கு நேரே வருவர். நேரே வந்தால், பிறகென்ன, அடிதான்.

குறிப்பிட்ட சில நாட்களுள் படையினர் எமது காவலரண் வரிசையை இனங்கண்டுகொண்டார்கள். அதன் பின்னர் அவர்களின் பதுங்கித் தாக்கும் அணிகள் ஊடுருவத்தொடங்கின. நிம்மதியற்ற நாட்கள் எங்களுக்கு மறுபடி ஆரம்பமாகின.

அன்று காப்பரண்களை மூடுவதற்கான குற்றிகளைத் தூக்கிவரவென எமது அணி ஒன்று போயிருந்தது. திடீரென்று வீழ்ந்தது அந்த அடி. மிக வேகமாக ரவைகளைப் பொழிந்துவிட்டுப் படையினர் பறந்துவிட்டனர். பாதைக்கு இருபுறமும் மொழிமுறித்தான் பற்றைகள். அதற்குள் யாரும் மறைந்துநின்றாலும் தெரியாது. நடந்துபோய்க் கொண்டே அவதானிக்கமுடியாது. குனிந்து பார்த்தால் தான் மரக்கால்களுடே எதையாவது காணமுடியும்.

அப்படியான பற்றைப் பகுதியில் படையினரின் திடீர்த் தாக்குதலை நாம் எதிர்கொண்டோம். இந்த அடியோடு, காப்பரண்களுக்கிடையிலான இடைப் பகுதிகளிலே தேடுதல் நடவடிக்கை செய்வதென முடிவாயிற்று.

காலை 8.00 மணிக்கு வேலைசெய்ய மக்கள் வருவார்கள். அதற்கு முன் காவலரண் பகுதியில் தேடுதல் நடவடிக்கை முடிவடையவேண்டும். பிளாட்டூன் கட்டளையதிகாரியான கீர்த்திக்கு அன்று மேலதிக வேலை ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது. அவருடைய பிளாட்டூனுக்கு இடதுபுறம் யாருமற்ற பகுதி ஒன்றிருந்தது. அந்தப் பகுதியையும் தேடுதலுக்குள்ளாக்கும்படி கீர்த்தி பணிக்கப்பட்டார்.



படிப்பகம்

padippakam



அதன்படி தேடுதல்செய்து முடிக்கவே 10.00 மணியாகி விட்டது. மக்கள் வேலைக்கென வந்து காத்துக்கொண்டிருந்தார்கள். தேடுதல் பணி முடிய, காப்பரணுக்கு முன்னால் அவதானிப்புநிலைக்கான வேலைசெய்பவர்களுக்கும், கண்ணிவெடி அணியினர் வேலைசெய்வதற்கும் இவர்கள் காப்பு வழங்கவேண்டும். தேநீர் தயாரிப்பதற்கான தண்ணீர் எடுக்கப் போகவேண்டும். குளிப்பதற்கு ஆட்களை அனுப்பவேண்டும். ஆனால் இன்று இன்னும் இவர்கள் சாப்பிடவுமில்லை. வழமையாக ஒரு பிளாட்டூன் தேடுதல் முடிய, அடுத்த பிளாட்டூன் பொறுப்பாளர் இவர்கள் விட்ட இடத்திலிருந்து தேடுதல் செய்வார். அன்று எல்லாம் தாமதமாகிவிட்டது.

இவர்களின் தாமதத்தால் ஏனைய இரண்டு பிளாட்டூன்களின் தேடுதல் பணியும் தொடர்ந்து எல்லா வேலைகளுமே தாமதிக்கப்போவதால், மற்றைய பிளாட்டூன்களின் பகுதியையும் சேர்த்து இவர்களையே தேடுதல் செய்யும்படி தமிழ்செல்வி அறிவித்தார். எல்லோரும் மிகவும் களைத்துவிட்டனர். கீர்த்தி தனது T56-2 இனை ஒரு போராளியிடம் கொடுத்துவிட்டு, அவரின் குண்டுகளை வாங்கிக் கட்டிக் கொண்டார். களைப்புமேலீட்டால் எச்சரிக்கையுணர்வு எல்லோரிடமுமே சற்றுக் குறைந்துவிட்டிருந்தது. வழமையாக அந்தப் பக்கத்திலிருந்து கீர்த்தியின் பக்கம்நோக்கி நடக்கின்ற தேடல், இன்று கீர்த்தியின் பக்கமிருந்து அந்தப் பக்கம்நோக்கி என்று எதிர்வளமாகத் திரும்பியிருந்தது.

படையினரின் பதுங்கித்தாக்கும் அணியினரின் மூன்று கிளைமோர்களுள் இரண்டு வழமையாக தேடல் அணி வரும் திசைநோக்கி, ஆனால் இப்போது இவர்களுக்கு முதுகு காட்டியபடி மற்றைய திசையைப் பார்த்தவாறும், ஒன்று பக்கவாட்டாகவும் நிலைப்படுத்தப்பட்டிருந்தன. திடீரெனக் கிளைமோர்கள் வெடித்தன. வெடிப்பினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்குக் காற்று மறுபடி வீசியபோது மேலெழுந்த கொப்புகள், சன்னங்கள் எல்லாவற்றையும்



படிப்பகம்

padippakam



அள்ளியவாறு வந்தது. புழுதியைத்தவிர வேறெதுவும் தெரியவில்லை. முன்னே போன இருவரும் ஒரு கிளை மோரின் தாக்கும் எல்லைக்குள் போய்விட்டதால், கொல் லப்பட்டனர். கீர்த்தி தூக்கியெறியப்பட்டு ஒரு மண் புற்றுக் கும் பாலைமரத்துக்குமிடையில் விழுந்தார். மற்றையவர் கள் எங்கோ தூர எறியப்பட்டனர்.

வெடியதிர்வைக் கேட்ட தமிழ்செல்வி கீர்த்தியைக் கூப்பிட்டார். விழுந்தபடியே நிலைமையைச் சொன்ன கீர்த்தி யின் குரலைக் கேட்டதும் பதுங்கியிருந்த படையினர் கத்தியவாறே ஓடிவந்து, வீழ்ந்துகிடந்த போராளியின் உடலில் காப்பெடுத்தவாறு புற்றைநோக்கி FN MAG ஆல் அடிக்கத்தொடங்கினர். புற்றிலிருந்து புழுதியும் மண் கட்டிகளும் பறந்தன. பின்னாலுள்ள பாலையின் பட்டை கள் பறந்து தெறித்தன. காது செவிடுபடும்படி அந்த அடி இருந்தது.

எதிர்த் தாக்குதல் செய்வதற்குக் கீர்த்தியிடம் இரண்டு குண்டுகளைத்தவிர வேறெதுவும் இருக்கவில்லை. இவரது சுடுகலனை வைத்திருந்த போராளியின் உடலில் காப் பெடுத்தவாறு FN MAG காரர். புற்றுக்கு முன்னிருந்த வீரைக் குற்றி சிலும்பல் சிலும்பலாகப் பறந்தது. இதற்குள் தூக்கியெறியப்பட்ட ஏனையவர்களும் பக்கத்துக் காப் பரணிலிருந்த செக்ஷன் கட்டளையதிகாரி ரம்யாவும் தாக்கியபடி ஓடிவருவதைக் கீர்த்தி கண்டுவிட்டார். தான் எங்கே, படையினர் எங்கே என்று அவர்களுக்குக் காட்டா விட்டால் அடி கீர்த்திக்கும் சேர்த்தே விழும். இவர் கத் திக் கூப்பிட்டது அவர்கள் ஒருவருக்குமே கேட்கவில்லை. படையினரின் அந்த அடியையும் மேவி குரல் எப்படி மேலெழும்? கடைசியில் கீர்த்தி எழும்பி ஓடி அவர்களை நெருங்கி, படையினரின் இடத்தைக் காட்ட, அவர்களும் அடிக்க, அதேநேரம் சாந்தகுமாரியும் பின்புறத்தால் அடித்த படி வர, சுட்டவாறே தப்பியோடிய படையினர் விழுந்து



படிப்பகம்

padippakam



கிடந்த போராளியிடமிருந்த கீர்த்தியின் T56-2 இனையும் தூக்கிச் சென்றுவிட்டனர்.

பிறகென்ன? நமது ஆள் ஒரு மாதம் ஒறுப்பில் T56-1 வைத்திருக்கவேண்டியதாகப் போயிற்று.

மே மாதக் கடைசியில் ஒவ்வொரு பிளாட்டூன்களுக்கும் வெற்றுக் கொள்கலன்களில் இழுபொறிமூலம் நீர்நிறைத்துவிடும் திட்டம் நடைமுறைக்கு வந்தது எல்லோருக்கும் கொஞ்சம் மகிழ்ச்சியைத் தந்தது. குடிநீர் எடுப்பதற்கான அலைச்சலும் களைப்பும் சலிப்பும் நிறைந்த நீண்ட தூரத் தேடுதல் நடையின் ஒரு கட்டம் முடிவுக்கு வந்தது. ஆனால் குளிப்பதற்காக நாம் ஆற்றுக்குப் போவதைமட்டும் மாற்றீடு செய்யமுடியாமல் போய்விட்டது. பிளாட்டூன்களுக்குப் பின்னிருக்கும் குடிநீர்க் கொள்கலன்களிடம் போவதற்குக்கூடத் தேடுதல் நடவடிக்கை செய்துபோய், காவல்விட்டே நீர் அள்ள வேண்டும். படையினரின் காதுகளுக்கு இழுபொறி வரும் ஒலி கேட்காத தூரத்திலேயே அவை வைக்கப்பட்டிருந்தன. எனினும் அது பெரிய தூரமில்லை.

பள்ளமடுவிலிருந்து பெரியமடு போகும் சாலையைக் குறிப்பிட்ட தூரம் பாதுகாக்கும் பணியும் எங்களுக்கு இருந்தது. காலையில் காப்பரண் தேடுதலை அணிகள் செய்துகொண்டிருக்கும் அதே நேரத்திலேயே, எமது பிறிதொரு அணி சாலையின் இரு மருங்கையும் ஆராய்ந்தவாறே நகர்ந்துகொண்டிருக்கும். நாம் முடிக்குமிடத்திலிருந்து பெரியமடுவரை ஜெயந்தன் படையணி அந்தப் பணியைச் செய்யும். சாலையின் பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்திச் சொன்னபின்னரே, உணவு ஊர்தி வரும். உணவு ஊர்தி உணவை இறக்கிவிட்டுப் போகும் இடத்துக்கும் காவல் விடுவோம். காப்பரணிலிருந்து உணவு எடுக்க வருபவர்கள் தேடுதல் செய்தவாறே வந்துபோகவேண்டும்.



படிப்பகம்

padippakam



வேலைக்கு வருகின்ற மக்கள் எங்களுக்கு வருகின்ற உணவையே சாப்பிடுவார்கள். எங்களுடைய உணவு சிறீ லங்கா அரசு தமிழர்மீது விதித்திருந்த பொருளாதாரத் தடையின் கொடுமையை எங்களுக்கு உணர்த்திக்கொண்டி ருந்தது. ஒவ்வொருநாளும் மீனும் பூசனிக்கறியும் வரும். ஆனால் அது மிகவும் சுவையாகச் சமைக்கப்பட்டிருக்கும். மீனென்றால், ஏதோ பெரிய மீன் இல்லை. நெய்த் தோலியைவிடப் பெரிது. சூடையைவிடச் சிறிது. எங் களுக்கு அதன் பெயர் தெரியாது.

ஒருநாள் முழங்காவில், நாச்சிக்குடாப் பகுதிகளிலி ருந்து கடற்றொழிலாளர்கள் வேலைக்கு வந்திருந்தார்கள். மதிய உணவை நாம் பரிமாறினோம். தட்டிலிருந்த உணவைக் கொஞ்ச நேரம் உற்றுப்பார்த்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். பின் எங்களை நிமிர்ந்து பார்த்து,

“நாங்கள் மீன் சாப்பிடமாட்டம் பிள்ளை”

என்றார்கள். அன்று அவர்கள் ஏதும் விரதமாக இருக் கலாம் என்று நினைத்தவாறே பூசனிக்கறியோடுமட்டும் உணவைக் கொடுத்துவிட்டு, அவர்கள் சாப்பிடத்தொடங் கியதும் எமது விசாரணையைத் தொடங்கினோம்.

“ஏனய்யா, இண்டைக்கு விரதமோ”

“இல்லைப் பிள்ளை. உந்த மீனையோ நீங்கள் சாப்பிடுறனீங்கள்? ”

“ஒவ்வொருநாளும் இதைத்தான் சாப்பிடுகிறம். ஏன்?”

“இந்த மீனை நாங்கள் சமைக்கிறதில்லை. சனமும் வாங்கிறதில்லை. மற்ற மீனை எடுத்துக்கொண்டு, இதை நாங்கள் கரையில கொட்டிவிடுவம். அது தன்ரபாட்டுக் குக் கிடந்து காயும். கொஞ்ச நாளா இந்த மீனை இயக்கம்



படிப்பகம்

வாங்குது பிள்ளை. சும்மா எறியிற மீனை இயக்கம் கேட்ட உடனே பத்து ரூபாவுக்குச் சனம் குடுக்குது. ஏன் இவங்கள் இதை வாங்கிறாங்கள் எண்டு ஒருவருக்கும் தெரியாது. கோழித்தீனுக்கு வாங்கினம்போல எண்டுதான் நாங்கள் நினைச்சம். இப்பதானே விளங்குது மீன் எங்க வருகுது எண்டு."

எங்களுக்குச் சிரிப்பதா, அழுவதா என்று தெரிய வில்லை.

"மீனைக் கொட்டி, நீங்கள் கடற்கரையைக் குப்பையாக் கிறீங்கள் எண்டுதான் நாங்கள் வாங்கிச் சமைச்சுச் சாப் பிடுறம். அவ்வளவுதான்"

என்று நகைச்சுவையாக நிலைமையைச் சமாளித்து விட்டோம். அவர்கள் சொன்ன எதைப்பற்றியுமே கவலைப் படாமல், நாங்கள் அந்த மீன் கறியையே தொடர்ந்தும் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். எங்களுக்குத் தெரியும், நாங் கள் தற்போது இருக்கும்நிலையில் எமது அமைப்பால் இதற்குமேல் எதுவும் செய்யமுடியாது என்று. வருவதை மகிழ்வாக ஏற்றுக்கொள்வதற்கு ஏற்ப எமது மனதைத் தயார்ப்படுத்திக்கொண்டோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக மிகவும் சலிப்பைத் தந்த விடயம் 'தேடுதல்'தான். அங்கு நின்ற எல்லோருமே ஆளை ஆள் சந்திக்கும்போது கதைப்பதற்கு வேறு விட யங்கள் அற்று, 'கிளியறிங், கிளியறிங்' என்றே கதைத்துக் கொண்டிருந்த அந்த நாட்களில் எமக்கு மகிழ்ச்சியைத் தந்த விடயம் ஒன்றும் இருந்தது.

அங்கு நின்ற பாலை மரங்களும், விளா மரங்களும் பழுத்துச் சொரியத்தொடங்கிவிட்டிருந்தன. விளாம்பழம் பொறுக்குவதற்காகத் தேடுதல் நடவடிக்கையில் நாம்

padippakam



இறங்கிய சுவையான நாட்களெல்லாம் இதன்பின்னர் வந்துபோயின.

எங்களுக்கு இடப்புறம் பெரியமடுநோக்கிய திசையில் நின்ற ஜெயந்தன் படையணிப் பொறுப்பாளராக நின்றவர் லெப்.கேணல் சிவமோகன். சிவமோகனின் ஆட்கள் பெரியமடுவில் மக்கள் கைவிட்டுப் போன வீடுகளிலிருந்த வாழைக்குலைகளை அறுத்து, புகையடித்துப் பழுக்க வைத்து, தோள்களிலே காவி வந்து எங்களின் கொம்பனி முழுமைக்குமே தரத்தொடங்கினார்கள். வாரத்தில் இரு முறையாவது அவர்களின் வாழைப்பழம் வரும். எங்களுக்கும் அவர்களுக்குமான உறவு பலமடைந்தது. நாங்கள் மனம்விட்டு ஒருவரின் துன்பங்களை மற்றவர்கள் பகிர்ந்து கொண்டோம்.

பெரியமடுவின் குடியிருப்புப் பகுதியை அண்மித்து நின்றதால் அவர்களுக்கு நீர்த் தட்டுப்பாடு இருக்கவில்லை. கிணறுகள் தாராளமாக இருந்தன. குடிநீருக்கு நாம் பட்டுக் கொண்டிருந்த பாட்டை அறிந்துகொண்ட அவர்கள், எங்கள் பக்கம் இருந்த தங்களுடைய கடைசிப் பிளாட்டூனில் பாரிய கொள்கலன்கள் இரண்டில் கிணற்று நீரை நிறைத்து, கொதிக்கவைத்துத் தந்துகொண்டிருந்தார்கள்.

இந்த நேரத்தில் பழைய கதை ஒன்றையும் நாம் சொல்லியே ஆகவேண்டும். அப்போது சூரிய கதிர்–2 நடக்கவில்லை. படையினர் வலிகாமம் முழுவதும் நிறைந்து வழிந்தனர். அசோகாவின் கொம்பனி மண்டா னில் நிலையமைத்து நின்றது. அவர்களுக்கு அப்பால் தொண்டைமானாறுவரையும் ஜெயந்தன் படையணியின் கொம்பனி ஒன்று தாத்தா அவர்களுடன் நின்றது. இதற்கு முதல் வருடம்தான் மட்டக்களப்பிலிருந்து அவர்கள் வந் திருந்தார்கள். இடம் அவர்களுக்குப் புதிது. இங்கிருந்த நிர்வாக அலகுகள் எல்லாமே புதிது. யாரிடம் என்ன



படிப்பகம்

padippakam



உதவியைக் கேட்பது என்ற விடயங்கள் இன்னமும் அவர்களுக்குப் பழக்கப்படவில்லை.

ஒருநாள் தற்செயலாக அசோகா அந்த விடயத்தை அறிந்தார். தாத்தாவின் கொம்பனி படுப்பதற்குப் பாய்கள் போதாமல், நிலத்தில் படுப்பதையும், ஊர்தியால் இறக்கப் படும் உணவை எடுத்துக் காப்பரண்களுக்கு வழங்குவதற்குப் பைகள் இன்றிச் சிரமப்படுவதையும் அறிந்த அசோகா, தன் கொம்பனியிடமிருந்த பாய்கள், உரப்பைகள் முழுவதையும் வாங்கி, தேவைக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திருப்பிக் கொடுத்துவிட்டு, ஏனைய பாய்களையும் உரப்பைகளையும் தாத்தாவிடம் கொடுத்திருந்தார். எல்லா உறவுகளையும் மட்டக்களப்பில் விட்டுவிட்டுச் சண்டைக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த அவர்கள் எம்மவர்களின் உதவியால் நெகிழ்ந்துபோனார்கள். எங்களுக்கும் அவர்களுக்குமிடையிலான நல்லுறவு ஒன்று அப்போதே ஆரம்பமாகிவிட்டிருந்தது.

பெரியமடுவிலிருந்த பலாப்பழங்களெல்லாம் உணவுப் பகுதியினரின் ஊர்திகளில் ஏறி எங்களிடம் வந்துசேர்ந்தன. காப்பரண்கள் முழுவதும் பலாப்பழ வாசம்.

“மணத்திலேயே நாங்கள் நிக்கிற இடம் ஆமிக்காரனுக்குத் தெரியப்போகுது”

என்று சாந்தகுமாரி பம்பலடிப்பார்.

படையினரின் பதுங்கித்தாக்கும் அணிகள் பலதடவைகள் ஊடுருவியிருந்தன. அவர்களைப்போலவே நாமும் ஊடுருவியிருந்தோம். சாந்தகுமாரியின் சொந்த இடம் மன்னார் மாவட்டம். எனவே வேவுக்காகச் சிலரைக் கூட்டிக்கொண்டு சாந்தகுமாரி எமது முன்னரங்கைக் கடந்துபோனார். படையினரின் நிலைகளைத் தேடப்



படிப்பகம்

padippakam



போனவர்களைக் கடைசியில் நாம் தேடவேண்டியதா யிற்று.

'முதன் முதலாக நான் பங்குபற்றியதே மிகப் பெரிய வெற்றிச் சமரில்தான்' என்று 1990 இல் யாழ் கோட் டையை நாம் கைப்பற்றிய சண்டையைப்பற்றி மார்தட்டு கின்ற சாந்தகுமாரி படிப்பறிவைவிடப் பட்டறிவாலேயே அதிகம் சாதித்தவர்.

கோட்டை, பலாலி முன்னரங்கப் பாதுகாப்புப் பணி, ஆகாயக் கடல் வெளிச் சமர், பலவேகய-02 என்று விரிந்த கள அனுபவங்களைப் பெற்றபின், கண்ணிவெடிப் பிரிவில் இணைக்கப்பட்டார். வேவு அணியோடு இணைந்து செயற்பட்ட களங்களில் கண்ணிகளை விதைப்பதும், படையினரின் கண்ணிகளை அகற்றுவதுமாக விளையாட் டுப்போல இவரின் பணி தொடர்ந்தது.

வன்னியில் படையினரின் வெற்றி நிச்சயம் நடவடிக் கைக் காலத்திலும் கண்ணிவெடிகளோடே களங்களில் நின்றார். கண்ணிகளை விதைப்பதற்காகக் கிடங்குகளைத் தோண்டித் தோண்டியே கொப்புளங்கள் உண்டாகிக் காய்த் துப்போன கைகளில் மீண்டும் அலவாங்கைச் சுமந்தபடி களமெங்கும் உலவிய இவரை சூரியகலா-02 அதிகாரிகள் கல்லூரியில் பயில்வதற்கெனத் தெரிவுசெய்தார் விதுஷா.

அன்றோடு சாந்தகுமாரியின் கள வாழ்வு திருப்புமுனை யைச் சந்தித்தது. அவரின் திறமையை 40மி.மீ. எறிகணை செலுத்தியொன்றை வழங்கிக் கௌரவித்தார் விதுஷா.

மிகச் சிறந்த குறிவல்லுநராக விளங்கிய சாந்தகுமாரி 1997 இல் எமது கொம்பனிகளுக்கிடையே நடந்த சூட்டுப் போட்டிகளில் அதிகளவு பரிசுகளைத் தலைவர் அவர் களில் கையாலேயே பெற்றுக்கொண்டார். 1999 ஆரம்பத் தில் வடபோர்முனைக் கட்டளைப் பணியகத்தால்



படிப்பகம்

padippakam



நடாத்தப்பட்ட சூட்டுப் போட்டியிலும் சிறந்த பரிசுகளைத் தட்டிக்கொண்டார்.

சூரியகலா-02 பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளியேறியபின் பிளாட்டூன் கட்டளையதிகாரியாகப் பணியாற்றிய சாந்தகுமாரி இப்போது கொம்பனியின் கட்டளையதிகாரியாக உயர்ந்திருந்தாலும் அவருடைய எளிமையும் எல்லோரையுமே விருந்தோம்பும் உயர்ந்த குணமும் எப்போதும்போல் இப்போதும் அவரிடமிருந்தன. சவாலான வேலைகளைப் பொறுப்பெடுக்கும் துணிவு அவரிடமிருந்தது. எனவே ஒரு சிறு குழுவைக் கூட்டிக்கொண்டு படையினரின் முன்னரங்கநிலைகளைத் தேடவெனப் போய்விட்டார்.

திரும்பிப் பார்த்த திசைகளெல்லாம் தாம் வந்த திசைகள்போலவே அவர்களுக்குத் தோற்றம் காட்டின. சரியான பாதையால் திரும்பி வரமுடியாமல், பறட்டைக் காட்டிடையே தாகத்துடன் அலைந்து திரிந்து ஐந்து நாட்களின் பின் பாப்பாமோட்டை-பள்ளமடு வீதியில் அவர்கள் ஏறியது ஒரு தனிக்கதை. எமது காப்பரண்களைக் கடந்து முன்புறமாக வேவு நடவடிக்கைக்குப் போனவர்கள் திரும்பிவரும்போது எமக்குப் பின்புறமுள்ள நெடுஞ்சாலையால் வந்துசேர்ந்திருந்தனர்.

இதன்பின்னர் மன்னாரின் காடுகளறிந்த, திசைகளையறிந்த மூத்த வழிகாட்டிகள் இருவரை எமது வேவு நடவடிக்கைகளுக்கு உதவியாக மன்னார் மாவட்டத் தாக்குதலணி எமக்கு அறிமுகம் செய்துவைத்தது. அவர்கள் வந்தபின்னர், அவர்களில் ஒருவரோடு மேஜர் இளம்பிறை போய்த் தேர்ந்தெடுத்த இலக்கு, உயிலங்குளத்திலிருந்த படையினரின் சோதனைச் சாவடி.

அப்போது வடக்குக்கும் தெற்குக்குமான போக்குவரத்துப் பாதையாக உயிலங்குளமே இருந்தது. வன்னியில்



படிப்பகம்

padippakam



இருந்து புறப்படும் ஒருவர் மன்னார்போய், வவுனியா போய்த்தான் வேறெங்கும் போகலாம். மக்களைச் சோதனைசெய்து உள்ளே அனுமதிக்கும் சாவடிநோக்கி படையினரின் பதினைந்து பேர்கொண்ட தேடுதல் அணி ஒன்று அதிகாலையில் வரும். அதுவே இளம்பிறை தேர்ந் தெடுத்த இலக்கு.

கொம்பனிப் பொறுப்பாளர் தர்ஷா, பிளாட்டூன் பொறுப் பாளர் இளம்பிறை, கூடவே அமுதா, மன்னார் மாவட்டப் போராளிகளான லெப்.கேணல் தில்லை, மேஜர் ஐயன், எங்களுடைய இன்னும் சிலர் என்று ஒரு அணி போய்ப் பதுங்கிக் கிடந்தது.

5.30 மணி
5.40
5.45 ஒருவரையும் காணோம். இன்னும் சிறிது நேரத்துக்குள் மோட்டார் உந்துருளிகளில் வியாபாரிகளும், உந்துருளியில் பயணம் செய்வோரும் வரத்தொடங்கிவிடு வர். மக்கள் வந்தால், படையினரைத் தாக்கமுடியாது.

எனவே எம்மவர்களில் ஒரு பகுதியினர் சற்றுத் தள்ளிப் போய், மக்களைத் தடுத்து நிறுத்திக்கொண்டிருந்தனர். நேரமோ போய்க்கொண்டிருந்தது. படையினரின் தேடல் அணி வரவில்லை. இனி வரப்போவதில்லை என்று நினைத்து எமது அணி திரும்பிச் செல்லமுனைந்தபோது, ஒரு படைவீரரை இளம்பிறை கண்டுவிட்டார். அன்று வந்தது ஐந்து படையினர்மட்டுமே. சோதனைச் சாவடி யாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த கடைசிக் காப்பரணை யும் கடந்து ஐவரும் எமது பகுதியைநோக்கி வந்து கொண்டிருந்தார்கள். கடைசிக் காப்பரணில் நின்ற படை வீரர்கள் உறங்கினார்களா, அல்லது அன்று எவரும் நிற்கவில்லையா, இவர்கள் புதியவர்களா, எது தமது கடைசிக் காப்பரண் என்று தெரியாமல்தான் கடந்து வருகின்றார்களா என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல



படிப்பகம்

padippakam



எவருமில்லை. அமுதாவின் 40மி.மீ. எறிகணைசெலுத்தி யின் அடியோடு நாங்கள் சுடத் தொடங்கினோம்.

அந்தத் திடீர்ச் சண்டையில் இரண்டு சுடுகலன்கள், ஒரு தொலைத்தொடர்புக் கருவி, கொல்லப்பட்ட படை யினரில் இருவரின் உடல்கள் என்பவற்றை எடுத்துக் கொண்டு நாம் காடுகளுள் பாய்ந்து விட்டோம்.

போன புதிதில் இரவில் நடுக்கும் பனியும், பகலில் வறுக்கும் வெயிலுமாக முட் காடுகளைக் காட்டி மிரட்டிக்கொண்டிருந்த மன்னார், நாம் திரும்பிவந்தபோது அழகு பூத்திருந்தது.

வீதியோரமெங்கும் வண்ணவிளக்குகள் பூட்டியதுபோல் பாலைப் பழங்கள் மின்னலடித்தவாறு மரங்களில் தொங் கின. காடுகளெங்கும் விளாம்பழம் நிறைந்துகிடந்தது. பிரிய மனமின்றி 1999.06.23 அன்று நாம் கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்டோம்.

எம்மை வந்து மாற்றிவிட்டது லெப்.கேணல் தணிகைச் செல்வி தலைமையிலான யாழ். தாக்குதலணி. ஜெயந்தன் படையணி அவர்களுடனேயே நின்றுகொண்டது. மேஜர் அமுதாவின் 82மி.மீ. எறிகணை செலுத்தியை அவர் களுக்குச் சூட்டாதரவு கொடுக்கவென பெரியமடுவில் நிறுத்திவிட்டு வந்திருந்தோம்.

மன்னாரில் நின்ற தர்ஷாவின் கொம்பனி கிளிநொச்சி யில் ஒரு பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டபின், அம்பகா மம் வந்துவிட்டது. அதற்கு முன்னரேயே கொம்பனியின் மேலாளராக நின்ற தமிழ்செல்வி, மணலாற்றில் நின்ற முல்லையின் கொம்பனிக்கு மேலாளராகப் போயிருந்தார். மாங்குளத்தில் நின்ற மைதிலியின் கொம்பனியும்



படிப்பகம்

padippakam



அம்பகாமம் புறப்பட்டது. மைதிலியின் கொம்பனியில் மேஜர் கஜேந்தியின் பிளாட்டூன் மன்னார் புறப்பட்டது.

கஜேந்தியின் பிளாட்டூன் பள்ளமடுச் சந்தியை மைய மாக வைத்து பள்ளமடு-பாப்பாமோட்டை வீதி, பள்ளமடு-பெரியமடு வீதிகளை ஊடறுத்து நிலைகளை அமைத்தது.

மைதிலியின் ஏனைய பிளாட்டூன்கள் அம்பகாமத்தில் ஜமுனாவுடன் நின்ற 5.0 அணியை உள்வாங்கி, தம்மை புதிய கொம்பனியாக மீளமைத்துக்கொண்டன. இப்போது அம்பகாமத்தில் தர்ஷாவினதும், மைதிலியினதும் இரண்டு கொம்பனிகள் நிலைகொண்டன.

மணலாற்றில் நின்ற எம்மவர்கள் சும்மா இருக்க வில்லை. எமது காப்பரண்களைக்கடந்து எதிரே யுள்ள மணக்கிண்டிமலைப் படைத்தளத்தின் காப் பரண்களையும் கடந்து, படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் இரண்டு முறை உள்நுழைந்து தாக்கிவிட்டுத் திரும்பியிருந்தனர்.

அன்று பகல் கயல்விழியின் தலைமையில் எமது படையணியின் ஊடுருவித் தாக்கும் சிறப்பு அணி எமது முன்னரங்கநிலைகளைக் கடந்தது.

பகலவள், பைந்தமிழ், ஈழமங்கை, தர்சிகா, ரங்கா, அஜித்தா, ஆஷா, மணலாற்றுப் படையணியைச் சேர்ந்த அருளப்பன், இன்னுமொருவர் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரைக் கொண்ட சிறு குழுவாக அந்த அணி இருந்தது. இரவில் படையினரின் முன்னரங்கநிலையை மிகவும் விழிப்புடன் கடந்து ஒருவர் பின் ஒருவராக உள்நுழைந்தார் கள். ஏற்கனவே கயல்விழி பல தடவைகள் வேவு பார்த்த படியே இவர்கள் கடந்த பகுதியிலிருந்த காப்பரண்களில்



படிப்பகம்

padippakam



இன்றும் படையினர் இல்லை. முன்னரங்க நிலையிலிருந்து 500மீ. பின்னாலுள்ள தார்ச் சாலையால் சிலோன் தியேட்டர் படைத்தளத்துக்குப் போகலாம். அந்தச் சாலைக்குப் போவதற்கிடையில், முன்னரங்கிலிருந்து 250மீ. தூரத்தில் கொம்பனிக் கட்டளைப் பணியகம் அமைந்திருந்தது. முன்னரங்கிலிருந்து புறப்படுகின்ற ஒரு ஒற்றையடிப்பாதை கட்டளைப் பணியகத்திலிருந்து 20மீ. அருகாகப் போய், நெடுஞ்சாலையைச் சந்தித்தது. அது படையினர் தமது போக்குவரத்துக்கு என அமைத்த சிறு பாதை. அந்தப் பாதைவழியே ஒவ்வொரு அடியையும் அவதானமாக வைத்துக் கடந்தவர்கள், நெடுஞ்சாலையையும் தாண்டி அப்பாலிருந்த மரத்தொகுதியினுள் மறைந்தனர்.

அப்படியே நேராக நீண்ட தூரம் நடந்து போனவர்கள், படையினர் மண்கிண்டிமலைத் தளத்தைச் சுற்றி அமைத்திருந்த பழைய மண் அணையை அடைந்தனர். மண் அணையின் உட்புறமாக ஒரு வீதி போவது அந்தக் கும்மிருட்டிலும் தெளிவாகத் தெரிந்தது. மண் அணையின் உட்புறமாக வலதுபக்கம் குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் மின் விளக்குகள் ஒளிர்ந்துகொண்டிருந்தன. அது படையினரின் தளமா? மக்கள் குடியிருப்பா? காலையில்தான் பார்க்கமுடியும்.

கண்காணிப்பதற்குப் பொருத்தமான மரமொன்றைத் தேர்ந்தெடுத்தார்கள். எல்லோருமே மரங்களிலே ஏறிக் கொண்டனர். இவர்கள் தங்கியிருந்த மரங்கள், மண் அணையிலிருந்து படையினரின் முன்னரங்கைநோக்கிய திசையில் 100மீ. இல் இருந்தன. அவை உயரமான மரங்களாகையால் மண் அணைக்கு மறுபுறம் நீண்ட தொலைவை அவதானிக்கக் கூடியவாறு இருந்தது.

இரவில் மின் விளக்குகள் எரிந்த பகுதியில் பகலில் மக்களின் வீடுகள் தெரிந்தன. காலையிலே மக்கள் நடமாடத்தொடங்கினர். மக்களின் வீடுகளுக்குப் போவதற்



படிப்பகம்

padippakam



கிடையில் ஒரு பாடசாலைக் கட்டிடமிருந்தது. பாட சாலைக்குமிடையில் வீதியோரமாக ஒரு குளம் இருந்தது. சிறீலங்காவின் பழைய வரைபடத்தின்படி காடாக இருந்த, தமிழர்களுக்குச் சொந்தமான அந்த நிலப்பகுதியிலே இப்போது சிங்களக் குடியிருப்புகள் முளைத்திருக்கின்றன. பழைய வரைபடத்தைப் பார்த்துவிட்டு வருபவர்களுக்குத் தலை சுற்றக்கூடியளவுக்கு அந்தச் சூழல் முற்றாக வேறு தோற்றத்தில் இருந்தது. புதிய குடியிருப்புகள், புதிய வீதி கள்.

உள்நுழைந்த மறுநாள் காலையில் ஐந்து படையினர் அந்த உட்புறப் பாதையில் தேடுதல் செய்தவாறே நகர்ந்து போய், பாடசாலை வளாகத்தினுள் மறைந்துவிட்டனர். பின்னர் மாலையில் தமது படைத்தளத்துக்குத் திரும் பினார்கள். மாணவர்கள் எவருமே வரவில்லை.

இருண்டபின் ரங்காவையும், அருளப்பனையும் கூட்டிக் கொண்டு பாடசாலைக்கு கயல்விழி போனார். அடர்த்தி யான மரங்களிடையே குடைந்து இடைவெளி எடுத்து, நிழல் விழக்கூடிய பகுதியிலே திறந்த காப்பகழி ஒன்று வெட்டப்பட்டிருந்தது. பாடசாலையின் பின்புறம் காடு என்பதால், அதற்குள்ளிருந்து அவதானிக்கின்றார்கள் போலும். கயல்விழியின் அணி திரும்பிவந்தது.

ஆனால் மறுநாள் அவர்களின் தேடுதல் முறை வேறு பாடாக இருந்தது. தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடும் படையினரின் தொகை, நகர்வுமுறை, தங்கிநிற்கும் இடம் என்பன நாளுக்கொருவிதமாக மாறிக்கொண்டிருந்தன. இலக்கைத் தீர்மானிப்பது எங்களுக்கு மிகவும் கடினமாகவே இருந்தது.

நாங்கள் உள்ளேபோன ஐந்தாம் நாள் படையினர் வெளியே போய் எங்களுடைய முன்னரங்கநிலைமீது தாக்குதல் நடத்திவிட்டுத் திரும்பி வந்தனர். தாக்குதலுக்குப்



படிப்பகம்

padippakam



போய்த் திரும்பித் தமது முன்னரங்கநிலைகளுக்கு வந்த படையினரை ஊர்திகள் வந்து ஏற்றிக்கொண்டுபோவதை உயர்ந்த மரமொன்றின்மீது ஏறிநின்று பார்த்துக் கொண்டிருந்தோம். எங்களுடைய பகுதியில் சண்டை நடந்ததை வானலையூடே கேட்டுக்கொண்டுமிருந்தோம். ஒன்றும் செய்யமுடியவில்லை. அதியுச்சநிலையில் பொறு மையைக் கடைப்பிடிக்கவேண்டியவர்களாக நாமிருந்தோம்.

உள்ளே நாம் வந்து பத்து நாட்களாயிற்று. உணவு இருப்பு முடியும்கட்டத்திலிருந்தது. படையினரின் தேடுதல் அணி ஒவ்வொருநாளும் ஒவ்வொருமுறையில் வருவ தால், இலக்குக் குழம்பிக்கொண்டேயிருந்தது. ஆனால் அடித்தேயாகவேண்டும். வெளியே போய்விட்டு, மறுபடி உள்ளே வரமுடியுமா என்பது கேள்விக்குரிய விடயம். நாம் கொண்டுவந்த தண்ணீர் முதலாம்நாளே முடிந்து விட, அதன்பின் இரவுகளில் குளத்துக்குப் போய்த் தண்ணீர் எடுத்துவருவோம். உணவு முடிந்தாலுங்கூட, மேலதிகமாக ஒரு நாளைத் தண்ணீருடன் கழிக்கமுடியும். ஆனாலும் இன்றே அடிப்பது என்று முடிவெடுத்தோம்.

முதல்நாள் தேடுதல்செய்த படையினர் மண் அணை யருகே தங்கிநின்றனர். ஆனால் அவர்கள் வந்த பாதை நெடுஞ்சாலையல்ல. சாலையிலிருந்து மண் அணைப் பக்கமாக வெட்டப்பட்டிருந்த ஒரு உட்பாதை எங்களுக்கு வலதுபுறமாக 100மீ. தள்ளிச் சாலையில் ஏறுகின்றது. அவ்வழியாகவே வந்தனர்.

ஒன்பது நாட்களாகத் தொடர்ந்து அவதானித்துக் கொண்டேயிருந்ததில் படையினர் பயன்படுத்துகின்ற பாதைகளையும், தங்குமிடங்களையும் நன்கு அறிந்திருந் தோம். எனவே இன்று பி.ப. 2.00 மணியளவில் படையினர் தங்குமிடத்தைத் தாக்கிவிட்டு, வெளியேறுவதென முடி வெடுத்தோம். காட்டுக்குள் மறைந்திருந்து எல்லா ஆயத் தங்களையும் செய்துவிட்டு நகர்ந்தோம்.



படிப்பகம்

padippakam



பெரும்பாலும் இன்று அவர்கள் தங்குவதற்கு வாய்ப்பு அதிகமாயுள்ள குளத்தைநோக்கி, மண் அணைக்கு இப் புறமாகக் காப்புச் சூட்டுக்குரிய LMG யை பைந்தமிழ் நிலைப்படுத்தினார். கூடவே ஆஷாவும், தர்சிகாவும் நின் றனர். கயல்விழி தன்னோடு, ஈழமங்கை, பகலவள், அரு ளப்பன் ஆகியோரைக் கூட்டிப்போனார். கயல்விழி புறப் படவும் மழை தூறத் தொடங்கியது. மண் அணைக்கு மேலே தான் எட்டிப்பார்த்துவிட்டு இறங்கும்போது அடி யைத் தொடக்குமாறு பைந்தமிழிடம் சொல்லிவிட்டுப் போன கயல்விழி மண் அணைக்குமேலால் எட்டிப்பார்த் தார். படையினரைக் காணவில்லை. குளக்கரையில் ஒரு சவர்க்காரப் பெட்டி மட்டும் இருப்பது தெரிந்தது. மெது வாக ஊர்ந்து, 'அடிக்க வேண்டாம்' என்று LMGக்குச் சைகை காட்டியவாறு இறங்கும்போது படையினரைக் கயல்விழி கண்டுவிட்டார். சாலை ஓரிடத்தில் வளைந்த வாறு போகின்றது. அந்த வளைவில் முன்பொருமுறை தங்கிநின்ற மரத்தின் கீழ் படையினர் இன்று நிற்கின்றனர். மழை தூறிக்கொண்டிருந்ததால், மண் அணைக்குமேலே தெரிந்த கயல்விழியின் தலையை குளத்துக்கு இடப்புற முள்ள சாலைவளைவில் நின்ற படையினர் கவனிக்க வில்லை.

சறுக்கி இறங்கிய வேகத்திலேயே கயல்விழி LMG யை நகர்த்திப்போய்ப் படையினருக்குப் பக்கவாட்டாக, வளைவிலிருந்து 75மீ. தொலைவில் நிலைப்படுத்திவிட்டு, படையினர் நின்ற மரத்துக்குப் பின்புறமான மண் அணைப் பகுதியில் ஏறினார். அவருடன் பகலவளும், அருளப்பனும், ஈழமங்கையும் ஏறினார்கள்.

இவர்கள் ஏறிப் பார்க்க, அப்போதுதான் அவர்களின் தொலைத்தொடர்பாளர் wireless receiver இல் கதைத்துவிட்டு அதைக் கீழே வைத்துக்கொண்டிருந்தார். 40மி.மீ. எறி கணைகளை ஏவ, LMG முழங்க பின்புறமாகக் குண்டுகளை வீசியவாறே மண் அணையிலிருந்து குதித்து இறங்கிய



படிப்பகம்

கயல்விழி குழுவினர் சுட்டவாறு படையினரை நெருங்கிய போது இருவர் காயத்துடன் விழுந்துகிடந்தனர். அவர் களை நெருங்கிச் சுட்டுவிட்டு, கயல்விழி wireless receiver ஐ எடுத்தார். படையினரின் சுடுகலன்கள் கூடாரத்தி னுள்ளே கப்புகளில் கொழுவப்பட்டிருந்தன. பற்றைக்குள் மறைந்தபடி கிடந்த ஒரு படைவீரரையும் சுட்டபடியே சுடுகலன்களை எடுத்து, கூடாரத்துணியையும் கழற்றி மடித்து எடுத்துக்கொண்டனர்.

இப்போதும் தூறல் நிற்கவில்லை. குளத்தருகே படையி னர் ஒருவர் இங்கே நடப்பவற்றைக் கண்ட திகைப்பில் நின்றார். சவர்க்காரப் பெட்டியின் உரிமையாளர் அவராகத் தான் இருக்கவேண்டும். அவரையும் சுட்டனர்.

இதற்கிடையில் மரத்தடியில் தாக்குதல் நடந்து கொண்டிருந்தபோது மக்கள் குடியிருப்புப் பக்கத்திலிருந்து வீதிவழியே ஒரு டோசர் வந்துகொண்டிருந்தது. இங்கே நடந்தவற்றைக் கண்ட அதிர்ச்சியில் ஓட்டுநர் டோசரைக் குளத்தைநோக்கித் திருப்பியதில் அது குளத்துக்குள் இறங்கிச் சரிந்துபோய்நின்றது.

அந்தப் பகுதி முற்றாக எமது கட்டுப்பாட்டிலே இருந் தது. மூன்று சுடுகலன்களையும் ஒரு தொலைத் தொடர்புக் கருவியையும்விட, கூடாரத்துணி உட்பட வேறு சில பொருட்களையும் எடுத்துக்கொண்டு வேகமாக வெளியேறி, காட்டுத்துண்டுக்குள் வந்து சேர்ந்தோம். மிகக் குறுகிய நேரத்துக்குள்ளேயே படையினர் அந்த வீதியில் பவள் களுடன் வந்து தாக்கிக்கொண்டு நிற்கும் ஒலி எங்களுக்குக் கேட்டுக்கொண்டிருந்தது. நாம் மேலும் விலகி, ஓடிவந்து ஒரு அருவியருகே அமர்ந்தோம். எச்சரிக்கை 'விசில்' ஊதப்படும் ஒலி கேட்டது. படையினர் ஆயத்தமாகிக் கொண்டு இருக்கிறார்கள்.

padippakam



நாம் உள்ளே நிற்கின்றோம் என்று அவர்களுக்குத் தெரியுமேதவிர, எங்கே நிற்கின்றோம் என்று தெரியாத தால், தேடிக்கொண்டிருந்தனர். இரண்டு மணித்தியாலங் கள் கழித்து, காடு இருளத்தொடங்கியது. இருண்டதும் சிலோன்தியேட்டர் படைத்தளத்துக்குப் போகும் நெடுஞ் சாலையைக் கடந்து, கொம்பனியின் கட்டளைப் பணியகத் தருகே வந்து ஒரு மறைவில் அமர்ந்தோம். அந்தப் பகுதி மிகவும் பரபரப்பாக இருந்தது. படையினர் எம்மைத் தேடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் நாம் அவர்களின் கட்டளைப் பணியகத்தருகேதான் நிலையெடுத்திருந்தோம். எப்பக்கம் படையினர் வந்தாலும் தாக்குவதற்கேற்ப வளைய வடிவில் நாம் நிலைகொண்டிருக்க, நாம் வெளி யேறுவதற்கான பாதையைத் தேடுவதற்காக பகலவள், அருளப்பனுடன் கயல்விழி முன்னரங்கைநோக்கிப் போனார்.

விடிவதற்குள் வெளியே போகவேண்டும். அதன் பின்ன ரும் உள்ளே நிற்பதுபோல் பாதுகாப்பற்ற விடயம் வேறொன்றுமில்லை. நாம்வரும்போது காப்பரண்களில் படையினர் இருக்கவில்லை. ஆனால் இப்போது எமது வெளியேற்றத்தைத் தடுப்பதற்காக எல்லாவற்றிலும் படை யினர் நின்றனர்.

இரவின் ஆரம்பத்திலிருந்தே உட்புறமாக நகர்ந்து கொண்டிருந்த கயல்விழி ஒரு பாதையை இனங்கண்டார். அது கட்டளைப் பணியகத்துக்கு நேரே இருந்த காப்பரண். அதில் படையினர் விடப்பட்டிருக்கவில்லை.

காலை 4.00 மணியளவில் மிக வேகமாக அந்தக் காப்பரண்வழியே படையினரின் முன்னரங்க நிலையைக் கடந்து வெளியேறினோம்.

இது நடந்த நான்காம் நாள் மீண்டும் பயிற்சி செய்யத் தொடங்கினோம். முதல் தடவை முன்னரங்க நிலைகளை



படிப்பகம்

padippakam



வேவுபார்த்து, முன்னரங்கில் இரவுவேளைகளில் ஒரு வரும் நிற்பதில்லை என்பதாலேயே உள்ளே போய்த் தேடியழித்தோம். இனி உள்ளே போகவேண்டியதில்லை. நிச்சயமாய் முன்னரங்கில் எல்லோரும் நிற்பார்கள். எனவே இம்முறை முன்னரங்கநிலைகளை அடிக்க முடி வெடுத்தோம்.

கயல்விழியும், ரங்காவும், அருளப்பனும் வேவு நடவடிக் கைக்குப் போனார்கள். இலக்கைத் தீர்மானித்தார்கள். இவர்கள் திரட்டிய தகவல்களுக்கேற்ப எல்லோரும் பயிற்சி யில் இறங்கினோம்.

இருள் விலகி நிலம் தெளியமுன்னர் படையினரின் முன்னரங்கைக் கடந்து உள்ளே நுழைந்தோம். விடியும் பொழுதில் தேடுதல் நடவடிக்கையைச் செய்துவரும் படையினர், காப்பரண்களில் ஆட்களை விட்டுக்கொண்டி ருப்பார்கள். எனவே அந்த நேரம் பெருந்தொகைப் படை யினரைத் தாக்கலாம்.

முன்னரங்கைக் கடந்து உள்நுழைந்த நாம் உட்புறமாக முன்னரங்கைப் பார்த்துக் கிளைமோரை நிலைப்படுத்தி விட்டுக் காத்திருந்தோம்.

அதோ! படையினர் வருகின்றார்கள். முன்னால் LMGயை சூட்டுநிலையில் கொழுவியவாறு ஒருவர், அவரி லிருந்து 20மீ. இடைவெளியில் T56-2 உடன் ஒருவர், அவரிலிருந்து 10மீ. இடைவெளியில் அடுத்த T56-2 காரர். பின்னால் வேறொருவரையும் காணோம். ஏன் இன்று மூவர்மட்டும் வருகின்றார்கள்? எங்கே மற்றவர்கள்? தாமதிக்கமுடியாது. முதலில் வந்த மூவரும் கிளை மோரின் தாக்குதல் வீச்செல்லைக்குள் வந்துவிட்டார்கள். வேறு யாரும் வருவார்களா என்று காத்திருக்க முடியாது. கிளைமோரை வெடிக்கவைத்தோம். அடித்துவிட்டுப் பார்த் தால் முன்னரங்கின் இரு திசைகளாலும் படையினர்



படிப்பகம்

padippakam



பெருந்தொகையாய் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. இன்று இரு பக்கங்களாலும் தேடுதல் செய்தவாறே ஆட்களை விடுகிறார்களோ?

தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்து அதிகரிக்கும் சூழ்நிலை. LMGயையும், இரண்டு T56-2 களையும் LMG காரரதும் இன்னொரு படைவீரரதும் உடல்களையும் தூக்கித் தோளில் அடித்தவாறு ஒரே ஓட்டத்தில் படையினரின் முன்னரங்கைக் கடந்து எமது முன்னரங்கைநோக்கி ஓடத்தொடங்கினோம்.

தலைதெறிக்க ஓடினோம். பின்னால் படையினர் முன்னரங்கைப் பாய்ந்து கடந்தவாறு எம்மைச் சுட்டுச் சுட்டுத் துரத்தி வந்துகொண்டிருந்தனர். படையினரின் உடல்களைத் தோளிலே தூக்கி ஓடமுடியாமல், ஒரு கட்டத்தில் கீழே போட்டு இழுத்தவாறு ஓடத்தொடங்கினோம். ஓடிய வேகத்தில் LMG க்காரரின் உடல் மரக் கிளையொன்றினுள் சிக்கிக்கொண்டது. அவரை அவ்வளவு நேரமும் இழுத்து வந்த ரங்கா, கொப்புகளுக்குள்ளிருந்து அந்த உடலை வெளியே எடுக்க முயற்சி செய்துகொண்டிருக்க படையினர் ரங்காவை நெருங்கத்தொடங்கினர். நிலைமையை அவதானித்த கயல்விழி "விட்டு விட்டு வா" என்று கத்தியும், ரங்கா தன் முயற்சியைக் கைவிடாதிருக்க, கயல்விழி ஓடிப்போய் ரங்காவின் கையைப் பிடித்து இழுத்தவாறு ஓடத்தொடங்கினார்.

ஓட்டமென்றால் அதுதான் ஓட்டம். குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் படையினர் துரத்திவரவில்லை. மூச்சு வாங்கி எம்மை நிதானப்படுத்தியவாறு, ஒரு படைவீரரின் உடலோடு எங்களது முன்னரங்கை வந்தடைந்தோம். அப்போது நேரம் பகல் 10.00 மணியிருக்கும்.

ஆனால் யாரும் ஓய்வெடுக்கவில்லை. பட்டப் பகலில் நாம் தம்மைத் தாக்கி, சுடுகலன்களையும் படைவீரர்களின்



படிப்பகம்

padippakam



உடல்களையும் தூக்கிக்கொண்டு தப்பியோடியதைப் படையினர் கண்டுவிட்டனர். மணலாற்றுப் பகுதி முன்னரங்கில் மாலதி படையணிப் போராளிகள்தான் நிற்கின்றார்கள் என்று படையினருக்குத் தெரியும் என்று எங்களுக்குத் தெரியும்.

இன்றிரவுக்கிடையில் எமது முன்னரங்கைப் படையினர் தாக்கி உள்நுழைய முயலக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் எமது முன்னரங்கை விழிப்புநிலையில் வைத்திருந்தோம்.

எல்லோருமே அடர்ந்த காட்டை உற்று நோக்கியவாறு இருந்தோம். திடீரென்று எங்களது காப்பரண் ஒன்றை இலகு கவச எதிர்ப்பு எறிகணை (RPG 22) ஒன்று தாக்கும் ஓசையும் சுடுகலன்களின் தொடர் வெடியோசையும் கேட்கத் தொடங்க, எங்கே அடி விழுந்தாலும், ஆதரவுக்குப் போகத் தயார்நிலையில் இருந்த சிறப்பு அணி அந்தக் காப்பரணைநோக்கி மிகவேகமாகத் தாக்கியபடி முன்னேறியது.

ஒரு பதுங்கித்தாக்குதலுக்குத் தேவையான அளவுக்கும் மேலான தொகையில் வந்திருந்த படையினர் காப்பரணில் நின்றோரை ஒரு எறிகணையில் சிதைக்கமட்டும் வந்திருக்கமாட்டார்கள். உள்நுழைந்து வலம் இடமாக இருந்த காப்பரண்களுக்குப் பெரும் சேதத்தை உண்டுபண்ணுவதாயிருந்த அவர்களின் நோக்கம், ஏற்கனவே தயாராக நின்ற எமது சிறப்பு அணியின் தாக்குதல் வேகத்தால் முறியடிக்கப்பட்டது.

எமது ஊடுருவித் தாக்கும் சிறப்பு அணியின் பணி இத்தோடு முடிவுறவில்லை.

ஓயாத அலைகள்–2 சண்டையின் முடிவில், சிறப்புத் தளபதி விதுஷா அவர்களின் கட்டளைப்படி தேர்ந்த போராளிகள் சிலரைக்கொண்டு லெப்.கேணல் காவியா



படிப்பகம்

padippakam



உருவாக்கியதே இந்தச் சிறப்பு அணி. இது நேரடியாகவே விதுஷா அவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, காவியாவிடம் தொடர்பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தது.

பயிற்சி எடுப்பதைவிட பயிற்சி கொடுப்பது கடினமான பணி. ஒவ்வொரு போராளிகளையும் நல்ல பயிற்சியாளர்களாக, தேர்ந்த சூட்டாளர்களாக மாற்றுவது பயிற்சியாசிரியரின் கையிலேயே உள்ளது. அந்தத் திறமை காவியாவிடம் இயல்பிலேயே இருந்தது. ஊடுருவித் தாக்கும் சிறப்பு அணியில் இருந்த எல்லோரையும் சிறந்த போர் வீரர்களாக காவியா உருவாக்கிவிட்டிருந்தார்.

களங்கள் மிக அகன்றதால் நான்கு முனைகளிலும் எங்களது நான்கு கொம்பனிகள் தமது வலுவுக்கும் அப்பாற்பட்ட பகுதிகளை நம்பிக்கையோடு பொறுப்பெடுத்து முன்னரங்கக் காவல்நிலைகளை அமைத்துநின்றது. மன்னாரில் நிற்கும் கொம்பனிக்கு ஒரு நெருக்கடி என்றால், உதவிக்கு ஆட்களை அனுப்பமுடியாத நிலையிலே மாங்குளத்துக் கொம்பனி நிற்கும். அதுபோலவே அம்பகாம, மணலாற்றுக் கொம்பனிகளும். ஏனெனில் ஒவ்வொரு கொம்பனியும் பொறுப்பெடுத்திருந்த தூரமும் கணக்கிலடங்காதது. வேறு யாரின் உதவியையும் எதிர்பார்த்திராமல் எமக்கு நாமே உதவக்கூடியவகையில் உருவாக்கிய இந்த ஊடுருவித் தாக்கும் சிறப்பு அணி நெருக்கடிமிகுந்த இந்தக் காலகட்டத்தில் விதுஷா அவர்கள் எதிர்பார்த்தது போலவே தனது செயற்றிறன் மிக்க படையியல் பக்க பலத்தை, ஓய்வில்லாமல் களத்தில் நின்ற எங்களுடைய கொம்பனிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தது. மணலாற்றில் கயல்விழியுடன் ஒரு அணி நின்ற அதேநேரம், மன்னாரில் சுதனியுடன் இவர்களின் இன்னோர் அணி நின்று வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. குறிப்பிட்ட நாட்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட காவலரண்களைப் பொறுப்பெடுத்து அவற்றில் நின்றவர்களை இரண்டு நாட்களாவது ஓய்வெடுக்க வழிசெய்தது.



படிப்பகம்

கடைசியில் இவ்விரண்டு அணிகளுமே அம்பகாமப் பகுதியில் தொடர் வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

முத்தையன்கட்டுக் குளக்கரையிலிருந்து கிட்டத்தட்ட ஒலுமடுவரையான தூரத்துக்கு ஒட்டுசுட்டான்-மாங்குளம் வீதியைப் பார்த்தவாறு அம்பகாமக் காட்டினுள் நாம் அரணமைத்திருந்தோம். காடு எமது வீடானது. அது நெடிதுயர்ந்த காடு. காட்டுக் கொடிகள் தேர்ந்த நெசவாளர்களின் கைவண்ணத்தில் உருவான பின்னல்துணிபோல மரங்களை மூடியிருக்கும். மரங்களின் கீழே ஒன்று, ஒன்றரை அங்குல உயரத்தில் அழகிய புல் படர்ந்திருக்கும். கால் வைத்தால் மெத்து மெத்தென்றிருக்கும்.

இருந்திருந்தாற்போல் நீரோடி உலர்ந்த அருவிகள் வெள்ளை மணலோடு தோன்றும். காடுகளுள் மரங்களை முறித்து முறித்துப் போவதைவிட அருவிகளால் நடப்பது இலகுவாக இருக்கும்.

ஆரம்பத்தில் அங்கு ஜமுனாவுடன் 5.0 அணியினரே நின்றிருந்தனர். வெற்றி நிச்சயம் படை நகர்வால் மிகப் பெரிய போர் நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட நாம், பகைவரை எதிர்கொள்ள வருமாறு எல்லோரையும் கேட்டோம். போராட்டத்திலிருந்து இயல்பு வாழ்வுக்குத் திரும்பியிருந்தோரையும் மீள வருமாறு கேட்டோம். முடிந்தளவு பலத்தைத் திரட்ட முடியுமானவரை முயன்றோம் எமது அழைப்பை ஏற்று 5.0 அணியாக வந்தவர்கள், காலையில் காவலரண்களுக்கு இடையே தேடல் நடவடிக்கையைச் செய்துகொண்டிருந்தார்கள்.

padippakam



அன்று தேடுதல் அணியின் முன்னணியில் நகர்ந்து கொண்டிருந்த 2 ஆம் லெப். நிஷாந்தி படையினரின் பதுங்கித்தாக்கும் அணியினரைக் கண்டுவிட்டார். பின்னால் வந்த ஏனையவர்களுக்குச் சைகை காட்டிவிட்டு அடிக்கத் தொடங்கினார். பின்னால் வந்தவர்களும் அடிக்க, அதற் குள் கட்டளைப் பணியகத்தில் நின்ற மேஜர் சிவகுமாரி PK LMG உடன் அங்கிருந்து ஓடிவந்து அடிக்க படையினர் சுட்டுச் சுட்டுக்கொண்டே தமது பகுதியைநோக்கி ஓடி விட்டனர். சுடுகலனைத் தன்கீழே வைத்துப் படுத்தவாறு வீரச்சாவடைந்த நிஷாந்தியின் நெஞ்சில் ஐந்து ரவைகள் பாய்ந்திருந்தன. இது நடந்தது 1999.06.08 இல்.

நிஷாந்தியைப்போலவே 2 ஆம் லெப். அத்தியரசியும் எம் அவசர அழைப்பை ஏற்று வந்தவர்தான். அன்று தேடுதல் அணி அத்தியரசியின் காப்பரணருகே தன் பணியை முடித்தது. அது இளம்பிறையின் பிளாட்டூன் நிலைகொண்டிருந்த இடம்.

இவர்கள் தேடுதல் பணியை முடித்தபோது அத்தியரசி காவற்கடமையில் நின்றார். தேடல் அணியைச் சேர்ந்தவர் கள் வெவ்வேறு வேலைகளுக்கும் ஓய்வுக்குமாகத் தள்ளித் தள்ளிப் போய்விட, தனியாக நின்ற அத்தியரசி தனக்குப் பின்புறமாகப் போய்க்கொண்டிருந்த படையினரைக் கண்டு சுடத்தொடங்கினார். படையினரும் சுட ஆரம்பித்தனர். விலகிச் சென்றவர்களும் சுட்டவாறு ஓடி வந்தனர். எங்கோ வேலையாக நின்ற மேஜர் இளம்பிறைகூட சுட்டவாறு வந்துசேர்ந்து விட்டார். எல்லாப்பக்கத்தாலும் தமக்கு அடி விழத்தொடங்கியதும் படையினர் அத்தியரசி நின்ற திறந்த காப்பரணுக்கு மேலால் பாய்ந்து தமது பகுதியை நோக்கி ஓடத்தொடங்கினர்.

குறிப்பிட்ட நேரம்வரை ஒருவருமின்றித் தனியாக நின்று சண்டை பிடித்ததில் ரவைகள் முழுதும் முடிவடைந்த நிலையில், தனக்குப் பின்புறம் நடந்துகொண்டிருந்த



படிப்பகம்

சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்த அத்தியரசி, சண் டையை நிறுத்திவிட்டுப் படையினர் தன்னைநோக்கி ஓடி வரத் தொடங்க, தற்செயலாகவேனும் அவர்கள் தன்னைப் பிடித்துச் செல்லக்கூடிய வாய்ப்பைத் தவிர்ப்பதற்காகச் சயனைட்டை அருந்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

தேடுதல் அணியோடு வந்த ஒருவர் தனது சுடுகலனைக் காப்பரணருகே வைத்துவிட்டுச் சற்றுத் தள்ளிப் போயிருந் தார். அந்தச் சுடுகலனைப் படையினர் தூக்கிச் சென்று விட்டிருந்தனர்.

எப்படி விடுவது?

ஒரு ரவை வீணாவதைக்கூட அனுமதிக்க முடியாத நெருக்கடியான காலம் அது. எமது தேவைகளை எவ்வ ளவு சுருக்கமுடியுமோ, அவ்வளவு சுருக்கி, மிக எளிமை யாக வாழ்ந்துகொண்டிருந்த காலம் அது. மூன்று நேர உணவாகவுமே கஞ்சியும், சோறும், கத்தரிக்காய்க் கறியும் நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த நாட்கள் அவை. மூவ ருக்கு ஒரு பை என்ற அளவில் மெல்லிய பை ஒன்றில் வருகின்ற கஞ்சியை உணவு ஊர்தியிலிருந்து இறக்கி, காட்டுத்தடிகளை விலக்கியவாறு காப்பரண்களுக்குக் கொண்டுசெல்வதற்குள் பாதிப்பைகள் கிழிந்து கஞ்சி நிலத்தில் ஊற்றும். எஞ்சிய கஞ்சியைப் பகிர்ந்து உண் டோமே அன்றி, ஒருநாளும் மேலதிகமாக நாங்கள் கேட்டதில்லை.

எமக்குத் தரப்படுகின்ற சொற்ப அளவான சீனி முடி வடைந்தபின், பாலைப்பழப் பாணி, வீரைப்பழப்பாணியு டன் சாயத் தண்ணீர் குடித்தோமேயன்றி அதற்குமேல் எதையும் நாம் எதிர்பார்க்கவில்லை. நீண்ட தூர நடை காரணமாக, தொடர்வேலை காரணமாக, பயிற்சி காரண மாக ஏற்படும் களைப்பைப் போக்குவதற்காக எஞ்சிய

padippakam



சோற்றைக் காயவைத்து வறுத்துப் பொடியாக்கி உண்டு கொண்டிருந்தோம்.

பயிற்சி நடவடிக்கையின்போதுகூட ரவைகளை எண்ணி எண்ணிச் சுட்டுக்கொண்டிருந்தோம். எப்படி ஒரு சுடு கலனைப் படையினர் எடுத்துச்செல்ல விடுவது?

கொம்பனி மேலாளர் தர்ஷா, கொம்பனிப் பொறுப்பா ளர் பரா, பிளாட்டுன் பொறுப்பாளர் இளம்பிறை மூவரும் ஆளுக்கொரு திசையில் வேவுக்குப் புறப்பட்டனர். இவர் களுக்கு உதவியாகக் கயல்விழியும், சுதனியும் தமது அணிகளுடன் போயினர்.

எதிர் முன்னரங்கு பரபரப்பாக இருப்பது புரிந்ததால், என்ன நடக்கிறது என நிலைமை பார்க்கவும் எப்படியாவது ஒரு சுடுகலனை எடுத்துவரவுமென எம்மவர்கள் முன்ன கர்ந்தனர். படையினரின் எல்லையை வெவ்வேறு இடங் களால் போய்ப்பார்த்து வந்தனர். எதிர் முன்னரங்கின் வெளிப்புற அமைப்பு ஓரளவு புரிந்துவிட்டது.

1998.08.30 அன்று படையினரின் தடைக்கம்பிச் சுருள் அருகே நேரடியாகப் போய் நிலைமையைப் பார்த்துவரவென மேஜர் பரா புறப்பட்டார். பராவுடன் கப்டன் இன்சுரபி, தாயகி, மணிமொழி ஆகியோர் போயிருந்தனர். கிட்டத் தட்ட படையினரின் பார்வை எல்லைக்குள் நுழைந்துவிட்ட நிலையில் அவர்களை இவர்களும் இவர்களை அவர் களும் கண்டுவிட்டதால் தவிர்க்கவேமுடியாமல் நாம் சண் டையைத் தொடக்கவேண்டியதாயிற்று. எல்லோருக்கும் முன்னே போன பராவை நாம் இழக்கநேரிட்டது. இவரு டன் போராட்ட வாழ்விலும் இணைந்துகொண்ட தங்கை கப்டன் கேமா கொக்குத்தொடுவாய் சமர்க்களத்தில் 1995 இல் வீரகாவியம் ஆகியிருந்தார்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

எங்களுக்கு வாய்ப்பாயிருந்த காட்டின் இயற்கை அமைப்பு படைத்தரப்புக்கும் வாய்ப்பாய் இருந்ததால், வேவு நடவடிக்கைகளின்போது சில சிக்கல்களை எதிர் கொண்டோம்.

நல்ல பகல் வெளிச்சத்தில் மரங்களிடையே மறைந்தும் புற்களிடையே தவழ்ந்தும் படையினரின் பகுதியை நோக்கி நாங்கள் போய்க்கொண்டிருக்கும்போது, இடையில் தற்செயலாகத் தலையை நிமிர்த்திப் பார்க்க, சற்றுத் தள்ளி மரங்களிடையே மறைந்தவாறும், புற்களிடையே தவழ்ந்தவாறும் எமது பகுதியைநோக்கி எதிர் வேவு அணி யினர் போய்க்கொண்டிருப்பதைக் காணக்கூடிய வாய்ப்புக் களும் கிடைக்கும். நிலைமையைக் காவலரணுக்கு அறி வித்துவிட்டு நாம் முன்னகர்ந்துவிடுவோம்.

மிகக் கவனமாக உருமறைப்புச் செய்துகொண்டு அவ தானமாக ஒவ்வொரு அடியையும் எடுத்துவைத்து எம்மவர் கள் போக, அதுபோலப் படைத்தரப்பும் வர, ஒரு பெரிய மரத்தின் அல்லது, மண்புற்றோ, பற்றையோ ஏதோ ஒன் றின் இருபுறமும் இரு வேவு அணியினதும் முன்னணி வீரர்கள் பதுங்கி, மெல்ல எட்டிப் பார்த்து, ஒருவரை ஒருவர் கண்டு திடுக்கிட்டு, திரும்பிப் பார்க்காமலேயே எழும்பி அவர்களும் ஓட, நாமும் ஓடி, பாதை மாறி, திசை கண்டுபிடித்து, எங்கோ வேவு பார்க்கப் புறப்பட்ட நாம் வேறெங்கோ வேவு பார்த்து, எப்படியோ போன வேலையை முடித்துக்கொண்டு திரும்பிய நாட்களும் உண்டு.

மிகவும் கடினமான வேவுப் பணியுடன் நகர்ந்து கொண்டிருந்தன எமது நாட்கள். மிகவும் சிக்கல் நிறைந்த அந்த வேலை முடிவடையும்தறுவாயில், தாம் இரு ஆயுதங்களையாவது எடுத்துக்கொடுப்போம் என்கின்ற உறுதியான நம்பிக்கையில் அவர்கள் தாக்குதலைத் திட்ட மிட்டபோது அந்த நதிமூலம் (water shed) 01 புறப்பட்டது.

padippakam



பள்ளமடுச் சந்தியை மையப்படுத்தி கஜேந்தியின் பிளாட்டுன் நின்ற இடத்தில் மருந்துக்குத்தானும் ஒரு கிணறு இல்லை. இவர்களுக்கான குடிநீர் விநியோகம் மாட்டுவண்டியிலேயே நடைபெற்றது. ஒரே ஒரு பிளாட்டுனுக்காக எரிபொருளைச் செலவழித்து இழு பொறியில் நீர் நிறைக்கும் நிலையில் நாம் அன்று இல்லை.

பெரும்பாலான நாட்களில் மாட்டுவண்டி ஓட்டும் அப் பாவை ஓய்வில் விட்டுவிட்டு மாடுகளை மேய்த்துக்கட்டித் தண்ணீர் அள்ளும் பணியைக் கஜேந்தியே செய்துகொள் வார். ஒரு சாரத்தால் தலைப்பாகை கட்டி, இன்னொரு சாரத்தை நீண்ட காற்சட்டைக்கு மேலால் இடுப்பில் கட்டி, கஜேந்தி மாட்டுவண்டியில் தண்ணீர் கொண்டுவரும் அழகே தனி அழகு. வருவது அப்பாவா, கஜேந்தியா என்று சட்டென இனம் காணமுடியாது. ஓரிடத்தில் நிற்க மாட்டாத சுறுசுறுப்பு நிறைந்த, கடும் உழைப்பாளியான கஜேந்தி ஓய்வாக அமர்ந்திருப்பதைக் காண்பது அரிது.

மாங்குளத்தில் மைதிலியுடன் கஜேந்தி நின்ற நாட்களில் இருதடவைகள் படையினரை உள்நுழைந்து தாக்கியிருக் கின்றார். தேர்ந்த வேவுப் புலியான மைதிலியும் கடும் சுறுசுறுப்பு நிறைந்த கஜேந்தியும் சேர்ந்துகொண்டால் கேட்கவாவேண்டும்? ஒரு தாக்குதல் கஜேந்தி உள்நுழைந்து எடுத்த தரவுகளின்படி நடந்தது. படையினரின் முன்னரங்க நிலையொன்றின்மீது திடீர்த்தாக்குதல் செய்துவிட்டு, போன வேகத்திலே திரும்பி வந்துவிட்டனர்.

இரண்டாவது அடி வித்தியாசமானது. கஜேந்தியின் அணி 1999.04.01 அன்று தாக்குதலுக்காகப் பதுங்கிப் பதுங்கி முன்னகர்ந்தது. மூன்று பக்கங்களையும் கவனமாக அவதானித்தபடி நகர்ந்துகொண்டிருந்த நம்மவர்கள் படையினரின் பதுங்கித்தாக்கும் அணியொன்று எமது காப்பரண்களைநோக்கிப் போய்க்கொண்டிருப்பதைக்



படிப்பகம்

padippakam



கண்டுவிட்டு கஜேந்தியின் தோளைத் தொட்டனர். திட்டம் சடுதியில் மாற்றம் அடைந்தது.

படையினரின் பதுங்கித்தாக்கும் அணிக்கு விழுந்தது முதுகு அடி. அவர்கள் இதைச் சற்றும் எதிர்பார்க்க வில்லை. முன்னே இருந்த எமது அரண்களைத் தாக்கப் போனவர்கள் பின்னேயிருந்து விழுந்த அடிக்கு ஏற்ப தம்மை நிலைப்படுத்தி, எம்மைநோக்கித் தாக்குவதற்கு நாங்கள் வாய்ப்பைக் கொடுக்கவில்லை. அடியைத் தொடக்க முதலே மைதிலிக்கு கஜேந்தி விடயத்தைத் தெரியப்படுத்தியிருந்தமையால், மைதிலியின் கட்டளை யில் மேஜர் அமுதாவின் எறிகணை செலுத்தும் அணியி னர் எறிகணைகளை வீசிக்கொண்டிருந்தனர்

படையினரின் சுடுகலன்களை எடுத்துக்கொண்டு நாங்கள் எங்கள் பகுதிக்குத் திரும்பினோம். கொல்லப்பட்ட படையினருள் ஒருவர் மேஜர் தர அதிகாரி என்பதை அன்றிரவே அலைவரிசைகளை ஒற்றுக்கேட்டு அறிந்து கொண்டோம்.

மரங்கள் குறைவான நீண்ட வெளி கொண்ட, ஆனால் இடையிடையே பற்றைத் தொகுதிகளுட னிருந்த அந்தப் பகுதியில் வெயில் கொழுத்தி எரித்தது. ஆனால் கஜேந்தியில் எந்த வாட்டமும் தெரிய வில்லை. மன்னாரின் பறட்டைவெளியை, முள் மரப் பற்றைகளை ஆராயும் வேலையை அவர் தொடங்கி விட்டார்.

போர் முழக்கம்-04 படைநகர்வு நடந்தவிதம் எம்மிடம் பல கேள்விகளை எழுப்பிவிட்டிருந்தது. படை நடவடிக்கை நடந்து மூன்று மாதங்களாகின்றன. அடுத்த நகர்வை



படிப்பகம்

padippakam



வெகுவிரைவில் எதிர்பார்க்கலாம். படையினர் நகரக்கூடிய வாய்ப்புள்ள வழிகளை கஜேந்தி தேடத்தொடங்கினார்.

நீண்ட காலமாக நிர்வாக வேலைகளில் ஈடுபட்டிருந்த கப்டன் மனோ, எறிகணைச் சூட்டாதரவுக்கு வழுத்திருத்தம் சொல்லும் பயிற்சி வகுப்பை முடித்துக்கொண்டு கஜேந்தியு டன் மன்னார் வந்திருந்தார். அவரும் அன்று புறப்பட்டார்.

படையினரின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக அவர்களுக்கு மிக நெருக்கமாகப் போய்வந்த கஜேந்தி ஒரு விடயத்தைக் கவனித்தார். தமது அடுத்த நகர்வுக்காக படையினர் பாதைகளைத் தயார்ப்படுத்தி வைத்திருந்தது கண்களில் பட்டது. எம்மில் ஆட்தொகை குறைந்த காப் பரண்நோக்கி ஒரு பாதை எடுக்கப்பட்டிருந்தது. அந்தப் பாதைவழியே படையினரின் நிலைகளைநோக்கி நடந்து போன கஜேந்தி, இடையில் பாதை இரண்டாகப் பிரிந்து, ஒன்று படைநிலைகளை நோக்கிப் போக, இன்னொன்று எமது பிறிதொரு காப்பரணைநோக்கிப் போவதை அவ தானித்தார்.

இந்தப் பாதைகள் எமது முன்னரங்க நிலைகளைச் சந்திக்குமிடங்களில் எம்மால் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் அகற்றப்பட்டிருந்தன. அப்படியெனில் இன்னும் இரண்டொரு நாட்களில் படையினர் வருகை தரவுள்ளனர்.

பள்ளமடுப் பகுதியில் படையினர் இனி முன்னேறக் கூடும் என்று ஓரளவு எதிர்பார்க்கப்பட்டபோதே அம்ப காமத்தில் நின்ற மைதிலி, படையணியின் சிறப்புத் தள பதி விதுஷாவின் கட்டளைக்கு இணங்க பள்ளமடுவுக்குச் சென்று எதிர்த் தாக்குதலுக்கான முன் நடவடிக்கைகளைச் செய்துகொண்டிருந்தார்.

நீண்ட நேரமாக கஜேந்தியின் தொடர்பைக் காண வில்லை என்று மைதிலி யோசித்துக்கொண்டிருந்தபோது



படிப்பகம்

அவர் வந்துசேர்ந்துவிட்டார். அவரின் முகபாவமும் களைப்பும் மைதிலிக்கு நிறைய விடயங்களை உணர்த்தின.

"என்னக்கா?"

என்று ஆவலாகக் கேட்டார் மைதிலி.

கஜேந்தி தான் கண்டவற்றை எல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்ல, மைதிலியின் மூளை இரவிரவாகத் திட்டங்களைத் தீட்டியது.

படையினர் அகற்றிய கண்ணிவெடிகள் அகற்றியபடியே கிடக்க, அவர்களின் கவனத்தை ஈர்க்காதவகையில் புதிய கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டன. முன்னேறிய படையினர் பின்வாங்குவதற்கு எந்தப் பாதையைப் பயன்படுத்துவார்கள் என்று ஆராய்ந்த மைதிலி நீரோடியுலர்ந்த ஆற்றுப்படுகை ஒன்றை இனங்கண்டார். அங்கும், வேறு பொருத்தமான இடங்களிலும் அதிக சேதத்தைத் தரவல்ல சூழ்ச்சிப்பொறிகள் அமைக்கப்பட்டன. சாதாரண வகைக் கண்ணிவெடிகளுடன் அதிசக்திவாய்ந்த வெடிபொருட்கள் இழைகள்மூலம் இணைக்கப்பட்டன. வேலை மிக விரைவாக, அதி விரைவாக நடந்தேறியது.

எந்தக் காப்பரண்களைப் பலவீனம் எனக் கருதிப் படையினர் தமது நகர்வுப் பாதையாகத் தேர்ந்தெடுத்தார்களோ, அவை முற்றாகப் பலப்படுத்தப்பட்டன.

அம்பகாமத்தில் நின்ற இரண்டு கொம்பனிகளின் செயற்றிறனை அதிகரிப்பதில் தனது பெரும்பாலான நேரத்தைக் கழித்துக்கொண்டிருந்த விதுஷா, பள்ளமடுவுக்கு மைதிலி போன சில நாட்களின்பின் அவர்களைச் சந்திக்கவெனப் போயிருந்தார். மைதிலி, கஜேந்தியோடு முன்னரங்க நிலைகளைப் பார்வையிட்டபோது, சில இடங்களைச் சுட்டிக் காட்டிய விதுஷா அவ்வழிகளாலே படையினர் நகர

padippakam



முற்படலாம் என்பதால், அவ்விடங்களில் உடனடியாக I வடிவ அகழிகளை மேலதிகமாக அமைக்கும்படியும், கண்ணிவெடிகளை விதைப்பதில் கூடுதல் கவனம் செலுத்தும்படியும் மைதிலியிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தார்.

இதைத் தலைவரிடமும் விதுஷா சொல்லியிருந்தார். எனவே படையினர் பள்ளமடுவில் நகர்வதற்கு முதல்நாள் விதுஷாவைக் கூப்பிட்ட தலைவர், ஏற்கனவே அந்த இடத்தை அறிந்தவர் என்பதால் முறியடிப்பு நடவடிக்கைக்கு விதுஷாவைப் போகும்படி பணித்ததோடு, படையினரை எங்களுடைய அணிகளைக் கடந்து வரவிடக் கூடாது என்பதையும் சொல்லிவிட்டார்.

உடனடியாக விதுஷா, தன்னோடு நின்ற ஜமுனா, மாலதி ஆகியோரையும், எமது சிறப்பு அணியைச் சேர்ந்த சுதனியின் செக்சனையும் அழைத்துக்கொண்டு அங்கே விரைந்தார். தான் போவதற்கு முன்பே கீர்த்தியோடு ஒரு சிறு அணியை அனுப்பிவிட்டிருந்தார்.

மணலாற்றில் நின்ற கொம்பனியை அழைத்துக் கொண்டு, போர் முழக்கம்-2 நடவடிக்கைமூலம் படையினர் வலிந்து பிடித்த பனங்காமப் பகுதிக்கு வந்துசேர்ந்த தமிழ்செல்வி வந்த களை ஆறமுன்னரே காப்பரண் அமைக்கும் வேலைகளை ஆரம்பித்துவிட்டிருந்தார். மாங்குளம்-துணுக்காய் வீதிக்கு முதுகு காட்டியபடி, நட்டாங்கண்டல் பகுதியில், நவ்வி போகும் பாதையை ஊடறுத்து வீதிக்கு இடமும் வலமுமாக நிலைகொண்டிருந்த எமது கொம்பனியை ஏராளம் சிற்றாறுகளும் சில பேராறுகளும், குளங்களுமாகப் பக்கம் பக்கமாக நிற்கவிடாமல் பிரித்துவைத்திருந்தன.



படிப்பகம்

padippakam

2ᵐலெப். மாலதி படையணி

*மழை காலத்தில் தொடர்புகளை எவ்வாறு பேணிக் கொள்வது, அதற்கான வழிவகைகள் என்ன என்று பல வாறு யோசித்துக்கொண்டு கடும் வேலைசெய்துகொண்டி ருந்தது எங்கள் கொம்பனி.*

*கீர்த்தி பள்ளமடுவுக்குப் போனபோது அதிகாலை 3.30 ஆகிவிட்டிருந்தது. உடனடியாக கீர்த்தியைச் சந்தித்த மைதிலி படையினரின் திட்டத்தை விளக்கி, படையினர் உடைக்கப்போகும் பாதையொன்றி லேயே, கஜேந்தியின் பதில் பொறுப்பாளராகப் பணியாற்ற வந்துள்ள கீர்த்தி நிற்கப்போவதையும் குறிப்பிட்டு, இடங் களைப் பார்த்துவைக்கும்படி கஜேந்தியுடன் அனுப்பினார்.*

*கீர்த்திக்கு ஏற்கனவே மலேரியாக் காய்ச்சல். குளோ ரோக்குயின் வில்லைகள் முடிவடைந்திருக்கவில்லை. கீர்த் தியின் உடல்நிலையைப் புரிந்துகொண்ட கஜேந்தி, அவரை 72 ஆம் இலக்கக் காப்பரணில் கூட்டிப்போய் விட்டார். அதுவே கீர்த்தி நிற்கவேண்டிய இடம். அதிலி ருந்து இடதுபக்கம் நோக்கி இலக்கங்கள் கூடுவதையும், வலதுபுறமாகக் குறைந்துபோவதையும் விளக்கிய கஜேந்தி, சண்டை நடைபெறவில்லை என்றால், காலையில் இடங் களைச் சுற்றிக் காட்டுவதாகக் கூறிவிட்டுப் போனார்.*

*கீர்த்திக்கு வலப்பக்கம் 69 ஆம் இலக்கக் காப்பரணில் மாலதி நின்றார். அதற்கும் அப்பால் ஜமுனா நின்றார். கட்டளை நிலையத்திலே மைதிலி நின்றார். இவர்களெல் லோருக்குமே வேண்டிய ஆதரவுகளை வழங்குவதற்குப் போதுமான தூரங்களில் எமது படையணியின் சிறப்புத் தளபதி விதுஷா, வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், பின்னாட்களில் லெப்.சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் சிறப்புத் தளபதியான லெப்.கேணல் சேகர் ஆகியோர் விடிவதற்கிடையிலேயே தனித்தனியாகத்*



படிப்பகம்

padippakam



தமக்குரிய கட்டளை நிலையங்களை உருவாக்கி, தொலைத்தொடர்பு அமைப்புகளை ஒழுங்குசெய்துவிட்டுத் தயாராக இருந்தனர். ஒருவருமே உறங்கவில்லை.

இரவிலிருந்தே பிளாட்டூனின் இந்தத் தொங்கலுக்கும் அந்தத் தொங்கலுக்குமாக மாறிமாறி நடந்து காப்பரண் களில் நின்ற போராளிகளிடம் அவ்வவ் இடத்து நிலைமை களைக் கேட்டறிந்துகொண்டிருந்த கஜேந்தி, கீர்த்தியைக் கூட்டிவந்து, அவருக்குரிய இடத்தில் விட்டபின்னரும் தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தார். காலை 5.30 அளவில் அந்த ஒன்றன்பின் ஒன்றான சூட்டு ஓசை எல் லோர் காதுகளிலுமே விழுந்தபோது இடப்புறமாயிருந்த 93 ஆம் இலக்கக் காப்பரணிலே கஜேந்தி நின்றார்.

கீர்த்தியின் காப்பரண் பகுதிக்கு முன்னே எழுந்த ஓசை கள் சற்று வேறுபாடாக இருக்கவே எல்லோரும் தயார் நிலைக்கு வந்தார்கள். கீர்த்தியோடு கதைத்துக்கொண்டி ருந்த செக்சன் கட்டளையதிகாரி நந்தா எறிகணைச் சூட்டாதரவை ஒழுங்குபடுத்தும்படி சொல்லிவிட்டு, தனது நிலைக்கு ஓடிப்போனார். மைதிலியின் உதவியுடன் ஏறிகணை ஏவுதளத்தின் தொடர்பெடுத்து தனது காப்பர ணுக்கு முன்னே 100மீ. இல் இலக்கெடுத்து நிலைப்படுத் தினார். தேவையானபோது ஆதரவுச் சூடுகளை கேட்பதா கச் சொல்லிவிட்டு முன்னே அவதானித்துக்கொண்டிருந்த போது, எல்லோரின் காதுகளிலும் விழுந்த அந்த ஒற்றைச் சூட்டுச் சத்தம் நந்தாவின் நிலையிலிருந்து கேட்கத் தொடங்கியது. அதற்கு முதலே சூழ்ச்சிப்பொறி வெடித்த சத்தம் பெரிதாகக் கேட்டது.

கீர்த்தியின் காப்பரணுக்கும், வலப்புறமுள்ள அடுத்த காப்பரணுக்கும் இடைநடுவே சண்டைக்கென வெட்டப் பட்டிருந்த திறந்த அகழியிலே நந்தா நின்றார். முன்னே மிக நெருக்கமான நகர்வு ஒலிகள் கேட்டதால், பற்றையை நோக்கி ஒற்றை ஒற்றையாகச் சுட்டுக்கொண்டிருந்தவர்கள்,



படிப்பகம்

padippakam



படையினரைக் கண்டதும் 'வந்துவிட்டார்கள்' என்று அறிவித்துவிட்டுத் தம்மிடமிருந்த அனைத்துச் சுடுகலன்களையும் இயக்கினர். சண்டை ஆரம்பமாகிவிட்டது.

கட்டளை அதிகாரிகள் எல்லோரது குரல்களும் சண்டைக்குரிய அதிர்வெண் அலைவரிசையில் ஒலிக்கத் தொடங்கின. திறந்த காப்பரணில் நின்ற மூவரையும் சுட்டுத்தள்ளியவாறு போர்முழக்கம்-05 நடவடிக்கைப் படையினர் உட்புகுந்தனர். படையினர் வந்த பாதை ஏற்கனவே விதுஷாவால் ஊகிக்கப்பட்டதும்,பின்னர் கஜேந்தியால் இனங்காணப்பட்டதுமான பாதை. அவசரமாக அதற்கு நேரே வெட்டிய I வடிவ அகழியிலேயே கப்டன் நந்தா முதலானோர் நின்றிருந்தனர். சண்டை கீர்த்திக்கு வலப்புறமாக நடந்தது. கீர்த்தியின் காப்பரணில் நின்றவர்கள் முன்புறமாகவும் பக்கவாட்டாகவும் சுட்டுக்கொண்டிருந்தனர். கீர்த்தியின் வலப்புறமுள்ள 71 ஆம், 70 ஆம் இலக்க நிலைகளில் படையினர். 69 இல் மாலதியோடு நின்றோர் தம்மைக் கடந்து படையினரைப் போகவிடாமல் முன்புறமாகவும் தமக்கு இடப்புறமாகவும் சுட்டுக்கொண்டேயிருந்தனர்.

ஏற்கனவே கீர்த்தி குறிப்பிட்ட இலக்குநோக்கித் திரும்பி நின்ற அனைத்து எறிகணை செலுத்திகளும் முழங்கத் தொடங்கிவிட்டிருந்தன.

கீர்த்திக்குப் பக்கத்தே சண்டை நடந்துகொண்டிருப்பதை அறிந்துகொண்ட கஜேந்தி, தான் அவ்விடத்துக்குப் போவதாக மைதிலிக்கு அறிவித்துவிட்டு, தர்சிகாவின் LMG யையும் பைந்தமிழையும் கூட்டிக்கொண்டு கீர்த்தியை நோக்கிச் சற்றுப் பின்புறத்தாலே ஓடி அந்த நிலைக்கு நேர்பின்னாக வந்து திரும்பமுனைய, பக்கவாட்டாக 15மீ. தூரத்திலிருந்த படையினரின் எதிர்ப்பைச் சந்தித்தனர். அந்தக் கணத்திலே தர்சிகாவின் LMG படையினரை நோக்கிப் பொழியத்தொடங்கியது. எப்போதுமே



படிப்பகம்

padippakam



இடைப்பட்டியிலே குண்டுகளைக் கொழுவும் பழக்க முடைய கஜேந்தி இரண்டு குண்டுகளைக் கழற்றியெறிந் தார். படையினரைத் தாக்கியவாறே பின்னகர்ந்து மேலும் வலப்புறமாகப் போய் மாலதிக்கு அடுத்துள்ள நிலையை அடைந்த கஜேந்தி காவலரண் பகுதியாலேயே திரும்பி மாலதியின் நிலையை வந்தடைந்து நிலைமையை அவதானித்தார்.

70, 71 இலும் அதன் பின்னாலுள்ள கிட்டத்தட்ட 100மீ. தூரம்வரையும் படையினர் நிற்கின்றனர். முதல் வேலையாகப் படையினரின் போக்குவரத்துப் பாதையை மூடவேண்டும். படையினரைநோக்கித் தாக்கியவாறே காவலரண் பாதையால் 70 ஐ நோக்கி நகரத்தொடங் கினார் கஜேந்தி.

எறிகணைச் சூட்டாதரவுக்கு வழுத்திருத்தம் சொல்வதற் காகப் பதுங்கிச் சூட்டாளர்களான ராதிகாவையும், சிந்து வையும் கூட்டிக்கொண்டு படையினர் ஊடுருவிய நிலை களுக்கு இடப்புற நிலையொன்றில் நின்ற மனோ விரைந் தார். அவர் கீர்த்தியை நெருங்கமுன்பே பின்புறம் நின்ற படையினர் அடிக்கத்தொடங்கினர். படையினரின் சரமாரி யான சூடுகளுக்கிடையில் ஒரே ஓட்டத்தில் வந்து கீர்த்தி யின் காப்பரணுக்குள் பாய்ந்தனர். சிந்துவுக்கும் ராதிகாவுக் கும் காயங்கள் ஏற்பட்டிருந்தன. காயப்பட்டு விழுந்த சிந்து இழுத்து இழுத்து வந்துசேர்வதற்கிடையில் படை யினர் இடைவிடாது சுட்டுக்கொண்டேயிருந்தனர்.

படையினரால் வலப்புறம் மாலதியையும் இடப்புறம் கீர்த்தியையும் தாண்டி நகரமுடியவில்லை. கீர்த்தியின் காப்பரணின் பலம் அதிகரிப்பதை அவதானித்த படை யினர் அந்தக் காப்பரணை அழிப்பதில் முனைந்தனர்.

பின்புறமாக ஒரு படைவீரர் குண்டுகளுடன் ஊர்ந்து பற்றை மறைவில் வந்துகொண்டிருந்ததைக் கண்ட கீர்த்தி,



படிப்பகம்

padippakam



இந்த இலக்கைக் காட்டிச் சுடும்படி ஆதிரைக்குக் கட்டளை யிட்டார். அந்தச் சூட்டோடு பின்புற நகர்வு கட்டுப்படுத் தப்பட்டது. புதிய போராளியான ஆதிரை சண்டைக்குள் நின்றே சண்டையைப் பழகிக்கொண்டிருந்தார்.

இதற்கிடையில் சபேசன் தலைமையில் புலனாய்வுத் துறைத் தாக்குதல் அணியொன்றை மைதிலி எமக்கு உதவிக்கு அனுப்பிவிட்டிருந்தார். அவர்கள் வேகமாக ஓடிவந்து கீர்த்தியின் காப்பரணுக்குள் குதித்தார்கள். அவர் களுக்கு நிலைமையை விளக்கிய கீர்த்தி அவர்கள் அடித் துப்பிடிக்கவேண்டிய திசையைக் காட்டினார். இறங்கி அடிப்பதற்காகக் காப்பரணுக்கு வெளியே முதலில் சபே சன் ஏறினார். இரண்டாவது ஆள் ஏறிக்கொண்டிருக்கும் போது படைத்தரப்புப் பதுங்கிச் சூட்டாளாரின் சூடு சபே சனின் நெஞ்சில் பாய, சரிந்து விழுந்த சபேசனை உள்ளே இழுத்தெடுத்துக் கட்டுப்போட்டார்கள். ஆனால் அவரின் உயிர் பிரிந்துவிட்டது.

முன்புறம் நின்ற படையினர் தம்மை இடது பக்கமாகத் தாக்குவதற்காக நகர்ந்துகொண்டிருப்பதை அவதானித்த னர் எம்மவர்கள். அதிகாலையில் வந்த அவசரத்திலும் கூட, முன்புறம் எங்கெங்கே கிளைமோர்கள் வைக்கப்பட்டி ருக்கின்றன என்பதைக் கீர்த்தி கேட்டுவைத்திருந்தார். காப்பரணிலிருந்து 50மீ. தூரத்திலுள்ள மரத்தில் பொருத் தப்பட்டிருந்த கிளைமோரின் வீச்செல்லைக்குள் படையினர் நகரும்வரை காத்திருந்தவர்கள், அவர்கள் அந்த மரத்தை நெருங்கியதும் கிளைமோரை வெடிக்கவைத்தார்கள்.

அதுவரை நேரமும் இந்தக் காப்பரணின் பின்வாசலில் ஒரு வெற்றுக் கொள்கலன் இருந்து வாயிலை மறைத்துக் கொண்டிருந்ததால் சுடமுடியாதிருந்த பதுங்கிச் சூட்டா ளன், எம்மவர்கள் வெளியே தலைகாட்டினால் எல் லோரையும் சுட்டபோதும் சிக்கலை உடனடியாக நீக்கியே ஆகவேண்டும். நந்தா நின்ற திறந்த காப்பரணுக்கும்



படிப்பகம்

padippakam



தமக்குமிடையே இருந்த மரத்தடியைநோக்கிப் பக்கவாட்டுச் சூட்டுத் துவாரங்களுடேயும் முன்பக்கத்தாலும் பொழிந்து தள்ளினார்கள். அந்த அடியோடு பதுங்கிச் சூடு நின்று விட்டது.

வந்திருந்த புலனாய்வுத்துறை அணியைக் கூட்டிப்போய் இடங்களைப் பிடிக்குமாறு மனோவை மைதிலி பணித்தார். தனக்குத் தேவையான எறிகணைச் சூட்டாதரவைக் கேட்டுப் பெற்றவாறே நகரமுற்பட்டார் மனோ. ஆனால் படையினரின் எதிர்ப்போ சொல்லும் தரமற்றதாயிருந்தது. ஒரு அடிதானும் நகரமுடியாதவாறு பின்னல் சூடுகளைப் படையினர் வழங்கிக்கொண்டிருந்தனர்.

அமெரிக்காவில் தனது படையியல் மேற்படிப்பை முடித்துக்கொண்டு அப்போதுதான் நாடு திரும்பியிருந்த மேஜர் ஜெனரல் வசந்த பெரேரோ போட்ட திட்டம் எமது முன்னரங்கைக் கடந்து 100மீ. க்கு மேல் போக முடியாமல் திணறிக்கொண்டிருந்தது.

படைநகர்வுப்பாதையின் வலப்புறம் வந்துசேர்ந்திருந்த கஜேந்தி காவலரண் பகுதியாலேயே தாக்கியபடி லெப். வஞ்சிமயில், கப்டன் மனைமதியின் PK LMG அடியுடன் நகரத் தொடங்கினார். பைந்தமிழின் LMG பொழிந்தபடி முன்னே போய்க்கொண்டிருந்தது. திடீரென அதற்கு இயங்குநிலைத் தடையேற்பட, வஞ்சிமயிலின் PK LMG முன்னகர்ந்தது. கஜேந்தியின் நகர்வுக்கு ஏற்ப எறிகணைச் சூட்டாதரவை மாலதி ஒருங்கிணைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். எமது காப்பரண்களை ஊடறுத்துப் போன நீரோடியுலர்ந்த அருவியின் மண்பிட்டிக்கு அப்புறம் நின்ற படையினரின் அடியில் கஜேந்தி வீரச்சாவடைய, வஞ்சிமயில் காயமடைய, எஞ்சி நின்ற மதியரசி எல்லோரையும் இழுத்துக்கொண்டு திரும்பிவந்தார்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

நகர முயற்சிசெய்து கொண்டிருந்த மனோவுடன் அருள் நங்கையின் செக்சன் வந்துசேர்ந்துகொள்ள, மாலா, கீர்த்தி, ஆதிரையும் இணைந்து தாக்கியபடி முன்னேறி னர். எறிகணைகளுக்கு இலக்குச் சொன்னபடி முன்னே நகர்ந்துகொண்டிருந்த மனோவைப் படையினரின் LMG அடி விழுத்தியது. ஏனையவர்களைக் கீர்த்தி ஒழுங்கு படுத்தி மறுபடியும் முன்னேறுவதற்குத் தயாராகினார்.

நிலைமையைப் புரிந்துகொண்ட மைதிலி, தன்னுடன் நின்ற தமிழ்முரசுவின் PK LMG ஐ கீர்த்தியின் இடத்துக்கு அனுப்பினார். அச்சுதா, இசைநிலாவைக் கூட்டிப்போன தமிழ்முரசு படையினரைநோக்கித் தனது அடியைத் தொடக்கினார்.

தனது கட்டளைப் பணியகத்தில் நின்ற மைதிலி, விதுஷாவிடமும் கேணல் தீபனிடமும் தன்னைச் சண்டை நடக்குமிடத்துக்குப் போகவிடுமாறு பலதடவை கேட்டுக் கொண்டிருந்தார். இவரைக் கட்டளைகள் கொடுக்கும்படி யும், சண்டையை கஜேந்தி செய்வார் என்றுமே பதிலளித் துக் கொண்டிருந்த கட்டளையதிகாரிகள் இருவருமே சண்டையின் போக்கைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

சன்னார்குளப் பக்கம் சண்டை முடிந்தபின்னும், இங்கே அது தொடர்ந்துகொண்டிருப்பதால் மைதிலியை நேரடி யாகச் சண்டையை நடத்தும்படி கேணல் தீபன் பணித்தார்.

தயார்நிலையில் கட்டளைப் பீடத்தில் நின்ற சுதனியின் அணியையும் கூட்டிப்போகும்படி விதுஷா கட்டளையிட் டார். அவர்களையும், யாழிசையின் RPGயையும் அழைத் துக்கொண்டு, கீர்த்தி நிற்குமிடத்துக்கு விரைந்தார் மைதிலி.

கீர்த்தி, மைதிலியின் நேரடி வழிநடத்தலில் எமது படையணி மிகக் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் மிகமிகக் கடுமையாகத் தாக்கியபடி முன்னேற, சிறப்புத்

padippakam



தளபதி விதுஷா எங்களுக்கான ஆதரவுச் சூடுகளை ஒருங் கிணைத்துக் கொடுத்துக்கொண்டிருக்க, எம்மவர்களின் அடியின் வீச்சுத் தாங்காமல் படையினர் சுடுகலன்களைக் கூடக் கைவிட்டுத் தமது பகுதியைநோக்கிப் பின்னகர, எமது படையணி இழக்கப்பட்ட பகுதிகளை மீளக் கைப் பற்றிச் சண்டையை மாலையில் முடிவுக்குக் கொண்டுவந்த துடன், இராணுவம் போர்முழக்கம் நடவடிக்கையை முழுமையாகக் கைவிட வழிகோலியது.

காயமடைந்த படையினரை நீரோடியுலர்ந்த அருவி யால் இழுத்துச் சென்றவர்கள் எங்களது சூழ்ச்சிப் பொறி களிலே தமது கால்களையும் உயிர்களையும் இழந்தவாறு படுதோல்வியுடன் பின்னகர்ந்த வழிகளெங்கும் படையின ரின் கால்கள், காலணிகள், சிதறிப் பறந்து மரங்களில் கொழுவிக்கிடந்த உடைகள், உடலின் பாகங்கள், இரத் தம்... இரத்தம்...

அவலத்தைத் தந்தவர்களுக்கே அதைத் திருப்பிக் கொடு என்றார் எங்கள் தலைவர். கொடுத்தோம்.

கப்டன் மனோவைச் சுட்ட LMG, சபேசனைச் சுட்ட பதுங்கிச் சுடுகலன், மேஜர் கஜேந்தியைச் சுட்ட PK LMG உட்பட பல படைக்கலன்கள், சிதறிய உடல்கள் என எல்லாவற்றையும் அகற்றினோம். புயலடித்த பூமியின் அமைதியோடு அந்தப் பகுதி உறைந்துகிடந்தது.

கஜேந்தி இப்போது எங்களோடு இல்லை. வேவு அணி யின் பொறுப்பாளரான மேஜர் அரசி பிளாட்டூன் பொறுப்பை ஏற்றார். கீர்த்தி அங்கேயே நின்றுகொண்டார். காப்பரண்களை மீளமைத்து, மறைப்பு வேலிகளைச் சீராகக் கட்டி, இனியொரு நகர்வு வந்தாலும் முறியடிப் பதற்குத் தயாராக மைதிலி நின்றார்.



படிப்பகம்

2ᵐலெப். மாலதி படையணி

அம்பகாமப் பகுதி பரபரப்பாகவே இருந்தது. படையினர் நகர்வொன்றைச் செய்ய முற்படுவதற்கான அறிகுறிகள் தெரிந்தன. அம்பகாமத்திலேயே நின்ற சிறப்புத் தளபதி விதுஷா அவர்கள் எமது அணிகளுக்கான பயிற்சி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியிருந்தார். எமது படையணியின் போர்ப் பயிற்சி ஆசிரியர்களுக்குப் பொறுப்பாக இருந்த லெப்.கேணல் காவியா தனது ஆசிரியர் அணியோடு களமிறங்கியிருந்தார். முன்னரங்கின் அருகில் குறிப்பிட்ட சில பயிற்சிகள் விதுஷாவின் மேற்பார்வையில் சுகி, புரட்சிகா, சீத்தா, செய்மதி, வர்ணா, அங்கயற்கண்ணி, பிருதுவி, காவியா ஆகியோராலும், அப்பகுதியில் வேறொரு இடத்தில் கட்டளைத் தளபதி தீபன் அவர்களின் மேற்பார்வையில் வேறு பயிற்சிகளும் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன.

ஒரு சண்டை நடந்தால் பின்னணி வேலைக்குப் பாதைகள் மிக முக்கியம். பாதை எடுக்கும் வேலை உட்பட எல்லா வேலைகளையுமே கொம்பனிப் பொறுப்பாளர்களை அடிக்கடி கூப்பிட்டுக் கதைப்பதும், தானே நேரடியாகப் பயிற்சிகளைக் கவனிப்பதுமாக விதுஷா அவர்கள் வேகப்படுத்திக்கொண்டிருந்தார். அம்பகாமப் பகுதியில் நின்ற யாருமே ஓய்வில்லாமல் உழைத்துக்கொண்டிருந்தோம்.

அன்று காப்பரண்களுக்கிடையேயான தேடுதல் நடவடிக்கையை முடித்துக்கொண்டு, பின் பாதைகளை எடுக்கும் வேலைகளுக்காகப் பெரும்பாலானவர்கள் பின்னணிக்கு வந்துவிட்டிருந்தார்கள். 100மீ. தூரத்திலும் 1000மீ. தூரத்திலுமாக அவரவர் தத்தம் வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர். காவலரண்கள் ஒவ்வொன்றும் மிக நீண்ட இடைவெளிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தன. சில காப்பரண்களில் காவற்கடமையில் ஒருவர் இருந்தார். சில காப்பரண்களில் ஒருவருமே இல்லை. கண்காணிப்பதற்கும் போதாத கணிசமானளவு தூர

padippakam



இடைவெளிகளிலேயே ஓரிருவர் நிறுத்தப்பட்டிருந்தனர். ஏனைய எல்லோரும் வேலைகளுடன்.

நேரம் 10.00 மணியைக் கடந்துவிட்டிருந்தது. பின்னணியில் காலை உணவை வேலை நடக்குமிடங்களில் இறக்கிவிட்டு உணவு ஊர்தி போய்விட்டிருந்தது. சிலர் சாப்பிட்டிருந்தார்கள். பலர் சற்று வேலையை முடித்துவிட்டுச் சாப்பிடலாம் என்றிருந்தார்கள். மரங்களை நாம் வெட்டிக் கொண்டிருந்த 'டொக், டொக்' ஒலியை மீறிக் கேட்ட வேறொரு ஒலி எம் கவனத்தைத் திருப்பியது. படையினரின் எறிகணைகள் காற்றைக் கிழித்தபடி வரும் கூவல் ஒலி அது. இது வழமையான விடயம்தானே. எல்லோரும் மரங்களிடையே காப்பெடுத்துக்கொண்டோம். ஆனால் பின்னணியில் மழைபோல அடர்த்தியாக விழுந்த எறிகணைகளும் முன்பகுதியில் எழுந்த சூட்டு ஒலிகளும் என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்று விளக்கியது.

காட்டுக்குள் 15கி.மீ. நீளமான பகுதியில் நாங்கள் நிலைகொண்டிருந்தோம். எங்களின் சக்திக்கு அப்பாற்பட்ட தூரம் அது. மணலாற்றிலிருந்து மன்னார்வரையுள்ள படையினரின் முன்னரங்க நிலைகளுக்கேற்ப நாமும் எமது முன்னரங்கை அகட்டவேண்டியிருந்ததால் எமது மிகக் குறைந்த ஆட்பலத்துக்கு ஏற்ப காப்பரண்களுக்கிடையிலான இடைவெளி நினைத்துப்பார்க்க முடியாதளவு தூரம் கொண்டதாக இருந்தது. கத்தினாலும் கேட்காத தொலைவிலேயே அடுத்த காப்பரண் இருந்தது. வழமையாக ஒரு காப்பரணில் இருந்து மற்றைய காப்பரணுக்குப் போவதாயிருந்தால் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சுடுகலன்களைத் தயார்நிலையில் வைத்தபடிதான் போய்வருவோம். குடிதண்ணீர், உணவு எடுக்கப்போகும்போதும், காப்பரண்களுக்கு அவற்றை வழங்கப்போகும்போதும் இதே முறையையே கடைப்பிடித்தோம்.



படிப்பகம்

10-15மீ. தூரத்துக்குள் ஒருவர் வந்தால்தான் காட்டுக் குள் காணலாம். அந்த அ ர் காட்டிடையே கற்பனைக்கு எட்டாத, சொன்னால் யாருமே நம்பமுடியாத தூர இடை வெளிகளில் அமைந்திருந்த காப்பரண்கள், கண்காணிப்பு அரண்களாகத்தான் செயற்பட்டுக்கொண்டிருந்தன.

வேலைக்குப் போவதென்றால், அங்கொன்றும் இங் கொன்றுமாகச் சில கிலோமீற்றர்களுக்கொரு காப்பரணில் ஆட்களை நிறுத்திவிட்டு, எல்லோருமே புறப்பட்டுவிடு வோம். அன்று அப்படித்தான் நடந்தது. ஆனால் நாம் வேலைகளுக்காக மிக நீண்ட தொலைவு பின்னகர்ந்திருந் தோம்.

சத்தம் கேட்டதுமே நாங்கள் அவரவர் காப்பரண்களை நோக்கி ஓடத்தொடங்கினோம். ஆனால் எங்களுடைய இடங்களை அடைவதற்கிடையிலே படையினரைச் சந் திக்கநேரிட்டதால், பின்பகுதியிலே சண்டை ஆரம்ப மானது.

அன்று பயிற்சி ஆசிரியர் சுகி கண்ணிவெடி அணி யைச் சேர்ந்த நாலைந்து பேருடன் எமது முன்னரங்கின் முன்புறமாகக் கண்ணிகளை விதைத்துக்கொண்டிருந்தார். பின்னணியிலும், முன்னரங்கில் ஆட்கள் நின்ற காப் பரண்களிலும் சண்டை தொடங்கியபோது, சுகி முன்னரங் குக்கும் வெளியே நின்றார். நிலைமையைப் புரிந்து கொண்ட சுகி காவலரண்பகுதிக்கு விரைந்தார். ஆனால் அங்கு சண்டைசெய்ய ஆட்கள் இல்லை. தன்னோடு நின்ற நாலைந்து பேரோடு இறங்கிய சுகி தன்னைநோக்கி வரும் படையினரைச் சுடத்தொடங்கினார்.

முத்தையன்கட்டுத் திசையில் நின்ற மேஜர் இளம்பிறை அங்கிருந்து வெளிப்புறம்நோக்கிக் காப்பரண் பகுதியால் அடித்துக்கொண்டு நகர்ந்தார்.

padippakam



முன்னரங்கில் நின்ற கப்டன் நிலாமதியின் PK LMG இனை அவரின் உதவியாளர் 2 ஆம் லெப்.மலர்மகள் இயக்கத்தொடங்கினார். நிலாமதி தன் T56-2 ஆல் அடித்துக்கொண்டிருந்தார். இவர்களது காப்பரண் பழைய காட்டுப் பாதையொன்றுக்குக் குறுக்கே அமைந்திருந்தது. பாதை வழியே பெருந்தொகையாக வந்துகொண்டிருந்த படையினரைத் தனித்துநின்ற இவர்கள் இருவரும் ரவைகள் முடியும்வரை, தமது உயிர் பிரியும்வரை தாக்கிக்கொண்டே இருந்தார்கள்.

வேறொரு காப்பரணில் தனித்துநின்ற கப்டன் ராஜினியும் வீரவேங்கை கீதப்பிரியாவும் தமது ரவைகள் முடியும் வரை படையினரைச் சுட்டுவிட்டு, பெருந்தொகையாக வந்த அவர்கள் இவர்களைச் சூழத்தொடங்கியதும், கைக் குண்டுகளை வெடிக்கவைத்துத் தம்மை அழித்துக்கொண் டார்கள்.

இப்போது படையினருக்கு முன்பக்கம் எதிர்ப்பில்லை. அவர்கள் காட்டுக்குள் கணிசமானளவு தூரம் முன்னேறி விட்டிருந்தனர். எதுவரை படையினர் நிற்கின்றனர் என்று தெரியாதளவுக்கு நாங்கள் காப்பரண்களைநோக்கிப் போக முனைந்த திசைகளிலெல்லாம் படையினர் நின்றதால், கண்ட இடங்களிலும் சண்டை நடந்தது.

பின்னரங்கைநோக்கிப் படையினரால் நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல், காட்டு மரங்களை முறித்துத் தள்ளிக்கொண்டிருந்தது. வேலை செய்துகொண்டிருந்தவர் களில் சிலர் அந்த இடங்களிலே காயமடைந்திருந்தனர். சிலர் வீரச்சாவடைந்திருந்தனர்.

சிறப்புத் தளபதி விதுஷா அவர்களின் கட்டளைப் பணியகத் தொலைத்தொடர்புக் கம்பிகள் முறிந்துவிழுந் தன. உடனடியாகப் பின்னணித் தளமொன்றில் நின்றிருந்த தொலைத்தொடர்புப் பொறுப்பாளர் பிரணவா ஒரு



படிப்பகம்

தொலைத்தொடர்புக் கம்பித்தொகுதியையும், படையியல் உபகரணக் களஞ்சியப் பகுதியைச் சேர்ந்த தீந்தமிழ் இரண்டு LMG களையும் எடுத்துக்கொண்டு மிதிவண்டி யொன்றிலேறி அம்பகாமத்தைநோக்கி விரைந்தனர்.

அது பொருளாதார நெருக்கடியின் உச்சத்தில் எமது அமைப்பு இருந்த நேரம். ஊர்திகள் எங்களிடம் போது மானளவு இல்லை. இருக்கின்ற ஊர்திகளுக்குப் போது மான எரிபொருள் இல்லை. ஊர்தியொன்று பயணம் செய்வதாயின், அதனாலான உச்சப்பயன்பாடு பெற்றுக் கொள்ளப்படுகின்றதா என்று கணக்குப் பார்த்தே எரிபொருளைப் பயன்படுத்திக்கொண்டிருந்தோம். எங்களுடைய பெரும்பாலான பின்னணி வேலைகள் மிதி வண்டிகளிலேயே நடைபெறுவது வழமை. ஏறத்தாழ 50கி.மீ. மிதிவண்டியோட்டத்தின்பின் தொலைத்தொடர்புக் கம்பிகளும், LMG களும் அம்பகாமம் வந்துசேர்ந்தன.

தாம் நின்ற நின்ற இடங்களிலே எல்லோரும் சண்டை பிடித்துக்கொண்டிருந்தனர். காப்பரண்களை மீளக் கைப் பற்றுவதற்காக வலமிருந்து இடம்நோக்கிக் கயல்விழியின் அணி நகரத்தொடங்கிற்று. மறுபுறம் இடமிருந்து வலம் நோக்கிக் கட்டளைத்தளபதி தீபன் அவர்களின் கட்டளைக்கு அமைய லெப்.கேணல் கோபித் தலைமை யில் லெப்.சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவிலிருந்து ஒரு உதவியணி களமிறங்கியது.

இரண்டு திசைகளாலும் உதவியணிகள் நகரத்தொடங் கியபோது இரவாகிவிட்டது. பகலிலேயே காட்டுக்குள் ஒன்றையும் பார்க்கமுடியாது. இரவில் இருளைத்தவிர ஒன்றையும் தெரியாதநிலையில் கயல்விழியின் அணி நகர்ந்தது. ஓரிடத்தில் படையினரைச் சந்திக்கவும் சண்டை தொடங்கிவிட்டது. தம்மைப் பலமாக நிலைப்படுத்தி யிருந்த படையினர் எமது சிறு அணியை மிகக் கடுமை யாகத் தாக்கினர். சண்டையில் காயப்பட்ட கயல்விழி

padippakam



இடுப்புக்குக் கீழே உணர்வை இழந்தார். அவர்களில் பாதிப்பேர் காயப்பட, மீதிப்பேர் கேணல் விதுஷா அவர் களின் கட்டளைப்படி காயமடைந்தவர்களையும் சுடுகலன் களையும் எடுத்துக்கொண்டு பின்னகர்ந்தார்கள்.

அடுத்த திசையால் கோபித்துடன் இறங்கிய உதவி அணியால் குறிப்பிட்ட தூரத்தைக் கைப்பற்றி அதில் ஏற்பட்ட இழப்புகளுடன் மேலே நகரமுடியாமல் போய் விட்டது.

காட்டை நன்கறிந்த காவியா உதவியணியைக் கூட்டிப் போனபோது எறிகணைவீச்சில் காயமடைந்துவிட்டார். காப்பரண் ஒன்றினுள் நின்று சண்டையை நடத்திக் கொண்டிருந்த சுகி தொடர்ந்தும் நிற்கமுடியாதளவுக்குக் காயமடைந்தார். பிளாட்டூன் கட்டளை அதிகாரிகளான மேஜர் இளம்பிறை, மேஜர் சந்திரா, மேஜர் வாணி எல் லோரும் காப்பரண்களை மீளக்கைப்பற்றும் முயற்சியில் வீரச்சாவடைந்துவிட்டார்கள். வலதுபுறம் ஒலுமடுப் பகுதியிலிருந்து லெப்.கேணல் அறிவால் அனுப்பப்பட்ட யூதன் தலைமையிலான புலனாய்வுத்துறை உதவியணியும் வரும்வழியிலேயே இழப்புக்களைச் சந்தித்தது.

இனியும் முன்னால்நின்று சண்டைபிடிப்பது புத்தி சாலித்தனமானதல்ல என்ற முடிவுக்கு வந்த விதுஷா, காயமடைந்தோரையும், வீரச்சாவடைந்தவர்களையும் சுடுகலன்களையும் எடுத்துக்கொண்டு பின்னகரும்படி சண்டைநடந்த பகுதிக்குள் நின்றவர்களைப் பணித்தார்.

சண்டைதொடங்கிய மறுநாள் பின்னகர்ந்த நாங்கள், படையினர் எம்மைநோக்கி நீட்டிக்கொண்டிருந்த முனைப் பகுதியை வளைத்து, இருதிசைகளிலும் ஏற்கனவே இருக் கின்ற ஏனைய எமது காப்பரண்களோடு இணையும் வகையில் புதிய காப்பரண்களை அமைக்கத்தொடங்கி னோம்.



படிப்பகம்

வீழ்ந்தவர்களின் நினைவு நெஞ்சை உலுப்பியது. முன் னகர்ந்து சண்டையிட்டு நிலம்மீட்கும் கனவோடு தம் அணிகளுடன் அதற்குரிய பயிற்சிகளில் ஈடுபட்டவாறிருந்த இளம்பிறை, சந்திரா, மேஜர் தனா, கப்டன் அன்பழகி...

தர்ஷாவின் கொம்பனியாக மன்னாரில் நின்றவர்கள் சிலர். மன்னாரிலிருந்து வந்தகளை ஆறமுன்னரே அந்தக் கொம்பனி சிறப்புப் பயிற்சி ஒன்றில் ஈடுபடுத்தப்பட்ட போது மற்றைய கொம்பனிகளிலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் சிலர். பயிற்சி முடியும்தறுவாயிலே அம்பகாமத்துக்கு வந்து, ஏற்கனவே நின்ற எமது கொம் பனிக்கருகே தொடர்நிலைகளை அமைத்துநின்ற நாளி லிருந்து அவர்களின் கேள்வி 'எப்போது நாம் முன்னே போய் அடிப்பது, ஏன் இன்னும் சண்டை தொடங்க வில்லை' என்பதாகவே இருந்தது.

மனதுக்குள் அதுவரை புகை தள்ளிக்கொண்டிருந்த எரிமலை, தீக்குழம்பைக் கக்கத்தொடங்கியது அப்போது தான். இழப்புக்களால் ஏற்பட்ட மனப்பாதிப்பைவிட, எதைச் செய்யவேண்டும் என்று இதுவரைநாளும் மனங் களில் நினைத்துக்கொண்டார்களோ, எதைத் தமக்குள் கதைத்துக்கொண்டார்களோ, அதை விரைவில் செய்து முடிக்கவேண்டும் என்ற வெஞ்சினமே மேலோங்கியது.

தன் விழிகள் சிவக்க, நெஞ்சமெல்லாம் நெருப்பெரிய, எங்கள் தலைவர் அவர்களின் மனதில் மூன்றாவது அலையின் வீச்சு உருவாகிக்கொண்டிருந்தது.

* * *

# 08

நதிமூலம்-01 இராணுவ நடவடிக்கையில் எமக்கு ஏற்பட்ட இழப்பு எல்லோர் இதயத்திலும் தீயாய் தகிக்க, கோபத்தில் சிவந்துபோன விழிகளுடன் காத்திருந்தோம். இந்த இழப்பின் மாற்றீடாகத் தாக்குதலுக்கான வாய்ப்பு ஒன்றைத் தலைவர் விரைவில் தருவார் என்ற நம்பிக்கையுடன் நாட்களை எண்ணினோம். வன்னியின் போர் மேகங்களை விலக்கி ஒளியைத் தருவதற்காக 'எங்கள் சூரியன் தன் பொற்கதிர்களை விரிப்பான்' என்று மக்களும் நம்பினர். படையை நகர்த்துவதற்கு உரிய இடத்தையும் நேரத்தையும் எதிர்பார்த்திருந்த தலைவர் அவர்கள் தளபதிகளை அழைத்தார். திட்டம் தளபதிகளின் கைகளில் சேர, பரந்து விரிந்துநின்று பகைவரவைத் தடுத்திருந்த அணிகளுக்கான அழைப்புகளைக் காவிச்சென்றது காற்று.

மணலாறு, பனங்காமம், அம்பகாமம், பள்ளமடு, கிளிநொச்சி என நாற்றிசையும் பரந்துநின்று பணிபுரிந்த நாம் பண்டாரவன்னியனின் பாதம் பதிந்த கற்சிலைமடுக் காட்டினுள்ளே வரவழைக்கப்பட்டோம். உடனடியாகவே எல்லோரும் தேவைக்கு ஏற்றபடி வெவ்வேறு அணிகளாகப் பிரிக்கப்பட்டோம். அதன் பின்னரும் சிலர் தொலைதூர இடங்களிலிருந்து வந்துகொண்டிருந்தனர். வெயிலும் புக முடியாத கானக நிழலில் எமது பணிகள் விரைவுபெற்றன.

ஒவ்வோர் அணிக்கும் பணிக்கேற்ற வகையில் ஆயுதங்கள், வெடிபொருட்களை நிரப்பீடுசெய்து, மருத்துவப் போராளிகளுக்குரிய கட்டுந்துணிகள், திரவ ஊடகம் எனத் தேவையான பொருட்களைத் தேவையான இடங்களில் அறிவித்துப் பெற்றுக்கொண்டு, தொலைத்தொடர்புக்கருவி தொடர்பான விடயங்களைக் கவனித்து உரியவர்களுக்கு அவற்றை வழங்கிக்கொண்டிருக்க, எல்லாவற்றையும் வழிநடத்திக்கொண்டிருந்தார் கேணல் விதுஷா. அவருக்கு உதவியாக ஆஷா நின்று நிலைமைகளைக் கவனித்தார்.

ஜமுனா தலைமையிலும், தர்ஷா தலைமையிலும் இரு அணிகளாகப் பிரிக்கப்பட்டு பணிகள் வழங்கப்பட்டன. தனுஷா, கப்டன் அங்கயற்கண்ணி, மேஜர் உமா ஆகியோரின்கீழ் பிளாட்டூன்கள் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வோர் பிளாட்டூன் கட்டளை அதிகாரிகளும் தம் அணியினருக்குத் தேவையான பொருட்களை வழங்கியதுடன் கூடியவரை அவர்களைத் தம் நினைவினுள் நிறுத்த முயன்றனர். ஏனெனில் வெவ்வேறு பகுதிகளிலிருந்து அப்போதுதான் வந்திருந்ததால் முன்பின் அறிமுகம் இல்லாத பல போராளிகள் ஒன்றுகூடியிருந்தோம். இதனால் வழமையாக அணிகளிடையே காணப்படும் குழு உணர்வை இங்கு எதிர்பார்க்க முடியாதிருந்தது. எனவே முடிந்தவரை ஒவ்வொருவரும் எம்மிடையேயான அறிமுகத்தை ஏற்படுத்த முயன்றுகொண்டிருந்தோம்.

இந்த ஆரவாரம் ஒரு புறமிருக்க, இந்து தலைமையிலான ஒரு குழு எல்லோரது ஆயுத விபரங்களையும் திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்தது. யார், எந்த அணியுடன், எந்த ஆயுதத்துடன், எந்தப் பகுதியில் நின்றவர்கள் எனத் துல்லியமாக எடுக்கப்படும் இந்த விபரமே பின்னர் அணியினரின் இருப்பு, இழப்பு விபரங்களை இனங்கண்டு கணக்கெடுக்க உதவும். எனவே அதில் எவ்விதத் தவறும்

padippakam



ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக ஓடித்திரிந்து அவற்றைப் பதிவுசெய்துகொண்டிருந்தது அந்த அணி.

இந்த நிலையில் அணிகளுக்கான அனைத்துத் தேவைகளும் நிறைவுசெய்யப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்டு, தாக்குதல் நடவடிக்கைமட்டுமே மீதமிருந்தது. மிகப்பெரிய சமர் அரங்கைத் திறக்கப்போகும் எங்களுக்கு நாம் செய்யவிருக்கும் பணிதொடர்பான விளக்கத்தைத்தவிர, எந்த விதப் பயிற்சியுமே வழங்கப்படவில்லை. அதற்குரிய நேரமின்றியே நடவடிக்கை தொடங்கப்படவிருந்தது. எல்லோரது மனங்களும் இன்னமும் சோர்வு நிலையிலேயே இருந்தன. இத்தாக்குதலை வெற்றிநோக்கி நகர்த்தவேண்டும் என்பதில் எல்லோரும் ஆர்வமாக இருந்தோமேதவிர, வெற்றிக்குப் பின்னான மகிழ்வான நாட்களைப்பற்றிய எந்த எண்ணமும் மனதில் ஏற்படவில்லை. அம்பகாமவனம் தந்த துயரம் இதய அறையில் மோதிக்கொண்டிருந்தது.

தாக்குதலுக்குத் தேவையான வெடிபொருட்கள் தொடக்கம் பதுங்குகுழி அமைக்கத் தேவையான மண்வெட்டிகள், உரப்பைகள், தண்ணீர்க் கொள்கலன்கள் என ஒரு தொகைப் பொருட்கள் எல்லோரிடமும் நிறைந்துவிட்டிருந்தன. எல்லாப் பொருட்களையும் வசதியாக எப்படிக் கொண்டுசெல்லலாம் என்பதை நாமே திட்டமிட்டுத் தயார்ப்படுத்தியிருந்தோம். எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் கிட்டத்தட்ட எங்களுடைய நிறைக்குச் சமமாக இருக்கும். நாம் புறப்படும் நேரம் வந்தது.

1999.11.01 நள்ளிரவு கடந்துகொண்டிருந்தது. ஆளையாள் பார்க்கமுடியாத கடும் இருட்டு. அடர் பற்றைகள். அடர்ந்த காட்டின் உயர்ந்த மரங்களை விலக்கியபடி அன்று முழுவதும் பெய்த மழையால் ஈரமாகி, பகலிலேயே நடக்கச் சிரமந்தரும் பாதையினூடாக நகர்ந்துகொண்டிருந்தோம். சொட்டுச் சொட்டாகச் சிந்திக்



படிப்பகம்

padippakam



கொண்டிருந்த தண்ணீர்த் துளிகளைத் தலைகளிலே அணிந்திருந்த சாக்குத்தொப்பி உறிஞ்சிக்கொள்ள, முன்னே செல்பவரின் இடுப்புப்பட்டியை எட்டிப் பிடித்தபடி ஏனையவர்கள் நகர்ந்தோம். எம்மைப்போலவே வரிசை எடுத்து ஊர்ந்துகொண்டிருந்த சூகைக்கூட்டம் (காட்டிலுள்ள கடி எறும்புகள்) கடித்த கடியில் எல்லோரும் காலை உதறியபடிநடக்க, அதுவே அங்கு வித்தியாசமான சத்தமாக எழுந்தது. அதைவிட மண்வெட்டியில் கொழுவப்பட்டிருந்த தண்ணீர் கொள்கலன்களோ ஒன்றிலொன்று மோதி அந்தச் சூழலுக்கொவ்வாத ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தன.

இந்தச் சத்தங்கள் இராணுவத்துக்குக் கேட்டால் எல்லாமே குழம்பிவிடும். ஆனாலுங்கூட இந்தச் சத்தத்தை நிறுத்தமுடியவில்லை. தாக்குதலுக்கேற்ப முறையாகப் பயிற்றப்படாத அணிகள், ஆளை மிஞ்சிய பொருட்கள், முள்தைத்த பாதணிகளின்மீதேறி நின்று காலைக் கடிக்கும் சூகைகள். நிறுத்தமுடியுமா சத்தத்தை? எல்லோருமே எம்மால் இராணுவம் விழிப்படைந்துவிடக்கூடாது என்றே எண்ணினோம்.

பறந்து பறந்து வெள்ளைநிறக் கொள்கலன்களுள் புகுந்து, வெளியேற வழிதெரியாமல் ஒட்டிக்கொண்டிருந்த மின்மினிப் பூச்சிகள் எம்மைக் காட்டிக்கொடுப்பதற்காக முயற்சி செய்வதுபோல் தெரிந்தது. ஏனெனில் அணி நகர்ந்த பாதைநீளமும் மின்மினியின் ஒளிபட்டுக் கொள்கலன்கள் பச்சை நிறச் சதுரம், சதுரமாக ஒளிர்ந்து கொண்டிருந்தன.

"இது என்னடா கரைச்சலாக் கிடக்கு. ஏற்கனவே இசைக்குழுமாதிரி நகர்ந்துகொண்டிருக்கிறம். அதுக்கு வேற இதுகள் லைற்போட்டுக் காட்டிக்கொண்டிருக்குதுகள்"



படிப்பகம்

padippakam



யாரோ ஒருவர் முணுமுணுத்தார்.

பின்னே திரும்பிப்பார்த்த எல்லோருக்கும் என்ன செய்வதென்றே தெரியாமலிருந்தது.

"சத்தத்தைக் குறையுங்கோ" என்று சொல்லிவிட்டால், அதுவே மிகப்பெரிய சத்தமாகிவிடும். எனவே 'சண்டை குழம்பக்கூடாது' என்று நினைத்தபடியே நதிமூலம் நடவடிக்கைப் படையினரின் முன்னரங்கநிலையை அண்மித்தோம். விட்டுவிட்டுத் தூறிக்கொண்டிருந்த மழை மட்டும் எமக்குச் சார்பாக இருப்பதுபோல் பட்டது.

திட்டத்தின்படி லெப்.சாள்ஸ் அன்ரனி படையணி தடையுடைத்து, வலமிடமாகக் குறிப்பிட்ட தூரம் காவலரண்களைக் கைப்பற்றியபின், உள்ளேசென்று இடமும் வலமுமாக அப்பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே தர்ஷா, ஜமுனா ஆகியோருடைய அணிகளின் பணியாகும். ஆரம்பத்திட்டம் இவ்வாறிருக்க, ஏனைய பகுதிகளின் மீதான தாக்குதல் அந்தநேரத்துக் கள நிலைமைகளைப் பொறுத்து அமையும். தடையுடைக்கும் அணிக்கு ஏதாவது சிக்கல் நேர்ந்தால், அப்பணியைப் பொறுப்பேற்கும் தயார் நிலையில் தனுஷாவின் பிளாட்டூன் நகர்ந்துகொண்டிருந்தது.

ஆளையே விழுங்கிவிடும் இருட்டில் தடைக் கம்பியைத் தடவிப்பிடித்து வெட்டிக்கொண்டிருக்க, வேறொரு பகுதியில் தாக்குதல் தொடங்கியது. தடை வேகமாக உடைக்கப்பட, மண் அணைமீதிருந்த வேலி பிரிக்கப்பட்டு, இடமும் வலமுமான படையினரின் காவலரண்கள், எமது கட்டுப்பாட்டுக்குள் வந்துகொண்டிருந்தன. உடைக்கப்பட்ட பாதையால் உள்ளே நுழைந்த கப்டன் அங்கயற்கண்ணியின் பிளாட்டூன் வலதுபுறம் கைப்பற்றப்பட்ட கடைசி நிலையிலிருந்து உள்நோக்கி நீண்டு, பின்னர் முன்னணி நிலைக்குச் சமாந்தரமாக நிலையெடுத்தனர். அதேபோல்



படிப்பகம்

padippakam



இடதுபுறமாக நகர்ந்த தனுஷாவின் பிளாட்டூன் 50மீ. இடைவெளியில் அமைந்துள்ள ஒவ்வொரு நிலைகளிலிருந்தும் எதிர்ப்பைச் சந்தித்தது. கனரக ஆயுதங்களை ஒருங்கிணைத்து அவற்றை முறியடித்தபடியே முன்னேறி இடதுபுறமாகக் குறிப்பிட்ட பகுதியை எமக்குள் உள்ளடக்கி நிலையெடுத்தனர். இப்போது பெட்டி வடிவிலான ஒரு பகுதி எமது கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்தது.

எங்கள் படையணிக்குரிய கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்த கேணல் விதுஷா தனது கட்டளை மையத்தை உள்நோக்கி நகர்த்தினார். பகைக் காவலரண்கள் எரியும் வெளிச்சத்தில் சூழலை அவதானித்து எமது அணிகள் உள்ளே புகுந்தன.

ஒட்டுசுட்டான் மையப்பகுதிக்கு இருபுறமும் நின்று தாக்குதலணிகள் நெருக்க, இராணுவ மையம் படிப்படியாக வீழத்தொடங்கியது. அப்பகுதி நடவடிக்கைகளை வேறு அணிகள் கவனிக்க, நாம் நிலையெடுத்திருந்த இடத்திலிருந்து இன்னும் முன்னே நகரும் முயற்சியில் ஈடுபட்டோம். பார்வைத் தூரத்தை மட்டுப்படுத்துகின்ற அடர்காடாக இருந்ததால் இராணுவத் தளங்கள் எங்கே இருக்கின்றன என்பதை இனங்காண முடியாமலிருந்தது. தனுஷாவின் அணி நிலையெடுத்திருந்த பகுதிக்குச் சற்று முன்னேயிருந்து பலத்த எதிர்ப்பு வந்தது. அப்போதுதான் அவ்விடத்தில் ஓர் இராணுவத்தளம் இருப்பது தெரிந்தது. உடனேயே அதில் நின்ற அணியை ஒருங்கிணைத்துத் தாக்குதலைத் தொடுக்க, இராணுவம் இழப்புக்களுடன் பின்வாங்கியது. அவ்விடத்தை முழுமையாகக் கைப்பற்றியதுடன் இன்னும் அகன்று நிலைகொண்டோம்.

அந்த ஆரம்ப முன்னேற்றத்துடன் ஒட்டுசுட்டான்-மாங்குளம் வீதியில் கால்வைத்தோம். தொடர்ந்து வீதியின் இடதுபுறமாகக் கரிப்பட்டமுறிப்புநோக்கி நகரும்படி கட்டளையிட்டார் கேணல் விதுஷா. அதன்படி தனுஷா,



படிப்பகம்

padippakam



அங்கயற்கண்ணி ஆகியோரின் பிளாட்டுன்கள் முன்னே றும் நடவடிக்கையில் ஈடுபட்டன. இறந்தோர்போக, எஞ்சிய இராணுவம் பின்வாங்கிப் பின்வாங்கித் தாக்கு தலை நடத்தியபடி போய்க்கொண்டிருந்தது. பார்வைத் தூரத்தைக் கட்டுப்படுத்துகின்ற அடர்ந்த காடு எமது நகர்வு வேகத்தையும் சற்றுக் குறைத்துத்தானிருந்தது. எனி னும் மரங்களில் மோதிச் சிதறித் தெறிக்கின்ற எறி கணைகளைப் பொருட்படுத்தாது முன்னேறினோம். கரிப் பட்டமுறிப்பை அடைவதற்கு இன்னும் சில கிலோமீற்றர் களே இருந்தன.

ஒருபகுதியில், முன்னேறும் அணிகளுக்கான உதவிச் சூட்டை வழங்கியபடி சென்றுகொண்டிருந்தார் லெப். புஸ்ப லதா. வேகமாக நகர்ந்து நகர்ந்து தாக்கிக்கொண்டிருந்த தால், எந்தவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் எமக்கு இருக்கவில்லை. அணி முன்னேறிய பகுதிக்குள் கூவி வந்த எறிகணைகள் வீழ்ந்தன. தொடர்ந்தும் எறிகணைகள் வீழப்போவது தெரியவே, LMG இனைத் தன்னால் மூடிக் கொண்டார் அவர். பாதுகாப்பற்ற அந்த இடத்தில் சுடு கலன் சேதமடையப்போகின்றதே என்ற ஏக்கம் அவருள் எழ, தன்னையே காப்பாக்கிக்கொண்ட அவரின் கீழே அவர் நேசித்த LMG பாதுகாப்பாகக் கிடந்தது. சுடுகலனை நேசித்த புஸ்பலதா குருதி சிந்தக்கிடந்தார். விழிகள் மூடியிருந்தன. இப்படியான வேளைகளில் சுடுகலனை அவர்களிடமிருந்து பிரித்து எடுப்பது மிகக்கடினமானது. இதனால் பல இடங்களில் இராணுவம் அவற்றை எடுக்க முயன்றும் தோற்றிருக்கின்றது.

இதேநேரம் அம்பகாம முன்னரங்கில் முல்லையின் கொம்பனியும் லெப்.கேணல் சாந்தகுமாரியுடனான குறிப்பிட்ட ஓர் அணியும் நின்றிருந்தது. தாம் நிற்கும் பகுதியினூடாகவே முன்னேறிக்கொண்டு செல்லமுடியும் என நினைத்திருந்தவர்களுக்கு எந்தவித அறிவிப்பும் வரா தது ஏமாற்றமாக இருந்தது. ‘எம்மை ஏன் இன்னும்



படிப்பகம்

தாக்குதலுக்கு அழைக்கவில்லை' என்ற புதிருக்கான விடை கிடைக்கவில்லை. ஒருவருக்கும் இருப்புக்கொள்ள வில்லை.

“நேற்றுத் தொடங்கின சண்டை, அதுக்குள்ள ஒட்டு சுட்டான் பிடித்து கரிப்பட்டமுறிப்புக்குப் போகப்போயி னம். நாங்கள் இல்லாமலே சண்டை முடிஞ்சுபோகுமோ”

ஏக்கம் எல்லைதாண்டியது. உடனே சாந்தகுமாரி நிலைமையை அறிவதற்காக இன்னொரு போராளியுடன் புறப்பட்டுக் காட்டினூடே தட்டுத்தடுமாறி வழிகண்டு பிடித்து, கேணல் விதுஷாவின் கட்டளை மையத்துக்கு வந்துசேர்ந்தார். கட்டளை கிடைக்காமல் தாம் அணியை விட்டுவிட்டு வந்ததுகுறித்து அப்போதுதான் அவர்களுக்கு உறைத்தது. சண்டையின் வேகம் செய்த வேலை அது. என்றாலும் ஏதோ ஒரு நப்பாசையுடன் தயங்கித் தயங்கி விதுஷாவை அணுகினார் சாந்தகுமாரி.

அவர்கள் வந்த நோக்கம் விதுஷாவுக்குப் புரிந்தாலும் தன் ஒப்புதலின்றி அங்கு வந்தது சிறிய கோபத்தையே உண்டாக்கியது.

தலைவர் தேவையான இடத்தில், தேவையான நேரத் தில், எதையும் திட்டமிட்டுச் செய்வதால்தான் எமது அமைப்பு இவ்வளவு கட்டுக்கோப்பாக வளர்ந்திருக்கிறது. சாதனைகளைப் படைக்கின்றது. தாக்குதல்களுக்கு எல் லோரையும் ஒன்றாக அனுப்புவதில் எவ்விதப் பயனும் இல்லை. அதனாலேதான் உரிய இடத்துக்கு உரிய அணி கள்மட்டும் அனுப்பப்படுகின்றன. இந்த விடயம் இவர் களுக்கும் தெரிந்திருந்தாலும் தாம்மட்டும் தனித்துவிடப் பட்டதுகுறித்து ஏற்பட்ட கவலையே அவர்களை உந்தித் தள்ளிவிட்டிருந்தது.

உடனேயே, நின்ற இடத்துக்குத் திருப்பி அனுப்பப் பட்டனர்.

padippakam



"அறிவித்தல் வரும்வரை எங்குமே நகரக்கூடாது"

என்ற ஒறுப்பையும் பெற்றுக்கொண்டு, இடையில் வந்த ஊர்தி ஒன்றில் ஏறி வந்துசேர்ந்தனர். ஏற்கனவே இருந்த மனக்கவலையிலும் இந்தச் சம்பவத்தைச் சொல்லிச் சிரித்துக்கொண்டிருந்தபோது, ஒலுமடுவுக்கு வரும்படி அழைப்பு வந்தது. வானமேறிய புளுகத்தில் எல்லோருமே தயாரானோம்.

எம்மினிய அம்பகாம வனமே! விடைபெறுகின்றோம். மடி தாங்கிய எம் வீராங்கனைகளின் இறுதி மூச்சைச் சுமந்தவள் நீ. உனக்குள்ளே நிறைந்த நூற்றாண்டு காலச் சரித்திரங்களுடன் எம் வீராங்கனைகளின் சுவடுகளையும், நினைவுகளையும் பதிவாக்கிக்கொள். உன் மேனியைச் சிதைத்த பகைவரைப் புதைக்கப் புறப்படுகின்றோம். விடைகொடு தாயே.

கரிப்பட்டமுறிப்புப் பகுதியைநோக்கித் திசைகாட்டியின் உதவியுடன் நகரத்தொடங்கினோம். மேஜர் தமிழ்செல்வி, ஜீவா ஆகியோரின் அணிகள் முல்லை, மேஜர் மாலதி ஆகியோரின் தலைமையில் நகர்த்தப்பட, அடர் வனத்தி னூடே படையினரைத் தேடியபடியே கரிப்பட்டமுறிப்புக்குச் சற்று அப்பால் நிலைகொண்டு அவதானித்தோம்.

ஒட்டுசுட்டான்-மாங்குளம் வீதியில் கரிப்பட்டமுறிப்பை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த நாம் உடனடியாக அமைக்கப்பட்டிருந்த சிறிய ரக எறிகணை ஏவுதளங் களைக் கண்டோம். அந்த LMG யிடமிருந்து புஸ்பல தாவைப் பிரித்தவை இவைதானோ? நாங்கள் எமது எறிகணைசெலுத்திகளுக்கு வழுத்திருத்தம் சொல்லி எறி கணைகளை வீசியபடி சென்றுகொண்டேயிருந்தோம்.

கரிப்பட்டமுறிப்புக் கிராமத்தை ஊடறுக்கும் வீதியை அண்டிய குடியிருப்புப் பகுதியைத் தமது தளமாக்கி,



படிப்பகம்

padippakam



சுற்றிவர முட்கம்பிவேலி அரணிட்டு இதுவரைநாளும் இறுமாப்புடன் இருந்த அந்தப் பகைத்தளத்தை அண்மித்தோம். வேறு பல அணிகளும் வெவ்வேறு முனைகளால் இத்தளத்தைத் தாக்க ஆயத்தமாயின. இதற்கிடையில் நெடுஞ்சாலைக்கு இடதுபுறமாகக் காட்டுப் பகுதியின் பாதுகாப்புக்காக தர்ஷாவுடன் ஒரு பிளாட்டூன் அனுப்பப்பட, ஏனைய அணிகள் கரிப்பட்டமுறிப்புத் தளம்மீதான தாக்குதலைத் தொடுத்தன.

இப்போது கேணல் விதுஷாவின் கட்டளைத் தளம் நெடுஞ்சாலைக்கு நகர்ந்திருந்தது. அத்துடன் அணிகளுக்கான வெளி நிர்வாகத்தைக் கவனித்துக்கொண்டிருந்த லெப்.கேணல் மைதிலியும் உள்ளே நகர்ந்தார். ஒவ்வொரு போராளிகளும் தமது பணியைமட்டுமல்லாது ஏனையோரின் பணியையும் சேர்த்தே செய்துகொண்டிருந்தனர். மருத்துவப் போராளிகள் தொலைத்தொடர்புக் கருவிக்குத் தேவையான மின்கலங்களுடனும் ஓடித்திரிந்து கொண்டிருந்தனர்.

இந்தநிலையில், கரிப்பட்டமுறிப்பை நெருக்கி முற்றுகை வளையத்தை இறுக்கியதுடன் எறிகணைகளை வீசியபடி வேகமாக உள்நுழையத்தொடங்கினோம். கம்பி வளையங்கள் தெறித்து விழ, சுட்டுக்கொண்டே நுழைந்து காப்பரண்களுள் புகுந்து, மையப்பகுதி எமது கட்டுப்பாட்டுக்குள் வந்ததும் முற்றுமுழுதான ஒரு தேடல் நடவடிக்கையை ஏனைய அணிகள் மேற்கொள்ள, முல்லையுடன் நகர்ந்த மாலதியின் கொம்பனி இன்னும் மேலே புறப்பட்டது.

கரிப்பட்ட முறிப்பிலிருந்து கனகராயன்குளத்தை நோக்கிச்செல்லும் இடைவீதியூடாகத் தாக்குதலைத் தொடுத்தபடி நகர்ந்துகொண்டிருந்த நாம் கனகராயன் குளத்துக்குச் சற்றுமுன்னதாக நிலையெடுத்துநின்று அவதானித்துவிட்டு, மீண்டும் முன்னேறினோம். ஏற்கனவே



படிப்பகம்

padippakam



மாங்குளம், பனங்காமம், நெடுங்கேணி ஆகிய பகுதிகளால் ஏனைய படையணிகள் முன்னேறியிருந்ததால், இதன் பின்னும் தரித்துநின்று தாக்குதலில் ஈடுபடுவதால் எவ்வித பயனும் இல்லை என்பதை உணர்ந்தது சிறீலங்காப் படைத்தரப்பு. நாம் படைத்தளத்தை அண்மிக்கமுன்பே, அங்கு தீயெழுந்தது. தமக்கு உதவாத பொருட்கள் எமக்கும் உதவவேண்டாம் என்று எல்லாவற்றையும் தீயில் தள்ளியது பகை. தீ நாக்குகள் வானைத் தொட, வெடிபொருட்கள் வெடித்துச் சிதற பெரும் தீக்குளிப்பு ஒன்று அங்கே நடந்துகொண்டிருந்தது. இதனால் நாமும் சற்றுத் தாமதித்தே முன்னேறவேண்டியிருந்தது.

மறுநாள் அதிகாலை நாம் கனகராயன்குளத் தளத்தினுள் கால் பதித்தோம். எரிக்கப்பட்ட இடம் சுடுகாடாகக் கிடந்தது. ஆனாலுங்கூட எல்லாவற்றையும் முழுமையாக எரிப்பதற்கான கால இடைவெளியைப் படையினருக்கு நாம் வழங்கவில்லை. அதனால் நிறையவே தீயின் வாடை கூடப்படாமல் தப்பியிருந்தன. கனகராயன்குளத்தில் எமது அணிகள் சீரமைக்கப்பட்டதுடன், தேவையானளவு வெடிபொருட்களும் வழங்கப்பட்டன. தாராளமாக வெடிபொருட்கள் கிடைத்ததால், ஒவ்வொருவரும் மேலதிகமாகவும் சேமித்துக்கொண்டோம்.

அதேநேரம் கரிப்பட்டமுறிப்புவரை வீதியால் நகர்த்தப்பட்ட ஜமுனாவின் அணிகள் மீள ஒழுங்கமைக்கப்பட்டு மாங்குளத்தின் ஊடாக மன்னகுளம் பகுதிக்கு வந்தது. அங்குவைத்து அடுத்த நகர்வுக்குத் தயார்ப்படுத்தப்பட்டு, யாழ் நெடுஞ்சாலைக்கு வலதுபக்கமாக மைதிலியின் வழிநடத்தலில் நகர்ந்துகொண்டிருந்தது. அத்துடன் கனகராயன் குளத்திலிருந்து நெடுஞ்சாலைக்கு இடதுபுறமாக முல்லையுடன் முன்னேறிய மேஜர் தமிழ்செல்வியின் பிளாட்டூன் மற்றும் புலனாய்வுத்துறை மகளிர் தாக்குதலணி என்பன புதூர்நோக்கித் திரும்பின. அப்பகுதியில் எதிர்ப்பு கடுமையாக இருந்தது. தாக்குதலணிகளுக்குப்



படிப்பகம்

பின்னாலேயே வேகவேகமாக நகர்ந்து தமது பணியைச் செய்துகொண்டிருந்த எறிகணை செலுத்திகள் நாம் கேட்ட போதெல்லாம் கேட்குமிடங்களுக்கு ஆதரவுச் சூடுகளை வழங்கிக்கொண்டிருந்தன.

அதில் நின்ற முன்னணி அவதானிப்பாளரான கப்டன் பதஞ்சலி மிகவும் துல்லியமாக எறிகணைச் சூட்டாதர வைப் பெற்றுத்தந்து அணியின் வெற்றிக்கு வழிசமைத்துக் கொண்டிருந்தார். நடவடிக்கையின் ஆரம்பத்திலிருந்தே லெப். சாள்ஸ் அன்ரனி படையணிக்கு வழிகாட்டியாகவும் வழூத்திருத்துனராகவும் செயற்பட்டுக்கொண்டிருந்த இவர், நேற்றுத்தான் முல்லையிடம் வந்திருந்தார். சண்டைக் களத்தில் தன் திறமைகளைப் பயன்படுத்தி நன்றாகச் சண்டையிடவேண்டுமென எண்ணிவந்த பதஞ்சலி புதூர்ப் பகுதியில் தன் பணியை முடித்துக்கொண்டார். கடுமை யான தாக்குதலின்பின் அத்தளம் எமது கைகளில் விழுந்தது. தொடர்ந்து தாக்குதலணிகள் புளியங்குளத்தைத் தாண்டி முன்னேறின.

இதுவரை முன்னணித் தாக்குதலணியாகச் செயற்பட்ட மேஜர் தமிழ்செல்வியின் பிளாட்டூன், பின்னணிக்கு அழைக் கப்பட்டு ஓய்வுக்காக விடப்பட்டது. இந்த ஓய்வினூடே மீளத் தயார்ப்படுத்தும் நடவடிக்கையும் நடைபெற்றது. உடைந்த, பழுதடைந்த, தொலைந்த, பொருட்களுக்கு மாற்றீடாக இராணுவத்தினரது புதிய பொருட்கள் வழங்கப் பட்டன. இந்த ஓய்வு நாளினுள்ளேயே தீபாவளியும் வந்து சேர்ந்தது.

ஓய்வுநாள் மிகுந்த பம்பலாகக் கழிந்தது. 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கைப் படைகள் உருவாக்கிய மிகப் பெரிய இராணுவத் தளமொன்றில் விடுதலைப் புலிகளின் தாக்குதலணிகள் இப்போது ஓய்வெடுத்துக்கொண்டிருக் கின்றன. எப்படி இருக்கிறது இந்த மாற்றம்? இந்த அணி கனகராயன்குளத்தில் நிற்க, ஏனைய அணிகள் புளியங்



படிப்பகம்

padippakam



குளத்தையும் தாண்டி அப்பால் சென்றுவிட்டிருந்தன. படைத்தரப்பினர் நினைத்தே பார்த்திருக்கமுடியாத வேகம். ஒட்டுசுட்டானில் ஆரம்பித்து கரிப்பட்டமுறிப்பு, கன கராயன்குளம், புளியங்குளம் என இவ்வளவு நிலத்தையும் கைப்பற்ற படையினருக்கு எடுத்த மாதங்களோ கொஞ்ச நஞ்சமல்ல. பலத்த உயிரிழப்பைச் சந்தித்தபடி ஒன்றரை வருடங்களை விழுங்கிய அந்த 'வெற்றி நிச்சயம்' காற் றடித்த பலூன் என்பது இப்போதாவது புரிந்திருக்குமோ? சுற்றிவரமட்டும் பாதுகாப்பு வளையத்தை அகட்டிக் கொண்டுவந்த ரத்வத்தைக்கு அதிலுள்ள பலவீனம் புரிய வேயில்லைபோலும்.

இப்போது ஒரு ஞாபகம் வருகிறது. தலைவரின் தூர நோக்குப் பார்வைக்கு, மதிநுட்பமான சிந்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டாக பின்பொருநாளில் இதனைக் குறிப்பிட்டிருந்தார் கேணல் விதுஷா.

"தலைவர் திட்டத்தை விளங்கப்படுத்திக்கொண்டு போகும்போது, ஒட்டுசுட்டானில்தான் முதல் உடைப்பு என்றார். பிறகு அப்படியே கரிப்பட்டமுறிப்பு, மாங்குளம், நெடுங்கேணி இவற்றை நீங்கள் பிடித்தால் போதும், மிகுதிச் சண்டையை நான் கவனிக்கின்றேன் என்றார். இதுவும் போதாதென்று புளியங்குளத்துக்கு அப்பால் மணலாறுதொடக்கம் மன்னார்வரைக்குமாக ஒரு தொடுகைக் கோட்டைக் கீறி, எங்களை நிமிர்ந்து பார்த்து ஒரு சிரிப்பொன்றைச் சிரித்தார். அந்தச் சிரிப்பின் அர்த்தம் இப்போது விளக்குவைத்தகுளம் வரை நாம் மீட்டபிறகுதான் விளங்குகின்றது"

என்று சொல்லி வியந்தார்.

ஓய்வுடன் மீள் ஒழுங்குபடுத்தலில் ஈடுபட்ட முல்லை யின் அணி அங்கிருந்து சேமமடுநோக்கி நகரத்தொடங் கியது. தாக்குதலுக்கேற்றவகையிலான நீண்ட தூர நகர்வு. காடுகள், வீதிகள், பாழடைந்த குடியிருப்புக்கள் கடந்து



படிப்பகம்

விளக்குவைத்தகுளப் பகுதியில் வீதிக்கு இடதுபுறமாக நிலையெடுத்துக்கொண்டு, மேலும் முன்னேறுவதற்கான வேவுப் பணிகளில் ஈடுபட்டது. இதேநேரம் மைதிலியுடன் நகர்ந்த அணியும் வலதுபுறம் நிலைகொள்ள, அவ்விடத்தில் தற்காலிகமான பாதுகாப்பு வரிசை ஒன்று உருவாக்கப்பட்டது. மைதிலியின் பகுதிக்கு முன்னேயிருந்த சிறிய இராணுவத்தளம் மேலதிக நகர்வினைத் தடுத்தது. உடனேயே வேவு அணி முன்னே நகர்த்தப்பட்டு நிலைமை ஆராயப்பட்டதுடன், அன்றிரவே அத்தளம் கைப்பற்றப்பட்டது. எனினும் தொடர்ந்து அவ்விடத்தில் நிலைகொள்ள முடியாதவகையில் எமது பின் பகுதி முழுவதும் வெட்டையாக இருந்ததால் எல்லோரும் சற்றுப் பின்னே வசதியான பகுதியில் நிலையமைக்கத் தொடங்கியதுடன், எல்லா முனைகளாலும் வேவுப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. எல்லா அணிகளும் மீண்டும் ஒரு முன்னேற்ற நடவடிக்கைக்காகக் காத்திருந்தன.

போர்முழக்கம்-04 நடவடிக்கையில் லெப். கேணல் தணிகைச்செல்வி வீரச்சாவடைந்தபின், அதுவரை அரசியற்றுறை மகளிர் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த நிஸ்மியா யாழ் தாக்குதலணி மகளிர் பிரிவைப் பொறுப்பேற்றிருந்தார். நிஸ்மியா தலைமையிலான யாழ் தாக்குதலணி மகளிர் பிரிவு ஓயாத அலைகள்-03 ஓங்கி வீசத்தொடங்கிய 1999 நவம்பரில் எம்மோடு இணைந்து, தொடர்ந்த எமது கள நடவடிக்கைகளில் பங்கேற்றது.

இதுவரைநாளும் பனங்காமப் பகுதிப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த லெப்.கேணல் தமிழ்செல்வியின் அணி இன்னும் முன்னேறாமல் என்ன செய்துகொண்டிருக்கிறது என நினைக்கின்றீர்களா? இதோ, அவர்கள் தாக்குதல் நிலவரங்களை பனங்காமத்தில் நின்றவாறு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

padippakam



ஓயாத அலைகள்-03 சமரின் நிலைமைகளைத் தொலைத்தொடர்புக் கருவிமூலம் கேட்டுக்கொண்டிருந்த பனங்காம அணிக்குப் பலத்தயோசனை.

"ஒட்டிசுட்டான் பிடிச்சு, கரிப்பட்டமுறிப்புக்குப் போய், அதையும் தாண்டியாச்சு. எங்கட ரீமைமட்டும் ஏன் பேசாமல் விட்டிருக்கினம்?"

பொறுமையின்றித் தொடர்பெடுத்தார்கள்.

"நாங்களும் இங்கால நிக்கிறம். எல்லாம் றெடியாத்தான் இருக்கு"

"பிரச்சினையில்ல. நீங்கள் அப்படியே நீல்லுங்கோ"

வந்த பதில் இதுதான். சண்டையில் மும்முரமாக இருந்ததால், வேறு எதுவும் கதைக்கவில்லை. எமது அணிகள் முன்னேறிக்கொண்டிருப்பதாகவே தொலைத் தொடர்புக் கருவிகள் சொல்லின.

'எதுக்கும் நாங்கள் ரெடியாக இருப்பம்'

என்றவாறு அணிகளைத் தயார்ப்படுத்திவிட்டுக் காத்திருந்தார் தமிழ்செல்வி. எனினும் ஏன் இன்னும் தாக்குதலைத் தொடங்கும்படி கட்டளை வரவில்லை என்ற கவலை எல்லோரினது பொறுமையையும் சோதித்துக் கொண்டிருந்தது. காதில் விழுந்துகொண்டிருந்தது களநிலவரம்.

மறுநாள், காத்திருந்த இவர்களைத் தாக்குதலுக்குத் தயாராகும்படி தகவல் வந்தது. துணுக்காய்–நட்டாங்கண்டல் வீதியை மையப்படுத்தியே அணிகள் நின்றதால் அவ்வீதிக்கு இடமும் வலமுமாக உடைப்புப் பாதைகள் தெரிவுசெய்யப்பட்டன. வலதுபுறமாக 500மீ. இல் தெரிவு செய்யப்பட்டிருந்த பாதையைச் செக்ஷன் கட்டளை



படிப்பகம்

padippakam



அதிகாரி விடுதலையும், இடதுபுறமாக 500மீ. இல் தெரிவு செய்யப்பட்டிருந்த பாதையை வேவு அணிக்குப் பொறுப் பாக விருந்த செந்தாமரையும் உடைப்பதெனத் தீர்மானிக் கப்பட்டு, அதற்குரிய ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அப்பகுதி முழுவதும் காடாக இருந்ததால் தாக்குதலைப் பகலில் ஆரம்பிப்பதே பொருத்தமாக இருந்தது.

மறுநாள் அதிகாலையிலே, தயார்ப்படுத்தப்பட்ட அணிகள் முன்னே நகர, எட்டு மணியளவில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. வீதிக்கு வலது பக்க முள்ள பாதை மிகவேகமாக உடைக்கப்பட, அணிகள் வேகமாக உள்ளே புகுந்தன. இடதுபக்கப் பாதை உடைக்கப்பட்டுக்கொண்டி ருக்கும்போதே வான் படையின் உலங்குவானூர்திகள் அப்பகுதியில் கடுமையான தாக்குதலைச் செய்யத்தொடங் கவே, பாதை உடைப்பு அணியினர் காயமடைந்தனர். இதனால் அப்பகுதியிலிருந்து விலகி, முதலில் உடைக் கப்பட்ட வலதுபக்கப் பாதையினூடாக அணிகள் உள்ளே நகர்ந்தன.

இராணுவ முன்னரங்க நிலையின் வலதுபக்கக் காப் பரண்களைக் கொம்பனியின் கட்டளை அதிகாரி மேஜர் லக்சனாவுடன் போனவர்கள் கைப்பற்றிச் செல்ல, மறு பக்கம் காப்பரண்களைநோக்கி மேஜர் மாதுரியுடன் ஒரு அணி நகர்ந்தது. இருபுறமுமே முன்னரங்கினை ஊடறுக் கின்ற பல அருவிகளைத் தாண்டியே 50மீ. இடைவெளி களில் அமைக்கப்பட்டிருந்த பகைக் காப்பரண்களைக் கைப்பற்றவேண்டியிருந்தது. எந்தவொரு காப்பரணையும் உடனேயே கைவிட்டு ஓடிவிட இராணுவமும் தயாராக இருக்கவில்லை. இயன்றவரை அவர்கள் பதில் தாக்கு தலைத் தொடுத்தனர்.

முன்னணி நிலையின் நிலவரம் இவ்வாறிருக்க, கொம்பனி மேலாளர் தமிழ்செல்வி ஒரு அணியை வழி நடத்தியவாறு பனங்காம வீதியால் நேரே முன்னேறினார்.



படிப்பகம்

padippakam



வீதிக்கு இருபுறமும் அடர் காடாக இருந்தமையால் படைத்தரப்பு அதனைப் பயன்படுத்த முனையவில்லை. அதனால் காடுகளூடாக நகரவேண்டிய தேவை எமது அணியினருக்கும் இருக்கவில்லை. வீதிக்கு இருமருங்கு மாகத் தாக்குதலுக்கேற்றவகையில் முன்னேறினர்.

மூன்று முனைகளால் முன்னேறிய அணிகளுக்கு தேவிகாவின் 82மி.மீ. எறிகணை செலுத்தி உட்பட, 120மி.மீ. எறிகணை செலுத்திகளும் உரியமுறையில் சூட்டாதரவை வழங்கிக்கொண்டிருந்தன. பனங்காம வீதி யால் முன்னேறிய தமிழ்செல்வியின் அணி கிட்டத்தட்ட 500மீ. நகர்ந்திருக்கும். எதிர்ப்பு அதிகமாகத்தொடங்கியது. வீதியை அண்டி அமைந்திருந்த ஒரு தளம்தான் அது. வீதியின் இரு பக்கங்களும் காடாக இருக்கவே, அந்தத் தளம்பற்றிய மேலதிக தகவல்களைப் பெறமுடியாதிருந்தது டன், கால இடைவெளியும் இருக்கவில்லை. அத்துடன் முன்னேறிய அணிகளுக்குப் படையினர் கடும் எதிர்ப்பைக் காட்டிக்கொண்டிருந்தனர். எனவே தாக்குதலணிகள் சற்று விலகி விலகி நகர்ந்து தாக்கியபடியே தளத்தின் பரிமா ணம், பயன்படுத்துகின்ற சுடுபொறிகள்பற்றிய தகவல் களைத் திரட்டிக்கொடுக்க, லெப்.கேணல் குட்டிசிறீ படை யணியைச் சேர்ந்த ஜெயம் முன்னணி அவதானிப்பாள ராக நின்று, உரிய இடங்களுக்கு எறிகணைகளை விழுத் திக்கொண்டிருந்தார்.

பெறப்பட்ட தகவல்களுக்கேற்ப அணிகள் பிரிக்கப்பட்டு முன்னேற ஆயத்தமாகியவேளை எம்மால் கைப்பற்றப் பட்ட பகுதிகளைநோக்கி இரு சண்டை உலங்குவானூர்தி கள் தாக்குதலைத் தொடுத்தன. அந்நேரம் சடாரென இன்னோர் உலங்குவானூர்தி தரையிறங்கியது. நாம் இதனை எதிர்பார்க்கவில்லை. எனினும் எறிகணை செலுத்திகளின் தாக்குதலை அதிகப்படுத்தினோம். நேரே அவதானிக்கமுடியாதிருந்ததால் அதனைத் துல்லியமாகத் தாக்கமுடியவில்லை. இறங்கிய வேகத்தில் யாரையோ



படிப்பகம்

padippakam



ஏற்றிக்கொண்டு அது பறந்துபோனது. ஏனைய இரண்டும் அந்தப் பகுதியையே சல்லையாக்கிவிட்டுக் கிளம்பியதைப் பார்க்க எரிச்சலாக இருந்தது. மூன்று உலங்கு வானூர்திகளையும் விழுத்துவதற்குக் கிடைத்த அருமையான வாய்ப்பு, அந்நேரம் எங்களிடம் ஏவுகணைகள் இல்லாததால் கோட்டைபோனது.

பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உடனேயே அணிகளைப் பிரித்து, நகர்த்தித் தாக்குதலைக் கடுமையாக்கினோம். உள்ளே நுழைந்து ஒவ்வொரு காப்பரணாகக் கைப்பற்றிக்கொண்டுவர, தளத்தின் மையப் பகுதியுள் இறங்கிய அணி அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோது மதியம் கடந்திருந்தது. அத்தோடு எஞ்சியிருந்த இராணுவத்தினர் தப்பிப் பிழைப்பதற்காகக் காடுகளாலும், வீதிகளாலும் வவுனியாவைநோக்கி ஓடத்தொடங்கினர்.

மீண்டும் அணி நகரத்தொடங்கியது. வீதியாலேயே பின்வாங்கிய இராணுவம் இடையிடையே சிறியரக எறிகணை செலுத்திகளை நகர்த்தி எமது பகுதி நோக்கி எறிகணைகளை வீசியபடியே சென்றுகொண்டிருந்தது. இதனால் எமது வேகமும் சில இடங்களில் மட்டுப்படுத்தப்பட்டது. இந்நிலையில் இராணுவ முன்னரங்கிலிருந்து கிட்டத்தட்ட 2கி.மீ. தூரம்வரை நகர்ந்திருப்போம். முன்னே இராணுவத் தளம் ஒன்று இருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அத்துடன் ஊர்திகளின் சத்தமும், எறிகணை ஏவப்படும் சத்தமும் இணைந்து அது ஒரு பலமான தளம் என்பதை இனங்காட்டின. அவ்விடத்திலிருந்து சற்றுப் பரந்து நகரத்தொடங்கியதுடன், விரைவாக எறிகணைகளை வீசுவதற்கேற்றவகையில் இலக்குகளை அறிவித்தோம். அத்தோடு அவ்விடத்தில் பெரியதொரு சண்டை ஆரம்பமானது.



படிப்பகம்

padippakam



கனரகச் சுடுபொறிகள் முழங்க, சீறிப்பாய்ந்த சன்னங்களால் பல படையினர் மாண்டுபோயினர். படைத்தரப்பு என்னதான் எதிர்ப்பைக் காட்டினாலும், எமது பாய்ச்சலின் முன் தாக்குப்பிடிக்கமுடியவில்லை. ஈற்றில் அங்கிருந்தும் அவர்கள் பின்வாங்க வேண்டியதாயிற்று. மாலை கடந்து இருளும்முன்னரே, அந்தத் தளத்தில் எமது பாதங்கள் பதிந்தன. உள்ளே காயமுற்று ஊர்திகளில் ஏற்றப்பட்ட படைவீரர்கள் ஊர்திகளிலேயே இறந்துகிடந்தனர். சுடுகலனுடனும், இன்றியும் ஆங்காங்கே உடல்கள் சிதறிக் கிடந்தன. தமிழ்செல்வியின் கொம்பனியில் ஒரு பிளாட்டூன் மட்டுமே இதுவரை உட்பகுதி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. இராணுவத்துடன் ஒப்பிடும்போது அது ஒரு சிறிய தொகையே. அத்துடன் காயம், வீரச்சாவு எனவும் சிலர் களமுனையிலிருந்து நீங்க, ஆளணி இன்னும் குறைந்திருந்தது. இதனால் இராணுவம் எம்மிடமிருந்து தப்பிச் செல்லும் வாய்ப்பே அதிகமாக இருந்தது. ஆகவே முன்னரங்கைக் கைப்பற்றும் பணியில் ஈடுபட்டிருந்த மாதுரியின் அணியைத் தன்னோடு இணையும்படி தமிழ்செல்வி கட்டளையிட்டார்.

ஏற்கனவே நின்ற அணி இன்னும் முன்னோக்கி நகரத் தொடங்கியது. ஒரு கிலோமீற்றர் தூரம் நகரும்போதே இருள் படரத்தொடங்கியது. அதேநேரம் அப்பாலுள்ள பகுதி கண்ணுக்கெட்டிய தூரம்வரை வெளியானதாகத் தெரிந்தது. எனவே அன்றைய நகர்வை அத்துடன் நிறுத்துவது எனத் தீர்மானித்தோம். இதற்கு வேறு பல காரணங்களும் இருந்தன.

எமது முன்னரங்கிலிருந்து நீண்ட தூரம் விலகிவிட்டதால் எறிகணை செலுத்திகளுக்கான சூட்டுத் தூரம் அதிகரிக்கத்தொடங்கியது. இன்னும் மேலே நகர்ந்தால் சூட்டாதரவைப் பெறமுடியாமல் போய்விடும். அதேநேரம் அவற்றைத் தேவையான இடத்துக்கு வேகமாக நகர்த்துவதற்கேற்ப ஊர்திகளும் இல்லாதிருந்தன. எறிகணை



படிப்பகம்

லக்சனாவின் அணியும் வந்து எம்மோடு சேர்ந்தது. மேலதிகமாக லக்சனாவின் அணியும் இணைந்ததால், தப்பி ஓடி வந்த படையினருக்கு இங்கு வைத்துத் தக்க பாடம் கற்பிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் நள்ளிரவு கடக்கும்வரை காத்திருந்தோம்.

விட்டுவிட்டுத் தூறும் மழையுடன் இரவு கடந்தது. நான்கு மணியாகியிருக்கும். நகர்வுக்குத் தயார்ப்படுத்தப்பட்ட அணிகள் பழக்கப்படாத அவ்விடத்தின் இருளைக் கூர்ந்துநோக்கி, அதற்குள்ளே சூழலை இனங்கண்டு சென்றுகொண்டிருக்க,

"இன்னும் ஐநூறு மீற்றரில்தான் பாடசாலை இருக்கிறது"

என அணித்தலைவர்கள் கூறிவிட்டு, தாக்குதலுக்கு ஏற்ற வகையில் அணிகளை நகர்த்தினர்.

ஐநூறு மீற்றர் நானூறு மீற்றராகி, நானூறு மீற்றர் முந்நூறு மீற்றராகி, பிறகு இருநூறாகி, என்ன... எந்த விதமான அறிகுறிகளையும் காணவில்லையே என்று சிந்தித்தபடி சென்றோம்.

நூற்றைம்பது, நூறு தொண்ணூறு, எண்பது... இன்னும் படையினரின் எதிர்த்தாக்குதல் தொடங்கவில்லை. பகை எம்மை எதிர்பார்த்து அமைதி யாகப் பதுங்கியிருக்கிறதா? இருள் இன்னமும் விலகத் தொடங்காதபடியால், முன்னேயிருந்த வேலிகளையும் பற்றைகளையும்மட்டுமே பார்க்க முடிந்தது. விடயத்தைக் கட்டளைப் பீடத்துக்கு அறிவித்து விட்டு நகரத் தீர்மானித்தோம். அதற்கான கட்டளையும் கிடைத்தது.

இப்போது நீண்ட தூரத்தை அவதானிக்கக்கூடியவகையில் பொழுது புலர்ந்தது. ஒவ்வொரு பகுதியூடாக

padippakam



அணிகள் முன்னேறின. ஆனால், பாடசாலையினுள் ஒருவரையும் காணவில்லை. இராணுவம் விட்டுச்சென்ற தடயங்கள் மட்டுமே சிந்திச் சிதறிக் கிடந்தன. இராணுவம் அதிகாலையிலேயே புறப்பட்டிருக்கவேண்டும்.

"என்ன அருமையான சந்தர்ப்பம். எல்லோரும் களைச்சு விழுந்து வந்து இருந்திருப்பினம். கொஞ்ச நேரம் முந்தி வந்திருக்கலாம்"

என்று கவலைப்பட்டுக்கொண்டோம். சற்று அப்பால் சென்று அங்கே நின்ற மக்களிடம் நிலைமையை விசாரித்தோம். இராணுவம் விடியமுன்பே புறப்பட்டு விட்டதாகத் தகவல் சொன்னார்கள். இன்னும் நிற்காமல் மாஓசேதுங்கின் செஞ்சேனைப் பேரணிபோல நகர்ந்துகொண்டிருந்தோம்.

அந்தநேரத்தில் வவுனியாப் பகுதியிலிருந்து எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நகர்ந்துவந்த மக்கள் சிலர் தந்த தகவல், இன்னும் நான்கு கி.மீ. தூரத்தில் இராணுவம் புதிய நிலைகளை அமைத்துக்கொண்டிருக்கிறது என்பதே. பனங்காமத்தில் தாக்குதல் தொடங்கி இராணுவம் பின்வாங்க ஆரம்பித்தபோதே பாதுகாப்பு அரணமைக்கும் பணி தொடங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதால் அவை மிகவும் பலமாகத்தான் இருக்கும் என்பது புரிந்தது. ஏனெனில் வவுனியா வலயத்தினுள்தான் இப்போது தாக்குதல் மையம் நகர்ந்துவந்திருந்தது. இராணுவத்தினருக்கு இனிமேல் பின்னணி வழங்கல் நடவடிக்கைகள் இலகுவாக இருக்குமென்பதால் எமது பலத்தை அதிகரிக்கவேண்டிய தேவையை உணர்ந்தோம்.

அதேநேரத்தில் மதி நுட்பத்தோடு சமர்க்களத்தை வழிநடத்திக்கொண்டிருந்த தலைவர் அவர்கள், சமர் முனையின் திசையை மாற்றினார்



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

போர் முழக்கம்-05 முறியடிப்பின் பின் சில நாட்கள்வரை பள்ளமடுவில் நின்ற மைதிலி, ஓயாத அலைகள்-03 நடவடிக்கைக்காக, விதுஷா கேட்டுவிட்ட தொகைப் போராளிகளை அழைத்துக்கொண்டு ஒட்டுசுட்டானுக்குப் போய்விட்டிருந்தார். இப்போது எஞ்சிநின்றது கீர்த்தியின் பிளாட்டூன்மட்டுமே. இவர்களுக்குரிய கட்டளையதிகாரியாக நின்றது, குறிப்பிட்டகாலம் எமது வேவுப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த மேஜர் அரசி. தான் போகும்போது தமிழ்முரசுவின் PK LMG இனை இவர்களுக்கு உதவியாக விட்டுச் சென்றிருந்தார் மைதிலி.

இங்கு நின்றிருந்த ஒரு பிளாட்டூன்கூட இரு பகுதிகளில் பிரிந்தே நின்றது. பள்ளமடுவுக்கும் கள்ளியடிக்குமிடையே நிலைப்படுத்தப்பட்டிருந்த எமது எறிகணை செலுத்தி ஒன்றுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக ஒரு செக்ஷனுடனும் PK LMG உடனும் பள்ளமடுச் சந்திக்கருகே கீர்த்தி நின்றார். ஏனையவர்கள் அரசியுடன் பெரியமடுநோக்கிய திசையில் முன்னரங்கநிலைகளில் நின்றனர்.

கூடவே நின்ற ஜெயந்தன் படையணி, மன்னார் தாக்குதலணி, நாங்கள் எல்லோரும் முன்னர் தொடராகத்தான் நிலையமைத்திருந்தோம். ஒட்டுசுட்டானில் மூன்றாவது அலைகள் வீசத்தொடங்கியபோதுதான் எம்மைப் போலவே ஏனையவர்களும் அங்கே ஆட்களை அனுப்பி, இங்கே தொகை குறைந்துபோனதால் சிறு குழுக்களாகப் பிரிந்து வேறு வேறு இடங்களில் நிலைகொண்டிருந்தனர். நாங்கள் தேவைகருதி இப்போது வேவு அணிகள்போலக் கண்காணிப்புச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டிருந்தோம்.

பள்ளமடுச் சந்தியிலிருந்து, பாப்பாமோட்டை வீதியில் எவ்வளவு தூரத்தில் இராணுவம் தற்போது நிலைகொண்டிருக்கின்றது என்பதை வேவு பார்க்கும்படி கீர்த்தியை அப்பகுதியின் நடவடிக்கைப் பொறுப்பாளராக இருந்த லெப்.கேணல் லக்ஸ்மன் பணித்தார்.

padippakam



ஓயாத அலைகள்-03 நிலமீட்புச் சமரின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பிப்பதற்காக நாலைந்து பேரைக் கூட்டிக் கொண்டு கீர்த்தியே வேவு நடவடிக்கையில் ஈடுபட்டார்.

பதினோராம் மாதத்துக்கே உரியதான மழை வெள்ள மும் பசுமையாய் வளர்ந்து நிற்கும் புற்களும் பற்றைகளும் மன்னார் மண்ணுக்கே உரித்தான வரள் நிலத் தாவரமான இராவணன் புற்களும் நிறைந்த பகுதியினூடே, கீர்த்தி யோடு நாங்கள் நகரத்தொடங்கினோம். நாங்கள் புறப்பட்ட தும் எறிகணை செலுத்தும் அணி, முன்னரங்கக் காப்பு நிலைக்கு நகர்ந்துவந்து நிலையெடுத்துக்கொண்டது. வேவு நடவடிக்கையில் ஈடுபடுகின்ற எங்களுக்குச் சூட்டா தரவு வழங்கவேண்டியவர்கள் இவர்களே.

பாப்பாமோட்டைக்கும், பள்ளமடுவுக்கும் இடையில் நாயாற்றுவெட்டையில் இருந்த பாலத்தடிக்கு மேஜர் அரங்கநாதனின் வேவு அணியுடன் நாங்கள் போய் விட்டோம். இராணுவம் கடைசியாக வந்து பிடித்துக் கொண்ட இடங்கள் அவை. அவர்களும் முற்றுமுழுதா கக் காப்புநிலைகளை அமைத்துமுடிக்கவில்லை. அந்த இடங்களூடாக ஊடுருவித்தாக்கலாமா என்று அவர்களின் பலவீனங்களை நாங்கள் தேடினோம்.

கார்த்திகை மாதத்து மழை இருட்டு. ஏற்கனவே எறி கணை வீச்சால் உண்டான குழிகளெல்லாம் மழைநீரை நிரப்பிச் சிறு குட்டைகளாக உருமாறிக்கொண்டன. விடத்தல் பற்றைகள் எங்களைக் குத்தி இழுப்பதற்குத் தயாரானநிலையில். வெள்ளை நிறத்தில் நீட்டிக்கொண்டி ருந்த இராவணன் மீசை முட்கள் கால்வைக்கும் இட மெல்லாம் எமக்குத் தொல்லையைத் தந்துகொண்டிருந்தன. மிக மிக அவதானமாக, படையினருக்கு எந்த ஓசையும் கேட்காவண்ணம் தொடர்ந்து நடந்தோம்.

பகைக் காப்பரண்களுக்கு மிகக் கிட்டவாக வந்து விட்டோம்.



படிப்பகம்

padippakam



"உஷ்... அதில் சத்தம் கேட்குது. நிண்டு பார்ப்பம்"

அந்த இடத்தில் இருவரைக் காப்பாக நிறுத்தி, அவ் விடத்தின் ஆள்கூறைக் கணிப்பிட்டு எறிகணை ஏவு தளத்துக்கு அறிவித்துவிட்டு, முன்பகுதிநோக்கி ஏனையவர்கள் நகர்ந்தோம்.

நாயாற்றுப் பாலத்தையண்டிய வெட்டையின் உவர் மணற்பரப்பு நீரைத் தேக்கிவைத்துப் பளபளத்துக் கொண்டிருந்தது. பாலத்தை இலக்குவைத்து நகர்ந்தோம். படைத்தரப்பு பாலத்தைத் தமக்குள் வைத்துக்கொண்டு, அதை மேவி முன்புறமாக அவதானிப்பு நிலையை அமைத்திருந்தது. அவர்கள் இருப்பதை முதலில் நாங்கள் காணவில்லை. நிலத்தோடு நிலமாக இருந்து அசைவை அவதானிக்கத்தொடங்கினோம். கீர்த்தி சுற்றும் முற்றும் பார்ப்பதற்காக இடது பின்பக்கமாகத் திரும்பியபோது ஒரு சிறு ஒளிர்வைக் கண்டுவிட்டார்.

"அங்க, அதில மின்னிப் பூச்சிமாதிரி வெளிச்சம் தெரியுது"

அந்த வெளிச்சம் ஓரிடத்திலேயே இருந்தது. இப்போது தான் எமக்கு அது படையினர் புகைத்துக்கொண்டிருந்த சிகரெட்டின் ஒளி என்பது புரிந்தது. படையினர் பக்க வாட்டாக எங்களுக்குப் பின்னுக்கு. நாங்களோ அவர் களுக்கு முன்னுக்கு. படையினர் சுட்டால் எங்களில் எவ ரும் தப்பியிருக்கமாட்டோம். நிலைமையைக் கீர்த்தி மெல்ல அரங்கநாதனிடம் கூறினார்.

அந்த இடத்தின் ஆள்கூறைக் கணித்துக்கொண்டு அடுத்தகணமே பின்னுக்கு வந்தோம். ஏற்கனவே காப்பு விட்டிருந்த இடத்தில் நின்றவர்களும் சென்றவழியே வந்துசேர்ந்தனர்.



படிப்பகம்

padippakam



அடுத்த கட்டமாக அந்த இடம் முழுவதும் எறிகணை களை வீசிப் படையினரைத் தொல்லைப்படுத்திச் சேதத் துக்குள்ளாக்கத்தொடங்கின எமது எறிகணை செலுத்திகள்.

மீளவும் பள்ளமடுவுக்கு வந்த நாங்கள் மறுநாள் சன்னார் குளத்தைநோக்கி வேவுக்காக நகர்ந்தோம். முன்னர் ஜெயந் தன் படையணி போர் முழக்கம்-05 இன்போது காப்பு நிலையமைத்திருந்த இடத்துக்கு வந்து நின்றோம்.

அந்தப் பழைய காப்பரண்களில் படையினர் எவரும் இல்லை என்பதைத் தேடுதல் நடவடிக்கைமூலம் உறுதி செய்துகொண்டு, அவற்றிலே நின்றவாறு படையினரின் முன்னரங்கை அவதானித்தோம். குளத்து மண்ணணைக்கு மேல் காப்பரண்கள் அமைத்துப் படையினர் நிலைகொண் டிருந்தனர். பரவலாக அவர்களது நிலைகளைநோக்கிச் சூடுகளை வழங்கினோம்.

வேவுத் தகவல்களுக்காகப் பட்டப்பகலில் அந்த இடங் கள் முழுவதும் அலைந்துதிரிந்தோம். குளத்தை அண்டிய பள்ளப் பகுதியில் நீர் தேங்கிநின்றது. வௌவால்கள் எச்சங்களிட்டுத் தேங்கிப்போய்க் கிடந்த நீர் வயிற்றைக் குமட்டுமளவுக்கு அருவெறுப்பைத் தந்தது. அவற்றைப் பொருட்படுத்தாமல் அந்த இடங்களில் நின்று அவதானித் தோம். காடு கரம்பை எல்லாம் திரிந்தோம்.

அப்படியே தொடராக அமைக்கப்பட்டு, எமதணிகளால் கைவிடப்பட்டிருந்த பழைய காப்பரண்களில், மறுநாளும் தேடல் பணியில் ஈடுபட்டோம். கடைசிக் காப்பரண்வரை போய் தேடல் பணியை முடித்த கீர்த்தி அவற்றிலே படையினர் எவரும் இல்லை என்பதைக் கட்டளைப் பணியகத்துக்குத் தெரியப்படுத்தினார்.

எமது காப்பரண்களுக்குச் சிறிது தூரம் முன் சென்று சூடுகளை வழங்கித் தொந்தரவினை ஏற்படுத்தும்படி



படிப்பகம்

சொல்லப்பட்டது. நாங்கள் எறிகணைகளை விழுத்தி, RPG களை ஏவி, சூடுகளைத் தொடராகக் கொடுத்தோம்.

குறிப்பிட்ட நேரம்வரை அதில் நின்று தாக்கிவிட்டு பள்ளமடுச்சந்திக்கு அருகே வந்துசேர்ந்தோம். பின் அரசியுடன் இணைந்துகொண்டோம்.

மறுபடியும் வேவுக்காக ஐந்துபேருடன் கீர்த்தி சென்றார். அதேநேரம் அப்பகுதிகளில் நிலைகொண்டிருந்த அரசியின் அணியும் ஆண் போராளிகளும் அணிகளாகப் பிரிந்து வெவ்வேறு முனைகளால் அந்த இடத்தை முழுவதுமாய் வேவுபார்த்தோம்.

முன்னர் நாம் பெரியமடுவில் அமைத்திருந்த காப்பு நிலைகளிலிருந்து படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனரா, இல்லையா என்று தெளிவாகத் தகவல் திரட்டவே பெரியமடுவை அண்டிய பகுதிக்கு நகர்ந்தோம்.

எங்களின் நகர்வு அடர்ந்த காட்டுவழியே அமைந்தது. கொண்டுசென்ற நீர் வழியிலேயே முடிவடைந்துவிட்டது. தாகம் எல்லோரையுமே வாட்டி எடுத்தது. சற்றுத் தள்ளி ஒரு மோட்டையைக் கண்டோம். இனி ஒன்றும் செய்ய இயலாது. அதுதான் தாகம் தீர்க்கும் அமுதம். மழை பெய்து மண் கரைந்து களியாகிக் கலங்கிய மஞ்சள் நிறத்தில் தண்ணீர் தேங்கிக்கிடந்தது. சேறு புதைக்கப் புதைக்கப் போய் நடுப்பகுதியிலிருந்த நீரை எடுத்துவந்து நீர்ச் சுத்திகரிப்பு வில்லைகளைப் போட்டுக் குடித்தோம்.

வேவுக்கான நகர்வு தொடர்ந்தது. வழியில் மனிதக் கழிவைக் கண்டு விழிப்படைந்தோம். தொடர்பெடுத்து அந்த ஆள்கூறைத் தெரியப்படுத்தியபின் கீர்த்தி அதையண்டிய பகுதியில் காப்புநிலைகளை விட்டு, சிறிது நேர அவதானிப்பின்பின்னர் எந்த அறிகுறிகளையும்

padippakam



காணவில்லை என்பதால், மிக அவதானமாக மெல்ல மெல்ல நகர்ந்து பார்த்தபோது, படையினர் அந்த இடங்களை விட்டு அப்போதுதான் பின்வாங்கிச் சென்றிருந்தது தெரிந்தது.

நிலைமையைக் கட்டளை நிலையத்துக்குக் குறிப்பிட்ட பின் மீளவும் அந்த இடங்களைக் கூர்மையாக அவதானித்தபடி முன்னே நகர்ந்தோம். இரண்டு கிலோமீற்றரைப் பக்கவாட்டாகக் கடந்தபின்னும் ஒரு படைவீரரையும் காணவில்லை. இப்போது எங்களின் விழிப்புநிலை சற்று மந்தநிலைக்குப் போகத்தொடங்கியது. தொடர்ந்தும் பார்த்துப் பார்த்து நகர்ந்தோம். அவ்விடத்தில் ஒரு மாட்டுவண்டி போகுமளவு அகலமான வீதி சென்றது. அதன்வழி சிறிது தூரம் நகர்ந்தோம். அவ்வளவுதான் விழுந்தது அடி. தொடராகச் சூடுகள் எம்மைநோக்கி வந்துகொண்டிருந்தன. எல்லோரும் சட்டெனத் திரும்பி வளைவாகச் சென்ற வீதிக்குள் புகுந்துகொண்டோம். இப்போது பார்த்தால் படையினர் நின்ற இடம் ஒரு உயரமான பகுதியாகத் தெரிந்தது. வெகு தொலைவிலேயே எங்களைக் கண்டு அவர்கள் தாக்கியதில் எந்த ரவையும் எங்களைத் தாக்கவில்லை. அவ்விடத்தைவிட்டுப் பின்னகர்ந்தோம்.

எல்லோரும் அவ்விடத்திலே மூன்று பக்கங்களிலும் நிலையெடுத்து நின்றோம். எங்களுடன் கப்டன் தமிழ்முரசுவின் PK LMG தயாராக நின்றது.

பதுங்குகுழிகள் எதுவும் இல்லை. ஓர் அருவியைப் பாதுகாப்பாகவைத்தே அதற்குள் அன்றிரவு நிலைகொண்டிருந்தோம். அன்றைய பகல்முழுதும் நீரின்றி நாவரண்டிருந்தோம்.

இரவு வெள்ளிகள் எல்லாம் ஓடி ஒளித்துக்கொண்டன. வெறும் வானம் கார்த்திகை இருட்டைக் கவ்விக்கொண்டிருந்தது. எட்டு மணிக்கெல்லாம் கொட்டத் தொடங்கியது



படிப்பகம்

மழை. ஆயுத வெடிபொருட்களும் நாங்களும் நனைந்து போயிருந்தோம். பின்பு இரவு ஒரு மணிக்கெல்லாம் உடற் சூட்டில் உடைகள் காய்ந்துவிட்டிருந்தன. அது ஒரு மணித் தியாலம்தான் நீடித்தது. மீண்டும் மழை கொட்டத்தொடங்கி யது. நனைந்தோம். உலர்ந்தோம். மறுபடியும் மறுபடியும் இது நிகழ்ந்துகொண்டிருந்தது. ஏற்கனவே நாங்கள் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடந்திருந்தோம். மழை யில் நனைந்தது களைப்பை ஏற்படுத்தியிருந்தாலும் அதற் காக ஓய்ந்துபோகவில்லை.

மறுநாள் ஆறுமணிவரை இருள் அகலாதிருந்தது. மரங் களிலிருந்து மழைநீர் கொட்டிக்கொண்டே இருந்தது. தேநீர் தயாரிப்பதற்கான எந்த வசதியும் இல்லை. நாக்கு, தேநீருக்காகத் தவித்துக்கொண்டிருந்தது. எம்மிடமிருந்ததோ உலர் உணவுகள்மட்டுமே. அவைகூடப் பாதி நனைந்தபடி யும் மீதி உதிர்ந்துபோயும் உண்ணமுடியாத நிலையில் இருந்தன. ஒளிக்கீற்றுக்கள் மரக் கிளைகளின் ஊடாக வந்து எங்களை மெல்லத் தொட்டன. அப்பாடா! விடிந்து விட்டது.

கட்டளைப் பணியகத்திலிருந்து லெப்.கேணல் லக்ஸ் மன் எங்களின் அணிக்கு உணவுகளை அனுப்புவதாகவும், அந்த இடத்திலே நிலைகொள்ளும்படியும் தெரிவித்தார். அன்று பகல் எங்களுக்கு உணவும் நீரும் வந்துகிடைத் தது.

மீளவும் அப்பகுதியில் எல்லா இடங்களையும் போய்ப் பார்த்து இராணுவம் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டோம். மழையில் நனைந்த நடைபேசி இயங்க மறுத்துவிட்டது. எங்களின் தொடர்பு கட்டளைப்பீடத்துக்கு இனிக் கிடைப்பது கடினம். மறுபடியும் இருந்த இடத்துக்கே நடக்கத்தொடங்கினோம். காடுகளை ஊடறுத்துக் குறுக்கு வழியில் திசைகாட்டியின் உதவியுடன் வந்துசேர்ந்தோம்.

padippakam



ஒருவாறு எங்களின் தொடர்பைப் பெற்றுக்கொண்ட கட்டளைப்பீடம் எல்லோரையும் ஒன்றுகூட்டியது. மறுநாள் ஆடலும் பாடலுமாய்ப் புரியாணி சாப்பிட்டு, படம் பார்த்து ஒருநாள் ஓய்வு எடுத்தோம்.

எல்லோரையும் வரும்படி லெப்.கேணல் லக்ஸ்மனின் அறிவித்தல் வந்தது. நாங்கள் போய்ச் சிராட்டிக்குளத்தில் நின்றோம்.

1999.11.18 அன்று விடிகாலை மன்னாரில் தொடங்கிய அலையின் அடிகள் போர் முழக்கத்தால் நிலத்தை விழுங்கிக்கொண்ட படையினருக்கு உயிரை விடுவதா, ஓடித் தப்புவதா என்ற இரண்டிலொரு முடிவை எடுக்க வற்புறுத்தும் சண்டையாக இருந்தது. புலிகளின் போர்க் குணத்தைப் புரியவைப்பதற்கான நடவடிக்கையாகவும் அமைந்தது.

மன்னாரில், அப்பகுதி எங்கும் சிறீலங்காப் படையினரின் 21 ஆவது டிவிசன் நிலைகொண்டிருந்தது. சண்டை பற்றிய முன்னறிவிப்போடும்,. அதை எதிர்கொள்வதற்கான படைவலுவோடும் எமக்காகக் காத்திருந்தனர் படையினர்.

தலைவர் அவர்கள் ஏற்கனவே எமது சிறப்புத் தளபதி கேணல் விதுஷாவிடம் விளக்கிய திட்டப்படியே, நாங்கள் தாக்குதலில் இறங்கினோம்.

18 ஆம் திகதி விடிகாலை இரண்டு மணிக்குத் தாக்குதலைத் தொடங்குவதெனத் தீர்மானித்திருந்தோம். முன்கூட்டியே சிறாட்டிக்குளப்பக்கம் வேவுபார்த்துப் பாதை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உடைப்பை ஏற்படுத்தப்போகும் இடத்துக்குச் சற்றுப் பின்னே அணிகளை விட்டுவிட்டு, இரண்டொருவர் முன்பகுதிக்கு நகர்ந்து நிலைமை பார்த்து, அதன்பின் தாக்குதலை ஆரம்பிக்கவேண்டும் என்பதே எமது திட்டம்.



படிப்பகம்

தடைகளைத் தகர்த்து உள்நுழையும் பயிற்சியை ஏற்கனவே முழுமையாகச் செய்த கீர்த்தியுடன் ஐந்து பேர் கொண்ட அணியும், 4:1 படையணியைச் சேர்ந்த ஐந்து பேர்கொண்ட உதவியணியுமாக நகரத்தொடங்கினோம்.

வழியில் பறங்கியாற்றைக் கடந்து நாம் செல்லவேண்டும். மழை வெள்ளத்தால் பெருகிப் பேரோசையுடன் ஓடிக்கொண்டிருந்த ஆற்றைக் கடக்க ஒரே ஒரு காட்டுத் தடிதான் போடப்பட்டிருந்தது. ஆற்றங்கரையில் சறுக்கியவர்களும், நடக்கும்போது கால் புதைந்து விழுந்தவர்களும், காட்டுத்தடியின் நடுவில் போகும்போது தள்ளாடி விழுந்தவர்களுமாய்ப் பெரும் சிரமப்பட்டே ஆற்றுக்கு அப்புறம் போனோம். PK LMG க்கான ரவைகள் அடங்கிய பெட்டியுடன் வந்தவர் நடுத்தடிக்கு வந்தபோது தடியின் ஆட்டத்தில் தொப்பென்று விழுந்தார். நீரில் தோய்ந்து எழுந்தவர்கள் ஈர உடைகளுடன் தொடர்ந்து நடந்தார்கள்.

கடைசியாகப் புறப்படப்போகும் இடத்தில்வைத்து வரைபடம் விளங்கப்படுத்தப்பட்டது. உடைப்பதற்கான திட்டத்தையும் கூறினார் லெப்.கேணல் லக்ஸ்மன்.

தடைக்கம்பிகள் இருக்கவில்லை. படையினர் தற்காலிகமாகவே அங்கு நிலையமைத்திருந்தனர். அதிகாலை இரண்டு மணிக்கெல்லாம் உடைத்து உள்நுழைய வேண்டும் என்று கட்டளை கிடைத்தது.

எமது அணி சிராட்டிக்குளத்திலும், ஜெயந்தன் படையணி பரப்புக்கடந்தானிலும் தாக்குதலை ஆரம்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

முன்னகர்ந்த அணி உற்றுப் பார்த்து நிலைமைகளை அறிந்துகொண்டது. கீர்த்தி இரண்டு பக்கமும் இரண்டு PK LMG களை நிலைப்படுத்தி, உடனேயே உடைத்து உள்நுழையத் தயார்நிலையில் இருந்தார். 2.30 மணிக்கு எங்களின் PK LMG கள் முதலில் முழங்கத்தொடங்கின.

padippakam





தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின்
முதல் பெண் மாவீரர்
2ம் லெப். மாலதி



2ம் லெப். மாலதி படையணியின்
முதல் மாவீரர்
கப்டன் கோபி

லெப்.கேணல் முகுந்தா



துணைத் தளபதி
லெப்.கேணல் ரத்தி





படிப்பகம்

padippakam

2ம்லெப். மாலதி படையணி




ஓயாத அலைகள் ~ 03 இல் முகாவில் பகுதியில்
1 ~ லெப். கேணல் சாந்தகுமாரி, 2 ~ கப்டன் அங்கயற்கண்ணி

ஓயாத அலைகள் ~ 03 இல் பரந்தனில்
1 ~ லெப். கேணல் மைதிலி, 2 ~ மேஜர் மாதுரி, 3 ~ லெப். அன்பினி






படிப்பகம்


துணைத் தளபதி
லெப். கேணல் நிஸ்மியா


துணைத் தளபதி
லெப். கேணல் மைதிலி


லெப். கேணல் சாந்தகுமாரி


தளபதி
லெப். கேணல் மதி


லெப். கேணல் காவியா

padippakam

2ம்லெப். மாலதி படையணி




எமது படையணியின் கனரக ஆயுத அணி. 1-மேஜர் பிரியங்கா, 2-கப்டன் குறிஞ்சி, 3-மேஜர் வதனி, 4-கப்டன் மதுவிழி, 5-மேஜர் மிதுலா

அணிநடையின் போது





படிப்பகம்

padippakam



நாங்களும் பலமாகத் தாக்கினோம். எமது எறிகணை செலுத்திகளும் பலமாகத் தாக்கத்தொடங்கின. ஆனால், படையினரும் கடுமையாக எதிர்ப்புக் காட்டிக்கொண் டிருந்தனர்.

எங்களின் தொடர்ச்சியான கடும் தாக்குதலின்பின் சிராட்டிக்குளத்தை விட்டு எடுத்தது பாதி, எடுக்காதது பாதியென ஓடினர் படையினர். உடனே இப்பகுதிக்குள் புகுந்து இடமும் வலமுமாக இவ்விரண்டு காப்பரண் களைத் தேடல் செய்துகொண்டிருந்தபோது பொழுது புல ரத்தொடங்கியது. காட்டின் ஈரத்தன்மை குளிர்ச்சியைத் தந்துகொண்டிருந்தது. எதிரியின் குகை என்று சொல்லக் கூடியளவுக்கு அங்கு மிதிவெடிகளோ, முட்கம்பிச்சுருள் களோ பெரியளவில் இருக்கவில்லை. அவை போர் முழக் கத்தில் வலிந்து பிடிக்கப்பட்ட இடங்கள். எனினும் பல மான பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. சிறிது தூரம்வரை தேடல் செய்து, காவல் விட்டுவிட்டு நின் றோம்.

பரப்புக்கடந்தான் பகுதிமுழுதும் எமது கைவசமாகிவிட் டது என்ற தகவல் காலையில் வானலையில் வந்தது. எங்களைச் சிராட்டிக்குளத்திலிருந்து பெரியமடுப் பகுதிக்கு வந்து அப்படியே பரப்புக்கடந்தான் வீதிக்கு வரும்படி கட்டளை கிடைத்தது.

நாங்கள் சிராட்டிக்குளப் படைத்தளத்தில் உடைப்பை ஏற்படுத்திய இடத்தில் நிரந்தரியுடன் ஐந்து பேரையும் லெப். மாதங்கியின் LMG யையும் காப்புக்காக நிறுத்தி விட்டு, நாம் புறப்பட்டோம். இலக்குகளைத் தேடித் தேடி நகர்ந்துகொண்டிருந்தோம். கீர்த்தியுடன் ஐந்து பேரும், அரசியுடன் மற்றவர்களுமாக முன்னேறினோம்.

ஒரு கிலோமீற்றர் தூரம் நகர்ந்தோமில்லை. காப்பு நிலைகளில் நின்றவர்களுக்கு விழுந்தது பெரும்அடி.



படிப்பகம்

padippakam



அவ்வளவுதான். கப்டன் சுவர்ணா அந்த இடத்திலேயே வீரச்சாவடைய, தமிழ்வேங்கைக்கு முதுகில் பெரிய காயம் உண்டானது. முன்னேறிச் சென்றுகொண்டிருந்த நாம் மிக வேகமாக ஓடி வந்தோம். சிறிது தூரத்தில் வைத்து தமிழ்முரசின் PK LMG அனலைக் கக்கியது.

எல்லோரும் பலமாகச் சூடுகளை வழங்கியவாறே காப்பு நிலைகளைநோக்கி ஓடினோம். ஐம்பதுக்கும் கூடுதலான இராணுவத்தினர் குவிந்தபடி வந்தனர். எம்மோடு நின்ற ஆண் போராளியின் RPG யும் சீறியது. படையினரின் பலம் சிதைக்கப்பட்டது. அந்த இடத்தில் அவர்களின் தொலைத்தொடர்பாளரும் கட்டளை அதிகாரியும் இன்னும் சிலரும் செத்துப்போய்க் கிடந்தார்கள். மிகுதிப்பேர் வழிதெரியாது இங்குமங்குமாய் ஓடுப்பட்டு, பின் சிறாட்டிக் குளத்திலிருந்து தள்ளாடியைநோக்கிக் காட்டினூடே தப்பி ஓடிக்கொண்டிருந்தனர்.

காயப்பட்டுப்போன தமிழ்வேங்கையை இப்போது காண வில்லை. அவர் இழுபட்டுப்போன தடங்கள்மட்டுமே இருந்தன. அந்த இடங்கள் முழுவதும் அலைந்து தேடி னோம். காடு, நீர்த்தேக்கம், படையினரின் பதுங்குகுழி கள், நகர்வகழிகள் எல்லா இடமும் தேடினோம். காண வில்லை. துயரத்தோடு மறுபடியும் பணிமுடிக்க நடந் தோம்.

சம்பவம் நடந்து பதின்மூன்று நாட்கள் கடந்தபின் அவ்வூரைச் சேர்ந்த எல்லைப்படை உறுப்பினரான ஐயா ஒருவர் அவ்விடத்துக்குச் சென்று ஏதோ பொருட்கள் எடுத்தபோது எலும்பும் தோலுமாய் ஓர் உருவம் அசை வதைக் கண்டார். வந்தவர் திரும்பி ஊருக்குப்போய் ஆட் கள் சிலரைக் கூட்டிவந்து பார்த்தார். அவர் அஞ்சி யதுபோல் அது பேயோ பிசாசோ அல்ல. ஒரு போராளி என்பது அப்போதுதான் புலனானது. அது வேறு யாரும்



படிப்பகம்

padippakam



அல்ல. காயப்பட்டவரைக் காணவில்லை என்று தேடாத இடம் எல்லாம் நாம் தேடிய தமிழ்வேங்கைதான்.

அத்தனை நாட்கள் மழையில் நனைந்து சேற்றுக்குள் குருதி இழப்புடன் இருந்தவருக்குக் காயம் பெரிதாகி அதற்குள் புழுக்கள்வைத்து மோசமான நிலையில் இருந் தார். உடனடியாகவே மருத்துவநிலைக்குக் கொண்டு வரப்பட்ட தமிழ்வேங்கை புத்துயிர் பெற்றெழுந்து தன் பணிகளைத் தொடர்ந்தார்.

தமிழ்வேங்கை காயமடைந்த சண்டையைத் தொடர்ந்து தமிழ்முரசின் PK LMG யோடு கீர்த்தியுடன் ஐந்து பேர் சிராட்டிக்குளத்திலிருந்து காட்டுவழியூடே பெரியமடு நோக்கி நகரத்தொடங்கினர். அந்நேரம் அரசியும் மற்றவர்களும் பெரியமடுநோக்கி காட்டின் வேறு பாதை களூடே முன்னேறினார்கள்.

பரப்புக்கடந்தானால் உடைத்து உட்புகுந்த அணி அங் கிருந்து பெரியமடுநோக்கித் திசைகாட்டியின் உதவியுடன் வருகிறது என்றும், விரைவாகவே அவர்களைச் சந்தியுங் கள் என்றும் எமக்குக் கட்டளைப் .பீடம் அறிவித்தது.

திசைகாட்டியைப் பார்த்தபடி கீர்த்தியுடன் நகர்ந்த ஐவரும், படையினரின் குறுந்தளம் ஒன்றைக் கண்டு அதைத் தாக்கியழிக்கத் தயாராகினர். அதேவேளை மாற்றுப் பாதையால் வந்த ஐந்து ஆண்போராளிகள் அதே தளத்தைக் கண்டு சற்றுத்தள்ளி நின்றார்கள். நாங் கள் அவர்களை இராணுவம் என்று எண்ண, அவர்கள் எங்களை அதுபோல எண்ண, இரு பகுதியினருமே அவ் விடத்தின் ஆள்கூறுகளைக் கட்டளை நிலையத்துக்குத் தெரியப்படுத்தினோம். இரு பகுதியினரும் அறிவித்த ஆள் கூறுகள் சிறு தூர இடைவெளியிலே இருந்ததைக் கவனித்த கட்டளைப்பீடம்,



படிப்பகம்

padippakam



"உங்கள்முன் நிற்பது எமதணியாக இருக்கும். அவ தானமாக நகருங்கள்"

என்ற கட்டளையை இருபகுதியினருக்குமே வழங்கிய தால், அன்று தப்பினோம். எங்களை நாங்கள் இனங் கண்டபின் குறுந்தளத்தைச் சென்றடைந்தோம். அதற்குள் படையினர் இல்லை என்பதை உறுதிசெய்துகொண்டு தொடர்ந்து நகர்ந்தோம்.

படையினர் தமது தளத்தை எமக்குச் சும்மாவிட்டுச் செல்லவில்லை. வீட்டு வாசற்படிச் சாக்கின் கீழ், அங்கே, இங்கே என்றெல்லாம் சூழ்ச்சிப் பொறிகள்.

"போன பாதையிலேயே போய்க்கொண்டிருங்கள் பெரியமடு வரும்"

என்று கட்டளைப் பீடம் அறிவித்தது. அதன்படியே தொடர்ந்து நகர்ந்தோம். இடையில் அரசியும் நாமும் காட்டுவழியிலே சந்தித்துக்கொண்டோம். இப்போது பத்துப்பேர் கீர்த்தியுடனும் மற்றவர்கள் அரசியுடனும் இரு பிரிவாகப் பிரிந்துகொண்டோம். அரசியின் அணியை பள்ளமடுவுக்குத் திரும்பி வரும்படி கூறப்பட்டது. அவர் கள் எம்மிடமிருந்து பிரிந்துபோக, பெரியமடு போகும் வீதியில் அரங்கநாதனின் அணியுடன் கீர்த்தியோடு நின்ற நாங்களும் தொடர்ந்து நகர்ந்தோம். அப்பொழுது தான் ஜெயந்தன் படையணி எங்களை வழியில் சந்தித்தது. எல்லோரும் சேர்ந்து காவல்விட்டு, ஒரு சில நிமிடங்கள் ஓய்வெடுத்தோம். நாங்கள் பெரியமடுவின் மையப்பகு தியை இன்னமும் சென்றடையவில்லை.

இப்போது பள்ளமடுவிலிருந்து நெடுஞ்சாலைவழியே அன்பரசி படையணி பெரியமடுநோக்கி முன்னேறி அப் பகுதிகளில் படையினர் நிலைகொண்டிருந்த முன்னரங்கக் காப்புநிலைகளைக் கைப்பற்றிக்கொண்டிருந்தது.



படிப்பகம்

padippakam



இதற்கிடையில் அங்கு போய்ச்சேர்ந்த அரசியின் அணி இவர்களுக்கு உதவியணியாக வந்துகொண்டிருந்தது.

சிராட்டிக் குளத்திலிருந்து இரவு பகல் பாராது தேடல் செய்தபடி களைப்போடும் தாகத்தோடும் சோர்வோடும் வந்த நாங்கள் பெரியமடுப் பகுதியில் ஒரு படைத்தளம் எரிந்துகொண்டிருப்பதைக் கண்டோம். அதற்குள் நாங்கள் நுழைந்தோம். படைத்தரப்பு போட்டது போட்டபடி ஓடித் தப்பியிருந்தது. நல்லவேளையாகச் சமையற்கூடம் எரியவில்லை. அப்போதுதான் சமையல் முடிந்திருந்தது. சூடுபறக்க வாளிகளுக்குள் வெள்ளையரிசிச்சோறும், மீன் குழம்பும் போட்டுவைத்தபடி இருந்தது. எங்களுக்குக் கடும் ஐயம் ஏற்பட்டது. சோறு சுடச்சுட இருக்கிறது. ஏதாவது நஞ்சை அதனுடன் கலந்திருப்பார்களோ? ‘சீ. இருக்காது’ என்ற எண்ணத்துடன் அதைச் சோதனை செய்து பார்த்தோம். பசிக்களையில் புசிக்கத்தொடங்கிவிட்டோம். காவல் கடமையில் நின்றவர்களும் மாறி உண்டார்கள்.

தண்ணீர் கொள்கலன்கள் யாவும், வெளியேறிச் சென்ற படையினரால் சுட்டு ஓட்டையாக்கப்பட்டிருந்ததால், குடிப் பதற்குத் துளியளவும் நீரிருக்கவில்லை. சேறும் சகதியும் நிறைந்த அந்தப் பாதைமுழுதும் படையினரின் ஊர்திகள் விட்டது விட்டபடி புதைந்தும் பொருட்கள் ஏற்றியது ஏற்றியபடியும் மணற் பாதையில் கிடந்தன.

இதேவேளை அரசியுடன் நின்றவர்கள் பள்ளமடுவி லிருந்து மறுபடி பாப்பாமோட்டைவரை தாக்கியழித்தல் நகர்வைச் செய்து இடங்களை மீட்டவாறு வந்து, பாப்பா மோட்டை – தேனுடையான் பகுதியில் காவல் விட்டு நின்ற னர். அங்கே எங்களுக்கு முன்னாலிருந்த பெரு வெளிக்கப் பால் மரக் கூட்டத்திடையே திருக்கேதீஸ்வரக் கோயிலின் கோபுரம் தெரிந்தது.



படிப்பகம்

padippakam



கீர்த்தியுடன் நகர்ந்தவர்கள் பெரியமடுப் பகுதியிலிருந்து ஆண்டான்குளம்நோக்கிக் காட்டுவழி போனோம். இடையில் படையினரை நாம் சந்திக்கவில்லை.

ஆண்டான்குளத்தில் 22 ஆம் திகதிவரை அந்தப் பகுதி முழுதும் தேடியழிக்கும் பணியில் ஈடுபட்டோம். தொகுதி தொகுதியாக வெவ்வேறு வழிகளில் போய்க்கொண்டிருந்த எங்களுக்கு எதிர்த் தாக்குதல்கள் அதிகமாகக் கிடைக்கவில்லை. அந்தப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினர் காட்டுவழியூடாகவும், பரப்புக்கடந்தானுக்கும் ஆட்காட்டிவெளிக்கும் இடைப்பட்ட இடங்களினூடாகவும் தள்ளாடியில் அமைந்திருந்த பெருந்தளம்நோக்கி வேகவேகமாகப் போய்க்கொண்டிருந்தனர்.

ஆண்டான்குளப் பகுதியில் வாழ்ந்த மக்கள் உயிலங்குளம் வழியாக மன்னார்த் தீவுக்கும், தட்சணாமருதமடு, மடுவுக்குமாகப் பிரிந்து வெளியேறிக்கொண்டிருந்தனர். படையினர் மன்னார் போகும் மக்களோடு கலந்து விட்டிருந்தனர். திருக்கேதீஸ்வரம், மாந்தைநோக்கியும் மக்களின் வாழிடங்களினூடே வெளியேறிக்கொண்டிருந்தனர்.

கார்த்திகை 23 ஆம் திகதி அமைதியாக விடிந்துகொண்டிருந்தது. சூட்டுச் சத்தங்கள் கேட்கவில்லை. சேவல்களின் கூவல் ஒலிகளும் பறவைகளின் கீச்சிடும் ஓசைகளும் குளிர்காற்றில் இலைகள் உரசும் ஒலிகளும் கேட்டுக்கொண்டிருந்தன. படையினரின் நிலையோ நேர்மாறாக இருந்தது. இயற்கையை இரசிக்க அவர்களுக்கு நேரமிருக்கவில்லை. இரவிரவாகத் தமது பொருட்களை ஊர்திகளில் ஏற்றிவைத்தபடி இருந்தனர்.

இனிச் சண்டை நடக்கப்போவது மக்கள் அதிகமாக நடமாடிக்கொண்டிருக்கும் ஆண்டான்குளம், அடம்பன் பகுதிகளுள். அடம்பன் நாற்சந்தியைப் படையினர் கடக்கும்வரை நாங்கள் பொறுமைகாத்தோம். சுட



படிப்பகம்

padippakam



முடியவில்லை. வீதிகளில் நாம் நின்றோம். படையினர் வீதிகளால் ஓடிக்கொண்டிருந்தனர். கூடவே மக்களும் நடமாடிக்கொண்டிருந்தனர். அதனால் மிகுந்த பொறுமை யோடு நாம் நிற்கவேண்டியிருந்தது.

பாடசாலைக்குள் மக்கள் கூடியிருந்தார்கள். அதன் அயலில் இராணுவம். அவர்களைச் சுட்டால், எம்மைத் திருப்பித் தாக்கும்போது மக்களில் சூடுகள் விழும். கண் மண் தெரியாமல் எறிகணைகளைப் படையினர் வீசுவார் கள். எங்களைவிட அதிகமாக மக்களே கொல்லப்படு வார்கள். எல்லாவற்றையும் மனதில்வைத்தே மிகவும் பொறுமை காத்தோம். மக்கள் ஒதுங்கிக்கொண்டதன் பின் மறுபடியும் ஓயாத அலைகள்-03 கட்டம் இரண்டு தொடர்ந்தது.

படையினர் கவச ஊர்திகள், ராங்கிகளில் போய்க் கொண்டிருந்தார்கள். அடம்பன் சந்தியிலிருந்து மாந்தை நோக்கிய திசையில் 500மீ. இல் கிடந்த தண்ணீர்த் தாங்கியடியில் நாங்கள் மீண்டுமோர் பெருஞ் சண்டையை எதிர்கொண்டோம். ஓடிக்கொண்டிருந்த இராணுவம் முழு வதுமாய் ஒரேயடியாகத் தள்ளாடிநோக்கிப் பாயாது, ஒரு தொகுதியினர் அடம்பன்-மாந்தை வீதியில் நிலைகொண்ட னர். கீர்த்தியுடன் போயிருந்தவர்கள் அதில்நின்று கடும் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். உலங்குவானூர்தி தாழப் பதிந்து எம்மைத் தலைநிமிர்த்தவிடாமல் தாக்கிக்கொண்டி ருந்தது. இராணுவம் சரமாரியாகச் சுட்டவாறிருந்தது. நாங்கள் முன்னோக்கி நகர்ந்து தாக்கியதில் கப்டன் அரச லாவும், சுடர்விழியும் அந்த இடத்திலேயே வீரச்சாவடைந் தனர். கீர்த்தி உட்பட சிலர் காயமடைந்தனர்.

அன்று மாலை சண்டை முடிந்தபின் சந்தியைச் சூழக் காப்புநிலைகள் விடப்பட்டன. தள்ளாடியிலிருந்து எம்மை நோக்கிப் படையினர் எறிகணைகள் ஏவ, எமது



படிப்பகம்

padippakam



எறிகணைகள் ஓடிக்கொண்டிருந்த படையினரைத் துரத்திச் சென்றன.

ஆட்காட்டிவெளித் துயில்நிலம் விடுவிக்கப்பட்டது. இன்னும் இரண்டொரு நாட்களில் மண்ணுக்காய் விதை யானவர்களின் நினைவு நாள். 1999.11.27 அன்றைய மாவீரர் நாளில் ஆட்காட்டிவெளித் துயிலுமில்லத்தில் நாம் விளக்கேற்றினோம்.

பாப்பாமோட்டையில் நின்ற அரசியின் அணி படை யினரின் தளம் ஒன்றையும், பதுங்குகுழிகளையும் பயன் படுத்தி அவ்விடங்களில் நிலைகொண்டது.

இரண்டு வாரங்கள் அதே நிலைப்பாடுதான். அடுத்த கட்டமாக நாங்களெல்லோரும், ஓயாத அலைகள்-03 இன் மூலம் விடுவிக்கப்பட்டிருந்த கனகராயன்குளத்துக்குக் கொண்டுவரப்பட்டோம். அங்கு அணிகள் அனைத்தும் மீள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

மேஜர் லக்சனாவுடன் ஒரு கொம்பனி மீண்டும் மன்னார்நோக்கிச் சென்றது. அங்கு அவர்கள் அடம்பன், பாலைக்குழி எனத் தொடர் காவல ரணிட்டுக் கட்டுக்கரைக்குளம், குறிவில்வான்காடுவரை நிலைகொண்டிருந்தனர். மன்னார்ப் பகுதியில் இப்போது இவர்களுக்குமுன், பாப்பாமோட்டையை அடுத்து திருக் கேதீஸ்வரம், மாந்தை, உயிலங்குளம் பகுதிகளில் இராணு வம் நிலைகொண்டிருந்தது. அதைச்சுற்றி எம்மவர்களின் முன்னரங்கக் காவல்நிலைகள் அமைந்திருந்தன.

கப்டன் குறிஞ்சி, நாயகி, சுகந்தி ஆகியோரின் பிளாட் டூன்கள் அங்கு நிலைகொண்டிருந்தன. அந்த இடத்தில் ஒரு சுவையான சம்பவம் நிகழ்ந்தது. 1999.12.31



படிப்பகம்

padippakam



நள்ளிரவைக் கடக்க இன்னமும் 30 நிமிடங்கள் இருந்தன. நேரம் 11.30 படையினர் சரமாரியாகச் சுட்டுக்கொண்டிருந்தனர். எறிகணைகளும் வெடித்தன. இவர்களும் உடனே ஆயத்தநிலைக்கு வந்துவிட்டார்கள். நடைபேசியில் யாராவது சண்டை தொடங்கிவிட்டதுபற்றிக் கதைக்கிறார்களா என்று கவனித்தவாறு சுகந்தி அதை இயங்கு நிலையில் வைத்துவிட்டுக் காத்திருந்தார். யாரும் எதுவும் கதைப்பதாக இல்லை. இங்கு எல்லாம் அமைதியாக இருந்தது. எதிர்ப்பக்கமிருந்துமட்டும் தொடர் சூடுகளும் தேடொளிகளும் வந்துகொண்டிருந்தன. அப்போதுதான் அந்த விடயம் நினைவுக்கு வந்தது.

சிறீலங்கா நேரமும் எங்களின் நேரமும் 30 நிமிட வேறுபாடு கொண்டது என்பது நினைவுக்கு வந்ததுதான் தாமதம், எல்லா நிலைகளிலிருந்தும் எங்களுடைய 12.00 மணிக்குச் சுட்டவாறு புத்தாண்டு நிகழ்வை நாம் தொடங்கினோம். சிறீலங்காவின் நேரப்படி இரவு 12 மணியைக் கடக்கும்போது எமக்கு நேரம் இரவு 11.30 மணியாக இருக்கும். சிறீலங்காவின் நேரக் கணிப்பு 30 நிமிடத்தை முந்தி ஓடிக்கொண்டிருப்பதைச் சுத்த சூனியமாக எல்லோருமே சண்டை நெருக்கடியில் மறந்துவிட்டிருந்தோம்.

அடுத்தடுத்து வந்த நாட்களின்பின் இரண்டொரு தடவை இராணுவம் பாலைக்குழிச்சந்திக்கு வந்து எம்மவர்களைத் தாக்கமுனைந்தபோதெல்லாம் நாம் முறியடிப்புத் தாக்குதல்களைச் செய்தோம். இழப்பேதும் எமக்கு ஏற்படவில்லை.

2000.02.04 அன்றைய நாள் மன்னாரில் நின்ற எங்களின் கொம்பனியை ஏற்ற ஊர்திகள் வந்தன. மாற்றிவிட அணிகளும் வந்தன. எங்கே போகிறோம் என்பது புதிராகவே இருந்தது. புறப்பட்டோம்.



படிப்பகம்

padippakam



படையினரிடமே எடுத்து நிரப்பீடு செய்ததுடன் மேலதிக மாகவும் சேமித்துக்கொண்டதால், எந்த நெருக்கடியையும் முறியடிக்கலாம் என்ற நம்பிக்கையுடன் சென்றுகொண்டி ருந்த நேரம் திடீரென இராணுவம் எம்மீது தாக்குதலைச் செய்யத்தொடங்கியது. கடும் இருள். சூழலைச் சரியாக இனங்கண்டு காப்புக்களைப் பயன்படுத்திச் சண்டையிட முடியாத நிலை.

எனினும் எமது பதில் தாக்குதல் பலமாகவே தொடங்கி யது. அங்கு மேஜர் உமாவை நாம் இழக்கவேண்டி வந் தது. கரும்புலிக் கனவைச் சுமந்தவாறு பல வருடக்கணக் காக இந்த மண்ணுக்குச் சேவைசெய்த அந்த அற்புதமான உயிர் அடங்கிப்போயிற்று.

பின்னர் அனைத்து அணிகளும் அப்பகுதிக்குச் சற்று முன்னதாகச் சென்று 'I' வடிவ நிலைகளை அமைத்து நிலைகொண்டோம். எமக்கு முன்னே மண்டலாய் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. இங்கே நின்றவாறு முன்னேறும் நடவடிக்கைகளில் ஒவ்வொரு அணியும் ஈடுபட்டன. மண்ட லாய் ஆற்றங்கரைப் பகுதியில் மகேந்தியின் அணியும் சாந்தகுமாரியின் அணியும் முன்னேறுவதெனத் தீர்மானிக் கப்பட்டது. முதலில் உள்நுழையும் மகேந்தியின் அணி குறிப்பிட்ட நிலைகளைக் கைப்பற்றியதும், அடுத்ததாகச் சாந்தகுமாரியின் அணி ஏனைய பகுதிகளைக் கட்டுப்பாட் டில் கொண்டுவருவதே திட்டமாக இருந்தது. எனினும் முதலில் நகர்ந்த அணி பாதகமான நிலைமையினை எதிர்நோக்கியதால் மீண்டும் அவ்வணிகள் தமதிடத்தில் நின்றுகொண்டன. இருந்தும் இரண்டொரு தடவை முன் னேறும் முயற்சி எடுக்கப்பட்டது.

அமெரிக்கச் சிறப்புப் படையணியான கிறீன்பரேயி டம் பயிற்சிபெற்ற சிறீலங்கா இராணுவத்தின் அதிசிறப்புப் படையின் தாக்குதலை முறியடித்து



படிப்பகம்

padippakam



வரலாறு படைத்த மன்னகுளம் பகுதியில் தாக்குதல் அணி களுக்கான பயிற்சிகள் நடந்துகொண்டிருந்தன. அப் பகுதியை ஊடறுத்துச் செல்கின்ற யாழ் நெடுஞ்சாலை யின் இருமருங்கும் இராணுவம் பாதுகாப்புக் காரணங்களுக் காகப் பல மீற்றர்கள்வரை நெடிது வளர்ந்த மரங்களையே அடியோடு தறித்துவிட்டிருந்தது. இப்போது அந்த வெளி யில்தான் தனுஷா, கப்டன் ஆனந்தி, கப்டன் கலைக் குயில் ஆகியோரது பிளாட்டூன்களை உள்ளடக்கியதான ஜமுனாவினுடைய கொம்பனிக்குரிய பயிற்சித் திட்டம் முடிவுக்கு வந்தது. ஜமுனா தலைமையிலான மாலதி படையணியின் ஒரு கொம்பனியும் ஜெயந்தன் படை யணியின் இரு பிளாட்டூன்களும் தாக்குதலுக்குத் தயார்ப் படுத்தப்பட்டு பூநகரியைநோக்கி நகர்த்தப்பட்டன. எங்குமே மணல் சூழ்ந்திருந்த பூநகரியின் தென்னந்தோப்பு எங்களை வரவேற்க, தாக்குதலுக்கான இறுதிக் கட்டச் செயற்பாடு கள் நடந்துகொண்டிருந்தன.

கிழக்கு அரியாலைப் பகுதிக்கு கலைக்குயில், ஆனந்தி ஆகியோரின் பிளாட்டூன்களும் தனங்கிளப்புப் பகுதிக்கு தனுஷாவின் பிளாட்டூனும் போவதெனப் பிரிக்கப்பட்டது. தாக்குதல்தொடர்பான வரைபடம் விளங்கப்படுத்தப்பட்ட தும், எமது அமைப்பின் மூத்த உறுப்பினரான திரு. தமிழேந்தி அவர்கள் அங்கு குழுமியிருந்த போராளிகளு டன் இறுதியாகக் கதைத்தார்.

**“யாழ் மண்ணிலே எமது மக்கள் படும் துன்பத் தைப் போக்கவேண்டுமெனில் அங்கு புகுந்துவிட்ட இராணுவத்தைத் துரத்தி நிலத்தை மீட்கவேண்டும். அந்த அளப்பரிய பணி உங்களது கைகளில்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது”**

என்று சொல்கின்றபோதே எல்லோர் மனங்களும் மீண் டும் ‘வெற்றி’ என்ற வார்த்தையை மீட்டுக்கொண்டன. வரிசையின் கடைசியில் இருந்தவர், “முல்லைத்தீவுச்



படிப்பகம்

சண்டைக்குப் போகேக்கையும் கடைசியா தமிழேந்தியப்பா கதைச்சவர். ஞாபகம் இருக்கோ?" என்றவர் மெதுவாக சேட் கொலரை இழுத்துக்கொண்டு தலையை அசைத் தார். இந்தமுறையும் வெற்றிதான் எனுமாப்போல் இருந்தது அவரது செய்கை. 'சத்தம் போடாதே' என்று சைகையால் காட்டிவிட்டு மெல்லச் சிரித்தார் மற்றவர்.

இப்போது அணிகள் படகேறுவதற்கு வசதியாக கடற் கரையில் போய் நின்றுகொண்டன. மாரிகாலம் ஆகை யால் நீர் அதிகமாகக் காணப்பட்டது. எனினும் அதிக ஆர்ப்பாட்டமின்றி மெல்ல இரைந்துகொண்டிருந்தது கிளாலிக்கடல். அலையின் மெல்லிய இரைச்சலும் அதற் கேற்றாற்போல் காற்றில் அசைந்த தென்னைகளும் தூரத் துப் பனைகளின் சுருதி சேர்ந்த சரசர ஒலியும் ஏதோ ஓர் இதமான உணர்வை மனதில் ஏற்படுத்தின. சற்றுத் தள்ளி அலையைப் பார்த்து ஆரவாரித்துக்கொண்டு நின்றவர்களிடம் "இது கடலில்லை. ஏரி" என்று சீண்டினர் மற்றவர்கள். பூநகரி இருளுக்குள் புதைந்ததும் அணிகளை ஏற்றியபடி படகுகள் புறப்பட்டன.

படகினுள் திடீரென அமைதி குடிகொண்டது. எதுவும் கதைக்காமல் இருக்கவே தெரியாத கலைக்குயில்கூடக் கடலைப் பார்த்தபடி அமைதியாக இருந்தார். அலையின் இரைச்சல்மாறி படகு தண்ணீரைக் கிழித்து வேகமாகச் செல்லும்போது ஏற்படும் ஒலியே கேட்டுக்கொண்டிருந்தது.

சில மணிநேரங்களின்பின் தூரத்தே கறுப்புத் திட்டி களாகக் கரை தெரிந்தது. கரைக்குச் சற்று இப்பால் படகு நிறுத்தப்பட்டது. தழும்பிய அலைகள் படகில் மோத சட்டென வேகமாக ஆடியது படகு. அவதானமாக அதிலிருந்து இறங்கிய அனைவரும் வரிசையாக நடந்து கரையேறினோம். கிட்டத்தட்ட 300மீ. வரை கடல் நீரிலே நடக்கவேண்டியிருந்தது. மார்கழிப் பனிக்குளிர். எதையுமே தெளிவாகப் பார்க்கமுடியவில்லை. உடல் விறைத்து

padippakam



நடுநடுங்கிக்கொண்டிருந்தது. இறக்கிவிட்ட படகுகள் திரும்பிச்செல்ல, சுடக்கூடிய நிலையில் சுடுகலன்களைப் பிடித்தபடி கரையை அண்மித்தோம்.

பூநகரிக் கரையிலிருந்து 120மி.மீ. எறிகணைசெலுத்தி, ஆட்லறி என்பவற்றின் எறிகணை உதவி கிடைக்குமென ஏற்கனவே சொல்லப்பட்டிருந்ததுடன், கப்டன் சரவணாவின் 81மி.மீ. எறிகணைசெலுத்தியும் கூடவே அனுப்பப்பட்டிருந்தது. உடனேயே ஆனந்தி, கலைக்குயில் ஆகியோரின் அணிகள் தேடுதலை மேற்கொண்டபடி நகரத் தொடங்க, ஜமுனா கட்டளைப் பீடத்துக்கு நிலைமையை அறிவித்தார். தொடர்ந்து முன்னேறினோம்.

நகரும்போது அந்தச் சூழல் ஏற்கனவே பழக்கப்பட்ட இடமாக இருப்பதை உணர்ந்த சில பழைய போராளிகள் அது கிழக்கு அரியாலைப் பகுதி என்பதைப் புரிந்து கொண்டனர். புத்துணர்வு மேலிட முன்னேறிய அணி பழைய எமது 'ராதை' தளத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட மண் அரண் பகுதியில் உடனடி நிலைகளை அமைக்கத் தொடங்கப் பொழுது மெல்ல விடிந்தது.

வலிகாமப் பகுதியைவிட்டு வெளியேறுவதற்கு முன் படையணியின் பயிற்சித் தளங்களுள் ஒன்றாக ராதை (2:8) இருந்தது. ஆரம்பப் பயிற்சிமட்டுமன்றித் தாக்குதலுக்கான பயிற்சி, கடற்பயிற்சி எனவும் அங்கு நடைபெற்றதால் பெரும்பாலான போராளிகள் அங்கு கால் பதிக்கத் தவறவில்லை. எல்லோருமே ஒரு காலத்தில் அந்த மணல் ஓடுபாதைக்குச் சொந்தக்காரர்களாக இருந்தார்கள்.

எல்லா இடங்களுமே தென்னந்தோப்பாக இருந்தமையினால் தூரத்திலேயே படையினர் எம்மை அவதானிக்கக் கூடிய வாய்ப்பு இருந்தது. எனினும் முடிந்தவரை மறைப்புக் களைப் பயன்படுத்தி நடமாடித் திரிந்துகொண்டிருந்தோம். படையினரின் பகுதிக்குள் இருக்கின்றோம் என்ற உணர்வு



படிப்பகம்

padippakam



படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. சூரியகதிர்-01 இல் அதை நாம் விட்டுப்போனபின் யாரும் அதற்குள் கால் வைத்ததுபோல் தெரியவில்லை. அந்தளவுக்குத் தேங்காய் கள் விழுந்து சிதறிக்கிடந்தன.

நேரம் அப்போது 10.00 மணியிருக்கும். சடசடவெனப் பறந்து வந்த உலங்குவானூர்தி ஒன்று படையினரின் பகுதிக்குள் நின்று எமது பகுதியைநோக்கிக் கடும் தாக்கு தலைச் செய்துவிட்டுப் பறந்து போனது. யாருக்கும் எது வும் நிகழவில்லை. தற்காலிகமாக வெட்டப்பட்டிருந்த பதுங்குகுழிகளைக் கிடைத்தவற்றைக்கொண்டு ஓரளவு மூடி உருமறைப்புச் செய்துவிட்டுக் காத்திருந்தோம். மனித பாவனையற்ற அந்தப் பகுதியினுள் பலமான தடிகள்கூடக் கிடைக்கவில்லை.

நிமிடங்கள் போகமாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்ப தால் மணித்தியாலம் நகர முடியாததுபோல் தோன்றியது. சூழலின் வெம்மை எல்லோரையும் எரிச்சலடையச் செய்தது. திடீரென முன்னே சூட்டுச் சத்தங்கள்கேட்டன.

"முன் பண்டில நிண்டு PKயால அடிக்கிறான்"

என்றார் அதில் நின்ற போராளி. எல்லோரது நடை பேசிகளும் தயார்நிலைக்கு வர,

"ஆக்கள் இங்கால நிலைமையைப் பாக்கிறதுக்குத்தான் அடிக்கினம். ஒருத்தரும் திருப்பி அடிக்கவேண்டாம்"

என்ற கட்டளை வந்தது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் தனது சுடுபொறியை வைத்துத் தாக்கிவிட்டுச் சிறிது நேரத்தில் ஓய்ந்தனர் படையினர். யாரும் திருப்பித் தாக்கி எமது நிலைகளைக் காட்டிக்கொடுக்க விரும்ப வில்லை.



படிப்பகம்

padippakam



முன்னே உள்ள நிலைமையை அவதானித்தபின் நாங்கள் யாவரும் அடுத்த மண் அரணுக்கு நகர்ந்தோம். அங்கும் பதுங்குகுழிகள் தயாராகின. குறிப்பிட்ட பகுதி எமது கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன் சரவணாவின் 81மி.மீ. எறிகணைசெலுத்தி எமக்குக் கிட்டவாக நகர்த்தப்பட்டது. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் நிலைகள் முன்னகர்த்தப்பட, இப்போது படையினருக்கும் எமக்கும் இடையிலான தூரம் மெல்லமெல்லக் குறுகத்தொடங்கியது.

இப்போது எமது சூழல் பற்றையுடன்கூடிய தென்னந்தோப்பாக இருந்ததால் ஓரளவு மறைப்புகளைப் பயன்படுத்திப் பதுங்குகுழி வெட்டும் வேலையை விரைவுபடுத்தமுடிந்தது. சற்று நெருக்கமாக வெட்டப்பட்ட பதுங்குகுழிகள் மூடப்பட்டுக்கொண்டிருந்தன. ஓரிடத்தில் பதுங்குகுழி வேலை செய்துகொண்டிருந்தவர்கள் காவற்கடமையில் நின்றவர்களை மாற்றிவிடுவதற்காக முன்னே நகர, முன் பற்றையினுள்ளிருந்து சடசடவெனச் சுடத்தொடங்கிய நாலைந்து இராணுவத்தினர் விரைவாக அடுத்துள்ள வெற்றுநிலைக்குள் புகுந்துகொண்டனர். அதில் நின்று கொண்டு இருபக்கமும் சூட்டை வழங்கிப் பதுங்குகுழிகளைக் கைப்பற்றமுயன்றனர். வேலையில் ஈடுபட்டவர்கள் எல்லோரும் தன்னிச்சையாகவே ஆயுதங்களுடன் தயாராகினோம். கைப்பற்றப்பட்ட பதுங்குகுழிக்குப் பின் பகுதியில் நிலைப்படுத்தப்பட்டிருந்த மாதினியின் .50 கலிபர் தனது கைவரிசையைக் காட்டியது. இனி இந்தப் பக்கம் எட்டியும் பாராதே என்பதுபோல இருந்தது அந்தத் தாக்குதல். தொடர்ந்து இழப்புக்களுடன் படையினர் திரும்பவேண்டியதாயிற்று. உடனேயே பொழியத்தொடங்கியது படையினரின் எறிகணை மழை. குறிப்பிட்ட நேரம் வரை அந்தப் பகுதி அதிர்ந்து குலுங்கிக்கொண்டிருந்தது.

இடையிடையே சிறு சிறு தாக்குதல்களுடன் நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. அரியாலைக் கடற்கரையை முதுகுப்புறமாகக்கொண்டு கிட்டத்தட்ட பூம்புகார் வீதிக்குச்



படிப்பகம்

padippakam



சமாந்தரமாக அமைந்துள்ள எமது முன்னரங்கில் நின்று பார்க்கின்றபோது 'யாழ் வரவேற்கின்றது' என்ற வளைவின் கீழால் செல்லும் ஊர்திகள் அப்படியே தெரிந்தன. அதைக் கடந்து செம்மணிவெளி இருட்போர்வை போர்த்துக் கிடந்தது.

ஓ...எம் கண்மணிகளே! உங்கள் கதறலுக்குக்கூடச் செவி சாய்க்காது உயிர்வதைத்துப் புதைத்த கயவர்களின் கதை முடிக்க வந்துவிட்டோம். வலி சுமந்த உங்கள் ஆன்மாவுக்கு விடிவு தர இதோ வந்துவிட்டோம். எல்லோரது இதயங்களும் உரத்துச் சொல்லிக்கொண்டன.

சில நாட்களின் பின்னர் வெற்றிலைக்கேணியில் நின்ற சில தாக்குதலணிகள் முகாவிலுக்கு மாற்றப்பட்டபோது சாந்தகுமாரியின் அணியும் சென்றது. முகாவில் பகுதியில் நீட்டப்பட்ட முன்னணி நிலையின் ஒரு பகுதியில் மாலதி படையணி நிலைகொள்ள, அப்பால் ஜெயந்தன் படையணி, கடற்புலிகள் அணி என ஒவ்வொரு பகுதியிலும் நிலைகொண்டனர். இங்கு இரு நிலைகளுக்கிடையிலான இடைவெளி 200மீ. ஆகவே இருந்தது. முன்னே நீண்ட தூரத்துக்குக் கடும் நெருக்கமாக வளர்ந்திருந்த பற்றைகளுக்கு அப்பால் தென்னந்தோப்பை உடையதாக இருந்தது அப்பகுதி. எனினும் 200மீ. இடைவெளியில் நிலைகள் அமைக்கப்பட்டிருப்பதால் இராணுவத்தின் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களினால் ஏற்படும் பெருமளவிலான இழப்பு தவிர்க்கப்பட்டதென்றே சொல்லவேண்டும்.

இந்நிலையில் மிதுலாவுடன் ஆனந்தியின் பிளாட்டூன் முகாவிலுக்கு வந்து, ஏற்கனவே நின்ற பழைய அணியுடன் இணைக்கப்பட்டு இரு அணிகளுக்கும் பொறுப்பாக ஆஷா விடப்பட்டார். தொடர்ந்து முன்னேறுவதற்கான



படிப்பகம்

padippakam



நேரத்தை எதிர்பார்த்து வேவு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். அதேநேரம் எம்மால் மீட்கப்பட்ட இடங் களை மீளக் கைப்பற்றுவதற்கான கடும் முயற்சியில் படைத்தரப்பு ஈடுபட்டிருந்தது.

இப்போது ஆனையிறவுக்கான வெளிப்புறப் பாதுகாப் புத் தளங்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்டதுடன் அதற் கான பாதுகாப்பு வளையம் உடைக்கப்பட்டுக்கொண்டிருந் தது. 1991 இல் ஆகாய, கடல், வெளி நடவடிக்கையின் போது ஆனையிறவின் பாதுகாப்புக்கெனப் படைத்தலை மைகள் எத்தகைய வியூகத்தை வகுத்திருந்தனவோ, அதே வியூகங்களை உடைத்தெறிந்தபடி ஓயாத அலைகள்-03 ஓங்கியடித்துக்கொண்டிருந்தது. ஆனையிறவின் இருப்புப் பற்றிய நிச்சயமின்மை தெளிவாகியது. இதனால் மீண்டும் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணித் தளங்களைக் கைப் பற்ற சிறீலங்காப்படைகள் படாதபாடுபட்டன. நாட்கள் கடக்கக்கடக்க எங்களின் முற்றுகை வளையம் இறுகிக் கொண்டு சென்றது.

இந்நிலையில் 1999.12.24 அன்றைய அதிகாலை திடீ ரெனப் படையினர் முன்னேறத்தொடங்கினர். ஒவ்வொரு நிலைகளுக்குமிடையிலான 200மீ. இடைவெளிகளால் உள்ளே புகுந்தவர்கள் இருபுற நிலைகளிலிருந்தும் கடும் எதிர்ப்பைச் சந்தித்துக்கொண்டனர். நாங்கள் எல்லோரும் எங்களது நிலைகளில் நின்றபடியே தாக்குதல்களைச் செய்துகொண்டிருந்தோம். இதனைவிட இன்னுமொரு பகுதியாலும் படையினர் முன்னேறிக்கொண்டிருந்தனர். இதனால் யாரும் யாருக்கும் உதவி செய்யமுடியாத ஒரு இக்கட்டான நிலை தோன்றியது. கிட்டத்தட்ட சாந்த குமாரியின் அணி தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருந் தது. அந்த நிலையில் இருந்தவர்களே தமது பகுதிக்குள் வந்த படையினருக்கு முடிவு கட்டவேண்டிய நிலையில், ஒவ்வொருவரும் மிக உறுதியாகத் தாக்குதலை நடத்தி னோம்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

எதிர்பாராத நிலையில் இராணுவம் முன்னேறியதுடன் எங்களுக்குப் பழக்கப்படாத, வாய்ப்பற்ற அந்தச் சூழல் ஆரம்பத்தில் பின்னடைவைத் தந்தாலும் நேரம் செல்லச் செல்ல நிலைமைகளை எமக்கு வாய்ப்பானதாகவே மாற்றினோம். படையினரின் நோக்கம் முழுமையாகப் புரிந்தது. எனவே அதற்கேற்ற வகையில் எறிகணை உதவி களைப் பெற்றதுடன் இப்போது எமது முற்றுகைக்குள் படையினர் இருப்பதாக ஒரு நிலையைத் தோற்றுவித் தோம். உள்ளே புகுந்த படைகளை மேலும் நகரவிடாமல் ஒரு அணி மறிக்க, முன்னரங்க நிலையில் இருபுறமும் நின்ற அணிகள் உள்நோக்கித் தாக்குதலைத் தொடுக்க, சிங்களப் படையின் நிலைமை இன்னும் மோசமாகிக் கொண்டிருந்தது. பெருங்கற்பனையுடன் வந்த இராணுவம் அன்று மாலையே கொண்டுவந்த சுடுபொறிகளையெல் லாம் விட்டுவிட்டுப் பின்வாங்கிக்கொண்டது. எமது தரப்பிலும் அன்றைய வெற்றிக்கு வித்தாகச் சிலர் விழி மூடிப்போயிருந்தார்கள். இப்போதும்கூட அந்தப் பகுதி யினுள் படைத்தரப்பால் கைவிடப்பட்ட ஆயுதத்தின் பகுதி கள் பற்றைகளினுள்ளும் மணல்·மேடுகளினுள்ளும் இருப் பதைக் காணலாம். தொடர்ந்து ஒவ்வொருநாளும் முன் னரங்கு இன்னும் முன்னே சென்றுகொண்டிருக்க, படையினருக்கும் எமக்கும் இடையிலான தூரம் குறுகத் தொடங்கியது. எமது நிலைகளிலிருந்து யாழ் நெடுஞ் சாலை இப்போது 300 மீற்றரில் இருந்ததால் வீதியில் இராணுவ ஊர்திகளின் நடமாட்டங்கள் அப்படியே தெரிந்தன முன்பு நெடுஞ்சாலைக்கான பாதுகாப்பாக மட்டுமே வீதியின் இரு புறத்தும் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. சில நாட்களுக்குமுன் நடந்த தாக்குதலை அடுத்து அவையே முன்னணிப் பாதுகாப்பு அரண்களாக ஆக்கப்பட்டதால் முன்னரைவிட அதிகம் பலப்படுத்தப்பட்டதுடன் முன்பகுதியில் முட்கம்பி வேலித் தடைகளும் அதிகரித்திருந்தன. கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இராணுவம் காத்திருந்தது.

padippakam



எத்தகைய பாதுகாப்பு இருப்பினும் அவற்றின் பலத்துக்குள்ளே ஒரு பலவீனத்தைத் தேடுகின்ற எமது வேவு அணிகள் இரவு பகலாகத் தமது பணியைச் செய்து கொண்டிருந்தன. ஒரு முன்னேற்ற நடவடிக்கைக்காக எமது அணிகள் தயார்ப்படுத்தப்பட்டன. உடைப்புப் பாதை தெரிவுசெய்யப்பட்டது. அதனை மீள உறுதிப்படுத்துவதற்காகச் சென்ற வேவுப் போராளிகளில் ஒருவர் மிதிவெடியில் காயமடைந்ததும், படைத்தரப்புச் சற்று விழிப்படைந்ததுபோல் தெரிந்தது. எனினும் மறுநாள் செய்ய விருந்த தாக்குதலில் எவ்விதப் பாதிப்பும் வந்துவிடக் கூடாது என்பதால் கவனமாகவே வந்தோம்.

அன்று 1999.12.31 இருபதாம் நூற்றாண்டின் இறுதி நாள் முடிவடைவதற்கு இன்னும் சில மணித்தியாலங்களே இருந்தன. ஒரு முன்னேற்ற நடவடிக்கைக்காக அனைத்து அணிகளும் தயார்ப்படுத்தப்பட்டன. எல்லா வேலைகளும் முடிக்கப்பட்டு அந்த நள்ளிரவில் நகரத்தொடங்கினோம். தடைக்குள்ளேயே படையினர் எம்மீது தாக்குதலைத் தொடங்கிவிட, இருபுறத்தும் வலுவடைந்தது சண்டை. தாக்குதலும் கடுமையாக இருந்தது. பல நாட்களாகப் படையினர் தொடர்ந்து பலப்படுத்தி வந்ததும், அவர்கள் பற்றிய துல்லியமான தரவுகள் எம்மிடம் இல்லாததும் எமக்கு நெருக்கடி நிலையைத் தோற்றுவித்ததுடன் சூழலும் எமக்கு வாய்ப்பாக இல்லாதிருந்தது. எனவே முன்னேறிய அனைத்து அணிகளும் பின்வாங்கிப் பழையபடி எமது நிலைகளுக்கு வந்தோம்.

நாம் வந்து சேரவும் இராணுவத்தின் கடுமையான எறிகணைவீச்சுத் தொடரவும் சரியாக இருந்தது. சற்று முன் நடந்த முன்னேற்ற நடவடிக்கையினால் படைத்தரப்புக்கு ஏற்பட்ட அதிக இழப்பின் காரணமாகத் தான் இவ்வாறு எறிகணைத் தாக்குதலை மேற்கொள்கின்றனர் என எண்ணிக்கொண்டிருக்க, சடசடவென சுடுகலன்கள் சீறத் தொடங்கின. இப்போது நிலைமை மறுவளமாக



படிப்பகம்

padippakam



இருந்தது. இராணுவம் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்று எல்லோருக்கும் தெளிவாகியது. முறியடிப்புக்காக நாம் எம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள, பொழுது விடிந் தது.

புது வருடப்பிறப்பன்று தோல்வியைச் சந்திக்கக் கூடாது என்பதுடன் படைத்தரப்புக்கு முறையான பாடம் கற்பிக்கவேண்டுமென்பதில் எல்லோரும் உறுதியாக இருந்தோம். இராணுவம் தனித்தனியே வெவ்வேறு பாதை களால் முன்னேறியிருந்தது. இதனால் ஒவ்வொரு அணி களும் தனித்தனியே தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. 'L' வடிவில் அமைக்கப்பட்டிருந்த முன்னணிவரிசையை ஊடறுத்து உள்ளே வந்து ஒரு முற்றுகை நடவடிக்கையைச் செய்யமுற்பட்டது இராணு வம். உதவியணி வரும் வழியைத் துண்டிப்பதன்மூலம் உள்ளே இருப்பவர்களை அழித்துவிடும் நோக்கத்துடன் கடுந்தாக்குதலைச் செய்தபடி முன்னேறியது. எல்லாப் போராளிகளும் தத்தமது இடத்தில் நின்றபடியே பதில் தாக்குதலை செய்தனர்.

இப்போதும் 200மீ. இடைவெளியினூடாகத்தான் படை யினர் வந்துகொண்டிருந்தனர். எமது எறிகணைசெலுத்தும் அணிகளும் தமது பணியை வேகமாகச் செய்துகொண்டி ருந்தன. நேரம் செல்லச் செல்ல இராணுவத்தின் எதிர்ப்பு அதிகமாகிக்கொண்டே சென்றது. இதனால், சாந்தகுமாரி தன்னுடன் நின்ற அணியை முன்னணிக்கு நகர்த்தியபடி சென்றுகொண்டிருக்க, மறுவளத்தால் மேஜர் வேழினி வேறொரு அணியுடன் நகர்ந்துகொண்டு சென்றார். இருபுறமும் கடும் எதிர்ப்பு. ஏற்கனவே படையினரிடமிருந்து கைப்பற்றிய வெடிபொருட்களைச் சேமித்து வைத்திருந்த தால் அவர்கள் நுழைந்த இடங்களிலிருந்து சற்றும் நகர விடாமல் மறித்து வைத்திருந்தனர் முன்னணிப் போராளி கள். படையினருக்கு உதவியாக உலங்குவானூர்திகளும் தாக்குதலைச் செய்துகொண்டிருந்தன. சாந்தகுமாரி,



படிப்பகம்

padippakam



வேழினியோடு முன்னேறிய இரு அணிகளும் இப்போது முன்னணியை அண்மித்துக் கொண்டிருந்தன. இதனால் படையினரின் இருப்பு அங்கே கேள்விக் குறியாகியது. பெருமளவில் இழப்புக்கள் ஏற்பட, மெல்லப் பின்வாங்கத் தொடங்கியது இராணுவம். காலை தொடங்கிய சண்டை அன்று மதியமே முடிவுக்கு வர, 40 இராணுவ உடல்களை யும் விட்டுவிட்டுத் திரும்ப ஓட்டமெடுத்தனர் படையினர்.

இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்ப நாளிலேயே 40மி.மீ. எறிகணை செலுத்தி–03, LMG–02, PK LMG–02, T56-2 ரக துப்பாக்கிகள், ஏராளம் ரவைகள் எனக் கைப்பற் றிய மகிழ்ச்சியுடன் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு மீண் டும் எம்மைத் தயார்ப்படுத்தினோம்.

சில நாட்களின்பின் வன்னியிலிருந்து ஒரு அழைப்பு வந்தது உடனே வரும்படி. மாற்றிவிடுவதற்கு அணிகளும் வந்தன. ஏற்றிச்செல்லப் படகுகளும் வந்தன. புதிர்களோடு புறப்பட்டோம்.

அது திருவையாறிலுள்ள சந்திரமதி தளம். அவசர மாக ஒன்று சேர்க்கப்பட்ட அணிகள் கேணல் விதுஷா அவர்களின் கட்டளைப்படி துணைத் தள பதி மைதிலியால் முல்லையுடன் ஒரு பிளாட்டூனும், மேஜர் தமிழ்நிலாவுடன் ஒரு பிளாட்டூனுமாகப் பிரிக்கப் பட்டு தாக்குதலுக்கேற்றவகையில் தயாராகின. தாக்கு தலின் முக்கியத்துவமும் தாக்குதல் நேர முக்கியத்துவமும் அணிகளுக்கு விதுஷாவால் விளங்கப்படுத்தப்பட்டது.

சந்திரமதி தளத்திலிருந்து புறப்பட்ட முல்லையுடனான கப்டன் தண்ணிலாவின் பிளாட்டூன் கரடிப்போக்குச் சந்திக் குச் சற்று முன்னதாக நிறுத்தப்பட்டது. தமிழ் நிலாவுடன் நகர்ந்த மாதுரியின் பிளாட்டூன் பரந்தன்–



படிப்பகம்

padippakam



முல்லைச்சாலையைக் குறுக்கறுத்துச் செல்கின்ற எமது முன்னரங்க வரிசைக்கு அண்மையில் நிலையெடுத்துக் கொண்டது.

அங்கு தாக்குதலுக்கான வரைபடம் எல்லோருக்கும் விளங்கப்படுத்தப்பட்டது. எமது இயக்கத்தின் தாக்குதல் வரலாற்றில் இத்தாக்குதல் வகிக்கப்போகும் வித்தியாச மான பங்கு, தாக்குதலின் ஆரம்ப நேரம் என்பன குறித்து தளபதிகளால் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இதுவரை காலமும் இரவுப் பொழுதிலேயே தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டதனால் எப்போதும் இராணுவத்தின் எதிர் பார்ப்பு அதுவாகத்தான் இருந்தது. எனினும் நாம் அவர் களுக்குக் கொடுத்தது அதிர்ச்சியைமட்டுமல்ல, அச்சத்தை யும்தான்.

1999.12.16 பி.ப. 1.30 மணியளவில் தாக்குதலை ஆரம் பிக்கக்கூடியவகையில் நாங்கள் தயாரானோம். கரடிப்போக் குச் சந்தியிலிருந்து நகர்ந்த முல்லையின் அணி யாழ். நெடுஞ்சாலையிலுள்ள இராணுவ முன்னரங்க வேலிக்குச் சற்று முன்னதாகக் காத்திருந்த தடையணியுடன் இணைந்துகொண்டது. உரிய நேரத்துக்கு ஆட்லறி, எறி கணை செலுத்தி என்பவை மறைமுகச் சூடுகளை வழங் கத்தொடங்க, தடையணி புயலென ஒவ்வொரு தடையை யும் தகர்த்து முன்னேறியது. எவரதும் பாவனையேயில்லா மல் வளர்ந்துவிட்டிருந்த சிறு பற்றைகளைத்தவிர காப்போ, மறைப்போ ஏதுமற்ற பகுதியால் தாக்குதலணிகள் வேக மாக உள்நுழையத்தொடங்கின.

தடையுடைத்து முன்னேறிய சாள்ஸ் அன்ரனி படை யணியில் காயம், வீரச்சாவு எனப் பலரது வெளியேற்றம் இடைவெளியை ஏற்படுத்த, காப்பரணைக் கைப்பற்றவேண் டிய விடுதலையின் அணி உடனடியாக முன்னேறியது. இப்போது வேலி பிரிக்கும் வேலையும் எங்களுடையதாகப் போனது. தலைக்கு மேலுயர்ந்த இறுக்கமான வேலி.



படிப்பகம்

padippakam



இழுத்துப் பிரித்து உள்ளே நுழைந்தோம். இடமும் வலமுமாக உள்ள காவலரண்களுள் குண்டுகள் அதிர, துப்பாக்கிச் சன்னங்கள் சீறிப் பறந்தன. தொடர்ந்து நெடுஞ்சாலைக்கு இடதுபக்கமாகக் காவலரண்களைக் கைப்பற்றும் பணி எங்களுக்கு வழங்கப்பட்டது. சுதாமதியின் RPD LMG காப்புச் சூட்டை வழங்கிக்கொண்டிருக்க அடுத்தடுத்த காப்பரண்களுக்கு நாங்கள் முன்னேறினோம்.

நிலைமை சற்றுச் சிக்கலாகத்தான் இருந்தது. ஏனெனில் அங்கு காப்பாக இருந்தவை எம்மால் கைப்பற்றப்பட்டுக் கொண்டிருக்கும் காப்பரண்களும், மண் அணைகளும், நகர்வு அகழிகளும் மாத்திரமே. இவற்றைவிடத் தனியொருவரைப் பாதுகாக்கக்கூடியதாகக்கூட எதுவுமே அங்கு இருக்கவில்லை. ஒரு காலத்தில் பச்சைப் பசேல் எனப் பரந்திருந்த பரந்தனின் எழில் 'குரங்கின் கைப் பூமாலையாய்' சின்னாபின்னப்பட்டுக் கிடந்தது. இடையிடையே உயர்ந்திருந்த கட்டிடங்கள், மரங்கள்கூடக் காணாமற்போயிருந்தன. எல்லாமே வெறுமையாகத்தான் இருந்தது.

பார்க்கப்போனால் இந்நில அமைப்பு இராணுவத்துக்கே வாய்ப்பானதென்று சொல்லலாம். தொடர்ச்சியாக மழை பெய்துகொண்டிருந்ததால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை வெள்ளக்காடாய் காட்சி தந்தது. பார்வைக் கெட்டிய தூரம்வரை வெளியாகவே இருக்க, நீண்ட தூரத்துக்கப்பால் நின்றே எம்மைத் தாக்கக்கூடிய வாய்ப்பு இராணுவத்துக்கு இருந்தது.

ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்ட திட்டத்தின்படி எறிகணை செலுத்தி, ஆட்லறிகள் எல்லாம் எமக்குத் தேவையான இடங்களுக்குச் சூட்டினை வழங்கிக்கொண்டிருந்தன. அதேநேரம் அடுத்திருந்த காப்பரணைநோக்கி விடுதலையுடன் இந்திரா, கஸ்தூரி ஆகியோர் நகர்வகழியூடாக நகர்ந்துகொண்டிருந்தனர்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

இடைவிடாது பொழிகின்ற மழையால் நகர்வகழி மட்டுமல்ல, மூடிய அகழிகளே நீர் நிறைந்து கழுத்து மட்டத்தில் வெள்ளம் நின்றது. நிலப்பரப்புமட்டுமன்றி காலநிலையும்கூட எமக்குப் பாதகமாக இருந்தது. எனினும் அதனையும் மீறி உளவுரனுடன் நாம் முன்னேறினோம். அந்த நேரத்திலும்,

"உந்தத் தண்ணிக்குள்ள தாண்டு ஒவ்வொரு வருசமும் ஆக்கள் சாகிறவையள். கவனம் பாத்துவா"

என்று பக்கத்தில் வந்த ஒருவர் கிசுகிசுத்தார். அதைக் கேட்டவுடனேயே நீருக்குள் மூழ்கிவிட்ட உணர்வு மனதை நடுங்கச் செய்தது. உண்மைதான். மழை காலத்தில் உயரமான பகுதிகளிலிருந்து ஓடி வரும் நீரெல்லாம் பரந்தன் பகுதியால்தான் கடலுக்குப் போய்ச்சேர்கிறது.

"மாரி காலத்தில வெள்ளம் இடுப்புக்கு மேல வந்திடும். கிணறுகள மேவித் தண்ணி நிற்கும். பழக்கப்பட்ட ஆக்களே கண்டுபிடிக்க ஏலாது"

என்று 'உண்மை வெற்றி' சண்டை நேரம் ஒன்றாக நின்ற சிவகாமி பயமுறுத்தியிருந்தார். இப்போது எல்லாம் சேர்ந்து உடலைக் கூசப்பண்ணியது.

கிட்டத்தட்ட நான்கு அல்லது ஐந்து காப்பரண்களைக் கைப்பற்றிய பின் எதிர்ப்பு அதிகமாகத் தொடங்கியது. இருதரப்புக்குமிடையேயிருந்த நீண்ட வெளி படையினரின் ராங்கிகளுக்கு மிக வாய்ப்பாக இருந்ததால், எமது ராங்கி எதிர்ப்பு ஆயுதத்தின் சூட்டெல்லைக்கு அப்பால் நின்று, தெளிவாகத் தெரிந்த காப்பரண்களைநோக்கி அவை வரிசையாகத் தாக்கத்தொடங்கின. நிலைமைகளுக்கேற்ப கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்த கேணல் விதுஷா, கைப்பற்றப்பட்ட காப்பரண்களைப் பயன்படுத்தி வெடி பொருள் விநியோகத்தைச் செய்துகொண்டிருந்த

padippakam



அணிகளை நகர்வகழியூடாகவும் கிடைக்கக்கூடிய காப்பு களைப் பயன்படுத்தியும் நகரும்படி கட்டளை வழங்கி னார். பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் காவலரண்களைக் கைப்பற்றிச் சென்றுகொண்டிருந்தோம். அடுத்த காப் பரணுக்கு சுதாமதியையும் குயிலினியையும் காப்புச் சூடு வழங்கச் சொல்லிவிட்டு, விடுதலையும் இன்னும் சிலரும் முன்னேறும்போது, தான் நிலையெடுத்திருந்த இடத்தைவிட்டு குயிலினி எழுந்திருக்கவில்லை. அருகில் வீழ்ந்து வெடித்த எறிகணை ஒன்று அவரது பணியை நிறுத்திவிட்டிருந்தது.

தொடர்ந்து பலர் காயமுற பிளாட்டூன் பதில் கட்ட ளையதிகாரியான கலைமதி, அணியைப் பொறுப்பெடுத்து முன்னேறினார். பொழுது இருளுக்குத் தாவியது. தொடர்ந்து பெய்த மழையினால் ஏற்பட்ட இருள் இரவை இன்னும் கடுமையாக்கியது.

திட்டத்தின்படி பரந்தன்-முல்லை சாலையின் இரு மருங்கும் இரு பாதைகள் உடைக்கப்பட ஒரு பாதையால் மைதிலியுடன் தமிழ்நிலாவின் அணியும், மறுபாதையால் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் ஓர் அணியும் நகர்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இரு பாதைக்குமாக லெப்.கேணல் ராஜசிங்கம் பொறுப்பேற்றிருந்தார். எனினும் நிலைமை வாய்ப்பற்றுப்போகவே, அவ்வீதிக்கு இடதுபக்க மாக 500 மீற்றரில் ஏற்கனவே உடைக்கப்பட்ட பாதை ஒன்றினால் இவ்வணிகள் உள்நுழைந்து காவலரண் களைக் கைப்பற்றத்தொடங்கின.

கொம்பனியின் கட்டளையதிகாரி தமிழ்நிலாவால் அணிகள் நகர்த்தப்பட்டு யாழ் நெடுஞ்சாலைக்கு வலது பக்கமாகவுள்ள காப்பரண்கள் கைப்பற்றப்பட, பரந்தன் பகுதி மெல்ல ஆட்டம் காணத்தொடங்கியது. ஏற்கனவே வழங்கப்பட்ட பணி ஒன்றாகவும், இப்போது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற பணி வேறொன்றாகவும் நிலைமை



படிப்பகம்

padippakam



மாறியிருந்தது. காயம், வீரச்சாவு எனப் பல போராளிகள் களத்திலிருந்து அகற்றப்பட அங்கு நின்ற சில ஆண் போராளிகளையும் இணைத்து முன்னேறிக்கொண்டு சென்றார் தமிழ்நிலா. இவருக்கு உதவியாக மேஜர் தமயந்தி எறிகணைச் சூட்டாதரவைத் தேவையான இடங்களுக்கு இணைத்துக் கொடுத்துக்கொண்டிருந்தார். மிக விரைவாக பரந்தன்–முல்லை வீதியைத் தாண்டி அப்பால் நகர்ந்தது அவ்வணி.

முதலில் இறுக்கமாக இருந்த இராணுவ முன்னணி நிலைகள், இப்போது காய்ந்த இலைகள் மரத்திலிருந்து உதிர்வதுபோல் படிப்படியாக எம் கைகளில் வீழத் தொடங்கின. இரவு, பகல் என்ற வேறுபாடின்றித் தொடர்ந்த மழையினூடே நகர்ந்த அணியை வழிநடத்திக்கொண்டிருந்த தமிழ்நிலாவின் பணியை முடித்துக்கொள்ளவென்றே சீறிப் பறந்து வந்தன இரண்டு ரவைகள். இதுவரை ஓயாது புயலாய்ச் சுழன்றவர் இந்த மண்ணிலே மாவீரத்தோடு சரிந்தார்.

அமைதியான, ஆனால் ஆளுமையான போராளி அவர். ஆரம்பத்தில் எறிகணை செலுத்தும் அணியொன்றின் பொறுப்பாளராக, மிகச் சிறப்பாகப் பணியாற்றிய நாட்களிலேயே தாக்குதலை ஒருங்கிணைத்து வழிநடத்தும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

ஓயாத அலைகள்–03 நடவடிக்கை ஆரம்பமாகிய குறிப்பிட்ட சில நாட்களிலேயே எமதமைப்பின் மேஜர் தர அதிகாரிகளுக்கான கல்லூரி தனது கற்கை, பயிற்சி நெறியின் இரண்டாவது அமர்வுக்குப் போராளிகளைக் கோரியிருந்தது. கல்லூரிக்கு என எமது படையணியிலிருந்து விதுஷாவால் தெரிவுசெய்யப்பட்டவர்களுள் மேஜர் தமிழ்நிலாவும் ஒருவர். நதிமூலம் நடவடிக்கையில் தனது பின்புறத்தில் பலமாகக் காயப்பட்டிருந்த இவர், குறிப்பிட்ட நேரத்துக்குமேல் தொடர்ந்து இருக்கையில் தொடர்ந்து



படிப்பகம்

padippakam



இருக்கமுடியாது என்பதால், தன்னைக் கல்லூரிக்கு விடாமல் சண்டைக்கு விடுமாறு விதுஷாவிடம் அடம்பிடித்துக் கொண்டிருந்தார். தனக்கு இருக்கும் ஆற்றலை வளர்ப்பதற்குக் கிடைத்துள்ள வாய்ப்பை மறுக்கின்றார் என்ற ஆதங்கத்தில் தமிழ்நிலாவின் கதைகளுக்குச் சில நாட்கள் செவி சாய்க்காமல் இருந்த விதுஷா, கடைசிநேரத்தில் அவரது விருப்பத்துக்கு மதிப்பளித்து, மைதிலியோடு சண்டைக்கு அனுப்பியிருந்தார். தன் வேண்டுகோள் ஏற்கப்பட்ட நிறைவோடு போன தமிழ்நிலா திரும்பவில்லை.

தமிழ்நிலா வீரச்சாவைத் தழுவிக்கொண்டபின் அந்த அணியை குறிஞ்சி பொறுப்பேற்றார். அவர்கள் தொடர்ந்து ஏனைய காப்பரண்களைக் கைப்பற்றிக் கொண்டுசெல்ல, மாதுரியுடனான ஓர் அணி பரந்தன்-முல்லை வீதியில் ஏறிப் பரந்தனைநோக்கி முன்னேறியது. அவ்வீதி தமது போக்குவரத்துக்கு மிக முக்கியம் என்பதால், இராணுவம் பலத்த எதிர்ப்பைக் காட்டியது. வீதிக்கு இடதுபுறமுள்ள பூவரசு வேலி, அதிலுள்ள வரம்பு, சிறிய வாய்க்கால் என்பவற்றைப் பயன்படுத்தியே முன்னேற வேண்டியிருந்தது. நெல்மணி பொலிகின்ற வயல்வெளிகளில் வரம்புகளைத்தவிர எமக்குப் பாதுகாப்பாக வேறெது இருக்கமுடியும்?

பரந்தன் சந்தியைநோக்கி மைதிலியுடன் நகர்ந்துவந்த மாதுரியின் அணி உண்டியல் சந்திக்கருகில் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தது. தொடர்ந்து அன்புச்செல்வியின் எறிகணைச் சூட்டாதரவைப் பெற்றுக்கொண்டு நகரத் தொடங்கினர். அங்குலம் அங்குலமாகத்தான் முன்னேற வேண்டியிருந்தது. மிகக் கடுமையான தாக்குதலின் முடிவில் பரந்தன் சந்தி வீழ்ச்சி கண்டது.

இப்பொழுது யாழ் நெடுஞ்சாலைக்கு இடதுபுறமாக முன்னரங்க நிலைகளைக் கைப்பற்றியபடி முன்னேறிய அணி, பூநகரிக்குச் செல்லும் வீதியையும் கடந்திருந்தது.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

LMG போராளிகள் சிலர் காயமுற்று வீரச்சாவடைந்ததால், சிவகுமாரி தனது PK LMG உடன் அவ்விடத்துக்குச் சென்று ஏற்கனவே நின்ற அணியுடன் இணைந்துகொள்ள, அடுத்தடுத்த காப்பரண்களைக் கைப்பற்றிக்கொண்டு சென்றனர். இந்த வேகமான தாக்குதல் உடனடியாகவே இராணுவத்தைப் பின்வாங்கச் செய்தது. எமது முன்னேற்ற நடவடிக்கையின்மூலம் அவர்கள் அதிக இழப்பைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களின் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலிலிருந்தே புரிந்தது.

எமது எறிகணை செலுத்தி, ஆட்லறி, ராங்கிகள் என்பன ஒருங்கிணைக்கப்பட்ட துல்லியமான, செறிவான சூடுகளை வழங்கிக்கொண்டிருக்க, வாய்க்காலைப்போல் நகர்வகழியூடாக ஓடிக்கொண்டிருந்த மழைநீரைக்கூடப் பொருட்படுத்தாது எல்லோரும் முன்னேறினோம். அந்த வேளையில்தான், போகும் களங்களில் எல்லாம் கனலாய்ச் சீறும் ஆயுதத்துடன் பகைவென்றுகொண்டிருந்த மேஜர் சிவகுமாரி தன் பணியை முடித்துக்கொண்டார். ஓய்வில்லாமல் சுழன்று களங்களின் போக்கையே திசை மாற்றிவிடும் வல்லமைமிக்க சிவகுமாரி ஓய்ந்துவிட்டாரா? மனம் நம்ப மறுத்தது. எமது சூடுகளாலேயே படையினரின் சூடுகளை முறியடித்தபடி தொடர்ந்தும் முன்னேறிச் சுட்ட தீவுப்பகுதியில் நிலையெடுத்துக்கொண்டோம்.

பரந்தன் சந்தி கட்டுப்பாட்டுக்குள் வந்ததும் தனது அணியுடன் அடுத்த கட்ட நகர்வைத் தொடங்கினார் மாதுரி. இப்போது பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் இராணுவம் தரித்துநின்று தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தது. இடையில் வெட்டைவெளி என்பதால் நாமும் முன்னேறமுடியாதிருந்தது. எனினும் எமது கடும் தாக்குதல் படையினரைப் பெரும் இழப்புக்களுடன் அதிலிருந்து பின்வாங்கச் செய்தது. பின்வாங்கிய இராணுவம் இரசாயனக் கூட்டுத்தாபனத்திலிருந்து சிறிது தூரம் பின்னே போய் உடனடி நிலைகளை அமைத்தது. எமது

padippakam



அணிகளை மீளமைத்து ஒழுங்கமைக்கும் பொருட்டு அன்றைய முன்னகர்வை அத்துடன் நிறுத்திவிட்டு, மாதுரியுடன் இரு போராளிகள் இராணுவ தற்காலிக நிலைகளைக் கண்டறியும் பணிக்காக முன்னகர்ந்தனர்.

இப்போது நள்ளிரவு கடந்திருந்தது. கடும் இருட்டு. மார்கழி மழை வெள்ளம் எங்கும் நின்றது. நீரை மீறி வளர்ந்திருந்த புற்களின் இடையில் புகுந்து தவளைகள் இடையறாது கத்திக்கொண்டிருந்தன. கால்களைத் தழுவியபடி நீருக்கடியில் எதுவோ ஓடியது. வயல் பாம்பாகவும் இருக்கலாம். அருவிபோல ஓடும் நீரின் மெல்லிய சலசலப்பையும் தவளைகளின் கத்தலையும்தவிர வேறேதுமில்லாத இருட்டு அச்சமூட்டுவதாக இருந்தது. இந்தக் கும்மிருட்டிலே கண்களின் ஒளிமூலம் பாதையற்ற இடங்களில் பாதைகளை உருவாக்கி நகர்ந்துகொண்ருந்தார் மாதுரி. ஏதோ ஒரு வகையில் அந்தச் சூழல் எம்மோடு ஒத்துழைக்க மறுத்தது. தயாராயிருந்த இராணுவத்தினரின் காதுகளில், நீருக்குள் இவர்கள் நகர்ந்து செல்லும் ஒலி கேட்டிருக்கவேண்டும். அவர்களின் ஆயுதங்கள் ஒருமுறை பொழிந்து ஓய்ந்தன. அதே இடத்திலேயே மேஜர் மாதுரி மண்ணை முத்தமிட்டுக்கொண்டார். கூடநின்ற போராளிகளின் குருதியும் வெள்ளத்தோடு கலக்க, உடல்கள் துப்பாக்கிச் சன்னங்களை ஏந்தியிருந்தன. எனினும் பதில் தாக்குதல் செய்தபடி இருவரும் சற்றுப் பின்னே வந்தனர். ஆனால், மாதுரியின் வித்துடலைப் பெறுவதற்காகக் காப்புகளற்ற அந்தவெளியில் முன்னேற முயற்சிக்க, இராணுவம் தனது தாக்குதலை அதிகப்படுத்தியிருந்தது. தொடர்ந்து பொழுது விடியவே மாதுரியை நெருங்க முடியாமற்போனது.

அன்று பகல் முழுவதும் இரு பகுதியினராலும் எறிகணைகள் ஏவப்பட்டுக்கொண்டிருந்தன. மாதுரியை நெருங்கவிடாமல் எங்களை அவர்களும், அவர்களை நாங்களும் தடுக்கமுயன்றுகொண்டிருந்தோம். 1999.12.19



படிப்பகம்

padippakam



அன்றைய இரவு இன்று எப்படியும் மாதுரியின் வித்துடலை எடுத்துவிடவேண்டும் என்பதே எல்லோரது நினைவாகவும் இருந்தது. மிகவும் ஆபத்தான இடங்களில்கூட வித்து டலைத் தோளில் சுமந்துவந்து சேர்ப்பது எங்களின் மரபு. ஒரு போராளியின் வித்துடலை மீட்பதற்காகச் சென்ற இன்னொரு போராளி வித்துடலான சரித்திரங்களும் எங் களிடம் நிறையவே உண்டு. எனினும் யாரும் சோர்ந்து விடுவதில்லை.

இப்போது இருளோடு இருளாக மைதிலி நகர்ந்து கொண்டிருக்கிறார். இரவு பகல் பாராது இராணுவத்தின் இருப்பிடமெங்கும் நகர்ந்து வேவு எடுத்த அந்த வேவுப் புலிக்கு அதுவே இறுதி நாளாயும் அமைந்தது. கால மெல்லாம் எதிரிக் குகையினுள் கண் விழித்துத் திரிந்த அந்த வேவுப்புலி பரந்தனில் கண் மூடிப்போனது.

“ஓயாத அலைகள்-03 நடவடிக்கையில் பரந்தன் பகுதியை மாலதி படையணி பிடித்துக் கட்டுப்பாட் டில் வைத்திருந்தபோது, எங்களுடைய படையணி அவர்களை மாற்றிவிடப் போனது. அணிகளை மாற்றிவிடுவதற்காக அங்கு பொறுப்பாக நின்ற லெப்.கேணல் மைதிலியைச் சந்தித்தேன். அப்போது மேஜர் மாதுரி வீரச்சாவடைந்துவிட்டார். வித்துடல் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது படையினருக்கு மிக அருகே இருந்தது.

நான் எங்களுடைய கொம்பனியைப் பாதுகாப்புப் பணியில் விட்டவாறு மாலதி படையணியை மாற்றிக் கொண்டிருந்தேன். மாதுரியின் வித்துடலை எடுக்கா மல் போகமாட்டேன் என்று மைதிலி பிடிவாதத்துடன் நின்றார். படையணி தொடர்ந்தும் அவ்விடத்திலேயே நின்றால், பின்னர் எடுக்கலாம் என்ற ஆறுதல் இருக்கும். அன்றிரவு பரந்தனைவிட்டு வெளியேற வேண்டியிருந்ததால், மறுபடி அங்கே வரும் வாய்ப்புக்



படிப்பகம்

padippakam



குறைவு. எனவே, எப்படியாவது வித்துடலை எடுத்து விடவேண்டும் என்று அவர் அவசரப்பட்டுக்கொண்டி ருந்தார்.

அப்போது நேரம் இரவு 1.30. படையினரின் எறி கணைவீச்சு மிகக் கடுமையாக நடந்துகொண்டிருந் தது. நிலைமைக்கேற்ப பார்த்துச் செய்யும்படி மைதிலி யிடம் சொல்லிவிட்டு, ஏனைய இடங்களில் ஆட் களை மாற்றிவிட நான் போய்விட்டேன். முழுப் பேரையும் நிலைப்படுத்தியபின், எனது கட்டளைப் பணியகத்துக்கு என ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, தொலைத்தொடர்புக் கம்பிகளை உயர்த்திக் கட்டிக் கொண்டிருந்த நேரம், மைதிலியை வித்துடலாகச் சுமந்துவந்தார்கள்"

என்றார் அந்த அற்புதமான போராளியின் கடைசி நிமிடங்களில் அருகிருந்த, சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா.

"மரத்தில் நிண்டு பிடுங்கிப் போடுற தேங்காய்களை ஒருத்தன் கையில ஏந்தி ஒரு இடத்தில குவிக்கிறான். சில தேங்காயள் உருண்டு வந்து எங்கட காலிலயும் படுது. இதோட கதை முடிஞ்சுது எண்டு நினைச்சுக் கொண்டு குறிப்புப் புத்தகத்தில குறிச்சுவச்சிருந்த தகவல் களைச் சின்னத் துண்டாக் கிழிச்சு மெல்லவா விழுங்கி னம். எல்லாம் தொண்டைக்குள்ள பொறுக்கத் தொடங் கிற்று. ஒரு குண்டின்ர கிளிப்பைக் கையால கழட்டிற்று, மற்றக் குண்டின்ர கிளிப்பை வாயால் இழுத்துக் கீழே போட்டிட்டு, ஒண்டு உனக்கு மற்றது எனக்கு எண்டு மனசுக்குள்ள நினைச்சுக்கொண்டு தயாரா இருக்கிறம். நாங்கள் இருந்த வடலிக்கூட்டம் பெரிய மறைப்பெண்டு சொல்லக்கூடிய மாதிரி இல்லை.



படிப்பகம்

இப்பதான் மூச்சு விடுகின்ற சத்தம் பெரிசாக் கேக்கிற மாதிரிக் கிடக்கு. அந்தப் பத்தைக்குப் பக்கத்தில் நிக்கிறவன் முழுசி முழுசி இங்கேயே பாக்கிறான். இந்தா எங்களுக்குப் பக்கத்தில நிண்டவனைக் கைதட்டிக் கூப்பிடு கிறான். இங்காலை பாத்து ஏதோ சொல்ல, இவன்ர முகம் வெளிறினமாதிரிக் கிடக்கு. அது எங்கட பிரமை தானோ தெரியாது. பிறகு ஏதோ யோசித்துக்கொண்டு... ஐயோ! முதல் நிண்டதவிட இன்னும் கிட்டவா வந்து நிக்கிறான். குண்டு ரெண்டும் வெடிக்கத் தயாரா இருக்கு.

மரத்தில நிண்டவன் 'யோவ் சமந்த' எண்டு கூப்பிட்டு இன்னும் ஏதோ சிங்களத்தில சொல்ல, இவன் திடுக்கிட்டு முழிச்சுச் சிரிச்சுக்கொண்டு தேங்காய்களைப் பொறுக்கத் தொடங்கினான். இவன்ர பேர் சுமந்தவாகத்தான் இருக்க வேணும்.

கைகள் துறுதுறுக்குது. வச்சிருக்கிற குண்டை எறிஞ்சா நாலஞ்சு பேர் உடனயே விழுவாங்கள். ஆனால், நாங்கள் வைச்சிருக்கிற தகவல், அது எங்கட உயிர விட முக்கியம். அதைக் குடுக்கிறதுக்குத்தன்னும் நாங்கள் உயிரோட திரும்பவேணும். இதை நினைச்சு அமைதியாய் இருக்கி றம். நேரம் போகப்போகத் தேங்காயளோட எல்லாரும் போய்ச்சேர்ந்திட்டாங்கள். அதற்குப் பிறகுதான் நிம்மதி யாய் இருந்தது"

என்று திகில் நிறைந்த ஆங்கிலப் படங்கள்போல இந்த வெற்றிலைக்கேணி வேவுக் கதையைச் சொன்னார் மைதிலி.

ஓயாத வேவுப் புலியாகச் சுழன்று, வாய்ப்பற்ற வேளை களில் எல்லாம் நிதானமாகச் செயற்பட்டு, பகைவரையே உச்சிவிட்டுத் தப்பி வந்தவர். இன்னும் இன்னும் சாதிக்க வேண்டும் என்ற கனவோடு எல்லோரையும் வழிநடத்திய

padippakam



அந்தத் தளபதி, பரந்தன் களத்தில் தன்பணியை முடித்துக் கொண்டது எமக்கு மிகப்பெரிய இழப்பாகும்.

"மைதிலியை முன்பே எனக்குத் தெரியும். பூநகரி மீதான தவளை நடவடிக்கைக்கு வேவு வேலைகள் நடந்துகொண்டிருந்தபோது, வேலை சற்றுத் தாமதமாகிக்கொண்டிருப்பதால், வேறு யாரையாவது வேவுக்கு அனுப்பட்டுமா, அல்லது நீங்களே செய்கிறீர்களா என்று மைதிலியிடம் கேட்டேன். தானே செய்வதாகப் பதிலளித்த மைதிலி, அன்றைய ஒரு நாள் இரவிலே ஆறு பாதைகளைத் தேர்ந்தெடுத்து, அவைபற்றிய வரைபடங்களுடன் மறுநாள் என்னைச் சந்தித்தார். தங்களுக்குரிய வேலையைத் தாமே செய்யவேண்டும் என்பதில் விட்டுக்கொடுக்கமாட்டார்.

பள்ளமடுவில் போர் முழக்கம்-05 எதிர் நடவடிக்கையின்போதுகூட, கட்டளைத் தளத்தில் நின்ற மைதிலி சண்டை நடக்குமிடத்துக்குத் தன்னைப் போக அனுமதிக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டிருந்தார். தங்களுடைய பக்கச் சண்டையை வேகமாக முடித்துவிடவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு. நெருக்கடியான கட்டம் வந்தபின்னர் மைதிலியைக் களம் இறக்கித்தான் அந்தச் சண்டையை முடிவுக்குக் கொண்டுவந்தோம். மைதிலியால்தான் அது முடியும்.

பரந்தனில்கூட, போகவேண்டாம் என்று விதுஷா தடுத்தும் கேளாமல், ஒரு வித்துடலை எடுப்பதற்காக மைதிலி போயிருந்தார். அதை எடுக்க இயலாது என்று விட்டுவிட்டு வரமுடியாமலே, தான் எடுத்து வருவதற்காகக் போயிருந்தார். அதுதான் மைதிலி"

என்றார் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன்.



படிப்பகம்

முன்னணி நிலை அப்படியே இருக்க, மறுநாள் நாங்கள் எல்லோரும் உருத்திரபுரம் பகுதிக்கு அனுப்பப்பட்டுப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டோம். அந்த இடைவெளியிலேயே நத்தார் பெருநாள் கவலையோடும், களிப்போடும் கழிந்துபோனது. பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்துக்கு அப்பால் தற்காலிகமாகத் தங்கிக்கொண்ட இராணுவத்தை மீண்டும் துரத்துவதற்குரிய திட்டம் தீட்டப்பட்டது.

யாழ் நெடுஞ்சாலையின் இடமும் வலமுமாக ஊரியான் பகுதியாலும் கூட்டதீவுப் பகுதியாலும் உடைப்பை ஏற்படுத்தி முன்னேறுதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு முல்லையுடன் நின்ற கீர்த்தியின் பிளாட்டூன் தெரிவானது. ஏனைய படையணிகளின் அணிகளும் இதில் பங்கேற்றன.

நள்ளிரவு கழிந்து நேரம் ஒன்றைத் தாண்டியது. உடைவுப் பாதையூடாக நகர்ந்து இராணுவத்தினரை வீழ்த்தியபடி முன்னேறத்தொடங்கினோம். இராணுவத்தினது சிறிய தளங்கள், காவல்நிலைகள் உட்பட அனைத்தையும் கைப்பற்றியபடி முன்னேறிய நாங்களும், ஏனைய அணிகளும் அன்று உமையாள்புரம்வரை படையினரைத் துரத்திவிட்டிருந்தோம்.

கிழக்கு அரியாலையில் தரையிறங்கிய பின், கலைக்குயில், ஆனந்தி ஆகியோரது பிளாட்டூன்கள் ஆரம்பத்தில் தேடல் நடவடிக்கையை மேற்கொண்டபடி முன்னேறத்தொடங்கின என்று பார்த்தோமல்லவா? அதே வேளை தனுஷாவின் அணிக்கு வழங்கப்பட்டிருந்த பணியில் சிறிது மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய தேவை உடனடியாக ஏற்பட்டது. ஏனெனில் இன்னும் சிறிது நேரத்தில் பொழுது விடிந்துவிடுமானால் திட்டம் பாரிய இழப்புடன் முடிந்துவிடும். எனவே மீண்டும் கடலால் நகர்ந்து

padippakam



தனங்கிளப்பில் தரையிறங்குவது என எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப, மீண்டும் படகேறியது அவ்வணி. கூடவே குறிப்பிட்டளவு ஆண்போராளிகளுடன் இருபுறமும் கடற்புலிகளின் சண்டைப் படகுகள் பாதுகாப்பாக நகர, பயணம் தொடர்ந்தது.

ஏற்கனவே தனங்கிளப்புப் பகுதிக்கு எறிகணை உதவி கிடைப்பது கடினம் என்பதால் பல்குழல் பீரங்கியின் உதவி மட்டுமே கிடைக்குமெனச் சொல்லப்பட்டிருந்தது. இதனால் இந்த அணி தமது சுடுகலன் வலுவையே தகுந்த முறையில் பாவிக்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

தனுசாவின் அணி தனங்கிளப்புக் கரையை அடைய வானம் வெளுத்திருந்தது. தரையிறங்கியவர்கள் கரையில் இருந்து 400மீ. நீளமும் இருபுறமும் 200மீ. அகலமும் உடையதாக இருக்கத்தக்கதாக சாவகச்சேரி நகரப்பகுதி நோக்கி நிலையெடுத்துக்கொண்டார்கள். அது கடற்கரை என்பதால் ஐதாக வளர்ந்திருந்த ஈச்சம்பற்றைகளைத் தவிர மறைப்புக்கள் எதுவும் இல்லை. அத்துடன் மண்வெட்டி நிலத்தில் இறங்கவே நீர் தெறித்தது. ஆகக்கூடியது ஒரு அடி வெட்டியதும் நீர் ஊறத் தொடங்கும். வெறும் தரையை விட தண்ணீர் நின்றாலும் பரவாயில்லை என்று 'I' வடிவ அகழிகளை அமைக்கத் தொடங்கினோம். வெட்டப்பட்ட அகழிகளை மூடுவதற்கோ எதுவுமில்லை. காப்புக்கள் அற்றநிலையில் மறைப்புக்களைமட்டும் வைத்தே சண்டையிடவேண்டியிருந்தது.

பதுங்குகுழி வெட்டும் வேலை நடைபெறும்போது எங்களுக்கு வலம், இடம், முன் பகுதிகளில் சிறிய தளங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. மூன்று பக்கமிருந்தும் கடுமையான எதிர்ப்பைச் சந்திக்கவேண்டிவரும் என்பது விளங்கியது. வேகமாக அடிக்கப்பட்ட நிலைகளின் ஆள் கூறுகளைக் கட்டளைப்பீடத்துக்குக் கொடுத்துவிட்டு



படிப்பகம்

padippakam



படைத்தளங்களை வேவு எடுப்பதற்கான வேலைகளில் ஈடுபட முனைந்தோம். எங்களது பாதுகாப்பு நிலைகளுக்கு இடதுபக்கமுள்ள சிறுதளத்தை நாங்களும் வலதுபக்க முள்ள தளத்தை ஆண் போராளிகளும் தாக்குவது எனப் பிரிக்கப்பட்டு வேவுப்பணிக்கு ஆயத்தப்படுத்தப்பட்டது.

அப்போது நேரம் காலை 7.00 மணியிருக்கும். தூரத்தே ராங்கிகளின் இரைச்சல் கேட்டது. சத்தம் வரவரக் கிட்ட வாகக் கேட்கத்தொடங்கியது. அதேவேளை நாம் நிலை கொண்ட பகுதியின் இருபுறமும் கடற்படைப்படகுகள் வந்து தாக்கத்தொடங்கின. எமது நிலைகள் எங்கெங்கே இருக்கின்றன என்பது படைத்தரப்புக்குத் தெரியாமல் இருந்தது. எனவே அதைக் கண்டறிவதே அவர்களின் நோக்கமாக இருந்ததால், கண்மூடித்தனமாகத் தாக்கத் தொடங்கியது இராணுவம்.

“கிட்ட வந்தால் மட்டும் சுடவும்” என்ற கட்டளை முன்னரே எமக்கு வழங்கப்பட்டிருந்ததால் எமது நிலை களைக் கண்டறிவதில் படையினர் மிகவும் சிரமப்பட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிவந்துகொண்டிருந்த படையினர் எம்மிலிருந்து 100மீ. இனுள் வந்ததும் எல் லோரது சுடுகலன்களும் சடசடக்கத் தொடங்கின. திகைத் துப்போன படையினர் பதில் தாக்குதலைப் பலமாகத் தொடங்கினர். கடற்கரையில் விடப்பட்டிருந்த LMG இப் போது இருபக்கத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கவேண் டியிருந்தது. முன்னே நின்று தாக்குகின்ற தரைப்படைக் கும், முதுகுப்பக்கம் கடற்படையின் படகுத் தாக்குதலுக்கும் இடையிலான கடுமையான போராட்டம் அது. இருபுறமும் படை நகர்ந்து கடற்கரைப் பகுதியை மூடினால், உள்ளே நிற்கும் நாங்கள் மீள்வதென்பது நினைத்துப் பார்க்கவே முடியாத விடயம். எனவே கடற்கரை நிலையைத் தக்க வைப்பதில்தான் எமது வெற்றியே தங்கியுள்ளது என்பதை உணர்ந்த அணித்தலைவர்கள் இருபுறத்தும் கடற்கரை யைப் பலமாக்கினர். இங்கு பலமாக்குதல் என்பது,



படிப்பகம்

padippakam



"தண்ணீர் ஊற ஊற வேகமாய் அகழியை வெட்டுறது, உள்பக்கத்தில் நின்று அடித்துக்கொண்டு நின்ற இரண்டு றைபிள்களைக் கொண்டுவந்து அதில விடுறது, தொடர்ந்து குறிபார்த்துப் பார்த்துப் சுடுறது என்பதாகத் தான் இருந்தது"

என பின்பொருநாளில் நாம் மற்றவர்களிடம் சொல்லிச் சிரித்தோம். ஒவ்வொரு சமருக்குச் செல்லும்போதும் தாயன்போடு வழியனுப்பும் தலைவர் எங்களுக்குத் தரும் மனவுறுதியின் முன் எவருடைய எந்தப் பெரிய ஆயுதமும் பலமானதாகத் தெரிவதில்லையே.

இப்போது தனங்கிளப்பில் நின்ற நாம் இடம், வலம், முன் என மூன்று பக்கத் தாக்குதல்களை, தரை, கடல், ஆகாயம் என மூன்று வகைத் தாக்குதல்களாக எதிர் கொண்டோம். சிறீலங்காப்படை தோற்கின்றபோது அதில் தமக்கும் பங்கு இருக்கவேண்டும் என்பதுபோல உலங்கு வானூர்திகள் கண்டபடி அடித்துவிட்டுப் பறந்து போயின. கண்ணை மூடிக்கொண்டே அடித்துப் பழக்கப்பட்டவர்கள் அல்லவா விமானப்படையினர். எம்மால் மீட்கப்பட்ட நிலத்தை எந்தப் பலத்தைப் பாவித்தும் அவர்களால் விடுவிக்கமுடியவில்லை.

தொடர்ந்து பூநகரியில் இருந்து எமது பலகுழல் பீரங்கி அணியினரின் தொடர்பு கிடைத்தது. அவர்களால் ஏவப் பட்ட எறிகணைகள் நாம் சொன்னபடி வீழ்ந்து வெடித்தன. எதிர்த்தரப்பு இதனைக் கண்டு திகைத்தது. முன் பக்கத் தால் உடைத்து உள்ளே வந்த இராணுவமும் நிலை மையை உணர்ந்து, இறந்த இராணுவத்தினரையும் விட்டுத் தப்பினால் போதும் என ஓட்டம் பிடித்தது. உடனேயே மூன்று பக்கநிலைகளையும் முடிந்தவரை நீட்டியும் அகட்டி யும் நாம் நகர்த்திவிட்டு நிற்க, 82மி.மீ. எறிகணை செலுத் தும் அணியொன்று எமக்கு உதவியாக உள்ளே வந்து சேர்ந்தது.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

நாலைந்து நாட்களின் பின் ஆண்போராளிகளின் அணியொன்று மேஜர் மாதவனுடன் வந்திருந்தது. அத்துடன் தனுசாவின் அணிக்கு மேஜர் செல்வி கட்டளை அதிகாரியாக விடப்பட்டார்.

இப்போது கிழக்கரியாலையிலும் தனங்கிளப்பிலும் குறிப்பிட்ட பகுதிகள் எமது கட்டுப்பாட்டில் இருந்தன. ஒருகாலத்தில் கிளாலி-பூநகரி படகுச்சேவைபோல் அரியாலை-தனங்கிளப்பு படகுச்சேவை அப்போது எங்களிடையே புகழ்பெற்றிருந்தது. நாட்கள் நகர நகர அணிகள் இந்நிலைமைக்குப் பழக்கப்பட்டுப் போயின. இதுவே எமது இயல்பு வாழ்க்கையும் ஆனது.

கிழக்கரியாலைக் கடற்கரையில் மக்கள் தமது சொந்தத் தேவைக்கென இறால் வலை கட்டி விட்டிருந்தனர். போன புதிதில் இடத்தைக் கைப்பற்றித் தக்கவைப்பதிலேயே குறியாக இருந்தமையால் இந்த வலையைப் பார்க்க ஏது நேரம்? வெற்றிலைக்கேணி, பரந்தன், தனங்கிளப்பு எனப் பல்வேறு முனைகளில் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தமையால், ஒரு கட்டத்தில் எமது முன்னகர்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இதனால் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இடையிடையில் தேடல் செய்வதுண்டு. இப்படித்தான் ஒருமுறை கடலினுள் இறால் வலை கண்டுபிடிக்கப்பட்டது. பிறகென்ன? அடிக்கடி கடலில் 'தேடல்' செய்யத் தொடங்கினோம். பிறகு இறால் பொரியல் வாசம் முன்னரங்க நிலை முழுவதும் மணக்கும். பின் 'தேடல்' என்றால் எல்லோருக்கும் தெரியும் அன்று நல்ல சாப்பாடுதான் என்று. வழங்கல் பகுதியால் தரப்படுகின்ற உணவுக்குக் கறி பொருத்தமாக இல்லை என்றுபட்டால், அன்று எங்களின் 'கிளியறிங் ரீமை' கடற்கரையில் பார்க்கலாம். இறால் களவெடுத்து, வலைகட்டிய ஐயாமாரிடம் ஏச்சு வாங்கிய நேரங்களும் உண்டு. ஆனாலும் அவர்களோடு அன்பாகப் பேசிச் சமாளித்துப் புன்னகையால் வென்றுவிட்டு இறால் பையோடுதான்

padippakam



'கிளியறிங் ரீம்' வரும். இந்த விளையாட்டுச் சிறிது நாட்களில் பொறுப்பாளரால் கண்டுபிடிக்கப்பட்டதும் நிறுத்தப்பட்டது.

இவ்வாறே கடமையும், பகிடியுமாகக் கழிந்தன நாட்கள். சில வாரங்களின் பின்னர் எமது பகுதியை ஜெயந்தன் படையணி பொறுப்பேற்றுக்கொள்ள, எம்மை ஏற்றிச் செல்லப் படகுகள் கடலில் காத்திருந்தன. எங்கே, ஏன் என்ற கேள்விகளோடு வன்னிக்குப் (2000 பெப்ரவரி) படகேறினோம்.

இப்போது நினைத்தாலும் மனம் நெகிழ்ந்துகொள்கின்றது. எத்தனை நாட்களை அவர் எங்களோடு செலவிட்டார். ஓய்வு என்ற பெயரில் அற்புதமான நாட்களை அல்லவா எங்களுக்கு அவர் பரிசளித்தார்.

வவுனியா, மன்னார், வடமராட்சி கிழக்கு, தென்மராட்சியின் தென்முனை என நாலா திசைகளிலும் நின்ற எங்களை ஒரு தென்னந் தோப்பிலே ஓய்வாகவிட்டார். பொதி செய்யப்பட்ட உணவு என்ற கதையே இருக்கக்கூடாது, வீடுபோன்று பாத்திரங்களில் வரும் உணவு தட்டுகளில் பரிமாறப்படவேண்டும் என்ற அவருடைய கட்டளை, நாம் அவ்விடத்தைவிட்டுப் புறப்படுகின்ற கடைசி நிமிடம்வரை கடைப்பிடிக்கப்பட்டது.

நெகிழ்ந்துபோனோம். வெற்றி நிச்சயம் எதிர் நடவடிக்கைக் களத்தின் மாங்குளம் முனையில் படையினரும் நாமும் 30மீ. இடைவெளியில் நிலைகொண்டிருந்தபோது, மேஜர் கஜேந்திியின் மொழியில் சொல்வதானால் 'மூக்கும் மூக்கும் முட்டும் தூரத்தில்' நின்ற நாட்களில் நான்கைந்து நாட்களுக்கு வைத்துச் சாப்பிடக்கூடியவாறு பொரித்த ரொட்டியும் பழப்பாகும் வெங்காயச்சம்பலும் வரும்.



படிப்பகம்

padippakam



மூன்று நேரமும் அதுவேதான். அந்தச் சாப்பாடு எங்களுக்கு வந்து சேர்வதற்கிடையில் எட்டுப் பத்துப் பதுங்கிச் சூடுகளையும் பதினைந்து இருபது எறிகணைகளையும், முந்நூறு நானூறு ரவைகளையும் நாம் சந்திக்கநேரிடும்

இத்தனை இடர் கடந்து வருகின்ற உணவு தலைக்கு மேலே தொங்கும். கீழே காப்பரணோடு சேர்த்து வெட்டப்பட்ட சிறு குழியொன்றிலே எங்களுடைய இயற்கைக் கடன்களை முடித்துக்கொண்டு மண்ணால் மூடுவோம் நாங்கள் எதற்காகவுமே வெளியே போகமுடியாமல் வாழ்ந்த நாட்கள் அவை. சுடுகலனைக் கழற்றித் துப்புரவு செய்யும் ஓசையைக் கேட்டுப் படையினர் குண்டடித்த காலம் அது.

அந்த நெருக்கடியான காலத்தில் ஒரு தடவை எங்களைச் சந்திக்க விரும்பிய தலைவர், நாம் நல்ல உடைகளின்றி, பழுதடைந்த உடைகளை முட்களால் குத்தித் தைத்து அணிந்திருந்த கதையை விதுஷாவிடம் கேட்டறிந்து, அந்த நிலைமையில் எப்படி எங்களைப் பார்ப்பது என்று சந்திக்காமலே விட்ட சம்பவமும் நடந்திருந்தது.

தொலை தூரம் காரணமாகவும் படையினரின் எறிகணைவீச்சு, பதுங்கித் தாக்குதல் காரணமாகவும், தாமதமாக எங்கள் கைகளுக்கு வருகின்ற உணவு புளித்துப் போயிருந்தாலுங்கூட அதையே சூடாக்கிச் சாப்பிட்ட நாட்களையெல்லாம் கடந்து வந்த நாம், தலைவரின் அன்பில் நெகிழ்ந்துபோனோம். அவர் வரவில்லை இன்னமும். ஆனால், அருகில் நிற்பதுபோல் உணர்வு எங்களுக்கு.

நாலா திக்கிலும் களங்கள் விரிந்துகிடந்ததால் பிரிந்திருந்தவர்கள் ஒன்றுசேர, கூடிக் கும்மாளமடிக்க, பயிற்சி செய்ய, படம் பிடிக்க, விதவிதமாய் சாப்பிட, அடிக்கடி தலைவரைப் பார்க்க, அவரோடு மனம்விட்டுப் பேச,



படிப்பகம்

padippakam



பாட... எதிர்பாராமல் கிடைத்த வாய்ப்பில் சற்றுத் திணறித்தான்போனோம்.

ஓய்வில்லாத தலைவர் எங்களுக்காக நேரத்தை ஒதுக்கி, நேரே வந்து கதைத்து நேரடியாக எங்களின் சூட்டுப் பயிற்சியைப் பார்த்து, எங்களோடு சேர்ந்து தானும் பயிற்சி செய்து, மேடையேறி நாங்கள் செய்த நிகழ்வு களைப் பொறுமையாகப் பார்த்து, நாங்கள் பாட ஆறுத லாக இருந்து கேட்டு, எங்களின் ஐயங்களைத் தெளிவு படுத்தி, தன்னுடைய எதிர்பார்ப்புகளை, கற்பனைகளை எங்களோடு பகிர்ந்துகொண்டு...

அது ஒரு தென்னந் தோப்பு என்று யார் சொன்னது? எங்களுக்கு அதுவே நந்தவனமானது.

ஈழமுனைகளிலிருந்து ஜனவரி 29 ஆம் நாள் முதல் வரத் தொடங்கிய எங்கள் படையணியின் கடைசி அணி அங்கே வந்துசேர்ந்தது பெப்ரவரி 8 ஆம் நாள் இரவில். நாம் நின்ற தொலைவுகளும் சுமந்திருந்த பொறுப்புகளும் இலகுவில் எங்களை வர அனுமதிக்க வில்லை.

2000.02.09 அன்று எங்களைச் சந்தித்த தலைவர் அவர்கள்,

**"போராட்டம் தொடங்கிய ஆரம்ப காலத்தில் போராளிகள் நிற்க இரண்டு வரிசையே போதும். இன்று ஒரு படையணியைப் பின்னணிக்குக் கொண்டு வந்து சேர்ப்பதே பெரிய வேலையாக இருக்கின்றது"**

என்றார்.



படிப்பகம்

padippakam



"உலகில் பெரிய தொகையில் பெண்கள் நேரடிச் சமரில் ஈடுபடுவது குறைவு. அப்படி ஈடுபடுபவர்களும் தொலைத்தொடர்பு, பின்னணி வேலை, மருத்துவப் பணி என்பவற்றிலேதான் பெரும்பாலும் பங்கேற்கின்றனர். அர்ப்பணிப்பு உணர்வுடன், மிக நெருக்கமான சண்டையில் ஈடுபட்டுள்ள பெண் போராளிகள் நீங்கள் தான்"

என்று மேலும் கூறிய தலைவர் அவர்கள் தொடர்ந்து,

"இன்று முழு உலகமுமே தங்களுடைய மண்ணையும் மக்களையும் மொழியையும் பாதுகாப்பதற்காக, தமது படைபலத்தையும் ஆயுத பலத்தையும் மிகவும் திறமையாக வளர்த்து வைத்திருக்கின்றார்கள். அது போலவே நாமும் எங்களிடம் ஆட்பலம், ஆயுதபலம் இருந்தாலும், திறமையை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

நீங்கள் மண்ணுக்காக மடிவதைவிட, மண்ணைக் காக்கப் போராடுவதே முக்கியம். நீங்கள் உங்களை அழிப்பதைவிட, எதிரியை அழிப்பதிலேதான் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். சாவைத் தவிர்க்க வேண்டும். அதற்காகத்தான் உங்களுக்குக் கடினமான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

எதிரி காப்பிலிருந்தவாறு சுடும்போது உங்களுக்குக் காயமேற்பட்டால் நீங்கள் அந்த இடத்தைவிட்டுப் பின்வாங்கவேண்டி வரும். இதையே நீங்களும் எதிரிக்குச் செய்யுங்கள்.

இக்கட்டான சூழ்நிலை வந்தால், உடனேயே முடிவெடுத்து நான்கு இராணுவத்தையாவது சுட்டுவிட்டுத் தப்பி வாருங்கள்.



படிப்பகம்

padippakam



நீங்கள் என்னுடைய படையணி. அதனால்தான் உங்களோடு நீண்ட நேரத்தைச் செலவிடுகின்றேன். நீங்கள் கடைசிவரையும் விட்டுக்கொடுக்கக்கூடாது. உங்களில் நான் அதிகளவு நம்பிக்கை வைத்திருக்கின் றேன். அதற்கேற்ப உங்களின் நடவடிக்கைகள் இருக்க வேண்டும்"

என்று தனது எதிர்பார்ப்புகளை முதல்நாள் சந்திப்பிலே பகிர்ந்துகொண்டார். நடந்து முடிந்த சண்டைகளில் எங் களுக்கேற்பட்ட ஐயங்களை எல்லாம் தெளிவுபடுத்தினார்

நெருக்கடி மிகுந்த களங்களிலெல்லாம் ஆதரவுச் சூடு களுக்கு வழுத்திருத்தம் சொல்வதற்காகப் படையினரைக் கண்காணிக்க வசதியாக எங்களுக்குத் தொலைநோக்கி கள் தேவை என்பதையும், தற்போது அவை இல்லாம லேயே தாம் பணி செய்வதையும் தலைவர் அவர்களிடம் மேஜர் தமயந்தி சொன்னார்.

அவர் கதைப்பதைக் கூர்மையாகக் கவனித்த தலைவர் அவர்கள் தமயந்தியைக் கூப்பிட்டு, தன் சொந்தப் பாவனையிலிருந்த தொலைநோக்கியை அவரிடம் கொடுத்து, பணியை மிகச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்று வாழ்த்தினார்.

வெற்றிலைக்கேணிப் பகுதியில் நாம் தனித்து நின்ற போது பெரும் எண்ணிக்கையான படையினர் தமக்கருகே யிருந்த வீதியால் ஊர்திகளில் போனபோது, தாக்கு வதற்குத் தோளில் காவும் எறிகணை செலுத்திகள் அற்ற தால் கையறுநிலையில் தாம் நின்றதாக மேஜர் வேழினி சொன்னதைத் தலைவர் அவர்கள் கவனத்துடன் கேட்டார்.

அதே பகுதியிலே, படையினர் தம்மைச் சூழ்ந்திருந்த நிலையிலே வெளியில்நின்ற பொறுப்பாளர்களுடன் தொடர்பைச் சீராகப் பேணி, இருந்த வளத்தைச் சரியான



படிப்பகம்

padippakam



முறையில் பயன்படுத்திப் படையினரைத் தாக்கி முற்று கைக்குள் நின்ற ஆண் போராளிகளையும் அழைத்துக் கொண்டு முற்றுகையை முறியடித்த லெப்.கேணல் சாந்த குமாரிக்குத் தலைவர் சிறப்புப்பரிசு ஒன்றையும் வழங்கிக் கௌரவித்தார்.

அவருக்கும் எங்களுக்குமான சந்திப்பின் சிறப்பு நிகழ் வாக நாங்கள் கலை நிகழ்வுகளை மேடையேற்றினோம். கலை நிகழ்வுகளுள் சிறப்பு நிகழ்வாக கருத்தாடல் களம் ஒன்றைச் செய்திருந்தோம். சண்டையொன்றின் வெற்றி யைத் தீர்மானிப்பது பயிற்சியா, துணிவா என்ற தலைப் பில் மிகவும் விறுவிறுப்பாக அது நடைபெற்றது. இரு அணியினருமே தமது தலைப்பை வலியுறுத்துவதற்கு எமது தேசியத் தலைவர் அவர்களின் கருத்துக்களையே எடுகோள்களாகப் பயன்படுத்தினார்கள். உண்மைச் சம்ப வங்கள் பலவற்றை எடுத்து விளக்கினார்கள். இந்திய இராணுவக் காலங்களில் தலைவர் எடுத்த துணிச்சலான முடிவுகளையும் அதன் விளைவுகளையும் துணிவே முக்கியம் என்ற அணியும், பயிற்சி தந்திரம் துணிவு இவை மூன்றுமே வெற்றிக்கு அடிப்படை என்ற தனது கூற்றில் தலைவர் அவர்கள் பயிற்சியை முதன்மையாக வும் துணிவை மூன்றாவதாகவும் குறிப்பிட்டிருப்பதைப் பயிற்சியே முக்கியம் என்ற அணியும் எடுத்து விளக்கமாக வாதாடிக்கொண்டிருந்தன.

கருத்தாடல் களத்தின் முடிவில் தலைவர் அவர்கள் உரையாற்ற எழுந்தார். தொடர்ந்து சண்டையிலேயே நிற் கின்றவர்கள் என்றபோதும், மிகவும் ஆழமான பழைய சம்பவங்களைக்கூட அறிந்து வாதாடியதை அவர் மிகவும் பாராட்டினார்.

தொடர்ந்து அவர் தனது உரையில்,



படிப்பகம்

padippakam



“உலகளாவியரீதியில் மிகக் கூடியளவு பயிற்சி பெற்ற படைகள்கூடத் துணிவின் முன்னால் மண்டியிட்டுத்தான் இருக்கின்றன. துரோகி பஸ்தியாம்பிள்ளையைச் சுட்டபோது லெப். செல்லக்கிளிக்கு இயந்திரத் துப்பாக்கியில் பயிற்சி இல்லை. அவர் துப்பாக்கி வைத்திருந்த விதத்தைப் பார்த்து ஊகித்துத்தான் இவர் சுட்டார். அந்த வெற்றி துணிவால் கிடைத்தது.

இருதரப்புமே எனது கருத்துகளைக் கூறி வாதிட்டது எனக்கு வியப்பைத் தந்தது. உடல் முக்கியமா, உயிர் முக்கியமா என்ற விவாதம் என்மனதில் நடந்தது. உடலை வைத்துத்தான் உயிர் இயங்குகின்றது. துணிவு உடலைப் போன்றது. துணிவை வைத்துத் தான் பயிற்சி செய்யலாம்; சாதிக்கலாம்; இரண்டுமே பிரிக்கமுடியாதவை.

இந்திய இராணுவக் காலத்தில் அவர்களின் ஆயுதப் பயிற்சியுடன் ஒப்பிடும்போது நாங்கள் துணிவை வைத்துத்தான் செயற்பட்டோம். எனவே பயிற்சி, தந்திரம், துணிவு என்பதை இன்றிலிருந்து துணிவு, பயிற்சி, தந்திரம் என்று மாற்றிக்கொள்ளுங்கள்.

துணிவு என்ற உடல்கொண்டு, பயிற்சி எனும் உயிர்பெற்று எதிர்காலத்தில் செயற்படுவோம்”

என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் தொடர்ந்தும் நடந்த சந்திப்புக்களில் அவர் நிறைய விடயங்களை எங்களோடு கதைத்தார். பெரிய பெரிய விடயங்களையெல்லாம் மிக எளிமையாக விளக்கினார்.

“எப்போதும் உங்களுக்கு ஒன்றை நான் சொல்லுவேன். நீங்கள் யாரும் தேவையற்று உங்கள் உயிரை



படிப்பகம்

padippakam



இழக்கக்கூடாது. நீங்கள் உயிர் வாழ்ந்து, எதிரிகளை அழித்துக்கொண்டிருக்கவேண்டும். நான் முடிந்தேன் என்று நினைக்கக்கூடிய எத்தனையோ வேளைகள் வந்தன. நான் என்னால் முடிந்தவரை தப்பியிருக்கின்றேன்.

யுத்தம் என்றால் இழப்புக்கள் வரும். இழப்புகளைக் கண்டு அஞ்சக்கூடாது. தேவையற்ற இழப்புகளையும் காயங்களையும் தவிர்த்துக்கொண்டு போராடவேண்டும். முழுமையாகத் தவிர்க்கமுடியாதெனினும் முயன்றால் குறைக்கலாம். நான்கு பேருடைய சாவை இரண்டு பேருடையதாக்கலாம்.

ஒவ்வொரு தேசிய இனமும் தமது விடுதலையைப் பெற யுத்தம் செய்யவேண்டியிருக்கின்றது. எனவே நாங்கள் இதில் தெளிவாக இருக்கவேண்டும்".

தனது எதிர்பார்ப்புகளையெல்லாம் எம்மோடு பகிர்ந்து கொண்டார். இழப்புகளைத் தவிர்க்கவேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்.

நாங்கள் பிரியும் நாள் நெருங்கியது. எங்கெங்கிருந்து வந்தோமோ, அந்தந்தத் திசைகளைநோக்கி ஒவ்வொரு அணியாகப் புறப்பட்டோம். தலைவர் சொன்ன ஒவ்வொரு சொற்களும் எம்மோடு வந்தன.

* * *



படிப்பகம்

# 09

வரலாற்றுச் சிறப்புமிக்க தரையிறக்க நடவடிக்கைக்கான கடின பயிற்சி அது. ஏனைய படையணிகளுடன் எமது படையணியின் இரு கொம்பனிகள் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தன. மகளிர் படையணிகளின் பயிற்சி நடவடிக்கைக்குப் பொறுப்பாக சுகி நின்றார். எமது படையணிக்கான ஒன்றுகூடல் முடிந்த சில நாட்களிலேயே தரையிறக்கச் சமருக்கான பயிற்சி நடவடிக்கை தொடங்கப்பட்டு விட்டதால், ஜமுனாவின் கொம்பனியே முதலில் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பப் பட்டது. கல்லூரியைச் சுத்தப்படுத்தும் வேலையும் இவர் களுக்கே கிடைத்தது.

2000.03.01 அன்று அணிகளுக்கான பயிற்சி ஆரம்பிக் கப்பட்டது. பரந்த வெளியில் புலிக்கொடி கம்பீரமாக ஏறிப் பறக்க, தொடங்கப்பட்ட பயிற்சிகள் குறுகிய காலத்திலேயே வேகமெடுத்தன. மன்னார்ப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த தர்ஷாவின் கொம்பனியும் சில நாட்களின் பின்னர் கல்லூரிக்கு அனுப்பப்பட்டுப் பயிற்சியில் இணைக்கப்பட்டது. தடையணிகள், உள் நுழைந்து தாக்கும் அணிகள் என ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளுக்கேற்றவாறு பயிற்சியினைப் பெற வர்ணா, புரட்சிகா, செய்மதி, பிருதுவி, அங்கயற்கண்ணி

padippakam



ஆகியோரால் எமது அணிகளுக்குரிய பயிற்சிகள் வழங் கப்பட்டுக்கொண்டிருந்தன.

2000.03.25 அன்றைய மாலைப் பொழுதில், பயிற் சியை முடித்துக்கொண்ட எமது படையணியின் இரு கொம்பனிகளும் உழவு இயந்திரங்களில் ஏறி ஒரு நீரே ரிக்கு அண்மையில் இறங்கினோம். உப்புப் பூத்த பழுப்பு நிறக் கரையையும், இடையிடையே பச்சைக் குடை விரித்ததுபோல் அடர்ந்த தாவரங்களையும் கொண்ட அந்நீரேரிதான் 'சுண்டிக்குளம் நீரேரி' என அங்கு படகு வைத்துக்கொண்டு நின்ற ஓட்டி ஒருவர் சொன்னார். அந்த அழகிய நீரேரியைச் சிறிய படகுகள் மூலம் கடந்தோம். கத்தரிநீல நிறப் பூக்களைக்கொண்ட புற்கூட்டம் சிறுசிறு தீவுகளைப்போலப் பரந்திருந்தது. அந்த அழகினை ரசித்தவாறே உல்லாசப் பயணத்துக்குச் செல்கின்ற உணர்வுடன் கரையை நெருங்க, எறிகணை வீச்சிலே வீழ்ந்து கிடந்த மரங்களும், ஆழத் தோண்டப் பட்டிருந்த குழிகளும் திடீரென இறுக்கமான ஓர் உணர்வை மனதில் தோற்றுவித்தன.

கரையில் உழவு இயந்திரங்கள் எமக்காகக் காத்திருந் தன மீண்டும் உழவு இயந்திரப் பயணம் தொடர, கட் டைக்காடு எம்மை வரவேற்றது. ஈச்சம் பற்றைகளும், புல்வெளிகளும், பல்வகை மரங்களுமாக இணைந்த அப்பகுதி நாலைந்து மாதங்களின் முன்புதான் சிறீலங் காப் படைகளிடமிருந்து எம்மால் மீட்கப்பட்டிருந்தது என்பதால், படையினர் விட்டுச் சென்ற தடங்களெதுவும் மாற்றமுறாமல் அப்படியே இருந்தன. இரவில் அங்கு சென்ற நாம், மறுநாள் காலையில் ஒன்றுகூட்டப்பட் டோம்.

பரந்த வெளியொன்றில் அனைத்து அணிகளும் வரி சையாய் நின்ற காட்சி மனதில் ஓர் வேகத்தை ஏற்படுத் தியது. மரங்களுக்கு மேலால் உயர்ந்த சூரியனின்



படிப்பகம்

padippakam



கதிர்கள் சூரியக் குழந்தைகளைத் தொட்டுத் தழுவ, எமது இயக்கத்தின் மேன்மைமிகு குறிக்கோளை நிறை வேற்றுவதற்கான உறுதியுரையை முடித்துக்கொண் டோம். தரையிறக்கத் தாக்குதலை வழிநடத்தும் தளபதி கள் அனைவரும் சண்டைபற்றி உரை நிகழ்த்தினர். தலைவர் அவர்கள் எதிர்பார்க்கின்ற வெற்றியைப் பெற வேண்டியதன் தேவை எல்லோர் மனங்களையும் மீண் டும் நிரப்பியது.

பின்னர், தாக்குதல் நடவடிக்கைக்கான மேலதிக பொருட்கள், உலர் உணவுகள் என்பன எங்களுக்கு வழங் கப்பட்டன. தமது பணியை இலகுபடுத்துவதற்காகத் தேவையானவற்றை முற்கூட்டியே தயார்ப்படுத்தும் பணி யில் அணித்தலைவர்கள் ஈடுபட்டிருக்க, தரையிறக்கச் சமர் நடவடிக்கைக்குத் தாம் தெரிவுசெய்யப்பட்டது குறித்த மகிழ்ச்சி எல்லோர் முகங்களிலும் தாண்டவ மாடிக் கொண்டிருந்தது. இதனால் கூச்சலும் கும்மாள மும் அந்த இடத்தை நிறைக்க, மதிய உணவும் வந்து சேர்ந்தது.

அதற்கிடையில் கடலில் எப்படிப் பயணிக்கவேண்டும் என்பதை அறிவுறுத்துமுகமாக நடக்கவிருந்த படகேறும் பயிற்சிக்கு எல்லா அணித்தலைவர்களும் சென்றிருந்த னர். தாக்குதலின் இடையில் உண்பதற்காகக் கொடுக்கப் பட்ட கன்டோஸ் பொதிகள் சில, இப்போதே இல்லாமற் போகத்தொடங்கின. படகேறும் பயிற்சிக்குப் போனவர் களில் சிலர் கடலின் அடி ஆழத்தையும் பார்த்துவிட்டு வந்துசேர்ந்தனர். போராளிகளின் இனிய கூச்சல், கும் மாளங்களைப் பார்த்தவாறு ஆதவன் மேற்கில் மறைந்து கொண்டிருந்தான்.

தாக்குதல் அணிகள் புறப்படும் வேளை வந்தது. அனைத்து அணிகளையும் ஏற்றுவதற்கு உழவு இயந் திரங்கள் வந்து நின்றன. ஏற்கனவே தயாராயிருந்த



படிப்பகம்

நாம் எமது பொருட்கள் எல்லாம் சரியாக உள்ளதா என மீண்டும் ஒருமுறை சரிபார்த்துக்கொண்டோம். ஒவ்வொரு அணிகளாக ஏற்றிய உழவு இயந்திரங்கள் நீண்ட மணற்பாதையைப் புயல் வேகத்தில் தாண்டி வெற்றிலைக்கேணியில் இறக்கின. அதுவரை ஆளையாள் இறுக்கிப் பிடித்தபடி நின்ற அனைவரும் கடகடவெனக் கீழே குதித்தனர். அப்போது பனைகளின் இடைவெளியினூடே மஞ்சள் நிலா மேற்கு வானில் மெல்லிய கோலம் காட்டியது.

**"கடல் இரண்டொரு நாட்களாய் வழமையைவிட வித்தியாசமாய் இருக்கு. எண்டாலும் உங்களைத் தரையிறக்கிற பணி தடங்கலின்றி முடியும்"**

என எம்மோடு கதைக்கும்போது நம்பிக்கை தந்திருந்த கேணல் சூசையின் கட்டளைப்படி படகுகள் கரையில் நின்றன. கூடவே மனம் நிறைந்த நம்பிக்கைப் புன்னகையுடன் கடற்புலிப் போராளிகளும்.

குளிர்ந்த மண் காலில் பட, மனம் நெகிழ்ந்தது. கரையில் பாதுகாப்புக்கென இராணுவத்தால் அமைக்கப்பட்டிருந்த 'உடைந்த' காப்பரண்களையும், முட்கம்பித் தடைகளையும் தாண்டிக் கரையை அண்மித்தோம். அப்போது தெற்கிலிருந்து வடக்காக விமானம் ஒன்று செல்லும் ஒளிர்வு விட்டுவிட்டுத் தெரிந்தது. திடீரென நாம் நின்ற பகுதிக்கு அண்மையாக எறிகணைகள் வீழ்ந்து வெடிக்க, சலசலவெனத் தெறித்தன சிதறு துண்டுகள். இது படைத்தரப்பின் வழமையான வேலைகளில் ஒன்று எனப் புரிந்துகொண்ட நாம், உடைந்த காப்பரண்களுக்கு அண்மையில் நின்று கடலைப் பார்த்தோம். அது அலைகளின் வீச்சுக்கு அதிர்ந்துகொண்டிருந்தது. ஓயாத அலையெனத் திரண்ட ஒவ்வொருவரதும் மனநிலை சொல்லவொண்ணா உணர்வெழுச்சிக்கு உட்பட்டிருந்தது.

padippakam



உயர வீசும் அலைகளெல்லாம் கடலன்னையின் குழந்தைகள். ஓயாது வீசிக்கொண்டிருக்கும் நாங்கள் தமிழன்னையின் குழந்தைகள். ஆகவே அலையின் வலிமை எங்களுக்கும் வேண்டும். மனம் எங்கோ சிற கடிக்க முற்பட்டது. எல்லோரும் நாம் பயணம் செய்யப் போகும் கடற்தாயின் அலைக்கரங்களை ரசித்துக் கொண்டிருக்க, எம்மை ஏற்றும் படகுகள் தயாராகின.

நேரம் அப்போது ஏழரையைத் தாண்டியிருந்தது. இத்தாவில் பகுதிக்குள் நகர்த்தப்படவேண்டிய அணிகள் முதலில் படகேறின. கடற்புலி அணியினர் தமது பணி யினை மிகுந்த வேகத்துடன் செய்யத்தொடங்கினர். தர்ஷாவின் தலைமையிலான எமது படையணி அலை மீது தாவ, ஓங்கியடித்தது அலை.

ஆரம்பத்தில் படகேறிய அணிகளுக்குக் கடலின் மாறு தலான போக்கைத்தவிர வேறெந்தச் சிக்கலும் ஏற்பட வில்லை. எனினும் நேரம் செல்லச் செல்லப் படைத் தரப்புக்கு ஐயம் ஏற்பட்டிருக்கவேண்டும்போலும். அந்தப் பகுதியில் கடற்படைப் படகுகள் உலாவத்தொடங்கின. காத்திருந்த கடற்புலிகளின் சண்டைப் படகுகள் அவற்றை மறிப்பதற்காக அத்திசைநோக்கி விரைந்தன.

தாக்குதலணிகளை ஏற்றும் படகுகள் தமது வேகத்தை இன்னும் அதிகரித்தன. அவர்களின் செயலில் தெரிந்த வேகம் எம்மையும் விரைவாகச் செயற்படவைத்தது. படகேறிப் பழக்கம் அற்றவர்கள்கூடப் பாய்ந்து உள்ளே ஏறினர். தொடர்ந்து ஏற்றுவதும், கொண்டுசென்று தரை யிறக்குவதுமாக இருக்க, கடலில் தாக்குதல் தொடங்கி யது.

**"இந்தத் தரையிறக்கிற நடவடிக்கையில் தாக்கு தலணிக்குச் சின்னக் கீறல்கூட வரக்கூடாது"**



படிப்பகம்

என்ற தலைவரின் கண்டிப்பான பணிப்பை நிறை வேற்றுவதற்காகக் கடற்புலி அணியினர் தம் உயிரைக் கொடுக்கவும் தயராகநின்றனர். கடற்படைப் படகு எமது படகுகளுக்கு அருகில் வரமுன்பே, அவற்றுக்குப் போக் குக்காட்டி வேறு திசையில் வலிந்திழுத்துச் சென்று சண்டையிட்டனர் அவர்கள். நெருப்புத் தணல்களாகப் புறப்பட்ட ரவைகள் கடலின் இருளைக் கிழித்தன. இரண்டு கடற்படைகளின் மோதலை நேரடியாகக் கண்ட புளுகத்துடன், பயணத்தில் எந்தவித இடையூறும் வந்து விடக்கூடாது என்ற பயமும் இடையிடையே வந்து போனது. ஒவ்வொரு தடவை கடற்படைப் படகுகள் மோதுகின்றபோதும் தலைவர் எம்மோடு கதைத்த காட்சி கள் மனதில் நிறைந்து, வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணத்தை மனதுள் விரித்தது. இதுவரை எந்தவிதப் பாதிப்புமின்றித் தாக்குதல் அணிகள் தரையிறங்கிக் கொண்டிருந்தன.

தர்ஷாவின் அணியில் கீர்த்தி, தனுஷா ஆகியோரின் பிளாட்டுன்கள் கிட்டத்தட்ட இரவு 10.00 மணியளவில் குடாரப்புப் பகுதியில் தரையிறக்கப்பட்டன. ஒரு போதுமே கடற்பயணத்தில் பழக்கப்படாத போராளிகள் மயங்கிவிழாத குறையாக கடற்கரை மண்ணில் வந்து இறங்கினர். கடுங்குளிரில் நடுங்கி உப்புக் காற்றைச் சுவாசித்தபடி வந்து கரையேறும்போது கடற் தண்ணீருக் குள்ளே வீழ்ந்து முற்றுமுழுதாக நனைந்துவிட்டிருந்த னர்.

இதற்குள் கரையைநோக்கிக் கடற்படைப் படகுகள் தாக்கத்தொடங்கின. மயக்கத்தோடு இறங்கியவர்கள் கடற்கரை மண்ணிலே வீழ்ந்துபடுத்தனர். நல்ல காலமாக எல்லா ரவைகளுமே தலைக்கு மேலே விரிந்திருந்த தென்னைகளை உரசிப் பறந்தன.

padippakam



இப்போது வெவ்வேறு பக்கங்களில் கடற்சமர் வலுத்திருந்தது. சமரணிகள் பயணம் செய்த படகுகளில் கடற்தாக்குதலுக்குரிய ஆயுதங்கள் எதுவும் இல்லை. அதற்குப் பதிலாக எம்மைச்சூழ சண்டைப் படகுகள் நின்றன. நேரம் கிட்டத்தட்ட ஒரு மணியை அண்மிக்க, கேணல் விதுஷாவை ஏற்றிய படகு புறப்பட்டது. RPG போராளிகள் உட்பட கிட்டத்தட்ட 30 பேர் அதில் பயணம் செய்தனர். புறப்பட்டுச் சற்று நேரத்திலேயே

"இப்ப படகு எதுக்கு நேரே போகுது?"

"இப்ப வெற்றிலைக்கேணி தாண்டிற்றம்"

"கரையிலிருந்து எவ்வளவு உயரத்தில போய்க் கொண்டிருக்கிறம்"

"இரண்டு கடல்மைல் உயரத்தில போறம். இப்ப மருதங்கேணிக்கு நேரே போறம். அடுத்தது தாளையடி"

இப்படியே படகினுள் கலகலப்பான உரையாடல் நடந்துகொண்டிருக்க, நடுக்கடலில் கடும் எதிர்ப்பு உண்டானது. தூரத்தே இருந்து தாக்கியபடியே வந்த கடற்படைப் படகு எமது படகை அண்மித்தது. மேலால் சீறிப் பறந்தன ரவைகள்.

'சடார்' என்ற சத்தத்துடன் கையில் பட்ட காயத்தின் வேகத்தில் படகுக்கு வெளியே தலை தொங்கக் கிடந்தார் கப்டன் தண்ணிலா. அவரை வேகமாக இழுத்தெடுக்கவும்,

"ஒரு எஞ்சின் பழுதாய்ப்போட்டுது. இனி வேகமாய்ப் போக ஏலாது. கெதியாய் அறிவியுங்கோ"

படகோட்டிய போராளி சொன்னார். அந்த ரவை இயந்திரத்தின் பணியையும் தடைசெய்திருந்தது.



படிப்பகம்

padippakam



'இனி முடிஞ்சுதா கதை. நேவிக்காரன் துரத்தித் துரத்தி அடிக்கப்போறான்'

என நினைத்துக்கொண்டு எமது ஆயுதங்களைத் தயார்ப்படுத்தவும், கடற்படைப் படகைநோக்கித் தாக்கிய படி கடற்புலிப் படகு ஒன்று முன்னேறியது. பிறகு இரண்டையுமே காணவில்லைப் போலிருந்தது. சிறிது நேரத்தில் எம்மிலிருந்து அதிக தூரத்தில் இரு படகு களுக்குமிடையே சண்டை நடந்தது. அதேநேரம் இன்னு மொரு தாக்குதலணிப் படகு வந்து எமது படகைக் கட்டி இழுத்துக்கொண்டு விரைந்தது. தொடர்ந்து கடற் படையினர் வருவதும், சண்டைப் படகுகள் மறிப்பது மாக ஒரு விளையாட்டுப்போன்று கடற் பயணம் நடந்து கொண்டிருந்தது.

திடீரெனக் கடற்படைப் படகு ஒன்று அருகில் வரு வது போன்று இருந்தது. பின்னர் ஒன்றையும் காண வில்லை. இருள்நேரத்தில் நுரைத்து எழும் அலைகளை அண்டிய பகுதி கடும் இருட்டாகத் தெரிய, அது எமது கண்களுக்குப் படகுபோலத் தெரிந்தது போலும். மனம் நிம்மதி அடைந்தது. இப்போது குடாரப்பை அண்மித்துக் கொண்டிருந்தோம். தூரத்தே பெரும் கடற் சண்டை நடந்துகொண்டிருக்க, எமது படகு கரையைநோக்கித் திரும்பியது. இடையில் காற்றுப் படகுகள் நிற்க, அதற் குள் தாவினோம். சில நிமிடங்களிலேயே கரையில் இறங்கியதும் எங்காவது கீழே இருக்கவேண்டும்போல் இருந்தது. ஆகக் கூடுதலாக மயக்கமுற்றவர்கள் மண் வெட்டிகளை வைத்துவிட்டு அதன்மேல் சாய்ந்தார்கள். கும் கும் என அருகில் உள்ள தென்னந்தோப்பினுள் வீழ்ந்த எறிகணைகள் எம்மை அங்கு இருக்கவிட வில்லை.

கரையில் நின்ற கேணல் பால்ராஜ் ஏற்கனவே நகர்ந்த அணியுடன் தொலைத்தொடர்புக் கருவியில் கதைத்தபடி



படிப்பகம்

padippakam



நின்றார். தரையிறங்கிய கேணல் விதுஷாவுடன் அப் போதைய நிலைமைபற்றிக் கதைத்துவிட்டு, அவர் இத் தாவில்நோக்கி நகரத்தொடங்க, எமது அணிகள் நாகர் கோயில் பகுதியைநோக்கியதான வெளிப்பாதுகாப்புக்கு நகர்த்தப்பட்டன. அவர்களுடன் ஒரு ஆண் போராளி பூமி நிலைகாண் தொகுதியுடன் நிலையமைக்கப்படும் இடங்களைப் பதிவுசெய்தபடியே நகர்ந்தார்.

**“தரையிறக்க நடவடிக்கையின்போது எங்களு டைய .50 கலிபர்கள் இரண்டையும் மாலதி படைய ணியுடன் விடும்படி தலைவர் அவர்கள் சொல்லிவிட் டார். பெருங்கடற் பரப்பருகே மாலதி படையணி நிற்கப்போவதால் அவர்களுக்கு அவை தேவை என்று அவர் குறிப்பிட்டார். எனவே தரையிறங்க முன்பே .50 கலிபர்களை அவர்களோடு விட்டுவிட்டோம்”**

என்று அந்த நடவடிக்கையின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றார் கேணல் துர்க்கா.

கேணல் விதுஷா வந்த படகு பழுதடைந்ததால், அதனைக் கட்டி இழுத்துவந்த படகு காயமடைந்த போராளியுடன் திரும்பிப் போய்க்கொண்டிருந்தது. தாக்குதலணிகள் இன்னும் முழுமையாக வந்துசேராத நிலையில் கடற்சமர் பலமடையத் தொடங்கியிருந்தது.

தாம் கடும் தாக்குதலுக்குமத்தியில் வந்துகொண்டி ருப்பதாக கேணல் விதுஷாவுக்கு அறிவித்தார் சாந்த குமாரி. அறிவித்த அந்தக் கணத்திலேயே நடுக்கடலில் படகு ஒன்று தீப்பற்றத்தொடங்கியது.

“சேரா-01 மெயின், சேரா-01 மெயின்”

எந்தத் தொடர்புக் கருவிக்குமே தொடர்பு கிடைக்க வில்லை. எல்லோர் மனதிலும் இடி விழுந்தது. சாந்த குமாரியுடன் ஒரு பிளாட்டூன். ஏற்க முடியுமா?



படிப்பகம்

padippakam



கடல் நடுவில் கண்ணெதிரே எம் தோழிகளைச் சாவிழுங்கிய துயரத்தில் மூழ்கிப்போனோம். எதுவும் செய்யமுடியாத நிலையில் சோகம் இதயத்தைப் பிழிந் தது. கணப்பொழுதுக்குள் எல்லாமே முடிந்துவிட்டதான உணர்வு. அவர்களது பணியை யார் செய்வார்? ஒவ் வொருவருக்கும் ஆளை மிஞ்சிய பணிகளல்லவா காத் திருந்தன.

எல்லாவற்றுக்கும் விடையாக சாந்தகுமாரியின் குர லைச் சுமந்துவந்தது காற்று.

“மெயின் சேரா-01, எங்களுக்குப் பிரச்சனை இல்லை. முதல் அடிவேண்டின போட்தான் இப்ப எரியுது”

விடயம் சங்கேத மொழியில் வந்துசேர்ந்தது.

“அது விதுஷாக்கா வந்த போட்தான்”

எல்லோர் வாய்களும் உரத்துச் சொல்லிக்கொள்ள, எல்லோரின் மனதுக்குள்ளும் கடவுள்கள் வந்துபோயினர்.

சற்று நேரத்தில் சாந்தகுமாரியின் அணி தரையிறங்க, குதூகலம் அனைவரையும் தொற்றிக்கொண்டது. வேக மாக அவரவர் இடங்களுக்கு அணிகளை அனுப்பிய விதுஷா, நாகர்கோயில் பக்க நிலைகளிலிருந்து 100மீற்ற ரில் தனது கட்டளைப் பீடத்தை அமைத்தார்.

இதுவரை நேரமும் தரையிறங்கும் அணிகளுக்கான பாதுகாப்பில் ஈடுபட்ட தனுஷாவின் அணி கொம்பனி மேலாளர் தர்ஷாவுடன் தொண்டைமானாறு நீரேரியை நோக்கி மணல் வீதியூடாக நகரத்தொடங்கியது. நாகர் கோயில் பகுதியிலிருந்து பருத்தித்துறை செல்லும் பழு தடைந்த தார் வீதியைக் கடந்து, ஆள் உயரப் புற்களை விலக்கியபடி நீருக்குள் கால் வைத்தனர்.



படிப்பகம்

அடுத்து தரையிறங்கிய கீர்த்தியின் பிளாட்டுன், தரையிறங்கிக்கொண்டிருக்கும் ஏனைய அணிகளின் பாதுகாப்புக்காகக் கொம்பனியின் கட்டளை அதிகாரி லக்சனாவுடன் செம்பியன்பற்றுப் பகுதியில் தயாராக நிற்க, மற்றைய அணிகள் தத்தமது திசைகளைநோக்கி நகரத்தொடங்கின.

அது இருள் கலையாத நேரம். மக்களின் குடியிருப்புக்கள் எங்கே என்று தெரியாதநிலையில் எமக்கு வாய்ப்பான இடங்களிலே வேகவேகமாக நிலை அமைக்கும் பணிகள் நடந்துகொண்டிருந்தன. பொழுது புலர்ந்தால் சண்டை தொடங்கும் என்பது நிச்சயம்: அதனால் அமைதியாகப் பணிகள் அரங்கேறின.

மெல்லிய குளிர் காற்று மேனியை வருட, மண்வெட்டி மண்ணில் ஆழமாக இறங்கியது. சிறிய வாளியும், கையில் நாலைந்து குவளைகளுமாக சிவப்பு உடையணிந்த ஒரு சிறிய உருவம் திடீரென அங்கே தோன்றியது. எல்லோர் விழிகளும் அங்கேயே நிலைத்தன. பற்றைகளை விலக்கியபடி எம்மைநோக்கி வந்துகொண்டிருந்தது ஓர் அன்னை. எனினும் எங்கள் இராணுவ உணர்வு எச்சரிக்கை செய்தது. அப்பாலே உற்றுப் பார்த்தோம். எதையுமே காணவில்லை. புன்னகையுடன் வந்த அன்னை தேநீரைக் குவளைகளில் ஊற்றி எம்மிடம் நீட்டினார். வீட்டில் விடியற்காலை குளிருக்குள் படிப்பதற்காக எம்மை எழுப்பிவிட்டபின்னர், சுடச் சுடத் தேநீரைத் தயாரித்துத் தரும் எங்கள் அம்மாவின் பரிவும் கனிவும் அவர் பார்வையில் இருந்தது.

வீட்டிலே 'நன்றாகப் படிக்கவேண்டும்' என்பதற்காக அம்மா தேநீரைத் தந்தார். இந்த அம்மா, நன்றாகச் சண்டை பிடிக்கவேண்டும் என்பதற்காக இந்தத் தேநீரைத் தந்திருப்பாரா? எதுவாக இருந்தாலும் ஐதீகக் கதைகளில் வருகின்ற அமுதம்கூட அந்த அன்னையின் தேநீருக்கு

padippakam



ஈடாகாது என்பதுமட்டும் உண்மை. தேநீரை அருந்து கின்றபோது எல்லோர் விழிகளிலும் நீர் திரையிட்டது.

சாந்தகுமாரியின் கொம்பனி மாமுனைக் கடற்கரை தொடக்கம் நீரேரிக்கரைவரை நிலையெடுத்திருந்தது. நேரம் ஏழரையைத் தாண்டியிருக்கும். மக்கள் நடமாடத் தொடங்கிவிட்டனர். அவர்கள் தத்தமது வேலைகளுக் காகப் புறப்பட்டவேளைதான் போராளிகள் அங்கு நிற்ப தைப் புரிந்துகொண்டனர். வீதியால் விற்பனைக்குப் பாண் கொண்டுவந்த தந்தையொருவர் திகைத்துப் போனார்.

“எப்...ப பிள்ளையள் வந்தனீங்கள்?”

ஆச்சரியத்தோடும், அதிர்ச்சியோடும் தடுமாறிக் கொண்டு நின்ற ஐயாவிடம்,

“விடியத்தான் ஐயா வந்தனாங்கள். நீங்கள் அங்கால போக ஏலாது. சண்டை தொடங்கப்போகுது. திரும்பிப் பாதுகாப்பான இடங்களுக்குப் போங்கோ”

என்று சொல்ல,

‘நீங்கள் வந்ததே காணும் பிள்ளைகள்’ என்ற எண்ணப் பார்வையுடன் பெட்டியோடு பாணை இறக்கி எம்மிடம் தந்துவிட்டுப் போய்விட்டார்.

அள்ளி அள்ளி வெளியில் எறிந்தாலும், மீளவும் பள்ளத்தைநோக்கி வழிந்து வீழுகின்ற மணலுடன் போட்டி போட்டு அமைக்கப்பட்ட பதுங்குகுழிகளில் இருந்தவாறு பகை இருக்கும் திசைநோக்கிச் சுடுகலன் களுக்கு ஏற்றவாறு நிலைகளைச் சரிபார்த்துக்கொண்டு இருந்தோம். அவ்விடத்திலிருந்து 200மீ. தூரமளவில் இராணுவத்தினரது நடமாட்டம் தெரிந்தது. அது



படிப்பகம்

padippakam



மாமுனை. அங்கே ஒரு தளம் அமைந்துள்ளதா, அல்லது அது காவல் உலா அணியா என்பதை உடனடியாக இனம் காணமுடியவில்லை. படையினர் எம்மைக் கண்டு விட்டார்களோ, என்னவோ, திடீரெனத் துப்பாக்கிச் சூடு கள் எம்மைநோக்கி வந்தன. அவ்விடத்துக்கு நேரே பிரியங்காவின் .50 கலிபர் தாக்கிவிட்டு நின்றது. அதே நேரம் அங்கிருந்த இராணுவம் ஒரு தாக்குதல் நடவடிக் கைக்குத் தயாராகுவதுபோல் தெரியவே நிலைமை கட்ட ளைப் பீடத்துக்கு அறிவிக்கப்பட்டது. அது ஒரு சிறிய தளம் எனவும், அதனைத் தாக்கிக் கைப்பற்றும் படியும் கட்டளை வந்ததை அடுத்து, சாந்தகுமாரியின் தலைமை யின்கீழ் நின்ற மேஜர் செல்வியின் அணி கனரக ஆயுதங்களை இணைத்துத் தாக்குதல் நடத்தியபடி முன் னேறி உள்நுழைந்தது. பனங்கூடல்களும், ஈச்சம் பற்றை களுமாய் இருந்த அந்தப் பகுதி, படையினருக்கு வாய்ப் பாக இருந்தது. எனினும் வேகமாக அணிகள் உள்ளே நுழைய எதிர்பாராதவகையில் திணறிப்போய் ஆயு தங்களையும் போட்டுவிட்டுச் சிலர் ஓட்டம் பிடிக்க, பலர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். குறிப்பிட்ட நேரத்திலேயே அத்தளம் வெற்றிகொள்ளப்பட்டதன் மூலம் பல கனரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

செம்பியன்பற்றுப் பகுதியால் உள்ளே புகுந்த இராணு வத்துக்கும் லக்சனாவின் அணியினருக்குமிடையில் தாக் குதல் தொடர்ந்தது. இச்சிறிய பகுதிக்குள் நடந்த கடுமை யான தாக்குதலில் பல இராணுவம் கொல்லப்பட்டது டன், முதன் முதலில் எம்மவர் நால்வர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். பின் லக்சனாவுடன் நின்ற கீர்த்தி யின் பிளாட்டூன் நீரேரியூடாக நகர்ந்து தனுஷாவின் அணியுடன் இணைந்துகொண்டது. சாந்தகுமாரியின் அணி மீள ஒழுங்கமைக்கப்பட்டு தாளையடிப் பகுதியை நோக்கிச் சிறிது தூரம் நகர்த்தப்பட்டதுடன் அடுத்த கட்டத் தாக்குதலுக்கான ஆயத்தங்களைச் செய்தது.



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



யினுள் பதுங்கிக்கிடந்த படைவீரர்களுக்குத் துணிவு. வருவது பெண் பிள்ளையல்லவா? ஆயுதத்தைப் பறிக்க வேண்டியதுதான். பதுங்கிப் பதுங்கி வந்து அவரின் கையை எட்டிப் பிடித்தார் ஒரு படைவீரர். திடுக்கிட்டுத் திரும்பியவர் கண்டது படையினரை. தலைவர் எங்களை அனுப்பியது சாக அல்ல, சாதிக்க. கையிலிருந்த ஆயுதம் படைவீரரின் முகத்தைப் பதம் பார்த்தது. நிலை தடுமாறி வீழ்ந்தவர் மீண்டும் எழுந்திருக்க முதலே 40மி.மீ. எறிகணை சீறிச் சென்றது. காயமடைந்து வீழ்ந்தவர் மீண்டும் எழவேயில்லை. இதைக்கண்ட பயத்தில் மற்றவர் பற்றைக்குள்ளே பதுங்கிக்கொண்டார். அவரையும் சுட்டுவிட்டுத் தொடர்ந்து நடந்தார்.

நாகர்கோயில், தாளையடிப் பகுதிகளைநோக்கியதாக அமைக்கப்பட்ட இரு தொகுதி காப்பு நிலைகளுக்கும் இடையில் அமைந்திருந்த கட்டளை மையத்திலிருந்து கேணல் விதுஷா தேவையான கட்டளைகளை அவ்வப்போது வழங்கிக்கொண்டிருந்தார். இதுவரை ஒரு சில தாக்குதல்களுக்கு முகம் கொடுத்திருந்தது மாலதி படையணி.

கடலிலே மேலும் கீழும் விரைந்துகொண்டிருந்த சிறீலங்காக் கடற்படைப் படகுகள் கரையைநோக்கித் தாக்கியவாறு இருந்தன. இரு பக்கமிருந்தும் தாராளமாக எறிகணைகள் வந்து வீழ்ந்து வெடிக்க, அந்தப் பகுதியே பெரும் போர்க்களமாக மாறியிருந்தது. போதாக் குறைக்கு வானத்தில் கிபிர் விமானங்கள் வந்து தம் பணியைச் செய்யத் தவறவில்லை. இப்படியாக அன்றைய நாள் மேஜர் கோகிலா, கப்டன் சுடரினி, லெப். அன்புவேங்கை, லெப். அன்பரசி, 2 ஆம் லெப். சசி, லெப். உமா, கப்டன் அன்புவிழி/சுபா ஆகியோர் வீரச் சாவடைந்திருந்தனர்.



படிப்பகம்

padippakam



மறுநாள் பொழுது விடிந்தது. இதுவரை நேரமும் அனைத்து வழங்கல்களும் கடலாலேதான் நடந்து கொண்டிருந்தன. எம்முடனான சந்திப்பின்போது தலைவர்,

**“உங்களைத் தரையிறக்கமட்டும்தான் போட் வரும். நீங்கள் திரும்பி வரும்போது பாதை திறந்து ரோட்டால்தான் வரவேண்டும்”**

என்று பகிடியாகச் சொல்லியிருந்தார். அத்துடன் ஆனையிறவை மீட்பதற்காக அதனைச் சூழவுள்ள தரைப்பரப்பை எமது கைகளில் வைத்திருக்கவேண்டிய தேவை இருந்தது. எனவே நீண்ட தரைப்பரப்பை மீட் பதன்மூலம் கடற்தாக்குதலைக் கட்டுப்படுத்துமுகமாக தாளையடிப் பகுதியைநோக்கித் தாக்குதல் தொடுக்கும் திட்டம் தீட்டப்பட்டது. தொடர்ந்து வேவுத் தகவல்களைத் திரட்டும் பணியும் முடுக்கிவிடப்பட்டது.

இந்த நிலையில் அன்றைய உணவைப் பெரும் சிரமத் தின்மத்தியில் கேணல் சூசை அவர்கள் அனுப்பிவைத் தார். தரைத் தாக்குதலணிகளைப் படகில் ஏற்றியது தொடக்கம் வெடிபொருட்களை நகர்த்துதல், கனரக ஆயுதங்களைக் கொண்டுவருதல், காயமடைந்த போரா ளிகளை வன்னித் தளத்துக்கு அனுப்புதல், உணவு கொண்டுவருதல் என ஓயாத அலைச் சமருக்காக விழி மூட நேரமின்றி ஓயாது சுழன்றடித்தனர் கடற்புலி அணி யினர். எனினும் வித்துடல்களைக் கொண்டுசென்ற போராளிகளே கடலுக்குள் வித்துடலாகியநிலையில் கடல் நெருப்பாக இருந்தது. உணவுடன் வந்த படகுகள் இரத்தத்தில் தோய்ந்து திரும்பிப் போகவேண்டிய தாயிற்று.

இந்த உணவு நெருக்கடி, சண்டையில் பின்னடைவை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதற்காக மக்களின் உணவுப்



படிப்பகம்

padippakam



பொருட்களைப் பயன்படுத்தும் திட்டம் உள்ளே நின்ற அணித் தலைவர்களால் முன்வைக்கப்பட்டது. அதற் கான அனுமதியும் வந்தது. முன்னணியில் நின்ற அணி கள் அப்படியே நிற்க, வெவ்வேறு பணிகளுக்காகப் பின்னணியில் நின்ற அணிகள் ஒன்றுசேர்ந்து சமையற் பணியைத் தொடங்கின. கள நடவடிக்கைக்கான நிர்வா கப் பணிக்குப் பொறுப்பாக நின்ற் காவியா இப்பணி யைப் பொறுப்பெடுத்தார். இயல்பிலேயே இயந்திர கதியை உடைய அவர் இன்னும் வேகமானார். ஒருவாறு ஒரு நேர உணவைச் சமைத்துமுடித்து உடனடியாகவே முன்னரங்குக்கு அனுப்பிவிட்டு, அடுத்த கட்டச் சமை யலுக்குத் தயாரானார். நதிமூலம் எதிர்நடவடிக்கையில் வலது கை முறிந்து, வலது தாடை உடைந்து படுகாய முற்ற காவியா, முழுமையாக ஓய்வு எடுக்காமல் தரை யிறக்க நடவடிக்கை அணிகளோடு இணைந்து வந்திருந் தார்.

கூட நின்றவர்களிடம் வேலைகளைப் பகிர்ந்து அளித்துவிட்டு, மேலதிக உணவுப் பொருட்களைப் பெறு வதற்காக அந்தப் பகுதி முழுவதும் நடந்து திரிந்தார் காவியா. அவரது சொந்த ஊரும் அதுவாகவே இருந்த தால், உரிமையுடன் மக்களை அணுகி வேலையை இலகுவாக்கினார். தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேற விரும்பாத மக்கள் அங்கேயே தங்கிக் கொண்டதுடன் எமக்கான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருந்தனர்.

அடுத்தடுத்த கட்ட உணவுத் தயாரிப்பில் அவர்களே நேரடியாகப் பங்குகொண்டு சமையற் பணிகளை இலகுபடுத்தினர். இப்போது வீட்டுச் சமையலின் சுவை நாவில் தெரிய, இன்னும் வேகம் பிறந்தது.

'இத்தாவிலுக்குள் நிற்பவர்கள்தான் பாவம். ஒழுங் காகச் சாப்பாடு கிடைத்ததோ தெரியாது'



படிப்பகம்

என்ற கவலையும் தொற்றிக்கொண்டது. சமைக்கப் பட்ட உணவை அவர்களுக்கு அனுப்புவதற்கு முயற்சி செய்தார் விதுஷா. தாளையடித் தாக்குதலுக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டதால், பின்னர் அது இயலாமல் போனது. அந்தப் பகுதி முழுவதுமே விமானத் தாக்குதல் நடந்துகொண்டிருந்தது. மாறி மாறி வந்து குத்தி நிமிர்ந் தன கிபிர்கள்.

மறுநாள், சமையல் நடந்துகொண்டிருந்த இடத்தில் நடந்த விமானத் தாக்குதலில், நல்லகாலமாக மக்கள் உயிர் தப்பிக்கொண்டனர். உடனடியாகவே அந்த இடத்தை மாற்றி வேறு இடத்தில்வைத்து வேலையை அவர்கள் தொடர்ந்தனர். அங்கே எமக்கான எந்தப் பணியைச் செய்யவும் மக்கள் பின்னிற்கவில்லை என் பதை நினைக்கும்போது இப்போதும் பெருமையாக இருக்கிறது.

இன்னமும் தரைவழிப் பாதை திறக்கப்படாத அதே நேரம், காயப்பட்ட போராளிகளை எடுத்துச் செல்வதே சிரமமாக இருந்தது.

“யாமிருக்கப் பயமேன்”

என்று ஆபத்தான கடற் பயணங்களைத் துணிந்து மேற்கொள்ளும் கடற்புலிகள் தமது உயிரைப் பணயம் வைத்தே பணிகளை நிறைவேற்றிக்கொண்டிருந்தனர். இந்த நிலையில் இத்தாவில் களத்திலும் வடமராட்சி கிழக்குக் களத்திலும் வீரச்சாவடைந்த போராளிகளின் வித்துடல்களை வெளியே அனுப்பமுடியவில்லை. எனவே இந்த மாபெரும் தரையிறக்க நடவடிக்கையின் வெற்றிக்கு முதல் நாளில் வித்தாகிப்போன மறவர் களைத் தரையிறங்கிய அதே இடத்தில் விதைத்து, பெயர்ப் பலகைகளை நட்டுவைத்தோம். இந்த நிகழ்வில் போராளிகள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

padippakam



தொடர்ந்து 2000.03.30 அன்று காலை தாளையடி நோக்கிய தாக்குதலுக்கான ஆரம்ப இடத்தில் நிலை கொண்டோம். கனரக ஆயுதங்கள் தயாராகின. சாந்த குமாரியின் தலைமையிலான ஆனந்தியின் பிளாட்டூன் நேரடியாக கேணல் விதுஷாவின் வழிநடத்தலில் தாக்கு தலைத் தொடுக்க, கேணல் தீபனின் வழிநடத்தலில் கடற்புலிகளின் தரைத் தாக்குதல் அணி, கட்டைக்காட் டுப்பகுதியிலிருந்து தாக்கியபடி முன்னேறிவந்தது. இரு பக்கங்களாலும் தாளையடிப் படைத்தளம் நெருக்கப் பட, மக்களைக் கவசமாக்கித் தன்னைப் பாதுகாக்க நினைத்தது இராணுவம். எமது கடும்தாக்குதல் அந்த எண்ணத்தை உடைத்து, ஓட ஓட விரட்டியது. மக்களை எங்கும் போகவிடாது தடுத்து, அவர்களின் சாவின் மூலம் உயிர்தப்ப நினைத்த இராணுவம் இப்போது எல்லாவற்றையும் இழந்து ஓடத்தொடங்கியது.

மருதங்கேணிப் பாலத்தால் புறப்பட்ட படையினரின் ஊர்திகளைக் குறிவைத்து எம்மவர்களின் எறிகணைகள் பறக்க, ஓடத்தொடங்கிய படையினரை வீழ்த்தத்தொடங் கின கனரக ஆயுதங்கள். அன்று மதியம் கடந்த பொழு திலேயே மருதங்கேணிப் படைத்தளம் தகர்க்கப்பட்டு வெற்றிலைக்கேணியூடாக தாளையடிக்கான பாதை திறக்கப்பட்டதுடன் தாக்குதலில் பங்குபற்றிய அணிகள் அடுத்த கட்ட நடவடிக்கைக்காகப் பின்னே எடுக்கப்பட் டன.

மறுநாள் நாகர்கோயில் பகுதியில் நின்ற கலைக் குயிலின் பிளாட்டூன் பின்னே எடுக்கப்பட்டுப் பதிலாக ஆனந்தியின் பிளாட்டூன் விடப்பட்டது. அன்றைய மாலை நேரம் அணிகள் அனைத்தும் இத்தாவில்நோக்கி நகரத்தொடங்கின.



படிப்பகம்

padippakam

2ம்லெப். மாலதி படையணி

அது ஓர் அழகிய மாலை நேரம். அடர்ந்து, ஆங்காங்கே ஐதாகி, பின் ஒற்றையாய் தண்ணீருக்கு வெளியே தலையை நீட்டிக்கொண்டிருக்கின்ற புற்களும், பச்சைக் குடைகள் விரிந்திருப்பதுபோன்ற கண்டல் பற்றைகளுமாய் தொண்டைமானாறு நீரேரி விவரிக்கவியலாத எழிலுடன் விளங்கியது. மாலைச் சூரியனின் செவ்வொளி, காற்றில் மெல்ல அசைகின்ற நீரில் பட்டு ஒளிர்ந்தது மனதில் கற்பனைக்கு முளையிட்டது. வரிசையாய் உயர்த்திப் பிடித்த துப்பாக்கிகளுடன் நடந்து கரையை அண்மித்தோம்.

ஏற்கனவே இத்தாவில் பகுதியினுள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி பெரும் தாக்குதல் ஒன்றுக்கு முகம் கொடுத்தபோது தர்சாவின் அணியில் சிலரும் அவர்களுக்கு உதவியாக அக்களத்தில் பங்குபற்றியிருந்தனர். அதில் சிலர் வீரச்சாவைத் தழுவியிருந்தனர். அத்துடன் இவர்களோடு உள்ளே வந்த சோதியா படையணி உட்பட அனைவரும் யாழ் நெடுஞ்சாலையையும் கடந்து, கிளாலிநோக்கியதாக ஒரு நாக்கு வடிவில் முன்னரங்க நிலைகளை அமைத்துவிட்டுக் காத்திருந்தோம்.

தொண்டைமானாறு நீரேரியைக் கடந்த விதுஷாவின் கட்டளை மையம் இத்தாவில் பகுதிக்குள் நகர்த்தப்பட, ஜமுனாவின் அணியும் உள்ளே நுழைந்தது. ஏற்கனவே ஆனையிறவைநோக்கியதாக நீரேரிக்கரையில் இருந்து நெடுஞ்சாலைவரை அமைக்கப்பட்ட முன்னரங்கில் தர்ஷாவின் அணி நிலைகொண்டிருந்தது. அவர்களுடன் சாம்பவியின் பிளாட்டூன் இணைக்கப்பட, விடுதலையின் பிளாட்டூன் சாவகச்சேரியைப் பார்த்தவாறு நீரேரிக்கருகே நிலைகொள்ள, அங்கு தாக்குதலுக்குத் தயாரானோம். எறிகணை மழையில் குளித்த அந்தப் பகுதி சாம்பல் மேடாகி, சுடுகாடுபோல் காட்சி தந்தது.



படிப்பகம்

padippakam



"நாங்கள் இத்தாவில் பகுதியினுள் வந்த பின்பும், தொண்டைமானாற்று நீரேரிக்கரையோரம் இரு முனைகளிலும் நின்ற மாலதி படையணியோடு சாவ கச்சேரிநோக்கிய திசையைப் பார்த்தவாறு இரண் டும், ஆனையிறவைநோக்கிய திசையைப் பார்த்த வாறு இரண்டுமாக அவர்களுடையதும் எங்களுடைய துமாக நான்கு .50 கலிபர்கள் அவர்களுடன் நின் றன. குறிப்பிட்ட சில நாட்களின்பின் அவர்கள் அவற்றை எங்களிடம் அனுப்பினார்கள்"

என்றார் கேணல் துர்க்கா.

இப்போது இத்தாவில் பகுதியில் நீரேரிக்கரையி லிருந்து நெடுஞ்சாலையைத் தொடுவதாக நிலை கொண்ட தனுசா, கீர்த்தி, சாம்பவி ஆகியோரின் பிளாட் டூன்கள் தத்தமது நிலைகளைப் பலப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்தன. தனுசாவின்அணி நின்ற பகுதி நீரேரிக் கரை என்பதால் அவதானிக்க முடியாத அளவுக்கு அடர்பற்றைகள் செறிந்திருந்தன. எனினும் நீண்ட தென் னந்தோப்புப் பகுதியில் ஏனைய இரு அணிகளும் நிலை கொண்டிருந்ததால் இங்கு எதிர்த்தரப்பை அவதானிப்புக்கு உட்படுத்துவது இலகுவாக இருந்தது. இருப்பினும் இதே வாய்ப்பு இராணுவத்துக்கும் இருந்தது.

கண்டற் பகுதியில் பெரும்பாலும் சத்தங்களை வைத்தே படையினரை அவதானிக்கவேண்டி இருந்தது அப்பகுதியின் கடைசி நிலையான 54 இல் செக்சன் கட்டளை அதிகாரியான கப்டன் யசோதினி நின்றார். அந்நிலைக்கு அருகே பற்றைகள் வளர்ந்திருந்த அகன்ற பாதை ஒன்று செல்கிறது. அதனூடாக எந்நேரமும் படைத்தரப்பு வரக்கூடிய வாய்ப்புகள் இருந்ததால் எம் மவர்களின் துப்பாக்கிகள் விழிப்பாக இருந்தன.

"முன்னால ஏதோ சத்தம் கேட்குது"



படிப்பகம்

கூட இருந்தவர் சொல்ல, யசோதினியின் காதுகள் கூர்மையடைந்தன.

“வருகினம்போலதான் கிடக்கு. எதுக்கும் ரெடியா இருங்கோ” என்றவர்,

“ராங்கோ-01 யசோ, ராங்கோ-01 யசோ. முன்னுக்கு ஏதோ சிக்கல்போல கிடக்கு. எங்களிலிருந்து 100மீற்ற ரில் ஒருக்கா ஒழுங்குபடுத்தி வையுங்கோ” என்றார்.

“சரி ஒழுங்குபடுத்துறம். வந்தால் நல்லாக் குடுத்துத் தான் அனுப்பவேணும்”

கேட்ட இடத்துக்கு எறிகணை செலுத்தியை ஒழுங்கு படுத்தியவாறு சொன்னார் தர்ஷா.

நடைபேசி ஓய்ந்து சில நிமிடங்களில் திடீரென அருகில் வீழ்ந்து வெடித்தது ஒரு குண்டு. உடனேயே துப்பாக்கிகள் கனன்றன. படையினரின் துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தை வைத்து அவ்விடத்துக்குக் குண்டுகளை எறிந்தார்கள். ஏற்கனவே சொல்லிவைத்த படி வீழ்ந்து வெடித்தன எறிகணைகள். எல்லா நிலை களும் தயார்நிலைக்குவர அடுத்த நிலையிலிருந்தும் சுடத்தொடங்கினார்கள். இதனால் கடுமையான எறி கணைத் தாக்குதலைச் செய்தபடியே படையினர் பின் வாங்கினர்.

எறிகணை வீச்சுக்கு வழுத்திருத்தம் சொல்லிக்கொண் டிருந்த மேஜர் தமயந்தியின் பணியைப் படையினரின் எறிகணையொன்று நிறுத்திவிட்டிருந்தது. தலைவரிட மிருந்து வாங்கிய தொலைநோக்கி இரத்தத்தில் தோய்ந்த படி அப்போதும் அவரின் கையிலேயே இருந்தது. இத் தாக்குதலில் பிளாட்டூன் கட்டளை அதிகாரியாக இருந்த தனுஷா விழுப்புண்ணடைய, யசோதினி பிளாட்டூன்

padippakam



கட்டளையதிகாரியாக விடப்பட்டார். அன்றையபொழுது சாய, கேணல் விதுஷாவின் கட்டளையின்பேரில் சாந்தி, அமுதா, லெப். அபிநயா ஆகியோரைக் கொண்ட ஓர் அணி வேவு நடவடிக்கைக்குப் புறப்பட்டது.

50 ஆவது நிலைக்கு அருகால் செல்லுகின்ற ஊரிப் பாதையால் உள்ளே நகர்ந்த இவர்கள் அவதானித்தவாறு மெல்ல மெல்ல முன்னே சென்றனர். மாலை மங்கும் நேரமாகையால் எல்லாமே ஓரளவு இருளாகத்தான் தெரிந்தது. படையினரின் சத்தம்கூடக் கேட்கவில்லை. 150 மீற்றருக்கு அப்பாலேயே அவர்கள் இருப்பதாக ஏற்கனவே சொல்லப்பட்டிருந்ததால் இன்னும் முன்னே போனார்கள். நேரேயே போய்க்கொண்டிருந்ததால்,

‘எப்படியும் ஒரு 90மீ. வந்திருப்போம். இன்னும் ஒரு 10மீ. போவோம்’

என எண்ணியபடி முன்னே நகரப்போன சாந்தியை அபிநயா இழுத்துப்பிடித்து நிறுத்தினார். என்ன என்பது போலத் திரும்பிப்பார்த்த இவருக்குப் பச்சைக் கூரை போட்ட கூடாரம் ஒன்றைச் சுட்டிக்காட்டினார். எல்லோரும் பற்றையருகே மறைந்திருந்து உற்றுப்பார்த்தனர். எந்தவித அசைவையும் காணவில்லை. தமது சத்தம் தமக்கே கேட்காதபடி மெல்ல நகர்ந்து கூடாரத்திலிருந்து 7 மீற்றரில் நிலை எடுத்துக்கொண்டனர். காயப்பட்ட வர்களுக்கு முதலுதவி அளித்ததற்கான தடயங்கள் காணப்பட்டன. நூலில் கட்டித் தொங்கவிடப்பட்ட சேலைன் போத்தல், நீண்டு இருந்த வயரில் ஓர் ஊசி, கீழே ஒரு படுக்கை விரிப்பு, இரத்தம் தோய்ந்த குருதித் தடுப்புப் பஞ்சணை எல்லாவற்றையும் பார்க்க, என்ன நடந்திருக்கும் என்பது உடனேயே விளங்கியது.

இனியும் மேலே செல்வது ஆபத்து என்று எண்ணிய வாறு வலது பக்கவாட்டாக நகர்ந்தனர். முதலில் கண்ட



படிப்பகம்

padippakam



அந்த அமைப்பு, இப்போது இன்னும் ஒரு மரத்தின் கீழேயும் செய்யப்பட்டிருந்தது. இரத்தத்தில் தோய்ந்த மேலங்கி எறியப்பட்டுக் கிடந்தது.

'முறையாத்தான் வேண்டியிருக்கினம். இன்னும் என்ன மாதிரி என்று பார்ப்பம்'

என நினைத்தவாறு விடயத்தை விதுஷாவுக்கு அறிவிக்க, மேலும் பக்கவாட்டாக நகருமாறு கட்டளை கிடைத்தது.

அப்பாலே நகர, சாப்பிட்ட குறையில் மதிய உணவு பொதி பொதியாக ஒவ்வொரு மரத்தடியிலும் குவிந்து கிடந்தது.

"இவ்வளவு கிட்ட வந்து இந்த வேலை செய்யிற அளவுக்குத் துணிச்சல்தானே"

இன்னும் வலப்புறமாக நகர்ந்தனர். இருள் அதிகமாகிக்கொண்டு வந்தது. 50 மீற்றருக்கும் அப்பால் கதைக்கும் சத்தம் கேட்கவே, நின்று நிதானித்தனர்.

"பிள்ளைகளின் குரல்மாதிரியும் கிடக்கு. அவை எங்க நிக்கினம்? நாங்கள் எங்க நிக்கிறம்? எதுக்கும் கிட்டப் போய் பார்ப்பம்"

அவ்விடத்தை அணுகினர். விடயம் என்ன என்று பார்த்தால் எங்களுடைய ஒரு பிளாட்டூன் தனது முன்னரங்கை முன்னே நகர்த்திக்கொண்டிருந்தது. அத்துடன் வேவு அணி பின்னே வந்தது.

விடயம் கேணல் விதுஷாவுக்குச் சொல்லப்பட்டது. உடனேயே அணிகள் தயார்படுத்தப்பட்டதுடன் மறுநாள் தாக்குதல் நடப்பின், அதை எதிர்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு பகுதியாக இராணு



படிப்பகம்

padippakam



வம் முன்னேறும் முயற்சியைச் செய்யும் என்பது எல்லோருக்கும் தெரியும். இவ் இத்தாவில் கள வீழ்ச்சியிலேயே 'ஆனையிறவின் மீட்சி உள்ளது' எனப் பகைத் தலைமை நம்பியதால் சிங்களப் படைத்தரப்பின் திட்டம் செயலாகத் தொடங்கியது.

அன்றைய திகதி 02 ஆக வழமைபோல விடிந்தது. எல்லாம் வழமைபோல் நடந்தன. ஆனால், வழமைக்கு மாறாகப் பகல்வரை ஆளில்லா உளவு விமானம் சுற்றிக் கொண்டிருந்தது. சித்திரை மாதத்து வெயில் பூமியை எரித்து விடுவதுபோல் தகித்தது. உயரம் குறைந்த, காற்றுப்புகவே சிரமப்படும் அந்தப் பற்றைகளின் கீழே நின்றவர்களுக்கு வியர்த்துக் கொட்டியது. நிழலும் சுட்டது. எனினும் வியர்வையைத் துடைத்தெறிந்தபடி வேலைசெய்தவர்களும், வியர்வையை வழிந்தோடவிட்டபடி சுடுபொறிக் குறியினூடே படையினரைத் தேடியவர்களுமாக இருக்க, நேரம் பன்னிரண்டாகியது.

ஆளில்லா வேவு விமானம் தொடர்ந்து சுற்றிக்கொண்டிருக்க, ஆனையிறவுநோக்கிய நீரேரிக்கரைப் பக்கத்தால் ராங்கிகள், பவள்களின் இரைச்சல் கேட்டது. அத்துடன் தூரத்தே பேருந்துகளில் படையினரைக் கொண்டுவந்து இறக்குவது தெரிந்தது. யசோதினி உடனே லக்சனாவுக்கு,

"சிறப்பு வந்து போகுது. நிறையப்பேரைச் சிறப்பில கொண்டுவந்து இறக்கினம்"

என அறிவித்தார். போராளிகளுக்காக இயங்கும் போக்குவரவுச் சேவை 'சிறப்புப் பேருந்துப் பணி' என்ற பெயரால்தான் அழைக்கப்பட்டது. சண்டையில் இது படையினரின் ஊர்திகளைக் குறிக்கும் சங்கேதச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டது.



படிப்பகம்

padippakam



அதேநேரம் ராங்கிகளின் இரைச்சல் நீரேரிக் கரைப் பக்க நிலையை நெருங்கத்தொடங்கியிருந்தது. உடனே யசோதினி RPGயை அனுப்பும்படி அறிவித்துக்கொண் டிருக்க, துப்பாக்கிகள் முழங்கத்தொடங்கின.

நீரேரிக் கரைப் பக்கம் 2கி.மீ. அகலத்தையும், யாழ். நெடுஞ்சாலைப் பக்கம் 800மீ. அகலத்தையும், ஒட்டு மொத்தமாக 2½கி.மீ. நீளத்தையும் கொண்டு தொண்டை மானாறு நீரேரிக்கு முதுகையும் கிளாலிக் கடல்நோக்கி முகத்தையும் காட்டியபடி நாக்குவடிவில் அமைக்கப் பட்டிருந்த 'இத்தாவில் Box' என்று சொல்லப்பட்ட அந்தப் பகுதியில் நீரேரிக் கரைப்பகுதி தவிர்ந்த ஏனைய மூன்று பகுதிகளிலும் படையினர் சூழ்ந்திருந்தனர். ஆகவே நான் காவது பக்கத்தையும் மூடிவிட்டால் அனைத்து விநியோ கங்களையும் நிறுத்தி உள்ளே நிற்கும் எம்மை அப்படியே நசுக்கிவிடலாம் என்ற திட்டத்துடன்தான் எழுதுமட்டு வாள், ஆனையிறவு என இருபுற நீரேரிக் கரையாலும் ராங்கிகள், பவள்கள் சகிதம் முன்னேறத் தொடங்கினார் கள்.

ஆனையிறவுப் படைத்தளத்தின் வீழ்ச்சி இத்தாவில் Box இல்தான் தங்கியுள்ளது என்பது அதற்குள் நின்ற அனைவருக்கும் தெரிந்த விடயம். இராணுவத்தின் இப் படியானதோர் திட்டத்தை எதிர்பார்த்திருந்த தளபதிகள் துருப்புக்களை உள்ளே விடக்கூடாது என்பதனைக் கருத் திற்கொண்டு முன்னணிப் போராளிகளுக்குக் கட்டளை வழங்கினர். எல்லா ஆயுதங்களும் நெருப்பாகின.

இத்தனைக்கும் தாக்குதல் ஆரம்பிக்கின்ற அந்தக் கணத்தில் தளபதிகள் அனைவரும் கேணல் பால்ரா ஜின் கட்டளை மையத்தில் தாக்குதல் பற்றிய ஒரு கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். சிறிது நேரத் தினுள்ளேயே அவர்கள் தத்தம் கட்டளைப் பீடங்களில் இருந்தவாறு தாக்குதலை எதிர்கொள்ளத் தயாராகினர்.



படிப்பகம்

padippakam



மாலதி படையணிப் போராளிகள் நின்ற பகுதியிலேயே ஆரம்பத் தாக்குதல் தொடங்கி, தொடர்ந்து அதுவே அன்றைய களமாகிப்போனதால் நேரடியாகவே விதுஷா வின் கட்டளைகள் அலைவரிசையை நிரப்பிக்கொண் டிருந்தன.

பயிற்சிகள் முடிவடையும்வேளையில் எம்மைச் சந் தித்த தலைவர் அவர்கள்,

**"இந்தத் தாக்குதலில் எதிரியின் மிகப் பெரிய சவாலை நீங்கள் எதிர்கொள்வீர்கள். அந்த நேரத்தி லும் தளராமல் உறுதியோடு நின்று சண்டையிட வேண்டும். உங்களை அனுப்புவது நிறையச் சாதிப் பதன்மூலம் இந்தச் சமரை வெற்றிகொள்வதற்குத் தான்"**

என்று சொல்லியிருந்தார். தலைவர் எங்களோடு கதைத்தது, நாங்கள் பயிற்சி எடுத்தது, இவ்வளவு கால மும் மக்கள் பட்ட துன்பம் என எல்லாம் ஒரு கண நேரத்துள் வந்துபோனது.

தூரத்தில் பலமாகக் கேட்டுக்கொண்டிருந்த ராங்கி களின் உறுமல் ஒலி சற்று நேரத்தில் குறைந்து, வெடி யோசைகள் கேட்கத்தொடங்கின. ராங்கிகள் அண் மிக்கத் தொடங்கிவிட்டதை அச்சத்தங்கள் உணர்த்தின. நெரிசல் பற்றைகளை முறித்துக்கொண்டு வந்த ராங்கி கள் முன்னணி நிலையைக் கடக்கத் தொடங்கின. ராங்கி எதிர்ப்பு ஆயுதம் ஏதுமின்றித் தனியே துப்பாக் கியைமட்டும் வைத்துத் தாக்குதலைச் செய்த போராளி களைக் கடந்து ஒன்று, இரண்டு, மூன்று என உள்ளே போயின. அவை மிதித்துச் சென்ற பாதைவழியே தாக்கியபடி முன்னேறிய படையினரை, ஒவ்வொருவரும் தத்தமது காப்பரண்களில் நின்றபடியே தாக்கி நகர விடாது தடுத்தனர். இவர்களின் வெடிபொருட்கள் தீர்ந்து



படிப்பகம்

விழிமூடும்வரை படையினரின் முன்னேற்றம் தடுக்கப் பட்டுக்கொண்டிருந்தது. இந்தக் கடும் எதிர்ப்பு, படை யினருக்கு சினத்தைக் கொடுத்திருக்கவேண்டும். மிகப் பலமாக எறிகணைத் தாக்குதல் செய்யத்தொடங்கினர். இப்போது நீரேரிக் கரைப் பக்கமாக ஐந்து காப்பரண் களில் 200மீ. தூர இடைவெளிகளில் நின்ற போராளி களின் தொடர்பின்றிப் போனதுடன், எழுதுமட்டுவாள் பக்க நீரேரிக் கரையிலிருந்தும் படையினரின் 'வலிச் சக்கர' புறப்படத்தொடங்கியிருந்தது.

"யசோ லீமாசேரா, யசோ லீமாசேரா" என அழைத்த வாறு சண்டை தொடங்கிய நீரேரிப் பகுதியை நோக்கி வேகமாகச் சென்றார் லக்சனா. எனினும் யசோதினியின் தொடர்பு கிடைக்காமலேயே போனது. நாகர்கோயிற் பகுதியில் தனித்து நின்று அவர் படையினருக்குக் கொடுத்த அடி நினைவில் வந்துபோனது.

தாக்குதலின் ஆரம்பமே ராங்கிகளினதும், பவள்களின தும் நகர்வாக இருந்ததால் வெவ்வேறு பகுதியில் நின்ற RPG போராளிகள் நீரேரிப் பகுதியைநோக்கி ஓடிவந்து சேரவும், பெரும்பாலான ராங்கிகள் உள்ளே கடந்து விடவும் சரியாக இருந்தது. உள்ளேயே சில தாக்குதலுக் குள்ளாகின. இவ்வாறு நகர்ந்த கவச ஊர்திகளைத் தாக்குவதற்காகப் பற்றைகளுக்குள்ளால் நகர்ந்து கொண்டிருந்த முல்லைநிலாவிடம் இப்போது ஒரேயொரு ராங்கியெதிர்ப்பு எறிகணைமட்டுமே இருந்தது. அதனை செலுத்தியில் பூட்டியபடி நகர்ந்தவர் தனக்கு முன்னே தெரிந்த பெரிய பற்றையைக் கண்டுவிட்டார். சூழலை விடச் சற்று வித்தியாசமாகத் தெரிந்த அது ராங்கிதான் என்பதை இனங்காண நீண்டநேரம் தேவைப்படவில்லை. ஆயுதம் அவரது தோளிலேறியது. பெரும் ஓசையுடன் எறிகணை செல்லவும் ராங்கி செயலிழந்து நின்றது. அதேநேரம் அருகில் நின்ற பற்றையைக் கவனிக்கத் தவறிவிட்டார். அதுவும் அவர்களின் ராங்கி. அதிலி

padippakam



ருந்து ஒருவர் குதித்தபோதுதான் இவர் அதனைக் கண்டார். குதித்த படைவீரர் முல்லைநிலாவின் சேட் கொலரை இழுத்துப் பிடிக்க, தன்னிரு கைகளாலும் அணைத்துப் பிடித்திருந்த ஆயுதத்தை அப்படியே உயர்த்தி அடித்தார். இதனைச் சிறிதும் எதிர்பாராத அவர் தடுமாறி விலகியதுதான் தாமதம், முல்லைநிலா தன் ஆயுதத்துடன் நீரேரிக் கரையைநோக்கி ஓடினார். அடர்ந்து செறிந்து இருந்த கண்டற் பற்றையினுள் தன்னை மறைத்துக்கொண்டு நடப்பதை அவதானித்தார்.

இதே நேரத்தில்,

**"ராங்கிகள் வந்தால் பிரச்சினையில்லை. பின்னால வாற துருப்புகளைமட்டும் உள்ள விடக்கூடாது. அவையளைத்தான் சுட்டுச் சுட்டு விழுத்தவேணும். துருப்புகள் இல்லாமல் ராங் வந்து பிரயோசனமில்ல. இதுகளுக்கு உள்ளுக்கு வைச்சுக் கொடுக்கலாம். ஒரு புலி இதுக்குள்ள இருக்கும்மட்டும் படையை உள்ளுக்குள் விடக்கூடாது. எல்லோரும் குறிபார்த்துப் பார்த்துச் சுடுங்கோ. மிச்சத்தை நாங்கள் பார்க்கிறம்"**

என்ற கேணல் பால்ராஜின் உறுதியான, தன்னம்பிக்கையான குரல் எல்லோருக்கும் புத்துணர்வூட்டியது. எல்லோரது தொலைத்தொடர்புக் கருவிகளும் இதை உள்வாங்கி வெளியே சொல்லின. எழுந்தமானத்துக்குச் சுடுகின்ற சூடுகளைவிடக் குறிபார்த்துச் சுடுகின்ற ஒரே ஒரு சூடு அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதுபோல கேணல் பால்ராஜ் சொன்ன அந்தச் செய்தி இத்தாவில் போர்க்களத்தின் மகத்தான வெற்றிக்குக் காரணமான வீரர்களுக்கு ஊக்க மாத்திரையாக இருந்தது.

எல்லா நிலைகளிலுமே எமக்கும், படைத்தரப்புக்கும் இடையே கடும் தாக்குதல் நிகழ, இராணுவம்



படிப்பகம்

padippakam



பற்றைகளினூடாகப் புகுந்து உள்ளே சென்றதுடன், முன்னணியிலும் ஆங்காங்கே நிலையெடுத்து எமது உதவியணியை மறிக்கக் காத்திருந்தது. எங்குமே அடர்பற்றைகளாக இருந்ததால் தூரத்திலேயே அவர்களை அவதானிக்க முடியாதிருந்தது. அதேபோல எமது பதுங்ககழிகளையும் அவதானிப்பது கடினமானதுதான். இருதரப்பினரது ஒலிகளையும் பிரித்தறியவும் முடியாதிருந்தது. எல்லா நிலைகளிலும் ஓரிருவரேனும் நின்று தாக்கினர். எனினும் நிலைமையைச் சொல்லமுடியாதபடி படையினர் அண்மையில் வந்துவிட்டிருந்தனர். அல்லது நடைபேசி செயலிழந்திருந்தது. சுட்டுக்கொண்டிருந்த ஆயுதத்தில் இயங்குநிலைத் தடை ஏற்பட்டதும், அருகில் தோழிகளின் உதிரத்தில் தோய்ந்த துப்பாக்கிகளே மீண்டும் பகையினைச் சுட்டன.

நிலைமை இவ்வாறிருக்க, வேகமாக நகர்ந்த மேஜர் லக்சனாவைச் சீறிவந்த ரவைகள் தடுத்தன. அப்போதுதான் இராணுவம் அதுவரை முன்னேறிவிட்டதை உணர்ந்து அதிலேயே பதில் தாக்குதலைச் செய்தார். அவருக்கென்றே அந்த ரவைகள் காத்திருந்தன போலும். சன்னங்கள் அவர் பணிக்கு முற்றுப்புள்ளி வைத்தன. ஒரு தாய்போல நின்று போராளிகளைக் கவனித்து வழிநடத்திய லக்சனாவை இழந்த சோகம் எல்லோரிடமும் பரவ முதல், மேஜர் அமுதாவும் அவ்விடத்திலேயே வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். 1990 இலிருந்து மருத்துவப் பிரிவில் பணியாற்றிய இவர் சில மாதங்களுக்கு முன்னர்தான் மாலதி படையணியில் இணைந்திருந்தார்.

சிறு குளம் ஒன்றுக்கு அருகேயிருந்த கனரக ஆயுத நிலையில் நின்ற மேஜர் அரசி, முன்னேறிச் சென்ற லக்சனாவின் தொடர்பு இல்லை என்பதையும், தமக்கு முன்னேயும் தாக்குதல் நடைபெறுவதாயும் தர்சாவுக்கு அறிவித்தார். தர்சா ஒவ்வொரு நிலைமையையும் விதுஷாவுக்குத் தெரியப்படுத்திக்கொண்டிருந்தார்.



படிப்பகம்

padippakam

படிப்பகம்

அதனால் மேலே இராணுவத்தினரது நகர்வு ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டது.

முன்னணி நிலையின் நிலைமையை அறியக்கூடிய் வகையில் யாருடைய தொடர்புமே இல்லை. உடைந்து நொருங்கிப்போன தொலைத்தொடர்புக் கருவியுடன் போராளிகளும், இன்னும் நிறுத்தப்படாமல் தனியே கிடந்து கட்டளைகளை ஒலித்துக்கொண்டிருந்த கருவி களுமாய் நிலைமை மாறியிருந்தது. ஆனாலும் முன்னரங் கில் இன்னும் 'விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்த துப் பாக்கிச் சூட்டுச் சத்தம்மட்டும் நம்பிக்கையைத் தருவதாய் இருந்தது.

முழுமையாக வேலைசெய்து முடிக்கப்படாத அகழி கள் போதிய பாதுகாப்பைத் தராதபோதிலும், சுற்றிவர வீழ்ந்து வெடிக்கும் எறிகணை மழையைப் பொருட்படுத் தாது, முன்னேயிருந்து வரும் இராணுவத்தைத் தடுத்து நிறுத்துவதிலேயே அனைவரும் குறியாக இருந்தனர். உண்மையைச் சொல்லப்போனால் இத்தாவில் பகுதி யில் உள்ள எந்தக் காப்பரணும் முழுமைப்படுத்தப்பட்டி ருக்கவில்லை. போதிய நேரமில்லை என்பதுடன் படை யினரின் தொடர்ச்சியான எறிகணை வீச்சு இன்னும் பாதகமாய்ப் போனது. 2அடி ஆழத்துக்கு நிலத்தைக் கிண்டிவிடும் எறிகணையிலிருந்து பாதுகாக்க வீட்டுக் கூரைகளின் உடைந்த சலாகைகளும், தீராந்திகளுமே கிடைத்தன. எனினும் இவைகளைப் பயன்படுத்தி 'L' வடிவில் அமைக்கப்பட்டிருந்த அகழிகளை மூடுவதற்குப் படைத்தரப்பு விட்டு வைக்கவில்லை. போட்டவை போட்ட படி இருக்க நாங்களும் எமது துப்பாக்கிகளுமாய்த் தாக்கு தலை எதிர்கொண்டவாறிருந்தோம்.

திரும்பும் இடமெங்கும் இராணுவத்தினரின் இரத்தம் தோய்ந்த உடல்களே சிதறிக்கிடந்தன. முன்னரங்க நிலை களை ஒருவாறு கடந்து உள்ளே சென்றவர்களும்

padippakam



தப்பவில்லை. எறிகணை செலுத்திகளும், உள்ளே நின்ற போராளிகளும் கொடுத்த எதிர்பாராத அடி மீண்டும் பகைவரை நிலைகுலையச் செய்தது.

சாதாரணமாகவே எமது எறிகணை ஏவுதளங்கள் இராணுவத்தைநோக்கித் தாக்குதலைச் செய்தால், உட னேயே அந்த இடத்துக்குப் படைத்தரப்பின் எறிகணை கள் வந்து வீழ்வதே வழமை. கிட்டத்தட்ட 2 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள அந்தக் களத்தினுள் சிங்களப்படை தொடுத்த 'வலிச்சக்கர' வுக்கெதிராக சண்டையிடுவ தென்பது தீக்குளிப்பதற்குச் சமனானது. ஏனெனில் இத் தாவில் முழுவதுமே எறிகணை மழையால் குளித்திருந் ததுடன், எமது எறிகணை செலுத்திகளைக் கவனிக்க வென சிறப்பாகவே தமது எறிகணை செலுத்திகளை ஒழுங்குசெய்திருந்தது இராணுவத் தரப்பு. அன்புச் செல்வி, தேவிகா ஆகியோரின் 82மி.மீ. எறிகணை செலுத்திகள், கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் 120மி.மீ. எறிகணை செலுத்திகள் மற்றும் ஆட்லறி கள் என்பன தாக்குதலின் வெற்றிக்குக் கணிசமான பங்காற்றின. ஒரு கட்டத்தில் உள்ளேயிருந்த எறிகணை ஏவுதளங்கள் செயற்பட முடியாமற்போக, குடாரப்புப் பகுதியிலிருந்து ஆட்லறிகள், பல்குழல் பீரங்கிகள் என் பன அப்பணியை விரைவாக, நிறைவாகச் செய்தன.

இப்போது முன்னேறிய இராணுவத்தைத் தடுத்து நிறுத்தும் படலம் முடிந்து, உள்ளே வைத்துத் தாக்கும் படலம் ஆரம்பமானது. எழுதுமட்டுவாளைநோக்கிய பகு தியில் நின்ற விடுதலையின் அணி பற்றைகளையெல் லாம் தாண்டி விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்து தர்சா வின் அணியுடன் இணைந்து தாக்குதலுக்குத் தயாரா னது. இவர்கள் நின்ற பகுதியை ஏனைய வீரர்கள் கவ னித்துக்கொண்டனர்.



படிப்பகம்

எமது விநியோகப் பாதையைத் துண்டிக்கவேண்டும் என்பதே படைத்தரப்பின் நோக்கமாக இருந்ததால் நீரேரிக் கரையை அண்டியதாகவே அவர்களது முன்னேற்ற முயற்சி இருந்தது. இங்கு எவ்வெவ்விடங்களில் இராணுவம் நிற்கின்றது என்பது துல்லியமாகத் தெரியாவிட்டாலும், இடையிடையே கேட்கும் சூட்டுச் சத்தங்கள்மூலம் ஓரளவு ஊகிக்கமுடிந்தது. எனவே தாக்குதலைத் தொடுத்தபடி எறிகணையுதவியுடன் முன்னேறினார் தர்ஷா.

இப்போது இராணுவம் தனது பகுதியைநோக்கி ஓட்டம் பிடிக்கத்தொடங்கியது. எமது பகுதிக்குள்ளிருந்து துரத்தப்பட்ட இரு படையினர் முன்னணி நிலைக்கு ஓடிவர, அவ்விடத்தில் எறிகணைகள் வீழ்ந்தன. இருவரும் பாதுகாப்புக்காகப் பற்றைக்கரையிலிருந்த பதுங்ககுழியினுள் குதித்தனர். அதற்குள் ஏற்கனவே இரு போராளிகள் ரவை முடிந்த ஆயுதத்துடன் நின்றனர். உருமறைக்கப்பட்ட அந்நிலையினுள் அவர்கள் இருந்ததை அச்சமயம் இவர்கள் கவனிக்க வாய்ப்பில்லைத்தான். பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போலாயிற்று. கிட்ட வந்த இராணுவத்தைத் தப்பவிடலாமா? எப்போதும் எதிரியிடமிருந்து எடுத்து எதிரிக்கே அடிப்பவர்கள் தானே விடுதலைப் புலிகள்.

குழியினுள் குதித்தவர்களிடம் இழுத்துப் பறித்தனர் ஆயுதத்தை. போராடவேண்டித்தான் இருந்தது. தலைவர் அனுப்பியது சாக அல்ல. சாதிக்க. ஓர்மம் மனதில் எழ, இறுதியில் ஆயுதம் இவர்களது கையில். பறித்ததும் விசைவில் அசைய பகையுயிர்கள் பறந்துபோயின. அவையே ஆயுதத்தின் இறுதி ரவைகளுமாகின.

முன்னரங்கநிலைகளை மீளக் கைப்பற்றிக் கொண்டு வந்த தர்ஷாவின் அணி இப்போது மேஜர் அரசி வீரச்சாவடைந்த நிலையருகே வந்தது. அவர்களிடமிருந்த

padippakam



LMGயை பெரும் முயற்சிசெய்து பிரித்தெடுத்து, சுற்றிவர வீழ்ந்திருந்த இராணுவத்தினது வெடிபொருட்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டன. எமது 82மி.மீ. எறிகணை செலுத்திகள் தேவையான இடங்களுக்கெல்லாம் துல்லியமாக எறிகணைத் தாக்குதல்களைச் செய்தன. இருபுறமும் காப்புச் சூட்டை வழங்கியபடியே அணியை நகர்த்தும்படி கட்டளை வழங்கினார் விதுஷா. எந்தப் பகுதியுமே பாதுகாப்பற்றதாகத்தான் இருந்தது. கைப்பற்றப்பட்ட நிலைகளில் விடப்படுவதற்காக இடதுபுறமாக அணிகள் நகர்த்தப்பட்டன. ஒவ்வொரு நிலையாகக் கைப்பற்றப்பட, பின்னாலே வந்த போராளிகள் அதனைத் தக்கவைத்துக்கொண்டனர்.

அடிக்கடி விதுஷாவின் கட்டளைகள் தர்சாவுக்குக் கிடைத்துக்கொண்டிருந்தன.

"நீங்கள் போற பக்கத்தில எங்கடையாக்களின்ர தொடர்புகள் எப்படியும் இருக்கும். அதுக்குரிய மாதிரி ரீமை நகர்த்து"

என தேவையான இடங்களுக்குக் கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்தார்.

முன்னேறிய தர்சாவின்அணி இப்போது 52 க்குச் சென்றது. சூடுகளை வழங்கியபடியே நகர முற்படுகையில் முன்னாலே ஒரு குரல் கேட்பதுபோல இருக்கவே, தாக்குதலை நிறுத்தச் சொல்லிவிட்டு உற்றுக் கேட்டார்.

"தர்சாக்கா, தர்சாக்கா..." எனக் கேட்கவே ஆச்சரியத்துடன் மெதுவாக அவ்விடத்தைநோக்கி நகர்ந்தனர். ரவை முடிந்த தன் துப்பாக்கியை அணைத்தபடி அடர்பற்றையொன்றினுள் மறைந்து கிடந்தார் யாழ்மொழி. அவரது விழுப்புண்ணிலிருந்து சொட்டுச்சொட்டாக வடிந்துகொண்டிருந்தது குருதி. உடனே அவரைத் தூக்கி காயத்துக்குக் குருதித் தடுப்பைச் செய்து, பின்னே



படிப்பகம்

padippakam



அனுப்பி விட்டுத் திரும்ப நகர்ந்தனர். அப்போது சூரியன் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியிருந்தது.

அங்குலம் அங்குலமாக இடங்களைக் கைப்பற்றிக் கொண்டே நீரேரிக்கரையைநோக்கி நகர்ந்து செல்ல, உள்ளேயிருந்து கலைக்கப்பட்ட இராணுவம் தனது பகுதியை நோக்கி ஓட்டமெடுத்தது. ஆயுதங்களை எறிந்து விட்டு 'தப்பினாற் போதும்' என்ற எண்ணத்தில் ஓடிக் கொண்டிருந்தவர்களை முன்னேறிக்கொண்டு வந்த எமது அணி விடவில்லை. வந்தவர்களில் பாதிப்பேர் விழ, மீதிப்பேர் தப்பிப்பிழைத்தனர். அவர்களையும் எமது எறிகணைகள் கலைத்துக் கலைத்து வீழ்த்தின.

இந்த நிலையில் கண்டற் கரையின் இறுதிநிலையை அடைந்தபோது படைத்தரப்பின் எறிகணைகள் அப்பகுதியில் வந்து வீழத்தொடங்கின. காப்புகளற்ற அந்த இடத்தில் வீழ்ந்த எறிகணையால் கனரக ஆயுதப் போராளிகளான கப்டன் மனைமதி, கப்டன் திவ்யா, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த மேஜர் றோய் ஆகியோர் அந்த மண்ணிலே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இந்த இழப்பின் பின்னர், மீளக் கைப்பற்றப்பட்ட நிலைகளில் அணிகளை விட்டவாறு நீரேரிக்கரையை அடைந்தார் தர்ஷா. அங்கே இவர்களது குரல்களைக் கேட்ட முல்லைநிலா மகிழ்வுடன் தனது RPG யை அணைத்த படியே வெளியே வந்தார். இன்னும் சற்றுத் தள்ளி கண்டற் பற்றையொன்றுள்ளிருந்து காயத்துடன் வெளியே வந்தார் மதியழகி. தன்னுடன் நின்ற மதுஷா, மேனகா ஆகியோர் வீரச்சாவடைந்து விட்டதாகவும் வெடிபொருள் முடிந்தநிலையில் தான்மட்டும் அங்கு வந்து சேர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார். உடனேயே அவரைப் பின்னணிக்கு அனுப்பினோம். அடுத்து காயம்,



படிப்பகம்

padippakam



வீரச்சாவுத் தொகையை கணக்கெடுப்பதுடன் வித்துடல்களை அனுப்பவேண்டிய பணி காத்துக்கிடந்தது.

“எந்தப் போர்க்களத்திலும் காயமுற்ற, வீரச்சாவடைந்தவர்களை அருகில் வைத்துக்கொண்டு சண்டையிடுவது என்பது ஏனைய வீரர்களின் உளவுரனைப் பாதிக்கின்ற விடயம். உளவியல்ரீதியான இந்தப் பாதிப்பு போரிடும் வீரரின் ஆற்றலைத் திடீரெனப் பாதிக்கும். ஆனால் இக்கருத்தைப் பொய்யாக்கும் வகையில் இத்தாவில் களத்தில் பன்னிரண்டு மணி நேரமாக, கூட நின்ற உறவுகளின் வித்துடல்கள் அருகிலேயே இருக்க, ஒவ்வொரு பகையாக குறி பார்த்துப் பார்த்து வீழ்த்தமுடிந்தது என்றால், அருகில் நின்ற போராளியின் குருதியில் நனைந்தபின்னும், அவரது காயத்தைப் பத்திரமாகக் கட்டிவிட்டு அவருக்கு ஆறுதல் சொல்லியபடியே, வந்த பகையின் கதையை வழியிலேயே முடிக்க முடிந்தது என்றால், அதற்கு எமது போராளிகளின் மிகப்பெரிய மனவுறுதிதான் காரணமாகும். அதுவே இந்தப் போர்க்களத்தின் நூறுவீத வெற்றியும்கூட”

என்று கேணல் பால்ராஜ் குறிப்பிட்டார்.

அன்றைய பகல் இன்னும் நீண்டிருந்தால் இராணுவத்துக்குத் தக்கபாடம் கற்பித்திருக்கமுடியும் என்பதே எல்லோரது ஆதங்கமாகவும் இருந்தது. மிகவும் புத்திசாதுரியமாகத் திட்டமிடப்பட்ட ‘வலிச்சக்கர’ நடவடிக்கையை எதிர்கொண்டு அதனை வெற்றிகரமாக முறியடித்தவர்கள் என்ற வகையில் நாம் பெருமைகொள்ளவேண்டும். உண்மையில் இது ஒரு வித்தியாசமான தாக்குதல், வித்தியாசமான அனுபவம்.

“100மீ. வேகத்துடன் எமது தாக்குதல் ஆரம்பித்திருக்கின்றதென்றால், அதே 100மீ. வேகம் தாக்குதல் முடியும்வரை இருந்தது”



படிப்பகம்

2[th]லெப். மாலதி படையணி

என்ற பால்ராஜ் அவர்களின் கூற்றினுள் அடங்கி யிருக்கின்ற ஈகம், வீரம், வேகம், வேதனை என்பன அந்தக் களத்தினுள் நின்றவர்களுக்குமட்டுமே புரியக்கூடி யது. அன்றைய தாக்குதலில் பெருந்தொகையான ஆயு தங்கள் கைப்பற்றப்பட, மாலதி படையணியில் 19 பேர் வெற்றிக்கு வலுச்சேர்த்து விழிமூடிப் போயிருந்த னர்.

இதற்கு முதல் நாள் 01 ஆம் திகதி இயக்கச்சிப் பகுதியில் ஒரு சண்டை நடந்திருந்தது. இத்தாவில் பகுதியினுள் நுழைந்த அணிகள் தளமமைத்து நிற்க, கட்டைக்காட்டுப் பகுதியிலிருந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கி ஏனைய அணிகள் நகர்ந்து யாழ் நெடுஞ் சாலையை ஊடறுக்க முயன்றன. நேற்று நடைபெற்ற இத்தாக்குதலில் மாலதி படையணியின் இரு பிளாட்டூன் கள் பங்குகொண்டன. சரவணாவின் 82மி.மீ. எறிகணை செலுத்தியும் இதனுடன் இணைக்கப்பட்டது. அத்துடன் மேஜர்தர அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த போராளிகளும் கலந்துகொண்டனர். இத் தாக்குதலில் மேஜர் நிரஞ்சினி, மேஜர் அமுதா உட்பட 16 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

'வலிச்சக்கர' என்ற நடவடிக்கைமூலம் பெரியதோர் சாதனையைப் படைத்துவிட முயன்ற சிங்களப்படை தோற்றதுடன், இத்தாவில் பகுதியினுள் நிற்கும் புலி களை முற்றுமுழுதாகக் கொல்ல முடியாது போனதால், நிலத்தைக் கைப்பற்றுவதன்மூலம் அங்கிருந்து எம்மை அகற்றலாம் என்று எண்ணிக்கொண்ட படையினர் யாழ் நெடுஞ்சாலை வழியாக முன்னேற முயற்சித்தனர். இப் பெரும் தாக்குதலுக்கு முகம்கொடுக்க கேணல் துர்க்கா வின் தலைமையிலான சோதியா படையணி தயாரா னது. அப்பகுதியில் தர்ஷாவின் அணியிலிருந்து அனுப் பப்பட்ட சாம்பவியின் பிளாட்டூன் நின்றதால், தாக்குத லில் பங்கு பற்றும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது.

padippakam



இவ்வாறு ஒவ்வொருநாளும் ஏதோவொரு முனையில் தாக்குதல் நடந்தவண்ணமேயிருந்தது. அந்தக் களத்தினுள் நின்ற மூன்று பெரும் படையணிகளும் நெருப்பு நதியுள் நீந்திவிட்டுக் காத்திருந்தோம். அதன் பின்னரும் கூட இராணுவம் சில பகுதிகளால் முன்னேறுவதற்கு வேளை பார்த்துக்கொண்டிருந்தது. நாமோ வாய்ப்பை ஏற்படுத்தி, மெல்ல மெல்ல முன்னே நகர்ந்து நிலை கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டோம்.

தென்னந்தோப்புப் பகுதியில் எம் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த இராணுவம் பதுங்கிச்சூட்டை அரங்கேற்றியது. எனினும் வேலி மறைவுகளைப் பயன்படுத்தித் தேவைகளை நிறைவேற்றினோம். தொடர்ந்து இராணுவம் முன்னேறுவதும், நாம் முறியடிப்பதும், இராணுவம் இழப்புடன் திரும்புவதும், பின்னர் தென்னந் தோப்புகளும் ஈச்சம் பற்றைகளும் எறிகணை மழையில் குளிப்பதுவும் வழமையாகிப் போனது. அதேபோல நாம் வெல்ல வேண்டும் என்பதை உணர்த்துவதாக நாளாந்தம் ஒவ்வொரு வித்துடல் தொண்டைமானாறு நீரேரி தாண்டி அனுப்பப்பட்டுக்கொண்டுதானிருந்தது. அத்துடன் வேவு அணிகளின் பணி வேகம் பிடித்தது.

‘சிங்களத்தி’ என்று செல்லமாக நாம் அழைக்கின்ற அபிநயா வேவுப்பணியுடன் எமக்கு மொழிபெயர்ப்புப் பணியையும் செய்தார். அவரோடு போகின்றவர்களுக்கு இயல்பாக ஓர் புத்துணர்வு தொற்றிவிடும். இராணுவக் காவலரணுக்குப் பக்கத்து வேலிக்கரையில் பதுங்கியிருந்தாலும்கூட அவரைச் சுரண்டி,

“இப்ப என்ன சொல்லுறான்” என, தம்முள் கதைத்துக்கொண்டிருக்கும் இராணுவம்பற்றிக் கேட்டுக்கொண்டிருப்பர்.

இப்படித்தான் ஒருநாள் அபிநயாவுடன் இன்னுமிருவரும் முன்னே சென்று காய்ந்த வேலிக் கதிகாலுக்குப்



படிப்பகம்

padippakam



பக்கத்தில் பதுங்கியிருந்தனர். கடும் இருட்டு. இராணுவத்தின் இருப்பிடம் எதுவெனச் சரியாகத் தெரியாத நிலையில் மூச்சுவிடும் சத்தத்தையே கட்டுப்படுத்தி விட்டுக் காத்திருக்க, திடீரென அருகில் படையினர் கதைப்பது கேட்க, திடுக்கிட்டுப் போயினர். "இவ்வளவு கிட்ட வந்திட்டம்" என நினைத்தபடி, என்ன கதைக்கின் றார்கள் என்பதை அறியக் காதை எறிந்தார்கள்.

"கொட்டியா இங்க வருமா? இவ்வளவு தூரம் வராது தானே. நாங்கள் போய்ச் சாப்பிடுவம்"

என்று சொல்லிக்கொண்டிருக்க, 'என்னவாம் கொட் டியா' என்று அபிநயாவை இழுத்துப் பிடித்துக் கேட்டார் ஒருவர். இரு படையினரும் எழுந்து பின்னால் போக வும்,

"கொட்டியா இங்க வராதெண்டு சொல்லுறாங்கள்" என்றார் மிக இரகசியமாக.

"அடேய் மடையா, கொட்டியாவின்ர காது உன்ர காலுக்குக் கீழ கிடக்கு. உன்ர நடு வீட்டுக்க நாங்கள் வந்து நிக்கிறம். இப்பதான் நாங்கள் வருவமோ இல் லையோ எண்டு யோசிக்கிறாய்"

என்று சொல்ல நினைத்தனர். மூவரும் பின்னே வந் தனர். இப்படி ஒவ்வொருநாளும் சுவையான தகவல்களு டன் வேவு அணி வந்து சேரும்.

எப்போதும் வெடிபொருட்களை மேலதிகமாக வைத் திருக்கவேண்டும் என்பதற்காகப் பாவிக்கப்பட்ட உட னேயே அனைத்தும் நிரப்பப்பட்டன. வன்னித் தளத்தி லிருந்து இத்தாவில் களத்துக்கு வந்து சேருகின்ற வெடி பொருட்களை உடனுக்குடன் முன்னணிக்கு அனுப்பும் பாரிய பணி பின்னணியில் செயலாற்றிய அனைவருக் குமிருந்தது. மருத்துவப் போராளிகள், அறிக்கையாளர்



படிப்பகம்

padippakam



கள் என அனைவருமே தமது பணியுடன் மேலதிக பணியையும் செய்யவேண்டியிருந்தது. முற்பட்ட காலங் கள்போல் உதவியணி எனும் பிரிவு இப்போது களங் களில் கிடையாது. எல்லாமே நாங்கள்தான் செய்ய வேண்டும்.

"சுடுநரும் நானே. உதவியாளரும் நானே. மருத்துவரும் நானே"

என்றவாறாகக் களமுனையின் ஆளணித் தொகை சுருங்கியிருந்தது. ஒரு அணியின் மருத்துவப் போராளி யாக நின்ற தளிர், பின்னணி நீரேரிக் கரையிலிருந்து முன்னரங்க நிலைகள்வரை வெடிபொருட்களுடனேயே திரிந்தார். அணிகளுக்கான வெடிபொருள் விநியோகத் தில் அவரது பங்கு முக்கியமானது.

வெற்றியோ, தோல்வியோ இழப்புக்கள் ஒவ்வொரு களமுனைக்கும் வழமை என்பதுபோல் எமது பம்பல் களும், சிரிப்புகளும் வழமையாகிப் போகும். அங்கு எறிகணை விழுந்ததால் கிண்டப்பட்டுக் கிடந்த அந்தக் கிழங்குதான் இராசவள்ளிக் கிழங்கு என்பதைக் கண்டு பிடித்த பின்னர் இராசவள்ளிக் கிழங்குக் கஞ்சியால் களமுனையே கலகலக்கும். சூனியப் பிரதேசத்தினுள் காப்புச் சூட்டணி, மறிப்பு அணி எல்லாம் விட்டு ஒரு கோழிக் கூட்டுக்குப் பதுங்கித் தாக்குதல் செய்ய முற் பட்டு, கூட்டோடு கோழிகளையும் தூக்கி வந்ததும் இங்கு தான் நடந்தது.

இவ்வாறு சிரித்தபடி சாவுக்குள் வாழ்வோராய் நாம் இருக்க, ஆனையிறவுமீது முற்றுகை வளையத்தை இன் னும் இன்னும் இறுக்கும் செய்தியைக் காற்றலைகள் காவி வந்தன.



படிப்பகம்

padippakam



இத்தாவில் களத்தை வென்றபின் அதற்குள் நின்ற கொம்பனி மேலாளர் ஜமுனா உட்பட ஆனந்தி, கலைக் குயில் ஆகியோரின் அணி மீண்டும் தொண்டைமா னாறு நீரேரி கடந்தது. அதேநேரம் புதிதாக அடிப்படைப் பயிற்சியை முடித்துவந்த போராளிகள் இத்தாவில் கள முனைக்கு அனுப்பப்பட்டனர். அந்தக் கொம்பனி மேலா ளராக மாலதி படையணியின் தற்போதைய தளபதி தமிழ்செல்வி சென்றார்.

இப்போது இத்தாவில் களத்திலிருந்து வெளியே வந்த ஜமுனாவின் அணி முழுமையாக்கப்பட்டது. மீண்டும் இயக்கச்சிப் பகுதிமீது தாக்குதல் நடத்தப்பட்டு யாழ் நெடுஞ்சாலை கடந்து புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் புதிய நாக்கு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனையிறவு இறுக்கப்பட்டதுடன் அப்பகுதிநோக்கித் தாக்குதல் நடந்து கொண்டிருக்கும்போதே இயக்கச்சிப் பகுதியில் இறங்கி பளைப் பகுதியைநோக்கி இடங்களைக் கைப்பற்றிக் கொண்டு சென்ற அணிகளுடன் ஆனந்தியின் அணியும் பங்குகொண்டது. தறிக்கப்பட்ட தென்னந் தோப்புகள், ஆட்லறித் தளங்களின் மண் அரண்கள் என்பன கடந்து நகர்ந்தன அவ்வணிகள். நகர்ந்தது என்பதைவிட ஓடி ஓடிக் கைப்பற்றியது என்றே சொல்லலாம்.

இந்நிலையில் ஆனையிறவுத் தளம் புலிகளால் மீட் கப்பட, பளைப் பகுதியும் விடுவிக்கப்பட்டிருந்தது. அத்து டன் இத்தாவில் பகுதியினுள் ஆனையிறவைநோக்கி நின்ற தமிழ்செல்வியின் அணி ஆனையிறவுப் பகுதியி லிருந்து தாக்குதலைச் செய்துகொண்டு வந்த கஜனின் அணியுடன் கைகுலுக்கிக் கொண்டது. எழுதுமட்டுவாளை நோக்கியிருந்த முன்னரங்கநிலையினை நீட்டி கிளாலி வரை தமிழ்செல்வியின் அணிநிலையெடுத்துக்கொண் டது. காலம் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த ஆனை யிறவில் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறக்க, மூடிக் கிடந்த யாழ் நெடுஞ்சாலை திறக்கப்பட்டது.



படிப்பகம்

padippakam



"போட்டால போய், றோட்டாலே வாறோம்"

என்ற முழக்கத்துடன் ஓயாத அலைகள் தாக்குதலணிகள் ஆனையிறவு கடக்க, பயிற்சிக் கல்லூரி மீண்டுமொரு தாக்குதற் பயிற்சிக்காக எம்மை உள்வாங்கிக் கொண்டது.

தென் தமிழீழத்தில் பல களங்கள் கண்டு வென்று நிமிர்ந்தவர்தான் சிறீவாணி. சிங்கபுர, மாஓயா, மண்முனை, பொலநறுவை என நீளும் அவரது களங்களின் பட்டியல். அந்தப் போர் அனுபவத்துடனேயே வடதமிழீழம் வந்தார். இங்கும் சிறீவாணியினது போர்ப்பட்டியல் நீண்டது. பூநகரி, முகாவில் பேசாலை, வெற்றிலைக்கேணி... என இன்னும் பல இராணுவத் தளங்கள்மீதான வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இந்த நீண்ட போர்க்களங்களில் அவர் சாதித்தவைகளோ ஏராளம். இப்போது அந்தச் சாதனைகளில் மொத்த வடிவமாகி உயர்ந்து நிற்கிறார் மேஜர் சிறீவாணி.

குடாரப்புக் கடலிலிருந்து தாக்குதலணிகள் தரையிறக்குகின்ற அதேநேரம் பளையில் ஆட்லறித்தளம் ஒன்று பற்றியெரிந்துகொண்டிருந்தது. தரையிறக்கப் பணியை இலகுவாக்கி, இராணுவத்தைத் திசை திருப்பி, பகையின் மையத்திலேயே அவர்களது பலத்தை உடைத்தெறிந்து கொண்டிருந்தது ஒரு கரும்புலிக் கூட்டம். அந்தக் கூட்டத்தினுள் தானும் ஒருவராய் நின்று ஆட்லறிகளின் தகர்ப்புக்கு வழி செய்திருந்தார் மேஜர் சுதாஜினி.

ஆரம்பப் பயிற்சியுடன் மாலதி படையணியில் இணைக்கப்பட்ட இவர் சிறிது காலத்தின் பின் மாலதி சிறப்பு அணியில் இணைந்தார். இவரது நிதானமான



படிப்பகம்

padippakam



நுணுக்கமான, அதேவேளை வேகமான செயற்பாடுகள் இந்த சிறப்பு அணியின் கண்ணிவெடியாளராக இவரை மாற்றியது. மணலாற்றுக் காட்டில் வேவுப் பணியில் ஈடு பட்டதுடன் கல்யாணபுரத் தாக்குதலிலும் பங்குகொண்டார். சிறப்புப் படையணிக்குப் பெருமை தேடித் தந்த அம்பகாமச் சமரிலும் சுதாஜினியின் பங்கு குறிப்பிடத்தக்கது.

அதேபோல் இவ்வணியிலே மேஜர் சசியும் இணைந்தி ருந்தார். பயிற்சியிலேயே காடுபற்றிய அனுபவத்தை உள்வாங்கும் பெரும் முயற்சி. காவலுலாக்கள், பதுங்கித் தாக்குதல்கள் என பயிற்சியும், கடமையும் ஒன்றாக நடந்து கொண்டிருக்க, அந்த வனத்தின் மூலை முடுக்கெங்கும் நடந்து திரிந்தார் சசி. திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களே உள்வாங்கப்பட்ட இவ்வணியிலும் தன் திறமையைக் காட்டினார். ஆர்வத்துடன் எதையும் நுணுக்கமாக அவதானிக்கும் ஆற்றல் இவருக்கு இயல்பா னது. அதுவே அவரின் வளர்ச்சிக்கு இன்னும் உதவியது. இவ்வாறே தன் இலட்சியம்நோக்கிய பாதையில் இறுதி வரை நடந்தார் மேஜர் சசி.

சத்தியா என்றதும் அவரது குள்ளமான உருவம்தான் நினைவுக்கு வரும். இந்த உருவத்துள் எப்படி எரிமலை யைச் சுமக்க முடிந்தது? இந்த இதயத்துள் எப்படி புய லொன்று மையம் கொண்டது? இலட்சிய உறுதிக்கு உருவம் ஒரு பொருட்டல்ல என்பது இவரைப் பார்த்தாலே புரிந்துவிடும்.

1995 இன் நடுப்பகுதியில் இயக்கத்தில் இணைந்ததிலி ருந்து களமுனைகளிலேயே அவரது காலம் கழிந்தது. பின்னர் கரும்புலிகள் அணியின் நிர்வாகப் பணிக்குத் தெரிவுசெய்யப்பட்டபோதுதான் அவர்களின் வாழ்க்கை பற்றி அறியும் வாய்ப்புக் கிடைத்தது. அதுவே அவரது இலட்சியத்தை இன்னும் வீச்சாக்கியது. இறுதியில் தானும் அவ்வகையில் இணைந்துகொள்ள முயன்றபோது அவரது



படிப்பகம்

padippakam



உயரம் அதற்குத் தடையாகவே இருந்தது. விடா முயற்சியுடன் தொடர்ந்து தலைவருக்கு மடல் வரைந்துகொண்டிருந்தார். இறுதியில் அவரது வேண்டுகோள் நிறைவேறியது. பெரும் கனவோடு களம் சென்றார். தன் பணியை நிறைவேற்றினார். ஈழ நினைவேட்டில் என்றும் அழியாமல் வாழுவார் சத்தியா.

இவ்வாறு நெருப்பாகி நின்று நிமிர்ந்து சிரித்தவர்கள் இன்று விடியலுக்காகச் சிவப்பாகிப்போனார்கள். தரையிலே பெண் கரும்புலிகளின் புதிய அத்தியாயத்தின் திறவுகோல்களாகி வரலாற்றின் பக்கங்களில் தம்மையும் பொறித்துக்கொண்டார்கள்.

**“இலக்கை அடையவேண்டும் என்பதற்காக எதையும் செய்யும் பக்குவம் இவர்களுக்கு இருந்தது. கடினமான பயிற்சிகளை இலகுவாகச் செய்யக்கூடியவர்களாகவும், எந்த வேளையும் எத்தகைய கடின பணியையும் நிறைவேற்றும் ஆற்றல் மிக்கவர்களாகவும் விளங்கினர்”**

என்று கேணல் கடாபி குறிப்பிட்டார்.

தமது இலட்சியத்தை நோக்கி உறுதியாக நடந்த இவ்வீராங்கனைகளின் எண்ணங்களைச் சுமந்தபடி நடக்கின்றன பல பாதங்கள்.

குறுகிய காலப் பயிற்சியுடன் மீண்டும் அரியாலையைநோக்கி அணிகள் பயணித்தன. அணிகளின் கொம்பனி மேலாளராக ஜமுனா, கொம்பனிப் பொறுப்பாளராக மேஜர் செல்வி, பதில் பொறுப்பாளராக, மேஜர் மாலதி ஆகியோர் போயிருந்தனர். ஏற்கனவே எம்மால் கைப்பற்றப்பட்டிருந்த பகுதிக்கு



படிப்பகம்

padippakam



முன்னே, பூம்புகார் வீதியைக் குறுக்கறுத்துக் கடற்கரையை யும், நாவற்குழியையும்நோக்கி நீள்கின்ற படைத்தரப்பின் முன்னரங்க நிலைகளை உடைத்து. உள்நுழைந்து கைப் பற்றும் திட்டத்துக்கு எங்களுடைய படையணியும், லெப். கேணல் இராஜசிங்கத்தின் தலைமையிலான லெப். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் தெரிவுசெய்யப் பட்டிருந்தது. அத்துடன் கொமாண்டோ RPG அணி, பதுங் கிச் சுடும் அணி எனவும் சில தயாராகின. இத் தாக்குத லின் ஒருங்கிணைப்புக் கட்டளைத் தளபதியாக கேணல் சொர்ணமும், மாலதி படையணிக்கு கேணல் விதுஷாவும் நியமிக்கப்பட்டனர்.

முதல் நாள் இரவு கிழக்கரியாலையில் தரையிங்கிய அணிகள் தமது பணிகளை ஒழுங்குபடுத்துவதற்காக அங் கேயே தரித்து நின்றன. தடையுடைப்பதுடன் இடதுபக்க நிலைகளைக் கைப்பற்றும் பணி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கும், வலதுபக்க நிலைகளைக் கைப்பற்றும் பணி மாலதியின் அணிக்கும், செம்மணிச்சந்தி உட்பட யாழ் நெடுஞ்சாலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பணி செல்வியின் அணிக்கும் வழங்கப்பட்டிருந்த தால், அணிகள் தத்தம் பணிக்கேற்ப பொருட்களைத் தயார்ப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தன.

2000.05.08 அன்று மதியம் இரண்டு மணியளவில் தாக்குதலின் ஆரம்ப இடத்துக்கு எல்லோரும் நகரத் தொடங்கினோம். வைகாசி மாத வெயில் சூழலையே வாட்டியிருந்தது. சூடான மணற்பாதை கால்களைப் பதம் பார்த்துக்கொண்டிருந்தது. நீண்ட தூர நடை. உடல் முழுவதிலும் வியர்வை வழிந்தது. அணிந்திருந்த பாதணி கூட சுடத்தொடங்கியது. எனினும் யாரும் பின்தங்கி விடாதபடி வேகமாக நடந்தும், ஓடியும் சென்று இறுதி நகர்விடத்தில் நின்றோம்.

அங்கே இறுதித் திட்டம் கேணல் சொர்ணம் அவர் களால் விளங்கப்படுத்தப்பட்டது. இறுதியாகத் தலைவர்



படிப்பகம்

padippakam



அனுப்பிவிட்ட கன்டோசுடன் பொறுப்பாளர்கள் வந்து கொண்டிருந்தனர்.

"இதென்ன வேறை ஏதோ பெரிசாயும் வருகுது. அண்ண பெரும்பாலும் கண்டோஸ்தானே தாறவர். இதில ஏதோ விசயமிருக்கு"

"வரண்ட, நன்னீர் இல்லாத பகுதிக்குள்ள சண்டை நடக்கப் போறதால, அங்க தாக்குப்பிடித்து நின்று சண்டை செய்யிறதுக்கு முன்னேற்பாட்டோட சோடா அனுப்பியிருக் கிறார்"

என்றார் எங்களில் ஒருவர்.

எங்கோ பொறி தட்டியது. முகாமைத்துவம் தொடர் பான ஒரு புத்தகத்தில் ஒரு தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்று சில விடயங்கள் எழுதப்பட்டிருந்தன. தனக்குக் கீழ் உள்ளவர்களின் நலனில் அக்கறையும், தூரநோக்கான பார்வையும், இன்னும் இன்னும் நிறைய விடயங்களும் இருந்தன. அந்தத் தலைமைத்துவப் பண்பை எங்களின் தலைவரில் எந்தநேரமும் காணலாம்.

இந்தச் சண்டைக்கான பயிற்சி நடந்துகொண்டிருந்த நேரமும் பொறுப்பாளர்களோடு கதைக்கும்போது,

**"போராளிகளை நிறையத் தண்ணீர் குடிக்கச் சொல் வதோடு உரிய நேரங்களுக்கு கட்டாயம் தேநீர் கொடுத் திருக்கவேண்டும். ஒவ்வொரு அணித்தலைவர்களும் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்"**

என திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருந்தார். ஏனெனில் சண்டையிடப்போவது உவர் நிலத்தில். அங்கு வேகமாக நீரிழப்பு ஏற்படும். அதைத் தாங்கக்கூடிய தன்மையை முதலேயே ஏற்படுத்தியிருக்கவேண்டும் என்ற அவரின்



படிப்பகம்

தொலை தூரப்பார்வை மிகவும் வித்தியாசமானது. வியக்கத்தக்கது.

மெல்ல மெல்ல நகர்ந்து தடையருகே, தாக்குதல் நேரத்துக்காய் காத்திருந்தோம். நேரம் சரியாக 1.30. தடை தகர்ந்தது. அந்த இரவுப் பொழுதில் மாலதியின் அணி வலதுபக்கமாகக் காப்பரண்களைக் கைப்பற்றத் தொடங்கியது. அதேவேளை செல்வியின் அணி, உடைக்கப்பட்ட பாதையால் உள்நுழைந்து கிட்டத்தட்ட 1கி.மீ. தூரம் வேகமாக ஓடியது. நெடுஞ்சாலையில் குறிப்பிட்ட பகுதியினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே அவர்களது பணி. செம்மணிச்சந்தியில் கால் வைத்த அவ்வணி நெடுஞ்சாலையைத் தடுத்து நின்றது.

இடதுபக்கம் படையினரின் முன்னரங்கநிலை ஓரிடத்தில் வளைவாக இருந்ததால் அதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி மிகக் கடுமையான தாக்குதலைச் செய்துகொண்டிருந்தது இராணுவம். அப்பகுதியைக் கைப்பற்றிச் சென்ற ஆண் போராளிகள் காயம், வீரச்சாவு என அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டுக்கொண்டிருந்ததால் அவர்களால் தொடர்ந்து நகரமுடியாமல் போயிற்று. உடனே அவ்விடத்துக்கு மாலதியுடன் ஓர் அணி அனுப்பப்பட்டது. எதிர்ப்புப் பலமாகத்தான் இருந்தது. கூட நின்ற RPG போராளியை நகர்த்தி அவ்விடத்துக்கு அடித்ததும், கனரக ஆயுதத்தின் மூலம் காப்புச்சூட்டை வழங்கிக்கொண்டே அணி முன்னேறியது. வேகமாக நகர்ந்து காப்பரணுக்கு குண்டடித்ததும்தான், அதிலிருந்து சூடு நின்றது. தொடர்ந்து மிகுதிப் போராளிகளை காவலரண்களைக் கைப்பற்றும் பணிக்கு விட்டுவிட்டு, மாலதி தனது பழைய இடத்துக்குத் திரும்பினார். தொடர்ந்து ஏனைய முன்னரங்கநிலைகள் எமது கைகளில் விழத்தொடங்கின.

செம்மணிச் சந்தியில் ஏறிய செல்வியின் அணி வலப்புறம் திரும்பி நாவற்குழிப் பாலத்தைநோக்கி நகரத்

padippakam



தொடங்கியது. யாழ் நெடுஞ்சாலையின் நீளத்துக்கு இரு மருங்கும் காப்பரண்களை அமைத்து, அப்பாலத்துக்குப் பாதுகாப்பை வழங்கிக்கொண்டிருந்தது இராணுவம். காப்பரண்களைத்தவிர வேறு காப்புக்கள் ஏதுமற்ற அப் பகுதியை வேகமாகக் கைப்பற்றிச் செல்வதென்பது இய லாத விடயம். இதனால் அணிகளைப் படையினரின் சூடுகளுக்கேற்பவே நகர்த்தவேண்டியிருந்தது. காப்பரண் களைக் கைப்பற்றி முன்னே சென்றுகொண்டிருந்த மேஜர் நிதியின் செக்சன் நின்ற இடத்திலிருந்து மூன்று, நான்கு காப்பரண்களுக்கு அப்பால் படையினர் நின்று சூட்டை வழங்கிக்கொண்டிருந்தனர். அந்தச் சூட்டை வைத்தே இராணுவத்துக்கும் நிதியின் அணிக்கும் இடையிலான தூரம் 50 மீற்றருக்கும் சற்றுக் கூடுதலாக இருக்கும் என் பதை ஊகிக்கமுடிந்தது. கடும் இருட்டிலே எறிகணை வெளிச்சங்களும், ரவைகளின் ஒளிர்வுமே ஒவ்வொரு பொருட்களையும் இனம் காட்டியது. அத்தோடு படையின ரின் ஆயுதங்களின் சூட்டுச் சத்தம், ஒளிர்வு என்பவற்றை வைத்தே அதற்கெதிராக எமது சுடுகலன்கள் இயக்கப்பட் டன.

நின்ற இடத்திலிருந்து முன்னேறுவதற்கான நடவடிக் கைகளை நாம் மேற்கொள்ள, படையினரோ தமது பகுதி யைத் தக்கவைப்பதில் முனைப்பாக இருந்தனர். இதனால் எதிர்த்தரப்பு தமது சூட்டு வலுவை அதிகமாக்கியது. நேரம் கிட்டத்தட்ட விடிகாலை மூன்றைத் தாண்டிக்கொண் டிருந்ததால், தொடர்ந்து முன்னேறும் முயற்சி எம்மால் கைவிடப்பட்டது. கைப்பற்றப்பட்ட காவலரண்களில் தரித்து நின்றவாறு அதனைச் சீர்ப்படுத்தி பாதுகாப்புக்கு கந்ததாக மாற்றியமைக்கவேண்டியிருந்தது. பொழுது விடிந் தால் அந்த வெளியில் எந்த நடவடிக்கையையும் மேற் கொள்ளமுடியாது.

யாழ் நோக்கி நீண்டு செல்கின்ற நெடுஞ்சாலைக்குச் செங்குத்தாக இடதுபுறத்தில் நீளமாக அமைக்கப்பட்டு



படிப்பகம்

padippakam



இருந்தது மண் அணை. அதில் 100மீ. இடைவெளியில் உள்ள காப்பரண்களைத் தூரத்தே நிற்கும்போதே நன்றாக அவதானிக்கமுடியும். ஏனெனில் இடையில் சிறுபுற்களைத் தவிர வேறேதுமற்ற வெட்டையே இருந்தது. வேலிக்கரையில் நிற்கும் ஐதான பூவரசு மரங்களைத்தான் நாம் காப்பாகப் பயன்படுத்தவேண்டியிருக்கும். இந்நிலையில் பகலில் முன்னேறுவதென்பது மிகவும் கடினமானது. தலைகாட்டவே முடியாது. கருகிய பனங்குற்றிக்கும் பதுங்கிச் சூடு நடக்கும். அப்படி முன்னேறினாலும் ஏனைய உதவிகளைப் பெறுவதென்பது வாய்ப்பற்றது. எனவே முன்னேற்ற நடவடிக்கையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துவிட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டோம்.

அதேவேளை நெடுஞ்சாலையைத் தாண்டி செம்மணி வெளியினுள்ளும் நான்கைந்து பதுங்குகுழிகள் வெட்டப்பட்டு அணி விடப்பட்டது. உப்புத் தரவையுள்ளே தோண்டப்பட்ட அகழிகளினுள் உடலை மறைத்தபடி காய்ந்தும் காயாமலுமிருந்த சிறு கொடிகளை எடுத்து அந்தப் பகுதிக்கேற்றவாறாக உருமறைப்புச் செய்துவிட்டு விழிகளைத் தூர எறிந்தோம். இடையிடையே உயர்ந்திருந்த எருக்கலம் பற்றைகள், வேய்ந்திருந்த ஓலை உக்கி சிதிலமடைந்த நிலையில் அதில் ஒரு வீடு இருந்ததை நினைவுபடுத்தும் எச்சங்கள் என்பவைதான் கண்களுக்குத் தெரிந்தன. மெல்ல எட்டிப் பார்க்க, தூரத்தே பெரும் குடியிருப்பு இருப்பதை சிவப்பாகத் தெரிந்த ஓடுகள் இனம் காட்டின. மனங்கள் அதையும் தாண்டி நாயன்மார்கட்டுச்சந்தி, கல்வியங்காட்டுச்சந்தி கடந்து ராஜவீதி வழியே கோப்பாய் துயிலுமில்லத்துக்குப் போயின.

வெயில் சற்று உரத்தபோதுதான் அந்தச் சூழலின் இயல்பு புரிந்தது. இயல்பாகவே நாக்கை வறட்டும் உப்புக் காற்று, உடலில் பிசுபிசுவென ஒட்டிக்கொள்ளும் உப்புப் பூத்த மண், அணிந்திருந்த சாக்குத் தொப்பியினூடாக வழிந்து முகத்தில் எரிவை உண்டாக்கும் வியர்வை,



படிப்பகம்

இவையெல்லாம் சேர்ந்து குடிப்பதற்காகப் போத்தலில் வைத்திருந்த தண்ணீரை முடித்துவிட்டிருந்தது. வெளியே அவதானிக்கமுடியாமல் கண்கள் கூசின. வெயிலைக் கையால் மறைத்து ஒவ்வொரு திசையாக நோக்கினோம். செம்மணியில் புதைந்துபோன பல நூற்றுக்கணக்கான உயிர்களின் மனவெம்மையைச் சுமந்து நின்றதாய் உரத்து எரித்தது சூரியன்.

முதல் நாள் உண்ட உணவுடன் அன்றைய பகற்பொழு தைக் கழிக்க எல்லோரும் தயாராகினோம். அப்போது தான், தலைவர் தந்துவிட்ட கன்டோஸ் ரவைக்கூட்டு அணியினுள் இருந்து தன்னை ஞாபகப்படுத்தியது. இடது பின்புறமாக தூரத்தே நாவற்குழிப் புகையிரத வீதியின் கறுப்புப் பாலம் அழகாகத் தெரிந்தது. கூடவே, ஒரு மழைநாளில் பூவும் பிஞ்சுமாய் எம் மக்கள் ஊர் பிரிந்து போன அந்தக் கொடிய நினைவு விழிகளைச் சிவப்பாக்கி யது.

ஓ... கிருசாந்தி! எம் தங்கையே! உன்னைக் காப்பாற்ற ஓடோடி வரமுடியாத, எட்டாத தூரத்திலல்லவா நாம் இருந்தோம். நீ சித்திரவதை அனுபவித்த இந்த செம்மணி வெளி எட்டாத தொலைவிலல்லவா அப்போது இருந்தது. உன்னை, உன் அன்னையை, தம்பியை, அயலவரை, ஏன் இந்தத் தேசத்து உறவுகளையே முகமிழந்து முகவரி யற்றுப் போகச்செய்த பேய்கள் இப்போது எங்கே? சொல்லிவிடு. எனது சுடுகலனாலேயே பதிலளித்துவிடுகின் றேன்.

ஓ... என் உறவுகளே! நேற்று பதுங்குகுழி வெட்டும் போது என் மண்வெட்டி பட்டு உடைந்துபோனது உங்கள் எலும்புத் துண்டங்கள்தானா? என்ன தவறு செய்தீர்கள் இந்த உப்புத் தரையினுள்ளே உதிர்ந்துபோவதற்கு?

padippakam



ஏதோ ஒரு நம்பிக்கையில் கைகளைக் கட்டிக்கொண்டு உட்காந்திருந்தீர்கள். ஏதோ ஒரு நம்பிக்கையில் இந்த அவலவாழ்வை ஏற்றுக்கொண்டீர்கள். வேறேது தவறாக இருக்கமுடியும்? வென்றிடுவோம் என்ற நம்பிக்கையுடன் தான் எம் தலைவர் எமக்கு விடை தந்தார். இனியேனும் உங்கள் ஆத்மாக்கள் அமைதியடையட்டும்.

எல்லோர் மனங்களும் இப்படித்தான் எண்ணிக்கொண்டிருந்தன. உப்பு நீர் கால்களில்மட்டும் கசிந்திருக்கவில்லை. அனைவர் விழிகளிலும்கூடத்தான் வழிந்திருந்தது.

திடீரென அந்த உப்புவெளி தீப்பற்றத்தொடங்கியது. எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததால் மூண்ட தீயாய் இருக்க வேண்டும். காற்றின் போக்கைப் பார்த்தால், அது வரும் திசை எங்களைநோக்கியதாகத்தான் இருக்கும். தான் நகரும் திசையை சுருண்டெழும் புகைமூலம் சுட்டிக்காட்டியது நெருப்பு. காய்ந்த புற்கள், பற்றைகளை எரித்தபடியே எல்லா இடமும் தீ பரவத்தொடங்கக் கட்டளைப் பீடத்துக்கு நிலைமையை அறிவித்தோம்.

ஒருவரும் வெளியில் வராமல் அப்படியே உள்ளே இருக்கட்டும் எனவும், நெருப்பு மிக அருகில் வந்தால் குடிப்பதற்காக வைத்திருக்கும் தண்ணீரைப் பாவிக்கும்படியும் சொல்லிய விதுஷா எல்லாநிலைகளிலும் தண்ணீர் உள்ளதா என்பதைக் கேட்கும்படி முன்னரங்கில் நின்ற செல்விக்குக் கட்டளை வழங்கினார்.

கொண்டுபோயிருந்த சோடாக்களைக் குடித்து முடித்ததும் எல்லாப் போத்தல்களிலும் குடிநீர் சேமித்து வைத்திருக்கவேண்டுமெனக் கண்டிப்பாகச் சொல்லியிருந்த விதுஷாவிடம் இப்போது தண்ணீர் எல்லாம் முடிந்துவிட்டது என்று சொன்னால், கட்டாயம் தண்ணீருடன் ஆட்களை அனுப்ப முயற்சிசெய்வார். சிலவேளைகளில் அதில் இழப்பைச் சந்திக்கவேண்டிவரும். இந்த வெட்டையினுள் வந்து காயமுற்றால்கூட, உடனடியாகப் பின்னே



படிப்பகம்

padippakam



அனுப்பமுடியாது. எமது தவறின்மூலம் இத்தகைய இழப்பை ஏற்படுத்தக்கூடாது. எனவே,

"நாங்கள் சமாளிப்போம்"

என கட்டளைப் பீடத்துக்குத் தகவல் அனுப்பினோம். ஆனாலும் எம்மிடம் தண்ணீர் இருப்பதாகக் கட்டளைப்பீடம் நம்பியதுபோல் தெரியவில்லை. நெருப்போ எங்களில் மிகுந்த பற்றுக்கொண்டு நெருங்கி வந்துகொண்டிருந்தது. நெருப்பின் ஆற்றலை இன்னும் தூண்டிக்கொண்டிருந்தது டன், அது போக நினைக்காத இடத்துக்கெல்லாம் தானே அழைத்துப்போய் விட்டது காற்று. பார்த்துக்கொண்டிருக் கவே ஒவ்வொரு மீற்றர்களாகக் குறுகி இப்போது அண் மையில் வந்துவிட்டது தீ.

முன்பு ஒரு நாள் எங்கள் தளத்தில் சமையற்கூட வேலி எரிந்தபோது, ஒருவர் விடாமல் எல்லோரும் ஓடி வந்து நின்று,

"வாளியை எடு"

"தண்ணியைக் கொண்டு வா"

"இந்தா இந்தப் பக்கத்தால நிண்டு ஊத்து"

"வேகமாய் தண்ணியை அள்ளச் சொல்லு"

என எல்லோருமே கட்டளையிடுவோராயும், பணியாள ராயும் மாறி நிற்க, கால் காயம் மாறாத பிருதுவிகூட ஓடிவந்து தண்ணீர் ஊற்றி அந்த நெருப்பை அணைத்த ஞாபகம் வந்தது.

இங்கு யாரும் கட்டளையிடவும் முடியாது. யாரும் அணைக்கவும் முடியாது. தானே வந்து எங்களைக் கடந்து போகும்வரை காத்திருக்கவேண்டியதாயிற்று. இப்போது தீ நாக்குகள் தலையைத் தொடும் தூரத்துக்கு வந்து



படிப்பகம்

விட்டன. காப்பகழிகளை உருமறைக்கப் பயன்பட்ட செடி கொடிகள் எரியும் வெம்மை தாங்கமுடியாமல், பதுங்கு குழியின் உள்ளிருந்த மண்ணை எடுத்து எரியும் தீயை அணைக்கமுனைந்தோம். ஆனாலும் குறைவதாயில்லை. தீயின் வெம்மை அந்த வெளியெங்கும் பரவியிருக்க, உடல் நெருப்பாய்ச் சுட்டது. கண்களில் இருந்து கனல் வெளியேறியது. தீ எங்களைக் கடந்த பின்னும் அனலாக வீசியது காற்று. எல்லாம் முடிந்த பின்னர்தான், தண்ணீர் இல்லாமல் நாம் நின்றதைத் தயங்கித்தயங்கி அறிவித் தோம். அதிலிருந்து, காப்பரணில் தண்ணீர் வைத்திருக்கா தோர் ஒறுப்புப் பெறத்தொடங்கினர்.

நாவற்குழிப் பாலத்தை அடுத்திருந்த 'அன்றூஸ்' இறால் பதனிடும் நிறுவனத்துக்குப் பெருமளவு இராணுவ ஊர்தி கள் வந்துபோவது தெரிந்தது.

"ஆ, அந்தா ஒருத்தன் 60மி.மீ. மோட்டரோட வாறான். இந்தா அடுத்தவன் செல் பெட்டியோட வாறான். வந்து வேலிக்கரைக்குப் பக்கத்தில வைச்சு இந்தா செல்லைப் போட்... செல்லடிக்கிறான், எல்லாரும் கவர் எடுங்கோ"

சொல்லிக்கொண்டு காப்பரண் ஒன்றில் புகுந்தார் செல்வி. எறிகணைகள் இவர்கள் இருந்த பக்கமாகத்தான் வீழ்ந்து வெடித்தன.

"ஆக்களின்ர துணிச்சலைப் பார். இடுப்பில கை வைச் சுக்கொண்டு நின்று வெடிக்கிறதையோ பார்க்கிறாய்? திருப்பித் தரேக்க தெரியும்"

"சரவணா சேரா 3, சரவணா சேரா 3. இப்ப அன்றூஸ் கொம்பனியிலிருந்து 50மீ. முன்னால ஆக்கள் நிக்கினம். ஒருக்காக் குடு ஆக்களுக்கு"

"விளங்கிற்று சேரா 03. குடுக்கிறம்"

padippakam



சொல்லி முடிந்ததும் படையினர் எறிகணை வீச முயற்சிக்கையில், சரவணாவின் எறிகணை செலுத்தியி லிருந்து எறிகணைகள் கூவிக்கொண்டு புறப்பட்டன. கண் மூடித் திறப்பதற்குள் 60மி.மீ. எறிகணை செலுத்தியையும் காணவில்லை. அதில் நின்ற இருவரையும் காணவில்லை. தரித்து நின்ற ஊர்திகளும் வேகமாகப் புறப்படத் தொடங்கின. இப்படித் தேவைப்படும் நேரத்தில்மட்டும் எறிகணைகளை வீசிவிட்டு அடுத்த கட்டத்துக்காகக் காத் திருந்தது எறிகணை ஏவும் அணி. அந்த நேரம் தான் எதிர்பாராதவிதமாகச் சாவைத் தூக்கிவந்த எறிகணை ஒன்றால் காவுகொள்ளப்பட, மேஜர் தேனரசி செம்மணிச் சந்தியில் விழிகளை மூடினார்.

இப்போது நெடுஞ்சாலையில் நிதியின் செக்சனுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான தூரம் 100மீ அளவிலிருந் தது. அன்று மாலை திடீரென முன்னேறித் தமக்கு முன் னேயிருந்த வெற்றுக் காவலரணுள் நுழைந்து கொண்ட னர் படையினர். இடையிலிருந்த ஒரு காப்பரண் மற்றை யதை மறைத்துக்கொண்டிருந்தமையால் அதனைச் சரி யாக அவதானிக்கமுடியவில்லை. இடைவெளித் தூரம் 75மீ. ஆகியது. மறுநாள் அதிலிருந்த படையினரைத் துரத்தும்வரை தலை நிமிர முடியாத அடியாகத்தான் இருந்தது.

அரியாலைப் பகுதியில் படையினரின் முன்னரங்கின் உட்பகுதியானது முக்கிய பகுதிகளை உள்ளடக்கி தளம் ஒன்றின் வடிவில் பாதுகாப்புச் செய்யப் பட்டிருந்தது. இதனால் ஒவ்வொரு தளங்களையும் தாக்கி அழிப்பதன்மூலம் கூடியளவு நிலத்தை விடுவிக்க முடியும். எனவே இருள் கவிந்ததும் நெடுஞ்சாலையை அண்டிய தாக கப்டன் கலைக்குயிலுடன் சாந்தியின் செக்சனும், மணியந்தோட்டப் பகுதியால் கீர்த்தியின் பிளாட்டூனும்



படிப்பகம்

padippakam



நகர்த்தப்பட்டன. அத்துடன் வேறு அணிகளும் அதில் கலந்துகொண்டன.

வீதியை அண்டி கலைக்குயிலுடன் நகர்ந்த அணி கட்டிடப்பகுதிகளிலிருந்து பலத்த எதிர்ப்பைச் சந்தித்த படிதான் போய்க்கொண்டிருந்தது. கட்டிடங்களின் ஒவ் வொரு துவாரங்களிலிருந்தும் சீறுகின்ற துப்பாக்கிகளின் செயற்பாட்டை நிறுத்தவேண்டுமானால் மிக வேகமாக நகர்ந்து அவற்றை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். இதற்காக ஒவ்வொருவரும் முயற்சி எடுத்துக் கொண்டோம். ஒவ்வொரு போராளிகளினதும் தனித்த செயற்பாடுகளே இங்கு வெற்றியைத் தீர்மானிப்பவையாக இருந்தன. தொடர்ந்தும் முன்னேறிச் சென்ற அணிகள் புதுக்குளம் சந்தி அருகே நிலையெடுத்துக்கொண்டன.

மணியந்தோட்டப் பகுதியால் கொழும்புத்துறையை நோக்கி நகர்ந்த கீர்த்தியின் அணி, வலதுபுறமாக அகல மான நிலப்பரப்பையும் விடுவித்துக்கொண்டு முன்னேறி யது. எங்கு புலியால் வரமுடியாது என சிங்களப் படை நினைத்திருந்ததோ அங்கெல்லாம் திடீரெனப் புகுந்தோம். இதனால் திகைத்துப்போன படையினரின் கண்மூடித் தனமான தாக்குதல்களே அப்பகுதியில் அதிகமாக இருந் தன. தான் இருக்கும் இடத்தைத் தக்கவைப்பதற்காக எந்தளவு வெடிபொருளையும் இழக்கத் தயாராக இருந்தது இராணுவம். எனினும் அவர்களின் உயிரைக்கூட தக்க வைக்க முடியவில்லை என்பதாகவே இருந்தது நிலமை. அணிகள் தொடர்ந்து முன்னேறி இப்போது கொழும்புத் துறையின் மீன்பிடித்துறைக்குச் சற்று முன்னதாக நிலை யெடுத்துக்கொண்டன.

உடனேயே நாவற்குழிப் பாலத்தருகே நிலைகொண்டி ருந்த ஏனைய அணிகள் அரியாலைநோக்கி நகர்த்தப்பட, தற்காலிக நிலையமைக்கும் பணி முனைப்பெடுத்தது. இதுவரைநாளும் தேவையான இடத்துக்கெல்லாம் நகர்ந்து



படிப்பகம்

padippakam



நகர்ந்தே எறிகணை உதவி வழங்கிய சிறிய ரக எறிகணை செலுத்திகள் தம்மை அடுத்த கட்ட நகர்வுக்குத் தயாராக் கும் நடவடிக்கைக்காக இந்த இடை நேரத்தைப் பயன்படுத் திக்கொண்டன.

இப்போது நாவற்குழிப் பாலத்தடியில் நிதியுடன் ஐந்து பேர் விடப்பட்டனர். கூடவே இம்ரான்-பாண்டியன் படை யணிப் போராளிகளும். மறுநாள் இரு அணிகளும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் இதுவரை காலமும் சவாலாயிருந்த நாவற்குழிப்பாலம் எமது கைகளில் வீழ, தொடர்ந்து அவ்வணிகள் கைதடிச் சந்தியைநோக்கி நகரத் தொடங்கின.

இந்நிலையில் அரியாலைப் பகுதியிலிருந்து ஒரு முன் னகர்வை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டது கட்டளைப்பீ டம். தற்போது நாங்கள் நிலைகொண்டிருப்பது அரியாலை யின் கட்டிடங்கள் நிறைந்த பகுதி. நெருக்கமான வீடுகளை யும், உயர்ந்த மதில்களையும்கொண்ட பகுதியுள் உடைக்கக் கூடிய பாதையைத் தெரிவு செய்வதே சிரமமாக இருந்தது. மிகுந்த முயற்சியின் மத்தியில் முன்னேறுவதற்கான பாதை எடுக்கப்பட்டு அணிகள் தயார்ப்படுத்தப்பட்டன. வேறோர் அணி தாக்குதலைத் தொடுத்து, குறிப்பிட்ட பகுதியைக் கைப்பற்றிய பின், கீர்த்தியின் அணி தொடர்ந்து ஏனைய பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதாகத் திட்டம் இருந்தது.

திட்டத்தின்படி 2000.05.16 அன்றைய இரவில் தாக்கு தல் தொடங்கியது. முன்னேயிருந்த நாலைந்து வீடுகள் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்தன. எனினும் எதிர்ப்புப் பலமாக இருக்கவே. தொடர்ந்து ஏனைய இடங்களுக்கு நகரமுடியவில்லை. வீட்டைக் கைப்பற்றிய அணிகள் அடுத்த கட்டத்துக்காகக் காத்திருந்தன.



படிப்பகம்

padippakam



இராணுவம் நின்ற வீட்டுக்கும், போராளிகள் நின்ற வீட்டுக்கும் இடையில் மதில் ஒன்று நீண்டு சென்றது. அங்கே இராணுவம். இங்கே போராளிகள். இருபக்கமும் மாறிமாறிச் சூடுகள் பரிமாறப்பட்டன. விடிந்தால் நடமாடுவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத விடயம். இதற்காகப் பொழுது காத்திருக்குமா?

அன்றைய காலை வேகமாக விடிந்ததுபோல் இருந்தது. கட்டிடச் சண்டையின் இடர்கள் இங்கு பெரிதாகத்தான் தெரிந்தன. யன்னல் ஓரத்தில் சிறிது நிழல் தெரிந்தாலும் உடனே இராணுவத்தின் PK LMG சடசடவென ரவை மழை பொழியும். அதேபோல் எமது சுடுகலன்களிலிருந்தும் சிறு மழை தூறும்.

காலை உணவு நேரம் கடந்தது. முன்னே நிற்கும் அணிகளுக்கு உணவு கொண்டுசென்று கொடுக்கமுடியாதளவுக்கு அந்தச் சூழல் இருந்தது. எப்படியும் அனுப்பியே தீரவேண்டும் என முடிவெடுத்தோம். எமது கனரக ஆயுதங்கள் காப்புச் சூடு வழங்க, படையினரின் சூடுகள் தடைப்பட்டன அல்லது மட்டுப்படுத்தப்பட்டன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் குறுந்தூர ஓட்டப் பந்தய வீரர்களைப்போல் ஓடிச் சென்று உணவைக் கொடுத்து விட்டுத் திரும்பி ஓட்டத்தில் வந்துவிட்டனர். மதியம் PK LMG க்குப் பதிலாக 50 கலிபர் மூலம் காப்புச் சூடு கொடுக்கப்பட்டு ஓட்டப் பந்தயம் நடந்தது. எனினும் தாக்குதலணி முன்னே நகர்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதனால் மறுநாள் அதிகாலை இருளோடு இருளாகப் பின்னே வந்து அணிகள் நிலைகொண்டன.

இங்கே நிலைமை இவ்வாறு இருக்க, ஜமுனாவுடனான அணி நாவற்குழிநோக்கி நகர்ந்தது.



படிப்பகம்

padippakam



ஆனையிறவுச் சமரின் வெற்றியை வேகப்படுத்தும் முகமாக இத்தாவிலில் நின்ற ஜமுனாவின் அணியை, ஆரம்பப் பயிற்சியை முடித்துக் கொண்டு வந்திருந்த புதிய போராளிகளைக் கொண்ட லெப்.கேணல் தமிழ்செல்வியின் அணி மாற்றிவிட்டு அவ்விடத்தைப் பொறுப்பெடுத்துக்கொண்டதை முன்னர் பார்த்தோம். புதிதாகப் பயிற்சி முடித்து வந்த அந்தப் போராளிகளால் அனுபவம் மிக்க போராளிகள் நின்ற அதே காப்பரண்கள், நாள்தோறும் அச்சுறுத்தல் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அந்த முன்னரங்க வரிசை பாதுகாக் கப்பட்டுக்கொண்டிருந்தது. மேஜர் தமிழ்செல்வி, விடு தலை, சாம்பவி ஆகியோரின் தலைமையில் பிளாட்டூன் களாகப் பிரிக்கப்பட்ட புதிய அணிகூட இராணுவத்துக்குப் பெரும் சவாலாக நின்றது.

தொடர்ந்து ஆனையிறவு மீட்கப்பட, ஆனையிறவுப் பகுதியால் தாக்குதலைத் தொடுத்துக்கொண்டு வந்த அணியோடு இவர்கள் கைகுலுக்கிக்கொண்டதுடன், அந்தச் சமர்க்களம் மறுபுறமாகத் திரும்பியது. எழுதுமட்டுவாள் நோக்கியதாகக் கிளாலி முதல் தொண்டைமானாறு நீரேரிவரையுமான முன்னரங்க வரிசையில் நிலைகொண் டது தமிழ்செல்வியின் அணி. இதன் கட்டளைத் தளபதி யாக நிஸ்மியா நியமிக்கப்பட்டார். கொம்பனி மேலாள ராக தமிழ்ச்செல்வி நிற்க, கட்டளை அதிகாரியாக மிதுலா விடப்பட்டிருந்தார். சிறு சிறு தாக்குதல்களுடன் புதிய அணி கள அனுபவத்தைப் பெற்றுக்கொண்டிருந்தது. களமுனை விரிந்து சமர்கள் வெவ்வேறு பகுதிகளில் அரங்கேற்றப்பட்டன.

அதே நேரம் அரியாலைக் களமுனை மீண்டும் திறக்கப் பட, சிறப்புப் பயிற்சி முடித்துக்கொண்ட ஜமுனாவின் அணி அரியாலைநோக்கி நகர்த்தப்பட்டது. இவ்விடயம் புதிய அணிகளுக்குக் கோபத்தைத் தந்தது. வழமையாகத் தாக்குதலுக்கு வாய்ப்புக் கிடைக்காதவர்கள் சிறிது



படிப்பகம்

padippakam



காலத்துக்கு 'உம்' என்று திரிவார்கள். கடமையைமட்டும் செய்துகொண்டு, மேலதிகமான நகைச்சுவைகளை நிறுத்திவிடுவார்கள். தமது கோபத்தைக் காட்டுவதற்கு அவர்கள் தேர்ந்தெடுக்கும் வழி இதுவாகத்தான் இருக்கும்.

இந்தப் புதியவர்களுக்கு ஏற்கனவே படைத்தரப்பு மீதிருந்த கோபம், தம்மை இப்போது தாக்குதலுக்கு விடவில்லையே என்ற ஆதங்கமாக மாறியது.

'எங்களை விட்டிட்டு அவையளைமட்டும் தொடர்ந்து சண்டைக்கு அனுப்பிக்கொண்டிருக்கினம்'

இதுதான் அவர்களின் ஆதங்கம். ஆனால், களங்கள் அவர்களுக்காகவும் காத்திருந்தன. தச்சன்தோப்பு சமர்க் களம் தன்னிடம் வருமாறு இவர்களுக்கு அழைப்பு விடுத் தது. மகிழ்ச்சியோ எல்லை கடந்தது. தமிழீழக் காவல் துறையின் தாக்குதல் அணி, ஏனைய சில அணிகள் என்பன இவர்களின் காப்பரண்களைப் பொறுப்பெடுத்துக் கொள்ள, அனைவரும் பின்னே எடுக்கப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்டனர். இப்பகுதியின் கட்டளைத் தளபதி கேணல் தீபன் கதைத்தபின், எமதணிகள் பூநகரிநோக்கிப் புறப்பட்டன.

பூநகரித் தென்னந் தோப்பில் இறுதி ஒழுங்குகளை மேற்கொண்டபின், அவர்களை ஏற்றிய படகுகள் அக்கரைக் குப் புறப்பட்டன. கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதைக்கு அண் மையாக கிளாலிக் கடல் நீரேரி கடந்து கரையேறினர். கடற்கரையூடாக நகர்ந்து தச்சன் தோப்புப் பகுதியை அடைந்தனர்.

அங்கு ஏற்கனவே செல்வியுடன் சோதியா படையணி யின் ஒரு கொம்பனியும் மற்றும் வேறு சில அணிகளும் முன்னரங்கநிலைகளைப் பாதுகாத்திருந்தன. 1999 ஆம் ஆண்டின் இறுதியில் தனங்கிளப்புச் சந்தி தொட்டு கோயி



படிப்பகம்

padippakam



லாக்கண்டி, நாவற்குழி வீதிவரை சில பகுதிகள் மீட்கப் பட்ட நிலையில், அப்பகுதியூடே சாவகச்சேரியை நோக்கி ஒரு பாதுகாப்பு வரிசை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவ் வரிசை தனங்கிளப்பில் இருந்து கோயிலாக்கண்டியூடாக நகர்ந்து நாவற்குழியை அண்மித்துக்கொண்டிருந்தது.

நிலைமை இவ்வாறிருக்க, இப்போது மீண்டும் ஒரு முன்னேற்ற நடவடிக்கைக்காக அணிகள் தயார்ப் படுத்தப்பட்டன. தாக்குதல் திட்டம்பற்றிய அனைத்து விட யங்களும் கேணல் தீபனால் அணிகளுடன் கதைக்கப் பட்டதுடன், இருமுனைகளினூடாக உடைப்புக்கு அணிகள் தயார்ப்படுத்தப்பட்டன. ஒரு முனையால் லெப்.கேணல் தமிழ்செல்வியின் வழிநடத்தலில் சாம்பவியின் பிளாட்டு னும் மறு முனையால் மிதுலாவின் வழிநடத்தலில் மேஜர் தமிழ்செல்வியின் அணியும் இறங்குவது எனத் தீர்மானிக் கப்பட்டது. அடுத்த பிளாட்டூன், தேவைக்கேற்ப நகர்த்தப் படுவதற்கென எமது துணைத் தளபதி லெப்.கேணல் நிஸ்மியாவுடன் விடப்பட்டிருந்தது.

2000.05.17 அன்றைய நள்ளிரவு. உடைக்கப்பட்ட இரு முனைகள் ஊடாக முன்னேறத்தொடங்கின அணிகள். குறுகிய முனையால் உடைத்து இருபுறமும் விரிந்து நீண்ட முன்னரங்க வரிசையை நாங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததும் யாழ் நெடுஞ்சாலையைநோக்கி முன் னேறத்தொடங்கியது லெப்.கேணல் தமிழ்செல்வியின் அணி. அதேநேரம் நாவற்குழி வீதிக்கு இடதுப்க்கமாக உடைப்பை ஏற்படுத்தியதும் அதனூடாகத் தாக்குதலைத் தொடுத்து முன்னேறிய மிதுலாவின்அணி நிலப்பரப்பைக் கைப்பற்றியபடி நகர்ந்துகொண்டிருந்தது. தச்சன்தோப்பு, கோயிலாக்கண்டி ஆகிய கிராமங்கள் பெரும்பாலும் பரந்த வயல் வெளிகளையும் ஆங்காங்கே வீடுகளையும், அவற் றைச் சூழ பூவரசு வேலிகளையும் கொண்டிருந்தன. இடை யிடையே கம்பீரமாக நிமிர்ந்து நின்ற பனங்கூடல்களும், இக்குடியிருப்புப் பகுதிகளும்தான் காப்பாகவோ, அன்றி



படிப்பகம்

மறைப்பாகவோ இருந்தன. இத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்தியே மேஜர் தமிழ்செல்வியின் அணி மிதுலா வுடன் நகர்ந்துகொண்டிருந்தது. இராணுவ இருப்பிடங்கள் சிறு சிறு தளங்களாக தேவைக்கேற்ப அமைந்திருந்த தால் அவற்றைத் தாக்கியழித்துக்கொண்டு செல்வது இலகுவாக இருந்ததுடன், படையினரின் மனோபலத்தை உடைத்து பரந்த பகுதியை மீட்க முடிந்தது. இவ்வாறு கோயிலாக்கண்டிக் கடற்கரை தொடக்கம் நாவற்குழி வீதியூ டாக நீண்ட நிலப்பரப்பு எமது கைகளில் வீழத்தொடங்கி யது.

இந்நிலையில் இருபுறமும் நகர்ந்துகொண்டிருந்த லெப். கேணல் தமிழ்செல்வி, மிதுலா ஆகியோரின் அணிகள் நாவற்குழிச் சந்தியில் நின்று அரியாலைப் பக்கமிருந்து வரும் ஜமுனாவின் அணியைச் சந்திப்பதென்பதே திட்டம். அதற்கேற்ப மிதுலாவின் அணி வழமையான பாதையால் நகர்ந்துகொண்டிருக்க, லெப்.கேணல் தமிழ்செல்வியின் அணி நாவற்குழி வீதியைநோக்கி நகரத்தொடங்கியது. வீதியின் இருமருங்கிலும் பாதுகாப்புக்கெனவும், சோத னைக்கெனவும் அமைக்கப்பட்டிருந்த அரண்களையெல் லாம் வேகமாகத் தகர்த்தழித்தபடி முன்னேறியது அணி. 'STOP' என வெள்ளைப் பின்னணியில் சிவப்பு வண்ண மையால் எழுதப்பட்டிருந்த அறிவுறுத்தற் பலகை தலை கீழாகக் கிடந்தது.

ஏ பகையே! எங்களை நிறுத்த உன்னால் முடியுமா? வீழ்ந்து கிடந்த அந்தப் பலகையைப் பார்க்கச் சிரிப்பு வந்தது. தொடர்ந்து சென்ற அணி நாவற்குழிச் சந்திக்கு முன்னதாக இருந்த தென்னந்தோப்பில் நிலையெடுத்துக் கொண்டது. அதேநேரம் மிதுலாவுடன் முன்னேறிய அணியும் வந்து இணைந்துகொள்ள, மீண்டும் சந்தோச வெள்ளம் கரைபுரண்டோடியது.

padippakam



நிற்க, இருக்க நேரமின்றி வில்லிருந்து புறப்பட்ட அம்புபோல வந்தவர்கள் இடையில் தரித்துநிற்கவேண்டி ஏற்பட்டபோதுதான் அணிகளை மீள ஒழுங்கமைப்புச் செய்தனர்.

ஏற்கனவே சொல்லப்பட்ட திட்டத்தின்படி அரியாலை யில் நின்ற அணிகளோடு வரும் ஜமுனா, நாவற்குழிப் பாலத்தைக் கைப்பற்றி, நாவற்குழிச் சந்திவரை நகர்ந்து லெப்.கேணல் தமிழ்செல்வியைச் சந்திக்கவேண்டும். ஆனால், இங்கு நிலைமையோ வேறுவிதமாக இருந்தது. நாவற்குழிப் பாலத்தை அண்டிய பகுதி படைத்தரப்புக்கே வாய்ப்பாக இருந்ததால், ஜமுனாவின் அணியின் முன் னேற்றம் சற்றுத் தாமதப்பட்டது. அத்துடன் நாவற்குழிப் பாலத்தைத் தக்கவைக்கவேண்டும் என்று படைத்தரப்பு முனைப்புக் காட்டியதற்குப் பல காரணங்கள் இருந்தன. பாலம் எமது கைகளில் வீழ்ந்துவிட்டால் நாவற்குழி, அரியாலைவரையான நேரடிப் பாதை திறக்கப்பட, கைதடி, சாவகச்சேரி என களமுனை விரியும். அதற்கு அப்பால் எமது முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்தமுடியாதென்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். எனவே பாலத்தைச் சில நாட்களேனும் தக்கவைப்பதன் ஊடாக எமது நட வடிக்கையைத் தாமதப்படுத்த விரும்பியது படைத் தரப்பு.

தரித்து நின்ற அணிகள் நாவற்குழிப் பகுதிதொட்டு கைதடிவரை நிலையெடுத்துக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் தயாராகின. இப்போது முன்னேயுள்ள நெடுஞ்சாலையால் இராணுவத்தினரது கவச ஊர்திகள் அவசர அவசரமாக ஓடித் திரிந்துகொண்டிருந்தன. சாதா ரண சுடுகலனின் வீச்செல்லைக்கு அப்பாற்பட்ட இவை களைத் தாக்குவதற்குப் பின் தளங்களிலிருந்து கனரக ஆயுதங்கள் வரவழைக்கப்பட்டன. ஊர்திகளின் நகர்வு மட்டுப்படுத்தப்படுகின்ற அதேநேரம் 'யாழ் வளைவு'அருகே நின்ற ஜமுனாவின் அணி நாவற்குழிப்பாலத்தின் எதிர்ப்பை முறியடித்து அதனை வெற்றிகொண்டதோடு,



படிப்பகம்

padippakam



தொடர்ந்து நகர்ந்து மாலை 4.30 மணியளவில் நாவற்குழிச் சந்தியிலே லெப்.கேணல் தமிழ்செல்வியுடன் ஒரு கைகுலுக்கலைச் செய்து, கைதடிச் சந்திவரை நகர்ந்தது. இந்த வெற்றி மகிழ்ச்சியோடு, மீண்டும் அவ்வணி அரியாலைக்குத் திரும்ப, தமிழ்செல்வியின் அணி கைதடித் தளத்தைத் தாக்கியழித்தபின், அருகிலிருந்த பிள்ளையார் ஆலயத்தடியில் நிலையெடுத்துக்கொண்டது.

ஒரு பகுதி எம்மால் மீட்கப்பட்டதும், எறிகணைகளை வீசி, வான் தாக்குதலைச் செய்வது இராணுவத்தின் வழமை. பெரும்பாலும் நாம் நிற்கக்கூடும் என எதிர் பார்த்துப் பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளும் இடங்களில் நாம் இழப்புக்களைச் சந்தித்துக்கொண்டதில்லை. மாறாகப் பொது மக்களும், அவர்களின் சொத்துக்களும் தான் அழிக்கப்பட்டிருக்கின்றன.

உடனடியாக கைதடிக்கு அப்பால் எமது அணி நகர்ந்து விட்டது. படையினரின் எறிகணைகள் கைதடி முதியோர் இல்ல வளாகத்தினுள் விழத்தொடங்கின. ஆதரவு தேடி வந்திருக்கும் முதியவர்களையும் கொன்று குவிக்கத் துடித்த சிங்களம், தொடர்ந்து அப்பகுதியெங்கும் எறிகணைகளை வீசியபடி இருந்தது. எழுந்து நடக்கவே முடியாத அந்த மூத்தவர்கள் எங்கே போவர் தம்மைப் பாதுகாக்க? எங்குமே செல்லமுடியாது படுக்கையில் படுத்தபடியும், முற்றத்தில் இருந்தபடியும் அவர்கள் இறந்து கிடந்த காட்சி உயிரைப் பிழிவதாக இருந்தது. காயமுற்றவர்கள் எழுப்பிய அவலக்குரல் கேட்டு அவ்விடத்துக்கு ஓடிப் போனோம். அப்போதுதான் நாவற்குழிப்பாலத்தைத் தாண்டி கைதடிநோக்கி வந்துகொண்டிருந்த எமது கொம்பனியின் மருத்துவப் பொறுப்பாளர் மேஜர் முகுந்தினி இதனை அறிந்து கொம்பனியின் ஏனைய மருத்துவ முதலுதவியாளர்களோடு விரைவாக வந்து உயிர் காக்கும் தம் பணியைச் செய்யத்தொடங்கினார். போராளிகளுக்கு எனக் கொண்டு வந்த மருந்துகளைப் பாவித்து மக்களை இயன்ற



படிப்பகம்

padippakam



வரை காப்பாற்றினார். பின்னர் மக்களனைவரும் எமது போக்குவரவுப் படகுகளில் வன்னிக்கு அனுப்பப்பட்டனர். மக்களை முடிந்தவரை காப்பாற்றிய நிம்மதியில் தம் மிடத்துக்குச் சென்றுகொண்டிருந்த மேஜர் முகுந்தினி பகை வீசிய எறிகணையில் வீரச்சாவடைந்தார்.

இதன் பிறகு நாவற்குழிச் சந்தி ஒரு கொலை வலய மாக மாறியது. எந்த நேரமும் எறிகணைகள் வந்து வீழும். பேரிரைச்சலுடன் குண்டு வீச்சு விமானங்கள் வரும். குண்டுகளை வீசும். வீதிகள் குழியாகும் அல்லது தமிழ்மக்களின் வியர்வை சிந்திய உழைப்பில் எழுந்த வீடுகள் சிதைந்து நொருங்கும். நாளாந்தம் ஆண்டவனே என்றெம்மக்கள் இறைஞ்சுகின்ற ஆலயச் சுவர்கள் சிதறித் தெறித்து பலநூறு மீற்றர்களுக்கப்பால் பறந்து விழும். இதுவே இங்கு வாடிக்கையாகிப்போனாலும்கூட, நாவற் குழிச்சந்தி தன் போக்குவரத்து முக்கியத்துவத்தை ஒரு போதும் இழந்துவிடவில்லை.

இப்போது அணிகள் கைதடிப் பிள்ளையார் கோயிலுக் குச் சற்றுப் பின்னே இடது புறமாகத் தொடங்கி நெடுஞ் சாலையை ஊடறுத்து, தச்சன் தோப்பு வயல்களூடாகச் சென்று, புகையிரத வீதியையும் தாண்டி, தனங்கிளப்பிலி ருந்து சாவகச்சேரிக்குச் செல்லும் வீதியை ஊடறுத்து நின்றது. ஒரு வளைவான வடிவில் நிலைகொண்ட அணி கள் நிலைமைக்கு ஏற்றவகையில் முன்னேறக் காத்திருந் தன. அதேநேரம் கைதடியிலிருந்து கோப்பாய் செல்லும் வீதியின் குறுக்காக செல்வியுடன் சோதியா படையணி யின் கொம்பனி படையினரை வரவிடாது மறித்து நின்றது.

நாவற்குழிப் பாலத்தைப்போலவே கைதடிப் பாலமும் சுற்றி வர நீண்ட வெளியைக் கொண்டது. காப்பு மறைப்பு எதுவுமற்று விரிந்து கிடக்கின்ற பரந்த வெளி அது. சிங்களப் படைக்கும் இது பெரியளவில் வாய்ப்பாக இருக்கவில்லை. எனவே கைதடிப் பாலத்துக்கு அப்பால்



படிப்பகம்

padippakam



இருந்த பனங்கூடலைப் பயன்படுத்திக்கொண்டது இராணுவம்.

கிட்டத்தட்ட வீதி நீளமும் பக்கவாட்டாக 400மீ. தூரத்தைக் கொண்ட வெளியைத் தவிர்த்து அப்பாலே அடர்ந்து நீண்டு உயர்ந்திருந்த பனங்கூடல் மிகுந்த பாதுகாப்பைப் படைத்தரப்புக்குக் கொடுத்திருந்தது. அருகில் போனாலே சரசரக்கும் காவோலை, யாரையுமே கிட்ட அண்டவிடாத வடலிகள் என உள்ளே போக முற்படுவோரை உடனேயே இனங்காட்டிவிடும் பனங்கூடல் எமக்குப் பாதகமாய் அமைந்ததில் வியப்பில்லை.

எப்படியேனும் உள்ளே புகவேண்டியிருந்தது. இரகசியமாக இயலும்வரை அருகிற் சென்று பின்னர் தாக்குதலைத் தொடுப்பதாகத் திட்டமிடப்பட்டு, உடனடியாகக் கிடைத்த வேவுத் தகவலின்படி ஒரு பக்கம் மேஜர் வதனியின் அணியும், மறு பக்கம் ஆண் போராளிகளின் ஓர் அணியும் தாக்குவதற்குத் தயாரானது. இராணுவம்பற்றிய தகவல்களை முழுமையாகப் பெறமுடியாத நிலையில், அணியிலிருந்த கனரக ஆயுதங்கள் தேவையான இடங்களுக்குச் சூட்டினை வழங்குவதற்குத் தயார்ப்படுத்தப்பட்டன. இருள் புகுந்த மாலை நேரம் இரு புறத்தும் அணிகள் நகரத் தொடங்கின. இவர்களுக்கு உதவியாக கைதடிப் பாலத்துக்கு ஓர் அணி அனுப்பிவைக்கப்பட்டது.

நேரம் இப்போது இரவு 8.30. பாலத்திலிருந்து இருளோடு இருளாகப் புறப்பட்ட அணிகள் மெல்ல மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தன. முன்னே எதுவுமே தெரியவில்லை. எனினும் இருளை ஊடறுத்து விழிகளால் உற்றுத் தேடியபடி நகர முயல, முதுகுப் புறமாக வானில் தேடொளி ஒன்று ஒளிர்கிறது.

‘அது அரியாலைச் சந்திப்பக்கமாக இருக்கவேணும்’ மனம் எண்ணிக்கொள்ள,



படிப்பகம்

'இப்ப இந்தப் பக்கம் பரா அடிச்சால்...'

நினைத்தவுடனே ஏதோ செய்தது. இந்த எண்ணம் இன்னும் நிதானத்தைத் தர நகர்ந்துகொண்டிருந்தோம். இதோ பனங்கூடல். இதற்குள் வாய் பிளந்திருக்கும் சுடுகலன் முனையுடன் படையினர் எங்கே நிற்கின்றனர்? இன்னும் இன்னும் ஊர்ந்தோம். மிக அண்மையாக. இங்கே இருக்கின்றேன் என்பதுபோல சடசடத்தன படையினரின் சுடுகலன்கள். பதிற் சூடுகள் நடத்தப்பட்டதுடன் பழக்கப் படாத இடம் என்பதால் அணி கலையத் தொடங்கிற்று. ஏதாவது பின்னடைவைச் சந்திக்கநேரின் எவ்வாறு, எவ் விடத்தில் சந்திக்கவேண்டும் என்ற திட்டத்துடன்தான் புறப்பட்டிருந்தோம். பரவலாக எல்லா இடத்திலிருந்தும் தாக்கத்தொடங்கினர் படையினர். அவர்களின் சூட்டுவலு அதிகமாக இருந்ததால், புறப்பட்டது போலவே பின் வாங்க முயற்சித்துக்கொண்டிருந்தோம். முன்பு சொன்ன படியே இரகசியமாக, மிக இரகசியமாகப் படையினரின் அண்மையில் இருந்து வெளியேறி வந்துவிட்டோம். கடும் இருள். கைதடி வெளிக்காற்றிலும் மேனி வியர்க்கிறது. ஒருவாறு முழுப்பேரும் வந்து சேர நள்ளிரவு கடந்து விட்டது. இந்நடவடிக்கையில் லெப். மாலா . வீரச்சா வடைய, இன்னொரு போராளி காயமடைந்தார்.

மீண்டும் முன்னேறும்படி கட்டளை கிடைத்தது. இப் போது திட்டத்தில் இன்னும் மாற்றம் நடக்கிறது. ஏற் கனவே முன்னேறியதன்மூலம் படையினர் இருக்கும் இடமும், ஆயுத பலமும் அறிந்துகொள்ளப்பட்டதால், மேலதிக தகவல்கள் திரட்டப்படுகின்றன. அப்பகுதியின் பலம், பலவீனம் என்பன அவதானிக்கப்பட்டு நுணுகி ஆராய்ந்து திட்டம் வகுக்கப்பட, ஒரு இரவும் ஒரு பகலும் கழிந்து போயின.

இந்தப் பகல் வேகமாகக் கழிந்து போய் விடாதா என்ற ஆதங்கத்துடன் அணிகள் தயார்ப்படுத்தப்படுகின்றன.

padippakam



ஏனைய கனரக ஆயுத ஊர்திகளை அண்மையில் கொண்டுவந்து துல்லியமான சூடுகளை வழங்குவதன் மூலமாகப் படையினரின் முன்னரங்க நிலையை உடைக்கும் தீர்மானத்துடன் இரவிரவாக இரகசியமாக அவை முன்னே கொண்டுவரப்பட்டு, உருமறைக்கப்பட்டன. அணி நகர்த்தல் தொடக்கம் எறிகணை உதவி பெறுதல்வரை அனைத்தும் சரிபார்க்கப்பட்ட நிலையில் பகல்பொழுது இருளைத் தழுவியது. கைதடிப் பகுதி இன்னும் கைப்பற்றப் படாததால் கோயிலாக்கண்டி, தனங்கிளப்புப் பகுதியணிகள் நகராமல் தாமதிக்க வேண்டியதாயிற்று. எனவே மேஜர் தமிழ்செல்வியின் அணி விரைவாக நகர்வதற்குத் தயாரானது.

இதேநேரம் மட்டுவில் பகுதியால் நகர்ந்த அன்பரசி, ஜெயந்தன் படையணிகள், படையினர்மீது தாக்குதலைத் தொடர்ந்தவண்ணம் இருந்தன.

வதனியின் செக்சன் முன்னே இறங்கியது. எதிர்ப்பு அதிகமாக இருந்தபோதிலும் எமது கனரக ஆயுதங்களின் சூட்டுவலு இராணுவத்தின் இருப்பையும், எதிர்ப்பையும். வலுவற்றதாக்கிவிட, உள்ளே புகுந்த தாக்குதலணி அக் காவலரண் வரிசையைக் கைப்பற்றத்தொடங்கியதும், படையினர் பின்வாங்கவேண்டியதாயிற்று. ஏனைய அணிகள் பின்தொடர நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் தாக்குதலுக்கேற்ற தயார்நிலையில் வியூகமமைத்து சாவகச்சேரியைநோக்கி நகரத்தொடங்கினோம். மிகுந்த வேகமாகக் கட்டிடக் காட்டிடையே நகர்ந்து சாவகச்சேரி நகரத்தை அண்மித்துக்கொண்டிருந்தோம். இடையில் நிகழ்ந்த தாக்குதல்களைச் சிறிய அணிகளே முறியடித்துவிட்டிருந்தன.

இப்போது நாங்கள் சாவகச்சேரியின் மையப் பகுதியினுள் கால் வைத்தோம். பழக்கப்பட்ட வீதிகளைக்கூட கண்டுபிடிக்கமுடியவில்லை. வீதிக்கு இடதுபக்கமாக ஒரு



படிப்பகம்

padippakam



எரிபொருள் நிரப்பு நிலையமிருந்தது. அதனை அண்டிய தாக இராணுவம் தனது தளம் ஒன்றை அமைத்திருந்தது. அது அந்தப் பகுதியின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்தபோதும், இப்போது அது எமது முற்றுகைக்குள்ளே தான். கிட்டத்தட்ட 40 நிமிடம்வரை நடந்த சண்டையில் படையினர் அழிக்கப்பட, நாம் முன்னே நகரத்தொடங்கினோம். அதிலிருந்து ஒரு 800மீ. தூரம்தான் நகர்ந்திருப்போம். அதற்குள் நகரப்பகுதி கழிந்திருந்தது.

சற்று நேரத்தில் உலங்கு வானூர்தி ஒன்று வந்து சாவகச்சேரிச் சந்திப் பகுதியில் தாக்குதலை ஆரம்பித்து வைக்க, ஆட்லறிகள் தம் கைவரிசையை காட்டத் தொடங்கின. கட்டிடங்கள் பொலுபொலுவென சிதறி வீழ்ந்தன. அருகே நின்றவர்கள் பலர் காயமடைய நேரிட்டது. எனவே, கைப்பற்றிய பாதுகாப்பான பகுதியினுள் அணிகள் விடப்பட்டன. சந்தியில் நாம் நின்ற அதேநேரம் கச்சாய் வீதி, கனகம்புளியடி வீதி, டச்சு வீதி என முக்கிய வீதிகளுக்கு மறிப்பு அணிகள் அனுப்பப்பட்டன. இப்போது படையினர் எங்கே நிலைகொண்டுள்ளார்கள் என்ற முழுமையான தகவல் எம்மிடம் இல்லை. அதே போல் நாம் எங்கு நிற்கின்றோம் என்பதுபற்றியும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இதனால்தான் கண்மூடித்தனமான இந்த எறிகணைத் தாக்குதல். இது முடிய கிட்டத்தட்ட 2 மணித்தியாலங்கள் ஆகின. நாங்கள் மீண்டும் நகரமுற்பட்டோம்.

இதுவரைநேரமும் வதனியின் அணியே தாக்குதல்களைச் செய்தபடி முன்னே நகர்ந்தமையால் இப்போது அவர்களை நிறுத்திவிட்டு மேஜர் கயல்விழியின் அணி நகர்த்தப்பட்டது. அவர்கள் நெடுஞ்சாலைவழியே கொடிகாமத்தைநோக்கி முன்னேறத்தொடங்கினர். இராணுவத்தின் நிலைமை எவ்வாறு இருக்கின்றது, எங்கெங்கே இருப்பிடம் என்பவற்றை அறிவதே நகர்வின் நோக்கமாக இருந்தது. இதுவரை அணிகளை நகர்த்திய லெப்.கேணல்



படிப்பகம்

padippakam



தமிழ்செல்வி முக்கிய வீதிகளில் தாக்குதலுக்கேற்றவாறாக அணிகளைத் தயார்ப்படுத்திவிட்டு நிலைமையை நிஸ்மி யாவுக்கு அறிவித்துக்கொண்டிருந்தார்.

அப்போது நேரம் இரவு 8.00 மணி. தமிழ்செல்வியின் அணி நெடுஞ்சாலையை அண்டியதாக கொடிகாமத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. இருபுறத்தும் உயரமான மதில் வீடுகள் என்பதுடன், வாசற்கதவுகள் யாவும் பெரிய பூட்டுக்களால் பூட்டப்பட்டிருந்தன. குடாநாட்டு மக்களது கட்டுப்பாட்டு வாழ்க்கையை சாவகச்சேரி மதில்களும் வாசற் கதவுப் பூட்டுகளும் வெளிப்படுத்திக்கொண்டிருந் தன. நெடுஞ்சாலையில் இருந்து விலகி சிறு வீதி ஒன்றி னூடாக நகர்கையில் முன்னே ஒரு கல்வீடு. அதற்கு வலதுபுறமாக உயர்ந்த மாமரம். மெல்ல அந்த மாமரத் தோரமாகச் செல்ல முற்பட, திடீரென உயரமான ஓர் இடத்திலிருந்து எம்மைநோக்கிச் சூடுகள் வரத்தொடங்கின. அது ஒரு மாடி வீடு. திரும்பத் தாக்குவது சிரமம். எனினும் துப்பாக்கியால் சுட்டபடி சடாரெனப் பக்கத்தேயிருந்த வேலி தாண்டி, அடுத்த மதிலுக்கு மேலால் ஏறி விழுந்த னர். அதற்கு அப்பால் பெரிய மதில். சென்ற பாதை வேறு. இப்போது நிற்கும் இடம் வேறு. அந்தக் கரும் இருளில் எதுவுமே தெரியவில்லை. நிலைமையை தமிழ் செல்விக்குத் தெரியப்படுத்திய கயல்விழி, ஒருவாறு பின்ன ணித் தொடர்புடன் வந்து சேர்ந்தார்.

இப்போது இராணுவம் நிற்கும் இடத்தை ஓரளவு கணிப்பிடக்கூடியதாக இருந்ததால், அதனைவைத்தே ஒரு மறிப்பு வரிசையைப் போட்டுவிட்டுக் காத்திருந்தோம். 1996 சித்திரையில் சூரியகதிர்-2 நடவடிக்கையின்போது எதிர்பாராத விதமாகப் படைத்தரப்பு எவ்வாறு சாவகச்சேரி யில் கால் வைத்ததோ அதேபோல் எமதணியும் சொல் லாமல் கொள்ளாமல் அங்கு புகுந்து பரவத்தொடங்கி யது. நாம் தற்போது எங்கே நிற்கின்றோம் என்பதுபற்றி எதுவும் தெரியாமல் இராணுவம் குழம்பிக்கொண்டிருந்தது.



படிப்பகம்

padippakam



கொடிகாமப் பக்கமிருந்து 'பீல்ட் பைக்' எனப்படுகின்ற இரு உந்துருளிகளில் இரண்டிரண்டாக நான்கு பேர் படு வேகமாக வந்துகொண்டிருந்தனர். இவர்கள் காவலுலா அணியினராக இருக்கவேண்டும். வந்த வேகத்தில் காவற் கடமையில் நிற்கும் எமது போராளிகளை அண்மித்துவிட் டனர். உடனேயே எம்மவர்கள் சுடத் தொடங்கியபோது தான் நிலைமையைப் புரிந்துகொண்ட அவர்கள் படு வேகமாக உந்துருளியைத் திருப்பிக்கொண்டு ஓட வெளிக் கிட, இருவர் காயமுற்று அருகிருந்த ஓடைக்குள் உந் துருளியோடு வீழ்ந்துவிட, மற்றையது தப்பினேன் பிழைத் தேன் என்று ஓடிச் சேர்ந்தது. இதனைத் தொடர்ந்து அப் பகுதி எறிகணைத் தாக்குதலில் குளிக்கத் தொடங்கியது. இரண்டு மணியளவில் தொடங்கிய இந்தத் திருவிழா முடிய கிட்டத்தட்ட மூன்றரையாகியது.

அதற்கிடையில் சிலர் காயமடையத்தொடங்கினர். கட்டிடப் பகுதிக்குள் பாதுகாப்புத் தேடுவது எல்லோருக் குமே புது அனுபவம். எனினும் அணித்தலைவர்கள் உட னடியாகவே தத்தமது அணிகளைப் பாதுகாப்பாக விட, காயமடைந்தோருடன் மருத்துவப் போராளிகள் போராட வேண்டியிருந்தது. உடனடியாக ஊர்திகள் அங்கே வர முடியாது. காயமடைந்தோருக்கு முதலுதவியைமட்டும் வழங்கி நீண்ட நேரம் வைத்திருக்கவும் முடியாது. இரண் டுக்கும் இடையில் கடும் போராட்டம் நடத்தி அவர்களை ஓரளவு காப்பாற்றி வைத்திருந்தார் நல்லரசி. எறிகணை மழை ஓயமுதலே, ஒருவாறு சுழித்துக்கொண்டு வந்து சேர்ந்தது மருத்துவ ஊர்தி. உடனேயே ஏற்றி அனுப்பப் பட்டதால் அந்த அருமருந்தான உயிர்கள் காப்பாற்றப்பட்டு இழப்பு தவிர்க்கப்பட்டது.

இதற்கிடையில் கனகம்புளியடி, மட்டுவில், வண்ணாத் திப்பாலம், கச்சாய் என பலமுனைகளில் வெவ்வேறு அணிகள் நிலைகொள்ளத்தொடங்கின. எனவே தமிழ் செல்வியின் அணியும் தொடர்ந்து முன்னேறுவதை



படிப்பகம்

padippakam



நிறுத்தி, அவ்விடத்திலேயே நிலையமைக்கும் பணியில் ஈடுபட்டது. சாவகச்சேரி நகரப் பகுதிக்குச் சற்று முன்னதாக நெடுஞ்சாலையின் இடதுபுறமாக வளைந்தும் நெளிந்தும் சூழலுக்கு ஏற்றபடி நீளத் தொடங்கிய தற்காலிக முன்னரங்கநிலையின் ஆள்கூறுகள் கணிக்கப்பட்டு உடனடியாகவே கட்டளை மையத்துக்கு அனுப்பப்பட்டது. இதற்கு முன் தச்சன்தோப்பிலும், தனங்கிளப்பிலும் காத்திருந்த அணிகள் படிப்படியாக நகர்த்தப்பட்டு கச்சாய் பகுதியில் தற்காலிகமாக நின்று தாக்குதலை நடத்தக்கூடிய வகையில் நிலைகள் அமைக்க ஆயத்தமானதுடன் இராணுவம் பற்றிய தகவல் அறியும் வேவுப் படலமும் ஆரம்பமானது.

கச்சாய்ப் பகுதியை வேவு பார்க்க ஐந்து பேர் கொண்ட அணி குயிலுடன் தயாரானது. அப்பகுதியின் பொறுப்பாளரான மிதுலா அவர்களை அனுப்பினார். வேவு அணி மிக மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. குறைந்த பரப்பளவுள்ள காணிகள் அவை. மிக நெருக்கமான கல்வீடுகள். மதிலாகவோ அன்றி, முட்கிழுவைக் கதிகாலாகவோ இருந்த இறுக்கமான வேலிகள். தொட்டு சைகை கொடுக்கும் அளவுக்குக் கிட்ட நகர்ந்து முட்கிழுவை வேலியை அண்மித்தனர். யாரின் நல்லகாலமோ முன் மதிலுக்கும், வேலிக்குமிடையே சிறு இடைவெளி. அப்பாலே கால் வைத்துப் போக, வலதுபுறம் ஐந்தாறு பனைகள். கீழே கால் வைத்தால் ஓலைகளின் சரசரப்புச் சத்தத்திலேயே படையினர் விழித்துக்கொள்வார்கள். எனவே இடதுபுறமாக நகர முற்பட்டனர். முன்னே சிறிய தூரத்தில் நெடிய ஒரு பனை. பனைக்கு அப்பால் ஒரு கல்வீடு. கடும் இருட்டு. ஆளையாள் பார்க்கமுடியாத நிலையில் சில இடங்களில் தெரியும் வானப் பின்னணிதான் சற்றேனும் உயரமான பொருட்களைப் பார்க்க உதவியது. இப்போது குயில் பனைமரத்தடியைநோக்கி RPD LMG யை நகருமாறு கட்டளையிட்டார். ஏனைய மூவரும் வேலியோரமாக வீட்டைநோக்கி ஊர்ந்தனர். ஏற்கனவே இந்தப் பணிக்காக



படிப்பகம்

வந்த இராணுவமும் வீட்டருகே நிலையெடுத்திருந்தது. அங்கே மிக அண்மையில் ஒரு திடீர் மோதல். முதலில் சுடத்தொடங்கியது படையினர். பதில் தாக்குதலை நடத்தியபடி பின்னே வந்தது அணி. எனினும் கனரக ஆயுதப் போராளிகளான 2 ஆம் லெப். தமிழரசி, வீரவேங்கை அகமகள், வீரவேங்கை ஈழமகள் ஆகியோர் அவ்விடத்தில் வீரச்சாவடைய நேரிட்டது. அத்துடன் அப்பகுதியின் தற்காலிக நிலை பலப்படுத்தப்பட்டு வேவுப் பணி முடுக்கி விடப்பட்டது.

இவ்வாறு அனைத்துப் பகுதிகளிலும் நிலைகள் புதுப்பிக்கப்பட்டதுடன், வேவு அணி ஒன்று தயார்படுத்தப்பட்டு ஒவ்வொரு முனையாலும் நகர்த்தப்பட்டுக்கொண்டிருந்தது. கச்சாய் கடற்கரையில் உள்ள கிறீஸ்தவ ஆலயம் தொடக்கம் இடதுபுறமாக நெடுஞ்சாலையைக் கடந்து சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரிக்குச் சற்று முன்னாக நீண்டு மட்டுவில் ஈறாக வண்ணாத்திப் பாலம், கோப்பாய் வீதி என ஒவ்வொரு பகுதிகளையும் ஊடறுத்து எழுந்தன முன்னரங்கக் காப்புநிலைகள். கச்சாய் தொடக்கம் சாவகச்சேரி நகரப்பகுதி கடந்து குறிப்பிட்ட தூரம்வரை தமிழ்செல்வியின் அணி தக்கவைத்திருந்தது.

இப்போது எமது முன்னேறும் பணி நிறுத்தப்பட்டு, தாக்குதல் வேறு களமுனையில் அரங்கேறக் காத்திருந்தது. இதனால் படையினரைத் தொல்லைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. அதே நேரம் அவர்களின் இத்தகைய தாக்குதல்களும் முனைப்புப் பெற்றன. பழக்கமான சூழல், கட்டிடப் பகுதி வாழ்வு அனுபவம் என்பன படையினருக்கு வாய்ப்பாக இருந்தபோதிலும், ஒவ்வொரு நடவடிக்கைகள் தொடங்குகின்றபோதும், அவற்றை நாம் முறியடித்துக்கொண்டு வர, அவற்றினால் ஏற்படும் எதிர் விளைவு கட்டுப்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தது.

2ம்லெப். மாலதி படையணி

முன்னரங்க நிலையில் படையினருக்கும் எமக்குமான இடைவெளி ஆகக் கூடியது 75 மீற்றர்களாகவும் ஆகக் குறைந்தது 35 மீற்றர்களாகவும் இருந்ததால், பதுங்கிச் சுடும் பணி இரு தரப்புக்கும் இலகுவாக இருந்தது. அந்தக் காலத்தில் சாவகச்சேரி என்றாலே பதுங்கிச் சூடுதான் நினைவில் வந்து, முதுகினை உரசிப் போவதுபோல் இருக்கும். அந்தளவுக்குப் புகழ்பெற்ற பதுங்கிச் சூடு பதி லுக்குப் பதில் என்பதாக இருந்தது. தலைவர் அவர்கள் எமக்கு அடிக்கடி குறிப்பிடும்,

"முந்துபவன் வெல்வான்"

என்பது மிக முக்கியமாக எம்மால் கடைப்பிடிக்கப்பட் டுக் கொண்டிருந்தது.

முன்பு ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு நகர்வதற்கு வீடுகள், மதில்கள், கிணற்றுக் கட்டுகள், அடர்ந்த கிழுவைக் கதிகால்கள் என ஒவ்வொரு மறைப் பையும் நாடவேண்டியிருந்தது. இந்த நீண்ட தூர நகர்வு படையினரை விழிப்படையச் செய்யவே, எம்மைப் பாது காக்க வேகமாக மறைப்பு வேலிகள் எழுந்தன. கிடுகு, படங்கு, தகரம் என முன்னே வேலி உயர்ந்தது. படையின ரின் பகுதியிலும்கூடத்தான்.

இப்போது எறிகணைத் தாக்குதல் பல்குழல் பீரங்கித் தாக்குதலாக மாறியிருந்தது. 12, 24 என சுடுகுழல்களை அதிகரித்து ஒரேயடியாக எங்களை அழிக்க முனைந்தது சிங்களப் படைத்தலைமை. பாவம் அவர்கள். சிறிது நாட்களுக்கெல்லாம் படையினரின் பல்குழல் பீரங்கியின் அதிக பாதிப்பற்ற சத்தம் எங்களுக்குப் பழக்கப்பட்டு போகவே, களம் களை கட்டியது. அரியாலை முன்னரங்கு தொட்டு சாவகச்சேரி நகரப் பகுதிவரை நெடுஞ்சாலை கலகலப்பாகவே இருந்தது. ஈருருளி, உந்துருளி மற்றும்

padippakam



ஊர்திகள் என அனைத்தும் உள்ளே வந்துசேர்ந்துவிட போக்குவரத்துகளும் இலகுவாகின.

இப்போதெல்லாம் சாவகச்சேரி நகரப் பகுதியினுள் இருந்த கட்டிடங்களுள் இராணுவத்தின் தாக்குதலில் சேத மடையாதது என்று எதனையுமே காணமுடியவில்லை. எமக்கும் இராணுவத்துக்குமிடையிலான தாக்குதல் எதுவும் பெரியளவில் இங்கு இடம்பெறவில்லையாதலால் நாம் உள்ளே வந்தபோது, எல்லாக் கடைகளும் தத்தம் முகவரி களுடன் நிமிர்ந்து நின்றன. நகரைத் தாண்டி நாம் அப் பால் நகர்ந்துவிட்டபின் நகரத்தின் மையத்தைச் சிதைப் பதிலேயே படைத்தரப்பு கண்ணும் கருத்துமாக இருந்தது. எம்மக்கள் பாடுபட்டு தேடிச் சேர்த்த சொத்துக்கள் எல்லாம் எறிகணை, உலங்குவானூர்தி, விமானம் ஆகியவற்றின் தாக்குதல்களுக்குட்பட்டுச் சிதறிப்போய்க் கிடந்தன. நகைக் கடை, புடவைக்கடை, காகிதாகிகள் என எல்லாம் வைத் தது வைத்தபடியே இருக்க, அவற்றின் மேலே சிதறி வீழ்ந்திருந்தன கூரைகள்.

இதுவரைகாலமும் மீட்கப்பட்ட இடங்களைப் பலப் படுத்தி தக்கவைப்பதிலே நாட்கள் கடந்திருந்ததால், களம் ஒரு இறுக்கநிலையில் இருந்தது. நாட்கள் கடந்து அதுவே வாழ்வாகிப்போக, கலகலப்பாகியது களம். புறப்படுகின்ற போது,

**“மக்களின் எந்தவொரு பொருட்களிலும் கை வைக் கக்கூடாது”**

என்ற கண்டிப்பான கட்டளை தலைவர் அவர்களால் வழங்கப்பட்டிருந்தது. இதனால் எறிகணை வீச்சில் கூரை நொருங்கி, கதவு பிளந்து, அலுமாரிகளிலிருந்து பிஸ்கற் பெட்டி பெட்டியாகக் கொட்டிக் கிடந்தபோதுங்கூட தொட்டுப் பார்க்காமல் எல்லோரும் சென்று வந்துகொண்டி ருந்தோம். இன்னொரு இடத்தில் போத்தல்கள் உடைந்து



படிப்பகம்

padippakam



வீதியெங்கும் வழிந்திருந்தது சோடா. வீதிகளில் சிதறிக் கிடந்தன இனிப்புக்கள். ஆனாலும் அவற்றை யாரும் தொடுவதில்லை.

சில நாட்களின் பின் அந்தக் கடைகளின் உரிமையா ளர்கள் வந்திருந்தனர். சிங்களப் படைத்தரப்பு வான் தாக்குதல்மூலம் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியிருக்கும் என அவர்கள் எண்ணி வந்ததுபோலவே எல்லாம் சிதைந்துபோய் கிடந்தது. ஏற்கனவே இதை அவர்கள் எதிர்பார்த்திருந்ததனால் துயரத்தினின்றும் தம்மைச் சமா ளித்துக்கொண்டனர். தமது வியாபார நிலையங்களைக் காட்டி அங்குள்ள உணவுப் பொருட்களை எடுத்து பயன் படுத்தும்படி சொன்னதுடன், தாமே கதவுகளைத் திறந்தும் விட்டனர்.

இவ்வாறு கலகலப்பாக இருந்த முன்னணிக் களம் இப்போது புதிய சவாலை எதிர்நோக்கியது. இராணுவம் புகைக்குண்டுகள், எரிகுண்டுகள் என்பவற்றை ஏவி மறைப்புவேலியை எரிக்கத்தொடங்கியது. பகல்வேளை யில் வேலி எரிக்கப்பட்டால் அந்த வழியாலான நகர்வை முழுதாகவே கட்டுப்படுத்தவேண்டியிருக்கும். எனினும் நாம் வேலி அடைத்துக்கொண்டிருக்கும்போது பதுங்கிச் சூடு நடத்தலாம் என்ற படையினரின் எதிர்பார்ப்பு அதிக வெற்றியளிக்கவில்லை. சில இடங்களில் இதே முறையை நாமும் கடைப்பிடிக்கத் தொடங்கியிருந்ததால், நிலைமை வளம் மாறியது. பதுங்கிச் சுடும் சிறப்பு அணிகள் முன் னரங்கு எங்கும் நடமாடத்தொடங்க, எந்நேரமும் நிலைகள் விழிப்பாகவேயிருந்தன.

திடீரென படையினரின் கிடுகு வேலி எரியும். சிறிது நேரத்துக்கு அமைதியாக இருந்துவிட்டு இராணுவம் மெல்ல வேலியடைக்கத்தொடங்க,

சர்... "இந்தா ஒண்டு." இன்னொரு இடத்தில், "இந்தா ஓலையோட நிமிருறான்". டும்.... அடுத்தது.



படிப்பகம்

padippakam



இப்படி வேலியெரிந்தாலே வியர்த்துக்கொட்டும் படைத் தரப்புக்கு. எமது வேலியும் எரியும். இரவோடிரவாக எங்கெல்லாமோ படங்கு, கிடுகுகள் தேடி அடைத்து எதுவும் நிகழாததுபோல் ஆக்கிவிடுவோம். இழப்புக்கள் இரு பகுதிக்கும் சமநிலைப்படுத்தப்பட்டபோதுதான் எத்தகைய தாக்குதலையும் கட்டுப்படுத்தமுடிந்தது. இராணுவம் எறிகணைத் தாக்குதல் செய்தபோது நாமும் செய்தோம். பதுங்கிச் சூடுகளுக்கு பதில் கொடுத்தோம். வேலியெரிப்பு-திரும்ப எரித்தோம். இப்படி இராணுவம் எமக்கு எதைச் செய்யமுனைந்ததோ, அதனையே அவர்களுக்கும் திருப்பிச் செய்தபோதுதான் அதன் விளைவை அவர்களால் புரிந்துகொள்ள முடிந்தது.

இப்போது ஒரு பேருண்மை புரிந்ததுபோல் இருந்தது. 1958 இல் அடித்துத் துரத்தப்பட்டோம். 1977 இல் மீண்டும் துரத்தப்பட்டோம். 1983 இல் எல்லாவற்றையும் இழந்து துரத்தப்பட்டோம். நாம் உறவுகளை, சொத்துக்களை, எல்லாவற்றையும் இழந்தபோது இழப்புக்கள் எப்படி இருக்குமென்பது சிங்கள அரசுக்குத் தெரிந்திருக்கவில்லை.

வரலாறு தன்னைப் புதுப்பித்துக்கொள்ள பூநகரியில், முல்லைத்தீவில், கிளிநொச்சியில் என ஆயிரக்கணக்கில் அவர்களுக்கு நாம் இழப்புக்களை ஏற்படுத்தியபோதுதான் தாம் செய்த கொடுமையை அவர்களால் உணர முடிந்தது. ஒரு கன்னத்தில் அறைந்து அதன் விளைவாக மறுகன்னத்தில் வாங்குவதைவிட, தாம் அறையாமலே இருக்கலாம் என்ற உண்மை சிங்களத்துக்குப் புரிந்திருக்கும். அடிப்பவர்களுக்குத் திரும்ப அடிக்கத்தான்வேண்டும் என்பது தமிழர்களுக்கும் புரிந்தது.

சிறிது காலத்தின்பின் சாவகச்சேரிப் பகுதிக்கு கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்த கேணல் தீபன் பளைப் பகுதிக்கு மாற்றப்பட, சாவகச்சேரிப் பகுதியை கேணல்



படிப்பகம்

சொர்ணம் பொறுப்பெடுத்துக் கொண்டார். தொடர்ந்து இதுவரைநாளும் களமுனைக்குச் சற்றுப் பின்னே கட்டுடப் பகுதி வேவுபற்றிய பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த வேவு அணிகள், தமது பயிற்சியை முடித்து முன்னரங்குக்கு வந்தன. படையினரதும் எம்மவரினதும் முன்னணி நிலைகளுக்கிடையிலான சூனியப் பகுதியிலே இவர்களது பாதங்கள் பதியத் தொடங்கின.

அதேநேரம் கூடவே துயரமான நினைவுப் பதிவுகளைத் தன்னுள் தாங்கியவாறு ஜூலை மாதம் வந்தது. சிங்கள அரசை விழி பிதுங்கவைக்கும் கரும்புலிகள் நாளுக்கு இன்னும் இரண்டொரு பகல்கள் இருந்தன. நாட்கள் நகர்ந்தன என்பதைவிட பறந்தன எனச் சொல்லாம். அவ்வளவு வேகம். தொடர்ச்சியான வேலை நாட்களை விழுங்கிக் கொண்டிருக்க, நான்காம் திகதி மாலையாகி மெல்ல இருள் கவிகிறது. மாலதி படையணியின் துணைத் தளபதியாக நின்று கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்த லெப்.கேணல் நிஸ்மியா டச்சு வீதியிலுள்ள தனது கட்டளை மையத்தில் நின்றுகொண்டிருந்தார். கூடவே காவியா உட்பட இன்னும் பல போராளிகள். சற்று முன்னர்தான் களமுனை அணியுடன் கதைத்துவிட்டு தளம் வந்திருந்தார். அங்கு எதிர்பாராத விதமாக படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவடைய நேரிட்டது.

அது அவருக்காகவென்றே வந்த எறிகணையாகத்தான் இருக்கவேண்டும். இல்லையென்றால் எப்படி கட்டளை மையப் பதுங்ககழியினுள் நின்றவரின் உயிர்த்துடிப்பை, சுவரில் மோதி வெடித்த எறிகணையின் துண்டொன்று நிறுத்தியிருக்கமுடியும். இப்போதும்கூட ஏற்றுக்கொள்ளக் கடினமாகத்தான் இருக்கிறது. அமைதியான, உறுதியான, அப்பழுக்கில்லாத அந்த வீரமகளின் வித்துடலைக் கண்ட போதும்கூட நம்ப முடியவில்லை. ஏனெனில் அப்போதும் அமைதியாகத் துயின்றதுபோலத்தான் இருந்தது அவரது முகம்.

padippakam



தனது ஆரம்பப் பயிற்சியை முடித்துக்கொண்டபின் உடனேயே புலனாய்வுத்துறையில் இணைக்கப்பட்டார். அங்கு குறிப்பிட்ட காலம்வரை பணியாற்றினார். அதே வேளை மகளிர் படையணியிலுள்ள மிகத் திறமையானவர்களைத் தேர்ந்தெடுத்து சிறப்பு அணி ஒன்று உருவாக்கப்பட்டது. அவ்வாறு திறமையடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களில் நிஸ்மியாவும் ஒருவர். இயல்பாகவே கடின பயிற்சியையும் இலகுவாகச் செய்யக்கூடிய தகைமை அவரிடமிருந்தது. இதன்மூலம் சிறப்பு அணியில் இடம்பிடித்து தனது தாக்குதல், பயிற்சித் திறமைகளை வளர்த்துக்கொண்டார்.

தொடர்ந்து மணலாற்றில் காட்டுச் சமருக்கேற்ற வகையில் மகளிர் அணி ஒன்று தயார்ப்படுத்தப்பட்டபோது பயிற்சியாசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு இவரும் அனுப்பப்பட்டார்.

பின்னர் 1993 இன் நடுப்பகுதியில் கல்விக் குழுவில் இணைக்கப்பட்டார். இங்கும் அவருக்குக் கற்பித்தற் பணி காத்திருந்தது. இத்தோடு நின்றுவிடாது, அவ்வப்போது நடைபெறுகின்ற தாக்குதல்களிலும் கலந்துகொண்டதன் மூலம் தனது திறமையை மெருகூட்டிக்கொண்டார். ஆனாலும் நிரந்தர களமுனை வாழ்க்கையே எப்போதும் அவரது விருப்புக்குரிய ஒன்றாக இருந்தது.

சூரியக்கதிர்-1 எதிர்நடவடிக்கைக்காக இவர் தாக்குதலணியோடு இணைக்கப்பட்டார். அந்தச் சண்டையில் சிறந்த முறையில் பங்காற்றியிருந்தார். சண்டை முடிந்துங்கூட அரசியற் பிரிவுக்குப் போகும் விருப்பம் இல்லாதிருந்தார். அதன்பின்னும் ஒரு தாக்குதலுக்கான பயிற்சி நடவடிக்கையில் கலந்துகொண்டவர் 1996 இல் அரசியல்துறை மகளிர் பிரிவின் பொறுப்பாளராகப் பொறுப்பேற்றார்.

அரசியற் பணி புரிந்தபோதிலும் சண்டைத் திறமை எப்போதும் இவருடன் கூடவே இருந்தது. இடையிடையே



படிப்பகம்

தாக்குதல்களுக்கு வந்துபோன வேளைகளில்கூட கொம் பனிக் கட்டளை அதிகாரியாகவே செயற்படுமளவுக்கு போர் அனுபவம் இவருக்கு இருந்தது.

களமுனையை வழிநடத்திக்கொண்டிருந்த நிஸ்மியா தன் பணியை முடித்துக்கொண்டு வித்துடலாக கிளாலி நீரேரியைக் கடந்துகொண்டிருந்தார்.

அந்த மண் கும்பிகளின்மேல் ஏறி நின்றால் கடல் அழகாகத் தெரியும். அலைகள் அடிக்கும் ஓசை எப்போதுமே காதில் வந்து விழுவது மனதுக்கு இனிமையாகவே இருக்கும். நடந்தால் கால்கள் மணலுக் குள் புதைந்துகொள்ளும். பாதணிகள் மணலை தலைக்கு மேல் பறக்க வைக்கும். நாகர் கோவில் பகுதி இயற்கை அழகு நிறைந்தது. படையினரின் தளமாக அது மாறிய நாளிலிருந்து அந்த இயற்கை எவராலும் ரசிக்கப்பட முடியாததாயிருந்தது.

யாழ் மாவட்டத்துள் நின்ற சிறீலங்காப் படைகளுக்கு பல முனைகளில் நாம் நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டிருந்தோம். அவர்களுடைய படைத்தளங்கள் அனைத்துமே இப்போது எமது ஏறிகணை செலுத்திகள் எட்டக்கூடிய தூரவீச்சு எல்லைக்குள் வந்துவிட்டிருந்தன. இது உண்மையில் படைத்தரப்பின் இருப்புக்குப் பெரும் சவாலாகவே இருந்தது. எங்களை எந்த முனையிலாவது பின்தள்ளிவிட அவர்கள் எல்லா முனைகளிலும் ஒரே நேரத்திலும், வெவ்வேறு நேரத்திலும் முயற்சிகளைச் செய்துகொண்டேயிருந்தனர். அவற்றை இழப்புக்களுட னும், இழப்புகளின்றியும் நாம் முறியடித்துக்கொண்டிருந் தோம்.

பளை தொடங்கி நாகர்கோவில் கடற்கரைவரையி லான நீண்ட பகுதியில் முன்னரங்க நிலைகளமைத்துக்

padippakam



காத்திருந்தோம். அப்போதும் தொடராக வேலைகள் காத் திருந்தன. ஓலை வெட்ட, கம்பு எடுக்க, வேலி அடைக்க என்று எத்தனையோ வேலைகள்.

2000.07.04 அன்று அதிகாலை வழமைபோலவே கலைக்குயிலின் பிளாட்டுன் ஆயத்தநிலையில் நின்றது. அருகிலேயே கீர்த்தியின் பிளாட்டுன். தனது காவல் உலா நேரம் முடிந்து, அப்போதுதான் PK LMGயின் பொறுப்பாள ரான கப்டன் அரசியை மாற்றிவிட்ட கீர்த்தி அவரை ஒருமுறை சுற்றிப் பார்த்து வரும்படி விட்டிருந்தார்.

அரசி இரண்டு காவல் நிலைகளைக் கடந்திருப்பார். வேட்டொலிகள் கேட்டன. அப்பொழுது நேரம் விடிகாலை 5 மணியைத் தாண்டி இருந்தது.

எமது காவலரண்களுக்கு முன் பின் பகுதி பெரும் வெளி வலதுபக்கம் வெளி கடந்த பின் 200மீ. அகலம் கொண்ட ஒரு தோப்பு, அதையடுத்து மணற் புட்டிகளும் பள்ளமும் மாறி மாறி வரும். அதற்கப்பால் கடற்கரையோர வீதி, கடற்கரை, பின் கடல். இடது பக்கம் மாமுனை-குடாரப்பு-நாகர்கோயில் ஊடாக பருத்தித்துறை போகும் பழைய தார் வீதி. அதையடுத்து ஓர் ஓடையாக மறைப்பு களற்ற வெளி. அதற்கடுத்து, தொண்டைமானாற்றிலிருந்து புறப்படும் நீரேரி நீர் வற்றிச் சதுப்பு நிலமாக கண்டல் செடிகளுடன் காட்சி தரும்.. படையினரின் முன்னரங்கப் பகுதி மேட்டு நிலத்தில் இருந்தது. எமது நிலைகள் பள்ளப் பகுதியில் இருந்தன.

நாங்கள் பள்ளத்திலிருந்து சின்ன அசைவைக் காட்டி னாலும் அந்த இடத்துக்கு அந்தக் கணமே வந்து சேரும் படையினரின் பதுங்கிச் சூட்டாளனின் சுடுகலனிலிருந்து புறப்படும் ரவை. உலர்ந்த நீரேரிக்குள் நாம் நிலைகளை அமைத்திருக்கவும் இல்லை. அது சாத்தியமுமில்லை.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

இப்போது நேரம் 5.30. பின் பகுதியிலிருந்து கடும் சூட்டுச் சத்தங்கள் கேட்கத்தொடங்கின. முன்னரங்க நிலைகளில் நின்றவர்களுக்குக் கேள்வி எழுந்தது.

யார் பின் பகுதியில் நின்று இப்படிச் சுடுவது? சத்தம் கேட்ட திசையைப் பார்த்தால், பருத்தித்துறை-நாகர் கோயில் வீதியில் எமக்குப் பின் புறமாகவுள்ள கோயிலடி போல உள்ளது. அங்கே காலை 7.00 மணிக்குத்தான் எல்லைப் படையினர் வந்து நிற்பார்கள். 5.30 க்கு யார் வந்து நின்று சுடுவது?

ஒருவேளை உலர்ந்த நீரேரிவழியே படையினர் நகர்வை மேற்கொண்டு வீதியிலேறிவிட்டார்களா? இன்றைக்கென்று பார்த்து எல்லைப் படையினர் நேரத்துக்கே கோயிலடிக்கு வந்து, யாரையாவது கண்டுவிட்டுச் சுடுகிறார்களோ? அல்லது படையினர்தான் வீதியிலேறி...

எல்லாக் கேள்விகளும் ஓரிரு நிமிடங்களுக்குத்தான். நக்கீரா நின்ற காப்பரண் முன்புறமாகத் தாக்கப்பட்டது. அருகிருந்த RPG நிலைக்கும் அடி கிடைத்தது.

மிகையான சூட்டு வலுவுடன் பெரும் எண்ணிக்கையில் உட்புகுந்த படையினர் எமது முன்னரங்கிலிருந்து சற்றுப் பின்னே அமைந்திருந்த கொம்பனிக் கட்டளையதிகாரியான செல்வியின் கட்டளைப் பணியகத்திலிருந்து வலது பக்கவாட்டாக விலகி, இடையில் நின்ற எமது 60மி.மீ. எறிகணை ஏவு அணியுடன் மோதியவாறு பின்னே போய் விட்டனர்.

ஆனால் அதிகாலை 5.30க்கு எமது பின் பகுதியில் சுட்டது யார்? புரியவில்லை. சிலவேளை, உலர்ந்த நீரேரிவழியே படையினர் ஏற்கனவே எமது பின்பகுதிக்கு ஓசையெழுப்பாமல் நகர்ந்துவந்து நிற்கின்றார்களா?

padippakam



முன்னரங்கில் நின்ற கலைக்குயில் நேரடியாகவும் தொலைத்தொடர்புக் கருவியாலும் கட்டளைகளைப் பிறப்பித்தபடி தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தார்.

“ஆமி உள்ளுக்கு வந்திட்டான் விடாதை அடி, விடாதை அடி”

“இடத்தை விடக்கூடாது தொடர்ச்சியா அடி, அடிச்சுக் கொண்டிரு”

அந்தப் பகுதியெங்கும் கப்டன் கலைக்குயிலின் கட்டளைகள் ஒலித்தன.

புவியியல் அமைப்பின்படி நாகர்கோயில் அமைவிடம் முறியடிப்புச் சண்டைக்கோ, முன்னகர்வுச் சண்டைக்கோ பொருத்தமான இடமல்ல. ஆனால் யாழ்ப்பாணம்நோக்கிய நகர்வுக்கு நாகர்கோயில் எமது கையிலிருப்பது தேவையாக இருந்ததால், நாங்கள் அங்கே நின்றோம்.

காப்பு மறைப்புகளற்ற அந்தக் கடற்கரைக் கிராமத்தில் சண்டையொன்று நடக்குமானால் ஆயுத பலம் மேலோங்கி நிற்கும் தரப்பு வெல்லும். அன்றும் அதுதான் நடந்தது.

லெப். வெண்ணிலாவின் 60மி.மீ. எறிகணை ஏவு அணியினர் தமது நிலைக்கு படையினர் வருவதைக் கண்டு எறிகணைகளை வீசினார்கள். படையினரோ கணக்கின்றி வந்துகொண்டிருந்தனர். சூட்டுவலு மிக அதிகமாக இருந்தது. செலுத்தியையும் எறிகணைகளையும் தூக்கிக்கொண்டு செல்வியின் கட்டளைநிலைக்கு நகர்வதைத்தவிர எம்மவர்களுக்கு வேறு வழியிருக்கவில்லை. வரும்வழியிலேயே படையினரின் சூடுகளைப் பரவலாக எதிர்கொள்ளுமளவுக்கு வெளியான பகுதி அது. வீழ்ந்தவர்கள் போக, எஞ்சியவர்கள் கட்டளை நிலையை வந்தடைந்தனர்.



படிப்பகம்

padippakam



தமக்கு வலதுபக்கமாக வந்த படையினரைநோக்கி முற்றுகைக்குள்ளிருந்த மேஜர் பிரியங்காவின் .50 கலிபர் இயங்கிக்கொண்டே இருந்தது. அதன் சுடுநரான லெப். சிவநங்கை நகரும் படையினரைப் பார்த்துப் பார்த்து சுட்டுக்கொண்டிருந்தார்.

மருதா ரவைகளைக் கோர்த்துக் கொடுத்துக்கொண்டிருந்தார். செந்தாழினி .50 கலிபரின் முக்காலியைச் சீர் செய்துகொண்டிருந்தார். சூட்டுத் தூர வீச்செல்லைக்குள் வந்த படையினரைச் சுட்டார்கள். இப்போது அவர்களுக்கு ரவை குறைந்துகொண்டுவந்தது. முடியும் தறுவாய்.

முற்றுகைக்கு வெளியே அரசியின் PK LMG நிலைகொண்டிருந்த இடம் ஒரு மணல்மேடு. அதில் நின்று சுற்றிப் பார்த்தால், அப்பகுதி முழுவதும் என்ன நடக்கிறது என்பது தெரியும். இந்த வாய்ப்பை விடுவார்களா? கீர்த்தியோடு அவ்விடத்துக்கு வந்தவர்கள், படையினரின் நகர்வைப் பார்த்துப் பார்த்துச் சுட்டார்கள். உள்ளிருந்தவர்கள் தொடர்புகொண்டபோது நிலைமையை விளங்கிக் கொண்டு, நேரடியாகவே பார்த்துச் சுட்டார்கள்.

முன்னரங்கிலேயே தொடர்ந்தும் நின்ற கலைக்குயில் பம்பரமாகச் சுழன்றுகொண்டிருந்தார். சுடுவதற்குப் பொருத்தமான காப்பரண்களில் தொடர்ந்து நின்று சுடுமாறு கட்டளையிட்டும், படையினரின் தாக்குதலில் இழப்பைச் சந்திக்கக்கூடிய இடங்களில் நின்றோரை இடம் மாற்றி விட்டும், காயமடைந்திருந்த போராளிகளை செல்வியின் கட்டளை நிலையத்துக்குப் போகும்படி பணித்தும்

'குருதி ஆறாய் ஓடினும், உறுதி தளரோம்'

என்று தன் குறிப்பேட்டில் எழுதிவைத்த கலைக்குயில் ஓயவில்லை.



படிப்பகம்

padippakam



முற்றுகைக்குள் நின்ற சுடரின் PK LMG நிலையை நோக்கி படையினர் பாய்ந்தனர். சுடுநர் சுமித்திரா சும்மா நிற்கவில்லை. தன்னிடமிருந்த 1000 ரவைகளும் முடியும் வரை சுட்டுக்கொண்டிருந்தார். ரவை குறைய PK LMG யை செல்வியின் கட்டளை நிலையத்துக்கு நகர்த்தினார்கள்.

நீரேரிக் கரையோடிருந்த கடைசிக் காப்பரண் இப்போது இடதுபுறமாகத் தாக்குதலைச் சந்தித்தது. அந்தக் காப்பரணில் நின்ற இந்திரா நிலைமையைக் கலைக்குயிலுக்குத் தெரியப்படுத்தினார்.

காலையில் பின்புறம் கேட்ட வேட்டொலிகள், முன்புற நிலையை ஊடறுத்துப்போனவர்கள் வராமல் பின்னாலேயே நிற்பது, இடதுபுறத் தாக்குதல் எல்லாமும் சேர்ந்து தாம் இப்போது ஒரு முற்றுகைக்குள் நிற்பதைக் கலைக்குயிலுக்கு உணர்த்தின. செல்விக்கும் நிலைமை விளங்கியது.

தலைவெடி, வயிற்றுவெடி, நெஞ்சுவெடி என அடுத்தடுத்து வந்தவர்களால் கட்டளை நிலையத்தில் காயக்காரர்களின் தொகை கூடிக்கொண்டே வந்தது.

முற்றுகைக்குள் அகப்பட்டுக்கொண்ட பிரியங்கா தனது .50 கலிபரில் ரவை முடிந்த அடுத்த கணமே அதைக் கொண்டு பின் பகுதிக்குப் போகும்படி மருதாவைப் பணித்தார். அவருடன் யாழிசை, கப்டன் பிரியந்தினி, கவிப்பிரியா, அகநிலா, 2 ஆம் லெப். செந்தாழினி, நிறைவாணி ஆகியோர் பாகம் பாகமாகக் கழற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சுமந்தவாறு 50 கலிபரைக் கொண்டு அந்தப் பகுதியைவிட்டு வெளியேற முயன்ற வேளை பின்னணிப் பகுதியை வழிமறித்தவாறு நிலைகொண்டிருந்த படையினரை எதிர்கொள்ள, அங்கேயும் சண்டை மூண்டது. சண்டையிட்டவாறே இயலுமானவர்கள் தப்பி



படிப்பகம்

padippakam



வெளியேறினார்கள். வீரச்சாவடைந்து வீழ்ந்தவர்கள் போக, ஏனையோர் செல்வியின் இடத்துக்குப்போய் நிலையெடுத்து தம்மை சூழமுயன்ற படையினரைத் தாக்கிக்கொண்டிருந்தனர்.

கலைக்குயிலுக்கு அருகே, முற்றுகைக்கு வெளியே நின்ற கீர்த்தி தன் பிளாட்டூனிடமிருந்த கனரக ஆயுதங்களையெல்லாம் இயன்றவரை முற்றுகைக்கருகே கொண்டு போய், வெளியான பகுதிக்குள் இறக்காமல் மரங்களிருந்த உயர்ந்த பகுதிக்குள் நிலைப்படுத்திப் படையினரைப் பக்கவாட்டாகத் தாக்கிக்கொண்டிருந்தார். அரசியின் PK LMG கீர்த்தியுடனேயே நின்று சுட்டுக்கொண்டிருந்தது.

முற்றுகைக்குள்ளான காப்பரணொன்றிலிருந்த லெப். கீதவாணி கீர்த்தியின் தொடர்பை வைத்துக்கொண்டிருந்தார். கீதவாணி தொடர்ச்சியாக நிலைமை சொல்லியவாறு தாக்குதலை மேற்கொண்டிருந்தார்.

தன்னோடு நின்ற கப்டன் அன்பு வீரச்சாவு, தனக்கு காயம், தான் சுட்டுக்கொண்டேயிருக்கிறேன், படையினர் தனக்கு மிக அருகே வந்துவிட்டனர் என்று சொன்ன கீதவாணியின் தொடர்பு சட்டென இல்லாமல்போனது.

மணற் புட்டியில் நின்ற கீர்த்தியும் கப்டன் அரசியும் மற்றவர்களும் சட்டென எழும்பி நின்று கீதவாணியின் காப்பரண் பகுதியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். ஒரு படைவீரர் அவரைத் தூக்கியவாறு வெளியில் வருவது தெரியவே, 'அடி' என்ற கீர்த்தியின் கட்டளையைத் தொடர்ந்து, அரசியின் PK LMG முழங்கியது. அந்தப் படைவீரர் அப்படியே மண்ணில் சரிய, கூடவே கீதவாணியும்.

கீர்த்தியின் பிளாட்டூனைச் சேர்ந்த இலக்கியாவின் அணி, வெளியைப் பார்த்தவண்ணம் படையினர் நகர்ந்த இடத்தை மேவி வந்து காப்பு நிலையெடுத்து நின்றது.



படிப்பகம்

முற்றுகையின் முதுகுப்புறமாக ஈழமங்கையின் அணி நகர்ந்து, வெளியான பகுதியைத் தவிர்த்து, மறைப்பான பகுதிக்குள்ளிருந்து உள் நுழைவதற்கான முயற்சிகளைச் செய்தவாறு, படையினரைத் தாக்கிக்கொண்டிருந்து.

நேரம் நடுப் பகலைக் கடந்துகொண்டிருந்தது. நாகர் கோயில் பகுதிக்குப் பொறுப்பாக நின்ற கேணல் பால்ராஜ் உதவியணிகளை அனுப்பியிருந்தார். ஆனால் வெளியான இடைப் பகுதியைக் கடந்து படையினரை நெருங்குவது தற்கொலைக்குச் சமமானதாகவே இருந்தது.

பாரிய இழப்புக்களுடன் எமது காப்பரண்களை மீட்டெடுத்தபோது அன்று மாலையாகிவிட்டிருந்தது.

நாகர் கோயில் பகுதியில் நிலைகொண்டிருந்த காலமெல்லாம் எங்களுக்கு துயரமான நாட்களாகவே கழிந்தன. மறைப்பு வேலிகளை எரிகுண்டடித்து அடிக்கடி படையினர் எரிப்பார்கள். தொடராகப் புகைக்குண்டுகளை அடிப்பார்கள். வேலியால் சிறிதாக எட்டிப் பார்த்தாலும் அந்த இடத்துக்கு வரும் RPG ஏறிகணை. சிறிய ஓட்டையிருந்தாலும் அதனூடே பதுங்கிச் சூட்டாளரின் சூடு வரும். பகலில் வெளியில் சின்னதாகக்கூட நடமாடமுடியாது. ரவை துளைத்ததால் உண்டான சிறு துவாரத்தூடே அடுத்தடுத்த ரவைகள் வரும். அடிக்கடி எமக்குக் காயங்கள், வீரச்சாவுகள் என தொடராக துயரைத் தந்த கடுமையான நாட்கள் அவை.

லெப்.கேணல் நிஸ்மியாவின் வீரச்சாவைத் தொடர்ந்து, அவரது பணியை அஜந்தி பொறுப்பேற்றார்.

சில நாட்களின் பின் மேஜர் தமிழ்செல்வியின் பிளாட்டூன் மட்டுவில் கடந்து வண்ணாத்திப் பாலத்துக்கு

padippakam



நகர்த்தப்பட்டது. ஏற்கனவே அங்கு நின்ற அணி வேறு கள் முனைக்கு அனுப்பப்பட, இவ்வணி அப்பகுதியை பொறுப்பேற்றுக்கொண்டது. கனகம்புளியடி கடந்து மட்டுவில் குடியிருப்புகளைக் கடந்தால் அப்பாலே பரந்த வயல் வெளிகளைக்கொண்ட அப்பகுதியிலே இரண் டொரு வீடுகள் மாத்திரமே இருந்தன. அடர்ந்த பூவரசு மரங்களையும், செவ்வரத்தம் செடிகளையும் வேலியாகக் கொண்டு நிமிர்ந்துநின்ற அந்த வீடுகளே ஆபத்து நேரங்களில் அங்கே உதவின.

அதிலிருந்து கிட்டத்தட்ட 300மீ. முன்னே ஒரு பாலம் இருந்தது. அதன் இரு புறத்தும் அடர் புற்களும் வறண்ட நிலத் தாவரங்களுமாகக் களித்தன்மை கொண்ட அந்த மண்ணை இறுகப் பற்றி வளர்ந்திருந்தன. வெட்டுகின்ற மண்வெட்டியையே பற்றிப் பிடிக்கின்ற தரையில் இத்தா வில் நீரேரிக் கரையை நினைவுபடுத்துகின்ற அத்தாவரங் களினூடே போட்டிபோட்டு வெட்டிமுடிக்கப்பட்டன I வடிவ காப்பகழிகள். மேற்புறப் பாதுகாப்புக்காகப் பின்பகுதிகளி லிருந்து மரக்குற்றிகள் சுமந்துவரப்பட்டு நிலை யமைக்கப்பட்டன. 100மீ. இடைவெளியில் ஒவ்வொரு காப்பரணும் அமைக்கப்பட்டு அந்தப் பகுதி பாதுகாக்கப் பட்டது. தூரத்தே படையினரின் கொட்டில்கள் பச்சை நிறத்தில் தெரிந்தன. கிட்டத்தட்ட 500மீ. தூரத்தில் நிலை கொண்ட படையினரை எந்நேரமும் கண்காணிக்கும் அதே வேளை, இரவுப் பொழுதுகள் மிக ஆபத்து நிறைந்த வையாக இருந்தன. தொடர்ச்சியில்லாது இணைப்புத் துண்டிக்கப்பட்ட நிலையிலே வண்ணாத்திப்பாலப் பகுதி யில் பாதுகாப்பு அணி நின்றது. எனினும் நீண்டகாலமாக இராணுவ அச்சுறுத்தல்களை முறியடித்தவண்ணமிருந்தது. தூரத்தே வண்ணாத்திப் பாலம் பற்றை மண்டிக்கிடந்தது.

இக்காலப்பகுதியில் பொறியியற்றுறையைச் சேர்ந்த போராளிகள் பலர் கள அனுபவத்தைப் பெற்றுக்கொள் வதற்காக எம்முடன் வந்து நின்றனர். கேணல் விதுஷா



படிப்பகம்

padippakam



வின் கட்டளைப்படி சாவகச்சேரியில் நின்ற எமது கொம் பனியுடன் அவர்களைக் கலந்து பிரித்துவிட்டிருந்தார் தமிழ்செல்வி. நெருக்கடியான போருக்குள் நிற்கும் அனுபவத்தை அவர்களும், தொழிநுட்ப அறிவை நாங்க ளும் பகிர்ந்துகொள்வதற்குக் கிடைத்த நல்லதொரு வாய்ப்பு அது.

அணிகள் தொடர்ந்து ஒரே பகுதிகளிலே நிலை கொண்டிருந்ததால் முன்பு வளைவாக அமைக்கப்பட்ட முன்னரங்க நிலை இப்போது நேராக சீராக அமைக்கப்ப டத்தொடங்கியது. வேலை செய்வதிலேயே நேரம் கழிந் தது. அதிலும் படையினருக்கு மிகவும் அண்மையான பகுதி என்பதால் முன்னரங்கை இடையிடையில் ஊடறுக் கும் நீண்ட ஒழுங்கைகளில் பதுங்கிச் சூட்டை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதனால் அருகில் இருக்கும் இடத்தைக் கூட நீண்ட தூரம் சுற்றி வந்துதான் அடையவேண்டியிருக் கும்.

இப்படித்தான் ஒரு நாள் போராளி ஒருவர் உணவு எடுப்பதற்காக ஒரு ஒழுங்கையைக் குறுக்காகக் கடந்துவிட் டார். எப்போதுமே இரை விழுங்கும் பாம்புபோல குறி பார்த்துக்கொண்டிருந்த படையினரின் பதுங்கிச் சுடும் துப்பாக்கி சீறியது. வேலிக்கருகே வீழ்ந்தவர் விழிமூடிப் போனார். பின்பு இராணுவப் பதுங்கிச் சூட்டாளர் இருந்த பகுதிக்குள் புகைக்குண்டடித்து மறைப்பை ஏற்படுத்தி துப் பாக்கியால் தாக்குதலைச் செய்தவாறுதான் வித்துடலை அவ்விடத்திலிருந்து எடுத்தோம்.

இச்சம்பவத்தையடுத்து அனைத்து இடங்களிலும் முழுமையான கவனம் எடுக்கப்பட்டது. எனினும் பரந்து விரிந்த களமுனைகளின் தேவைகளுக்கு ஏற்ப அடிக்கடி அணிகள் இடம் மாற்றப்பட்டதால், பதுங்கிச் சூட்டுப் பகுதிகளைக் கவனத்தில் கொள்வதில் சிரமம் ஏற்பட்டது.



படிப்பகம்

padippakam



சிறிது காலத்தின்பின்னர் கடற்புலிகள் மகளிர் படையணி தனது கொம்பனி ஒன்றை அரியாலைக்கு அனுப்பியிருந்தது. அதேநேரம் கச்சாய் பகுதியில் நின்ற சுதர்மினாவின் பிளாட்டுனும் அரியாலைக்குப் புறப்பட்டது. அதன் கட்டளையதிகாரியாக மிதுலா நியமிக்கப்பட்டார். தொடர்ந்து கச்சாய் கடற்கரைப் பகுதிக்கு 4:1 படையணி நகர்த்தப்பட, இப்போது சாவகச்சேரிப் பகுதியில் எமது படையணியில் கயல்விழியின் பிளாட்டூன் மட்டுமே முன்னரங்கில் நிலைகொண்டது.

அணிகள் இவ்வாறு மாற்றப்பட்டுக்கொண்டிருக்க, வன்னியில் நின்ற கேணல் விதுஷா தமிழ்செல்வியை அங்கே வருமாறு அழைத்தார். அவரது பணியை ஜமுனா ஏற்றுக்கொள்ள, தமிழ்செல்வி வன்னிக்குப் புறப்பட்டார். அரியாலை, கோப்பாய், வண்ணாத்திப் பாலம், மட்டுவில், சாவகச்சேரி, கச்சாய் எனப் பரந்து நிலைகொண்ட அணிகளைப் பார்வையிடுதல், படையினரின் தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் செய்தல், தொல்லைப்படுத்துதல் என எமது நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன.

சில நாட்களின் பின் சாவகச்சேரிப் பகுதியில் நின்ற சுதர்மினாவின் பிளாட்டுன் அரியாலைக்கு நகர்த்தப்பட்டது. ஏற்கனவே கொழும்புத்துறைப் பக்கம் கடற்புலிகளின் அணி ஒன்று முன்னரங்கப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தது. அடுத்து சுதர்மினாவின் பிளாட்டூன் நிலைகளைப் பொறுப்பெடுத்துக்கொண்டது. வலது பக்கமாக கட்டளை அதிகாரி பிறேமினியுடன் அன்பரசி படையணியின் ஒரு பிளாட்டூன் போராளிகள் நின்றிருந்தனர். இறுதியாகக் கைப்பற்றப்பட்ட புதுக்குளம் சந்தி தொடக்கம் வலிகாம இடப்பெயர்வின் முன் மகளிர் படையணி நிர்வாகப் பிரிவின் தளமாக இருந்த 2:7 ஐ ஊடறுத்து கொழும்புத்துறைவரை மேற்குறிப்பிட்ட அணிகள்



படிப்பகம்

padippakam



தரித்துநின்றதுடன் முன்னேறும் நடவடிக்கைக்கான வேவுப் பணியிலும் ஈடுபட்டிருந்தன.

இப்போது எமது அணிகளுக்கும், இராணுவத்தின் முன்னரங்க நிலைக்கும் இடையிலான தூரம் அண்ண ளவாக 150மீ. ஆகியிருந்தது.

2000.08.26 அன்று அரியாலைக்கு மாற்றப்பட்ட சுதர் மினாவின் பிளாட்டூன் உடனேயே விழிப்புநிலைப்படுத்தப் பட்டிருந்தது. எம்மிடமுள்ள குறைந்த ஆளணி வளத்தைப் பயன்படுத்தி கைப்பற்றிய நிலப்பரப்பை இப்போது தக்க வைக்கவேண்டிய தேவையிருந்தது.

அரியாலை, கோப்பாய், வண்ணாத்திப் பாலம், சாவகச்சேரி, எழுதுமட்டுவாள், நாகர்கோயில், விளக்குவைத்தகுளம் என களமுனைகள் விரிந்து அங்கங்கே நின்ற எமது படையணியில் காயம், வீரச்சாவு என பலர் களத்திலிருந்து அகற்றப்பட, இப்போது ஆளணித்தேவை அதிகரிக்கத்தொடங்கியது. இதனால் மீட்கப்பட்ட நிலங்களைத் தக்கவைப்பதில் படையணிகள் முனைப்புக் காட்டின. சுதர்மினாவின் பிளாட்டூனுக்குரிய பகுதியின் கட்டளையதிகாரியான மிதுலா வேலைகளை வேகப்படுத்தினார்.

இந்த ஓய்வு நிலையைப் பயன்படுத்தி இராணுவம் முன்னகரும் நடவடிக்கையில் ஈடுபடும் என்பது எல்லோரா லும் எதிர்பார்க்கப்பட்ட விடயம். அத்துடன் கட்டிடச் சண்டையில் எங்களுக்குப் போதிய அனுபவமில்லை.



படிப்பகம்

ஐந்து வருடங்களாகக் கட்டிடப்பகுதிக்குள் நின்று பழக்கப்பட்ட படையினருக்கு அதனுள் நின்று சண்டையிடுவது இலகுவானது. அதனால் அரியாலைக் களமுனையில் தாக்குதல் ஆரம்பிக்கப்படலாம் என்ற ஐயம் வலுத்திருந்ததால், அதற்கான எதிர் நடவடிக் கைகளை மேற்கொள்ள நாம் தயாராகினோம்.

அண்மைக் காலத்தில் காடு மற்றும் சாதாரண குடி யிருப்புப் பகுதிகளுள் சண்டையிட்டுப் பழக்கப்பட்ட எமது அணிகள், கட்டிடப்பகுதிகளில் சில சிக்கல்களை எதிர் நோக்கவேண்டி வந்தது. எனினும் உடனுக்குடன் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு நிலைமைகளை எமக்கு வாய்ப் பாக்கியது முக்கியமானது. உடைந்த வீடுகளின் கற்கள் காப்பரண்களாக எழுந்தன.

அரியாலை முன்னரங்க நிலை ராங்கோ எனப் பெயரி டப்பட்டிருந்தது. கடற்கரையில் ராங்கோ 01 என ஆரம் பித்து, தொடர்ந்து யாழ் நெடுஞ்சாலையை ஊடறுத்துச் செல்கிறது இந்நிலை.

நெடுஞ்சாலையை குறுக்கறுக்கும் இடத்தில் இருந்த பெரிய பாலத்துக்கருகில் உயரமான கட்டிடம் ஒன்று இருந்தது. எறிகணைத்தாக்குதலில் சிதைந்துபோன அந்தக் கட்டிடத்தின் கூரைத்தகரம் காற்றுக்குக் கிளம்பி திடீர் திடீர் என ஒலி எழுப்பிக்கொண்டிருக்கும். உடனே படையினரின் 60மி.மீ. எறிகணை செலுத்திகள் எங்களைநோக்கி எறிகணைகளைத் துப்பிவிட்டுக் கண்ணை மூடிக்கொள்ளும்.

padippakam



2000.09.02 அன்றைய இரவு எவ்வித சிக்கல்களுமின்றிக் கழிந்துகொண்டிருந்தது. காவற் சுற்றுக்குச் சென்றவர்கள் தமது பணியை முடித்துவிட்டு வந்து உறங்கத்தொடங்கி சற்று நேரத்திலேயே மணி நான்காகியது.

காப்பரண்கள் அமைக்கும் பணியிலேயே பலநாட்கள் தூக்கத்தை இழந்திருந்தாலும், எம் தாயகத்தை இழக்கமுடியாது, இழக்கவும் கூடாது என்ற வேகத்துடன் அனைவரும் தமது ஆயுதங்களைத் தாங்கியவாறு தயார்நிலையில் நின்றனர்.

விடிந்தும் விடியாத ஒரு இருள் நேரம். அணிகள் தயார்நிலைப்படுத்தப்பட்டிருந்தபோது, சூழல் ஏதோ ஒரு மாற்றத்தைப் பெற்றிருப்பதை ஊகிக்க முடிந்தபோதிலுங் கூட, அவதானிக்கமுடியவில்லை.

சிறிது நேரத்தில் படைநிலைகளிலிருந்து கூவி வந்தது RPG ஒன்று. தொடர்ந்து எறிகணை மழை பொழிய, துப்பாக்கிகள் அனல் கக்கத்தொடங்கின. மிதுலா உடனே நிலைமையை கட்டளைப் பீடத்துக்கு அறிவித்துவிட்டு, நடைபேசியை முன்னரங்கின் அதிர்வெண்ணுக்கு மாற்றினார்.

ராங்கோ 10 க்கும், ராங்கோ 15 க்கும் இடையால் உடைத்து வேகமாக உள்ளே பரவத்தொடங்கியது இராணுவம். ராங்கோ 10 இன் பின்னால் 50 மீற்றரில்தான் மிதுலாவின் கட்டளைக் காப்பரண் அமைந்திருந்தது. வேகமாக உள்ளே படையினர் புகுவதைக் கண்ட இவர்கள் அவர்களைத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இரு புறமும் நின்று சுட்டுக்கொண்டிருந்த எங்களின் கனரக ஆயுதங்கள், இராணுவம் தனது நிலையை அகட்டுவதற்கு



படிப்பகம்

padippakam



விடவில்லை. அதேநேரம் படையினரின் எறிகணைத் தாக்குதல் எம்மைச் சூழவுள்ள பகுதிகளைநோக்கிச் செறிவாக நடத்தப்பட்டதால், எமது உதவியணியின் நகர்வு வேகமும் மட்டுப்படுத்தப்பட்டது.

குறுகிய பகுதிக்குள் தாக்குதல் நடைபெற்றதாயினும், நிலைமை மிகவும் நெருக்கடியானதாக இருந்தது. அரியாலைப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த சராவுக்கு, நிலைமையை மிகத் தெளிவாகச் சொல்லிக்கொண்டிருந் தார் மிதுலா.

இப்போது உடைத்த பகுதியிலிருந்து வலம் இடமாக அகட்டுவதே படைத்தரப்பின் நோக்கமாக இருந்தது. சூழ இருந்த மதில், கட்டிடங்களைப் பயன்படுத்தி எமது நிலை களின் உட்புறமாகவும் நகரத்தொடங்கினர் படையினர். எமக்கு வாய்ப்பற்றிருந்த இடங்களை இராணுவம் தனக்கு வாய்ப்பாக்கிக்கொண்டது. ஏற்கனவே இருந்த ஆளணிப் பற்றாக்குறையும் சேர்ந்துகொள்ள, எல்லாமே அவர்களுக்கு வாய்ப்பாகியது.

அதேநேரம் முன்னரங்கில் இன்னும் சில இடங்களால் படையினர் முன்னேறும் ஆபத்து இருந்தது. எனவே உதவிக்கு வரவேண்டிய அணிகள் நெருக்கடியை எதிர்நோக்கின. நிலைமை தொடர்ந்தும் படையினருக்கு வாய்ப்பாக இருக்க, அவர்கள் மேலும் முன்னேற முயற்சித் தனர். முன்னரங்கப் போராளிகள் கேட்டதற்கிணங்க எறி கணைகள் வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தன. எனினும் எம்மவர்களின் குறிபார்த்த சூடுகளால் திணறிக் கொண்டிருந்தனர் படையினர்.

சிக்கலான கள நிலைமை ஆரம்பத்திலேயே தோற்று விக்கப்பட, நேரம் எவ்வித கட்டுப்பாடுமின்றி போய்க் கொண்டிருந்தது. இப்போது பார்க்கும் இடமெங்கும் பச்சை



படிப்பகம்

padippakam



உடைகளே நிறைந்திருந்தன. இதுதான் தக்க வாய்ப்பென எண்ணிய மிதுலா அவ்விடங்களுக்கெல்லாம் எறிகணை களை ஏவும்படி குறிப்பிட்டார். சொன்னபடி வீழ்ந்து வெடித்தன எறிகணைகள். சுட்டுக்கொண்டிருந்த இராணு வம் செத்து வீழத் தொடங்கியது.

உடனேயே சிங்களப் படை எமது பகுதியெங்கும் கண் மூடித்தனமான எறிகணைத் தாக்குதலை ஆரம்பித்தது. விடிகாலையே அனல் வீசியபடி கழிய, வெயிலும் உரத் தது. இதுவரை மிக நிதானமாக நின்று நிலைமைகளைச் சொல்லிக்கொண்டிருந்தவரின் தொடர்பு சற்று நேரத்தில் இல்லாமற்போனது. கட்டளைப் பீடம் "மிதுலா மெயின், மிதுலா மெயின்" என அழைத்துக்கொண்டிருந்தது.

தொடர்ந்து சண்டை நடக்க, உடைக்கப்பட்ட பகுதி யிலிருந்து ராங்கோ 15 ஐ நோக்கி இராணுவம் நகரத் தொடங்கியிருந்தது. ஏற்கனவே அதில் நின்ற ஈழவளின் PK LMG அவர்களை மேலும் நகரவிடாமல் தடுத்திருந்தது. முற்றுகைக்குள்ளிருந்து வெளிவந்த இரண்டொரு போராளிகள் ஈழவளுடன் சேர்ந்துகொள்ள, அக்காப்பரண் இன்னும் பலமாகியது. அதிலிருந்த PK LMG படையினருக்குப் பெரும் சவாலாகியது. இந்த நேரத்தில் இன்னொரு PK LMG யும் அவர்களுக்குக் கிடைக்க, மாறி மாறி இரண்டாலும் வெளுத்துத் தள்ளினார் ஈழவள்.

திடீரென மிதுலாவின் குரல் மீண்டும் கேட்டது. வானலை வாங்கிக் கம்பியின் மேல்முனை உடைந்து விட்டதோ, என்னவோ, தெளிவில்லாமல் இரைச்சலாக இருந்தது அவர் குரல். எனினும் முன்னரங்கில் நின்ற ஏனைய போராளிகளுக்கு அவரது குரல் தெளிவாகக் கேட்டது.



படிப்பகம்

padippakam



"இப்ப ஆமி கிட்ட வந்துகொண்டிருக்கிறான். எங்களைப் பாக்கவேணாம். சுத்தி செல் அடியுங்கோ. நிறைய ஆமி சாவான். சொன்னமாதிரி வேகமாக அடியுங்கோ"
என்றவர், எறிகணைகள் வந்து விழவும்,

"சரி இப்படியே குடுத்துக்கொண்டிருங்கோ..."

எனச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே துப்பாக்கிச் சூடுகள் அதிகரிக்கத்தொடங்கின. திடீரென குண்டுச் சத்தங்கள் அவரது குரலையும் மீறிக் கேட்டன. அத்துடன்,

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

என்ற தாரக மந்திரத்துடன் நின்று போனது அவரது குரல். அதுவே மேஜர் மிதுலாவின் இறுதி வார்த்தைகளாகவும் இருந்து இதயத்தைச் சுட்டது.

அங்கே முன்னணி அவதானிப்பாளராக இருந்த அருந்ததியுடன் அணியொன்று களமிறங்க முற்பட்டது. ஆனால் இராணுவம் தனது ஆளணிப் பலத்தைத் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு பின்பகுதியால் சுற்றி வளைக்க முற்பட்டது. நிலைமை சற்று பாதகமடைவதைக் கண்டதும் பின்வாங்கும்படி கட்டளை கிடைத்ததைத் தொடர்ந்து, பின்னே இருந்த காப்பரண் வரிசைக்கு நாங்கள் நகர்ந்தோம்.

இதேநேரம் வன்னியிலிருந்து விடுதலையுடன் கோயிலாக் கண்டிக்கு வந்திருந்த ஒரு பிளாட்டூன் தேவை கருதி உடனேயே ஒவ்வொரு இடத்துக்கும் பிரித்து விடப்பட்டிருந்தது.

இரண்டாவது காவல் வரிசைக்கு வந்து சேர்ந்த அணிகள் இப்போது தமது நிலைகளைப் பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டன. அரியாலையின் கட்டிடப் பகுதியைக் கடந்து ஓரளவு வெட்டைப் பகுதிக்கு வந்திருந்தது அணி.



படிப்பகம்

padippakam



வேகமாகக் காப்பரண் அமைக்கும் பணி முடுக்கி விடப்பட்டது. எனினும் பகலில் நடமாட முடியாதநிலை யில் வேலைகள் தாமதமாகின. மீண்டும் அப்பகுதியில் படையினரின் முன்னேற்ற நடவடிக்கைக்கான வாய்ப்புக்கள் இருப்பதாகக் கட்டளைப்பீடத்திலிருந்து தகவல் வந்தது. உடனேயே வண்ணாத்திப் பாலத்துக்கு அனுப்பப்பட்ட விடுதலையின் பிளாட்டூன், மீள அழைக்கப்பட்டு அரி யாலையின் பின்பகுதியில் உள்ள புதிய முன்னரங்க நிலையில் விடப்பட்டது. அவ்வணிகளுக்கு அந்தப் பகுதி புதியது என்பதால் இரவிரவாகவே ஒவ்வொரு நிலை களையும், முன் பின் பகுதிகளையும் இயன்றவரையில் அவதானித்து தாக்குதலுக்காகத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டனர்.

அன்றைய தாக்குதல் நான்கு முனைகளுடான ஒரு முன்னேற்ற நடவடிக்கையாக இருந்தது. அரியாலை, வண்ணாத்திப் பாலம், மட்டுவில், சாவகச்சேரி ஆகிய பகுதிகளினூடாக 2000.09.12 அன்று இடம்பெற்ற இந் நடவடிக்கையில் இரு முனைகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அவ்விரு முனைகளில் ஒன்றான வண் ணாத்திப் பாலப் பகுதியில் வழமையாக இரவு நேரத்தில் மட்டுமே காவற்கடமையில் ஈடுபடுவோம். பகல் பொழு தில் பின்னால் உள்ள வீட்டிலேயே நின்று அவதானிப்பைச் செய்வோம். அன்று அதிகாலையும் அணி பின்னே வந்தது. சில நாட்களுக்கு முன்னரே சண்டைக்கான விழிப்பு நிலைப்படுத்தல் செய்யப்பட்டிருந்ததால் வீட்டுக்கு அரு கேயிருந்த பனங்கூடலினுள் சோதியா படையணியினரின் .50 கலிபர் விடப்பட்டிருந்தது.

விடிந்தும் இருள் போர்த்தியிருக்கும் அந்தப் பொழு தில் முன்னே இருந்த பாலத்தினூடாக இராணுவம் முன் னேறத்தொடங்கியிருந்தது. சற்று நேரத்தில் எமக்குப் பின்னேயிருந்த வீடுகள் காப்பரண்களாக, இராணுவத்துக் கெதிராகச் சமர் தொடர்ந்தது. பனங்கூடலுக்குள்ளிருந்த



படிப்பகம்

padippakam



.50 கலிபரை இராணுவம் எதிர்பார்க்கவில்லை. பின்னேயிருந்த எறிகணை செலுத்திகளும், முன்னேயிருந்த துப்பாக்கிகளும் இணைந்து சூட்டினை வழங்க, படையினரின் முன்னேறும் வேகம் ஓரளவு மட்டுப்படுத்தப் பட்டது.

அங்கு ஒரு குறிப்பிட்ட அளவில்மட்டுமே போராளிகள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். இதனால் பெருந்தொகையாக முன்னேறும் இராணுவத்தை உடனடியாகத் தடுத்துநிறுத்துவது என்பது சாத்தியமற்றதாயிருந்தது. நகரும் இலக்குகளை வெட்டைவெளிப் பகுதி மிகத் தெளிவாகக் காட்டிக்கொண்டிருந்தது. இதனால் மேன் மேலும் இராணுவத்தை நகரவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தது மேஜர் தமிழ்செல்வியின் அணி. நேரம் மதியத்தைத் தாண்டியிருக்க, ஏனைய பகுதிகளிலும் சண்டை நடந்துகொண்டிருந்தமையினால், உதவியணிகள் வரமுடியாமல் இருந்தது. இருந்தும்கூட படைகளை மறித்துவைத்திருந்த அணியினருடன் வேறு சிலரையும் இணைத்து முன்னேறித் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தொடர்ந்து எறிகணை உதவியு டன் எமது அணிகள் வேகமாக முன்னேறிச்செல்ல, இராணுவம் பின்வாங்கத் தொடங்கியது. மீண்டும் தமிழ்செல்வியின் அணி தனதிடத்தில் நிலைகொண்டது. எவ்வித இழப்புமின்றி முடிந்த இப்பெருந் தாக்குதலில் எந்தப் பகுதியையும் இராணுவத்தால் கைப்பற்றமுடியவில்லை.

அன்றிரவு எங்களெல்லோரையும் சிறிய சிறிய அணிகளாகப் பின்னே அழைத்து நிலைமையை விளக்கினார் கேணல் விதுஷா.

**"சூழலோ, களநிலைமையோ எமக்குப் பாதகமாக இருப்பதை உணர்ந்துகொண்டால், அதற்கேற்ப அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இங்கு எமக்கு ஆளணிப்பற்றாக்குறையை ஏற்படுத்து**



படிப்பகம்

padippakam



**வதன்மூலம், நிலப்பரப்பை மீளக் கைப்பற்றவே இராணுவம் முயல்கிறது. இதனால் எமது இழப்பு களைக் குறைக்கக்கூடியவகையிலே பதில் தாக்கு தலை நாம் செய்யவேண்டும். முடிந்தவரை படையின ருக்கு இழப்புக்களை ஏற்படுத்தவேண்டும். படையின ரின் எண்ணத்தை எமது தந்திரோபாயத்தால் உடைக்க வேண்டும்"**

என எல்லா அணிகளுடனும் கதைத்திருந்தார். நாளைய தாக்குதலை எதிர்பார்த்தபடி எல்லோரும் காத்திருந்தோம்.

மறுநாள் விடிகாலை நேரம் 5.30 மணி. அதுவே இராணுவத்துக்கு நல்ல நேரம் போலும். திடீரெனப் பறந்து வந்த உலங்குவானூர்தியின் தாக்குதலுடன் சண்டை ஆரம்பமாகியது. ஆரம்பத் தாக்குதலுக்கு குயிலின் செக் சன் முகம் கொடுக்கவேண்டிவந்தது. தொடர்ந்து ஒரு பகுதியை உடைத்து இராணுவம் உள்ளே வரத்தொடங் கியது. அது வெட்டைப் பகுதி என்பதுடன், முழுமையாக வேலைசெய்து முடிக்கப்படாத காப்பரண்களில் நின்ற வாறு சண்டையிடுவது வீணான இழப்புக்களை நாமே ஏற்படுத்துவதை ஒத்தது. அவ்வாறான இடத்தில் நின்று சண்டையை எதிர்கொள்வது பொருத்தமானதல்ல என முதல் நாள் கேணல் விதுஷா கதைத்தது குயிலின் நினைவில் எழுந்தது. உண்மையில் இங்கு நின்று தாக்கு வதில் எவ்வித நன்மையும் இல்லை என நினைத்தவர், தனது அணியில் எவ்வித இழப்புகளையும் ஏற்படுத்தக் கூடாது என்ற எண்ணத்துடன் அங்கு நின்ற கனரக ஆயு தங்களைக் காப்புச் சூடு கொடுக்கவிட்டபடி ஏனைய அணிகளை பின்னே அனுப்பினார். LMG உடன் நின்ற சுதர்சனா நன்றாக வெளுத்துத் தள்ளினார். அருகில் நின்று அவ்விடத்துக்கு வந்துசேர்ந்த கடற்புலி அணியின் சிலரை யும் இணைத்துத் தாக்குதலைச் செய்தார் குயில். பட்டிக் கணக்கில் வந்துகொண்டிருந்த படையினருக்கு நல்ல பதிலடி கொடுத்தபடி படிப்படியாகப் பின்னகர்ந்தோம்.



படிப்பகம்

padippakam



இடையில் கிடைத்த PK LMG, சுதர்சனாவின் கையிலி ருந்து படையினரைநோக்கிக் கனன்றது.

தொடர்ந்து பின்வாங்கும்படியான கட்டளையைக் கட்டளைப் பீடமும் தந்ததால், முடிந்தவரை படைத்தரப் புக்கு இழப்புக்களை ஏற்படுத்தியபடியே அடுத்த நிலைக்கு வந்துசேர்ந்தோம். யாழ் வளைவுக்கு இடது பக்கமாக நீண்டு செல்கின்ற மண் அணைவழியே அணி நிறுத்தப் பட்டு, நிலைகள் புதுப்பிக்கப்பட்டன. அத்துடன் யாழ் வளைவுக்கு வலது பக்கமாக செம்மணி வெளியினுள் புதிய நிலையொன்றும் அமைக்கப்பட்டு அப்பகுதி இரவு பகல் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது.

* * *



படிப்பகம்

# 10

இப்போது சாவகச்சேரியில் மேஜர் கயல்விழியின் தலைமையில் இரு செக்ஷன்களுடன் பூங்கா வினது 60மி.மீ. எறிகணை செலுத்தி மாத்திரமே நின்றது. மேலதிகமாக பூமதியுடனான வேவு அணியும் தன் பணியில் ஈடுபடுகின்றது. இறுதியாக மீட்கப்பட்ட அதே இடத்தில் ஒரு சில மாற்றங்களுடன் நீண்டிருந்த முன்னரங்க நிலையில் கச்சாய்பகுதியில் தமிழீழ எல்லைப் படைவீரர்கள் விடப்பட்டிருந்தனர். யாழ் நெடுஞ்சாலைக்கு இடதுபுறமாகக் கயல்விழியின் அணியும் அதற்கு அப்பால் கடற்புலி மகளிர் அணி ஒன்றும் விடப்பட்டிருந்தது. இரு நிலைகளுக்கிடைப்பட்ட இடைவெளி 100மீ. இலிருந்து மெல்ல மெல்ல 200 க்கு அதிகரித்தது.

அம்பகாமக்காட்டில் இதைவிடவும் அதிக இடைவெளி கொண்டதாகக்கூட நிலைகள் அமைத்துக் காவலிருந்தவர் கள் நாங்கள். எனவே இந்த இடைவெளித் தூரம் குறித்து யாரும் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் நாம் இப்போது நிற்பதோ நகரப்பகுதி. அது எமது அவதானிப்பிலிருந்து தப்பக்கூடியதான அதிக இடங் களைக்கொண்டது.

padippakam



'ஸ்ராலின்கிராட் சமர்' போன்று இராணுவம் அடுத்த அறையில் நின்றாலே, தாக்குவது கடினம். துப்பாக்கியை அதிக தூரத்துக்குப் பயன்படுத்தமுடியாத மறைப்பு. இந்த நிலையில் 200மீ. இடைவெளித் தூரமானது பாரிய விளைவுகளைத் தரக்கூடியதாக இருந்தது. எனினும் முடிந்தவரை பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன.

முன்னரங்க நிலையிலிருந்து 50மீ. பின்னே அமைந்துள்ள கயல்விழியின் கட்டளைத் தளத்தைச் சூழ காப்பரண்கள் அமைத்து, நகர்வகழிமூலம் இணைக்கும் வேலை நடந்துகொண்டிருந்தது. அரியாலையில் மேஜர் மிதுலாவின் அணியின் இழப்பு எல்லோர் மனதிலும் ஆழமான வடுவாகப் பதிந்திருக்க,

"சாவகச்சேரியை விட்டிட்டு வாறதெண்ட கதையே இல்லை. அப்படி நடக்குமெண்டால், அது எங்கட உயிர் போனாப்பிறகுதான்"

இது அவர்களது சிந்தனையாக இருந்தது. படையினரோ போருக்கான தயார்ப்படுத்தல்களைச் செய்து கொண்டிருந்தனர்.

செப்ரெம்பர் 17 ஆம் நாள் முன்னிரவு கழிந்துகொண்டிருந்தது. பின்னால் தூரத்தே நாயின் குரைப்பொலி உயர்ந்து அடங்கியது.

"பின்னுக்கு நாய் குரைச்சுக் கேட்டது. ஏதோ சிக்கல் போலத்தான் கிடக்கு"

தன்னோடு நின்ற போராளிகளுக்குச் சொன்னார் லெப். புரட்சியரசி. ஆனாலும் அந்த 200மீ. க்கு மேற்பட்ட தூரமுடைய இடைவெளிகளால் உள்நுழைந்து டச்சு வீதியிலுள்ள 3.2 பின்னணித் தளத்துக்கு அப்பால், சாவகச்சேரி நகரப்பகுதிக்கு அண்மையாக என முன்னரே வந்து நிலையெடுத்திருந்தது இராணுவம்.



படிப்பகம்

padippakam



பின்னணித் தளம் ஒன்றில் பூமதியின் அணி பரபரப் பாக வெளிக்கிட்டது.

"விடிய வெள்ளன எங்க ரியூசனுக்கோ?"

ஒருவரைப் பார்த்து மற்றவர் கிண்டல் செய்ய,

"ஓ... ஓ நுணாவில் சந்திக்கெல்லே போகவேணும்."

"இஞ்ச, மெயினுக்குப் பக்கத்து வீட்டுக் கூட்டுக்குள்ள ரெண்டு கோழி அடைச்சிற்று வந்தனாங்கள். திரும்பி வரேக்க ஒருக்கா ஞாபகப்படுத்து கலைமதி"

எனக் கதைத்தபடியே துப்பாக்கியைத் தோளில் மாட்டிப் புறப்பட்டார்கள். அன்று பின்னணியில் வேவுப் போராளி களுக்கான ஒரு சந்திப்பு.

நெடுஞ்சாலையால் சிறிது தூரம் வந்திருப்பார்கள். கயல்விழியின் பக்கம் சடசடவென வெடித்தன துப்பாக்கி கள். தொடர்ந்து தலைக்குமேலால் கூவிக்கொண்டு கடந்தன எறிகணைகள்.

"ஓ இது கயல்விழியின்ர பக்கம்தான். அங்க போவம்"

சிறிது தூரம் வந்தவுடன் இடையில் தொடங்கியது சண்டை. திரும்பச் சுட்டபடியே நிலைமையை எமது கட்டளைத் தளத்துக்கு அறிவித்தனர்.

"உதால உடைச்சுக்கொண்டு முன்னுக்குப்போய், அதில ஒரு மறிப்பைப் போட்டு நில்லு"

கட்டளை கிடைத்ததும் ஓர் அணி முன்னே இறங்கியது. எதிர்ப்பு பலமாக இருந்தது. அதேநேரம் நகரப்பகுதியினுள் இராணுவம் குவிவதுபோலவும் தெரிந்தது. உடனேயே அணியை மூன்றாகப் பிரித்து இருபக்கமும் காப்புச்சூடு



படிப்பகம்

padippakam



கொடுத்தபடி முன்னகர முற்பட்டனர். சூட்டு வலுவைப் பாவித்தபடியே உடைக்க முற்பட்டபோதே படையினர் ஒரு பலமான மறிப்பைச் செய்திருக்கிறார்கள் என்பது விளங்கியது.

"இதில நிண்டா பிரச்சினை. 3.2க்குப் போய் அதால முன்னுக்கு போவோம்"

நடைபேசியில் நிலைமையைக் கேட்டபடி 3.2 பக்கம் ஓடி, அங்கு நின்ற வனஜாவின் அணியையும் அழைத்துக் கொண்டு கயல்விழிக்கு உதவியாக முன்னரங்குக்குப் புறப்பட்டுக்கொண்டே தொடர்பெடுக்க,

"நீங்கள் வேகமாகப் பூங்காவின்ர பக்கத்தால போங்கோ. இடையில சிக்கல் வந்தாலும் வரும். அவதான மாகப் போங்கோ"

இவர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டு,

"கயல்விழி மெயின், கயல்விழி நிலைமையைச் சொல்லு"

என்றது கட்டளைப் பணியகம்.

"இங்கால மற்றப் பக்கத்தால ஆக்கள் உள்ள வந்திருக்கினம். பூங்காவின்ர பக்கம்தான் சிக்கல். எங் களுக்கு முன்னாலதான் கிடைக்குது. குடுத்துக்கொண்டி ருக்கிறம். சொல்லுற இடத்துக்குச் செல்லை அடிக்கச் சொல்லுங்கோ"

தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். லெப். பூங்கா 60மி.மீ. எறிகணை செலுத்தியுடன் அங்கு நின்றிருந் தார்.



படிப்பகம்

padippakam



உதவியணி இப்போது டச்சுவீதியால் சென்றுகொண்டிருக்க, கூட வந்தவரின் ஆயுதம் இயங்கியது. அப்போது தான் பச்சை உடைகள் முன்னால் பரவிக்கிடந்ததை எல்லோரும் அவதானித்தனர். இடையில் இருந்தது ஒரு உடைந்த மதில். திருப்பித் தாக்கிய அணி இங்கும் முன்னேறமுடியாது பின்னே வந்து 3.2 தளத்தைச் சூழ மறித்து நின்றுகொண்டு பின்னே அறிவித்தார்கள்.

பின்பகுதியால் உதவியணி செல்வது கடினமாகவே, முன்னரங்குக்குப் பக்கவாட்டாகவே அனுப்புவதென முடிவு செய்துவிட்டு,

"கயல்விழி இப்ப நிலைமைகளைச் சொல்லு"

"பின்பக்கம் எல்லாம் நிண்டு அடிச்சுக்கொண்டிருக்கிறான். இன்னும் கிட்ட வரவில்ல. பூங்காவின்ர பக்கம் தான் சிக்கல். அவ்விடத்துக்கு செல் அடிச்சுத் தாங்கோ"

"சரி அப்படியே கிடைக்கும். நீ பூங்காவை உன்ர இடத்துக்கு எடு"

"விளங்கிற்று"

இப்படியே கட்டளைகள் தொடர்ந்தன. கடற்புலிகள் நின்ற பகுதியால் உடைத்து மிக வேகமாக உள்ளே பரவிக்கொண்டிருந்த இராணுவம் இப்போது பூங்காவின் 60மி.மீ. எறிகணை செலுத்தி நிலைக்கருகே வர, பூங்கா அனைவருடனும் கயல்விழியின் இடத்துக்கு நகர்ந்துவந்து, கட்டளைப்பணியகத்தைச் சூழ முதல் நாள் அமைக்கப் பட்ட அகழிகளில் தயாரானார்கள்.

நெடுஞ்சாலைக்கருகாக வந்த இராணுவம் நகரப்பகுதியினுள் புகுந்துவிட, டச்சு வீதியை மறித்து இன்னொரு இராணுவ அணி தாக்குதல் நடத்தியது. இப்போது முக்கியமான இரு வீதிகளும் மறிக்கப்பட, முன்னரங்க



படிப்பகம்

padippakam



நிலைகளூடாக உதவிக்குப் போவது சிரமமாக இருந்தது. முன்பக்கத்தாலும் படை நெருங்கி வந்துகொண்டிருந்தது. முன்னேற முயன்ற அணி மறுபடி மறுபடி கடும் முயற்சியில் ஈடுபட்டது.

அந்நேரம் படையினர் பூங்காவின் நிலையிலிருந்து இன்னும் பக்கவாட்டாக முன்னேறத்தொடங்க, கயல்விழியின் நிலைமை சிக்கலானது. அவருக்கு இடதுபக்கம் நின்றவர்கள் தமக்குக் கிட்ட இராணுவம் வந்துவிட்டதாகச் சொல்லி, எறிகணை உதவி கேட்டனர். வேகமாக 82மி.மீ. எறிகணை செலுத்தி அணியுடன் கயல்விழி தொடர்பை ஏற்படுத்தினார். அவர்களிடையே நேரடித்தொடர்பு ஏற்பட்டதும், வலதுபக்கக் காப்பரண்களின் தொடர்பை எடுத்தார். இந்நேரத்தில் உதவியணி வரும்வரை நிலைகளைத் தக்க வைத்துக்கொள்ளும்படி சொன்னது கட்டளைப்பீடம். ஆனாலும் அவ்வணி முட்டி முட்டித் திரும்பிக்கொண்டிருந்தது.

6.30 க்குத் தொடங்கிய சண்டை 9.00 மணி கடந்ததும் அன்றைய வெயிலைப்போலவே சூடேறியது. ஒவ்வொரு நிலைகளின் தொடர்புகளும் இல்லாமல் போகத்தொடங்கின. முன்னரங்கப் பகுதிகளை இராணுவம் நெருங்கி வருவது தெரிந்தது. இடம், வலம் எனச் சூட்டுச் சத்தங்கள் அதிகரிக்கவும், பின்னேயிருந்த எறிகணை செலுத்திகள் முன்னேயிருந்தவர்களின் நடைபேசி உரையாடலை வைத்துப் படையினரின் இருப்பை இனங்கண்டு எறிகணைத் தாக்குதல் செய்துகொண்டிருந்தன.

நிலைமை சிக்கலடைந்துகொண்டுவரினும், உதவியணியும் ஒவ்வொரு முனையாலும் முன்னேறும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. கயல்விழியின் கட்டளைப் பணியகத்திலிருந்து பின்பக்கமாக 100மீ. இல் இப்போது இராணுவம் நிற்பது தெளிவாகத் தெரிந்தது. தன்னோடு நின்றவர்களுக்கு அவர்களைச் சுட்டிக்காட்டியபடியே,



படிப்பகம்

padippakam



"முன்னணியின்ர தொடர்பொன்றும் எனக்கு இல்ல. எங்களிலிருந்து 100மீ. இல் நிக்கினம். அதுக்கும் சேர்த்து அடியுங்கோ"

என்றார் கயல்விழி. வந்து வீழ்ந்தன எறிகணைகள்.

"இப்ப இடம் 50 எடுங்கோ"

"சரி அப்பிடியே வருகுது"

"சரிசரி விழுகிறது. சரி ஆக்கள்தான் விலத்திப் போய்க் கொண்டிருக்கினம்" அதற்குள் நின்று சிரிக்கவும் முடி கிறதா?

"இப்ப பின்னால இருக்கிற பாதையில நிக்கினம். அதில இருந்து கிட்ட வாறாங்கள்"

இவர்களது ஆயுதங்கள் கடுமையாகத் தாக்கின.

"இந்தா முன்வேலியடிக்கு வந்திட்டாங்கள்"

தளத்தின் வெளி அகழியில் நின்றவர்கள் திருப்பித் தாக்க, எம்மவர் ஒருவர் காயமடைந்தார். அதிலேயே காயத்தைக் கட்டிவிட்டு வெட்டப்பட்ட நகர்வகழியூடே கொண்டுவந்து கயல்விழியுடன் விட்டுவிட்டு, முன்னே நின்று தாக்கிக்கொண்டிருந்தார்கள்.

'மூவிங் பங்கர் அடிச்சது நல்லதுக்குத்தான்' நினைத்தார் கயல்விழி.

இராணுவத்தினுடையதோ, எம்முடையதோ என இனம் காண முடியாதவாறு எறிகணைகள் கூவி வந்து வெடித் துச் சிதறின. இவர்களது ஆயுதங்களும் குறிபார்த்துச் சுட்டுக்கொண்டிருக்க, வந்த இடமெங்கும் வீழ்ந்துகிடந்தன.



படிப்பகம்

padippakam



இராணுவச் சடலங்கள். ஆனாலும் காற்றுக்கு வந்து வீழும் சருகுபோல வந்துகொண்டேயிருந்தது இராணுவம்.

"இப்ப 75மீ. இல் நிக்கிறான். அந்த மாமர வீட்டுப் பக்கத்தைத்தவிர, எல்லாப் பக்கத்திலையும் ஆக்கள்தான். அதுக்கேற்றமாதிரி செல் அடியுங்கோ"

"நாங்கள் அடிச்சுத் தாறம். நீங்கள் வேகமாக அந்தப் பாதையால் பின்னுக்கு வாங்கோ"

"இல்ல நாங்கள் கஸ்ரப்பட்டுப் பிடிச்ச இடம். நீங்கள் ரீமை அனுப்புங்கோ, நாங்கள் இடத்தைத் திரும்பவும் பிடிக்கவேணும், நிண்டு அடித்துக்கொண்டே இருக்கிறாா் ரீமை அனுப்புங்கோ"

மனதில் வெறுமை படர்ந்தது. உதவியணி செல்லமுடியாத நிலையைவிட, முன்னேறி முன்னேறிச் சேதமடைந்துபோனது அந்த அணி.

'உதவியணி வாறது சிக்கல். நீங்கள் உடைச்சுக் கொண்டு வாங்கோ'

எப்படிச் சொல்லமுடியும் இந்தக் கட்டளையை?

"கயல்விழி, ஒரு பக்கம் சிக்கல் இல்லையெண்டா, அதுக்கேற்றமாதிரிப் புகைக்குண்டு அடிக்கிறம். அப்படியே உடைச்சுக்கொண்டு வா. அவங்கட உதவியணிக்குச் செல்லடிச்சுத் தாறம். நீ உடன ரீமை எடுத்துக்கொண்டு வெளிக்கிடு"

"அக்கா இப்ப 50மீ. இல் நிக்கிறான். சுத்தி வந்திற்றான். மதிலைத் தாண்டி இந்த மூவிங் பங்கருக்குள் குதிச்சிற்றான்... குண்டைக் கழற்றி எறியிறான்"



படிப்பகம்

padippakam



அவர் சொல்லிக்கொண்டிருக்க, அதே சத்தங்கள் நடைபேசியில் கேட்டவண்ணமிருந்தன. அடுத்த நகர்வகழியில் சண்டை நடப்பது விளங்கியது. உள்ளே வர வர அவ்விடத்திலேயே வீழ்த்திக்கொண்டிருந்தனர்.

"கயல்விழி குண்டை அடிச்சு உடைச்சுக்கொண்டு வா"

இது விதுஷா.

"நானும் மலரினியும்தான் நிக்கிறம். சாமினி, பூங்கா ஆக்களின்ர நிலைமை சிக்கலாக இருக்கு"

அவர் சொல்லிமுடிக்க முதல் அருகிலிருந்து வெடியோசை கேட்டது.

"வந்தவன் விழுந்திற்றான். இப்படியே விழுத்திக் கொண்டிருக்கிறம்"

"இப்ப 30மீ. க்கு வந்திற்றான்"

அவர் நடைபேசியில் PTT இனை அழுத்தினார். குண்டு வெடிக்கும் ஓசையும், தொடர்ந்து அலறுவதும், அவலக் குரலும் கேட்டது. கயல்விழி தொடர்ந்தார்.

"இப்ப கத்தின சத்தம் ஆமியின்ரதான். இவ்வளவு கிட்டவாத்தான் நிக்கிறான். வர வரச் சுட்டுக்கொண்டேயிருக்கிறம்"

குரல் எந்தப் பிசிறுமில்லாமல் தெளிவாகக் கேட்டது.

மிகுந்த நெருக்கடியான கட்டத்துக்குள்தான் இவர்கள் நிற்கிறார்கள் என்பது புரிந்தபோதிலும் இறுதிக் கணம் வரை அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளைச் செய்துகொண்டேயிருந்தார் கேணல் விதுஷா.



படிப்பகம்

padippakam



கயல்விழியின் குரலைவிட வெடியோசைகளும் அவர்களை மேவிச்செல்லும் ராங்கிகளின் இரைச்சலுமே அதிகமாகக் கேட்டது. அவர் இன்னும் கதைத்துக்கொண்டேயிருந்தார்.

“இப்ப 25மீ. இக்கு வந்திட்டான். எங்கட வெடிபொருளும் முடியுது. இப்ப 20மீ. இல் பதினைஞ்சு... பத்து...”

அவர்களது துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட சூட்டுச் சத்தங்களுடனும் பெரும் குண்டோசையுடனும் அமைதியானது அவரது தொலைத்தொடர்புக்கருவி. உடனேயே விடயம் புரிந்தது. எல்லாமே வெறுமையாகிப் போனதான உணர்வு.

“செப்ரெம்பர் 12 இல் இராணுவம் முன்னகர்ந்த போது, சாவகச்சேரியில் நின்ற மாலதி படையணியால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. 17 ஆம் திகதி நடந்த சண்டையில் இராணுவம் டச்சு வீதியால் சத்தமின்றி வந்து சாவகச்சேரிக்குள் புகுந்துவிட்டது. அங்கே நின்ற மாலதி படையணி நன்றாகச் சண்டையிட்டது. சாவகச்சேரியை இராணுவம் பிடித்த அன்றைய சண்டையில் தீரமுடன் போரிட்ட மாலதி படையணியில் நிறையப்பேர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்”

என்றார் கேணல் சொர்ணம்.

“நான் சாகேக்க பத்து ஆமியை என்றாலும் சுட்டுப் போட்டுத்தான் சாவன்”

என்று எப்போதும் சொல்லிக்கொள்ளும் கயல்விழி, அதற்கு அதிகமாகவே செய்துவிட்டு போய்விட்டார். மலரினியின் ஒளிப்படக் கருவி அருகே நின்ற வேங்கைகளின் ஆற்றல்களைக் கண்டிருக்கும். இறுதிவரை அந்த வீரர்



படிப்பகம்

padippakam



களுடன் நின்று அவர்கள் சிந்திய குருதியில் நனைந்த கதைசொல்லத் துடித்திருக்கும். ஒவ்வொரு சூட்டுக்கும் துடித்து வீழ்ந்த பகையினைக் கண்டு மகிழ்ந்து துள்ளிக் குதித்திருக்கும். எல்லாவற்றையும் எமக்கு ஓடோடி வந்து சொல்ல நினைத்திருக்கும். ஆனால் இறுதியில் அதுவும் அவர்களுடன் அந்த மண்ணிலேயே...

இப்போது தூரத்தே தாக்குதல் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. இன்னமும் எல்லாமும் முடிந்துவிட வில்லை.

"மெயின் 3.2, மெயின் 3.2 ஆக்கள் எங்களுக்கு கிட்டத்தான் நிக்கினம்"

"சரி அப்பிடியே லைனை அடிச்சுப்போட்டு அவ தானிச்சுக்கொண்டு நில்லுங்கோ"

முன்னரங்க நிலையின் மொத்தக் குரலும் அடங்கிப் போய், இப்போது பின்னணியில் கேட்கத்தொடங்கியது. வேவு அணியைத் தொடர்ந்து மட்டுவில் பகுதியிலிருந்து நீட்டப்பட்ட புதிய முன்னரங்க நிலை 3.2 ஊடாக யாழ் நெடுஞ்சாலைக்கு வந்தது. வேவு அணி ஒரு நீளமான மறிப்பை ஏற்படுத்திவிட்டுக் காத்திருக்க, இரவு எழுந்தது.

அன்றைய இரவில் இரகசியமாக நகர்ந்த இராணுவம் 3.2 தளத்தைக் கைப்பற்றியது. எனினும் நீண்ட நேரம் தக்கவைக்க அவர்களால் முடியவில்லை. மீண்டும் அது எமது கைகளிலேயே. எனினும் அங்கே கப்டன் வனஜா, கப்டன் சுதாமதி ஆகியோர் வீரச்சாவைத் தழுவ நேரிட்டது. மறுநாள் இராணுவம் தனது நிலையை விரிக்க முனைந்தது. குறைந்த ஆளணி, நீண்ட நிலப்பரப்பு. மீண்டும் ஒரு உடனடி இழப்புக்கு உள்ளாக விரும்பாது சற்றுப் பின்னகர்ந்தோம். இப்போது சாவகச்சேரி நகரப் பகுதியைத் தவிர்த்து பின்னே நீண்டன நிலைகள்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

தாக்குதல் நடந்துகொண்டிருந்தவேளையில் நெடுஞ் சாலையருகே நின்ற கானகா, அருமைநிலா, லெப். பிரதீபா ஆகியோர் வெடிபொருட்கள் தீர்ந்தநிலையில் கச்சாய் பகுதிக்கு வந்தனர். அங்கும் பரவிநின்றது இராணுவம் ஒருவாறு கச்சாய் நீர்நிலைகளைக் கடந்து தனங்கிளப்புப் பகுதியூடாகப் பின்னே வந்தனர். இந்த முயற்சியில் லெப். பிரதீபா இடையில் வீரச்சாவடைய, ஏனையோர் மீண்டும் அணியுடன் இணைந்தனர்.

எம் தாயகத்துக்குத் தனது இராணுவத்தை 1987 இல் அனுப்பியிருந்த இந்திய அரசின் அமைதி முகமூடியைக் கிழித்து, உண்மை முகத்தை உலகுக் குக் காட்டுவதற்காகச் சிறுகச் சிறுகத் தன்னை உருக்கிய லெப்.கேணல் திலீபனின் நினைவு நாட்கள் கடந்து கொண்டிருந்தன. இப்போது யாழ்ப்பாணத்தினுள்ளே விரிந்திருந்த களமுனையெங்குமே எமது அணிகள் பரந் திருந்து பல தாக்குதல்களுக்கு முகம் கொடுத்திருந்தன. அதனால் பளைப் பகுதியில் ஒரு பிளாட்டூன் மாத்திரமே கட்டளையதிகாரி மாலதியுடன் நின்றிருந்தது.

இப்போது பளைப்பகுதி புதியதொரு தாக்குதலுக்குத் தயாராகிக்கொண்டிருந்தது. அது ஓயாத அலைகள் நான்கு. மாலதி படையணி, சோதியா படையணி, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, சிறுத்தை மகளிர் அணி என்பன பங்கெடுத்துக்கொண்டன. யாழ் நெடுஞ்சாலைக்கு இடதுபுறமாக இரு முனைகளால் உடைப்பை ஏற்படுத்தி அணிகள் நகர்த்தப்பட்டன. ஏனைய அணிகள் முன் னரங்க நிலையை உடைத்துப் புகுந்த அதேவேளை மாலதியுடனான சுகந்தியின் பிளாட்டூன் கிளாலிப் பகுதி யில் ஒரு திசைதிருப்புத் தாக்குதலை மேற்கொண்டது. லெப்.கேணல் சேகரின் தலைமையில் தாக்குதல் தொடர்ந் தது.

padippakam



லெப்.கேணல் திலீபனின் நினைவு நாளுக்கு மறுநாள் அதிகாலை 4.00 மணியளவில் தடையுடைத்து உள் நுழைய முனைந்த அணிகளுக்கு எதிர்ப்பு கடுமையாகத் தான் இருந்தது. இதனால் வெவ்வேறு பகுதிகளில் சில அணிகள் திசைதிருப்பல் தாக்குதல்களை மேற்கொள்ள, இரு பாதைகளால் உரிய அணிகள் உள்நுழைந்தன. அவர்கள் காப்பரண்களை வேகமாகக் கைப்பற்றி அப்பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, வானம் வெளுத்திருந்தது.

ஆரம்பத் தாக்குதலில் பல போராளிகள் காயமடைந்து களத்திலிருந்து அகற்றப்பட, உடனடியாகச் சுகந்தியின் அணி உள்ளே அழைக்கப்பட்டது. தொடர்ந்து முன்னேறினோம். முன்னே குறித்ததோர் இடத்துக்கான ஆள்கூறுகள் தரப்பட, அப்பகுதியைநோக்கி நகர்ந்தோம். ஒரு பாரிய தேடுதல் நடவடிக்கையைச் செய்தபடி எமது நகர்வு தொடர்ந்தது. பனை மண்ணுக்கேயுரித்தான தென்னந் தோப்புகளெல்லாம் பற்றை மண்டிக்கிடந்தன. கிளாலி தொட்டு தொண்டைமானாறு நீரேரிவரையான பரந்த நிலத்தை உள்ளடக்கியதான இந்த நகர்வில் வேறு பல அணிகளும் பங்குகொண்டன.

இடையே நடந்த படையினரின் சிறிய சிறிய தாக்குதல்களை முறியடித்தவாறு நகர்ந்து நீண்ட தூரத்தைக் கடந்திருந்தோம். சூரியக்கதிர்-02 நடவடிக்கையின் முன்னர் எம்மால் பயன்படுத்தப்பட்ட சோதியா பாசறை இப்போது எமது கட்டுப்பாட்டுப் பகுதியினுள் வந்திருந்தது. எமது அணியின் ஆட்தொகை ஓரளவு குறைந்திருக்க, அவ்விடத்தில் ஒரு தற்காலிகத் தரிப்பைச் செய்துகொண்டோம். அது எழுதுமட்டுவாள் சந்தியிலிருந்து இப்பால் கிட்டத்தட்ட 200மீ. ஆக இருந்தது.



படிப்பகம்

2ஆம்லெப். மாலதி படையணி

ஓயாத அலைகள்-04 கட்டம் இரண்டைத் தொடங்குவதற்காக அணிகள் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தன. நடவடிக்கை தொடங்கப்போகும் பகுதி முழுவதும் வேவுகள் பார்க்கப்பட்டன. எமது படையணியிலிருந்து 2 ஆம் லெப். செந்தமிழ், ஈழமங்கை ஆகியோருடன் ஒரு சிறு அணி வேவு நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தது.

நாகர்கோவிலில் நின்ற கொம்பனிக்குப் பொறுப்பாக அப்போது சாந்தகுமாரி நின்றார். எமது நிலைகளையும் படையினரின் நிலைகளையும் ஊடறுத்தவாறு போகும். பருத்தித்துறை-நாகர்கோயில் பழைய தார் வீதியில், எமக்கும் இராணுவக் காப்புநிலைக்கும் இடையில் ஒரு பாலம் அமைந்திருந்தது. அப்பாலத்தைப் படையினர் பகல்நேர அவதானிப்பு நிலையாகப் பாவித்து வந்தனர்.

அந்தப் பாலத்தையும் அதற்கு அப்பாலிருந்த படையினரின் மூன்று காப்பரண்களையும், ஈழமங்கை செந்தமிழ் ஆகியோர் வேவு பார்த்துத் தரவுகளைச் சேகரித்து வைத்திருந்தனர்.

2000.10.05 அன்றைய நாள் அமைதியாக விடிந்தது. காலையில் எந்த வெடியோசைகளும் கேட்கவில்லை. எமதணிகள் திட்டமிட்டபடி சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. சொல்லிவைத்தபடி .50 கலிபர், PK LMG, RPG, 82மி.மீ எறிகணை செலுத்தி அணிகள் எல்லாம் அனல்கக்கிப் பகையரண்களை அழிக்கத் தயாராக நிலை கொண்டிருந்தன.

நடுப்பகலை எட்டுவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னர் மாமுனை, குடாரப்பு, நாகர்கோயில் ஊடாகப் பருத்தித்துறை போகும் தார்ச்சாலை வழியே எமது அணிகளும் அதற்கடுத்தாற்போல் இருந்த தென்னந்

padippakam



தோப்பூடாகக் கடற்புலிகளின் அணிகளும் நகர்ந்து சண் டையைத் தொடக்கவேண்டும்.

சாந்தகுமாரிக்குக் கொடுக்கப்பட்ட பகுதியால் முதலில் நகர்ந்தது வேழினியின் பிளாட்டூன். பாலத்தைக் கைப் பற்றித் தக்கவைத்தபின் மேலும் முன்னகர்ந்து காவலரண் களைக் கைப்பற்றுவதே அவர்களது பணி.

முதலில் மோட்டார் சூடுகள் படையினரின் காவலரண் களைநோக்கிச் சென்றன. எமது கனரகச் சுடுகலன்களும் தத்தம் பணியைச் செய்ய, லெப். பனிநிலாவின் செக்ஷன் மிக வேகமாக வெட்டை வெளியைக் கடந்து பாலத்தை நோக்கித் தாக்குதலைச் செய்தபடியே ஓடியது. பாலத்துக் குச் சற்று முன்னேயிருந்த முட்கம்பித் தடையைத் தகர்த்து உள்நுழைய முற்பட, படையினர் அவ்விடத்தை நோக்கித் தாக்குதலைத் தொடங்கினர். தொடர்ந்து எமது கனரக ஆயுதங்கள் படையினரின் தாக்குதல்களைக் கட்டுப் படுத்தின. அதேநேரம் வேழினி அவ்விடத்துக்கு ஓடிச் செல்ல பனிநிலாவின் அணி பாலத்தை நெருங்கிக் குண்டுத் தாக்குதலைச் செய்தது. கையிலிருந்த சுடுகலன் களும் முழங்கின. அந்த நடுப்பகலில் பாலம் எமது கைகளில் வீழ்ந்தது. வேழினி தொடர்ந்து முன்னேறினார்.

எமது அணிகள் முன்னேறுவதற்கு வாய்ப்புள்ள அனைத்து வழிகளையும் தடுக்கப் படையினர் முயன்ற னர். எல்லா இடங்களிலும் எமது நடவடிக்கைகளை விரை வாகச் செய்தாலன்றி நாம் முன்னேறுவதென்பது கடின மானது. இதனால் வேகமாக நகர்ந்த மேஜர் வேழினி அவ்விடத்தில் காயமுற்று வீழ்ந்து விழிகளை மூடிக் கொள்ள, சாந்தகுமாரி அங்கு விரைந்தார். சுகந்தியின் செக்சன் அங்கு நகர்த்தப்பட்டது. முட்கம்பி வேலித்தடை களைத் தகர்த்தபடி அவர்கள் மண் அரணை அடைய, அப்பகுதியைநோக்கி விரைந்த சாந்தகுமாரி அந்த மண் அரணின் மறைப்பு வேலியைப் பிய்த்தெறிந்து உள்



படிப்பகம்

நுழைய முற்பட்டார். எம்மவரின் தாக்குதல் வேகமாக அமைந்தபோதிலும், அப்பகுதி படையினருக்கே வாய்ப் பான தன்மைகளைக் கொண்டிருந்தமையினால் நாம் சில பின்னடைவுகளைச் சந்திக்கவேண்டித்தான் வந்தது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி இப்போது பாலம் எமது கைகளில் இருந்ததுடன் அவ்வீதியின் இடதுபக்க மூலை யிலமைந்துள்ள இரு காப்பரண்களும் எமது கட்டுப்பாட்டி னுள் வந்திருந்தது. இதேநேரம் எமக்கு வலதுபக்கமுள்ள தென்னந்தோப்பினூடாக உடைத்து உள்நுழையும் பிறி தொரு படையணியின் ஒரு அணியும், எமது அணியும் முன்னரங்கக் காப்பரணூடாக இடையில் சந்திக்கவேண் டும். ஆனால் தென்னந்தோப்பினூடாக நகர்ந்த அணி தனது முயற்சியில் பலத்த எதிர்ப்பைச் சந்தித்துக்கொண் டிருந்தமையினால் மேலும் முன்னேறமுடியவில்லை. அதேவேளை தென்னந்தோப்புப் பகுதியில் இருந்த படைத் தரப்புக்கு, எம்மால் கைப்பற்றப்பட்டிருந்த தார்ச்சாலையி லுள்ள காப்பரண்களைநோக்கித் தாக்குதல் செய்வது இலகுவாகவே இருந்தது.

தொடர்ந்து வலப்புறம் உள்ள காப்பரண்களைக் கைப் பற்றிக்கொண்டு தென்னந்தோப்பைநோக்கி நகரும் முயற்சி யில் தனது அணியுடன் சாந்தகுமாரி ஈடுபட்டார். ஆனால் படைத்தரப்போ முன்பகுதி, இடதுபுறமாகவுள்ள நீரேரிக் கரைப்பகுதி, வலதுபுறமுள்ள தென்னந்தோப்பு ஆகிய இடங்களிலிருந்து பாரிய எதிர்ப்பைத் தந்துகொண்டிருந் தது. மறைப்பற்ற வெளியில் நின்ற நாங்கள், கிட்டத்தட்ட படையினரின் மும்முனைத் தாக்குதலுக்கு முகம் கொடுத் துக்கொண்டிருந்தோம்.

படையினர் தமது காப்பரண்களோடு சேர்த்து அமைந் திருந்த நிலக்கீழ் பதுங்குகுழிகளிலிருந்து தொடராக எங் களைத் தாக்கிக்கொண்டிருந்தனர். யாழ்மொழியும், இசைச்சிட்டும் மண்ணணையடியில் காயப்பட்டு

padippakam



வீழ்ந்திருந்தனர். அவ்வேளை சூடுபட்ட சாந்தகுமாரி அவ் விடத்துக்கு அப்பால் வீழ்ந்தார். அதைக்கண்ட இசைச் சிட்டு ஊர்ந்துசென்று சாந்தகுமாரியின் நடைபேசியை எடுத்துக் கட்டளைப் பணியகத்துக்குத் தொடர்பெடுத்தார். தான் காயம் என்றும், சாந்தகுமாரி அவ்விடத்திலேயே வீழ்ந்துகிடக்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் நகர நகர இராணுவப் பதுங்கிச் சூட்டாளரின் ரவைகள் எங்களைத் தொடராகத் தாக்கிக்கொண்டிருந் தன. படையினர் நிலைகொண்டிருந்த மேட்டுநிலத்தில் ஓர் உயர்ந்த அடர்த்தியான ஆலமரம் நின்றது. அது படையினருக்கு வாய்ப்பாக அமைந்திருந்தது. வெளிப் பகுதியினூடாக ஓடியும் ஊர்ந்தும் செல்லும் எங்களைப் படையினருக்குத் துல்லியமான இலக்குகளாக அது காட்டி யது. எமது கையில் வீழ்ந்திருந்த பாலத்தடிக்குக் காயப் பட்டிருந்த முகுந்தா ஊர்ந்தபடி வந்துசேர்ந்தார். படையினர் தொடராகவே PK LMG யால் சூடுகளைப் பொழிந்தவண் ணம் இருந்தனர். வெளிப்பகுதியினூடாக எங்களை ஓடிச் செல்லவோ, ஊர்ந்து நகரவோ முடியாதளவுக்கு எதிர்த் தாக்குதல்கள் அமைந்திருந்தன.

அன்று மாலை மங்கும்வரை உள்ளே போனவர்கள் காத்திருந்தனர். இரவும் விரைவாக வந்துசேர்ந்தது. கருங்குழலியின் செக்ஷன் இருளில் மிக வேகமாக முன்னேறியது. படையினரின் அடிகளைப் பொருட்படுத் தாதவாறு அங்கு காயப்பட்டு இருந்தோர், வீரச்சாவடைந் திருந்தோர் எல்லோரையும் எடுத்துக்கொண்டு வேகமாகப் பின்னகர்ந்தது. அன்று அத்தோடு சண்டை நிறைவு பெற்றது.

பல போராளிகளின் உயிரைக்கொடுத்துக் கைப்பற்றிய பாலம் இப்போது எமது கைகளில் இருந்தது. அது இராணுவத்தினரதும், எமதும் முன்னரங்க நிலைகளுக் கிடையிலான சூனியப் பகுதியினுள் அமைந்திருந்தது.



படிப்பகம்

padippakam



படைத்தரப்பு அதைத் தமது கைகளில் வைத்திருக்க மறுபடி மறுபடி முயன்றதில் வியப்பில்லை. ஏனெனில் பாலத்திலிருந்தபடியே படையினரால் நீண்டதூரம் வரை யான எமது நடமாட்டங்களைக் கண்காணிக்கமுடியும். அதன்மூலம் தொண்டைமானாறு நீரேரிப் பகுதியை அண் டிய எம் நகர்வுகளைக் கட்டுப்படுத்துவதுடன் எறிகணைத் தாக்குதலுக்கான இலக்குகளை அவதானிப்பது படை யினருக்கே வாய்ப்பானது. இந்த நிலையில் அமைவிட முக்கியத்துவம்பெற்ற அப்பாலத்தைக் கைவிட அவர்கள் விரும்பவில்லை. தொடர்ந்து பல தாக்குதல்களை நடத்தி யது இராணுவம்.

படையினரின் முன்னரங்கப் பகுதியிலிருந்து பாலம் அண்மையாகவே இருந்தது. அத்துடன் அந்த வீதி மற் றைய் பகுதிகளைவிடச் சற்று உயரமாக இருந்ததால் அவ்விடத்தை அவதானிப்பது இராணுவத்துக்கு இலகு வானது. எந்தச் சத்தமும் இராணுவத்துக்குக் கேட்கும். நீரேரிக் கரை சேற்றுநீர் நிறைந்து நுளம்பு பெருகி எந்நேர மும் பாடல்களை இசைத்துக்கொண்டிருக்கும் நிலையில், பலகை, வாங்கு, எறிகணைகள் அடைத்துவரும் பெட்டிகள் என்பனவற்றை அடுக்கி, அதன்மேல் இருந்தே காவற் கடமை செய்தோம்.

வலதுபுறமிருந்த நீண்ட வெட்டைவெளிப் பகுதி, படை நிலைகளைத் துல்லியமாகக் காட்டியது. ஆனால் இடது புறமோ மிக நெருக்கமாக அண்மையில் கண்டற் பற்றை கள் வளர்ந்திருந்தன. இதைப் பயன்படுத்தி அருகில் வந்து எம்மீது தாக்குதல் நடத்தக்கூடிய வாய்ப்பு படைத்தரப்புக்கு இருந்தது. இதனால் இரவுவேளைகளில் குறிப்பிட்ட தூரம்வரை கண்டற் செடிகளைத் தறித்து வெளியாக்க முயற்சித்தோம். சுடுகலனில் ரவையேற்றும் சத்தம் கேட்டே எம்மீது கனரக ஆயுதத் தாக்குதலைச் செய்யும் இராணுவம், இப்போது இன்னும் தன் ஆயுதபலத்தைக் காட்டியது.



படிப்பகம்

padippakam



பாலம் கைப்பற்றப்பட்ட ஆரம்ப நாட்களில் தொடர்ச்சியாகப் படைத்தரப்பு நாற்பத்தைந்துக்கும் குறையாமல் RPG எறிகணைகளைப் பாலத்தைநோக்கி ஏவியதுமுண்டு. அந்தளவுக்குப் பாலம் அவர்களின் முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. ஆனாலும் நாமும் விடுவதாயில்லை.

திடீரென ஒருநாள் இராணுவத்தின் சிறிய அணி ஒன்று கண்டற் பற்றைகளுக்குள்ளால் பாலத்தைநோக்கிப் பதுங்கிப் பதுங்கி வந்து RPG தாக்குதலைச் செய்ய, பாலத்தில் நின்றோர் திரும்பத் தாக்கியபடியே நிலைமையைக் கட்டளைப்பீடத்துக்கு அறிவித்தனர். உடனேயே எமது எறிகணை செலுத்திகள் தாக்குதல்செய்ய அந்நடவடிக்கை முறியடிக்கப்பட்டது. அன்று முழுவதும் அப்பகுதி திருவிழாக்காலம்போல் வெடியோசைகளால் அதிர்ந்தும், தேடொளிகளால் ஒளிர்ந்துகொண்டுமிருந்தது.

பின்னர் ஒருவாறு கண்டற் பற்றைகள் அகற்றப்பட, அங்கே எமது கண்ணிவெடிகள் குடியேறின. அத்துடன் இடதுபக்கமாகப் புதிய அணிகள் காவலுக்கு விடப்பட்டு, தொடர்ந்து அவதானிக்கப்பட்டது.

அதேவேளை மீண்டும் எமது வேவு நடவடிக்கைகள் தொடராக நடந்தன. அடுத்தடுத்த கிழமைகளில் மீளவும் அந்த இடங்களைக் கைப்பற்றுவதற்கான கடும் முயற்சி. 30மீ. க்கு ஒரு காப்பு நிலை. 10மீ. அகலத்துக்கு முட்கம்பிச் சுற்றுக்கள். படையினரின் முன்பகுதியில் 30மீ. க்குள் பல தடைகள். உள்நுழைவதைக் கனவிலும் எண்ணிப் பார்க்கமுடியாது என படைத்தரப்பு நினைத்து இறுமாந்திருந்த பகுதியினூடாக மீண்டும் ஒரு முன்னேறித் தாக்கும் நடவடிக்கை திட்டமிடப்பட்டது. அதில் எமக்குரிய உடைப்புப் பாதை தென்னந்தோப்புப் பகுதியாக இருந்தது.

பெருங் கடற்பரப்பின் கரையிலிருந்து நீரேரி ஊடாகக் கிளாலிநோக்கி நீட்டப்பட்ட இராணுவ முன்னரங்க



படிப்பகம்

padippakam



நிலையில் நீரேரிக் கரைக்கும், கடற்கரைக்கும் இடையிலான பகுதியில் அமைந்துள்ள தென்னந்தோப்பை இராணுவம் மிகுந்த பாதுகாப்புக்குட்படுத்தியிருந்தது. ஏனைய பிரதேசமோ ஆங்காங்கே வளர்ந்திருந்த பற்றைகளைக் கொண்டிருந்ததனால் பின்தொடர்புகளைப் பேணக்கூடிய வகையில் எமது முன்னேற்ற நடவடிக்கைகள் தென்னந்தோப்பினூடாக நடைபெறலாம் என இராணுவம் ஊகித்தது. அதனால் அந்தப் பகுதியில் தமது முன்னரங்க நிலைக்கு இன்னும் முன்னே வளைவாக ஒரு பாதுகாப்பு வரிசையை அமைத்ததுடன் அதற்கு முன்னே அவதானிப்பு அணியொன்றையும் விட்டிருந்தது. இத்தனை பாதுகாப்புக்கு மத்தியில் விழித்திருந்த படைநிலைகளைத் தகர்த்தழிக்கும் பணியே எமதணிக்கு வழங்கப்பட்டிருந்தது. ஏனெனில் அதுவே எமக்கு முக்கியமானதாகவும் இருந்தது.

2000.10.19 அன்றைய மாலை தயார்ப்படுத்தப்பட்ட அணிகள் எமது முன்னரங்க நிலையருகே நிலையெடுத்துக் கொண்டன. ஆனந்தியின் பிளாட்டூனில் உள்ள நிதியின் செக்ஷன் தடையுடைக்கும் பணியைப் பொறுப்பேற்றிருந்தது. ஆனந்தி, ஈழமங்கை ஆகியோரின் பிளாட்டூன்கள் இத்தாக்குதலுக்கு ஆயத்தமாயின. விதுஷாவின் நேரடிக் கட்டளையின்கீழ் அணிகளை வழிநடத்த சாவித்திரி காத்திருந்தார். அதேநேரம் கடற்கரைப் பகுதியால் உடைத்து இடங்களைக் கைப்பற்றும் பணியை லெப். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி பொறுப்பேற்றது. இருவருக்குமிடையே சிறுத்தை மகளிர் அணிக்குரிய பாதை வழங்கப்பட்டிருந்தது.

**“ஓயாத அலைகள்-04 நடவடிக்கையின்போது நாகர்கோயில் பகுதியில் மாலதி படையணிக்கு அடுத்த பாதை லெப்.கேணல் சுதந்திராவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அப்போது சுதந்திரா சிறுத்தைப் படையணியில் இருந்தார். அவருடைய பிளாட்டூனுடன்**



படிப்பகம்

padippakam



எங்களுடைய படையணியின் செக்ஷன் ஒன்று போனது. சுதந்திராவுக்கு அந்தச் சூழல் புதிது. நில அமைப்புத் தெரியாது. ஆனால் விதுஷா அவர்களுக்கு அது தெரியும்.

சண்டைக்கென ஒரு பாதையைப் பொறுப்பெடுக்கும்போது என்னென்ன விடயங்களைக் கவனிக்க வேண்டும், மேலாளர்களிடம் எதைக் கேட்கவேண்டும் என்பதையெல்லாம் விதுஷா அவர்கள் தனக்குச் சொல்லித்தந்ததாக, பின்னாட்களில் சுதந்திரா எங்களின் படையணிக்கு வந்தபின் பலதடவை சொல்லியிருக்கிறார்...

என்று குறிப்பிட்டார் கேணல் துர்க்கா.

அந்த மாலை நேரம் கடந்தது. தடையுடைக்கும் நிதியின் அணி மெல்ல மெல்ல நகர்ந்து தடையருகே போனது. 'கூப்பிடு தூரத்தில்'தான் எங்களதும், படைத்தரப்பினதும் முன்னரங்க நிலைகள் இருந்தன. அதுவும் போதாதென்று முன்னேயிருந்த பனங்கூடலினுள் அவதானிப்பு அணியொன்றும் விடப்பட்டிருந்தது. இந்த நிலையில் பனையோலைகளின் சரசரப்புக்கிடையில் இரகசியமாகத் தடையகற்றி நகர்வது மிகக்கடினம் என்பதால் தடையுடைத்த அணி வேகமாக உள்ளே நுழைந்தது. முதலாவது அணி உள்ளே நுழைந்து இருபுறமும் சில காவலரண்களைக் கைப்பற்றியதும் முன்னேயிருந்து பலத்த எதிர்ப்பைச் சந்திக்கவேண்டி வந்தது. இதற்கிடையில் முன்னரங்க வேலிக்கு வெளியேயிருந்த இராணுவ அவதானிப்பு அணி தாக்கியழிக்கப்பட்டது. சுபத்திராவின் .50 கலிபர் படையினரின் நிலைகளைநோக்கிப் பதில் தாக்குதலைச் செய்தது.

இப்போது உள்நுழைந்த அணிக்குச் சவாலாக இருந்தது இராணுவத்தினரது முன்னரங்கநிலை. உண்மையில்



படிப்பகம்

padippakam



படையினரின் முன்னரங்க நிலைக்கு முன்புறமாகத் தோப் புப் பகுதியைக் கண்காணிப்பதற்கு அவர்கள் அமைத் திருந்த மேலதிக முன்னரங்கக் காப்பு நிலையே எம்மால் தாக்கப்பட்டிருந்தது. நிதி உடனேயே நிலைமையை விதுஷாவுக்குத் தெரியப்படுத்தினார். தேவையான இடங் களுக்கு எறிகணை உதவி வழங்கும்படி கட்டளையிட்டார் விதுஷா. இருந்தும், எதிர்ப்பை முறியடித்து அடுத்தகட்ட அரணுக்குள் நுழைவது சிரமமாக இருந்தது. ஏனெனில் அதற்கான வேவுத் தரவுகள் ஏற்கனவே எம்மிடம் இல்லாத நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட ஆயுத வலுவுடனேயே அணிகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. இரண்டாவது நிலை நிலக்கீழ் காப்பரணாகப் பலப்படுத்தப்பட்டிருந்தது. தற்போதைய நிலை படையினருக்குச் சாதகமாகவே இருந்தது. எனவே கேணல் விதுஷா எமது அணிகளை வேறு பகுதியால் நகர்த்துமுகமாகப் பின்னகருமாறு கட்டளையிட்டார். அதேநேரத்தில் கப்டன் ஆனந்தி, கட் டளையதிகாரி சாவித்திரி ஆகியோர் காயமுற்றதுடன் அணிகளைப் பின்னே வருமாறு கட்டளையிட்டார் விதுஷா. எமக்கு அடுத்த பாதையும் உடைக்கப்படாததால் படையி னரின் தாக்குதல் எங்கும் அதிகமாகவேயிருந்தது.

பருத்தித்துறை-நாகர்கோயில் வீதிக்கும் தென்னந் தோப்புக்கும் இடையிலான வெட்டைப் பகுதியை அண்டி, பூவரசு வேலி ஒன்று முன்னே நீண்டுசென்றது. அதனூ டாக முன்னோக்கி அணியை நகர்த்தும் முடிவை எடுத்தார் விதுஷா. பின்னே அழைக்கப்பட்ட அணிகளை மீள ஒழுங்குபடுத்தியதும் நிதி, 2 ஆம் லெப். செந்தமிழ், கனி மொழி ஆகியோருடன் இன்னும் சில போராளிகளை இணைத்து முன்நகரும்படி பணித்தார். அடுத்த கட்டமாக அணிகளோடு நகர்வதற்கு ஈழமங்கை தயாராக நின்றார். செந்தமிழ், கனிமொழி ஆகியோர் பூவரசு வேலியோரமாக நகர்ந்து தடையை அண்மித்தனர். அதேநேரம் RPG களும் எறிகணைகளும் சீறிப்பறந்து படையினரின் காப்பரண் களில் மோதி வெடித்தன. செந்தமிழ் முதலாவது டோபி



படிப்பகம்

padippakam



டோர்வை வைத்து இழுத்தார். அந்தோ... அது வெடிக்க வில்லை. மறுபடியும் வைக்கப்பட்டது டோபிடோ. இந்த நடமாட்டத்தினை இராணுவம் அவதானித்திருக்க வேண்டும் போலும். டோபிடோ வெடிக்கவும் அவ்விடத்தை நோக்கிச் சூடுகள் வரவும் சரியாக இருந்தது. 2 ஆம் லெப். செந்தமிழ் அவ்விடத்திலே தன் துடிப்பை நிறுத்திக் கொள்ள எமது அணி தொடர்ந்து தாக்கியது. எனினும் படைத்தரப்பின் பாதுகாப்பான நிலக்கீழ்க் காப்பரண்கள் அவர்களுக்குக் கைகொடுத்தது. மாலை வானம் சிவந்து இருள் பரவியது. நிலைமையைக் கணிப்பிட்ட கேணல் விதுஷா அணிகளை வேகமாகப் பின்னகரும்படி கட்டளை வழங்க அனைவரும் துயரத்துடனே பின்னே வந்து எமது பழைய இடங்களிலே நிலைகொண்டோம்.

தொடர்ந்து கிபிர் ரக தாக்குதல் விமானங்கள் எங்கும் தாக்குதலைச் செய்யத்தொடங்கின.

அன்றையநாள் தாக்குதலில் கட்டளையதிகாரி சாவித் திரி காயமுற்றதால் தொடர்ந்து அணிகளை காவியா பொறுப்பேற்றுக்கொண்டார்.

மறுநாள் விடிகாலை வெளிச்சத்தில் அந்த இடமே சுடுகாடாக இருந்தது. இராணுவத்தினரது முதலாவது நிலைவரிசை தாக்கப்பட்டதால் இரண்டாவது நிலை வரி சைகளின் வேலிகளும் இடையிடையே காப்பரண்களும் தெரிந்தன. உண்மையில் நிலைமை கடும் நெருக்கடியாகத் தான் இருந்தது. அத்தாக்குதலை அத்துடன் நிறுத்திக் கொண்டோம்.

பின்னொருநாள் முன்னேயிருந்த பனங்கூடல் மறைப்புக் களைப் பயன்படுத்தி இராணுவம் ஒரு பதுங்கித் தாக்கு தலைச் செய்வதற்காக வந்தது. சற்றுத்தள்ளி உயரத்தி லிருந்து முன்னரங்கை அவதானித்துக்கொண்டிருந்த எம்மவர்கள் அதனைக் கண்டு பின்தளத்துக்கு அறிவிக்க,



படிப்பகம்

padippakam



அவ்விடத்துக்கு நேரேயிருந்த .50 கலிபர் விளாசித் தள்ளியது. அத்தோடு வேகமாகப் பின்வாங்கிய இராணுவம் எமது முன்னரங்க வேலியை எரித்தது. அன்று முழுவதும் வெளியே தலைகாட்டவே முடியவில்லை. அன்றைய இரவு மிகுந்த சிரமத்தின் மத்தியில் எங்களுடைய எல்லாப் பகுதி வேலியையும் பழையபடி அடைத்து முடித்ததுடன், மறுநாள் படையினரின் வேலியை எரித்துப் பதுங்கிச் சூடுகள் செய்தோம்.

இவ்வாறு எந்நேரமும் நெருப்பள்ளி வீசியவாறே நாட்கள் கழிந்தன. இப்போதும் படைத்தரப்பு பாலத்தை நினைத்து ஏங்கிக்கொண்டுதானிருந்தது. இடையிடையே அவ்விடத்தைநோக்கிப் பதுங்கிச் சூடுகளை நடத்தியது. இரவுநேரத்தில் உலர் உணவுடன் புறப்படும் அணியை மறுநாள் இரவுதான் அடுத்த அணி மாற்றிவிடமுடியும். அதுவரையும் நுளம்புத்திரிகளுக்கு இசைவாக்கமடைந்த நுளம்புகளுக்கும், எந்நேரமும் சுவாசத்தினுள் நிறையும் சகிக்கமுடியாத சேற்று மணத்தின் மத்தியிலும் கூவிவந்து மோதி வெடிக்கும் எறிகணைகளுக்கு மத்தியிலும், இருக்க வேண்டியிருந்தது. எனினும் அப்பாலம் படைத்தரப்புக்கு எட்டாத தொலைவிலேயே இருந்தது.

ஓயாத அலைகள்-03 மூலம் யாழ் நெடுஞ்சாலையில் மீட்கப்பட்ட இரு முனைகளான எழுதுமட்டுவாளிலும் விளக்குவைத்தகுளத்திலும் தொடர்ச்சியாக எமது கொம்பனிகள் நிலைகொண்டிருந்தன. அதில் விளக்குவைத்தகுளத்திலும் அதற்கு வலப்புறக் கிராமமான மாதர்பணிக்கர் மகிழங்குளத்திலுங்கூடக் குறிப்பிட்ட காலம்வரை நிலைகளமைத்திருந்தோம்.

2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நடைபெற்ற தலைவர் அவர்களுடனான சந்திப்புக்கு வரும்போது, மாதர்



படிப்பகம்

padippakam



பணிக்கர் மகிழங்குளப் பகுதியில் நின்ற கொம்பனிக்கு மேஜர் அரசி பொறுப்பாளராக இருந்தார். சந்திப்பு முடிந்து விளக்குவைத்தகுளப்பகுதிக்குப் போனபோது கொம்பனியின் பொறுப்பாளராகக் கப்டன் குறிஞ்சியே போயிருந்தார்.

அங்கு அடுத்தடுத்து நிலைமைகளுக்கு ஏற்ப காப்பரண்களை அமைக்கும் பணி இருந்தது. அது காடும், பற்றைகளும், வெளியுமான பகுதியாகையால் எந்த நேரத்திலும், எந்தப் பாதையாலும் வந்து படையினர் தாக்கலாம். படையினர் எமது பகுதிக்குள் வந்து, ஒளிவிடங்களுக்குள் ஒளிந்திருந்து, எம்மைத் தாக்கும் வாய்ப்புக்களும் அதிகமாகவே இருந்தன. எனவே அப்பகுதி முழுவதும் இருவேளைகளிலும் தொடராகத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தோம்.

2000.05.18 அன்று கலைவிழியுடனான அணி விளக்குவைத்தகுளத்திலிருந்து வலது பக்கவாட்டாக 8கி.மீ. தூரம் காட்டுக்குள்ளால் நடந்துசென்று, மாதர் பணிக்கர் மகிழங்குளத்தை அடைந்தது. அங்கிருந்து படையினரின் பகுதியை நோக்கி பாலமோட்டைக்கு முன்புறமாக நகர்ந்தனர். அங்கு தங்கிநின்று இரண்டுநாட்கள் வேவுபார்த்து, 2000.05.20 அன்றைய விடிகாலை ‘L’ வடிவ நிலையெடுத்துக் காத்திருந்தனர். காலை 6.20 மணி. வழமையாகத் தமது முன்னரங்க நிலைகளருகாக முன்பகுதியால் வருகின்ற படையினர், இன்று வழமைக்கு மாறாகக் காட்டுப்பகுதியால் வந்தனர்.

நாங்கள் தாக்குவதற்கு ஆயத்தமாகப் பதுங்கியிருந்த பகுதியில் முதலாவதாக நிலைகொண்டிருந்த சீத்தாவைப் படையினர் கடந்தனர். அவ்வளவுதான். தயார்நிலையில் இருந்த அவரின் சுடுகலன் சீறியது. L வடிவ நிலையை நேராக நிமிர்த்தி, எல்லோரும் படையினரைத் தாக்கத் தொடங்கினர். ஐங்கவியின் 40மி.மீ எறிகணை செலுத்தி குண்டுகளைக் கக்கியது. அருளினி ஏவிய RPG



படிப்பகம்

padippakam



படையினரின் காவலரண்நோக்கிப் பாய்ந்தது. தேனுஜா வின் LMG பார்த்துப் பார்த்துச் சுட்டது. எல்லாமாக ஆறு நிமிடங்கள்தான் அந்தத் தாக்குதல் நடந்தது. இராணு வத்தினர் பலர் காயமடைந்தனர்.

கௌரி தனது செக்ஷனை உடனேயே பின்னகர்த்தி னார். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும், 2 ஆம் லெப். சீத்தாவின் வித்துடலையும் தூக்கிக்கொண்டு விளக்கு வைத்தகுளத்தை வந்தடைந்தது அணி.

காலத்துக்கும், தேவைக்கும் ஏற்ப கொம்பனியின் கட்டளையதிகாரிகளும், போராளிகளும் இடம் மாறிக் கொண்டிருந்தனரே தவிர, எப்போதும் நிலையாக ஒரு கொம்பனி யாழ் நெடுஞ்சாலை திறந்துவைக்கப்பட்ட 2002.04.08 வரை அங்கேயே நின்றது.

2000.06.06 அன்று பகல் நடந்த படையினரின் எதிர் பாராத தாக்குதலில் கப்டன் குறிஞ்சி, கப்டன் இலக்கியா உட்பட ஆறுபேர் வீரச்சாவடைந்தார்கள். கப்டன் குறிஞ் சிக்குப் பின் சுகந்தி, விடுதலை, தனா, வர்ணா, சுகி என பல கட்டளையதிகாரிகளும் நின்றனர்.

ஒருமுறை அங்கு கலைவிழியுடனான ஒரு வேவு அணி படையினரின் முன்னரங்கில் பெற்ற வேவுத் தகவல்களுக் கேற்ப பதுங்கித் தாக்குதலுக்கான அணியொன்று தயார்ப் படுத்தப்பட்டது. அந்தப் பகுதிக்குரிய வழிகாட்டிகளான ஆண் போராளிகளுடன் நடவடிக்கைக்காக நகர்ந்த அணி, படையினரைக் கொன்று நான்கு சுடுகலன்களையும் எடுத் துக்கொண்டு வெற்றிகரமாக மீண்டது.

இத்தோடு நின்றுவிடாது தொடர்ந்து வேவுகள் பார்க்கப் பட்டன. எந்நேரமும் காவலுலாக்கள் நடந்தன. படைத் தரப்பின் ஒவ்வொரு அசைவும் அவதானிக்கப்பட்டுக் கொண்டிருக்க, பின்னரங்கில் ஒவ்வொரு சிறு சிறு அணி



படிப்பகம்

padippakam



களாக எடுத்து சூட்டுப்பயிற்சி உட்படப் பல பயிற்சிகள் வழங்கப்பட்டன. எல்லோரும், எப்போதும் தாக்குதலுக்குத் தயாராகவே நின்றிருந்தோம்.

தனங்கிளப்பிலிருந்து சாவகச்சேரிக்குச் செல்லும் வீதியை ஊடறுத்து நகரப்பகுதிக்குச் சற்றுப் பின்னாக நீண்டு, மீண்டும் வண்ணாத்திப் பாலத்தை அண்மிக்கிறது எமது முன்னரங்க நிலை. படையினர் நகரக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட, அவர்களின் நகர்வினை அவதானிக்கக்கூடிய இடங்களில் அணிகளை நகர்த்தி அதற்கேற்பவே நிலைகள் அமைக்கப்பட்டிருந்தன. காட்டாற்று வெள்ளம்போல் வரும் இராணுவத்தினை உள்ளே வரவிடாது மறிக்கச் சுடுகலன்களும் பொங்கி வரும் இராணுவம் போகுமிடம் எங்கேயெனச் சொல்வதற்காக எந்நேரமும் நடந்துதிரியும் முன்னணி அவதானிப்பாளர்களும், பகையணி எங்கே என்ற செய்தி கேட்டவுடன் எறிகணை போட்டுவிடத் தயாராக ஏவுதளங்களும், எறிகணை மழைக்குள், காயம் என்ற செய்தி வரும்போது எப்போதும்போல் உயிர்பிரியும் அந்தக் கணத்துள் அவர்களைக் காக்கவென ஊர்திகளும் களத்துள்.

இப்படியிருக்க, இராணுவம் வண்ணாத்திப் பாலத்துக்கும், மட்டுவிலுக்கும் இடையிலான பகுதியால் உள்ளே நுழையும் முயற்சியை மேற்கொண்டது. 2000.09.26 அன்றைய அதிகாலை விடியமுன் தொடங்கின வெடிகள். கனகம்புளியடிக்கு வந்துகொண்டிருந்தது இராணுவம். முன்னரங்கிலும் கடுமையான சமர். உலங்குவானூர்தி, பல்குழல் பீரங்கி, போதாக்குறைக்குக் கிபிர் ரக குண்டு வீச்சு விமானம் என இராணுவத்தினரின் ஆயுதப் பட்டியல் நீள, எமது துப்பாக்கிகளும் எறிகணை செலுத்திகளும் முடிந்தவரை முன்னேறும் படையினரை வீழ்த்திக் கொண்டிருந்தன. பரந்தவெளி, முழுமையான



படிப்பகம்

padippakam



பாதுகாப்பற்ற காப்பரண்கள், உதவியணியை விரைவில் எதிர்பார்க்கமுடியாத தூரம். அந்த உப்பு வெளியிலே நின்று கடுமையான தாக்குதலைச் செய்தது மேஜர் தமிழ் செல்வியின் அணி. தொடர்ந்து நின்று சண்டையிட்டு வீண் இழப்பை ஏற்படுத்த விரும்பாத கட்டளைப்பீடம் அவர்களைப் பின்னே வரும்படி கட்டளை வழங்கியது. தொடர்ந்து பின்வாங்கிவந்த அணி மட்டுவில் பகுதியில் மக்கள் குடியிருப்பை அண்டியதாகப் புதிய நிலைகளை அமைத்தது. அத்தாக்குதலில் 2 ஆம் லெப். அன்புமதி வீரச்சாவைத் தழுவினார். சிறிய வீடுகளையும், பூவரசு வேலிகளையுங்கொண்ட அக்கிராமத்தினூடே போகும் குச்சொழுங்கைகள் பதுங்கிச் சூட்டுக்கு வாய்ப்பளிக்கத் தொடங்கின.

இக்காலகட்டத்தில் எல்லாக் களமுனைகளும் இராணு வத் தாக்குதலை எதிர்பார்த்தவண்ணம் இருந்தன. பல தாக்குதல்களில் ஏற்பட்ட இழப்புகளால் உண்டான வெற்றி டங்கள் முழுமையாக நிரப்பப்படாத நிலையில் நாம் இருந்தபோது, அதிக தொகையோடும், ஆயுத வலுவோடும் இராணுவம் இருந்தது. எனவே உறுதியுடன் நின்று முடிந்த வரை இராணுவத்துக்கு இழப்புகளை ஏற்படுத்தத் தீர்மானித்தோம். ஓயாது சுழன்ற கண்ணிவெடிப்பிரிவு புதியபுதிய கண்ணிவெடிகளைக் களமுனைக்கு அறிமுகப்படுத்தியது. அவை இராணுவத்தினரின் கால் களைப் பதம்பார்க்கக் காத்திருந்தன. ஒருநாள் மட்டுவில் பகுதியில் நின்ற மேஜர் தமிழ்ச்செல்வி எதிர்பாராத விதமாகப் படையினரின் பதுங்கிச் சூட்டில் வீரச்சாவடைந் தார்.

மீண்டும் படையினரின் ஒரு முன்னகர்வு. படைத்தரப்பு முன்னேறுவதும் நிலத்தைக் கைப்பற்றுவதுமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது என யாரும் நினைக்கலாம். ஆனால் நிலத்தை மீட்பதற்குக் கொடுத்த விலையைவிட, மீள இழக்கும்போது கொடுத்த விலை அதிகம் என்பது



படிப்பகம்

padippakam



நம்புவதற்குச் சற்றுக் கடினமான விடயம். சாவகச்சேரி என்ற பெரு நகரம் எமது கையில் வீழ்ந்தபோது இருந்ததை விட, இராணுவம் இப்போது ஆயுத பலத்தையும் கள முனைக்கான ஆட்பலத்தையும் அதிகரித்திருந்தது. ஒவ்வொரு அடியாக எம்மால் நிலம் மீட்கப்பட்டுக்கொண்டு வருகின்றபோதுதான், நிலைமையைப் புரிந்துகொண்ட அண்டை நாடுகள் சிறீலங்காவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யத் தயாராகின.

**2000**.11.16 அன்றைய காலையும் நெருப்பாக விடிந்தது. கட்டளையதிகாரி ஜமுனாவுடன் நின்ற கலைமதி, வதனி, பூமதி ஆகியோரின் அணிகள் இராணுவத் தாக்குதலுக்கு முகம் கொடுத்தன. ஆகக் குறைந்தது 200மீ. ஆகவும் அதைவிடச் சூழலுக்கு ஏற்றவாறாக அதிகரித்துமுள்ள நீண்ட இடைவெளி கொண்ட முன்னரங்கில் காவல் உலாக்கள் மூலமே நிலப்பரப்பு பாதுகாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இதனால் இராணுவம் இரகசியமாக உள்நுழைந்து தாக்குதலைத் தொடுப்பது இலகுவாக இருந்தது. உண்மையில் முன்னரங்க நிலைகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைத்து நாம் நிலைகொண்டிருந்தோமானால், ஒரேமுறையிலான இந்த இராணுவ முன்னேற்றங்களை முறியடித்திருக்க முடியும். ஆனால் ஆட்பற்றாக்குறை என்ற ஒரேயொரு காரணி எமக்குப் பின்னடைவைத் தந்துகொண்டுதான் இருந்தது.

கனகம்புளியடி வீதி, நெடுஞ்சாலை என ஒவ்வொரு வீதிகளாலும் உள்ளே வந்து பரவிவிட்ட இராணுவத்தை மறிக்கவேண்டும். இல்லையேல் இன்னும் அகன்ற நிலப் பரப்பைத் தன்னகப்படுத்தி நிலையெடுக்க இராணுவம்



படிப்பகம்

முயற்சிக்கும். எனவே எல்லா அணிகளும் இயன்றவரை படையினருக்கு இழப்பை ஏற்படுத்தியபடியே விலகி வந்து பின்னால் ஒரு மறிப்பு நடவடிக்கையைச் செய்து தாக்கிக் கொண்டிருந்ததோடு அவர்களின் முன்னேற்றத்தையும் தடுத்து நிறுத்திக்கொண்டோம். புறப்பட்ட இடத்தில் இருந்து 1கி.மீ. இலேயே இப்போது இராணுவம் தடுத்து நிறுத்தப் பட்டது.

தொடர்ந்து மட்டுவில் பகுதியில் நின்ற அணிகள் நுணாவிலில் நின்ற அணிகளுடன் இணைக்கப்பட்டன. மேலும், வன்னியிலிருந்து இரு பிளாட்டூன்கள் எங்களை வந்து சந்தித்தன. புத்துணர்வு பிறந்தது.

"வன்னியில் இருந்து ரீம் ஒண்டு வருது. இனி நாங்கள் இறுக்கமாகத்தான் நிற்கவேணும்"

ஒவ்வொரு கட்டளையதிகாரிகளும் எண்ணிக்கொண் டார்கள்.

ஆனந்தியுடன் வந்த சுகந்தியின் அணி நுணாவில் பகுதியிலும், மாலதியுடன் வந்த நல்லரசியின் அணி தனங்கிளப்பிலும் நிலைகொண்டன.

படையினருக்கு வாய்ப்பான பகுதியை விடுத்து, வாய்ப் பற்ற பகுதியிலே எம்மை நிலைப்படுத்திய விதுஷா, இதன்மூலம் இராணுவத்துக்கு அதிக இழப்பை ஏற்படுத்தி எமது இழப்பைக் குறைக்கவேண்டுமெனத் தீர்மானித்தார். ஏனெனில் குறுகியகால இடைவெளியில் இதுநாள்வரை நடைபெற்ற இராணுவ முன்நகர்வுகள் தந்த தொடர் இழப்பு எம்மிடையே சோர்வை ஏற்படுத்திவிட்டிருந்தது. தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்கள், பதுங்கித் தாக்குதல் என ஓய்வற்ற நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருந்த அணிகளுக்கு 'நெருக்கடியற்ற கள ஓய்வைக்' கொடுப்பதன்மூலம் அடுத்த கட்டத்துக்கான தயார்ப்படுத்

padippakam



தலைச் செய்தார். படைத்தரப்பு விரைவில் ஒரு முன்னேற்றத்தைச் செய்யும் என்று ஏற்கனவே தெரியும். இதனால் எமக்கு வாய்ப்பான பகுதிகளில் நாம் நிலை கொள்வதன்மூலம் வாய்ப்பற்ற பகுதியூடாக இராணுவம் நகரவேண்டிய தேவையை ஏற்படுத்தியதுடன், முடிந்த வரை நேரடிச் சண்டையைத் தவிர்த்து இராணுவத்துக்கு இழப்பை ஏற்படுத்த விரும்பினார்.

அதன்படியே நெடுஞ்சாலையை ஊடறுத்து இடமும், வலமுமாக சுகந்தி, வதனி, குயில் ஆகியோரது அணிகள் முன்னரங்க நிலைகளில் தம்மைத் தயார்ப்படுத்திக்கொண்டன. தாக்குதலுக்கு ஏற்றவகையில் நிலைகளை அமைக்கும் பணி நடந்துகொண்டிருக்க, சுகந்தி தன்னுடைய அணிகளுக்குச் செய்யவேண்டிய பணிகளைப் பகிர்ந்தளித்தபடி வந்துகொண்டிருந்தார். நேரம் ஒன்பதைக் கடந்திருந்தது.

"ஏய், இதென்ன வேலிக்கு அந்தப் பக்கம் ஆண்களின் குரல் கேட்கின்றது. இந்தப் பக்கம் அவர்கள் ஒருவருமே இல்லையே என்று யோசித்தவாறே எட்டிப் பார்த்தபோது வேலியிலிருந்து 50மீ. இல் ஒரு படை வீரன் **wireless receiver** இல் கதைத்துக்கொண்டிருந்தார். அப்போதுதான் அங்கே நாம் புதிதாகக் காப்பரண் வேலை செய்துகொண்டிருந்தோம். இராணுவம் நிற்பதை நான் அறிவிப்பதற்கிடையில், அவர்களின் பக்கமிருந்து எறிகணைகள் கூவிக்கொண்டு வந்தன. அதிலேயே நின்று தாக்குவதற்கு வாய்ப்பில்லை.

சிறிது தூரம் தள்ளி வந்துவிட்டு, அவ்விடத்துக்கு எறிகணைகளை வீழ்த்தும்படி முன்னணி அவதானிப்பாளர்களை விட்டுவிட்டு, அணிகளுக்குக் கிட்டே வர, முன்புறம் சண்டை தொடங்கிவிட்டது. திருப்பித் தாக்கியவாறே ஜமுனாவுக்கு நிலைமையைச சொல்லிக்கொண்டிருந்தபோது, யாழ் நெடுஞ்சாலையால் இராணுவத்தினர் எமக்குப் பின்புறமாகப் போய்க்



படிப்பகம்

கொண்டிருந்தனர். அவர்களுக்கு எறிகணை வீழ்த்தும்படி கேட்டுக்கொண்டிருந்தார் ஆனந்தி. நெடுஞ்சாலைக்கு இடதுபுறமாக 82மி.மீ. எறிகணை செலுத்திகள் இரண்டு நின்றன. அவர்களின் உதவியோடு எறிகணைகளை ஏவியவாறே முன்புறமாகப் படையினர் உள்நுழையாமல் தடுத்துக்கொண்டிருந்தோம். அது பகல்வேளை என்பதால், நிதானமாகப் பார்த்துச் சுடக்கூடியமாதிரி இருந்தது. இராணுவத்தினருக்கும் அப்படித்தான்.

நுணாவில் வீதியாலும் படையினர் வந்துகொண்டிருப்பதாக நடைபேசியில் கதைப்பது கேட்டது. இரண்டு வழிகளாலும் வேறு அணிகள் மறித்துச் சண்டையிட்டுக்கொண்டிருந்தன. நேரம் போகப்போக நிலைமை மாறிக்கொண்டு வரத்தொடங்கியது. சில நேரங்களில் சிலருடைய தொடர்புகள் இல்லாமலும் போயின. இதனால் ஏனையோரை உடனேயே பின்னகரும்படி கட்டளைப் பணியகம் பணித்தது. தாக்குதலைச் செய்தவாறே எல்லோரும் எமது அணிகளைப் பின்னகர்த்தினோம்.

பின்னகருகின்ற கட்டளை ஆனந்திக்குக் கேட்கவில்லைபோலும். பழைய இடத்திலேயே நின்று அடித்துக்கொண்டிருக்கின்றதாகச் சொன்னார்.

பிறகு நேரடியாகக் கட்டளையை வழங்கியபின் தான் ஆனந்தியின் அணி பின்னே வந்தது. ஒரு சிலரின் இழப்புகளோடு இராணுவத்தை மறித்து வைத்துக்கொண்டிருந்த அணியோடு இணைந்து கைதடிக்கு அண்மையில் புதிய முன்னரங்கை அமைத்தோம்”

என்ற சுகந்தி,

padippakam



"கட்டளை கிடைக்கவில்லை என்பதால் அணிவரத் தாமதமாகிவிட்டது. அவர்கள் வீதிக்கு வலதுபுறமுள்ள வெளியான பகுதியில் மிகவும் சிரமப்பட்டுத்தான் வந்துசேர்ந்தார்கள். கமலினியின் அணி வந்து சேர இருண்டுவிட்டது. பிறகுதான் பார்த்தால், தமிழவளைக் காணவில்லை. காயப்பட்ட தமிழவளை முன்னதாகவே பின்னுக்கு அனுப்பியிருந்தோம். அணிகளை அனுப்பி நாலைந்து நாட்கள் தேடினோம். ஐந்தாம் நாள் பல சிரமங்களின் பின் அவர்வந்து சேர்ந்தார்"

என்று முடித்தார்.

தமிழவளின் அனுபவமோ வித்தியாசமானதாக இருந் தது.

60மி.மீ எறிகணை செலுத்தியுடன் சாவகச்சேரிக்குச் சென்ற தமிழவள், அத்தாக்குதல் நேரத்தில் முன்னரங்க நிலையிலே நின்றிருந்தார். எல்லா அணிகளும் பின்ன கர்ந்தபோது ஆனந்தியின் அணியுடன் இணைந்து வந்து கொண்டிருந்தார் அவர். மக்களின் குடியிருப்புக்களைக் கடந்து தச்சன்தோப்பு வெளியினுள் இறங்கி ஊர்ந்துவரத் தொடங்கியபோதுதான் இராணுவம் இவர்களைக் கண்டு தாக்கத்தொடங்கியது. எழுந்து நின்றால் முழங்காலை மட்டுமே மறைக்கக்கூடிய அந்த வயற் பகுதியினுள் வரப் புக்களைக் காப்பாகப் பயன்படுத்தி நிலையெடுத்துத் தாக்கு தலைச் செய்துவிட்டு பின்னகர்ந்தனர். வெடிபொருட்கள் முடியத்தொடங்கியிருந்தன. அதனால் வரம்பு, சேறு, பற்றை எல்லாவற்றையும் கடந்து வேகமாக ஊர்ந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் செய்த பதிற் தாக்குதலையடுத்து முன்னேறு வதை நிறுத்திய இராணுவம் அப்பகுதியைநோக்கிச் சுடத் தொடங்கியதுடன், ஐயம் ஏற்படுகின்ற இடங்களுக்கெல் லாம் எறிகணைத் தாக்குதலைச் செய்தபடியிருந்தது.



படிப்பகம்

அந்நேரம் மலர்விழி, தமிழவள் ஆகியோர் காயமுற்றது டன் அனைவரும் சிதறத்தொடங்கினர். வானத்தில் 'ஆளில்லா வேவு விமானம்' சுற்றிக்கொண்டிருக்க, ஒவ் வொருவரும் தம்மை மறைத்துக்கொண்டு நகரமுற்படவும் அவர்களிடையேயான தொடர்பும் இல்லாமற்போனது. அந் நேரம் இருள் நிலத்தைக் கவ்வத் தொடங்கவும், எல்லாத் திசைகளிலும் ஆயுதங்களின் வெடித்தல் ஒலியைத்தவிர வேறேதும் கேட்கவில்லை. இதனால் இராணுவமோ, எம்ம வரோ எங்கே என்பதையே கண்டுபிடிக்க முடியாதிருந்தது.

காயமுற்ற தமிழவள் சிறிதுதூரம் வந்ததும் மயங்கிப் போனார். இன்னமும் இராணுவம் அமைதியடைய வில்லை. கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலத்துக்கு மேல் கழிந்துபோயிருந்தது. மெல்லக் கண் விழித்தவருக்குச் சற்றுத் தூரத்தே தமக்குள் கதைத்துச் சிரித்தபடி இராணு வம் சென்றுகொண்டிருந்தது தெரிந்தது. கையிலிருந்த குண்டைப் பிடித்தபடி புல்லுக்குள் இன்னும் தன்னை மறைத்துப் படுத்திருந்தார். வானத்தில் மெல்லிய மஞ்சள் நிறத்தில் நிலா அழுதுகொண்டிருந்தது.

காயமுற்று முறிந்து நரம்புகளில் தொங்கிக்கொண்டி ருந்த காலின் வலியால் ஓவென்று கத்தவேண்டும் போலிருந்து.

'மற்றவை என்ன கஸ்ரப்பட்டுக்கொண்டு எங்க நிக் கினமோ'

என்ற நினைவே துணிவைத் தர, மீண்டும் முன்னேறி னார். சேற்றுநீர் பட்டுக் காயம் எரிந்தது. இடதுகால் அசை யவே மறுத்தது. எனினும் மனம்மட்டும் 'அநியாயமாகச் சாகக்கூடாது' என்ற வைராக்கியத்துடன் இருந்தது. நாட் களை எண்ணியபடியே அவர் வந்துகொண்டிருந்தார்.

padippakam



எதையுமே நின்று அவதானிக்கமுடியாத நிலையிலே, எறிகணைச் சத்தங்களின்மூலம்மட்டுமே எமது பகுதி இதுவாகத்தான் இருக்குமென ஊகிக்கமுடிந்தது. அப் பகுதியை நோக்கினார். கண்ணுக்கெட்டிய தூரம்வரை எதனையும் காணமுடியவில்லை. வெயில் உரக்க முன் தொடர்ச்சியாக ஊர்ந்தும், பின் சற்று ஓய்வெடுத்து வயிற்றினுள் நீரை நிரப்பி, மீண்டும் நகர்ந்து... இப்படியே நேரம் நகர்ந்து, பொழுது கடக்க நான்காம் நாள் காலை விடிந்தது.

இப்போது இராணுவத்தின் பகுதியைக் கடந்து இரு தரப்புக்கும் இடைப்பட்ட பகுதியுள் வந்திருந்தார் தமிழவள். இவர் வந்துசேரவும் விடியவும் சரியாக இருந்தது. சிறிது தூரம்தான் நகர்ந்திருப்பார், கடகடவென எறிகணைகள் வந்து வீழத்தொடங்கின. சுற்றிச் சுற்றி வீழும் எறிகணை களுக்குப் புல்லுப் பற்றைக்குள்ளா பாதுகாப்புத் தேட முடியும்? எங்கோ உயரத்தில் நின்று இராணுவம் அவ தானித்துக்கொண்டிருக்கின்றது என்பதுமட்டும் தெளிவாகப் புரிந்தது. அதற்கேற்ப புற்களின் மறைப்பினூடாக வரத் தொடங்கினார். அன்று மாலையே எமது முன்னரங்க நிலைகளுக்குச் சற்று முன்னதாக வந்துசேர்ந்தவரைக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போராளிகள் கண்டு மீட்டனர். ஐந்து நாட்களாக வயல்களில் தேங்கிக்கிடந்த நீரைத்தவிர எதையுமே நுகர்ந்திராத அவர் மிகுந்த சிரமத் துடன் வந்துசேர்ந்திருந்தார்.

இப்போது சாவகச்சேரி முன்னரங்க நிலை கைதடி, தச்சன்தோப்பினூடாகத் தனங்கிளப்புக்கு நகரத் தொடங்கியது. இதன்பின் சுகந்தி அரியாலைக்கு மாற்றப்பட, அவ்விடத்துக்குப் பூமகள் விடப்பட்டார். கைதடிப் பகுதியில் பூமகள், ஆனந்தி ஆகியோரின் பிளாட் டூன்கள் நிலைகொள்ள, நல்லரசியின் பிளாட்டூன்



படிப்பகம்

padippakam



தனங்கிளப்புப் பகுதியிலேயே நின்றது. இராணுவம் அடுத்த கட்டத்துக்கு நகரும் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது. எனவே இம்முறை வழமையைவிட அதிக இழப்பை இராணுவத்துக்கு ஏற்படுத்துவதில் அக்கறை கொண்டோம். அதனால் கண்ணிவெடிகள் முக்கிய இடங்களில் புதைக்கப்பட்டதுடன் படையினர் செறிவாக வரக்கூடிய பகுதிகளை ஊகித்து அவ்விடங்களில் புதிய வகைக் கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டன. இந்த வகைக் கண்ணிவெடிகள் விதைக்கப்படும் இடம் ஓரளவு பரந்த வெளியாக இருப்பதுடன், அப்பகுதியில் இராணுவம் அதிகளவில் வரக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இல்லையெனில் அது பயனற்றுப் போய்விடும். எனவே இவ்விடயங்களில் அதிக கவனம் எடுக்கப்பட்டு, தயார்ப் படுத்தப்பட்டது.

2000.12.16 அன்றைய அதிகாலை பூசைக்கு முந்திய காண்டாமணி ஓசைபோல இரண்டொரு எறிகணைக் கூவலுடன் விடிந்தது. ஐந்து நிமிடங்கள்கூடக் கடந்திருக்காது. கூவிக்கொண்டு பறக்கத் தொடங்கிய எறிகணைகளுடன் சீறிப் பறந்தன ரவைகள். அந்தத் தாக்குதலுக்கான ஆரம்பத்துடன்தான் அன்றைய அதிகாலையே விடிந்தது.

சென்ற 5 ஆம் திகதி நடந்த தாக்குதலின்பின், பத்து நாட்களிலேயே அடுத்த கட்டம் தொடங்கிவிட்டது. கிடைத்த அந்தப் பத்து நாட்களுள் விரைவாக காப்பரண்கள் அமைக்கப்பட்டு, உருமறைக்கப்பட்டு, முன்னரங்க நிலைகளுக்கான இலக்கங்கள் குறிக்கப்பட்டு... இப்படி எத்தனை எத்தனையோ பணிகள் எல்லாம் செய்து முடிக்கப்பட்டிருந்தன.

முன்னரங்க நிலை முழுவதும் கந்தக நெடி காற்றில் வீசியது. ஒவ்வொரு இடைவெளிகளினுள்ளாலும் ஊடுருவவே இராணுவம் முயன்றுகொண்டிருந்தது.



படிப்பகம்

padippakam



தமிழ்த்தென்றல், அன்புச்செல்வி ஆகியோரின் 82மி.மீ. எறிகணை செலுத்திகளுடன் குட்டிசிறீ படையணியினரின் 120மி.மீ. களும் தமக்கேயுரித்தான விரைவுடன் எறிகணை உதவியை வழங்கிக்கொண்டிருந்தன. தனங்கிளப்புப் பகுதியில் நின்ற அணிக்குப் பெரியளவில் தாக்குதல் நடக்கவில்லை. எனவே அவ்வணி தனதிடத்திலே தரித்து நிற்க, ஏனைய அணிகள் கடுஞ்சமர் செய்தன.

'ஒன்றில் இராணுவம், அல்லது நாங்கள்' என்றவாறு சமர் நடந்தது. எம்மில் பலர் காயமடைந்து களத்திலிருந்து பின்னே அகற்றப்பட, அந்த இடைவெளிகளூடாக அங் குலம் அங்குலமாக இராணுவம் முன்னேறத்தொடங் கியது. முடிந்தவரை தடுப்பதென்பதே எல்லோரது நினை வாகவும் இருந்தது. எப்போதும்போல இப்போதும் இடை வெளிகள் அதிகரித்தன. நேரம் நடுப்பகலை எட்ட, எல்லா அணிகளையும் பின்னே வரும்படி கட்டளை கிடைத்தது. படிப்படியாக, ஒவ்வொரு நிலையாக, நாம் பின்ன கருகின்றோம் என்பது தெரியாமலேயே பின்னே வரத் தொடங்கியது அணி. முன்னேறுவதுபோல் பாவனை செய்துகொண்டே நாம் பின்னே வந்து புகையிரத வீதியை அண்டியதாக நிலைகொண்டோம்.

முன்னரே எதிர்பார்த்திருந்தபடி அந்தப் புதியவகை வெடிமருந்துத் தொகுதியை அண்மித்த படையினர் சாவின் வாசலுக்குள் புகுந்தனர். ஏனையோர் அவ்வாறன இடங் களுக்கு வரவே அஞ்சினர். எமக்குப் பாரிய இழப்புக்கள் ஏதுமின்றி, 'முடிந்தவரை இராணுவத்தை இழப்புக் குள்ளாக்கிக்கொண்டு இப்போது பின்னே வந்திருந்தோம்.

மீண்டும் புதிதாகப் பல நிலைகள் எழுந்தன. புகையிர வீதியூடாக தனங்கிளப்புச் சந்தியையும் தாண்டி நீண்ட தூரத்துக்கு அமைக்கப்பட்டன. தூரத்தே தெரிந்த சாவகச் சேரி நகரப்பகுதி வாடிப்போய் கிடந்ததுபோல இருந்தது. முன்னே வேவு அணிகள் நகர்த்திவிடப்பட்டு இராணுவ



படிப்பகம்

padippakam



நடமாட்டம் அவதானிக்கப்பட்டது. இடையிடையே பனங் கூடலையும் அதன் கீழே பற்றைகளையும் கொண்டதுடன், வயல்கள், வரம்புகள், உயர்ந்த புற்கள் என்றவாறாக அமைந்த இடம் அது. எல்லோர் மனங்களிலும் 'மீண்டும் முன்னேற வேண்டும்' என்ற வேகமே குடிகொண்டிருந்தது. புதிய அணிகளின் வரவை நாம் எதிர்பார்த்துக் காத் திருக்க, அரியாலைக் களமுனையில் இராணுவத்தின் ஒரு முன்னேற்ற நடவடிக்கை. அது கினிகிர-07 ஆக இருந்தது.

குடாநாட்டின் எல்லாக் களமுனைகளுமே தயார் நிலையில் நின்றன. பரந்த நிலப்பரப்புக்களைப் பாதுகாக்கக் குறிப்பிட்டளவு போராளிகளே இருந் தமையால், பெரும்பாலும் 200மீ. க்கு மேற்பட்ட இடை வெளிகளில் நிலைகள் அமைக்கப்படத்தொடங்கின. அப் போது தான் சாவகச்சேரிப் பகுதியில் நின்ற ஜமுனா அரியாலைக்கு மாற்றப்பட்டார். மணியந்தோட்டக் கடற் கரையிலிருந்து 'யாழ் வளைவு' வரையான பகுதியில் பூம்புகார் வீதிக்கு இடதுபக்கமாக ஜமுனாவும் வலது பக்கமாக சுகியும் பொறுப்பேற்றனர். போர்ப் பயிற்சி ஆசிரியரான சுகி அணிகளுக்குப் பயிற்சி அளித்ததோடல் லாது, நடவடிக்கையிலும் பங்கேற்றிருந்தார்.

மணியந்தோட்டத்தின் முன்பகுதியில் நடக்கத் தொடங்கி கஜூ மரக்கூட்டங்களையும் சிறிய அடர் பற்றைகளையும் கடந்து வலதுபக்கத்தால் வந்துகொண் டிருக்க, ஒன்றிரண்டு கட்டிடங்களுடன்கூடிய கருகிப்போன தென்னந்தோப்புக் கண்ணில் படும். அப்படியே, உடைந்திருக்கும் வீட்டின் சுவரின் ஒரு பகுதியால் ஏறிக்கடந்து பாழடைந்து போயிருக்கும் குடியிருப்பைத் தாண்டினால், ஜமுனாவின் கட்டளைத் தளம் தென்படும். அதனைக் கடந்தால் முன்னே அடர் பற்றைகளைக்



படிப்பகம்

padippakam



கொண்டதான நீண்ட வெட்டை. அதனை அடுத்து பூம் புகார் வீதி. இப்படியாக அந்தப் பகுதி அடிக்கொரு வேறு பாடுகளைக் கொண்டதாக இருக்க, சுகியின் பகுதியோ பகலில் தலைகாட்ட முடியாத படு வெட்டையாக இருந் தது. பூம்புகார் வீதிக்கு இடமாக புகையிரத வீதியும் எமது முன்னரங்க வரிசையும் குறுக்கறுக்கும் இடத்தில் சீமெந்தால் கட்டப்பட்ட பதுங்குகுழி உள்ளது. அது 31 ஆவது நிலையாக்கப்பட்டது. அவ்வீதியில் அமைக்கப் பட்ட 21 ஆவது நிலைக்கு வலதுபக்கமாக நீண்டிருந்த மண் அணை ஒன்றே பாதுகாப்புக்குகந்ததாக இருந்தது. முன்பு அந்தப் பகுதியைக் கைப்பற்றும்போது எமக்கு ஏற்பட்ட அதே நெருக்கடியை நாங்கள் இப்போதும் எதிர் நோக்கினோம்.

பூம்புகார் வீதிக்கு வலதுபக்கத்தில் இரவுவேளையிலே எல்லாச் செயற்பாடுகளும் நடைபெறும். உலகப்பந்தின் எதிரெதிர்ப் பகுதிகள்போலவே இங்குள்ள போராளிகளின் நடவடிக்கை இருந்தது. ஜமுனாவின் பகுதியில் காலை, மதியம், இரவு என உணவு சீராகக் கிடைக்கும். சுகியின் பகுதிக்கு உணவு கிடைக்கும் நேரம் முன்னிரவு, நள்ளிரவு, விடிகாலை என மாறும். இத்தனைக்கும் இரு அணி களையும் பிரித்தது பூம்புகார் வீதி மட்டுமே. வலதுபக்க அணிக்கு இருள் கவியும் நேரத்துக்கு நிலை அமைப்பதற் கான மரக்குற்றிகள், பலகைகள், படங்குகள், மண்வெட்டி கள் என அனைத்துப் பொருட்களும் வந்துசேரும். அத் துடன் அவர்களுக்கு இரவு பகலாகிவிடும் எனினும் வேலை முடிவதற்குள்ளேயே இரவு முடிந்துவிடும். விடிந்த பின் தலைகாட்டினால் எறிகணைகள் வந்துவிழும்.

இப்படி எமக்குத் தொல்லை தந்துகொண்டிருந்த படை யினரை நாம் சும்மாவிடலாமா? தாக்குதல் திட்டம் உடனே தயாரானது. இருபகுதிக் கட்டளையதிகாரிகளுமான ஜமுனாவும் சுகியும் திட்டம் வரைந்தனர்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

"கானகாவின்ர RPG முதல் அடியைத் தொடக்கும். அநோா பாலத்தேவன்ர 82மி.மீ. எறிகணை செலுத்தி சொல்லப்பட்ட இடங்களுக்கு எறிகணைகளை வீச, தாக்கு தலணி 31 மற்றும் அதின்ர இருபக்க பொசிசன்களில இருந்தும் துப்பாக்கிச்சூட்டைத் தொடங்கும். மிகுதிச் சண்டையை வோக்கி கவனிக்கும்"

என்றவாறாகத் திட்டம் தயார்ப்படுத்தப்பட்டது. தாக்கு தலுக்கான ஆரம்பநேரம் மாலை 7.00 மணியெனக் குறிக் கப்பட்டதுடன் மாலை 6.30 க்குப் பிறகு யாரும் காப்பரண் களுக்கு வெளியில் நிற்கக்கூடாது என்ற கண்டிப்பான கட்டளை எல்லோருக்கும் கிடைத்திருந்தது. அந்த மாலை நேரத்துக்காக அனைவரும் காத்திருந்தனர்.

நேரம் இப்போது மாலை 6.55 ஐத் தாண்டிக் கொண்டி ருந்தது. காப்பரண் வேலைக்கான பொருட்களை ஏற்றியபடி புறப்பட்ட உழவு இயந்திரம் பூம்புகார் வீதியிலுள்ள ஒரு பாலத்தை அண்மித்துக்கொண்டிருந்தது.

"சுகி கயல்விழி, சுகி கயல்விழி... என்ன மாதிரி எல் லாம் றெடியா?"

"ஓமோம். அதெல்லாம் றெடி. முழங்கின உடன தள்ளு றதுதான் வேலை"

இது சுகி.

"சரி ஆ... நன்றி.

சாவகச்சேரியில் கயல்விழி வீரச்சாவடைந்த பின் அவரது பெயரை ஜமுனா தனது கட்டளை பணியகத்துக்கு வைத்திருந்தார்.

padippakam



கானகாவின் எறிகணை செலுத்தியிலிருந்து எறிகணை ஒன்று பறந்துபோனது. உடனே நடைபேசிகளும் துப் பாக்கிகளும் உயிர்பெற்றன.

"சுகி இப்ப நிலைமை என்ன மாதிரி ஒவர்?"

"ஆக்கள் வெளிக்கிட்டுப் போய்க்கொண்டிருக்கினம். இப்ப கிட்டப் போயிற்றினம். எதிர்ப்பு ஒண்டும் பெரிசா இல்லை. இப்ப அடிச்சதில இருந்து 100மீ. கூட்டி வல மிடமாக நகர்த்தி அடிக்கச் சொல்லுங்கோ"

"சரி விளங்கிற்று"

இது ஜமுனா.

துப்பாக்கிச் சூடுகள், எறிகணை வீச்சுகள் எனத் தாக்கு தல் நடந்துகொண்டிருக்க,

"கயல்விழி, சுகி இந்தா ரீம் உள்ள போட்டுது. சிக்கல் இல்லை"

"சரி அப்படியே போகச் சொல்லு. வதனியின்ர ரீம் சப்போட்டுக்கு வருது. வேகமாகத் தள்ளட்டும். பழைய இடத்தில போய் நிக்கவேணும். விளங்கிற்றா"

கட்டளைகள் வேகமாகப் பறந்தன. இடைக்கிடை எறிகணை செலுத்தியும் துப்பாக்கிகளும் முழங்கின. கட்டளைகள்மட்டும் ஓயவில்லை. ஒருவர்தானும் ஒரு மி.மீ. ஆவது முன்னே நகரவில்லை. படையினரைச் சீண்டிவிட்டு, எல்லோரும் பாதுகாப்பாகப் பதுங்கு குழிகளினுள்ளே.

பதிலுக்கு RPG அடியுடன் தொடங்கிய படையினரின் எறிகணைத் தாக்குதல் இன்னும் நிற்கவில்லை. முதலில்



படிப்பகம்

துப்பாக்கிகளைப் பாவித்துக்கொண்டிருந்த இராணுவத் துக்குச் சற்றுநேரத்தின்பின் நிலைமை விளங்கிவிட்டிருக்க வேண்டும். எறிகணையால் சாத்திக்கொண்டிருந்தார்கள். அரியாலைப் பகுதியே அதிர்ந்து குலுங்கியது. வேலை செய்வதற்கான பொருட்களோடு வந்த உழவு இயந்திரம் எங்கும் நகரமுடியாமல் பாலத்துக்கருகில் பதுங்கிக் கொண்டது. அன்றைய இரவு வேலையும் இல்லாமற் போனது. இப்படிப் பலதடவைகள் எம்மவர்கள் படைத் தரப்பை ஏமாற்றியதுண்டு. இராணுவமோ தனது வெடி பொருள் இழப்பீட்டைக் கணக்கில் எடுக்காது கொட்டிக் கொண்டிருக்கும். நாம் எதிர்பார்த்ததும் இதையேதான். இவ்வாறு அவர்களுக்கு வெடிபொருள் இழப்பை ஏற் படுத்துவதில் கணிசமானளவு வெற்றியும் பெறமுடிந்தது.

இப்படித்தான் ஒரு நாள் 21 ஆவது காப்பரணைநோக்கி நாலைந்து இராணுவம் பதுங்கிப் பதுங்கி வந்துகொண் டிருந்தது. அக்காப்பரணுக்கு இடதுபக்கமாக ஒரு பனங் கூடல். அவதானிப்பது கடினம். ஆனாலும் அதில் தொடர்ந்து ஒருவர்மாறி ஒருவர் காவற்கடமையில் ஈடு பட்டுக்கொண்டிருப்பார். நன்றாக விடியாததால் முன்னே இராணுவம் பதுங்கிப் பதுங்கி வருவதுபோல் தெரிந்ததை, தூரத்திலேயே உறுதிப்படுத்த முடியவில்லை. எனினும் அவர் தன்னை மறைத்துக்கொண்டே அவதானித்தார்.

"ஆக்கள்தான் வருகினம்" தனக்குள் சொல்லியபடி பின்னால் நிற்போருக்கு சைகை காட்டி, விழிப்புநிலைப் படுத்தினார். படையினர் நன்றாகக் கிட்டே வந்ததும் எல்லோரது துப்பாக்கிகளும் இயங்கின. இதனை எதிர் பாராத படையினர் திகைத்து தமது ஆயுதம் ஒன்றையும் விட்டுவிட்டுக் காயமடைந்தோருடன் தப்பி ஓடி, தூர நின்று தாக்குதலைச் செய்துகொண்டே பின்வாங்கினர். முதல் நாள்தான் முன்னரங்க நிலைகளைப் பார்வையிட வந்த கேணல் விதுஷா, இந்நிலைப்பகுதியில் வந்ததும் அக்காப்பர ணுக்குப் படையினர் தாக்குதல் நடத்தக்கூடும் என ஜமுனா

padippakam



விடம் எச்சரித்து இருந்தார். அதேபோல மறுநாளில் நடந்த தாக்குதலில் அதனை முறியடித்ததால் உடனேயே கட்டளைப்பீடத்துக்கு நிலைமையை அறிவித்தோம். தொடர்ந்து பகல்முழுவதும் எறிகணை மழை தூறிக் கொண்டிருந்தது. அத்தோடு படையினர் தமது பதுங்கிச் சூட்டாளரைக் கொண்டுவந்து ஏற்றிவிட்டு, பகலில் எங் களது செயற்பாடுகளை முடக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பதிலுக்கு எமது பதுங்கிச் சூட்டணிகள் நகர்த்தப்பட்டன. இதனால் இராணுவம் தனது நடமாட்டத்தையும் கட்டுப் படுத்தவேண்டியதாயிற்று.

ஒருநாள் செக்ஷன் கட்டளையதிகாரி திருக்கோதையும் நிலப்பரப்பின் ஆள்கூறுகளைக் கணிக்கின்ற தமிழ் முல்லையும் நிலைகளின் இலக்கங்களைச் சோதித்தவாறு 31 இலுள்ள சீமெந்தாலான பதுங்குகுழியைநோக்கி வந்து கொண்டிருந்தனர். சற்று முதல் நடந்த எறிகணை வீச்சில் காப்பரண் வாசலினுள் நுழையும் இடத்தின் மறைப்பு சிதைந்துவிட்டிருந்தது. இதுவரை காப்புகளையும் மறைப்பு களையும் பயன்படுத்தி நகர்ந்துவந்த லெப். திருக்கோதை வேகமாக வாசலைக் கடப்பதற்கிடையில் சீறி வந்த ரவை ஒன்று அவரை நிலத்தில் சாய்த்தது. எத்தனையோ சண்டைகளுக்கு ஈடுகொடுத்த அந்த வீரமகளின் வித்துடல் தமிழ் மண்ணை முத்தமிட்டது.

இதுவரைநாளும் அரியாலைப் பகுதியில் நின்ற ஜமுனா, மேஜர் கயல்விழி உட்படப் பல போராளிகளின் வீரச்சாவுகள், சாவகச்சேரி வெளியேற்றம் என்பவற்றைத் தொடர்ந்து மீண்டும் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டார். சில நாட்களின் பின் அணிகள் கலந்து பிரிக்கப்பட்டு அரி யாலைக்கு வேறு அணி மாற்றப்பட்டது. குறிப்பிட்ட காலம் மணியந்தோட்டப் பகுதியில் நின்ற வதனியின் அணி கைதடி-கோப்பாய் வீதிக்கு மாற்றப்பட்டிருந்தது.



படிப்பகம்

padippakam



இப்படியாகத் தேவைக்கு ஏற்ப அடிக்கடி இடமாற்றம் நடந்துகொண்டிருந்ததால் எல்லோரது பாதங்களும் அனைத்துக் களமுனைகளிலும் பதிந்திருந்தன.

இப்போது அரியாலையில் மேஜர் சீத்தாவின் பிளாட்டூன் சுகந்தியுடன் விடப்பட்டிருந்து. இந்நாள்வரை Z எனப் பெயரிடப்பட்டிருந்த நிலை BC எனப் பெயரிடப் பட்டதுடன் "யாழ் வளைவு" அருகிலிருந்த காப்பரண் கைவிடப்பட்டிருந்தது. பழைய Z 21 நிலையிலிருந்து பின் னால் பூம்புகார் வீதியும் புகையிரத வீதியும் சந்திக்கின்ற பகுதிக்குச் சற்று முன்பே BC 1 என்ற நிலை அமைய, அதற்கு இடதுபக்கமாக ஏனைய நிலைகள் நீட்டப்பட்டன. BC 1-BC 5 வரை வெட்டைக்குப் பின்னேயுள்ள பனங்கூடலி னுள்ளும், அதற்கு இடமாக முன்னே 75மீ. இல் BC-6மீ. அமைய, ஏனையவை பழையபடி இருந்தன. BC 5 இல் கமலினி, கானப்பிரியாவுடன் இன்னுமிரு போராளிகளும் BC 7 இல் சீத்தாவுடன் இன்னுமிரு போராளிகளும் நின்ற னர். BC 7 இல் இருந்து முன்புறத்தைத் தெளிவாக அவ தானிக்கக்கூடியதாக இருப்பினும், வலதுபக்கவாட்டாகச் சற்றுப் பின்னே 50மீ. தூரத்தில் அமைந்துள்ள கல்வீடு ஒன்று பூதம்போல் இருந்து பின்பகுதியை மறைத்தது. எனவே அதனைக் கண்காணிக்கக்கூடிய வகையில் மேலு மொரு காப்பரண் அமைக்க முடிவுசெய்தனர்.

ஒரு குறிப்பிட்ட பகுதிதான் சீத்தாவின் பிளாட்டூனுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கு அப்பால் கடற்கரை வரை தலைநகரப் படையணியின் ஆண்போராளிகள் விடப் பட்டிருந்தனர். கிட்டத்தட்ட 1.5 கி.மீ. நீளமான பகுதியே இவர்களது கையில் இருந்தது.

தொடர்ந்து சாவகச்சேரி, வண்ணாத்திப் பாலம், அரி யாலையின் முன்பகுதி என நடந்த சமர்களிலெல்லாம் இராணுவத்துக்கு அதிக இழப்பைக் கொடுத்தபோதிலும், எமது ஆளணி இழப்புடன் மீட்ட பகுதிகளையெல்லாம்



படிப்பகம்

padippakam



இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது எல்லோருக்கும் வேதனையைக் கொடுத்தது. நிலங்களை மீட்கும்போது மட்டுமன்றி, மீள இழக்கும்போதுங்கூட அதிக இரத்தம் சிந்தப்படுவது தவிர்க்கமுடியாததாகியது.

அன்று 2000.12.21. தாக்குதல் நடக்கலாமென்ற அறி வித்தல் தரப்பட்டிருந்ததால் சீத்தாவின் பிளாட்டூன் மும்முர மாக முன்னரங்க வேலையில் ஈடுபட்டிருந்தது. BC 7 இன் பின்னே 150மீ. இல்தான் சுகந்தியின் கட்டளைத் தளம் அமைந்திருந்தது. எனினும் இடையே இருந்த அடர்ந்த பனங்கூடல் அவற்றுக்கிடையிலான பார்வைத் தொடர்பை முற்றாகத் துண்டித்துவிட்டிருந்தது.

அன்றைய மதியம் சுகந்தி தனது பகுதிக்குரிய நிலை களைப் பார்வையிட்டபடி வந்துகொண்டிருந்தார். ஒவ் வொரு நிலையில் நிற்பவர்களுடனும் கதைத்து, எப்படி இராணுவம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது, அதை எப்படி முறியடிக்கலாம் என விளக்கியபடி வந்து கொண்டிருந்தார். இறுதியாக, சீத்தா வேலை செய்து கொண்டிருந்த புதிய காப்பரணுக்கு வந்தார்.

“சண்டை தொடங்கிச்செண்டா, இந்தப் பங்கரில நிண்டு வாறவைக்கு நல்லாக் கொடுக்கவேணும். ஏற்கனவே நிறைய இடங்களை விட்டிட்டம்”

என்று சொல்ல, கவலையுடன் முகத்தை வைத்திருந்த சீத்தா திடீரென்று,

“உயிர்போனாலும் இந்த இடத்தை விட்டிட்டு வர மாட்டன்”

எனச் சற்று உரக்கவே சுகந்தியிடம் சொல்லிக்கொண் டார்.



படிப்பகம்

padippakam



"அப்படியில்ல சீத்தா. வீணா இழப்புக்களைச் சந்திக் கிறதைவிட, பின்வாங்கி வந்து திரும்ப முறையான அடி குடுக்கலாம். என்ன கட்டளை கிடைக்கிறதோ, அதன் படிதான் நீ செய்யவேணும்"

சொல்லிவிட்டுப் புறப்பட்டார் சுகந்தி. காப்பரண் வேலை முழுமையாக்கப்படாததால், பின்னேயிருந்த தமது பழைய நிலையிலேயே நின்றுகொண்டனர் சீத்தாவுடன் நிற்போர். இரவுப்பொழுது தூறலும், மழையுமாகக் கழிந்தது.

மறுநாள் காலை மிக அமைதியாக விடிய, நேரம் 5.30 ஐத் தாண்டிக்கொண்டிருந்தது. 'புயலுக்கு முந்திய அமைதிபோலும்' என நினைத்தவாறே மழையிருட்டைச் சொரிந்த வானத்தைப் பார்த்தனர். திடீரென எறிகணைகள் அதிர்ந்துவீழ, இராணுவத்தினரின் துப்பாக்கிகள் நெருப்புத் தணல்களை உமிழ்ந்தன. ஏற்கனவே எல்லாப் பகுதிகளி லும் சண்டைக்காக ஆயத்தப்படுத்தியிருந்ததால், அணி உடனேயே பதிற் தாக்குதலில் ஈடுபட்டது. எல்லா நடை பேசிகளுமே விழித்துக்கொள்ள, பின்னே நிறுத்தப் பட்டிருந்த எறிகணை செலுத்திகள் தமது பணியைச் செய்யத்தொடங்கின.

"முன்னால நிண்டு அடிச்சுக்கொண்டிருக்கிறான். ஆனால் உள்ளுக்க ஒரு பிரச்சினையும் இல்ல. நல்லா அவதானிச்சுக்கொண்டிருக்கிறம். சிக்கல் எண்டால் சொல்லுறம்"

என்ற சீத்தா தனக்குரிய அணித்தலைவிகளின் தொடர்பை எடுத்து நிலைமையை உறுதிப்படுத்தினார்.

முன்னரங்க நிலைகளின் போக்குக்கேற்ப வளைவாக அமைக்கப்பட்டிருந்த மறைப்பு வேலியருகே சீத்தாவின் நிலையிலிருந்து 100 மீற்றரில் அமைந்துள்ள BC 5 இலிருந்து கமலினியின் குரல் கேட்டது.



படிப்பகம்

padippakam



"மெயின் கமலினி, மெயின் கமலினி இப்ப எனக்கு முன்னுக்கு இருக்கிற பகுதிக்குள்ள ஆக்களின்ர நடமாட்டம் தெரியுது"

என அறிவித்தார். அந்நிலையில் நின்றபடி முன்னே வருகின்ற இராணுவத்தைமட்டும் துல்லியமாகத் தாக்க முடியுமேதவிர, பக்கவாட்டாக நகருபவர்களைத் தாக்குதலைத் தொடுத்துத் தடுப்பது என்பது சாத்தியம் குறைந்ததே. எனினும் சூழலின் ஒத்துழையாத தன்மை எங்களது மனவுறுதியைக் குறைத்துவிட முடியாதல்லவா? அங்கு நின்ற ஏனையோரின் ஆயுதங்கள் சுட்டுக்கொண்டிருக்க, BC 7 பக்கமாக இராணுவம் நகர்ந்துகொண்டிருப்பதை அறிவித்தார் கமலினி.

தாக்குதல் ஆரம்பித்தால் அப்பகுதிக்குள் இராணுவம் குவியவேண்டிவரும் எனக் கணிப்பிட்டு, புதிய வகை வெடிமருந்துத் தொகுதியொன்று ஏற்கனவே பொருத்தி வைக்கப்பட்டிருந்தது. படையினர் அவ்விடத்துக்கு வேகமாக ஓடிவரவும், மகிழ்நிலா அதனை வெடிக்கவைத்தார். அதில் பெருமளவு இராணுவத்தினர் சிதறி வீழ்ந்தது தெரிந்தது. இராணுவம் சற்றுப் பின்வாங்குவதுபோலத் தெரிந்தாலும், மீண்டும் புற்றீசல்போல வரத்தொடங்கினர். பனங்கூடற் பகுதியால் எதனையும் சரியாக அவதானிக்க முடியவில்லை.

பற்றைகளினூடே வேகமாக நுழைந்த இராணுவம் புதிய BC 7 இக்குப் பின்னால் பரவத்தொடங்கியது. எனினும் பின்னே இருந்த வீடு இராணுவத்தை எமது அவதானிப்பிலிருந்து மறைத்துவிட்டிருந்தது. சீத்தாவிடம் சுகந்தி நிலைமையைக் கேட்டபோது

"இன்னும் எனக்குக் கிட்ட வரவில்ல. சிக்கலெண்டா சொல்லுறன். நன்றி"



படிப்பகம்

padippakam



என்றவர் தனது 40மி.மீ. எறிகணை செலுத்தியால் முன்பகுதியைநோக்கிச் சுட்டுக்கொண்டிருக்க, ஏனைய துப்பாக்கிகளும் வேலைசெய்தன. சற்று முன்னர்தான் நிலப்பரப்பிலே ஆள்கூறுகளைக் கணிக்கின்ற இரு ஆண் போராளிகள் BC 7 க்கு வந்துசேர்ந்திருந்தனர்.

நேரம் செல்லச் செல்ல BC 11, 15, 18 ஆகிய நிலைகளை நோக்கி முன்பகுதியிலிருந்து எதிர்ப்பு அதிகமாகியதுடன், கடற்கரைப் பகுதியாலும் படையினர் முன்னேறத்தொடங் கவே, அங்குநின்ற போராளிகளைப் பின்னுக்கு வரும்படி கட்டளை வழங்கப்பட்டது. படிப்படியாக அந்நிலைகளிலி ருந்து அவர்கள் பின்னகரத்தொடங்கினர்.

"சீத்தா, நீ உன்ர வீட்டுப் பக்கம் கவனமாகப் பார். சிலவேளை உனக்குக் கிடைக்கும். உடன செல் சப்போட் எடு"

என்று சொல்லிய சுகந்தி ஏனைய இடங்களின் நிலை மைகளைக் கேட்பதற்காகத் தொலைத்தொடர்புக் கருவியின் இலக்கங்களை மாற்றினார். கோப்பாய்ப் பகுதி முழங்கிக்கொண்டிருந்தது.

BC 7 க்குப் பின்பக்கமாகச் சென்றுகொண்டிருந்த இராணுவம், இப்போது அக்காவலரணை அண்மிக்கத் தொடங்கியிருந்தது. இதுவரை நேரமும் முன்புறம் நோக்கித் தாக்குதலைச் செய்துகொண்டிருந்த துப்பாக்கி களைப் பின்புறமாகவும் திருப்பவேண்டியதாயிற்று. குறி பார்த்துப் பார்த்துச் சூடுகளை வழங்கி இராணுவத்தைக் கிட்டவரவிடாது தடுத்துக்கொண்டிருந்தது அவ்வணி.

இந்நேரம் பூம்புகார் வீதியைப் படையினர் அண்மித்தி ருந்தனர். "மெயின் சீத்தா... மெயின் சீத்தா, இப்ப எங்களுக்குப் பக்கவாட்டா அடிச்சுக்கொண்டிருக்கிறான். அந்த இடத்துக்குச் செல்லடிச்சுத் தாங்கோ"



படிப்பகம்

padippakam



இந்தக் குரல் கேணல் விதுஷாவுக்குத் தெளிவாகக் கேட்டது. உடனே கட்டளைப் பீடம் பரபரப்பானது. வரை படத்தைப் பார்த்த விதுஷா இராணுவம் வந்த இடத்தை யும், சூழலின் தன்மையையும் வேகமாகப் புரிந்து கொண்டார்.

"சீத்தா, நீ அப்பிடியே குடுத்துக்கொண்டு அடுத்த துக்குப் போ. அடுத்ததில நிண்டு குடுக்கலாம். இப்ப உதில நிக்கிற ஆக்கள் எல்லாரையும் வேகமாக ஒன்பதுக்கு எடு"

என்றார் கண்டிப்பான குரலில்.

"ஓமக்கா விளங்கிற்று. எங்களுக்கு ஒரு சிக்கலும் இல்ல. இதில நிண்டு நல்லாக் குடுக்கக்கூடிய மாதிரி இருக்கு. சிக்கல் எண்டால் உடனயே பின்னுக்கு எடுக்கிறன்"

எனப் பதிலளித்துவிட்டுத் தொடர்ந்தும் அதிலே நின்று சுட்டுக்கொண்டிருந்தனர். எல்லோருக்கும் ஒவ்வொரு பக்கச் சுடும் துவாரத்தைப் பகிர்ந்தளித்துவிட்டு தான் வாசலில் நின்று தேவையான இடங்களுக்கு 40மி.மீ. எறிகணையை ஏவிக்கொண்டிருந்தார் சீத்தா.

"இந்தா சுவர்க்கரையோட வாறான் சுடு... அந்தா தென்னைமரத்தடிக்கு வாறான், இதுக்காலதான் மூவ் பண்ணப் பார்ப்பான், பாத்துப் பாத்துச் சுடு. இஞ்ச விடு ஆக்களுக்கு டொங்கானால ஒண்டு குடுக்கிறன்"

"மெயின் சீத்தா, மெயின் சீத்தா, அந்த வீட்டிலிருந்து வலம் 50 எடுத்து அடிக்கச் சொல்லுங்கோ"

"சரி வருது பார்"

இது சுகந்தி.



படிப்பகம்

padippakam



"சரி. அப்பிடியே நாலஞ்சு அதில் குடுங்கோ. இப்ப மூண்டு பக்கத்திலயும் ஆக்கள்தான் நிக்கினம். நல்லாப் பார்த்துச் சுடக்கூடியமாதிரி இருக்கு"

சொல்லிக்கொண்டு சண்டையும் செய்தார் சீத்தா.

இப்போது அவர்களுடனான நேரடித் தொடர்பு கட்டளைப்பீடத்துக்கு இல்லாமல் போயிருந்தது. அவர்களைப் பின்னகர்த்தும்படி சுகந்தியூடாகச் சொல்லிக் கொண்டிருந்தார் கேணல் விதுஷா.

"சீத்தா, உன்ர ரீமோட சொன்ன இடத்தில வேகமா சந்திக்கட்டாம்"

"சரி சந்திக்கிறன், ஆனா நிண்டு நிறைய எதிரியைக் கொல்லக்கூடியமாதிரி இருக்கு. இப்படியொரு சந்தர்ப்பம் இனிக் கிடைக்காது. எங்களால எவ்வளவு செய்ய ஏலுமோ அவ்வளவு செய்துபோட்டு வாறம்"

அடம் பிடித்த அவர்கள் படையினரைக் கிட்டவர இடங்கொடாது சுட்டுக்கொண்டிருந்தனர். திடீரென்று அவர்,

"இப்ப இன்னும் கிட்ட வந்திட்டான். சுத்திச் செல்லடி யுங்கோ"

சொல்லும்போதே தொலைத்தொடர்புக் கருவியினூடே சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. உதவியணியை அனுப்பும்படி சுகந்திக்குக் கட்டளையிட்டார் விதுஷா.

"சீத்தா மெயின்... சீத்தா மெயின். நீங்கள் ஒருத்தரும் ஒண்டும் செய்துபோடாதேங்கோ. இப்ப சப்போட் ரீம் ஒண்டு வரும். ஆக்கள் வந்து சந்திப்பினம்" சொல்லிவிட்டு தன்னோடு நின்ற தமிழவளிடம்



படிப்பகம்

padippakam



"உன்ர PK ஐ BC 7 க்குச் சப்போட்டாக் கொண்டுபோ. அவதானமாகப் போகவேணும்"

என்றார் சுகந்தி, உதவியணியை அனுப்பிக்கொண்டே கேணல் விதுஷாவுக்கு நிலைமையைத் தெரியப்படுத்தி னார். எல்லோருக்கும் சீத்தாவின்மேல் கோபமாக இருந் தது. சொன்னதுபோல முதலே வந்திருந்தால், இப்போது இந்தச் சிக்கல் வந்திருக்காது. ஆனாலும் கோபத்தைச் சாதிக்கக்கூடிய இடமா அது?

சுகந்தியிடம் உள்ள அணியைத்தவிர அங்கு உதவிக்கு அனுப்புவதற்கு யாரும் இல்லை.

"PK யை வைச்சு உடைச்சு வெளியால வரச்சொல்லு. செல் சப்போட்டைச் சரியா எடுத்துக்குடு. சீத்தாவின்ர தொடர்போட நிக்கவேணும்"

கேணல் விதுஷாவின் கட்டளைகளை விளங்கிக் கொண்ட சுகந்தி,

"சீத்தா மெயின் சீத்தா மெயின்"

அதில் நின்ற ஏனையோரையும் கூப்பிட்டார்.

பதில் இல்லை. இடையில் யாரோ அலைவரிசையில் குழப்பிக்கொண்டிருக்க, எறிகணை ஏவு தளத்தின் இலக் கத்துக்கு மாற்றினார்.

"சரி. இப்படியே அடிச்சுக்கொண்டிருங்கோ"

கேட்டது சீத்தாவின் குரல்தான்.

"சீத்தா மெயின். சீத்..."



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

ஸ்க் எனச் சீறி வந்த RPG ஒன்று சுகந்தியின் கட்டளைப்பீடத்துக்கு முன்னே நின்ற மரத்தில் மோதி வெடிக்கவும், சர்... சர்... என காதுரசிப் பறந்தன ரவைகள். எட்டிப் பார்த்த சுகந்திக்கு நிலைமையின் தீவிரம் புரிந்தது. முதல் நாள் BC 7 இன் பாதுகாப்புக்கென அடிக்கப்பட்டுக் கொண்டிருந்த, வேலை முடிக்கப்படாத காப்பரணுள் இப்போது இராணுவம். தன்னுடன் நின்ற RPG போராளியை அனுப்பினார். போன வேகத்தில் அவர் இரத்தம் பூசித் திரும்பவேண்டியதாயிற்று. எனினும் PK LMG யுடன் புறப்பட்ட தமிழவள் இராணுவத்தின் சூடு வருகின்ற இடங்களைப் பார்த்துச் சுட்டுக்கொண்டே நகரத்தொடங்கினார். திடீரென வந்த செறிவான சூடு அவரை அப்பால் செல்ல விடவில்லை. இராணுவத்தின் சூட்டுவலுவைவிட, எமது சூட்டுவலு உயர்வாக இருப்பின் அவர்களை முறியடித்து நகரமுடியும். அல்லது நகரும் பாதையை மாற்றவேண்டும். ஆனால் இங்கு எதுவுமே சாத்தியப்படவில்லை. ஏனெனில் குறிப்பிட்ட பகுதியைத்தவிர ஏனையவை வெளியான பகுதிகள். இருந்தும் முற்றுகைக்குள்ளிருக்கும் அவ்வணிக்கு உதவி வழங்கவேண்டும் என்ற எண்ணத்துடன் சூட்டை வழங்கியபடி வேகமாக நகர முற்பட்ட லெப். தமிழவள் விசைவில்லிலிருந்து விரலை எடுக்காமலே தனது PK LMG இனை அணைத்தபடியே இறுதிமூச்சை விட்டிருந்தார்.

மீண்டும் புற்றிலிருந்து புறப்பட்ட ஈசல்போல் இராணுவம் முன்னேறிக்கொண்டிருந்தது. மிகுந்த சிரமப்பட்டு தமிழவளிலிருந்து அவரது ஆயுதத்தைப் பிரித்தெடுத்து சண்டையிட்டார் அவரின் உதவியாளர். முன்னரே அணிகளைப் பின்னகரும்படி கொடுத்த கட்டளைக்கிணங்க சில அணிகள் 100மீ. பின்னே வந்து அடுத்த நிலையைத் தக்கவைக்க ஆயத்தமாகின.

"மெயின் சீத்தா"

திடீரெனக் கேட்டது அவரின் குரல்.

padippakam



"ஓமோம் சீத்தா என்னண்டு சொல்லு"

"மெயின். சொன்னமாதிரி செல்லை அடிக்கச் சொல் லுங்கோ"

"நாங்கள் அடிச்சுத் தாறம். நீங்கள் எப்பிடியும் வரத்தான் வேணும். இப்பிடியொரு சண்டையைப் பிறகும் செய்ய லாம். எல்லோரும் உடன வரவேணும்"

என்ற விதுஷாவின் கட்டளையைச் சீத்தாவிடம் சொன்னார் சுகந்தி. ஆயினுங்கூட சீத்தா கதைக்கும் போதெல்லாம் குண்டு வெடிக்கும் சத்தமும், சீறும் ரவை களின் ஒலியும் தொலைத்தொடர்புக் கருவியூடே கேட்டுக் கொண்டிருந்தன.

இவ்வளவு அருகே படையினர் நிற்கும்போது என்ன நிதானமாகக் கதைக்கிறார்!

வியக்காமல் இருக்கமுடியவில்லை. இப்போது சீத்தா,

"சரியக்கா. வர முயற்சிசெய்யிறம். ஆனால்"

சொல்லி முடிப்பதற்கிடையில் தொடர்பு சடாரெனத் துண்டிக்கப்பட்டதுபோல் தெரிந்தது. மீண்டும் எல்லா நிலையங்களும்

"சீத்தா, சீத்தா, சீத்தா, மெயின்,"

"சீத்தா மெயின்"

பதிலில்லை. இருந்தும் ஒரு நப்பாசையில்

"நிலவன் மெயின், நிலவன் மெயின், நிலவன் நிலவன்"



படிப்பகம்

padippakam



எல்லாமே முடிந்துவிட்டதுபோன்ற வெறுமை எல்லோரி னுள்ளும் பரவிப்போனது. வெள்ளம்போல் பரவிவிட்ட இராணுவத்துக்கு இந்த இடத்தை விட்டால், எங்குமே நல்ல அடிகொடுக்க முடியாது என்றே உறுதியாக அவர்கள் நம்பினார்கள். அதன்படி சாவின் விளிம்பில் நின்றபடியே பகையை சாவின் குகைக்குள் தள்ளிய அந்த வீரர்களின் கனவோடு எல்லா அணிகளும் சிறிது தூரம் பின்னே வந்தன.

மீண்டும் புதிய நிலை, புதிதாய் ஒரு தக்க வைப்பு. நிலையமைக்கும் பணி தொடர்ந்தது. இதயம் வலித்தது.

இப்போது தனங்கிளப்பிலிருந்து நாவற்குழிநோக்கிச் செல்லும் வீதியூடாக அமைக்கப்பட்ட முன்னரங்க நிலை புகையிரத வீதியூடாக வந்து கைதடிச் சந்திக்கு இப்பால் நீள்கிறது. எப்போதும்போல் இப்போதும் எமது பணிகள் நடந்துகொண்டிருக்க, எல்லா முனைகளிலும் வேவு அணி கள் நகர்த்தப்பட்டன.

சில நாட்களின் பின்னர், எப்போதும் எம்மை வழியனுப் பும் தலைமைப்பீடத்திலிருந்து ஓர் அழைப்பு வந்தது. அது முழு அணியையுமே வன்னிப் பெருநிலப்பரப்புக்கு வருமாறு இருந்தது.

ஒவ்வொரு அங்குல நிலத்துக்காகவும் குருதிசிந்தி வீழ்ந்த மாவீரர்களின் நினைவுத் துயர், பலநூறு பேராய் அலையாகி வந்த நாம், இப்போது சில நூறுபேராகி நிற்கும் வேதனை, இதயத்தில் மோதியது.

இடம் அறிந்து, நேரமறிந்து படைநகர்த்தும் எங்கள் தலைவரின் சுட்டு விரலையும் திசைநோக்கி நடப்பதற் காய் மீண்டும் படகேறினோம்.



படிப்பகம்

padippakam



மழைசொரியும் இருளோடும், இருண்ட எம் மனங்களோடும் நாங்கள். இப்போது இறுதிப்படகும் புறப்பட்டுவிட்டிருந்தது. பனங்கூடல்களும் உயர்ந்த கட்டிடங்களும் கண்களிலிருந்து விலகி... பூநகரிநோக்கி வந்தது எம் படகுகள்மட்டுமே. எங்கள் மனங்களெல்லாம் அரியாலையில், சாவகச்சேரியில், வண்ணாத்திப்பாலத்தில்... இன்னும்... இன்னும்... எம் உறவுகளின் உயிர்பிரிந்த களங்களிலெல்லாம் நின்றுவிட்டிருந்தன. ஒவ்வொரு சோடி விழிகளாலும் படகுகள் நனைந்தன.

பனங்கூடல்களுக்கு மேலால் பறந்தன பறவைகள்.

ஏ பறவைகளே! இந்த மண்ணைவிட்டு நாங்கள் புறப்பட்டுவிட்டோம். உங்களுக்குத் தெரியுமா?

இளநீர் குலைகளைச் சொரிந்த தென்னைகளே!

இன்னும் சிறிது காலத்துக்கு உங்கள் அடிவேரில் தலைவைத்துச் சாய்ந்தபடியே ஓலைகள் விரிந்த அழகைப் பார்த்து ரசிக்கமாட்டோம். இது உங்களுக்குத் தெரியுமா?

ஓ... எம் யாழ் நிலமே! தமிழ் மண்ணின் வீரக் குழந்தைகளான எங்களின் பாதங்கள், சில நாட்கள்வரை உன்மீது பதியமாட்டாது. உனக்குத் தெரியுமா? நாம் உன்னிடம் மீண்டும் வரும்வரை, எம் உறவுகளின் குருதிச் சிவப்பையும் பாதச்சுவட்டையும் யாரும் அழிக்காமல் காத்திருப்பாயா?

பனைமர வரிசை பார்வையிலிருந்து மறையலாயிற்று. எம் அழகிய குடாநாடே! உன்னை மீட்க மறுபடியும் வருவோம். அதுவரை திடமாக உன்னை நீயே காத்துக்கொள்.

* * *



படிப்பகம்

# 11

உலகப் பந்தின் சுழற்சி 2001 ஆம் ஆண்டை வரவேற்கத் தயாரானது. தமிழீழ மக்களின் மனங்களில் என்னவென்று இனம் புரியாத தவிப்பு. நாங்களும் அப்படியே. எனினும் ஓய்வுகிடைக்கும் நேரங்களில் ஆடிப் பாடும் களிப்பு, வெல்லவேண்டும் என்ற விருப்பு, அடுத்த மணித்துளியில் களத்தில் விதையாகிப் போவதானாலும் இப்போதிருக்கும் இந்த நேரத்தில் ஆடவும் பாடவும் பழக்கப்பட்டுப்போன நெஞ்சங்கள்.

2000 மார்கழி 24 இலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு போர்நிறுத்தத்தை அறிவித்துவிட்டுப் பதிலுக்காகக் காத்திருந்தது. சிறீலங்கா அரசோ எமது அறிவித்தலைப் புறம்தள்ளிவிட்டு, படை நடவடிக்கைகளை தான் நிறுத்தப்போவதில்லை என்று அறிவித்துவிட்டிருந்தது. இது போர்க்காலம் என்று நினைப்பதா, போர் ஓய்ந்த காலம் என்றெண்ணிக் களத்தில் நிற்கும் தம் பிள்ளைகளையிட்டு நிம்மதி கொள்வதா என்று புரியாத நிலையில் மக்கள். எது வந்தாலும் எதிர்கொள்ளும் மனநிலையில் புலிகள். நாங்களாக அடிப்பதில்லை, படையினர் அடியைத் தொடக்கினால் விடுவதில்லை என்ற முடிவுடன் பயிற்சிகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தன.

padippakam



2000 முடிந்து 2001 தொடங்கும் நள்ளிரவு 12.00 மணி. எல்லோருடைய தொலைத்தொடர்புக் கருவிகளும் பரபரப்பாகின.

"பப்பா லீமா... றோமியோ, பப்பா லீமா... றோமியோ"

"நைன் திறீ... ரூ வண், நைன் திறீ ரூ வண்"

ஒரேநேரத்தில் ஒரே அதிர்வெண்ணில் ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்களிலிருந்து, ஏராளம் குரல்கள் வாழ்த்துக் களைப் பரிமாறிக்கொண்டன.

"வாழ்த்துக்களுக்கு நன்றி. நான் சொல்லுறதுக்கிடையில நீ சொல்லிப்போட்டாய். என்ன?"

"எல்லாருக்கும் நான்தான் முதல்முதல் வாழ்த்துச் சொன்னனான்"

"உனக்கும் ஒரு நினைப்புத்தான். உங்களுக்கு முதல் நாங்கள் சொல்லிப்போட்டம். தெரியுமோ?"

வாழ்த்துப் பரிமாறல்களும் நான் முந்நி, நீ முந்தி என்ற கொழுவல்களுமாக அதிர்வெண்கள் அதிர்ந்து கொண்டிருந்தன.

பனிப் புகாரிடையே, சில்லென்று வீசிக்கொண்டிருந்த காட்டின் குளிர்ந்த காற்றில் இலைகள் மெல்ல அசைய, அந்தச் சிறு அசைவைத் தாங்காது இலை நுனிகளில் தொங்கிக்கொண்டிருந்த பனித்துளிகள் நிலத்தில் உதிர, ஏற்கனவே குளிரில் சிறு நடுக்கத்துடன் நடமாடிக் கொண்டிருந்த போராளிகளின் தலைகளில் விழுந்த பனித்துளிகள் அவர்களைச் சிலிர்க்கச்செய்ய, அன்றைய விடிகாலை மிக அழகாகப் புலர்ந்தது. விறைத்திருந்த காட்டிலிருந்து அருகேயிருந்த குளத்தைநோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள் சிலர். குளத்தின் இதமான சூடுதந்த கதகதப்பினால் குளத்தைவிட்டு எழும்ப மனமின்றிக்



படிப்பகம்

குளத்திலேயே ஊறிக்கொண்டிருந்தார்கள் சிலர். குளித்து விட்டு வெளியேவந்து சிறு துள்ளல் ஓட்டத்தில் தம் கொட்டில்களுக்குப் போய்ச்சேர்ந்து, தேநீர் அடுப்பின் முன் கைகளை நீட்டிச் சூடேற்றிக்கொண்டிருந்தார்கள் சிலர். அப்போதுதான் நித்திரை விட்டெழும்பி, மண் வெட்டிகளையும் தண்ணீர்ப் போத்தல்களையும் தூக்கியபடி காடு ஏற்படுத்தித்தந்த மறைவுகளைநோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள் சிலர். காட்டின் அடர்த்தியை ஊட றுத்தபடி வெளிச்சம் மெல்ல உட்புக, நிலம் தெளியத் தொடங்கிற்று. இலைகளில் தொங்கிக்கொண்டிருந்த பனித் துளிகள் இப்போது மிக அதிகமாகக் கொட்டத்தொடங் கின. காய்ந்த நிலத்தில் பனித்துளிகள் அழகிய கோலங் களை வரைந்திருந்தன. சூரியன் மேலேறி நிலம் காயும் வரையும் இந்த இயற்கைக் கோலங்கள் அழகு சொட்டிக் கொண்டிருக்கும்.

அதுவரை நேரமும் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்த காவியா பயிற்சியாசிரியர்களின் அறையை விட்டு வெளியேவந்தார். வேலைகளாயிருந்த ஏனைய பயிற்சி ஆசிரியர்கள் அவரோடு வாழ்த்துகளைப் பரி மாறிக் கைகுலுக்கிக்கொண்டனர். அவர்களுக்கு வாழ்த்து களைச் சொன்ன வேகத்தில் தண்ணீர் போத்தலையும் மண்வெட்டியையும் எடுத்துக்கொண்டு பனிப்புகாருக்குள் மறைந்துகிடந்த ஒற்றையடிப் பாதைவழியே போய் மறைந் தார்.

லெப்.கேணல் இராசசிங்கம் கல்லூரியில் அன்றைய காலை உணவு மிகவும் சுவையாகவே இருந்தது. குழுக் களாக அமர்ந்து காலை உணவை இரசித்துக்கொண்டிருந் தவர்களிடையே நடந்து திரிந்துகொண்டிருந்த எமது தளபதி லெப்.கேணல் மதி, கலை நிகழ்வுகளுக்கான ஒத்திகை களை விரைவாக ஆரம்பிக்கும்படி கேட்டுக்கொண்டிருந் தார். நிகழ்ச்சிக்கான பொருள் விபரங்களைத் தரும்படி அவர்களிடமே கேட்டு, வெளியிலிருந்து கொண்டு

padippakam



வரவேண்டிய பொருட்களை நிர்வாகப் பகுதியினருக்கு அறிவித்துக்கொண்டிருந்தார்.

கல்லூரி ஒட்டுமொத்தத்தில் கலகலப்பாக இருந்தது. ஒத்திகைகள் பார்ப்போர் ஒருபுறம், இனி வரும் சண்டைகளில் தமது சூட்டுவலுவை மேம்படுத்தவென சூட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவோர் ஒரு புறமும், உடற் பயிற்சிகளைச் செய்வோர் ஒரு புறமுமாக ஒருவருமே ஓய்வாக இல்லை. எமது படையணியின் அறிக்கை, நிர்வாக, வழங்கல், ஆயுத வெடிபொருள் விநியோகப் பகுதியிலிருந்து சுடரொளி, கார்த்திகா, வைகை, நளாயினி எல்லோரும் வந்துநின்று விபரங்களைப் பதிவு செய்வதும், பொருட்களை வழங்குவதுமாக கலகலத்துக் கொண்டிருந்தது கல்லூரி.

கல்லூரிக்குள் எங்களுடைய ஒரு கொம்பனி தளபதி மதியோடு நின்றது. இதேநேரம் விளக்குவைத்தகுளம் பகுதியில் யாழ் நெடுஞ்சாலையைக் குறுக்கறுத்தபடி இரண்டு கிலோமீற்றர் தூரத்தைப் பாதுகாத்தவாறு விடுதலையுடனான ஒரு அணி அரணமைத்து நின்றது. நாகர் கோயில் பகுதியில் சுகியோடு மேஜர் நெல்சாவுடனான அணி ஒன்று கடற்கரையோர வீதிகள் இரண்டையும் ஊடறுத்தபடி அரணமைத்து நின்றது.

கல்லூரியில் அன்றைய மாலை நேரக் கலைநிகழ்வுகள் சுவையாக நடந்தேறின. லெப். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியிலிருந்து ஒரு கிறிஸ்துமஸ் தாத்தாவும் கலைக் குழுவினரும் வந்து நடனமாடி எமது நிகழ்வைச் சிறப்பித்தனர். தாத்தா வேடத்தில் வந்திருப்பவர் யார் என்பதை அறிய எம்மவர்கள் படாதபாடுபட்டனர். நடையை, தோற்றத்தை, உயரத்தை, அசைவைவைத்து ஆளுக்கொரு விதமாக ஊகங்களை வெளியிட்டனர். நடனமாடிக்கொண்டிருந்த நேரம் மேடையின் பதிவான முகட்டில் தாத்தாவின் கூம்புத் தொப்பி தட்டுப்பட்டுச் சரிய, மேடைக்கருகே நின்ற எம்மவர்கள் சிலர், ஓடிப்போய் முகத்தைப் பார்ப்பதற்கு



படிப்பகம்

padippakam



இடையில் தாத்தா இலாவகமாகத் தொப்பியை மறுபடியும் அணிந்துகொண்டதில் அந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது. அன்றையநாள் மகிழ்வுடனே கழிந்தாலுங்கூட, உயிர்கொடுத்து மீட்டெடுத்த யாழ்ப்பாணத்தின் பெரும்பகுதியை உயிர்கொடுத்தே பறிகொடுத்த துயர் எல்லோரையும் உலுப்பியபடியேதான். போர்நிறுத்தத்தை நாம் அறிவித்த பின்னர், நாங்கள் வெளியேறி வந்தபின்னர், கினிகர-08 என்ற பெயரைச் சூட்டி நகர்ந்த படையினர் யாழ்ப்பாணம் முழுமையும் நிலைகொண்டனர்.

தென்மராட்சியின் தென் பகுதியிலிருந்து புறப்பட்டு வந்த எல்லோரும் கல்லூரியில் இரண்டொரு நாள் ஓய்வெடுத்து, எம்மை மீள் ஒழுங்கு செய்துகொண்டோம். நாங்கள் இப்போது களமுனையைநோக்கி நகரத் தொடங்கினோம். பயணத்துக்கான ஊர்திகளை மதுரா ஒழுங்கு செய்துகொடுக்க, 2001.01.04 அன்று கல்லூரியிலிருந்து நல்லரசியுடன் ஒரு பிளாட்டூன் நாகர்கோயில் பகுதிக்குச் சென்றது. அந்தப் பகுதியின் கட்டளை அதிகாரியாகத் தளபதி மதி அந்தப் பிளாட்டூனுடன் புறப்பட்டார். அடுத்தநாள் (2001.01.05 வெள்ளி) வதனியின் பிளாட்டூனும், ஆனந்தியின் பிளாட்டூனும் ஜமுனாவுடன் கிளாலிப் பகுதிக்குச் சென்றன.

2001.01.07 அன்று சுகந்தி ஒரு அணியுடன் மாசார் பகுதிக்குப் போனார். ஆனால் மறுநாளே (2001.01.08) கிளாலிப் பகுதியில் நின்ற சோதியா படையணிப் போராளிகளை மாற்றிவிட்டு, அவர்களது முன்னரங்க நிலைகளைச் சுகந்தியின் அணி பொறுப்பெடுத்தது. இப்போது ஜமுனாவுடன் நின்றவர்களும் சுகந்தியுடன் நின்றவர்களுமாக யாழ் நெடுஞ்சாலையின் இடதுபுறம் 01 தொடக்கம் 82 ஆம் இலக்கம் வரையிலான நிலைகளில் நிலைகொண்டிருந்தோம். ஏற்கனவே அங்கிருந்த நிலைத் தகடுகளைப் புதிதாக மாற்றிக்கொண்டோம்.



படிப்பகம்

padippakam



அன்று 11 ஆம் திகதி. பனிக் குளிரின் ஆட்சியில் அதிகாலை அடங்கிப்போய்க் கிடந்தது. எனினும் நாங்கள் தயார்நிலையில்தான். எங்களை வேவுபார்க்கவென முன் னகர்ந்து வந்த படையினரை சேரா 31 இல் நின்றவர்கள் கண்டுவிட்டுச் சுட்டனர். முதற் சூடு காதில் விழுந்த அந்தக் கணமே விசைவில்லை விரல்தொட்டது. சுடுகலன் கள் பேசத்தொடங்கின. 40 ஆம் நிலையில் நின்ற சுகந்தி 31 ஆம் நிலைக்கு ஓடிப்போய் நிலைமையை நேரில் பார்த்தார் நிலைகளையும் அணிகளையும் மீள் ஒழுங்கு செய்துகொண்டார்.

இது நடந்து இரண்டு நாட்களின் பின் (2001.01.13) பகல் நேரத்தில் 45 ஆவது நிலையில் நின்ற போராளிகள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். சுகி, சுகந்தி, ஜமுனா, நெல்சா நால்வரும் காப்பரண்களைப் பார்வை யிட்டவாறு வந்துகொண்டிருந்தார்கள். அப்பகுதி அமைப்பு, இராணு வம் உடைப்பை ஏற்படுத்தக்கூடிய இடங்கள், அவர்களை நாம் பதுங்கித் தாக்க வாய்ப்பான இடங்கள் என்று எல் லாவற்றையும் பார்த்து, கதைத்தபடி இவர்கள் வந்துகொண் டிருந்தார்கள். 45 ஆவது நிலையை இவர்கள் நெருங்கிக் கொண்டிருக்கையில், அது படையினரின் தாக்குதலுக்குள் ளானது.

அது ஒரு சுவையான சண்டைதான். படையினரை 45 ஆவது நிலையில் நின்ற போராளிகள்மட்டும் தாக்க வில்லை. இடையில் வந்துகொண்டிருந்த சுகியும் நெல் சாவும் சேர்ந்தே சுட்டனர். தொலைத்தொடர்புக் கருவி யுடன் நின்ற சுகந்தி இவர்கள் இருவருக்கும் ரவையேற்றிக் கொடுத்துக்கொண்டிருந்ததுடன், கட்டளைப் பணியகத்துக்கு நிலைமையைத் தெரியப்படுத்திக்கொண்டும் எறிகணை ஏவு தளங்களுக்கு எறிகணைகளை வீசுவதற்கான தூரம், பாகைகளை அறிவித்தவாறுமிருந்தார்.

எமது காவல் நிலையொன்றை வேகமாகத் தாக்கி விட்டு, எடுக்கக்கூடிய பொருட்களை எடுத்துக்கொண்டு



படிப்பகம்

padippakam



வேகமாகத் திரும்பிச்செல்லும் கற்பனையோடு வந்த படை யினருக்கு இவர்களின் வீச்சான தாக்குதல், அதுவும் இருமுனைத் தாக்குதல் திகைப்பையும் தோல்வியையும் ஏற்படுத்தியது. வழமையாகச் சண்டை நடக்கும் இடத்தில் ஒருபோதும் அனைத்துப் பொறுப்பாளர்களும் இப்படி ஒன் றாக நிற்பதில்லை. அன்று தற்செயலாகக் களமுனையின் பொறுப்பாளர்கள் ஓரிடமாகச் சந்தித்துக் கொண்டார்கள். அவர்களே சண்டையைப் பிடித்துக் கொண்டார்கள். எம்மவர் தரப்பில் எந்த இழப்புமில்லை.

இரண்டு நாட்களின் பின் வந்த இரவு (2001.01.15) நிம்மதியற்ற இரவாக இருந்தது. அன்றிரவு ஆரணி நின்ற பக்கம் வழமைக்கு மாறாகத் தென்பட்டது. சிலவேளை படையினர் நகர்ந்துவந்து அந்தப் பக்கமாக உடைக்கலாம் என்ற ஊகத்தில் உடனேயே கையெறி குண்டுகளை எறிந்து, நகர்வு ஏதும் நடக்கின்றதா என்று பார்த்துக் கொண்டார்கள். ஒன்றையும் காணோம்.

சிறுரகக் கண்ணாம் பற்றைகளும், தலையில்லாத தென்னை மரங்களும், முறிந்து வீழ்ந்துகிடந்த பனைகளும், சிதைந்துபோய்க் கிடக்கும் வடலிகளும் அங்கங்களை இழந்துநிற்கும் மா பலாவுமாக இருந்த தன் இயற்கை எழிலை இழந்து கிடந்த அந்தக் கிராமத்தின் காலைப் புதைக்கின்ற மணற்றரையூடே எமது நகர்வகழி வளைந்து நெளிந்து சென்றது. போர் நிறுத்தத்தை நாம் கடைப்பிடித்த காலப்பகுதியில் இராணுவம் செய்த மிகப் பெரிய சுற்றி வளைப்பு நடவடிக்கையாக கினிகிர-09 நகர்வு அமைந்தது.

2001.01.16 அன்றைய விடிகாலையில் எவருக்கும் குளிர்ந்ததாகத் தெரியவில்லை. எல்லோரும் எதிர்பார்ப் புடன் நின்றார்கள். காற்றுக்கூட தன் குளிர்ச்சியை வெளிக் காட்டாது சற்று அடக்கி வீசிக்கொண்டிருந்தது போல் பட்டது. ஏதோ ஓர் முனையில் பாரிய உடைப்பு ஒன்று நிகழத்தான் போகின்றது. எப்போது, யார்முன் என்பதுதான்



படிப்பகம்

padippakam



தெரியவில்லை. எல்லோரும் ஆயத்த நிலையில், தேநீருக் காகத் தீ மூட்டுவதா, சற்றுத் தாமதிப்பதா என்ற யோசனை யுடன் காத்திருந்தார்கள்.

விடிவதற்கு இன்னமும் வெகு நேரம் இருந்தது. இப்போதுதான் 4.00 மணி. ஆரணியின் நிலைக்குப் பக்க வாட்டாக நகரும் சத்தங்கள் கேட்டன. இது படையின ராகத்தான் இருக்கவேண்டும். வேறு யார்? ஆரணி உற்று உற்றுப் பார்த்தவாறு குண்டுகளை எறிந்து தாக்கியபோது, அந்தத் திசையிலிருந்து எதிர்ப்புகள் எதுவும் வரவில்லை. ஆரணிக்கும், அடுத்துள்ள பூமகளின் நிலைக்குமிடையே 600மீ. இடைவெளி இருந்தது இந்த 600மீ. இன் பின்பகுதி முழுவதும் பற்றையாக இருந்தது.

அந்த 600மீ. இடைவெளியை நிரப்புவதற்கு இடையி லிருந்த காவலரண்களில் எம்மவர்கள் நிலைகொள்ள வில்லை. அதற்கு எங்களிடம் ஆட்களில்லை. தென்மராட் சியின் தென்பகுதியில் நடந்த சண்டைகளில் காயப்பட்ட எமது போராளிகள் காயம் மாறி இன்னும் வந்துசேர வில்லை. முழுமையாக முன்னரங்க காப்பரண்களின் வேலைகள் சீராக்கப்படவுமில்லை. நாங்கள் அவற்றைச் செய்துமுடிப்பதற்குள் படையினர் சண்டையைத் தொடங்கி விட்டிருந்தனர்.

காலை 5.50 மணியளவில் படையினர் எமது பகுதியை நோக்கிப் பரவலான எறிகணைவீச்சை ஆரம்பித்தனர். அந்த வேகத்திலேயே உடைப்புகளை ஏற்படுத்தியவாறு படையினர் எம்மைக் கடந்து பின்பகுதிக்குப் போய்க் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தினுள் நடந்ததுபோன்ற அதே முறையிலான நகர்வு. ரவையொலிகளும் எறி கணைகளின் வெடிப்பொலிகளும் தனது அணிகளின் நெருக்கடியான நிலைமையை கேணல் விதுஷாவுக்கு விளக்கின. கட்டளைப் பணியகத்தில் நின்ற அவர் முன் னின்ற அணிகளுக்கு நிலைமைகளுக்கேற்ப கட்டளை களை வழங்கிக்கொண்டிருந்தார்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

களத்துக்குள் நின்ற கட்டளைப் பொறுப்பாளர்களில் ஒருவரான ஜமுனாவைத் தொலைத்தொடர்புக் கருவி அழைத்தது. அந்த அழைப்பு இரகசியக் குரலில் ஒலித்தது.

"....................................."

"யார்? யார் கூப்பிடுறது?"

"அது நானக்கா. அறிவரசி"

"எங்கை நிக்கிறாய்? நிலைமையைச் சொல்லு"

"நான் முன்னுக்கு துளசிராமக்காவுக்குப் பக்கத்தில்"

இப்போது எதிர்த்தரப்பினரின் PK LMG சூடுகள் மிகக் கிட்டவாகக் கேட்டன. ரவைகள் கூவியவாறு வந்தன. எறிகணைகள் அருகருகே விழுந்து வெடித்தன. சிதறு துண்டுகள் நாலாபுறமும் சீறியடித்தன.

இன்னமும் படையினரை நேரெதிர் கொள்ளாத நிலையில், அணிகள் எதற்கும் தயார்நிலையிலேயே நின்றன. இரண்டு பகுதிகளில் உடைப்பை ஏற்படுத்திய படையினர், எம்மவர்களை இருவேறு முற்றுகை வளையங்களுள் சிக்கவைத்தனர். சுற்றிவளைக்கப்பட்ட ஒரு பகுதிக்குள் தான் அறிவரசியின் தொடர்பு இருந்தது. மற்றைய சுற்றி வளைப்பில் களநிலைக் கட்டளைப் பொறுப்பாளர் ஜமுனா நின்றார்.

அறிவரசி தனது பக்க நிலைமைகளைக் கூறினார். மிக இரகசியக் குரலில் அவர் பேசுவதால், நெருக்கமாகப் படையினர் நிற்கின்றனர்போலும்.

"அக்கா, நிறைய ஆமி வேலியைப் பிய்த்துக்கொண்டு வந்துகொண்டிருக்கிறாங்கள். பாத்துப் பாத்து வாறங்கள்.

padippakam



பக்கத்தாலை ரெண்டு வரிசையா... இப்ப எனக்கு நல்லாக் கிட்டவா... என்னிலையிருந்து பத்து மீற்றரில பங்கர் வெட்டுறாங்கள். நீங்கள் செல்லைப் போட்டுத்தாங்கோ"

"நாங்கள் செல்லைத் தாறம். நீ அந்தநேரம் அடிச்சுக் கொண்டு வெளியில வா"

எறிகணைகள் அவர் கேட்ட இடத்தில் விழத்தொடங் கின. அறிவரசி தனித்து நின்றார். குரலில் பதட்டமில்லை. தெளிவாகவும் உறுதியாகவும் நிலைமைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

முற்றுகைக்குள் நின்ற எம்மவர்களும் படையினரும் நேரே சந்தித்துக்கொண்ட அந்தக் கணத்தில் உட்புறச் சண்டை ஆரம்பித்தது. முற்றுகையை உடைத்துக்கொண்டு வெளியே வந்தேயாகவேண்டும்.

எங்கள்முன் இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒன்று முற்றுகையை உடைத்து வெளியேறுதல். இரண்டு இராணு வத்தை அழித்து நாமும் அழிதல். உடைத்து வெளியேறு வதையே முதன்மையானதாக நாங்கள் தெரிவுசெய்து கொண்டோம். சுடுகலன்களைக் காப்புச் சூட்டுக்கு நிலைப் படுத்தினோம். செயற்பாடுகள் மிகவேகமாக நடைபெற்றன. படையினர் நின்ற ஒரு நிலையோடு மோதி அதை முதலில் கடந்தோம்.

இதைக் கடந்து சிறிது தூரம் நடந்தோமில்லை. மீளவும் படையினர் எதிர்ப்பட்டனர். இந்தநேரம் அறிவரசியின் தொடர்பு மீண்டும் ஜமுனாவுக்குக் கிடைத்தது.

"நான் 57 ஆவது நிலைக்குப் போறன். 64, 67 எல்லாத் துக்கும் செல்லைப் போடுங்கோ"

"அறிவரசி... அறிவரசி..."



படிப்பகம்

இதன்பின் லெப்.அறிவரசியின் தொடர்பு கிடைக்க வில்லை. அவர் நின்ற பக்கம் ரூடுகள் கடுமையாகக் கேட்டன. 40மி.மீ. எறிகணைகள் வெடிக்கும் ஒலிகள் கேட்டன.

ஆரணி ஐயப்பட்டதுபோலவே அவருக்கு அப்பாலிருந்த காவலரண்களுக்கு இடையால் அமைதியான முறையில் படையினர் உடைப்பொன்றை ஏற்படுத்தியிருந்தனர். அடுத்த உடைப்பு கப்டன் துளசிராமின் நிலைக்கும் அறிவரசியின் நிலைக்குமிடையே ஏற் படுத்தப்பட்டிருந்தது.

அறிவரசியின் தொடர்பு இல்லை. அடிகளோ பலமாக விழுந்துகொண்டிருந்தன. இதேநேரம் துளசிராமின் குரல் வானலையில் ஒலித்தது. படையினர் மிக வேகமாக நகர்ந்துகொண்டிருப்பதாகவும் அந்த இடங்களைநோக்கி எறிகணைகளை வீசித் தரும்படியும் கேட்டுக் கொண்டிருந்தார். இதை உடனடியாகவே சுகந்தி தனக்கு மேலான கட்டளை அதிகாரி லெப்.கேணல் அறிவுக்குத் தெரியப்படுத்தினார்.

தொடர்ந்து ஆரணி ஒருபுறமும் துளசிராம் வேறொரு புறமுமாகப் படையினரோடு சண்டையிட்டுக்கொண்டிருந் தனர். கேணல் விதுஷா சுகந்தியைக் கூப்பிட்டார். உடனடி யாகவே அணிகளை அவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டு, ஜமுனாவைச் சந்திக்கும்படியும், அதன்பின் படையினரை நகரவிடாது தடுப்பு ஒன்றை ஏற்படுத்தும் படியும் கூறினார்.

சுகந்தி இதை உடனடியாக ஆனந்திக்குத் தெரியப் படுத்திவிட்டுத் தனது காப்பரணின் மேலேறி நின்று சுற்று முற்றும் அவதானித்தார். பின் நேரடியாகவே ஆனந்தி

padippakam



நின்ற நிலைக்குப் போய், அங்கும் ஏனைய காப்பரண்களில் நின்றவர்களையும் கூட்டிக்கொண்டு தனது கட்டளை நிலைக்குப்போனார். சுகந்தி அங்கே வரவும் பின்னணிப் பகுதியில் அமைக்கப்பட்ட அவசர மருத்துவ நிலையில் நின்ற மருத்துவப் போராளிகள் சுகந்தியின் இடத்துக்கு ஓடிவந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் நின்ற இடத்துக்குப் படையினர் வந்துவிட்டதாக இவர்கள் தெரியப்படுத்தினர். பின்னணிப் பகுதியில் தமது எறிகணை செலுத்தியுடன் நின்ற சோதியா படையணிப் போராளிகள் படையினர் தம்மை நெருங்கியதும் தமது எறிகணை செலுத்தியைத் தகர்த்துவிட்டு, சுகந்தியின் இடத்துக்கு வந்து சேர்ந்திருந்தனர். பின்னுக்கு, முன்னுக்கு நின்ற எல்லோரும் இப்போது சுகந்தியின் இடத்தில். இவர்களெல்லோரையும் சுற்றி படையினர் ஒரு மிகப் பெரிய முற்றுகை வளையத்தை உருவாக்கியிருந்தனர். இவர்களைத் தேடித்தேடி முற்றுகையை இறுக்கி, முற்றாக அழிக்கும் நடவடிக்கையில் படையினர் இனி ஈடுபடுவார்கள்.

முகமாலையிலிருந்து கடற்கரைநோக்கியும், எழுது மட்டுவாளிலிருந்து கடற்கரைநோக்கியும் செல்கின்ற அந்த அகன்ற பாதைகளிரண்டும், யாழ் நெடுஞ்சாலைக்குச் சமாந்தரமாகக் கடற்கரையோரமாக வளைந்து நெளிந்து செல்லும் கச்சாய்-புலோப்பளை வீதியைச் சந்திக்கும். கடற்கரைக்கும் நெடுஞ்சாலைக்கும் இணைப்பை ஏற்படுத்துகின்ற இந்த இரண்டு வீதிகளுக்குமிடையே உள்ள ஒரு பெரிய தென்னந்தோப்பிலே எமக்கான பாரிய தங்ககம் ஒன்று முன்னர் இருந்தது. அது 'சோதியா' என்று அழைக்கப்பட்டது. அதனருகே மேற்குப் பக்கம் ஒரு துரவு இருந்தது. அதனை அண்மித்து சிறு வடலிகளும் பனைகளும் சிறு பற்றைகளும் இடையிடையில் பாலை, நாவல் எனப் பெரு மரங்களும் இருந்தன.

இப்போது சுகந்தியுடன் நின்றவர்களுக்கு அமுதா வழி காட்டத் தொடங்கினார். முறியடிப்பு நகர்வு ஆரம்பமானது.



படிப்பகம்

நகர்ந்துகொண்டிருந்தபோது சோதியாவுக்கருகேயுள்ள துரவுப் பக்கம் படையினர் நிற்பதைக் கண்டபோது இவர் கள் அவர்களிலிருந்து 100மீ. இடைவெளியில் நின்றனர்.

இதற்கிடையில் அந்தத் துரவுக்கு அருகேயிருந்த இரண்டு காப்பரண்களில் நின்றவர்களது தொடர்பு வான லையில் கிடைத்துக்கொண்டேயிருந்தது. தான் காயமடைந்திருப்பதாகவும் தன்னோடு நின்ற லெப். கலைமதியும், சிலம்பரசியும் வீரச்சாவடைந்துவிட்டார்கள் என்றும் லெப். இன்சுரபி தெரியப்படுத்தியிருந்தார். அந்தக் காப்பரணில் நின்றது அவர்கள் மூவரும் மட்டுமே.

அதற்கும் அடுத்திருந்த காப்பரணில் PK LMG உடன் நின்ற துளசிராம் தன் பலங்கொண்ட மட்டும் படையின ருக்கு எதிர்ப்பைக் காட்டியவாறே சுகந்தியுடன் தொடர்பை வைத்துக்கொண்டிருந்தார். தன்னை நெருங்கமுயலும் படையினரைத் தடுத்துநிறுத்துவதில் துளசிராம் வெற்றி கண்டிருந்தார். ஒரு கட்டத்தில் விதுஷாவுக்குத் துளசிரா மின் தொடர்பு கிடைத்தது. களத்தின் நிலைமைகளைப் புரிந்துகொண்ட விதுஷா, கப்டன் துளசிராமிடம், அடித்துக் கொண்டே பக்கத்தில் உள்ள காப்புநிலைக்குப் போய் அதில் நிற்பவர்களுடன் சேர்ந்து தாக்குதலில் ஈடுபடும்படி குறிப்பிட்டார். துளசிராமோ தனக்கு முன்னும் பக்கவாட் டாகவும் வந்துகொண்டிருந்த இராணுவத்தைத் தாக்குவதி லேயே குறியாய் இருந்தார். ரவைகளை அனுப்புமாறு மறுபடி மறுபடி கேட்டவண்ணமிருந்தார்.

“நீ அந்த இடத்தைவிட்டுப் பின்னுக்கு வா”

என்று மறுபடியும் விதுஷா குறிப்பிட்டார். சண்டை செய்யவேண்டும் என்ற ஆர்வம் துளசிராமைப் பின்னுக்கு வர அனுமதிக்கவில்லை. எனினும் துளசிராமின் ஒரு படைக்கல எதிர்ப்பையும் மீறிப் படையினர் துளசிராமை மிக நெருங்கியபோது,

padippakam



"என்ர நிலையிலிருந்து அஞ்சு மீற்றரில வந்திட்டான். செல்லைப் போடுங்கோ. என்னைப் பார்க்கவேண்டாம். செல்லைப்போடுங்கோ"

என்று துளசிராம் அறிவித்துக்கொண்டிருந்தார்.

அறிவரசியின் குரலும் வானலையில் ஒலித்தது.

"நான் 57 ஆவது நிலையில் நிக்கிறன். எனக்கு இரண்டு பக்கமும் செல் போட்டுத்தாங்கோ" துளசிராமும் லெப். அறிவரசியும் தமது கடைசி நிமிடம்வரை நிலைமைக ளைச் சொல்லியவாறே சண்டையிட்டு வீரச்சாவைத் தழு விக்கொண்டனர்.

கலைமதியையும் சிலம்பரசியையும் காப்பரணிலேயே விட்டுவிட்டு, காயமடைந்திருந்த இன்சுரபியைச் சுகந்தியுடன் நின்றவர்கள் தூக்கிக்கொண்டார்கள்.

படுகாயமடைந்திருந்த இன்சுரபியைச் சுமந்துகொண்டு சுகந்தியின் அணி நகர்ந்தது. 'சோதியா' விலிருந்து முகமாலைக்கு வரும் பாதையில் நாங்கள் ஏறவும், விழுந் தது பலத்த அடி. அப்போது நேரம் சரியாக நடுப்பகல் 12.00 மணி. முன்னகர்ந்ததைவிடவும் வேகமாகப் பின்னுக்கு ஓடிவந்தோம். எமது காப்பரண்களின் பின்புறம் படையினர் மிகப் பலமான நிலைகளை அமைத்து, எமது வெளியேற்றத்தைத் தடுப்பதற்குத் தமது முழுப்பலத்தையும் பயன்படுத்தினார்கள்.

அடிவாங்கி ஓடிவந்த நாம் ஒரேயடியாகப் பின்னோக்கிப் பாயவில்லை. சிறிது தூரத்தில் நின்று நிதானித்துக் கொண்டோம். விதுஷாவோடு தொடர்புகொண்டு, அவரின் ஆலோசனையோடு திட்டமிட்டோம். விதுஷா ஒழுங்கு படுத்தியபடியே எறிகணைகளும் புகைக்குண்டுகளும் நாங்கள் நின்ற பகுதிக்கு அடித்துக் கொடுக்கப்பட்டன.



படிப்பகம்

padippakam



புகை மண்டலத்தைப் பயன்படுத்தி வேகமாக நகர்ந்த எங்களை, புகை சற்றுக் கலையத்தொடங்கியதும் படையினரின் எறிகணைகளும் ரவைகளும் தேடிவந்தன. படையினரின் அடி கடுமையாக இருந்தது. அடிவந்த திசைகளை நோக்கி சுகந்தியின் கட்டளைப்படி ஒளியரசியின் PK LMG சீறியது. படையினர் அடித்த அடியில் இவர்களோடு நின்ற ஆண் போராளி இளம்புலவன் காயமடைந்துவிட்டார். முன்னும் பின்னும் பக்கவாட்டுகளிலும் ரவைகளும் எறிகணைகளும் கூவிவிழுந்து புழுதி கிளப்ப, அதற்கும் நடுவே எமது மருத்துவப் போராளிகள் தளிரும் குறிஞ்சியும் இளம்புலவனுக்குக் கட்டுக்களைப் போட்டு குருதியிழப்பைக் கட்டுப்படுத்தினர். இளம்புலவனையும் தூக்கிக் கொண்டனர்.

உள்ளே ஒன்றுசேர்ந்திருந்த அனைவரையும் இணைத்து முக்கோண நிலையை அமைக்குமாறு பணித்த விதுஷா, மூவரை முன்னே நகர்த்தி நிலைமையை அவதானிக்கும்படி சொன்னார். தப்பி வெளிவரும் அடுத்த முயற்சியாக எல்லோரும் முக்கோண வடிவில் நிலைகொண்டோம். ஒளியரசியின் PK LMG காப்புச்சூட்டுக்கான தயார் நிலையில் அமுதாவுடனான ஒரு சிறு அணி இராணுவம் தற்போது நிலையெடுத்துள்ள திசையைநோக்கி நகர்ந்தது.

அவர்கள் திரும்பி வந்ததும் எறிகணை செலுத்தியின் ஆதரவுச் சூடுகளைப் பெற்றுக்கொண்டும் குண்டுகளை அடித்தவாறும் நகரத் தொடங்கினோம். புகைக்குண்டின் புகை கலையும்வரை காத்திருந்த படையினர் இம்முறையும் எங்களை விளாசத்தவறவில்லை. நாங்களும் விடவில்லை. அடித்தவாறே உடனே பின்னகர்ந்தோம். ஆனால் படையினர் இப்போது தாம் புதிதாக அமைத்த நிலைகளிலே நிற்பதை விடுத்து, உட்புறமாக நகர்ந்து எங்களை நெருக்கத்தொடங்கினார்கள். சண்டை மாறிமாறி நடந்தது. நாங்கள் நகருவதும், அவர்கள் நகருவதுமாகக் கடுமையான சண்டை நடந்தது.



படிப்பகம்

padippakam



காலையில் சண்டை தொடங்கிய சிறிது நேரத்துக் கெல்லாம் காயப்பட்ட இன்சுரபியைக் காவிக்கொண்டு அந்த இடம்முழுவதும் அலைந்து திரிந்தோம். எப்படி யாவது அவரை வெளியே கொண்டுபோய்க் காப்பாற்றி விடவேண்டும் என்ற தவிப்பு எல்லோரிடமும் இருந்தது. ஆனால் இரண்டாவது புகைக்குண்டு நகர்வின்போது விழுந்ததோ நல்ல அடி. அந்த அடியில் மறுபடியும் காயமடைந்த இன்சுரபி தன்னைச் சுமந்திருந்த போராளி யின் கைகளிலேயே கண்களை மூடினார். சுமந்தவருக்கும் காயங்கள்தான். எல்லோருடைய மனங்களும் கனத்துப் போயின. இதுவரையும் எம்மோடு காவித்திரிந்த இன்சுரபியை முக்கோணநிலை எடுக்கும்போதுங்கூட எங்களுக்கு நடுவில் வைத்திருந்தோம். இப்போது உயி ரில்லை. கேணல் விதுஷா அவர்களின் கட்டளை கிடைத் தது.

**"இன்சுரபியை அடையாளப்படுத்தக் கூடியமாதிரி ஓரிடத்தில் வைத்துவிட்டு நீங்கள் அடுத்த நடவடிக்கை யில் ஈடுபடுங்கள்"**

அந்தக் கட்டளைக்குப் பின்னரே இன்சுரபியை அருகிலி ருந்த பனைமரத்தின் அடியில் படுக்கவைத்து ஓலைகளால் மூடிவிட்டோம். அந்த இடத்தில் அதற்கு மேல் எதுவுமே செய்ய எங்களால் முடியவில்லை. விட்டுவிட்டுவர மன மின்றி அந்த இடத்தின் ஆள்கூறைக் கணித்துக்கொண்டு, நகர்ந்தோம்.

மீளவும் முக்கோண நிலையமைத்தோம். நாங்கள் நின்ற இடத்தின் ஆள்கூறைத் தரும்படி விதுஷா கேட்டார். சிவந்தினி ஆள்கூறைக் கணிப்பிட்டு தெரியப்படுத்தினார். படையினர் மீளவும் தமது தேடல் நடவடிக்கையில் முன் னேறி வந்தனர். இம்முறை மோதிக்கொண்டதில் வேங் கையும் லெப். சுதாகரியும் எங்களிடமிருந்து சிதறிப் பிரிந்துவிட்டனர்.



படிப்பகம்

padippakam



படையினர் நகர்ந்துவந்த இடங்களுக்கு எறிகணை களைக் கேட்டு விழுத்தினோம். இதனால் படையினர் தேடலைக் கைவிட்டு, நாங்கள் தப்பிச்செல்ல வாய்ப்புக ளுள்ள பாதைகளில் நின்றுகொண்டார்கள். முகமாலை-கடற்கரை வீதியில் படையினர் பரவலாக நடமாடிக் கொண்டிருந்தனர். பாதையிலிருந்து 50மீ. உட்புறமாக நாங் கள் நின்றோம். அவர்கள் எங்களை இன்னமும் காண வில்லை. ஆனால், வேறொரு முனையிலிருந்து 'சோதியா' வினுள் ஏராளம் படையினர் நகர்ந்துகொண்டிருந்தார்கள். தொடர்ந்து உழவு இயந்திரத்திலும் சென்றுகொண்டிருந்த னர். நடந்து போய்க்கொண்டிருந்த ஒவ்வொரு படையின ருக்குமிடையே 10மீ. இடைவெளி இருந்தது. முற்றுகை வளையத்தினுள் இவ்வாறு படையினர் தமது செறிவை அதிகரிப்பது எங்களது நிலையை மேலும் மேலும் ஆபத்துக்குள்ளாக்கிக்கொண்டிருந்தது.

மதியம் கடந்து மாலையாகிக்கொண்டிருந்தது. கேணல் விதுஷாவின் கட்டளை கிடைத்தது.

**"மூன்று பேரை முன்னுக்கு நகர்த்தி வேவு பார்த்து, ரீமை எடுத்துக்கொண்டு வேகமாக வெளியிலை வாங்கோ"**

நகர்ந்தோம். ஆனால், திசை சரிதானா என்ற ஐயம் எழுந்தது. மீளவும் ஆள்கூறை அறிவித்தோம். இப்போது 130 பாகையில் வரும்படி சொல்லப்பட்டது. அதன்படி நகர்ந்துபோனோம். நாங்கள் போன திசையில் ஒரு மாம ரத்தடியில் இராணுவம் இருந்து கதைத்துக்கொண்டிருந்தது. நாங்கள் ஓசையெழுப்பாமலே பக்கவாட்டாக மேவி குறிப் பிட்ட இடத்தைநோக்கிச் சென்றோம்.

இப்போது இரவு 7.00 மணியாகிவிட்டது. மறுபடியும் நகரத்தொடங்கினோம். பொறுமையை இழந்த சிலர் தாம் இராணுவத்தினரைத் தாக்கப்போவதாக சுகந்தியிடம்



படிப்பகம்

padippakam



கேட்டனர். இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்திருங்கள் என்று அவர்களை நிதானப்படுத்தினார் சுகந்தி. மற்றைய முற்றுகைக்குள் சிக்கியிருந்த ஜமுனா, வீரமணி ஆகியோர் தமது முற்றுகைக்கு வெளியே வந்துவிட்டிருந்தனர். எப்படி யாவது எங்களையும் வெளியே வரும்படி விதுஷா மறுபடி மறுபடி கேட்டுக்கொண்டிருந்தார்.

சோதியா தளத்தின் மையப் பகுதிக்குள், ஜமுனாவின் களநிலை கட்டளை நிலையம் அமைந்திருந்தது. சண்டை தொடங்கிய அதே நிமிடங்களில், பரவலாக வேகமாக எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. உலங்குவானூர்தி சுட்டுத்தள்ளிக்கொண்டும் குண்டுகளை வீசிக்கொண்டும் இருந்தது.

தொலைத்தொடர்புக் கருவியூடே கதைத்துக்கொண்டிருந்த ஜமுனாவுக்கு நிலைமை விளங்கியது. தாம் சுற்றி வளைக்கப்படுவதை உணர்ந்தார். உடைக்கப்பட்ட பகுதிக்குள்ளிருந்து அடிகள் செறிவாக வந்துகொண்டிருந்தன. முன்னரங்க நிலைக்குச் சற்றுப் பின்னால் நின்ற சுபத்திராவின் .50 கலிபர் தனது சூட்டுவலுவைக் காட்டிக்கொண்டிருந்தது. அவர்களுக்குப் பக்கவாட்டாகப் படையினர் வந்துகொண்டிருந்தனர். சுபத்திராவின் அணியினர் .50 கலிபரையும் காயப்பட்டோரையும் தூக்கிக்கொண்டு விரைவாக வந்து ஜமுனாவைச் சந்தித்தனர்.

அதேவேளை வதனியின் நிலைக்கு முன்னும், பின்னும் இர்ாணுவம். எந்த முடிவை எடுப்பது? அந்த வேளை லெப்.கேணல் மதியின் தொடர்பு கிடைத்ததும், அவரின் கட்டளைப்படி வதனி தனது 40மி.மீ. எறிகணை செலுத்தியால் படுவேகமாகத் தாக்கி, கத்தியபடியே உடைத்துக் கொண்டு தனது அணியுடன் ஜமுனாவை வந்தடைந்தார்.



படிப்பகம்

padippakam



எல்லோரும் ஒன்றுசேர்ந்து, மறைப்புக்களைப் பயன் படுத்தித் தாக்கிக்கொண்டே, பின்பகுதிக்கு நகர்ந்தார்கள். வதனியை நகர்த்திச் சூழலை ஐமுனா அவதானித்தார்.

ஐமுனாவின் கட்டளை மையத்துக்கு நேர் முன்னே நிலைகொண்டிருந்த வதனியின் பிளாட்டூனின் இறுதி நிலைக்கும் அதற்கடுத்துள்ள இளஞ்செல்வியின் பிளாட்டூ னின் முதலாவது நிலைக்குமிடையேயுள்ள இடைவெளி யால் உள்ளே வந்து இவர்களைச் சுற்றிவளைத்திருந்தது இராணுவம். இளஞ்செல்வியின் அணி மீதே படைத்தரப்பு முதலில் தாக்குதலைத் தொடுத்தது. எனினும் அது ‘திசைதிருப்பும்’ தாக்குதலாகவே இருந்தது.

அதற்கிடையில் இடையிடையே ஐமுனாவின் தொடர்புகள் மதிக்குக் கிடைக்காமல் போக, அந்தத் தொடர்புகளை யாழ் நெடுஞ்சாலைக்கு வலதுபுறமாக நிலைகொண்டிருந்த கொம்பனிப் பொறுப்பாளர் மாலதி ஒருங்கிணைத்துக் கொடுத்தார். மாலதியுடன் நின்ற நல்லரசியின் பிளாட்டூனுக்குச் சண்டை கிடைக்கவில்லை. ஆனால், அவர்கள் சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டுக் கொண்டவர்களின் நிலைமைகளை அறிவதில் தீவிரமாக இருந்தார்கள். அத்தோடு ரவைகள் ஏற்றப்பட்ட சுடுகலன் களைத் தயார்நிலையில் வைத்திருந்தார்கள். சண்டையைச் சந்திப்பதற்கான எல்லா ஆயத்தங்களோடும் அவர்கள் காத்திருந்தனர்.

வதனியுடன் நின்ற லெப். மேனகாவின் செக்சன் மறிப்பு வேலையைச் செய்தது. ஐமுனாவின் கட்டளை நிலையத் தைத் தக்கவைப்பதற்கான தாக்குதலில் ஈடுபட்டிருந்த .50 கலிபருக்கான ரவை முடிய, அதைப் பின்பகுதிக்குப் போகும்படி ஐமுனா அனுப்பினார். அது போன வேகத் திலே திரும்பிவந்தது. வழியில் இராணுவம். ரவையில் லாத கலிபருடன் சென்றவர்களுக்கு எப்படியிருக்கும்?



படிப்பகம்

padippakam



இரண்டு தனித்தனிப் பெட்டிகளாக முற்றுகையிட்டிருந்த இராணுவம், தனக்கென 'I' வடிவ காப்பு நிலைகளை அமைத்து நிலைகொள்ளத் தொடங்கியது. அப்பகுதிக்குள் நெருங்கி எம்மவர்களைத் தேடிச் சுடும் பணியில் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

ஜமுனாவுடன் நின்றவர்கள் பின்பகுதிநோக்கி நகர, இராணுவம் இவர்களைத் தேடி இவர்களின் முன்னாலேயே வந்துகொண்டிருந்தது. சமாளித்துக்கொண்டார்கள். 'சோதியா' வைச் சந்திக்கும் முகமாலை வீதியைக் கடந்து இடதுபக்கமாகப் போய் ஏறினார்கள். இப்போது படையினர் இவர்களைக்கண்டு கூச்சலிட்டு, கத்திக்கொண்டு ஓடிவந்தனர். நிற்பார்களா? ஓட்டமும், நின்று தாக்குவதுமாக நகர்ந்து ஒரு பற்றை மறைவில் நிலையெடுத்தனர்.

மறுபடி மறுபடி இப்படி நடந்ததில் உடல் சோர்ந்தது. உள்ளமோ வெளியேறத் துடித்துக்கொண்டிருந்தது. இப்போது வானலையில் கேணல் தீபன் அவர்களின் கட்டளை கிடைத்தது. ஒரே பகுதிக்குள் குறுகிய இடைவெளியில் வீரமணி நிற்பதால், அவரைச் சந்திக்குமாறு ஜமுனாவை அவர் பணித்தார். லெப்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த லெப்.கேணல் வீரமணியை இப்போது தேடத்தொடங்கினார்கள்.

இவர்களிலிருந்து 700மீ. பின்பகுதியில் உதவிக் காப்பரண்கள் அமைத்து வீரமணியுடனான ஓர் அணி நிலைகொண்டிருந்தது.

அங்கு வந்துசேர்ந்த ஜமுனாவின் அணியினர் தொடர்ந்தும், படையினர் வருவதைப் பார்த்துச் சுட்டுக்கொண்டிருந்தனர். இடையிடையே படையினரின் RPG கள், 40மி.மீ. எறிகணைகள், குண்டுகள் என வீழ்ந்து வெடித்தன. இன் வேங்கையின் PK LMG சீறிச் சீறி ஓய்ந்தது. புலிக்குட்டி



படிப்பகம்

தொலைத்தொடர்புக் கருவியை வைத்துவிட்டு, சுடுகலன் களால் சுட்டுக்கொண்டிருந்தார்.

வீரமணியின் இடத்தில் நின்ற ஆண்போராளிகளும் இவர்களும் ஒன்றுசேர்ந்து உடைத்து வெளிவருவதற்காக முழுமுயற்சியையும் கையாண்டார்கள்.

ஜமுனாவின் தொடர்பு கிடைத்தபோது

**"உங்களிடமுள்ள ஆயுதங்கள் அனைத்தையும் பயன் படுத்தி எப்படியாவது உடைப்பை ஏற்படுத்தி வெளி யில் வாருங்கள் வேறு எந்த முடிவும் எடுக்கவேண்டாம்"**

என்று கண்டிப்பான கட்டளையை மதி கொடுத்தார்.

சாவகச்சேரியிலும், அரியாலையிலும் முற்றுகைக்குள் அகப்பட்ட எமது கட்டளையதிகாரிகள் வெளியே வர மறுத்து, உள்ளேநின்று சண்டையிட்டு, திரும்பிவராம லேயே போன துயரம் இன்னும் மனதை அழுத்திக் கொண்டிருந்தது. அதற்குள் இன்னுமொன்றா?

நடுப்பகல் 12 மணிக்கெல்லாம் ஒரே முடிவாக வெளி வருவதெனக் காப்பு நிலைகளிலிருந்து வெளிவந்தனர். சிறிது தூரம் நகரத் தொடங்கவே விழுந்தது அடி. மீளத் தாக்கியபடியே முகமாலைநோக்கி ஓடினார்கள். வதனி, மேனகா ஆகியோருடன் முன்பகுதியின் நிலைமைகளைப் பார்க்க வாணன், பிரதாப், அமிர்தாப் என ஆண் போராளிகளும் கூடவே நகர்ந்தார்கள்.

முதலில் வீதியை உடைத்தால் அந்த வழியால் எந்தப் பிசகுமில்லாது வெளியில் போகலாம் என்று அதை நோக்கி நகர்ந்தார்கள். இப்போது விழுந்தது அடி. இராணு வத்தின் முற்றுகை ஒற்றை வரிசையாக இல்லாமல், இரட்டை வரிசையில் அமைந்திருந்தது. உள்வரிசை

padippakam



இராணுவம் உள்ளே பார்த்தபடி. வெளிவரிசை இராணுவம் வெளியே பார்த்தபடி.

இவர்களைப் பார்த்தபடியிருந்த காப்பு நிலையை உடைத்து முன்னேற, மறுபக்கம் இருந்த நிலையில் இருந்தே அடி கிடைத்தது. உடைக்க முடியாமல்போனது. இது மறுபடியும் மறுபடியும் நிகழ்ந்தது.

இப்போது வேறு திட்டம் தீட்டினார்கள். இன்னொரு பக்கமாக, சற்று வலதுபுறம் நகர்ந்து உடைத்தார்கள். பாதை இப்போதும் ஏற்படவில்லை. அதிலிருந்து சிறிது தூரத்தில் இராணுவத்தினரின் தலைக்கவசங்களும் காயப் பட்டவர்களுக்கு அவசர முதலுதவி செய்த தடயங்களும் இரத்தமும் கிடந்தன.

அவற்றையெல்லாம் கடந்து வீதிக்குக் கிட்டவாக வந்து ஒரு மறிப்பு அரணை அமைத்துவிட்டு நின்றபோது RPG எறிகணை வந்துவெடித்தது. அந்த இடத்தில் செக்ஷன் கட்டளையதிகாரி லெப். மேனகா வீரச்சாவடைய, ஜமுனா உட்பட சிலர் காயமடைந்தனர். ஆண் போராளி ஒருவரும் அதில் வீரச்சாவடைந்தார்.

மீளவும் அவ் உடனடி வேவு அணி வேவு பார்த்தது. மறுபடி மறுபடி நகர்ந்து, வேவு பார்த்துத் தாக்கி ஒரு உடைப்பை ஏற்படுத்த முழுமூச்சுடன் முயன்றனர். அவ் வேளை ஓரிடத்தில் படையினரின் கடும் தாக்குதலைச் சந்திக்க நேரிட்டது.

இனி ஒரு கணமும் தாமதிப்பதில்லை என்று முடி வெடுத்தார்கள். வீச்சாக முன்னேறினார்கள். பக்கவாட்டாக நகர்ந்தார்கள். இங்கே ஒரு சுவையான சம்பவமும் நடந் தது. பனைமரத்தின்கீழ் இராணுவம் பதுங்குகுழியமைத்துக் காப்பெடுத்து இருந்தது. அவர்கள் இவர்களையும் இவர்கள் அவர்களையும் நேருக்கு நேராகக் கண்டனர். என்ன



படிப்பகம்

padippakam



அதிசயம்! பனைமரத்தோடு இருந்தவர்கள் இவர்களை நட்போடு கையசைத்துக் கூப்பிட்டார்கள். அவர்கள் அணிந்திருந்தது சாதாரண உடை. தலைகளில் சாக்குத் தொப்பிகள். தங்களைச் சுடவேண்டாம், சுடவேண்டாம் எனக் கைகளால் சைகைகள் காட்டிக்கொண்டிருந்தனர். இவர்கள் சுட முற்பட, மறுபடியும் அவர்கள் சுடவேண்டாம் எனச் சைகைகாட்டி இவர்களைக் கூப்பிட்டார்கள்.

அடுத்த கணமே இவர்களுக்கு விளங்கியது அவர்கள் இராணுவம்தான். உடனே பரவல் வரிசையில் கத்திக் கொண்டு முன்னோக்கி அடித்தபடி ஓடினார்கள். 40மி.மீ. எறிகணைகளை ஏவினார்கள். குண்டுகளை வீசினார்கள். பக்கங்களில் நிலைகொண்டிருந்த இராணுவத்தைநோக்கிச் சுட்டார்கள். அவர்கள் நின்ற இடத்தைக் கடக்கும்போது அந்த இடத்தில் நான்கு இராணுவத்தினரின் இறந்த உடல்கள் கிடந்தன. ஒருவர் காயத்துடன் ஓடிக்கொண்டிருந்தார். சிறிது தூரத்தின்பின் ஓடுவதை நிறுத்திவிட்டு நின்று இவர்களைப் பார்த்தார். இவர்களும் அவரைச் சுட நினைக்கவில்லை. அவரும் இவர்களுக்கு எதையும் செய்யாது விறைத்துப்போய் நின்றார்.

தொடர்ந்து ஒருவரும் விடுபடாது PK LMG, .50 கலிபர், காயப்பட்டோர் என எல்லோரும் அவ்வழியால் வெளி வந்து சேர்ந்தனர். ஏதோ ஒரு வகையில் எல்லோருக்கும் காயங்கள் இருந்தன. சண்டை தொடங்கிய அன்றே இவர்கள் வெளியில் வந்து சேர்ந்தபோது மாலை 4.30.

காப்புச் சூட்டுக்காக ஆனந்தியையும் ஒளியரசியையும் நகர்த்திய சுகந்தி அவர்களுக்குரிய நிலைகளைக் காட்டினார். படுத்து நிலையெடுத்த அந்தக் கணமே தன் பக்கத்தில் ஏற்கனவே படையினர் நிலையெடுத்திருப்பதாயும் தான் அடிக்கப்



படிப்பகம்

padippakam



போவதாகவும் ஆனந்தி சொல்லி முடிக்கமுன்பே தொப் தொப் என்று பத்துக்கும் மேற்பட்ட கைக்குண்டுகள் வந்து விழுந்தன. சூடுகள் கால்களுக்கருகே குத்திக்குத்தி வந்து வீழ்ந்ததில், மணலையள்ளி எம்மில் கொட்டி, புழுதியும் புகையும் கண்களை மறைத்தன. வேட்டொலிகள் தொட ராகவே இருந்தன. அந்த அடியோடு அணி இரண்டாகப் பிரிந்து சிதறியது. படையினர் நெருங்கி இவர்களை நோக்கித் தேடொளியைப் பாய்ச்சியதுதான் தாமதம் படையினர் நிற்குமிடத்தைக் கணநேரத்தில் கணிப்பிட்ட நாங்கள் புயல் வேகத்தில் பாய்ந்து படையினரைத் தாக் கிய வேகத்திலேயே மண் அணைமீது பாய்ந்தேறி வெளி யில் வந்தேவிட்டோம். வெளியில் வந்த பின்னர் எண்ணிப் பார்த்தால், சுகந்தியுடன் பத்துப்பேர் நின்றோம். கப்டன் தமிழ்க்கண்ணன் உட்பட லெப். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த நான்குபேரும் அதில் நின்றனர்.

வெளிவந்த அடுத்தகணமே ஆனந்தியைக் கூப்பிட்ட சுகந்தி, தான் உடைத்துவந்த பாதையாலேயே அடித்துக் கொண்டு ஓடி வரும்படி சொன்னார்.

தான் காயப்பட்டுவிட்டதாகவும் தன்னால் நகர இயலா துள்ளதாகவும் ஆனந்தி அறிவித்தார். சுகந்தி உடைப்பை ஏற்படுத்திய இடத்துக்கு மூன்று பக்கமிருந்தும் இராணு வத்தினரின் அடிகள் கிடைத்தன. PK LMG அடியும் விழுந் திருந்தது. வெளியில்வந்த எல்லோருமே காயங்களுடனிருந் தோம். குண்டடியோடு அணி இரண்டாகப் பிரிந்தபோது தளிர், தேவசுகி, குறிஞ்சி, மகிழினி, அகவாணி, சோதியா படையணியின் எறிகணை செலுத்தும் அணி ஒன்று என ஒரு குழுவாக உள்ளே நின்றுகொண்டனர். பற்றை கள் அவர்களுக்கு மறைப்பைக் கொடுத்தன.

தான் வந்த பாதையைப் பயன்படுத்தும்படி குறிஞ்சி யிடம் சுகந்தி மறுபடி மறுபடி கேட்டுக்கொண்டிருந்தார். அவ்வழியாலே வரும்படி கேணல் விதுஷாவும் கேட்டுக்



படிப்பகம்

padippakam



கொண்டிருந்தார். உள்ளே எறிகணைகளை வீழ்த்தி வெடிக்க வைத்து, அந்த இடத்தை மையமாகக் குறிவைத்து, இவர்கள் வெளியே வரவேண்டிய திசையை விதுஷா குறிப்பிட்டார்.

கேணல் பானுவுடன் தொடர்புகொண்டு, எறிகணைகளை உட்புறம் விழுத்திய விதுஷா, அவை வீழ்ந்த இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் குறிஞ்சி நிற்கின்றார் என்பதை அவரிடமே கேட்டு, அவ்விடத்தின் ஆள்கூறைக் கணிப்பிட்டார்.

குறிஞ்சி ஒரு மருத்துவப் போராளி. அணியொன்றை வழிநடத்தப்போவது அவருக்குப் புது அனுபவம். அதைவிட அப்போதுதான் புதிய ரக இலத்திரனியல் நடைபேசிகள் எங்களின் பாவனைக்கு வந்திருந்தன. குறிஞ்சிக்கு அதில் பயிற்சியில்லை. இலக்கங்கள் மாறுவது, வெளிச்சம் வழங்குவது, அணைப்பது, ஒலி எழுப்புவது எல்லாமே ஆழிகளின் செயற்பாடுகள்தான். வேறொருவரிடமிருந்து குறிஞ்சியிடம் கைமாறி வந்திருந்த நடைபேசியை எப்படி இயக்குவதென்று ஒவ்வொன்றாக, அந்த ஆழியை அழுத்தினால் அப்படி நடக்கும், இதை அழுத்தினால் இப்படி நடக்கும் என்று சொல்லிக்கொடுத்துக் கொடுத்தே கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்தார் விதுஷா.

மிகவேகமாக மின்சக்தியை விழுங்கிவிடும் அந்தப் புதிய வகை நடைபேசி, குறிஞ்சியோடு விதுஷா போராடிக் கொண்டிருந்தபோது மின்கல வலுவை இழந்துவிட்டதில், குறிஞ்சியின் குரல் விட்டுவிட்டுக் கேட்கத் தொடங்கியது. அவர் என்ன கதைக்கின்றார் என்று இங்கே விளங்கவில்லை. மின்கலங்கள் வலுவிழந்த விடயம் குறிஞ்சிக்கு விளங்கவில்லை. நிலைமையைப் படுவேகமாகப் புரிந்து கொண்ட விதுஷா

"பற்றரியை மாற்று, பற்றரியை மாற்று"



படிப்பகம்

padippakam



என்று பல தடவைகள் கத்தியபின்னரே, குறிஞ்சிக்கு விடயம் விளங்கியது. அதற்குள் விதுஷா களைத்து விட்டிருந்தார்.

கும்மிருட்டு. உண்மையில் ஒன்றுமே தெரியவில்லை. அருகில் படையினர் வந்து நின்றால்கூட இனங்காண்பது கடினம். உள் நிற்பவர்கள், தாம் வரவேண்டிய திசையைக் கண்டறிவதற்காக இடையிடையே மேல்நோக்கிச் சுட்டுக் காட்டும்படி வெளியில் நின்றவர்களிடம் கேட்டார்கள். ரவை ஒலி வந்த திசைநோக்கி நகர்ந்தார்கள். வழியில் PK LMG இசைவிழியைச் சந்தித்தார்கள். அணி இரண்டா கப் பிரிந்த கடைசிச் சண்டையில் காப்புச் சூட்டுக்காக PK LMG உடன் நிலையெடுத்தவர்களில் ஒருவர் தான் இந்த இசைவிழி. காயம் கடுமையாக இருந்ததால் கப்டன் ஒளியரசி தனக்கும் PK LMG க்கும் குண்டு வைத்து வெடிக்கப்பண்ணியதாகவும் கப்டன் ஆனந்தி பெரிய காயத்துடன் சயனைட் அருந்தியதாகவும் தான் காயத் தோடு மயங்கி விட்டதாகவும் மயக்கம் தெளிந்தபின் எழுந்து ஆனந்தியின் தொலைத்தொடர்புக் கருவியை எடுத்துக்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார். அடி விழுந்த அந்த இடத்தில் இப்போது படையினர் இல்லை என்பதையும் தெரிவித்தார்.

இப்போது இவர்களோடு இசைவிழியும் சேர்ந்துகொள்ள, நகர்ந்தார்கள். இருளில் படையினர் அரணமைத்திருந்த நிலைக்கு நேராக வந்து ஏறிவிட்டனர். படையினர் படு காட்டமாக விளாசித் தள்ளினர். தமக்கு அடி கிடைக்கும் திசைநோக்கியும், இராணுவத்தின் புதிய நிலைகளைநோக் கியும் எறிகணைத் தாக்குதலைச் செய்யும்படி சுகந்திக்கு அறிவித்தவாறு சற்றுப் பின்னே வந்து நிலையெடுத்தனர். சுகந்தியுடன் வெளியில் நின்றவர்கள் ஆயுதங்களினால் தாக்கி படையினரின் கவனத்தைத் திருப்ப, உள்ளே நின்ற வர்கள் வேகமாக ஓடி வந்து படையினருக்கு அண்மையில்



படிப்பகம்

இருந்த பற்றையொன்றினுள் புகுந்து அவதானித்துக் கொண்டிருந்தனர்.

இப்போது தமக்கு வலமும் இடமும் எறிகணைகளை ஏவச் செய்தார்கள். மேல்நோக்கி மூன்று ரவைகளைச் சுட்டு, திசையைக் காட்டும்படி சுகந்தியிடம் கேட்க, சுகந்தி யுடன் நின்ற ஒருவர் மேல்நோக்கி ரவைகளை ஏவ, அந்த இடத்தைநோக்கி ஓடிவரத் தொடங்கினார்கள். வலம், இடம், முன்பக்கமிருந்து எதிர்ப்பு வந்த திசைகளை நோக்கித் தாக்கியவாறு மிகமிக வேகமாக அவர்கள் ஓடினார்கள். ஏற்கனவே சுகந்தியுடன் நாங்கள் அந்த இடத் தால் தப்பியோடியதால், இவர்கள் வருவதற்கிடையில் படையினர் அந்த மண்ணணைக்கு முன்னாக இரண்டு கம்பிச் சுருள்களைப் போட்டுத் தடைகளை ஏற்படுத்தியிருந் தனர். எதிர்பாராத இந்தத் தடையால் ஓட்டம் சற்றுத் தாமதித்தது. படையினரைத் தாக்கியபடியே கம்பிச் சுருள் களை இழுத்துப் பறித்து விலக்கி ஓடி மண்ணணைக்கு மேலால் பாய்ந்து ஏறி வெளிப்புறம் வந்து விழுந்தபோது நேரம் அதிகாலை 5.15.

"கினிகிர-09 படைநகர்வின்போது எழுதுமட்டுவாள், கிளாலி முன்னரங்கப் பகுதியிலே நின்ற மாலதி படையணிக்குச் சூட்டாதரவு வழங்குவதற்காக எங்களு டைய எறிகணை செலுத்தி ஒன்று பின்னணியில் நின்றது. சண்டையின்போது எறிகணை செலுத்தி நின்ற பின்னணிப் பகுதிக்குப் படையினர் வந்துவிட்ட தால், அவர்கள் எறிகணை செலுத்தியை அழித்து விட்டு, முன்னே நின்ற மாலதி படையணியுடன் சேர்ந்துக்கொண்டனர். உள்ளே சண்டை நடந்தபோது அணி இரண்டாகப் பிரிந்து, ஒரு பகுதியினர் மாலதி படையணியுடன் மறுநாள் காலையில் தப்பி வந்தனர். மற்றப் பகுதியினர் மூன்று நாட்களின் பின்னர் வந்து சேர்ந்தனர்"

padippakam



என்றார் கேணல் துர்க்கா.

முற்றுகைக்குள் அகப்பட்ட எல்லோருமே தப்பிவிட்டோம் என்ற பூரிப்பை மீறி, எங்களுக்காக ஒரு துயரச் செய்தி காத்திருந்தது.

"மாலதி படையணியின் தளபதியான லெப்.கேணல் மதி நேற்று வீரச்சாவடைந்தார்"

ஏற்கனவே வெளியில் நின்றவர்களுக்கு இது பழைய செய்தியாயினும், இதுவரை நேரமும் முற்றுகைக்குள்ளிருந்தவர்களை மீட்டெடுப்பதிலேயே எல்லோருடைய கவனமும் இருந்ததால், விலகியிருந்த கவலை மேகம், மறுபடியும் எல்லோர்மீதும் கவிந்துகொண்டது.

ஒவ்வொரு சண்டையும் முடிந்தது பாதி, முடியாதது பாதியாக இருக்கும்போதே ஓடிவந்து, எல்லோர் நலனையும் விசாரித்து, யாருக்கு என்ன தேவை என்பதை அறிந்து, உடனேயே நிறைவுசெய்கின்ற மதி நேற்றைய சண்டையில் வீரச்சாவா?

முற்றுகையை உடைத்து வந்த எல்லோருக்குமே கடுங் காயங்கள்தான். தலைவெடி, நெஞ்சுக் காயம், வயிறு பிரிந்தது, முறிவு... உடற் காயங்களைவிட மனக்காயம் அதிக வலியைத் தந்தது. முற்றுகையை உடைத்து அனைவரும் வெளியில் வந்துவிடவேண்டும் என்று தன் மனதால் வேண்டிக்கொண்டிருந்தார் மதி. அவரின் வேண்டுதல்படி வெளிவந்துவிட்டவர்களைக் காண மதி இல்லை. அறிவாற்றலில், ஆளுமையில் படையணிக்கு முழுமையாகப் பணி செய்த எங்கள் மதி மூச்சுவிட மறந்தபோது மகளிர் அணிகள் முழுதாய் கலங்கிற்று.

மதியைப்பற்றி முழுதாக இங்கு சொல்லிவிட முடியாது. பெரும்பாலான காலம் நிர்வாகப்பணியில் ஈடுபட்ட



படிப்பகம்

மதி, தனக்கு அரிதாகக் கிடைத்த சண்டைக்கான வாய்ப்புக் களை உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டதுடன், சிறந்த நிர்வாகத்திறன், அணிகளை வழிநடத்தும் ஆற்றல் என்பவற்றை மிகச் சரியான முறையில் வெளிப்படுத்தி னார்.

"உங்களெல்லோரையும் என்னால புரிஞ்சுகொள்ள முடியும். எப்படியும் விதுஷாக்காவிடம் கேட்டு ஒவ் வொருத்தராகச் சண்டைக்கு எடுப்பன்"

களமுனைக்குச் செல்லும்போது தன்னோடு நின்ற நிர் வாகப் போராளிகளுக்கு மதி இறுதியாகச் சொன்ன உறுதி வார்த்தைகள் இவை.

**சிறந்த அணித் தலைவர்கள் நிர்வாகத்திறன் மிக்க வர்களாக இருத்தல் வேண்டும்** என்ற தலைவரின் கருத் துக்கு நல்ல எடுகோளாக விளங்கினார்.

நிர்வாக வேலைகளில் ஈடுபட்டிருந்த காலப் பகுதியில் சண்டைக்குப் போகும் போராளிகளுக்கான ஒழுங்குபடுத் தல்களை நிறையவே செய்தார். உடைகள் தேவைப்பட் டோருக்குப் பொருத்தமான அளவுகளில் உடைகளை தன் கையாலே கொடுத்து, அணிவித்துப் பார்த்துவிடுவார். ஆயுத ஒழுங்குபடுத்தலை மிகச் சரியாகச் செய்து வழி யனுப்பிவிட்டு, வரப்போகும் செய்திகளுக்காகக் காத்திருப் பார்.

எங்களால் மீட்கப்பட்ட நிலத்தில் நாங்கள் வெற்றிக் களிப்பில் நிற்க, வீரச்சாவடைந்த போராளிகளின் வித்து டல்கள் தாங்கிய பேழைகள் வைக்கப்படும் இடத்தில் மதி நிற்பார். இனங்காணமுடியாத நிலையில் வரும் வித்துடல்களில் இருக்கக்கூடிய சிறு அடையாளங்களையும் தேடி, கடைசியாகத் தான் கொடுத்த உடையைப் பார்த்து, அந்தப் போராளி அதைத்தான் இறுதியாக அணிந்தாரா

padippakam



என்று மற்றவர்களைத் தேடிக்கேட்டு, இவர்தான் இது என அடையாளம் காட்டிவிடுவார். அந்தவகையில் ஒவ்வொரு போராளிகளையும், அவர்களின் பழைய காயங்கள், உடல் அடையாளங்களையும் மிகமிக நன்றாகவே தெரிந்து வைத்திருந்தார். இது அவருக்குத் தொடர்ச்சியான பணியாகவும் இருந்தது.

களத்தில் நிற்கும் அணிகளுக்குத் தேவையான எல்லா ஒழுங்குகளையும் சலிக்காது செய்துமுடிப்பார்.

சூரியக்கதிர்-2 எதிர் நடவடிக்கையின் முடிவில் எமது படையணி களமுனையில் சண்டைபிடித்தபடி. எம்மில் பலர் வன்னி வந்தபடி. மதியோ ஒரு கணமும் ஓயாது, நிர்வாகத்துக்குவேண்டிய பொருட்கள், தங்ககங்களிலிருந்த முக்கிய ஆயுத வெடிபொருட்கள், எதிரியின் கையில் அகப்படக்கூடாத முக்கிய பொருட்கள் என எல்லாவற்றையுமே எடுத்து படையணியின் கடைசிப் போராளி வன்னி வரும்வரை கடற்கரையில் நின்று பொருட்களையும் போராளிகளையும் அனுப்பிவைத்தார்.

வன்னிக்கு வந்த மறுகணமே பெரும் பணி காத்திருந்தது. போதுமான நிர்வாகத் தளங்களோ, கட்டமைப்புக்களோ இல்லாதபோதும் எந்தச் சிக்கலும்வராதபடி படையணிக்குத் தேவையான எல்லா ஒழுங்குகளையும் விதுஷாவின் கட்டளைகளுக்கமையக் கவனமெடுத்துச்செய்தார்.

மார்பில் ரவை தைத்தவுடன்,

**“நான் பின்னுக்குப் போறன். பிள்ளைகள் கவனம். சுகிக்கு ஒத்துழைப்புக்கொடுங்கள்”**

இதுவே மதியின் இறுதி வார்த்தைகள்.



படிப்பகம்

# 2001.01.19

நீண்ட இரவும் குறுகிய பகலும் கொண்ட முன் பனிக் காலம். மூன்று நாட்களின் முன்னர் நடந்த சண்டையில் லெப்.கேணல் மதியை இழந்த துயரிலிருந்து இன்னமும் ஒருவரும் மீளவில்லை. நடந்த சண்டையின்போது எமது போராளிகள் செய்த துணிகரமான செயற்பாடுகளால் உண்டான பெருமிதத்தையும் மீறி, லெப்.கேணல் மதியை இழந்த துயர் மனதைப் பிழிந்தது. காவியாவின் கண்கள் அவரது கட்டுப்பாட்டைமீறி இடையிடையில் கலங்கிக் கொண்டிருந்தன. ஒரு தளபதியாகமட்டுமல்லாமல் பாச முள்ள உறவாக, நல்ல சிநேகிதியாக, எந்தப் பிரச்சினை யையும் தான் மனம்விட்டுக் கதைக்கின்ற மதி இப்போது இல்லை என்பதைக் காவியாவால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

சண்டையின்பின் மீளமைக்கப்பட்டுக்கொண்டிருந்த காவலரண் வேலைகளைப் பார்வையிடவேண்டிய வேலை அன்று இருந்தது. தொலைத்தொடர்புக் கருவியூடாகக் குறிப்பிடக்கூடிய வேலைகளைக் காவலரண்களில் நிற் கின்றவர்களுக்குக் குறிப்பிட்டுவிட்டு, நிலைமையை நேரடியாகப் பார்க்க காவியா புறப்பட்டார். கூடவே மேஜர் நெல்சாவும்.

பின்னணித் தளங்களுக்கு ஏதேனும் வேலைகளுக்காக வரும்போதுகூட தன் T81 ஐக் கைவிடாத காவியா, "புதுக்குடியிருப்புச் சந்தியிலென்ன சண்டையோ நடக்கப் போகுது? ரைபிளை வைச்சிட்டுப் போங்கோ. நாங்கள் பார்ப்பம்" என்ற எங்கள் கேலிகளுக்கு ஒரு புன்னகையைப் பதிலளித்துவிட்டு, நதிமூலம்-01 நடவடிக்கையில் முறிந்து சொத்தியாகிய தன் வலது கையால் T81 ஐச் சுமந்து போகும் காவியா அன்று ஆயுதத்தை வைத்துவிட்டு, தொலைத்தொடர்புக் கருவியுடன் புறப்பட்டார். நெல்சா தனது T81 உடன்.

padippakam



நீண்ட இரவு தன் ஆயிரம், இரண்டாயிரம், பத்தாயிரம் கரங்களால் பளைப் பகுதியை மூடத்தொடங்கியது. இருளை ஊடுருவியவாறு காவியாவின் கால்கள் நடந்தன. எந்த இருளிலும் தடுமாற்றம் ஏற்படாத நிதானம் அவருடையது. ஒருதரம் போய்வந்த பாதையை எத்தனை வருடம் கடந்தாலும் மறக்கமாட்டார். கும்மிருட்டிலும் இடங்களை இனங்காணுவார். அன்று அந்த நீண்ட இரவு காவியாவை எம்மிடமிருந்து பறித்தெடுத்துவிட்டது. இடையிடையே கட்டளைத் தளத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கதைத்தவாறு போன காவியா, நீண்ட நேரமாகத் தொடர்பு எடுக்கவில்லை. இவ்வளவு நேரத்துக்கும் காவலரண் பகுதிக்கே போயிருக்கவேண்டுமே. இடையில் வேறு எங்காவது நின்றாலும் தொடர்பு எடுத்திருப்பாரே. போய்ச்சேரவுமில்லை. தொடர்பு எடுக்கவுமில்லை என்றால்...

எமது பகுதியை நோக்கி வழமையாகவே இராணுவம் அடிக்கடி தாக்கும். அன்றும் அந்த வழமையான அடிகளைத்தவிர வித்தியாசமாக ஒன்றுமில்லை. ஒருவேளை அந்த அடிகளில் ஒன்றில் தற்செயலாகக் காயப்பட்டார்களோ? மயங்கிப்போனார்களோ? இரவிரவாகத் தேடினார்கள். காவலரண் பகுதிகள், தான் நிற்பதாகக் காவியா கடைசியாகக் குறிப்பிட்ட இடம் எல்லாம் தேடியும்... எமக்கு முன்னுள்ள பகுதியில் தேடியும்... தற்செயலாகப் படையினரை எங்காவது எதிர்கொள்ள நேர்ந்து, பாதை விலகி எதிரிப் பகுதிக்குள்ளேயே போகவேண்டிவந்து, எங்காவது மறைந்திருக்கின்றார்களோ? அப்படியாயின் எப்படியும் நாளைக்காவது வந்து சேருவார்கள். அந்த ஒரு நம்பிக்கையை மனதில் தேக்கியவாறு தொலைத்தொடர்புக் கருவியருகே காத்திருக்கத் தொடங்கினோம்.

*2001.01.20*

விடிந்து வெகு நேரமாகிவிட்டது. இன்னமும் காவியா வரவில்லை. இரவு முழுவதும் காதைத் தீட்டியவாறு



படிப்பகம்

தொலைத்தொடர்புக் கருவியருகே விழித்திருந்து கண்கள் வலித்தன. எதிரிப் பகுதிக்குள் சிக்கியிருந்தால் காவியாவும் நெல்சாவுங்கூட இப்படித்தானே கண்கள் வலிக்க விழித்துக் கொண்டிருப்பார்கள் என்ற நினைவு மேலெழ மனம் வலித்தது.

எங்கு என்ன நெருக்கடிக்குள் நின்றாலும் கட்டளைப் பீடத்துடனான தனது தொடர்பைச் சீரமைத்துக்கொள்ளும் காவியா, தொலைத்தொடர்புக் கருவிக்குரிய மின்கலங்கள் உயிரே இல்லாமல் செத்துக்கிடந்தாலும் அவற்றைச் சப்பி, உரித்து, அடித்து, காயவைத்து தனக்கும் கட்டளைப் பீடத்துக்குமான தொடர்பை உயிர்ப்பித்துவிடும் காவியா ஏன் இன்னும் கூப்பிடவில்லை.

*2001.01.23*

இன்றோடு ஐந்து நாட்கள். திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கை முற்றாகவே தளர்ந்துவிட்டது.

எங்களுடைய படையணியின் மோட்டார் அணிகள் அனைத்தினதும் பொறுப்பாளராக இருந்த காவியா, சாவகச்சேரி, பளை, நாகர்கோயில், எமது பின்னணித் தளங்கள் என்ற களைப்பில்லாமல் அலைந்து வேலைசெய்து கொண்டிருந்த காவியா,

தலைவரில் பற்றும் படையணியில் எல்லையில்லாத பிடிப்பும்கொண்ட காவியா,

மாலதி படையணியை யாரும் ஒரு சிறு குறை கூறுவதையும் சகிக்காத காவியா,

தன்னால் படையணியின் கௌரவத்துக்கு சிறு மாசு கூட ஏற்படக்கூடாது என்று சுய கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளும் காவியா,

இனி இல்லை.

padippakam



தன்னுடன் நெருங்கிப் பழகி மாவீரர் ஆனவர்களின் படங்கள் கிடைக்காவிட்டாலும், பெயரை எழுதி வைத்து, தளத்தில் தான் நிற்கும் நாட்களிலெல்லாம் பூப்போடும் காவியாவுக்கு எம்மால் ஒரு பிடி மண்கூடப் போடமுடியாமல்...

இதற்கும் இரண்டு நாட்களின் பின் எமது முன்னரங்கிலிருந்து குறிப்பிட்ட தூரம் பின்னால் இரண்டாவது நிலைக் காப்பரண்களை அமைக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்த லெப்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியினரிடமிருந்து வந்தது அந்தச் செய்தி. காவியாவை நன்கறிந்தவர்கள் அவர்கள்.

கையிலிருந்த தொலைத்தொடர்புக் கருவி சிதறிய நிலையில் காவியாவும், படையினரைச் சுட்டபடியே தனது T81 சுடுகலனைப் பற்றியிருந்த நெல்சாவும்....

மனம் வலித்தது. கினிகிர-09 இல் மதியை... சாவகச்சேரி, அரியாலை என்று நீண்ட போரரங்கில் பலத்த ஆளணி இழப்பைச் சந்தித்து, எஞ்சியிருந்த பலத்தால் கினிகிர-09 ஐ கிளாலியில் எதிர்கொண்டதால் மேலும் ஆளணி குறைந்து முன்னரங்கில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே நின்ற அந்த மூன்றாவது நாளில், ஆட்களே இல்லாத பகுதியால் உள்நுழைந்த இராணுவக் காவலுலா அணி ஒன்றுடனான நேரடி மோதலில் காவியாவை...

காலம் எங்களுக்குச் செய்த மிகப் பெரிய கொடுமை இது.

நான்கு மாதகாலமாக நாங்கள் கடைப்பிடித்து வந்த போர்நிறுத்தம், சிறீலங்கா அரசால் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில், அன்று



படிப்பகம்

நள்ளிரவுடன் முடிவுக்கு வரவிருந்தது. இது போர்க்காலமா, போரற்ற காலமா என்ற குழப்பமெல்லாம் தீர்ந்து, இனிப் போர்தான் என்ற முடிவுக்கு எம்மக்கள் வந்துவிட்டிருந்தனர்.

எமது படையணி நடத்திய செக்ஷன்தர அதிகாரிகள் கல்லூரியில் தமது பயிற்சிகளையும் பாடத்திட்டங்களையும் நிறைவுசெய்துகொண்ட அனைத்து மகளிர் படையணிகளையும் சேர்ந்த செக்ஷன் கட்டளையதிகாரிகள், தலைவரது வரவுக்காகக் காத்திருந்தனர். அன்று அவர்களது நிறைவுநாள்.

அவர் வந்தார், எப்போதும்போல் வேகமாக, ஆனால் நிதானமாக, கூர்மையாக எல்லாவற்றையும் அவதானித்தபடி, முகம் முழுக்கச் சிரிப்புடன். கல்லூரி அதிபர் அஜந்தியிடமும், படிப்பதற்குப் போராளிகளை அனுப்பியிருந்த சிறப்புத் தளபதிகள், பொறுப்பாளர்களிடமும் பயிற்சியாளர்களின் திறமைகளைக் கேட்டறிந்தவாறே, சான்றிதழ்களையும் பரிசுகளையும் வழங்கிக் கௌரவித்தார்.

போர்நிறுத்தம் முடிவுக்கு வரும் மறுநாளே, போரைத் தொடருவதற்காக சிறீலங்கா இராணுவம், எமது முன்னரங்க நிலைகளைநோக்கி நகர்வதற்குத் தயாராக, தமது முன்னரங்கப் பகுதியிலே குவிக்கப்பட்டுவிட்டதாகவும் சில முனைகளால் நகர்வு ஆரம்பமாகிவிட்டதாகவும் தெரியப்படுத்தினார் தலைவர் அவர்கள். பளை, கிளாலிப் பகுதிகளிலே தமது படையணிகளின் கொம்பனிகளை நிறுத்தியிருந்த விதுஷாவும் துர்க்காவும் உடனடியாகவே களமுனைக்கு விரைந்தனர்.

“நாளை காலையில் நாங்கள் உங்களை ஆனையிறவுக்குக் கூட்டிப்போவோம்”

என்ற வாக்குறுதியை அளித்து, ஊடகவியலாளர்களை 'பண்டாரநாயக்க' அனைத்துலக விமானத்தளத்திலிருந்து விமானத்தில் ஏற்றிவந்து, பலாலியில் இறக்கி வைத்திருந்தது சிறீலங்காவின் படைத்தலைமை. அடுத்தநாளின் தலைப்புச் செய்தியாக 'சிறீலங்காவின் கௌரவத்தை' உயர்த்தக்கூடிய வகையிலான செய்திகளை வெளியிடப் போகும் ஆவலுடன் ஊடகவியலாளர்கள் உறங்காமல் விழித்திருந்தனர்.

நேரம் காலை 5.30. வானில் படையினர் ஏவிய தேடொளி ஒன்று ஒளியை உமிழ்ந்தது. எதற்காக இருள் கலைந்தபின்னர் வானிலே தேடொளி? ஒருவேளை படையினர் தங்களுக்குள் ஏதும் செய்திகளைப் பரிமாறுகின்றார்களோ?

தேடொளி எரிந்து அணைய முன்னரே படையினரின் கனரகச் சுடுகலன்கள் செறிவான சூடுகளை எமது காப்பரண்கள் சிலவற்றைநோக்கி வழங்கத்தொடங்கின. காத்திருந்த எங்கள் சுடுகலன்கள் அனைத்தும் படையினரைநோக்கிச் சீறத்தொடங்கின. ஆனால், படையினர் தமது மேலான படைக்கல சக்தியைப் பயன்படுத்திக் காப்பரண்களூடே உடைப்புக்களை மேற்கொண்டனர்.

படையினர் உடைத்துப் பாதை ஏற்படுத்திய காப்பரண்கள் ஒவ்வொன்றுக்கும் பல RPG எறிகணைகள் ஏவப்பட்டிருந்தன.

உட்புகுந்த படையினர் பக்கவாட்டாகக் கிடைத்த எமது சூடுகளைப் பொருட்படுத்தாது உடனடியாகவே ஓடி எமக்கு ஒரு கிலோமீற்றருக்குப் பின் தமக்கான காப்பு நிலைகளை அமைக்கத்தொடங்கினர். இப்போது எமக்கு நாற்புறமும் படையினர். களம் நான்கு முனைகளில் விரிந்தது.

padippakam



படையினர் எமது காப்பரண்களை மூடி, கவிழ்ந்த ‘ப’ வடிவில் நிலையெடுத்திருந்தனர்.

வான் படையினரின் கிபிர் ரக குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீச, ஆட்லறிகள், பல்குழல் எறிகணை செலுத்திகள் யாவும் எம்மைநோக்கி முழங்க, சிறீலங் காவின் முதன்மையான படைப்பிரிவுகள் காட்டாற்று வெள்ளம்போல தொடர்ந்தும் எமது பகுதிக்குள் நுழைந்து கொண்டிருந்தன.

எமது படையணி நின்ற இடத்தில் யாழ் நெடுஞ்சாலை யின் வலதுபுறம் ஒரு உடைப்பும், மேலும் வலதுபுறம் தொண்டைமானாற்று நீரேரியருகே சோதியா படையணி நின்ற இடத்தில் ஒரு உடைப்பும் படையினரால் ஏற்படுத் தப்பட்டிருந்தன. நெடுஞ்சாலையைக் குறுக்கறுத்தவாறு நடுவே நாமும், வலது விளிம்பில் நீரேரியோடும் இடது விளிம்பில் கிளாலிக் கரையோடும் சோதியா படையணியு மாக நிலைகொண்டிருந்தோம். எமக்கு இடதுபுறம் கிளாலி யில் துர்க்காவின் கட்டளை நிலையத்தைச் சூழ சண்டை நடந்துகொண்டிருந்தபோதும், அது எமக்குத் தொலை விலும் வலதுபுறம் லெப்.கேணல் சுதந்திரா நின்ற இடத்துச் சண்டை எமக்கு அண்மையிலும் நடந்துகொண்டிருந்தது.

22, 23, 24 ஆம் இலக்க நிலைகள்வழியே இராணுவம் உள்நுழைந்துகொண்டிருப்பதாக அறிவித்தவாறே அவர் களைச் சுட்டுக்கொண்டிருந்த லெப். சாந்தம் வீரச்சாவ டைந்து விழ, அவரின் பணியை முன்னணி அவதானிப் பாளரான கப்டன் குயில் தொடர்ந்தார். அப்பகுதியில் நின்ற பிளாட்டூன் கட்டளையதிகாரியான பூமகளும் இதே நிலைமையை எங்கள் பகுதிக்குரிய நடவடிக்கைக் கட்டளை அதிகாரி சுகிக்குத் தெரியப்படுத்திக்கொண்டேயிருந்தார்.

முன்னரங்கில் நின்ற எல்லாக் கட்டளையதிகாரிகளுமே சுகியுடன் தொடர்பைப் பேணிக்கொண்டிருந்ததால், தனது கடமையைச் செய்வது சுகிக்கு இலகுவாயிற்று. சுகியின்



படிப்பகம்

padippakam



கட்டளைகளுக்கு ஏற்ப தமிழ்த்தென்றலின் எறிகணை வீசும் அணி எறிகணைகளை ஏவிக்கொண்டிருந்தது.

இராணுவத்தினர் தொடர்ந்து தாக்கிக்கொண்டிருந்தனர். குயிலுடன் கூட இருந்தவர் காயமடைந்துவிட்டார். அதே நேரம் தூரத்துப் பற்றைகளில் பற்றிப் பிடித்த நெருப்பு, குயிலின் காப்பரணை நெருங்கத்தொடங்கியிருந்தது. துப்பாக்கிச் சன்னங்களாலும், குண்டுத் தாக்குதல்களாலும் சிதைவடைந்த காப்பரணில் தீ பற்றினால், அணைக்க முடியாது. முழுவதும் எரிந்த பிறகுதான் அது அணையும். இந்த நிலைமையை குயில் கட்டளைப்பீடத்துக்குத் தெரியப்படுத்தினார்.

வானலையில் எல்லா இடத்து நிலைமைகளையும் கவனித்துக்கொண்டிருந்த விதுஷா, குயிலை அக்காப்பரணை விட்டு வெளியேறி, 18 ஆம் இலக்கக் காப்பரணின் பக்கம் வருமாறு பணித்தார். அப்பகுதியில்தான் எமது அணிகள் நின்றிருந்தன. அதைத்தவிர ஏனைய பகுதிகளில் இராணுவம் நின்று தாக்கிக்கொண்டிருந்தது. தனியொருவராக நின்றிருந்தால் தாக்குதலைச் செய்தபடியே வெளியேறமுடியும். காயப்பட்டு நடக்கமுடியாத நிலையிலிருக்கும் மற்றையவரையும் கொண்டு வெளியேற முடியாது என்பதால், தான் அதில் நின்று தாக்குதலைச் செய்து அந்நிலையைத் தக்கவைப்பதாக விதுஷாவுக்கு அறிவித்தார் குயில்.

நிலைமையை மதிப்பிட்ட விதுஷா குறைந்தளவு ரவையே அவரிடம் இருக்கும் என்பதை உணர்ந்து தேவைக்கேற்பமட்டுமே சூட்டை வழங்கும்படியும், உதவியணி வந்து சந்திக்கும் எனவும் கூறிவிட்டு உதவியணியை விரைவுபடுத்தினார்.

சண்டை பரவலாக நடந்துகொண்டிருந்தது. 18 ஆம் இலக்கக் காப்பரணுக்கருகே பதுங்கிச் சுடுகலனுடன்



படிப்பகம்

padippakam



பதுங்கியிருந்த அஜித்தாவும் உதவியாளர் லெப். இசைப் பிரியாவும் "அங்கே போகிறான், ஒண்டு. இங்கே போகி றான், ரெண்டு" என்று எண்ணியவாறு இலக்குகளை விழுத்திக்கொண்டிருந்தார்கள்.

கேணல் விதுஷாவின் கட்டளைகள் சுகிக்கு சீராகக் கிடைத்துக்கொண்டிருந்தன. இடையிடையே சுகி வேறு அதிர்வெண்களுக்குப் போயிருந்தாலும் சுகியைக் கூப் பிட்டு விதுஷாவுடன் ஒருங்கிணைக்கும் பணியை ஜமுனா செய்துகொண்டிருந்தார்.

சுகிக்கு வலதுபுறம் சற்றுத் தூரத்தே மேஜர் மாலதியின் கட்டளை நிலையம் இருந்தது. படையினர் தமது போக்கு வரவுப் பாதையை அகட்டி 20 ஆம் இலக்கக் காப்பரணை யும் கைப்பற்றிவிடவே, நிலைமையைக் கட்டுப்படுத்துவதற் காக அங்கே நேரே போகும்படி மேஜர் மாலதியை ஜமுனா பணித்தார்.

மாலதியோடு, கூடவே நின்ற 60மி.மீ. எறிகணை செலுத் தியும் மாதினியின் .50 கலிபரும் சேர்ந்தே நகர்ந்தன.

காலை 7.00 மணியளவிலேயே இளங்கிளி தன் RPG யுடனும் தர்சிகா, பாவரசியோடு சேர்ந்து நகர்வகழி வழியே நெடுஞ்சாலைப் பக்கமிருந்து வலதுபுறம்நோக்கித் தொடர் இலக்கங்கள் அதிகரித்துச் செல்கின்ற திசையில் நகர்ந்து 16 ஆம் இலக்கக் காப்பரணுக்குப் போனார்கள். ஒருவருமில்லை. 17 க்குப் போனார்கள். ஒருவருமில்லை. 18 இல் பூமகள் தனித்துநின்றார். நால்வருமாகச் சேர்ந்து அடுத்த காப்பரணைநோக்கி முன்னேற முனைய, இராணு வத்தினரோடு கடும் சண்டை மூண்டது.

அஜித்தாவும் இசைப்பிரியாவும் மாறி மாறித் தமது பதுங்கிச் சூடுகளால் படையினரை வீழ்த்திக்கொண்டே யிருந்தனர். தொலைநோக்கியால் அடுத்த இலக்கைத் தேடினர்.



படிப்பகம்

padippakam



இசைநிலாவின் PK LMG அனலைக் கக்கிக்கொண் டிருந்தது. உதவியாளர் தமிழவள் ரவைகளைக் கோர்த்துக் கொடுத்துக்கொண்டேயிருந்தார்.

சண்டையொன்றை முடித்துவிட்டு 18 இல் நின்ற பூம களைப் பின்னே சந்திக்கவரும்படி அறிவித்த மாலதி 14 இலிருந்து முன்னேபோய், 17 க்கும் 16 க்கும் இடையிலான நகர்வகழியில் சந்தித்து, அடுத்த கட்டத்தைக் கலந்து பேசுவதற்கிடையில் வீழ்ந்த எறிகணை, பூமகளோடும் மாலதியோடும் வந்த 2 ஆம் லெப். விஜிதா, பிரசன்னா வைத் தன்னோடு அழைத்துச்சென்றது.

இதற்கிடையில் லெப்.சாள்ஸ் அன்ரனிப் படைப் பிரிவைச் சேர்ந்த மூவர் வந்துசேர, அவர்களையும் தர்சிகா, பாவரசியையும் சேர்த்து இளங்கிளியின் RPG அடியுடனும் மாதினியின் .50 கலிபர் அடியுடனும், முன்னகர முயன்றார் மாலதி. மீளவும் மீளவும் அந்த முயற்சி நடந்தது. ஆனால் படையினரின் கையிலிருந்த 19 ஆவது காப்பரண் பணிவதாயில்லை.

ஆண் போராளிகளுள் ஒருவர் காயமடைய, அவரை பின்னணிக்கு அனுப்பிவிட்டு, லெப். தமிழினியின் காப்புச் சூட்டுடன் இப்போது தர்சிகாவின் அணி தாக்கியபடி முன்னேறி அக்காப்பரணைக் கைப்பற்றியது. அதிலிருந்து 20 ஐ நோக்கி முன்னேறத் தயாரானபோது ராங்கிகளின் இரைச்சல் காதில் விழ, திரும்பிப் பார்த்தார்கள். 19 ஐ நோக்கிச் சுடுகுழல்களை நீட்டியவாறு இரு ராங்கிகள் விரைந்து வந்துகொண்டிருந்தன.

உடனடியாகவே நகர்வகழியூடே 16 ஆவது காப்பர ணுக்கு வரும்படி தர்சிகாவுக்கு மாலதி கட்டளையிட்டார். அதன்படி அவர்கள் பின்னகர, 19 ஆவது நிலையைக் கடந்து எமது பகுதிக்குள் ஒரு ராங்கி சென்றுகொண் டிருக்க, இரண்டாவது ராங்கி 18 ஆவது நிலையைநோக்கி



படிப்பகம்

padippakam



விரைவாக வந்துகொண்டிருந்தது. அப்போது இளங்கிளியினது RPG செலுத்தி அதன்மீது தாக்குதலை மேற்கொண்டது.

விரைவாக வந்த ராங்கி உடனடியாகவே அந்த இடத்திலே தடுத்துநிறுத்தப்பட்டது.

2000.04.25 அன்றைய மாலைவரை 20 ஆவது நிலையிலிருந்துகொண்டு படையினர் கடும் எதிர்பைக் கொடுத்தனர். மறுபடியும் மறுபடியும் அடித்துக்கொண்டு இறங்கிய போதும், வெற்றி கிட்டவில்லை. மாலை மங்கும்வரை முயற்சிகள் செய்தும் அது எம் கைகளில் வந்திருக்கவில்லை.

அதேவேளை யாழ் நெடுஞ்சாலையில் வீதியின் நடுவில் மிக் 27 விமானம் தாழப்பறந்து குண்டுகளைக் கொட்டிச் சென்றது. நெடுஞ்சாலைக்கு இடதுபக்கம் கொம்பனியின் கட்டளையதிகாரி மேஜர் நிதியும் கோமகளும் இன்னும் சிலரும் நின்று சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். அதேநேரம் 60மி.மீ. எறிகணை செலுத்தியால் எழிலும் வீரத்தேவியும் நிலைமைக்கு ஏற்றவாறு எறிகணைகளை வீசிக் கொடுத்துக்கொண்டிருந்தனர்.

அப்பகுதியில் நெடுஞ்சாலைக்குக் குறுக்கே நிலையமைத்திருந்தார் கப்டன் தண்ணிலா. அவ்வீதியால் படையினர் தம் பலம் முழுவதையும் திரட்டி பெருமெடுப்பில் கவச ஊர்திகளுடன் நகரலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. தண்ணிலா தயாராகவே நின்றார். ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக விமானங்களின் தாக்குதலே மிக அதிகமாக இருந்தது. நிதியும் தண்ணிலாவும் நெடுஞ்சாலைக்கு இடதுபக்கமிருந்த எமது படையணிக்குரிய எட்டு நிலைகளூடாகவும் படையினர் முன்னேறாதவாறு பார்த்துக்கொண்டனர். படையினர் தமது முன்னரங்க காப்புநிலையில் இருந்தவாறே இப்பகுதி நோக்கித்



படிப்பகம்

padippakam



தாக்குதல்களைத் தொடுத்துக்கொண்டிருந்தனர். அதனைப் புரிந்துகொண்ட நிதி ஓரிருவரைமட்டும் பதில் தாக்குதலுக்கு நிறுத்திவிட்டு ஏனையவர்களுடன் வலதுபுறம் நகர்ந்து ரவைகள், வெடிபொருட்கள் விநியோகத்தில் ஈடுபட்டார்.

தன்னுடைய 60மி.மீ. எறிகணை செலுத்திக்கான எறிகணைகள் முடிந்ததும் கூடநின்ற வீரத்தேவியுடன் பின்னணி விநியோக வேலைகளைச் செய்துகொண்டிருந்தார் எழில்.

நெடுஞ்சாலைக்கு இடதுபுறம் நின்று சண்டையிட்ட இன்பநிலா தன்னுடன் ஒரு ஸ்குவாட்டை நகர்த்தி வலதுபுற காப்பரண்களுக்கு வெடிபொருள், விநியோக வேலைகளை அடுத்தடுத்து செய்தும் செய்வித்துக் கொண்டுமிருந்தார். இதேபோல் மதிநிலாவுடன் நான்கு பேர் அதே வேலையைச் செய்தனர். அவர்களை நகர்த்தி மாறிமாறி ரவை, RPG எறிகணைகள், குண்டுகள் என வழங்கல், உதவி வேலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான கட்டளைகளை சுகி வழங்கிக்கொண்டிருந்தார். உதவி, வழங்கல் வேலை செய்தவர்கள் ரவை வெடிபொருட்களைச் சுமந்ததோடு தமது சுடுகலன்களால் படையினரைத் தாக்கியபடியே நகர்ந்தனர்.

மாலை 5.00 மணியளவில், சுகியை நேரடியாகப் போய் குயிலைச் சந்தித்து பின் 25 ஆவது காப்பரணைக் கைப்பற்றும்படி கேணல் விதுஷா பணித்தார். சுகி முன்னரங்குக்குப் போவதற்கு இலகுவாக, இதுவரை நேரமும் சுகி செய்துகொண்டிருந்த வேலைகளைத் தானே பொறுப்பேற்று, கட்டளை வழங்கிக் கொண்டிருந்ததோடு சுகியைத் தன்னுடைய நேரடித் தொடர்பில் வழிநடத்தினார்.

அடுத்தகணம் சுகி செயலில் இறங்கினார். அவரோடு நால்வர் நகர்ந்தனர். 7 ஆவது நிலையில் வந்துநின்ற



படிப்பகம்

நிதியைக்கண்டு நிலைமையைக் கேட்டறிந்துகொண்டு நகர்வகழியால் நகர்ந்து 10-12 ஆவது காப்பரண்களைச் சென்றடைந்தனர். பின் அங்கு மாலதியைச் சந்தித்து Z 18 ஆவது நிலையில் நின்ற தர்சிகாவைக் காப்புச் சூட்டுக்கென ஒழுங்குபடுத்திவிட்டு முன்னேறிக்கொண்டு போனார்கள். முதலில் வலதுபக்கமாகக் காப்புச்சூட்டைச் செறிவாகக் கொடுத்துக்கொண்டும் குண்டுகளை எறிந்து கொண்டும் நகரத்தொடங்கினர்கள். உடனடியாகவே 22 ஆவது நிலை எங்களின் கையில் விழுந்தது. மாலை மங்கி, இருளத்தொடங்கியது. இவர்கள் தொடர்ந்தும் நகர்ந்தார்கள்.

தர்சிகாவின் அணி படையினரோடு சண்டையிட்டதில் பாவரசி காயப்பட்டுப்போக, மீதியாக நின்றவர்களோடு 22 நோக்கி நகர்ந்தார் தர்சிகா.

சுகியின் அணி 24 ஆவது, 25 ஆவது காப்பரண்களில் கடும் எதிர்ப்பைக் காட்டிய இராணுவத்தினரைச் சண்டையிட்டு எதிர்ப்புகளை முறியடித்து காப்பரண்களைக் கைப்பற்றியவாறு நகர்ந்தது.

பளையிலுள்ள தென்னந்தோட்டங்களிடையே கோடையில் நீரள்ளி ஊற்றும் வசதிக்காக, மழைநீரைத் தேக்குவதற்கு இடையிடையே துரவுகளை வெட்டிவைத்திருப்பார்கள். அத்தகைய துரவொன்றின் அருகாக இப்போது எங்களின் நகர்வகழி போகின்றது. துரவுக்குள் நின்ற படையினர் சுகியின் அணியை மேலும் நகரவிடாமல் நகர்வகழிக்குள் குண்டுகளை வீசிக்கொண்டிருந்தனர். நீண்டநேரச் சண்டையின் பின்னரே, துரவினுள்ளிருந்த படையினர் கொல்லப்பட்டு, அப்பகுதி எம் கட்டுப்பாட்டில் வந்தது.

ஆனால் இந்தப் பகுதிக்குள் குயில் இருந்த காப்பரணை நெருங்கும்போதே சுகிக்கு நிலைமை புரிந்துவிட்டது.

padippakam



அந்தச் சூழல் முழுதும் எரியுண்டு போயிருந்தது. சித்திரை மாதத்து வெயிலில் காய்ந்துபோய்க் கிடந்த புற்கள் எரி குண்டுகளால் எரிய, பற்றைகள் எரிய காற்றில் அள் ளுண்ட தீ அவர்களின் காப்பரணின் மேலிருந்த கொட்டில், மரங்கள் எல்லாவற்றையும் எரித்துவிட, மீட்கக்கூடிய நிலையில் யாருமே இருக்கவில்லை. பனங்குற்றிகள்கூடக் கருகிப் போயிருந்தன.

இப்போது நன்றாக இருண்டுவிட்டது. இவர்கள் நகர் வகழிக்குள்ளே இரவைக் கழித்தனர்.

2001.04.26 விடிகாலைப் பொழுதிலும் வெப்பக்காற்று வீசிக்கொண்டிருந்தது. புற்களும் வடலிகளும் எரிந்த புகை இன்னும் மறையவில்லை. கந்தக நாற்றம் நாசியை அரித்துக்கொண்டிருந்தது. ரவைகள் ஏற்றப்பட்டிருந்த சுடு கலன்கள் பேசத் தயார்நிலையில். செவிகள் எல்லா ஒலி களையும் கிரகித்துக்கொண்டிருந்தன. இராணுவம் வருகின் றது.

நேரம் 5.30 தேர்க்கிளியும் அஜித்தாவும் வந்து சுகியைச் சந்தித்தனர். உட்புறமிருந்தும் முன்புறமிருந்தும் முன்ன ரங்கைநோக்கி படையினர் வந்துகொண்டிருந்தார்கள். பதுங்கிச் சுடுகலன், 40மி.மீ. எறிகணை செலுத்தி எல்லா மும் சேர்ந்து அவர்களைத் தாக்கத் தொடங்கின.

ஆனால் இராணுவமும் தன் முயற்சியில் கடும் மூர்க்க மாக இருந்தது. எமக்குக் கடும் எதிர்ப்பைக் காட்டியபடி, தமது போக்குவரத்துப் பாதையாக இருந்த 20, 22, 24 ஆம் இலக்கக் காப்பரண்களைத் தாக்கி தனது கட்டுப்பாட் டில் தக்க வைத்துக்கொண்டிருந்தது. சுகி படையினரைத் தாக்கியபடி 25 ஆம் இலக்கக் காப்பரணில் நிலை கொண்டார்.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

எமது பாதுகாப்பு அரண்கள்மீது படையினரால் நடத்தப்படும் தாக்குதலை முறியடிக்கும் அணியாகப் பயிற்றுவிக்கப்பட்டிருந்த வதனியின் அணி மாலதியின் கட்டளை நிலையத்துச் சற்றுப்பின்னே நிலைகொண்டிருந்தது. சண்டை தொடங்கியதும் படையினர் உள்நுழைந்து எமது பகுதிக்குள் நிலைகளை அமைக்கும் வேலைகளில் ஈடுபட, வதனியின் அணி இவர்களைத் தேடியழிக்கும் நடவடிக்கையைத் தொடங்கினார்கள்.

வியர்வையால் உடல்நீர் வற்றி, நாவரண்டு, உமிழ்நீரை விழுங்கவும் இயக்கமற்று, உதவியோ, உணவோ, நீரோ, ஆயுத வெடிபொருள் வழங்கலோ எதுவுமின்றி இருநாட்கள் இவர்கள் தமது பணியில் ஈடுபட்டனர்கள்.

படையினர் நிலைகொண்டிருந்த பக்கமாகவே முதலில் போனவர்களுக்கு, 100மீ. க்கு ஒருமுறை, 50மீ. க்கு ஒரு முறை என்று மாலைவரை உட்புறமாகத் தொடர்ந்து சண்டைதான். எங்கள் பகுதிக்குள் திரும்பிய இடமெல்லாம் இராணுவமாகவே இருந்ததால், கண்ட இடங்களிலெல்லாம் அவர்களைச் சுட்டுக்கொண்டிருந்தனர். படையினருக்கு எதிர்ப்பு முன்னரங்கில்மட்டுமல்ல, உட்புறமும்தான்.

முதல் நாளிலே அவர்களின் கையிருப்பு முடிவடையும் கட்டத்துக்கு வந்துவிட்டது. அந்தளவுக்குப் பகல் முழுவதும் சண்டையிட்டிருந்தனர். அன்றிரவு 11.00 மணிக்குக் கேணல் தீபன் இவர்களுடன் தொடர்புகொண்டார். இவர்களின் நிலைமையை அறிந்த அவர், அன்றிரவே படையினரின் முற்றுகைக்குள்ளிருந்து வெளியேறி வரும்படி குறிப்பிட்டார். வெளியில் வந்தால் வெடிபொருட்களை பெற்றுக்கொள்ளலாம். வேறு திசையால் வெளிப்புறமிருந்து தாக்கலாம். ஓரிடத்தில் நில்லாமல், இராணுவத்தின் நகர்வுக்கேற்றபடி இடம் மாறிமாறித் தாக்குதலைச் செய்யும் இவர்களுக்கு, முன்னரங்கில் நகர்வகழியால் விநியோகம் செய்ததுபோல் செய்யமுடியாது. முற்றுகையை விட்டு வெளியில் வந்தால்தான் எல்லாமே.

padippakam



அவர்களிடமிருந்தவை PK LMG ரவை 100, RPG எறிகணை 01, வதனியின் கையில் 40மி.மீ. எறிகணை 06, சுடுகலனுக்குரிய ரவை 90, சுரேசிடம் இருந்த 40மி.மீ. எறிகணை 10 மட்டுமே. இவ்வளவையும் வைத்துத்தான் பலங்கொண்ட படையினரின் சூட்டு வேலியை உடைத்து வெளிவரவேண்டும். உடைக்க இயலாத நிலையில் அவர்களின் உடல்கள் களைத்திருந்தன. எப்படியும் உடைத்து வெளிவரவேண்டியதே முக்கியம். ஆகவே வேவு பார்த்து இராணுவம் பலவீனமாகவுள்ள இடமாக உடைக்க எண்ணினார்கள்.

அவ்வேளை சோதியா படையணியின் 82மி.மீ. எறிகணை ஏவும் அணியை இடையில் சந்தித்து அதையும் தம்முடன் இணைத்துக்கொண்டார்கள். விடிகாலை 4 மணிக்குப் பின் எல்லோருமாக ஓரிடத்தில் நிலை எடுத்தனர். விடிந்தது. 6 மணிக்கு வதனி வேவுபார்க்கச் சென்றார்.

உணவோ, நீராகாரமோ இன்றி, உடல் செயற்பட மறுத்தது. வேவுக்காகச் சென்ற வதனி, வழியில் மிக் விமானம் தாக்கி மண் வெளியேறியதால் கிணறுபோன்ற ஆழத்தில் உண்டான குழி ஒன்றைக் கண்டார். கூர்ந்து பார்த்தார். அதில் நீர் ஊற்று எடுத்திருந்தது. அட! அற்புதமான வாய்ப்பு.

இறங்கி நீரை அள்ளித் தாகம் தீரக் குடித்தார். குடித்து முடிந்தபின்னரே கந்தகப் புகையின் நாற்றம் தொண்டைக்குள் தெரிந்தது. நாசி அரித்தது. மற்றவர்களுக்கும் நீர் தேவை. எப்படியோ தேடி அலைந்து தண்ணீர் கொள்கலன் ஒன்றை எடுத்து நீர் நிரப்பினார். வேவுத் தகவலுடன் வதனி கொண்டுவந்த நீர் அணிக்கு தேனாகியது. நடுப்பகலில், விமானங்கள் வீசிய குண்டுகளால் ஏற்பட்ட கந்தகப்புகையும் எரிந்துகொண்டிருக்கும் புற்களின் வெம்மையும், உச்சியைப் பிளக்கும் வெயிலும் இவர்களுக்குக் கொடூரமாக இருந்தது.



படிப்பகம்

padippakam



கிடைத்த வேவுப்படி வதனியுடனான அணி இறங்கி அடிக்கத்தொடங்கியது. அவர்கள் படையினரின் தற்காலிக நிலைகளைத் தாக்கி அழித்துக்கொண்டு போனார்கள். தேவையான ரவைகளை படையினரிடமிருந்தே எடுத்து, அவர்களைத் தாக்கினார்கள். தேவையானளவு சேகரித் தும் கொண்டார்கள்.

முன்னரங்கிலிருந்து குறிப்பிட்ட தூரத்துக்குப் பின்னால் இருந்த கப்டன் நிலாவின் .50 கலிபர் நிலைக்கு போனார்கள். அங்கு எவரும் இல்லை. என்ன நடந்தது அவர்களுக்கு?

முதல்நாள் காலை இராணுவத்தின் தேடொளி வானில் மிதந்ததுமே கப்டன் நிலாவின் .50 கலிபர் அணி ஆயத்த நிலைக்கு வந்திருந்தது. சுடுநர் 2 ஆம் லெப். கவிப்பிரியா .50 கலிபரை இயங்குநிலையில் தயாராக வைத்திருந்தார். இந்த அணிக்கு முன்பகுதி சில பற்றைகள், கஜு மரங் கள் கொண்ட, சற்றுப் பதிவான இடமாக இருந்தது. பின்புறம் ஒருபகுதி வெளியாகவும் இருந்தது. பற்றைகளை அண்டி படையினரின் ஒரு ராங்கி வந்துகொண்டிருக்க, சற்றுப் பின்னாலேயே மற்றதும் வருவது தெரிந்தது. ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு ராங்கிகளும் விரைவாக வந்துகொண்டிருந்தன. கவிப்பிரியா .50 கலிபரை இயக்கத் தொடங்கினார். காப்பு நிலைக்கருகே எறிகணைகள் வீழ்ந்து வெடிக்க இவர்கள் சிறிதுநேரத்தில் .50 கலிபரின் சூட்டை நிறுத்தி, ஏனைய சுடுகலன்களால் சுட்டவாறு காப்பு நிலையை விட்டு எழுந்து .50 கலிபரை இடம்மாற்ற முயன்றனர். அடுத்த கணம் பற்றையை அண்டிப் பதுங்கிக் கிடந்த இராணுவத்தினரின் சுடுகலன்கள் சீறவும் ராங்கி கள் இவர்களது நிலையை வந்தடைந்தன. எல்லாம் கணப்பொழுதுகளில் நடந்துமுடிந்தது.

.50 கலிபர் அணிப் போராளிகள் குண்டுகளைக் கழற்றி எறிந்தபடியும் சுடுகலன்களால் சுட்டபடியும் வீரச்



படிப்பகம்

padippakam



அவர்களிடமிருந்தவை PK LMG ரவை 100, RPG எறிகணை 01, வதனியின் கையில் 40மி.மீ. எறிகணை 06, சுடுகலனுக்குரிய ரவை 90, சுரேசிடம் இருந்த 40மி.மீ. எறிகணை 10 மட்டுமே. இவ்வளவையும் வைத்துத்தான் பலங்கொண்ட படையினரின் சூட்டு வேலியை உடைத்து வெளிவரவேண்டும். உடைக்க இயலாத நிலையில் அவர்களின் உடல்கள் களைத்திருந்தன. எப்படியும் உடைத்து வெளிவரவேண்டியதே முக்கியம். ஆகவே வேவு பார்த்து இராணுவம் பலவீனமாகவுள்ள இடமாக உடைக்க எண்ணினார்கள்.

அவ்வேளை சோதியா படையணியின் 82மி.மீ. எறிகணை ஏவும் அணியை இடையில் சந்தித்து அதையும் தம்முடன் இணைத்துக்கொண்டார்கள். விடிகாலை 4 மணிக்குப் பின் எல்லோருமாக ஓரிடத்தில் நிலை எடுத்தனர். விடிந்தது. 6 மணிக்கு வதனி வேவுபார்க்கச் சென்றார்.

உணவோ, நீராகாரமோ இன்றி, உடல் செயற்பட மறுத்தது. வேவுக்காகச் சென்ற வதனி, வழியில் மிக் விமானம் தாக்கி மண் வெளியேறியதால் கிணறுபோன்ற ஆழத்தில் உண்டான குழி ஒன்றைக் கண்டார். கூர்ந்து பார்த்தார். அதில் நீர் ஊற்று எடுத்திருந்தது. அட! அற்புதமான வாய்ப்பு.

இறங்கி நீரை அள்ளித் தாகம் தீரக் குடித்தார். குடித்து முடிந்தபின்னரே கந்தகப் புகையின் நாற்றம் தொண்டைக்குள் தெரிந்தது. நாசி அரித்தது. மற்றவர்களுக்கும் நீர் தேவை. எப்படியோ தேடி அலைந்து தண்ணீர் கொள்கலன் ஒன்றை எடுத்து நீர் நிரப்பினார். வேவுத் தகவலுடன் வதனி கொண்டுவந்த நீர் அணிக்கு தேனாகியது. நடுப்பகலில், விமானங்கள் வீசிய குண்டுகளால் ஏற்பட்ட கந்தகப்புகையும் எரிந்துகொண்டிருக்கும் புற்களின் வெம்மையும், உச்சியைப் பிளக்கும் வெயிலும் இவர்களுக்குக் கொடூரமாக இருந்தது.



படிப்பகம்

2ம்லெப். மாலதி படையணி

கிடைத்த வேவுப்படி வதனியுடனான அணி இறங்கி அடிக்கத்தொடங்கியது. அவர்கள் படையினரின் தற்காலிக நிலைகளைத் தாக்கி அழித்துக்கொண்டு போனார்கள். தேவையான ரவைகளை படையினரிடமிருந்தே எடுத்து, அவர்களைத் தாக்கினார்கள். தேவையானளவு சேகரித் தும் கொண்டார்கள்.

முன்னரங்கிலிருந்து குறிப்பிட்ட தூரத்துக்குப் பின்னால் இருந்த கப்டன் நிலாவின் .50 கலிபர் நிலைக்கு போனார்கள். அங்கு எவரும் இல்லை. என்ன நடந்தது அவர்களுக்கு?

முதல்நாள் காலை இராணுவத்தின் தேடொளி வானில் மிதந்ததுமே கப்டன் நிலாவின் .50 கலிபர் அணி ஆயத்த நிலைக்கு வந்திருந்தது. சுடுநர் 2 ஆம் லெப். கவிப்பிரியா .50 கலிபரை இயங்குநிலையில் தயாராக வைத்திருந்தார். இந்த அணிக்கு முன்பகுதி சில பற்றைகள், கஜு மரங் கள் கொண்ட, சற்றுப் பதிவான இடமாக இருந்தது. பின்புறம் ஒருபகுதி வெளியாகவும் இருந்தது. பற்றைகளை அண்டி படையினரின் ஒரு ராங்கி வந்துகொண்டிருக்க, சற்றுப் பின்னாலேயே மற்றதும் வருவது தெரிந்தது. ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு ராங்கிகளும் விரைவாக வந்துகொண்டிருந்தன. கவிப்பிரியா .50 கலிபரை இயக்கத் தொடங்கினார். காப்பு நிலைக்கருகே எறிகணைகள் வீழ்ந்து வெடிக்க இவர்கள் சிறிதுநேரத்தில் .50 கலிபரின் சூட்டை நிறுத்தி, ஏனைய சுடுகலன்களால் சுட்டவாறு காப்பு நிலையை விட்டு எழுந்து .50 கலிபரை இடம்மாற்ற முயன்றனர். அடுத்த கணம் பற்றையை அண்டிப் பதுங்கிக் கிடந்த இராணுவத்தினரின் சுடுகலன்கள் சீறவும் ராங்கி கள் இவர்களது நிலையை வந்தடைந்தன. எல்லாம் கணப்பொழுதுகளில் நடந்துமுடிந்தது.

.50 கலிபர் அணிப் போராளிகள் குண்டுகளைக் கழற்றி எறிந்தபடியும் சுடுகலன்களால் சுட்டபடியும் வீரச்

padippakam



சாவடைந்துவிழ, காரணியும் கவிப்பிரியாவும் ஆயுதத் தைப் பாகம் பாகமாகக் கழற்றியவாறு எழுந்தோடி காப் பெடுக்க, அருகில் மிக் விமானம் வந்து குண்டுகளைக் கொட்ட கவிப்பிரியா வீரச்சாவடைந்தார். காரணி ஆயுதத்தின் முக்கிய பாதத்தைமட்டும் சுமந்துகொண்டு சிரமத்துக்கு மத்தியில் பின்பகுதிக்குச் சென்றார்.

வதனியின் அணி வந்து பார்த்தபோது அவர்களது காப்பரண் சிதைந்துபோய்க் கிடந்தது.

நிலாவின் நிலைக்குப் பின்னாலிருந்த பகுதிக் கட்டளை யதிகாரி லோறன்சின் தளத்தில் நிலைகொண்டிருந்த படையினரோடு மோதி, அந்தத் தளத்தைக் கைப்பற்றி னார்கள். இந்த நடவடிக்கையில் வதனியின் செயற்பாடு மிகவும் உச்சமாக இருந்ததாக, கூடவே நின்ற கட்டளை யதிகாரி சுரேஸ் கூறினார். பின்னர் கேணல் தீபனின் கட்டளைப்படி 55 ஆவது காவல் நிலைநோக்கி நகர்ந்தார் கள்.

இது மூன்றாம் நாள் பகல் பொழுது. படையினரிட மிருந்தெடுத்து நிரப்பிக்கொண்ட வெடிபொருட்கள், ரவை களைக்கொண்டு அப்பகுதியில் நின்ற இராணுவத்தைத் தாக்கினார்கள். மிகமிகக் கிட்டவாகக் கைகலப்புச் சண்டையாகவே அது நடந்தது. மிகவும் நெருங்கிவிட்டனர். படையினரின் சூடுகள் வதனியின் இரு கால்களிலும் பட்டன. இதற்கு முன்னரே அவருடன் கூடநின்ற ஏனைய ஒவ்வொருவரும் சண்டையிட்டவாறே வீழ்ந்துவிட்டனர். இப்போது வதனி நிலத்தில் கிடந்தபடியே படையினரைப் பார்த்துச் சுட்டுக்கொண்டிருந்தார். அவரால் நகர முடிய வில்லை. அடுத்துவந்த நிமிடங்களில் இராணுவம் வீசிய எறிகணைகள் வதனியருகே வீழ்ந்து வெடித்தன.

சண்டை நடந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளி, முற் றுகைக்குள்ளே நின்ற கட்டளையதிகாரி சுரேஸ், என்ன நடந்தது என்பதை விளக்குகிறார்.



படிப்பகம்

padippakam



"தனக்கு இரு கால்களிலும் காயம் என்றும், தான் சுட்டுக்கொண்டு இருப்பதாகவும் குறிப்பிட்ட வதனி, சிறிது நேரத்தின்பின் எறிகணை வீச்சில் தனக்கு முகத்தில் காயம் ஏற்பட்டு கண்கள் இரண்டும் தெரியவில்லை என்று கூறினார்"

மேஜர் வதனி, கட்டளையதிகாரி ஜமுனாவோடு அந்த நெருக்கடியிலும் கதைத்துக்கொண்டிருந்தார்.

"கண் தெரியவில்லை. ஆனால் இராணுவத்தின் சூடு வரும் திசைநோக்கிச் சுட்டுக்கொண்டிருப்பதாக அவர் சொல்லிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தின் பின் அவரின் தொடர்பு எனக்கு இல்லாமல் போயிற்று"

என்றார் ஜமுனா.

இப்போது பதுங்கிச்சுடும் துப்பாக்கியால் கட்டுப்படுத்த முடியாதளவில் இராணுவத்தினர் அதிகமாக வந்துகொண்டிருக்கவே அஜித்தாவும் இசைப்பிரியாவும் 27 இலிருந்து 25 க்கு நகர வேண்டியதாயிற்று. தொடர்ந்து முன்னேறிய படையினர் 25 ஆம் இலக்கக் காப்பரணையும் பிடித்துக்கொண்டனர்.

இந்த நிலைகளைக் கைப்பற்ற சுகி மீளவும் மீளவும் முயன்றுகொண்டிருந்தார். காப்பரண்களை சுகியின் அணி கைப்பற்றுவதும் படையினர் மீளப் பிடிப்பதுமாகக் கைமாறிக்கொண்டிருந்தது.

"ஒரு நிலையைப் பதினான்குமுறை தாக்கிக் கைப்பற்றினோம். ஒவ்வொரு முறையும் அதைப் பிடித்துவிட்டு, அடுத்த காப்பரணுக்குப் போக, அதற்குள் படையினர் வந்துவிடுவார்கள். மீளவும் பிடித்தவாறு



படிப்பகம்

padippakam



நாங்கள் மறுபக்கம் போக, மீண்டும் படையினர் வந்துநின்றனர். கைப்பற்றிய காப்பரண்களில் விட்டுச் செல்வதற்கு ஆட்கள் இல்லாததால், பதினான்கு முறை ஒரே காப்பரணுக்காக நாங்கள் சண்டையிட வேண்டியிருந்தது. கடைசியில் என்னோடு ஒருவர் மட்டுமே எஞ்சினார்"

என்றார் சுகி.

இப்போது சுகியுடனான அணியின் கையில் அந்த நிலைகள்.

"இந்தா வருகுது அடி சரியா"

என்று கேட்டுக் கேட்டுத் தமிழ்த்தென்றல் 82மி.மீ. எறி கணைச் சூடுகளைக் கொடுத்துக்கொண்டிருந்தார்.

29-31 வரையான நிலைகளைப் பொறுப்பெடுத்து, அவற்றைத் தக்கவைக்கும்படி சுகியிடம் கட்டளையதிகாரி லோறன்ஸ் குறிப்பிட்டார். விதுஷா அனுப்பிய ஈழமங்கை யின் முறியடிப்பு அணி சுகியைச் சந்தித்துக்கொண்டது. அதேவேளை சோதியா படையணியைச் சேர்ந்த தமிழழகி தன்னுடன் எஞ்சிநின்ற ஓரிருவரை அழைத்துக்கொண்டு நீரேரியிலிருந்து நெடுஞ்சாலைநோக்கிய திசையில் படை யினரைத் தாக்கியபடி முன்னரங்கப் பகுதியால் நகரலா னார். தமிழழகியும் சுகியும் தமக்குள் தொடர்பை ஒருங்கி ணைத்தவாறு நகர்வகழிப் பகுதியாலும், எமது முன்னரங்க வேலிக்கு உட்புறத்தாலும் தாக்கியபடி நகர, படையினர் இருமுனைத் தாக்குதலை எதிர்கொண்டனர்.

அது மிகக் கடுமையான சண்டை. விதுஷாவின் கட்ட ளைப்படி அந்தச் சண்டை இரவிரவாக நடந்தது. எம்மவர் கள் ஒவ்வொருவராக விழுந்துகொண்டிருந்தனர். எனினும் சண்டை தொடர்ந்தது. சுகியின் ஒவ்வொரு அசைவையும்



படிப்பகம்

padippakam



விதுஷாவின் கட்டளைகள் நெறிப்படுத்திக்கொண்டிருந் தன. ஒவ்வொருவரும் என்ன செய்கின்றார்கள், என்ன நடக்கின்றது, என்பதை அவர் உன்னிப்பாக அவதானித் துக் கொண்டிருந்தார்.

**“சண்டைகளில் உங்களுக்கு ஏற்படுகின்ற இழப்புக் களைத் தவிர்த்துக்கொண்டு, அதிகளவு இராணுவத் தினரைக் கொல்லுங்கள். கொல்லப்படுகின்ற இராணு வத்தினரின் தொகையில்தான் எங்களின் வெற்றி தங்கியுள்ளது”**

ஒவ்வொருமுறை நாங்கள் சண்டைக்குப் போகின்ற போதும் தலைவர் எங்களுக்குச் சொல்லிவிடுகின்ற வேதம், ஆழ்மனதினுள் பதிந்துபோய், தன்னிச்சையாகவே எங் களை இயக்கிக்கொண்டிருந்தது.

அங்கொன்றும், இங்கொன்றுமாக எஞ்சிநின்ற எல் லோரையும் ஒன்றுசேர்த்து தர்சிகாவுடன் இணைத்து, சுகி நின்ற இடத்துக்கு உதவியணியாக அனுப்பினார் விதுஷா.

27 ஆம் திகதி காலை விடிந்ததை இனங்காணும் நிலையில் எவருமே இல்லை. இருண்டது, விடிந்தது தெரி யாத அளவுக்குப் படையினரின் தேடொளிகள் இரவைப் பகலாக்கிக்கொண்டிருந்தன. முதல் தொகுதி தேடொளிகள் அணையமுன்னரே, அடுத்த தொகுதி ஏவப்பட்டுக்கொண் டிருந்தது. இரண்டு நாட்களாக உறக்கமில்லாததால் சூழல் மாற்றத்தை உணரும் நிலையில் மனங்கள் இல்லை.

காலையில் நடந்த சண்டையில் செந்தில்வாணியும், கயலரசியும் காயப்பட்டுப் போயினர். 54 ஆம் இலக்கக் காப்பரண்வரை சண்டை இடைவிடாது தொடர்ந்தது. தன்னுடனிருந்த ஓரிருவரை வைத்துக்கொண்டே விதுஷா வின் கட்டளையின் ஒருங்கிணைப்போடும் எறிகணை ஆதரவுச் சூடுகளோடும் படையினரின் எதிர்ப்பைக் கட்டுப்



படிப்பகம்

padippakam



படுத்தியவாறு ஒவ்வொரு காப்பரணாக சுகி முன்னேறிச் சென்றுகொண்டிருந்தார். முன்னேற்றம் 54 உடன் தடைப் பட்டது. ஏனெனில் அதுவே சோதியா படையணி நின்ற பகுதியில், நீரேரிக் கரையோடு படையினர் உடைத்த பாதையாகும். எமது படையணி நின்ற இடத்தில் உடைக் கப்பட்ட பாதையை நாங்கள் மூடிவிட்டபின், அவர்களி டம் எஞ்சியிருந்தது அது ஒன்றுமட்டுமே. நடவடிக்கையை மேலும் தொடருவதாயினும், பின்வாங்குவதாயினும் அந் தப் பாதை அவர்களுக்கு முக்கியம். உள்ளே வந்த இரா ணுவத்தைத் திரும்பிப் போகவிடாமல் தடுத்து, அவர்களை முற்றாக அழிப்பதற்கு அந்தப் பாதையை மூடுவது எங்க ளுக்கு முக்கியம். இரு பகுதியுமே எங்களின் உச்சப் பலத்தைப் பயன்படுத்தித் தாக்கினோம்.

55 இலிருந்து வந்துகொண்டிருந்த கடும் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது சுகியும் அங்கயற்கண்ணியும், PK LMG இசைநிலாவுடன் முன்னேற முயன்றனர். படையினரின் அடியோ எங்களை ஒரு அங்குலம்தானும் நகரவிட வில்லை.

தாகம் நாவை வரட்டியது. சித்திரை மாத்துக்கே உரித் தான வெயில் உச்சியில் எரிந்து அனலை வீசிக்கொண் டிருந்தது. காதோரம், கழுத்திலெல்லாம் உப்புப் பூத்திருந் தது. சுடுகலனைப் பற்றியிருந்த விரல்கள் பிசுபிசுத்தன. உடைகள் வியர்வையால் உடலோடு ஒட்டிக்கொண்டன.

எப்படியாவது 55 ஐப் பிடித்தேயாகவேண்டும். 55 க்கு பக்கவாட்டாக நின்ற தமிழழகியிடம், ஒரு முன்னணி அவதானிப்பாளரை அழைத்துக்கொண்டு, சற்றுப் பின் புறமாகச் சுற்றி, ஒரே ஓட்டத்தில் போய்ச்சேர்ந்தார் இன்ப நிலா. இரு பகுதிகளில் நின்றவர்களும் 55 ஐ நோக்கி நகரலானார்கள்.



படிப்பகம்

padippakam



இசைநிலா தனியாக நின்று பற்றைப் பகுதிக்குள்ளி ருந்த படையினரைச் சுட்டுக்கொண்டிருந்தார். சுகியுடன் மூன்று ஆண் போராளிகள் நகர்ந்தனர்.

முன்னேபோன மூவரையும் நான்காவதாகப் போன சுகி வழிநடத்தியவாறும், விதுஷாவுடன் இணைப்பை ஏற்படுத்தியவாறும் போய்க்கொண்டிருக்க, நகர்வகழிக்குள் வந்துகொண்டிருந்த இவர்களைச் சடுதியில் நெருங்கிய இராணுவத்தினர் சுத்திச் சுட ஆரம்பித்தனர். முன்னே போனவர் விழ, அப்படியே பின்னே மூவரும் சரிய, எல் லோருக்கும் அடியில் சுகி. மேலே விழுந்த மூவரும் தம் மூச்சை நிறுத்திவிட்டிருந்தனர்.

கீழே விழுந்திருந்த சுகியால் சட்டென எழ முடியாமலி ருந்தது. இந்த அடியிலும் சுகியின் கையை விட்டு விழாத நடைபேசியில், ‘சுகி, சுகி, சுகி’ என விதுஷாவின் குரல் ஒலித்துக்கொண்டிருந்தது. அகலம் குறைந்த நகர்வகழியும் மேலேயிருந்த மூவரின் பாரமும் கொடுத்த சிரமத்தைப் பாராது எழும்பிய சுகி, நிமிர்ந்த வேகத்திலே தன்னை நெருங்க முயன்ற படையினரைநோக்கிக் குண்டுகளை வீசினார். காய்ந்துபோயிருந்த நிலம் பிளந்து புழுதி பறந்தது. புழுதி அடங்கமுன்னரே திரும்பி ஓடிய சுகி, அங்கயற்கண்ணி நின்ற காப்பரணுக்குப் போய்ச்சேர்ந்து விட்டார்.

சுகி சொன்ன நிலைமைகளைக் கேட்ட விதுஷா அவ் விடத்துக்கு எறிகணை வீச்சுக்களை மேற்கொள்ளும்படி எறிகணை ஏவுதளங்களைப் பணித்தார். சிறிது நேரத்தில் படையினரின் எதிர்ப்பு குறைவதாகத் தெரியவே, அவற்றை நிறுத்திவிட்டு, மறுபடியும் சுகியை 55வது காப்பரணை நோக்கி நகர்த்தினார் விதுஷா. சுகிக்கு வலது பக்கவாட் டாக தமிழழகியும் தாக்குதலைச் செய்தவாறு முன்னேறி னார்.



படிப்பகம்

padippakam



படுத்தியவாறு ஒவ்வொரு காப்பரணாக சுகி முன்னேறிச் சென்றுகொண்டிருந்தார். முன்னேற்றம் 54 உடன் தடைப் பட்டது. ஏனெனில் அதுவே சோதியா படையணி நின்ற பகுதியில், நீரேரிக் கரையோடு படையினர் உடைத்த பாதையாகும். எமது படையணி நின்ற இடத்தில் உடைக் கப்பட்ட பாதையை நாங்கள் மூடிவிட்டபின், அவர்களி டம் எஞ்சியிருந்தது அது ஒன்றுமட்டுமே. நடவடிக்கையை மேலும் தொடருவதாயினும், பின்வாங்குவதாயினும் அந் தப் பாதை அவர்களுக்கு முக்கியம். உள்ளே வந்த இரா ணுவத்தைத் திரும்பிப் போகவிடாமல் தடுத்து, அவர்களை முற்றாக அழிப்பதற்கு அந்தப் பாதையை மூடுவது எங்க ளுக்கு முக்கியம். இரு பகுதியுமே எங்களின் உச்சப் பலத்தைப் பயன்படுத்தித் தாக்கினோம்.

55 இலிருந்து வந்துகொண்டிருந்த கடும் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது சுகியும் அங்கயற்கண்ணியும், PK LMG இசைநிலாவுடன் முன்னேற முயன்றனர். படையினரின் அடியோ எங்களை ஒரு அங்குலம்தானும் நகரவிட வில்லை.

தாகம் நாவை வரட்டியது. சித்திரை மாத்துக்கே உரித் தான வெயில் உச்சியில் எரிந்து அனலை வீசிக்கொண் டிருந்தது. காதோரம், கழுத்திலெல்லாம் உப்புப் பூத்திருந் தது. சுடுகலனைப் பற்றியிருந்த விரல்கள் பிசுபிசுத்தன. உடைகள் வியர்வையால் உடலோடு ஒட்டிக்கொண்டன.

